(இ-ள்) என் - எனக்கு, அம்மா - நிருபாதிகஸ்வாமியாய், அந்த ஸம்பந்தமடியாக, என்கண்ணா - உன் ஸௌலப்யத்தை யெனக்கு ப்ரகாசிப்பித்தவனாய், இமையோர்தங்குலம் - நித்யஸூரிகள் திரளுக்கு, முதலே - ஸத்தாதிஹேது பூதனானவனே, ஓர் - அத்விதீயமான, ஐவர் - ஐந்திந்த்ரியங்களாலே இன் - இனிய அமுது - அம்ருதம். என - என்னும்படி போக்யமாய், தோன்றி - ப்ரகாசித்து, யாவரையும் - எத்தனையேனு மளவுடையரான ப்ரஹ்மாதிகளையும், மயக்க - மோஹிப்பிக்கைக்காக, நீ - ஸர்வஶக்தியான நீ, வைத்த - உண்டாக்கிவைத்த, முன்னம் - அநாதிஸித்தமாய், மாயம் - அஜ்ஞாநவர்த்தகமாகையாலே மாயாஶப்தவாச்யமான விஷயங்கள், எல்லாம்-எல்லாவற்றையும், முழு-முழுக்க, வேர்-வேர், அரிந்து-அறுத்து, என்னை-ஸம்ஸாரபீதனான வென்னை, உன் - உன்னுடைய, சின்னமும் - அஸாதாரண சிஹ்நமான ஶங்கசக்ராதிகளையும், திரு - அவற்றாலலங்க்ருதமான, மூர்த்தியும்—விக்ரஹத்தையும், சிந்தித்து - நெஞ்சாலே நினைத்து, ஏத்தி - வாக்காலே ஸ்துதித்து. கை - கையாலே, தொழ - தொழும்படியாக எனக்கே - எனக்கென்ன விசேஷித்து, அருள் - க்ருபைபண்ணியருளவேணும்.

ஓரைவரையும், மாயமெல்லாவற்றையுமென்று - எண்ணவுமாம். மாயமென்று - சப்தாதி ஸஹிதையான ப்ரக்ருதியாகவுமாம். (அ)

ஆறு ;—(இன்னமுதென) அநுபவவேளையாம் அம்ருதோபமமாய், விபாகே நிரயஹேதுத்வேந விஷோபமமாய், த்வத்ஸ்வரூப ரூபகுணவிபவைஶ்வர்ய யாதாத்ம்ய விஷயஸம்முக்ஷீகரான தேவாதிகளையுங்கூட மோஹிப்பிக்கும்படி ஶப்தாதிவிஷயரூபேண வுன்னாலே நிர்மிதமான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை ஸஹேதுகமாகப்போக்கி, * அபர்வறுமமரர்கள் பரிஷத்திலே யென்னைவாங்கி, ப்ராக்

ருதவிஷய விஸ்மரணபூர்வகமாக, உன்னுடைய ஶங்கசக்ரகதாஶார்ங்காத்யஸங்க்யேய திவ்யசிஹ்நங்களையும், அவற்றாலே யலங்க்ருதமான திருமேனியையுமே சிந்தித்தேத்திக் கைதொழவே யருளெனக்கெம்பிரானே, ஆஶ்ரிதவத்ஸலனே என்று எம்பெருமானை ப்ரார்த்திக்கிறார்.

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. என் ப்ரக்ருதிஸம்பந்தத்தை யறுத்து, நான் மநோவாக்காயங்களாலே யுன்னை நிரந்தரமாக வநுபவிக்கும்படி பண்ணி யருளவேணுமென்கிறார்.

(இன்னமுதெனத்தோன்றி) விபாகத்தில் பலிக்குமது முகப்பிலேயாகப்பெற்றேனாகில் கைவிடலாங்கிடீர்!. (௧) * அக்ரே அம்ருதமிவ இறே, பரிணாமத்தில் விஷமிறே. விபாகத்தில் பலிக்குமது உபக்ரமத்திலே தோன்றிற்றாகில் மேல்விழாதொழியலாயிற்று. பழியும் தர்ம ஹாநியுமாய், மேல் நரகமானாலும் விடப்போகாதிருக்கை. ப்ரக்ருதி ப்ராக்ருதங்களுக்கிங்ஙனே யொருதன்மையுண்டு - த்ருதராஷ்ட்ரனோடொக்கும். அகவாயில் தர்மருசி யின்றிக்கே யிருக்கச் செய்தே, வாயாலே அநுகூலம்போலே யிருக்குமவற்றைச் சொல்லாநிற்குமவனும். (ஓரைவர்) தனித்தனியே ப்ரபலமாயத்விதீயமான ஶப்தாதிவிஷயங்களைந்தும். (யாவரையும்மயக்க) க்ஷுத்ரரான மநுஷ்யரோடு, அளவுடையரான ப்ரஹ்மாதிகளோடு வாசியற வறிவுகெடுக்கும்படிக்கீடாக. (நீவைத்த) ஸர்வஶக்தியான நீ வைத்த. தன்னாலே ஸ்ருஷ்டமாயிற்றதென்றறியாதே, "அதிலே யொருபோக்யதையுண்டு" என்று ஸ்ப்ருஹைபண்ணுகிறானிறே ப்ரஹ்மா. (முன்னமாயமெல்லாம்) அநாதியான ஸம்ஸாரத்தையெல்லாம். (முழுவேரரிந்து) ஸவாஸநமாகபோக்கி. (என்னை) ஸம்ஸாரபயபீதனானவென்னை. செய்த வப்ஶத்தே தருப்தனாயிருக்குமிறேயவன். "ஜ்ஞாநலாபம் பண்ணிக்கொடுத்தோம்" என்றிறே அவனிருக்கிறது. அது போராதிறே, ஸம்ஸாரத்தை ஸவாஸநமாகப் போக்கவேண்டியிருக்குமிறே யிவர்க்கு. (உன்சின்னமுந் திருமூர்த்தியும்) (௨) "தவளவொண்சங்குசக்கரம்" என்றும். (௩) "வலக்கையாழியிடக்கைச்சங்கம்" என்றும். (௪) "அர

(௧) கீதை-௧௮-௩௮.
(௨) சு-௫-௧
(௩) சு-௪-௯
(௪) சு-௭ ௧௦

விந்தலோசநன் " என்றுஞ்சொல்லுகிறபடியே, திவ்யாயுதங்களையும் அவற்றுக்கு ஸத்ருசமான திருமேனியையும். (சிந்தித்தித்யாதி) இவற்றை நெஞ்சாலே யநுஸந்தித்து, உள்ளடங்காமல் வாய்விட்டு ஸ்தோத்ரம் பண்ணி, பின்னைத் திருவடிகளிலே விழும்படிக்கீடாக வெனக்கருளவேணும். வாயாலேயொன்று சொல்லாநிற்க, நெஞ்சு வேறேயொன்று நினைத்தல்; " உனக்குமோக்ஷம் " என்று வேறேயோரிடத்தே தொழில் செய்தல் செய்கை யன்றிக்கே, மநோவாக்காயங்கள் மூன்று முன்பக்கலிலே ப்ரவணமாம்படி பண்ணியருளவேணும். (என்னம்மா) எனக்குத்தாய்போல் பரிவனானவனே. இம்மப்தம் வசிக்கிறபடி. 'அம்மே' யென்கிறதிலே ஸம்போதநவசநமாகையாலும், சேதநனைச்சொல்லுகையாலும் ஆகாரமேற்றுவிளியாய் ' அம்மா ' என்று கிடக்கிறது. (என்கண்ணா) அந்தப்பரிவையர்த்தக்ரியாகாரியாக்கினவனே. (இமையோர்தங்குலமுதலே) ஒருநாட்டுக்காக வுன்னைக் கொடுத்துக்கொண்டிருக்கிறவனல்லையோ. அநேகராசைப்பாடொருவனுக்குண்டானால் கொடுக்கலாகாதோ. 'என்னம்மா' இத்யாதிக்கு-எனக்கு ஸ்வாமியாய், " ஸ்வத்தை நசிக்கக் கொடுக்கவொண்ணாது " என்று க்ருஷ்ணனாய் வந்தவதரித்தென்னை நோக்கினவனே. அவதாரம் ஸர்வ ஸாதாரணமாயிருக்கச்செய்தே, இவர் தமக்காகச் செய்ததென்றிருப்பரே. மநோவாக்காயங்கள் மூன்று மொருங்கி யுன்பக்கலிலே ப்ரவணமாம்படி யொருநாட்டுக்குப் பண்ணிக்கொடுத்த நீ, அத்தை யெனக்கொருவனுக்கும் செய்யத்தட்டென். (அ)

ஒன்பதாம்பாட்டு

குலமுதலடுந்தீவினைக் கொடுவன்குழியினில்வீழ்க்குமைவரை *
வலமுதல்கெடுக்கும் வரமேதந்தருள்கண்டாய் *
நிலமுதலினியெவ்வுலகுக்கும் நிற்பனசெல்வனவென * பொருள்
பலமுதல்படைத்தாய்! என்கண்ணா! என்பரஞ்சுடரே! (கூ)

ப:—அநந்தரம், ஸகலஜகதுத்பாதகனாய் எனக்கு பவ்யனாய், போக்யனான நீ, விஷயங்களிலே தள்ளு மிந்த்ரியபலத்தை யுந்மூலநம் பண்ணும்படி ப்ரஸாதத்தைப் பண்ணவேணுமென்கிறார்.

(இ-ள்.) நிலம் - பூமி, முதல் - முதலாக, இனி - மற்றும், எவ்வுலகுக்கும் - எல்லாலோகங்களுக்கும், நிற்பனசெல்வனவென - ஸ்தாவரஜங்கமரூப

மான, பொருள் - பதார்த்தங்கள், பல - பலவற்றையும், முதல் - ப்ரதமத்திலே, படைத்தாய் - படைத்தவனாய், என்கண்ணா - ஜகத்ரக்ஷணார்த்தமாக க்ருஷ்ணனாயவதரித்த ஸௌலப்யத்தை யெனக்கு ப்ரகாசிப்பித்தவனாய், என்னை யனக்கநுபாவ்யனுமாய், பாஞ்சுடரே - நிரதிஶயௌஜ்ஜ்வல்யயுக்தமான வடிவையுடையவனே, குலம் - வம்ஶத்தை, முதல்-மூலபூதபுருஷனோடே, அடும்-அதஃபதிக்கும்படி முடிக்கவல்ல, தீ - தாபகரமான, வினை - பாபத்துக்கு ப்ரவர்த்தகமாம் கொடு - கொடுமையை யுடைத்தான, வலிய விஷயங்களாகிற, வன் - கரையேறவொண்ணாத, குழியினில் - படுகுழியிலே, வீழ்க்கும் - தள்ளக்கடவதான, ஐவரை - ஐந்திந்த்ரியங்களை, வலமுதல் - ஸ்வபலமூலமான துர்வாஸனையோடே, கெடுக்கும் - கெடுக்கும்; வலமே - ப்ரஸாதபலத்தையே, தந்தருள்கண்டாய் - தந்தருளவேணும்

வலமென்று - ப்ரபலமான ப்ரஸாதத்தை லக்ஷித்தல்; வலமென்று - ஆநுகூல்யமாய், ப்ரஸாதந்தானுதல்.

ஆறு ;—(குலமுதல்) ஸங்கல்பமாத்ர பரிநிர்மித நிகலபுவநதந்தர்வர்த்யகிலசராசரஜந்துஜாதனாய் ஸர்வஶக்தியாய், ராமக்ருஷ்ணாதிரூபேண அவதீர்ய ப்ரணதஜநபரித்ராண தத்விரோதிநிரஸநைக போகனாயிருந்த நீ, ஸாந்வயமத்விநாஶகர அஷ்க்ருதாதிகோர துராரோஹாகாதகர்த்தநிபதநஹேதுபூதமான பஞ்சேந்த்ரியங்களுடைய பலத்தை ஸஹேதுகமாகக் கெடுக்கையாகிற வென்னுடைய வபிலஷிதத்தைச் செய்தருளவேணுமென்கிறார். (கூ)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. † (ஸாநுபந்தமாக முடிக்குமதான பாபங்களை விளைக்கும்) விஷயங்களிலே ஆத்மாவைத் தள்ளுமிந்த்ரியங்களென்னை நலியாதபடி பண்ணவேணுமென்கிறார்.

(குலமுதலித்யாதி) ஒருவன் பண்ணின பாபம் அவன்றன்னளவிலே போகையன்றிக்கே குலமாக முதலறமுடிக்கவற்றான பாபங்களை விளைக்கக்கடவதாய், கொடியதாய்-அநுபவித்து முடியவொண்ணாதபடியாய், (வன்குழியாய்) வலியதாய் - கால்வாங்கவொண்ணாதபடியான, ஶப்தாதிவிஷயங்களாகிற குழிகளிலே தள்ளக்கடவதான விந்த்ரியங்களை. (க) "நஹியஸ்ய விஷயேஷு வஹவாயேஷு கஸ்யஸ . ப்ரவாஹிஷ ஸஜ்ஜந்தே ப்ரஜாஹவி ஸ்யா:- நஹிதர்மவிருத்தேஷு பஹ்வபாயேஷு கர்மஸு । மூலகாதிஷு ஸஜ்ஜந்தேபுத்திமந்தோபவத்விதா:" "செய்யக்கடவதல்லாததாய்,

(க)

சொல்லுகிற பலத்தினளவல்லாத வபாயங்களை யுடைத்தாய், வம் சங்களை முதலறமுடிக்கக் கடவதான செயல்களிலே, உன்போல்வ ராய் புத்திமான்களாயிருப்பர் ப்ரவர்த்தியார்கள் காண்'' என்றானிறே மால்யவான் ராவணனுக்கு.

(வலமுதல்கெடுக்கும் வரமேதந்தருள்கண்டாய்) இவற்றினு டைய பலத்தை முதலிலே முடிக்கக்கடவதான வுன்னுடைய ப்ர ஸாதத்தைப்பண்ணி யருளவேணும். நம்மாலே தனியே யிங்ஙனே செய்யலாயிருக்குமோவென்ன (நிலமுதலித்யாதி) ''நீஜகத்ஸ்ருஷ்ட் யாதிகள்பண்ணுகிறபோது உனக்கார்துணைப்படச்செய்தாய்'' என்கி றார். ஸ்ருஷ்டி ப்ரயோஜநம் மோக்ஷமன்றே, அது பெறவேண் டாவோ, பூமி முதலாக மற்றுமிப்படியுண்டான வெல்லாலோகங்களி லும் ஸ்த்தாவரஜங்கமங்களான பலபதார்த்தங்களையும் முன்பே யுண்டாக்கினாய். †((இனி) மற்றும்)(என்கண்ணுவென்பரஞ்சுடரே) அப்படிபொதுவான ரக்ஷணமொழிய, க்ருஷ்ணனாய் வந்தவதரித்து எனக்கு பவ்யனாய், வடிவழகையெனக் குபகரித்தவனே. ஒருநாடாக வநுபவிக்கும் வடிவழகை யென்னை யொருவனையு மநுபவிப்பித்த வனே. அழிந்த ஜகத்தையுண்டாக்கின வுனக்கு, உள்ளதுக்கொரு குணுதாநம் பண்ணுகை, யரிதோ. (கூ)

பத்தாம்பாட்டு.

என்பரஞ்சுடரே! என்று உன்னையலற்றிஉன்னிணைத்தாமரைகட்கு
அன்புருகிநிற்கு மதுநிற்கச்சுமடுதந்தாய் *
வன்பரங்களெடுத்து ஐவர்திசைதிசைவலித்தெற்றுகின்றனர் *
முன்பரவைகடைந்து அமுதங்கொண்டமூர்த்தியோ! (ய)

ப:—அநந்தரம், கடலைக்கடைந்து ஸாரமான வம்ருதத்தைக்கொண்ட ஸ்வாமியான நீ, நிரதிஶயஸாரமான வுன்னுடையவநுபவம் நிற்க, விஷயபாரங் களை யெடுத்திந்த்ரியங்கள் நலியும்படியான சுமைபொறுக்கும் ஶரீரத்தைத் தந் தாயென்கிறார்.

(இ-ள்.) முன் - முற்காலத்திலே, பரவை - பரந்த ஸமுத்ரத்தை, கடை ந்து - கடைந்து, அமுதம் - அதின் ஸாரபூதமான வம்ருதத்தை, கொண்ட - கொண்டு தேவாதிகளுக்குபகரித்த, மூர்த்தி - ஸ்வாமித்வத்தையுடையவனே, என் - எனக்கு, பரஞ்சுடரே - நிரதிஶயமான வுஜ்ஜ்வலபோக்யமே, என்று -

என்று, உன்னை - உன்னைநோக்கி, அலற்றி - ப்ராவண்யத்தாலே யக்ரமமாகக் கூப்பிட்டு, உன் - உன்னுடைய இணை பரஸ்பரஸத்ருஶமான, தாமரைகட்கு - திருவடிகளிரண்டுக்குமாக, அன்பு - ப்ரேமத்தாலே, உருகி - த்ரவீபூதனாய், நிற்கும் - நிற்கிற, அது - அந்தநிரதிஶயஸாரபூதமானவாகாரம், நிற்க - நிற்க, சுமடு - பாரஸஹமான சரீரமாகிற சும்மாட்டை, தந்தாய் - தந்தாய், அதடியாக, வன் - ப்ரபலமான, பாரங்கள் - விஷயபாரங்களை, எடுத்து - எடுத்து, ஐவர் - ஐந்திந்த்ரியங்களானவை. திசைதிசை - ஸ்வாபிமதமான திக்குக்களிலே, வலித்து - இழுத்து, எற்றுகின்றனர் - பீடியாநின்றன.

ஒ - இதென்ன வார்த்தமென்று கருத்து. (ம)

ஆறு ;—(என்பரஞ்சுடரே) ஆஶ்ரிதருடைய வபேக்ஷிதத்தை முடிப்பாரொருவனுமாய் முடிக்கவல்லாரொருவனுமா யிருக்கச் செய்தே, உன்னுடைய கல்யாணகுணாநுபவஜநித நிரதிஶய ப்ரீதியாலே யப்ராக்ருதிங்கதனைப்கொண்டு, என்பரஞ்சுடரே யென்றுன்னையலற்றியுன்றிருவடிகளிலுள்ள ப்ரேமாதிஶயத்தாலே நீராயுருகி நிற்கையாகிற வென்னுடைய ஸ்வரூபத்தைதயொழிய, விஷயாநுபவோபகரணமான ப்ரக்ருதியையெனக்குத் தந்தாய் ; இந்தப்ரக்ருத்யாஶ்ரயமான விந்த்ரியங்கள் துர்ப்பரமான விஷயபாரங்களை யெடுத்து ப்ரதிதிஶமாகர்ஷித்து என்னை பாதியாநின்றனகிடா யென்று எம்பெருமானைக் கூப்பிடுகிறார்.

ஈடு ; அவ;—பத்தாம்பாட்டு. அடிமைக்கு விரோதியாய், விஷயாநுபவத்துக்குப் பாங்கான வுடம்பைத்தந்தாய், அதுவே ஹேதுவாக ஐந்திந்த்ரியங்களும் நலியாநின்றன, அவற்றைப் பரிஹரித்தருளவேணுமென்றார்த்தியோடே கூப்பிடுகிறார்.

(என்பரஞ்சுடரித்யாதி) எனக்குன் வடிவழகைக்காட்டியுபகரிக்குமவனே யென்றுன்னைக் குறித்தடைவுகெடக் கூப்பிட்டு. (உன்னிணைத்தாமரையித்யாதி) ஒன்றுக்கொன்றொப்பா யிருப்பனவிரண்டு செவ்விப்பூப்போலே யிருக்கிற வுன்திருவடிகளில் போக்யதையை யநுஸந்தித்து ப்ரேமபரவசனாய் நெகிழ்ந்து நீராய்நிற்கை யிவ்வாத்மாவுக்கு ஸ்வரூபமாகக்கடவது. (அதுநிற்கச்சுமடுதந்தாய்) ஸ்வரூபமிதுவாயிருக்க, உன்பக்கலினின்றுமகற்றி விஷயங்களிலே கொடுபோய் மூட்டக்கடவதான ஶரீரத்தைத்தந்தாய். உன்னையநுபவிக்கைக்குறுப்பாக தேஹத்தைத் தந்தாயாகில் நீ, அதுதானே யெனக்கிழவுக்குடலாயிற்று. ராஜபுத்ரன் தலையில் முடியைவாங்

கிச் சும்மாட்டைக்கொண்டு வழியிலே நின்றால், அடியறியாதார் சுமையெடுத்துக்கொண்டு போமாப்போலேயாயிற்று பகவதநுபவத்துக்கிடாகக்கொடுத்த சரீரமிந்த்ரியங்களுக்குப் பணிசெய்யும்படியாய் விட்டது. சுமடு-சும்மாடு. ஶரீரமாகிற சும்மாட்டைத்தந்தாய்.

(வன்பரங்களித்யாதி) "அப்ராப்த விஷயத்திலே போனேன்" என்றோநானிப்போதஞ்சுகிறது. பொறுக்கலாமளவு சுமையெடுத்ததாகில் நான்சுமவேனோ. வலியபாரத்தையெடுத்தி, கனத்த சுமையையெடுத்தி. (ஐவர்) அவர்கள் தாமொருவரிருவராகில் நாலுற்றேனோ. (திசைதிசை வலித்து) இத்தனைவரு மொருதிக்கிலே போகவிழுத்தார்களாகிற்றான் மெள்ளப்போகேனோ. (எற்றுகின்றனர்) உடையவனுங்கிலேற போக்குவிட்டுநலிவது. $ (எற்றுகை - ப்ரஹரிக்கை.) ஒரு துர்ப்பலன் தலையிலே யதிபாரத்தை யெடுத்திச்சுற்றும் நின்று தந்தாம் வழியே யிழுத்துக்கொண்டு போகத்தேடுமாப்போலே காணுமிவையும். (முன்பரவையித்யாதி) கடலைநெருக்கி அதிலம்ருதத்தைவாங்கி, ப்ரயோஜநாந்தரபரரானவர்களுக்குங்கூட கொடுக்கக்கடவ மஹாபாஹுவையுடையவனே. என்னுடைய விந்த்ரியங்களைப் பாறவடித்துப்பொகட்டு, கடல்கடைந்தபோதையொப்பனையோடே கூடினவடிவைக் காட்டவல்லையே. (ய)

பதினோராம்பாட்டு.

கொண்டமூர்த்தியோர்மூவராய்க்குணங்கள் படைத்தளித்துக்
கெடுக்கும்*அப், புண்டரீகக்கொப்பூழ்ப் புனற்பள்ளியப்பனுக்கே*
தொண்டர்தொண்டர்தொண்டர்தொண்டன் சடகோபன்சொல்லா
யிரத்துளிப்பத்தும், * கண்போடவல்லார் வினைபோம்கங்குலும்
பகலே. (கக)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழியை யர்த்தத்தோடே ப்ரீதியுக்தராய்ப் பாடுவார்க்கு ஸர்வபாபங்களும் போமென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்) குணங்கள்-ஸத்த்வராஜஸ்தமோரூபமான குணங்களை, கொண்ட-கொண்ட, மூர்த்தி-ப்ரஹ்மவிஷ்ணுருத்ரமூர்த்திகளையுடைத்தாய்,ஓர்-அத்விதீயரான, மூவர் - காரணபுருஷர்கள் மூவரும், ஆய் - ஆய், படைத்து - ப்ரஹ்மாந்தர்யாமியாய்ப் படைத்து, அளித்து - ஸ்வாவதாரமான விஷ்ணுரூபியாய் ரக்ஷி

த்து, கெடுக்கும் - ருத்ராந்தர்யாமியாய் ஸம்ஹரிக்குமவனாய், அ - இதுக்கெல்லாம் மூலமாக ப்ரமாணஸித்தமான, புண்டரீகம் - புண்டரீகத்தையுடைய, கொப்பூழ் - திருநாபியையுடையனாய்க்கொண்டு, புனல் - காரணஜலத்திலே, பள்ளி - கண்வளர்ந்தருளின. அப்பனுக்கு - மஹோபகாரகனுக்கு, தொண்டர் - ஸம்பந்திகளானாரை, தொண்டர் - ஸம்பந்தித்தாரை, தொண்டர் - ஸம்பந்தித்தார்க்கு, தொண்டர் - ஶேஷபூதரான, சடகோபன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரத்து, இப்பத்தும்-இப்பத்தையும், கண்டு - அர்த்தாவலோகநம் பண்ணி, பாடவல்லார் - ப்ரீதிப்ரேரிதராய்ப் பாடவல்லார்க்கு, கங்குலும் பகல்-அஹோராத்ராதிவிபாகமற ஸர்வகாலத்திலும், வினை - பகவதநுபவ ப்ரதிபந்தகபாபம், போம் - போம்.

இது - அறுசீராசிரியத்துறை.

ஆறு ;—(கொண்டமூர்த்தி) குணத்ரயாஶ்ரய த்ரிமூர்த்தி ரூபேண நிகிலஜகத்ஸர்க்கஸ்த்திதிஸம்ஹாரஹேதுபூதனாய், ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாக க்ஷீரார்ணவேஶயாநனாய், புண்டரீகஸத்ருஶமான திருநாபியை யுடையனாயிருந்த வெம்பெருமானுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸத்யஸங்கல்பத்வ காருண்ய வாத்ஸல்ய ஸௌந்தர்யாதி குணங்களுக்குத் தோற்று அநந்யார்ஹ ஶேஷபூதரானவர்களுடைய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் சொல்லாயிரத்துள் அந்த குணங்களையே தமக்குப்பற்றுசாகக்கொண்டு கூப்பிட்ட வித்திருவாய்மொழியில் பாவனையுள்ளபடி யறியக்கண்டு பாடுவாருடைய ப்ரக்ருதி ஸம்பந்த ஹேதுபூதமான பாபம் நிஶ்ஶேஷமாகப்போமென்கிறார். (கக)

ஈடு ; அவ ;—பதினோராம்பாட்டு, நிகமத்தில் - இத்திருவாய்மொழி யப்யஸித்தார்க்கு நிரந்தரமாக விந்த்ரியங்களாலாத்மாவுக்குவரும் நலிவுபோமென்கிறார்.

(கொண்டமூர்த்தியோர்மூவராய்க்குணங்கள்) குணங்கள் - கொண்டமூர்த்தியோர் மூவராய்—ஸத்த்வாதிகுணாநுரூபமான வடிவையுடைய மூவராய். குணாநுகுணமான ஸ்ருஷ்ட்யாதிகள் அந்தந்தவ்யக்திதோறும் பர்யவஸிக்குமிறே. இரண்டில் ஜீவவ்யவதாநேந நின்று, ஒன்றில் ஸ்வரூபேண நின்றபடி .(படைத்தித்யாதி)ரஜோ

குணத்தையுடையனுய்க்கொண்டு ஸ்ருஷ்டித்து, தமோகுணத்தை யுடையனுய்க்கொண்டு ஸம்ஹரித்து, ஸத்த்வகுணத்தையுடைய னுய்க்கொண்டு இவற்றையடைய ரக்ஷித்துக்கொண்டு நிற்கிறபடி.

(அப்புண்டரீகமித்யாதி) இவற்றையெல்லாவற்றையு முண்டாக்குகைக்காக வேகார்ணவத்திலேவந்து கண்வளர்ந்தருளினபடியைச் சொல்லுகிறது. ஜகதுத்பத்தி காரணதயா ப்ரஸித்தமான திருநாபிகமலத்தையுடையனுய்க்கொண்டு ஸ்ருஷ்ட்யுந்முகனுய் ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளின வுபகாரகனுனவனுக்கே. அப்புண்டரீகக்கொப்பூழென்கையாலே - ப்ரஹ்மாதிகள் கார்யமென்னுமிடமும், அவன் காரணபூதனென்னுமிடமுஞ் சொல்லிற்று. ஒருவனுக்கு உத்பத்தியிறே சொல்லவேண்டுவது, (க) " " ஸஹஸ்ரஶீர்ஷாய ஜ்யேஷ்டாய ஶ்ரேஷ்டாய - ப்ரஹ்மணஃ புத்ராயஜ்யேஷ்ட்டாய ஶ்ரேஷ்ட்டாய " என்று மற்றை யவனுடைய வுத்புத்தி தன்னடையே வருமிறே. (உ) "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்றால், மற்றையவன்பிறப்பு மநந்தரம் சொல்லுமிறே. இப்படி வேதவைதிகங்கள் சொல்லாநின்றதிறே.

(தொண்டரித்யாதி) விஷயங்களையு மிந்த்ரியங்களையு மநுஸந்தித்த நெஞ்சாறல்தீர, மோக்ஷத்வத்தினுடைய வெல்லைநிலத்திலே போய் நிற்கிறுர்; தாபார்த்தன்மடுவிலே தாழவிழியுமாப்போலே. (கண்டோடவல்லார்) இவருடைய தசையை யநுஸந்தித்தால் பாடப்போகாதாகாதே தான். (கண்டு) நமக்குத் தஞ்சமென்றநுஸந்தித்து. (வினைபோம் கங்குலும்பகலே) இரவுபகலில் வினைபோம். † (திவாராத்ரமிந்த்ரிய வஶ்யதைக்கு ஹேதுவான பாபம் போம்.) (ங) " இராப்பகல் மோதுவித்திட்டு " என்கிற துரிதம் போம்.

திருவாய்மொழி ஏழாம்பத்து முதல்திருவாய்மொழி

வ்யாக்யாநங்கள் முற்றிற்று

(க) சாந்-உப. (உ) நான்-தி-அந்-க.

(ங) ஏ-க-உ.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாம் பத்து.

இரண்டாம் திருவாய்மொழி

கங்குலும்-ப்ரவேஶங்கள்.

ஆறு;—(கங்குலும் பகலும்) இப்படி திருவேங்கடமுடையானோடு ஸம்ஶ்லேஷிக்கப்பெறாத வ்யஸநத்தாலும் தத்ஸம்ஶ்லேஷப்ரதிபந்தகப்ராக்ருதிதர்ஶநஜநித வ்யஸநத்தாலும் அத்யந்தமவஸந்நராய் அவன்திருவடிகளைப் பூண்டுகொண்டு கிடந்து கூப்பிட்டு, பின்னையும் தம்முடைய வபேக்ஷிதம் பெறாமையாலே, " இனிக்கோயிலிலே பெரியபெருமாள் திருவடிகளிலே சென்று விழுந்தாலல்லது என்னுடைய க்லேஶம்போகாது " என்று பார்த்துப்பெரியபெருமாள் திருவடிகளிலே சென்று விழுந்து அங்குமொரு கடாக்ஷம் பெறாமையாலே (க) * மதியெல்லா முள்கலங்கி, "எனக்குச் செல்லுகிற வ்யஸநமொன்றும் தெரிகிறதில்லை, சொல்ல க்ஷமனாகிறிலேன், பிரானே, என்னை யென்செய்ய நினைத்தருளினாய் " என்று, தாம் பெரியபெருமாளை நோக்கிக் கூப்பிடுகிற பாசுரத்தை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார்

பெரியபெருமாளோடே கலந்து பிரிந்தாளொருபிராட்டி, வ்யஸநாதிஶயத்தாலே மோஹதஶாபந்நையா யிருக்கிறபடியைக்கண்டு இவளிலுமவஸந்நையாயிருந்த விவளுடைய திருத்தாயார், இவளுக்குச்செல்லுகிற தஶை சொல்லநிலமல்லாமையாலே இவளுடைய தஶையைப் பெரியபெருமாளுக்குக் காட்டி இவளுடைய வ்யஸநகாரிதமான சேஷ்டிதங்களையுஞ்சொல்லி இவள்திறத்தென்செய்ய நினைந்தருளினாயென்று பெரியபெருமாளை நோக்கிக்கூப்பிடுகிற பாசுரங்களாகச் சொல்லுகிறாள். *

ப:—இரண்டாம் திருவாய்மொழியில், கீழ் - விஷயேந்த்ரியாதிகளுடைய வதிப்ரவ்ருத்தியை யநுஸந்தித்து ஆர்த்தராய்க்கூப்பிட்டவர், (உ) "கன்னலேயமுதே" என்று கீழநுஸந்தித்த போக்யதையாலே யிந்தவார்த்தியோடே

(க) க-ச-ரு, (உ) எ-க-உ.

கூடவதிப்ராவண்யமும் நடந்து, ப்ராவண்யாநுரூபமான வநுபவம் லபியாமையாலே “ அதுப்ரதிபந்தககார்யமிறே ” என்றநுஸந்தித்து, ப்ரதிபந்தகங்களைப் போக்கி யநுபவிப்பிக்கவேண்டும் யோக்யதைக்கீடான, ப்ராப்யபூதனுடைய வநுபாவ்ய சிஹ்நயோகத்தையும், ரக்ஷணார்த்த ப்ரவ்ருத்தி விஶேஷத்தையும், ரக்ஷணப்ரதிபந்தக நிவர்த்தகத்வத்தையும், அபரிச்சிந்நமாஹாத்ம்யத்தையும், ஆஶ்ரிதாபேக்ஷிதகரத்வத்தையும், ஆஶ்ரித ஸம்ரக்ஷணார்த்தமான வாயுதபூர்த்தியையும், ஸம்ரக்ஷணோபயுக்தமான ஸமுத்ரஶாயித்வத்தையும், அவதாரதசையிலதிமாநுஷசேஷ்டிதத்தையும், ப்ரணயித்வாதிஶயத்தையும், ஈஶ்வராபிமாநிகளுக்கு மந்தாராத்மாவான வீஶ்வரத்வாதிஶயத்தையுமநுஸந்தித்து, “ இப்படி ரக்ஷகனுமாய் போக்யனுமானவவன்ப்ரதிபந்தகத்தைப்போக்கி யநுபவிப்பிக்கிறிலன் ” என்கிற வார்த்த்யதிஶயத்தாலே அரதிக்ருதமான வநேக வ்யாபாரங்களைப்பண்ணியவஸந்நராய், அர்ச்சாவதாரஸுலபமான பெரியபெருமாளைநோக்கிப் பிறந்தவபிநிவேஶாதிஶயத்தாலே யப்ராக்ருதிங்கதரான ப்ரகாரத்தையநுஸந்தித்துப் பரிவரானவர்கள் இவருடைய தசையையவர்க்கு விண்ணப்பஞ்செய்த ப்ரகாரத்தை நாயகரான பெரியபெருமாளோடு விஶ்லிஷ்டையான நாயகியினுடைய வார்த்த்யதிஶயத்தை யநுஸந்தித்தாற்றாளாய் நற்றாயானவள் தன்னாற்றாமையின் மிகுதியாலே அவளை புத்தியாலே யபரோக்ஷித்திரங்கியுரைத்த பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். *

ஈடு; அவ ;—* உண்ணிலாவியில் - * நமஶ்ஶப்தார்த்தம் பலவகையாலும், (க) “ தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் ” என்று ததியஶேஷத்வ பர்யந்தமாக வுள்ளபடி யநுஸந்தித்தாராயிற்று. * உலகமுண்ட பெருவாயனில் - பெரியபிராட்டியார் முன்னிலையாகத் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே விழுந்து ஶரணம் புக்கார். விஷயங்களு மிந்த்ரியங்களும் நடையாடுகிற ஸம்ஸாரத்திலே வைத்தபோதே தன்பக்கலினின்றும் நம்மை யகற்றப் பார்த்தானாகாதேயென்று கூப்பிட்டார் - * உண்ணிலாவியில். வ்யபிசாரமுமின்றிக்கே வ்யவதாநமுமின்றிக்கே யிருக்கிற ஸாதநத்தைப்பற்றினபின்பும் அதுபலியாவிட்டால் அவன்றன்னையேயின்னாதாய்க்கொண்டு கூப்பிடுமத்தனையிறே. இப்படி கண்ணழிவற்றது பின்னையும் பலியாதொழிவானென்னென்னில் ; அதுபலியாநிற்க, க்ரமப்ராப்தி பொறுக்கமாட்டாமல் படுகிறார்.

(க) எ-க-கக.

ஈஶ்வரனுடைய ஸர்வஜ்ஞத்வத்துக்குமவ்வருகான விவருடைய மார்த்தவவேஷமிருக்கிறபடி. பிராட்டியைப்போலே, (க) " ந து³வஸௌஹ்ருத³ம்ʼ ஹவெகஸ் – தத்தஸ்யஸத்ருஶம்பவேத் " என்றிருக்கமாட்டார், ருசியளவில்லாமையாலே. ஸம்ஸாரத்தினுடைய தோஷத்தையுமநுஸந்தித்து எம்பெருமானுடைய குணோத்கர்ஷத்தையுமநுஸந்தித்தாலாறியிருக்கப்போகாதிறே. பகவத்விஷயமறியாத ஸம்ஸாரிகள் இவர்க்குக் கூட்டல்ல, பகவதலாபமறியவேண்டாத நித்யஸூரிகளு மிவர்க்குக்கூட்டன்று, அலாபத்தில் நோவுபடுகைக்கு இவரொருவருமேயுள்ளார். பட்டர் இத்திருவாய்மொழியருளிச்செய்யும்போதெல்லாம் " ஆழ்வார்க்கோடுகிற தஶையறியாதே அவருடைய பாவவ்ருத்தியுமின்றிக்கே யிருக்கிற நாமென் சொல்லுகிறோம் " என்று திருமுடியிலே கையை வைத்துக்கொண்டிருப்பர்.

அவனும், " இவர் நமக்கே பரமென்னுமிட மறிவித்தாராகில், நாமுமிவர்கார்யம் செய்யக்கடவதாக வற்றபின்பு செய்து தலைக்கட்டிற்றன்றோ; இவரங்குப்போ யநுபவிக்கு மநுபவ மிங்கேயிருந்தே குறைவற வநுபவியாநின்றாராகில். ' விரோதிபோயிற்றில்லையே ' என்று இவர் பண்ணுகிற வதிஶங்கையும் போக்குகிறோம்; நாலுநாள் முற்பாடுபிற்பாடன்றோ, இதில் கார்யமென் " என்றிருந்தான். பிற்பாடு பொறுக்கமாட்டாதவிவரை வைக்கப்போருமோவென்னில்; ப்ரஜைகளைப் பட்டினியிட்டு வைத்தும் வந்தவிருந்தினரைப் பேணுவாரைப்போலே, " இவர்தாம் நாலுநாள் நோவுபட்டாராகில் படுகிறார், இவருடைய ப்ரபந்தத்தைக் கொண்டு நாட்டை வாழ்விப்போம் " என்றிருந்தான்.

"இவரொரு முஹூர்த்தமிருக்கையாவது, தன்னோலும் திருந்தவொண்ணாத ஸம்ஸாரம் திருந்தி வாழும்படியாயிருந்தது " என்றதுக்காக வைத்தானவன் ; இவர், " நம்படியறிந்தானாகில், தனக்கு ஶக்தியில் குறையில்லையாகில், இது பொருந்தாத நம்மையிட்டுக் காரியங்கொள்ளவேணுமோ ; இவ்விருப்பில் பொருந்துவாரொருவரைத் திருத்திக் காரியங்கொள்ளத் தட்டென் " என்றிருந்தார். அவனும் " இது பொருந்தாதாரையே கொண்டு காரியங் கொள்ள

(க) ரா-ஸு-௯௧-௯௦.

வேணும்” என்றிறே யிருக்கிறது; தேஶிகரையிட்டுக் காரியங்கொள்ளவேணுமே. பண்ணின ப்ரபத்தி சடக்கெனப் பலியாதொழிந்தது, ப்ரஹ்மாஸ்த்ரம் வாய்மடிந்தமாத்ரமிறே.

இனித்தான் அவனும், ஸ்ரீபரதாழ்வான் மாதுலகுலத்தில் நின்றும் வந்து தாயாரை நமஸ்கரிக்க, அவள் (க) “ராஜஞ் - ராஜஂ” என்ற வெம்மை பொறுக்கமாட்டாமை பெருமாள் திருவடிகளிலே தன்னுற்றுமையோடே விழுந்து ஶரணம்புக்கு, “தேவர்மீண்டருளவேணும்” என்ன; பெருமாளும் மீளாமைக்கு ஹேதுவாயிருப்பன வநேகத்தை யிவனுக்குச்சொல்லி, “பிள்ளாய்! நீ நிர்ப்பந்திக்கக் கடவையல்லே, உன்னை ஸ்வதந்த்ரனாக்கி வார்த்தைசொன்னேனாகில் உன் ஸ்வரூபாநுரூபமான பாரதந்த்ர்யத்தைப் பெற்று நீ போ” என்று சொன்னப்போலே, இவரபேக்ஷித்த தொழிய வேதேனு மொன்றைக் கொடுத்துப் பொகட்டுப் போகவல்லானொரு ஸ்வதந்த்ரனிறே; ஆகையாலே தான் நினைத்தபோது கார்யம் செய்யக் கடவனுமாயிருக்குமிறே.

ஸர்வஜ்ஞனானவன் இவர்க்கோடுகிற தசையறிந்து, தன்னுடைய ஸர்வஶக்தித்வங்கொண்டு இவர்க்கொரு பரிஹாரம்பண்ண வேண்ணுதபடி யிவருடைய தஶாவிசேஷமிருக்கிறபடி. இவர் தாமும் (உ) “விண்ணுளார்பெருமானேயோ” என்றும், (ங) “முனபரவைகடைந்த முதங்கொண்ட மூர்த்தியோ” என்றும், (ச) “பலமுதல்படைத்தாய்” என்றுஞ் சொல்லுகிறபடியே - பரத்வம், அவதாரம், ஜகத்காரணத்வம், இவற்றைச் சொல்லியிறே கூப்பிட்டது; அதில், பரத்வம் லோகாந்தரமாகையாலே, “கிட்டப்பெற்றிலோம்” என்றாறியிருக்கலாம். ஜகத்காரணத்வம் தானறிந்து செய்யுமதாகையாலே, “நம்மால்செய்யலாவதில்லை” என்று கொண்டாறி யிருக்கலாம்; அவ்விழவுகளெல்லாந் திரும்படி ஸதாஸந்நிதி பண்ணிக்கொண்டு கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள் திருவடிகளிலேவிழுந்து தம்மபேக்ஷிதம் பெறுவிட்டால் தரிக்கவொண்ணாதிறே; விஷயமஸந்நிஹிதமாதல், ஜ்ஞாநத்தில் கொத்தையுண்டாதல் செய்யிலிறே தரித்திருக்கலாவது. நீர்மையில் கண்ணழிவுண்டாயாதல், மேன்மையில் கண்ணழிவுண்டாயாத விழக்கிறானிறே.

(க) ரா-அயோ-எஉ-உச. (உ) எ-க-ரு.

(ங) எ-க-கo. (ச) எ-க-கூ.

இப்படி யிருக்கச்செய்தேயு மவர் திருவடிகளிலே தமக்கு நினைத்த பரிமாற்றம்பெறுமையாலே தாமான தன்மைபோய் ஒருபிராட்டி தசையை ப்ராப்தராய், அவ்வளவிலும் தமக்கோடுகிற தசையைத் தாமறிந்து கூப்பிடப்பெறுதே, திருத்தாயார் கூப்பிடும்படியாய் விழுந்தது. ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களில் பிறக்கும் லாபாலாபங்களாலே தாம்பிராட்டிமார்தசையை யுடையராகிறூர்; திருத்தாயாரான ஸ்வபாவம் விளைந்தபடி எங்ஙனேயென்னில் ; கிண்ணகம்பெருகி யோடாநின்ற விருகரையுமாறுகளாகப் பெருகிப்போகா நிற்கச்செய்தேயும் கடலிற்புகுமம்ஶம் குறையாமல் போய்ப்புகுமாப்போலேயாயிற்று இவருடைய (க) " அதனிற்பெரிய வென்னவா" என்கிற வபிநிவேஶமிருக்கிறபடி ; ஆகையாலே யிவர்க்கெல்லார் பேச்சும் பேசக் குறையில்லை.

இப்பெண்பிள்ளை மோஹித்துக்கிடக்க, இவளைக் கண்டு உறவுமுறையாரடங்கலும் மோஹித்துக்கிடக்க ; பெருமாளிலு மிளைய பெருமாளுக்குத் தளர்த்தியுண்டா யிருக்கச்செய்தே பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக விளையபெருமாளுணர்ந்திருக்குமாபோலே, திருத்தாயாருமிவளுடைய ரக்ஷணத்துக்காக வுணர்ந்திருந்தது ; ஏதேனும் தசையிலும் தங்கள் காரியம் தாங்கள் செய்யக்கடவதன்றிக்கே யிவன்காலிலே விழுந்து தங்கள்காரியம் தலைக்கட்டுங்குடியாகையாலே பெரியபெருமாள் திருவடிகளிலே யிவளையிட்டு வைத்துக்கொண்டிருந்து, " இவளழுவது தொழுவது, மோஹிப்பது, ப்ரலாபிப்பது, அடைவுகெடப் பேசுவது, நெடுமூச்செறிவது, அதுதானும் மாட்டாதொழிவது, ஸ்தப்தையாயிருப்பது, இப்படியாதிவிஞ்சிச்செல்லாநின்றது ; இவள் திறத்திலே நீரென்செய்யக்கடவீர் " என்று கூப்பிடாய்ச் செல்லுகிறது. எல்லாவளவிலு மவனையே பரிஹாரங்கேட்கும் குடியாகாதே.

ஆண்டாளொருநாள் ஆழ்வானுக்கு, " பிள்ளைகள் விவாஹப்ராப்தராஞர்கள், இவ்விடையாட்ட மொன்றுமாராயாதிருக்கிறதென் " என்ன, "பகவத்குடும்பத்துக்கு என்னை யின்றிருந்து கரையச்சொல்லுகிறுயோ ; நாளை நான் வாசித்துச் சமையக்கொள்ள, அங்கேவரக்காட்டு " என்ன, பட்டரையும் சீராமப்பிள்ளையையும்

(க) கo-கo கo.

கொடுத்துப்போகவிட, வாசித்துச்சமைந்து பெருமாள் திருவடிக ளிலே நிற்க, "ஒன்று சொல்லுவாய்போலே யிருந்தாயே" என்று திருவுள்ளமாக, "'இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள், என்றுநின் றார்கள்' என்று விண்ணப்பஞ்செய்ய, "எல்லாம் செய்கிறோம்" என்று திருவுள்ளமானார்; பிற்றைநாளே மன்னியைக்கொண்டுவந்து கொடுத்தார்கள்.

அகளங்கப்ரஹ்மராயர் அடையவளைந்தான் செய்யாநிற்கச் செய்தேமதிள் போக்குகைக்காக இளையாழ்வானகத்தை தவாங்கப்புக, பட்டர் அத்தைக்கேட்டருளி, "வாரீர்பிள்ளாய், நீர்செய்கிறமதிள் பெருமாளுக்கு ரக்ஷகமென்றிராதே கொள்ளீர்; இங்குக்கிடக்கிற நாலுகுடியுங்காணும் பெருமாளுக்கு ரக்ஷை; ஆனபின்பு நீர் செய் கிறவை யெல்லாமறுகிது, 'இவையெல்லாம் நாம்செய்கிறோம்' என் றிராதே, 'பெருமாள் செய்விக்கிறார்' என்றிரீர், உமக்கு நல்வழி போக வுடலாங்காணும்" என்றருளிச்செய்தார்.

இத்திருத்தாயாரும் ஸர்வபரங்களையும் அவர்தலையிலே பொகட்டுப் பெண்பிள்ளையைத் திருமணத்தூணுக்குள்ளே பொகட்டு, அவருடைய அஶரண்யஶரண்யத்வாதிகுணங்களை விண்ணப்பஞ் செய்யாநின்றுகொண்டு; ஒருகாலநியதியாதல், ஒருதேஶநியதியா தல், அதிகாரிநியதியாதலின்றிக்கே ஸர்வஸமாஶ்ரயணீயரா யிருக்கி றபடியை யநுஸந்தித்து, தன்பெண்பிள்ளையினுடைய தஶையைத் திருவுள்ளத்திலே படுத்துகிறாள் இத்திருவாய்மொழியாலே. *

முதற்பாட்டு.

கங்குலும்பகலும் கண்துயிலறியாள் கண்ணநீர் கைகளால்
இறைக்கும் * சங்குசக்கரங்களென்று கைகூப்பும் தாமரைக்கண்
ணனென்றேதளரும் * எங்ஙனேதரிக்கேன் உன்னைவிட்டு ? என்னும்
இருநிலம்கைதுழாவிருக்கும் * செங்கயல்பாய்நீர்த்திருவரங்கத்தாய்!
இவள்திறத்து என்செய்கின்றாயே ? (க)

ப — முதற்பாட்டில் ; - அநுபாவ்யமான வஸாதாரண சிஹ்நங்களைச் சொல்லி யிவளார்த்தையாகாநின்றாள், இவளளவி லென்செய்ய நினைத்திருக்கி றீரென்கிறாள்.

(இ-ள்.) கங்குலும் - நாட்டாருறங்கும் கங்குலும், பகலும் - ப்ரணயிநிக ளுறங்கும்பகலும், கண் - கண்கள், துயில் - துயிலவேணுமென்று, அறியாள் -

அறிவும் நடையாடுகிறிலள்; இவள் கண்வட்டத்திலுறக்கம்வாராதபடி ஶோகாஶ்ருவெள்ளங் கொள்ளுகையாலே, கடலைக் கையிட்டிறைப்பாரைப்போலே, கண்ணநீர் - கண்ணநீரை, மாற்றுவதாக, கைகளால் - கைகளாலே. இறைக்கும் - இறையாநிற்கும், இக்கண்ணநீர்க்கிரங்கி வருமென்று நினைத்து அபேக்ஷிக்கைக்கீடாக (க) * கூராராழிவெண்சங்கேந்திவரக்கூடுமாகையாலே, சங்குசக்கரங்கள்-சங்குசக்கரங்கள், என்று-என்று அவற்றைச் சொல்லி, கைகூப்பும் - வந்தால்பண்ணு மஞ்ஜலியைப்பண்ணாநிற்கும்; வந்தால் குளிரநோக்கும் கண்களைநினைத்து, தாமரை-தாமரைபோன்ற, கண்-கண். என்றே-என்று சொல்லி அது பெறாமையாலே, தளரும் - தளராநிற்கும், உன்னை - இந்தவாயுதஶோபையையு மவயவஶோபையையுமுடைய வுன்னை, விட்டு - விட்டு, எங்ஙனே - எங்ஙனே, தரிக்கேன் - தரிக்கக்கடவேன், என்னும் - என்னும், தன்னார்த்தய திஶயத்தாலே, இருநிலம் - பூமிப்பரப்படங்க, அவன் காலாலே துழாவினவோபாதி. தான், கை-கையாலே. துழா - துழாவி, இருக்கும் - அதுக்கும் ஶக்தை யன்றியே நிர்வ்யாபாரையாயிருக்கும், செம் - இளமையாலே சிவந்தபுகரையுடைத்தான, கயல்-கயலானது, பாய் - உகளித்துப்பாய்கிற, நீர் - நீரையுடைத்தான, திருவரங்கத்தாய் - கோயிலிலே ஸந்நிஹிதனானவனே, இவள்திறத்து - இப்படி அதிஶயிதமான விகாரத்தையுடையளாய், அந்த நீரைப்பிரிந்த கயல்போலே உன்னைப்பிரிந்து தரியாத விவளளவிலே, என் - எது, செய்கின்றாய் - செய்கிறாய்; இவ்வார்த்தியைத் தீர்க்க நினைக்கிறாயோ, அதிஶயிப்பிக்கநினைக்கிறாயோ வென்றுகருத்து. (க)

ஆறு ;— உன்னைக் காணப்பெறாத நிரவதிக வ்யஸநத்தாலே திவாராத்ர விபாகமின்றியே யொருகாலும் நித்ரையான தெங்ஙனே யிருக்குமென் றறியாள்.

உன்னைக்காண்கைக்காகப் பெருத்தாகவூறுகிற கண்ணநீராகிற கடலை, தன்னுடைய வபிநிவேஶத்தாலும் மௌக்த்யத்தாலும் தன் சிறுக்கைகளாலே யிறையாநிற்கும். (க) " கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால்வாராய் " என்று சொல்லத்தொடங்கி முடியச் சொல்ல ஶக்தையல்லாமே, அவ்விரப்புத் தோன்றும்படி கைகளாலே தொழாநிற்கும். (உ) "தாமரைக்கண்களால் நோக்காய்" என்றுசொல்லவுத்யோகித்தமாத்ரத்திலே தளரும். என்னையுங்கூடத் தோற்பித் தடிமையாக்கின கண்களையுடைய வுன்னைப்பிரிந்து, தீக்ஷ்ணமான

(க) சா கூ-க. (உ) கூ-உ-க.

விஷத்தைப் பாநம்பண்ணிநுப்போலே யொருபடியாலும் தரிக்க மாட்டேனென்று சொல்லாநிற்கும். தன்னுடைய ஸந்தாபத்தைப் பொறுக்கமாட்டாமே, மஹீதலத்திலே விவேஷ்டநம் பண்ணாநிற்கும். நிகில ஜந்துஜாதஸரண்யனே! கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறது இவளுக்காகவன்றோ! இவளுடைய தசையிருக்கிறபடி பார்த்தருளாய்பிரானே, இவள்திறத் தென்செய்ய நினைத்தருளினுயென்கிறாள். (க)

ஈடு; அவ — முதற்பாட்டு. இப்பிராட்டியுடைய பேச்சுக்கு நிலமன்றிக்கேயிருக்கிற தசையைப் பெரியபெருமாளுக் கறிவித்து, இவள்திறத்துச்செய்தருளநினைத்திருக்கிறதென் என்கிறாள்.

(கங்குலும்பகலும்கண்துயிலறியாள்) இவளை யெப்போது கண்டுயிலப்பண்ண விருக்கிறீர். விரஹிணிகளுக் கோடுகிற வ்யஸநம் மாற்றுகைக்காக "இரா, பகல்" என்றொரு வரம்புகட்டின வித்தனையிறே; அதிவளுக்குக் காரியமாகிறதில்லை. ராத்ரியில் விஷயலாபத்தாலே போதுபோக்கவும்,பகல் இந்த்ரியங்களானவை விஷயாந்தரங்களிலே கொடுபுக்குமுட்டி, "அப்போதாயிற்று, இப்போதாயிற்று" என்று காலக்ஷேபத்துக் குடலாயிருக்குமிறே. "எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டு" " என்று சொல்லுகையாலே, இவளுக்கங்ஙனென்றுசொல்லித் தரிக்கவொண்ணாதே. தனக்காய்வாஸஹேதுவாகப் பண்ணின திவாராத்ரவிபாகமுமறிகிறிலள். பகலுமிரவோடொக்கவுறங்கக்கண்டதிறே.

(பகலும்) † (நாட்டாரிரவு உரங்குவர்கள், ப்ரணயிநி) யௌவநங் குடிபுகுந்தால் இராமாறு நாயகனுக்கு அலை கொடுக்கையாலே உறக்கமில்லை; அவ்விழவுக்கு மெற்றி உறங்குவது பகலிலிறே, அதுவும் பெறுகிறதில்லை. (க) "[illegible] –அநித்ரஸ்ஸதம்ராம:" என்றுகொண்டு தன்படியாக்கினுன். (உ) "[illegible] - பரமம்ஸாம்யமுபைதி" என்கிறபடியே தம்மோடு ஸாம்யாபத்தி கொடுத்தபடி. கண்டுயில் கொள்ளாளென்னுதே, அறியாளென்கிறது-ஸம்ஸ்லேஷத்தி லவனுறங்கவொட்டான், விஸ்லே

---

† குண்டலித்தம் க்வரசித்தம்.

(க) ரா-ஸு-௩௬-சச (உ) முண்ட-௩-௧

ஷத்தில் விரஹவ்யஸந முறங்கவொட்டாது, ஆகையாலே இவளுக் கிரண்டுபடியாலு முறக்கமில்லாமையாலே. இவள் கலந்தவன்று உறங்கினாலும், இவளிப்போது படுகிற வ்யஸநத்தை யநுபவித்த திருத்தாயார்க்கு அதொன்றாய்த்தோற்றாதே!. இவ்வ்யஸநத்துக்குப் பூர்வரங்கமாய் வந்த தொன்றாகையாலே அத்தையொன்றாக நினைத்திருக்கிறிலள். என்றும் சிறைக்கூடத்திலே பிறந்து வளர்ந்தாரைப்போலே, பிரிந்தநாளை யிழவேகாணும் இவள் நெஞ்சிலே பட்டுக்கிடக்கிறது. (அறியாள்) ஒக்கவிருக்கச்செய்தே "கைங்கர்ய விரோதி" என்று கைவிட்டவர்களிற்காட்டில் இவளுக்குண்டான வாசியிருக்கிறபடி. முன்பில்லையாகிலும் இஜ்ஜந்மத்தில் மெய்ப்பாடு பற்றிவிடவேண்டிற்று.

(கண்ணநீர்கைகளாலிறைக்கும்) இவளுக் கிவ்வறியாமை யெங்குமொக்க வநுவர்த்திக்கப் பெற்றதில்லை. "இவ்வாற்றாமையில் ஸர்வதா நாயகன் வாராதிரான்" என்று பார்த்து, "அப்போதாகப் பகைகொண்டாட வொண்ணாது, ப்ரதம பரிஷ்வங்கந் தொடங்கிக் காணவேணும்" என்று கண்ணநீரை மாற்றப்பாராநின்றாள். இதென்ன ஸாஹஸந்தான்!. இது தன்னாலியலுமென்று தொடங்கினாளே. (க)* கடல்கொண்ட கண்ணீரிறே. கோகுளிலையைக்கொண்டு கடலை வற்ற விறைப்பதாக நினைப்பாளே!. தன்கையாலே கண்ணநீரை யிறைக்கப் பாராநின்றாள். (உ) "[illegible]-கிமர்த்தம் தவநேத்ராப்யாம்" என்னும்படிகாணு மிருக்கிறது.

(சங்கு) கண்ணநீரை மாற்றினால், கண்ணாலே காணவந்து தோற்றும்படியை நினையாநின்றாள் (ங) "தவளவொண்சங்குசக்கரம்" என்று - திவ்யாயுதங்களோடே காணவிறே யிவள்தானாசைப் பட்டிருப்பது. உகவாத கம்ஸாதிகளுக்கிறே த்விபுஜனாகவேண்டுவது. (ச) "தேநைவ ரூபேண சதுர்ப்புஜேந" என்றானிறே காணவாசைப்பட்ட வர்ஜுநன். (ரு) "கூராராழிவெண்சங்கேந்தி-வாராய்" என்னக் கணிசித்து, பலஹாநியாலே, குறையும் அஞ்ஜலியாலே தலைக்கட்டாநின்றாள்.

(க) திருவி-கஅ. (உ) ரா-ஸு-ருரு-ச.
(ங) சு-ரு-க. (ச) கீதை-கக-சரு.
(ரு) சு-கூ-க.

(தாமரைக்கண்ணனென்றேதளரும்) அவ்வாழ்வார்களளவும் வந்தலையெறிகிற கண்ணழகைச் சொல்லப்புக்கு, நடுவே தளராநின்றாள். (க) "உன்தாமரைக்கண்களால் நோக்காய்" என்று சொல்லப் புக்கு, நடுவே தளராநின்றாள். (உ) "நாஹம் ரக்ஷோகணநயநநிவேஸ்ய ஸ்ரீ ஸுது:ஃவிதா - ராமம் ரக்தாந்தநயந மபஸ்யந்தீ ஸுது:கிதா" என்னுமாபோலே.

தளருகிறதென்? வேறொன்றாலே போதுபோக்கிறாலோ வென்பர்களே (எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டேன்னும்) பரவ்யூஹவிபவங்களிலே யாசைப்பட்டேனாயாறியிருக்கிறேனோ! (உன்னைவிட்டு - எங்ஙனே தரிக்கேன் - என்னும்) உறக்கத்தாலே, சூது சதுரங்கத்தாலே போதுபோக்கலாம் விஷயத்திலேயோ வகப்பட்டதென்னும். உம்முடையவைலக்ஷண்யம் நீரறிந்தால், "நம்மைப்பிரிந்தார் தரிக்கமாட்டார்கள்" என்னுமிடம் நீரே யறியவேண்டாவோ? (உன்னை விட்டு - எங்ஙனே தரிக்கேன் - என்னும்) உன்னைக் கண்ணுடிப்புறத்திலும் கண்டறியாயோ. கண்டாயாகில் பிரியாய், பிரிந்தாயாகில் இவள்பட்டது படுவதி. "எங்ஙனேதரிக்கேன்" என்ற வநந்தரம் வாக்காணுமையாலே (இருநிலம்கைதுழாவிருக்கும்) (கண்ணநீர் ப்ரவஹிக்கச்சேறுகையால்,) † மஹாப்ருதிவி ஒருபிங்காணுக்குட்பட்ட சந்தபங்கம்பட்டது படாநின்றது.

(செங்கயல்) அவ்வூரில்வர்த்திக்கிற திர்யக்குக்களின் ஸ்வபாவம் இவளுக்கரிதாவதே. அவை தன்னிறம்பெற்று வர்த்தியா நின்றன; இவள் நிறமிழந்தாள். நாரத்தைப்பற்றினது களித்து வர்த்தியா நின்றது, நாராயணனைப்பற்றின விவள் து:கிப்பதே!. (செங்கயல்) அழகியகயல். அக்கயல் ஜலத்தைப்பிரிந்து தரிக்கிலன்றோ இவளுநன்னைவிட்டுதரிக்கவல்லது. (ங) "ஜலாந்நக்ஸ்ராவிவோத்ருதள - ஜலாந் மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" என்னக்கடவதிறே யிவளையும். (இவள்திறத்து) (ச) "ஸஹிவஸ்ரஸரீராணி-ஏஹிபஸ்யஸரீராணி" என்னுமாப்போலே, இவள்படி பேச்சுக்கு நிலமல்லாமையாலே காட்டுகிறாள். ராக்ஷஸர் தின்ற வுடம்பைக் காட்டினப்போலே, விரஹம்தின்ற வுடம்பைக்காட்டுகிறாள். (என்செய்கின்றாயே) இவள்

(க) கூ-உ-க. (உ) ரா-ஸு-உசு-ஙஎ.
(ங) ரா-அயோ-ருங-ஙக. (ச) ரா-ஆர-சு-கசு.

திறம் செய்யப் பார்த்ததென்?. உம்முடையவூரில் பதார்த்தங்கள் பெற்றதும் பெறவேண்டாவோ வும்மையாசைப்பட்ட விவள். (௧)

இரண்டாம்பாட்டு.

என்செய்கின்றாய்? என்தாமரைக்கண்ணா! என்னும் கண்ணீர்மல்க இருக்கும் * என்செய்கேன்? எறிநீர்த்திருவரங்கத்தாய்! என்னும் வெவ்வுயிர்த்துயிர்த்துருகும் * முன்செய்தவினையே! முகப்படாயென்னும் முகில்வண்ணா! † தகுவதோ? என்னும் * முன்செய்து இவ்வுலகமுண்டுமிழ்ந்தளந்தாய்! என்கொலோ முடிகின்றது இவட்கே? (௨)

ப.—அநந்தரம், நீ ஸர்வப்ரகார ரக்ஷகனாயிருக்க, இவளுடைய ப்ரகாரமென்னாய் முடிகிறதென்கிறாள்.

(இ-ள்.) என் - ப்ரதமத்திலே யென்னை யநந்யார்ஹையாக்கி, தாமரை - ஆசையைவிளைக்கும்படி யதிஸயிதபோக்யமான, கண்ணா - கண்ணையுடையவனே, அநுபவபர்யந்தமாகப் பார்க்கநினைக்கிறாயோ, அவ்வளவிலேயொடியெறிந்திட்டுவைக்க நினைக்கிறாயோ? என் - என், செய்கின்றாய் - செய்யநினைக்கிறாய், என்னும் - என்னும், அதுக்கொருமறுமாற்றங்காணாமையாலே, அந்தஸ்தாபத்தாலே. அகவாயில், கண் - கண், நீர் - நீர், மல்க - சுவறித்துளும்பு மளவாம்படி, இருக்கும் - ஸஞ்சாரக்ஷமையன்றியே யிருக்கும், எறி - அலையெறிகிற, நீர் - நீரையுடைத்தான, திருவரங்கத்தாய் - கோயிலிலேஸந்நிஹிதனானவனே, உன்னைக்கிட்டுகைக்கு, ஸக்தனாய் ஸுலபனான நீ யொன்றுஞ் செய்யாதிருக்க, அஸக்தையா யார்த்தையானநான், என் - எத்தை, செய்கேன் - செய்வேன், என்னும் - என்னும், இந்த வாகிஞ்சந்யத்துக்கும் முகங்காட்டாமையாலே. வெ - அந்தஸ்தாபத்தாலே வெவ்விதாம்படி, உயிர்த்துயிர்த்து - பலகாலும்மூச்சுவிட்டு, உருகும் - அப்பரிதாபத்தாலேயுருகாநிற்கும். இப்படி க்லேஸிக்கைக்கடியாக முன் - முன்பு, செய்த - நான்பண்ணிவைத்த. வினையே - கர்மமே, முகப்படாய் - முகந்தோற்றநில்லாய், என்னும் - என்று க்லேஸகரமாகையாலே சேதநஸமாதியாலே சொல்லாநிற்கும், " அதுவுமவனிட்டவழக்கு " என்கிறதெளிவு பிறந்தவாறே, முகில்வண்ணா - ஜலஸ்தலவிபாகமற வுபகரிக்கும் மேகஸ்வபாவனானவனே, நீமுகங்காட்டாதிருக்குமது, தகுவதோ - அந்தவுபகாரத்துக்குத்தகுவதோ, என்னும் - என்னும், அந்தவுபகாரகத்வ பலமாம்படி, இ - இந்த,

† 'தகவிதோ' - என்று பாடாந்தரம்.

உலகம் - லோகத்தை, முன் - ப்ரதமத்திலே, செய்து-ஸ்ருஷ்டித்து, உண்டு - ப்ரளயத்திலேயுண்டு, உமிழ்ந்து - உமிழ்ந்து, அளந்தாய் - அந்யாபிமாநம்போம்படியளந்துகொண்டவனே, இவட்கு - உன்னையொழியச் செல்லாதபடியான இவளுக்கு, என் - என்னாய், முடிகின்றதுகொலோ - முடியப்புகுகிறதோ.

இந்தவார்த்திக் கெல்லையுண்டாம்படி உன்னுடைய ரக்ஷ்யவர்க்கத்திலே இவளுக்கு மந்தர்ப்பாவமுண்டாகிறதோ, யாப்யமாய்விடும்படி யிவற்றின் புறத்தாளாம்படியாகிறதோ வென்றுகருத்து. (உ)

ஆறு;— (என்செய்கின்றாய்) என்னைத்தோற்பித் தடிமையாக்கின தாமரைக்கண்களையுடையவனே, அக்கண்களாலே யென்னைக் குளிரப்பார்த்தருள நினைத்தாயோ வில்லையோவென்னும்; உன்னுடைய வவலோகநாபாவஜநித ஸந்தாபத்தாலே அக்கண்ணநீர் வெள்ளமெல்லாம் ப்ரோக்ஷிக்கையாலே கரைக்குட்பட்ட கண்ணநீரையுடையளாய், ஒருசேஷ்டிதக்ஷமையன்றியே யிருக்கும்; என்னுடைய ஸந்தாபத்தையெல்லாம் போக்குகைக்காகவன்றோ கோயிலிலே கண்வளர்ந்தருளிற்று, இஸ்ஸந்தாபமொன்றும் பொறுக்கமாட்டுகிறிலேன், என்செய்கேனென்னும்; தன்னுடைய ஸந்தாபஜநித தீர்க்கோஷ்ண நிஶ்வாஸ பரம்பரைகளாலே யுருகாநிற்கும். ஈத்ருஶமான வ்யஸநத்தை யநுபவிக்கைக்கு ஜந்மாந்தரத்திலே யென்னபாபத்தைப்பண்ணினேனோ வென்னும்; பரமோதாரனே, என்னுடைய வபேக்ஷிதம் செய்யாதொழிகை உன்னுடைய வௌதார்யத்துக்குப் போருமோவென்னும். நிர்ஹேதுகமாக லோகத்தைப் படைத்து ரக்ஷித்தருளுகிற பரமகாருணிகனே! இவளுக்கென்னாய் விளையுமோ வென்கிறாள். (உ)

ஈடு; அவ;— இரண்டாம்பாட்டு. இப்பெண்பிள்ளையுடைய தசை யென்னாய் விளையக்கடவதென்கிறாள்.

(என்செய்கின்றாய்) ஆற்றாமை மிகமிக அவனைக்கேட்கு மித்தனையிறே. (என்தாமரைக்கண்ணாவென்னும்) ஒருநீர்ச்சாவியான பயிருக்கொருபாட்டம் வர்ஷிக்கக்கடவதன்றோ வென்கிறாள். (க) "𑌅𑌵𑌲𑍋𑌕𑌨𑌦𑌾𑌨𑍇𑌨 𑌭𑍂𑌯𑍋 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌲𑌯 - அவலோகநதாநே நபூயோமாம்பாலய" என்னக்கடவதிறே. "தாமரைக்கண்ணனென்றேதளரும்" என்றது; உணருகிறபோது கண்களை வாய்வெருவிக்

(க) வி-பு-க-உ௦-கஅ.

கொண்டாயிற்று உணர்ந்ததும். கிட்டினஸமயத்தில் "நானுமென்னுடைமையும் நீயிட்டவழக்கன்றே" என்றது கண்ணாலேயிறே; அதிலேயிறே இவளெழுதிக்கொடுத்தது; கண்ணாலேநோக்கி யணைக்கும்படியை நினைத்து, அந்த பாவநாப்ரகர்ஷத்தாலே கலந்துபிரிந்தாப்போலே கண்ணீர்மல்கவிருக்கும்.

(என்செய்கேனித்யாதி) என்தாபமாறும்படி யவ்வலையேற்றிலே கொண்டுபோய்ப் பொகடவல்லிகோளே யென்னும். திருப்பொருநலில் நீர், பிரிந்தார்க்கு நிலாப்போலே (க) * உபதப்தமாயிராநின்றதுபோலே. (என்செய்கேன்) உன்னைக்கிட்டுகைக்கு நான்செய்வதென். அப்போதே கிட்டப்பெறுமையாலே, "ஆசைப்பட்டநாமழகிதாகப்பெற்றோம்" என்று நெடுமூச்செறியாநிற்கும். (உ)[ஊஹந்தீவ நிஸ்வாஸைர்வ்ருக்ஷாந் ஸஹவயாஸிண: - தஹந்தீமிவ நிஸ்வாஸைர்வ்ருக்ஷாந்பல்லவதாரிண:] நெடுமூச்சாலே தன்பகையறுக்கப்பாராநின்றாள். பல்லவதாரிகளாயிருக்கை யிப்போதிவளுக்குப்பகையிறே; ஒருபடிப்பட நின்று நலிகிறபடியிறேயவை. ராக்ஷஸிகளுக்குறங்குப்போதுமுண்டிறே, உருவ விப்படியே நிற்கிற வித்தனை யவை. (உருகும்) உருகுகிறபடியே நிற்குமத்தனை. இனிநெடுமூச்செறிகைக்கு தர்மியுமில்லையோ வென்னும்படியுருகும். வெவ்விதாகப் பலகால் நெடுமூச்செறிந்து, அவ்வுஷ்ணத்தாலே யுருகாநிற்கும்.

(முன்செய்தவினையே) வலிக்கைக்கு விரகுபார்க்கிறபடி. நான் முன்புபண்ணின பாபமே, என்முன்னேவந்து நிற்கவல்லையே யென்னும். நீ முகங்காட்டுமையாகில், "தாமரைக்கண்ணா - என்செய்கின்றாய்" என்று அவனைக்கேளாதொழியலாயிற்றே; "நான்செய்தவினையின் பயனிதுவானபின்பு நாமாரைவெறுப்பது" என்றிருக்கலாயிற்றே. ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கும் இவர்க்குமுள்ள தொன்றாயிற்று; "நன்மை யவனாலே" என்றும், "தீமை தந்தாமாலே" என்று மாயிற்றிருப்பது.(ங) "ஜைவதுஷ்க்ருதம் கிஞ்சிந் மஹதஸ்தி நஸம்ஸய: - மமைவதுஷ்க்ருதங்கிஞ்சிந் மஹதஸ்தி நஸம்ஸய:" என்றாளிறே.

(முகில்வண்ணாதகுவதோ வென்னும்) நான்பண்ணின பாபம் கிடக்கிடும்; கர்மாநுகுணமாகவோ நீர் காரியஞ்செய்யுமது. (தருவ

(க) ரா-அ-ருக-ரு, (உ) ரா-ஸு-கரு உக,
(ங) ரா-ஸு-ங அ-ச அ.

தோ - சேருமோவென்றபடி.) ஜலஸ்த்தலவிபாகம்பாராதே நீர்வர்ஷிக்கு மும்முடைய வௌதார்யகுணத்துக்குப் போருமோவென்னும். "ஒருக்ரியாமாத்ரத்துக்கு இத்தனையுயிருண்டோ, நான்காணிது விளைத்தேன்" என்று அவ்வடிவைக்கொண்டுவந்து காட்டவல்லையேயென்னும். இது பக்திகார்யமேயாகிலும், பகவதநுபவவிரோதியாகையாலே - பாபமென்கிறது. அநிஷ்டாவஹம் - பாபமாமித்தனையிறே. "தகவிதோ" என்றபாடத்தில்-நான் பண்ணினபாபமெனக் கநுபவிக்கவேணுமாகில் உம்முடைய தகவுக்கு விஷயமின்னதென்னும். 'முன் செய்தவினையே முகப்படாய்' என்கிற விடம் - "க்ரியை அத்ருஷ்ட ரூபத்தாலே நின்று பலந்தரும்" என்பார் வார்த்தை; 'முகில்வண்ணா' என்கிறவிடம் - "ஒரு பரம சேதநனுடைய வநுக்ரஹமே பலப்ரதமாவது" என்றிருக்கும் வேதாந்திகள் வார்த்தை. "ஸதோஷராயிருப்பார் ராமகோஷ்டிக்காளல்லர்" என்கிற மஹாராஜர் தொடக்கமானார் வார்த்தைபோலே கீழ்ச்சொன்னது; (க) "தோஷோயத்யபி தஸ்யஸ்யாத்" என்ற ராமஸித்தாந்தம்போலே மேல். (உ) "... - மாம் நமஸ்குரு" என்றாப்போலே கீழ்ச்சொன்னது; (ந) "...-மா..." என்றாப்போலே "தகவிதோ" என்கிறது.

"முகில்வண்ணா" என்கைக்கு, நம்மௌதார்யமெங்கே பலிக்கக்கண்டு சொல்லுகிறதென்ன (முன்செய்தித்யாதி) நிர்ஹேதுகமாக முன்பு ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணி "தகவிதோ" என்கைக்கு உபகரணமில்லாதவன்று இத்தையுண்டாக்கினோக்கினாய் நீயன்றோ? கரணகளேபரவிதுரமான வித்தை வெறுமுன்க்ருபையாலே யுண்டாக்கினா யித்தனையன்றோ. உண்டாக்கிவிட்ட வளவேயோ; ப்ரளயாபத்திலே வயிற்றிலே வைத்து ரக்ஷித்து, உள்ளேகிடந்து நோவுபடாதபடி புறப்படவிட்டு, எல்லைநடந்து மீட்டுக்கொண்டு, ஸர்வவித ரக்ஷணமும் பண்ணிற்றிலையோ. (என்கோலோ முடிகின்றதிவட்கே) இவளளவில் தர்மலோபமேயோ பலிக்கப்புகுகிறது நீர்ரக்ஷிக்கிற பூமிக்கும் இவளுக்கு மொருவாசியுண்டாக நினைத்திருக்கிறீரோ.

(க) ரா-யு-க அ-ந.
(உ) கீதை-க-நச.
(ந) கீதை-க அ-கூ ஈ.

† (அநந்யபரையாய் அநந்யகதியா யபலையா யிருக்கிறவள்;) இவளு டைய கர்மமோ, உம்முடைய வநுக்ரஹமோ பலிக்கப் புகுகிறது. †(இவளிடையாட்டத்தில் நீர் செய்யப்பார்த்தபடி யெங்ஙனேயென் னுதல், இவளுடையதசை யென்னாய் விளையக்கடவதென்னுதல்.)

மூன்றாம்பாட்டு

வட்கிலள்இறையும்மணிவண்ணா! என்னும் வானமேநோக் கும்மையாக்கும் * உட்குடையசுரருயிரெல்லாமுண்ட ஒருவனே! என்னும் உள்ளுருகும் * கட்கிலீ! உன்னைக்காணுமாறு அருளாய் காகுத்தா! கண்ணனே! என்னும் * திட்கொடிமதிள்சூழ்திருவரங் கத்தாய்! இவள்திறத்து என்செய்திட்டாயே? (௩)

ப.—அநந்தரம், ஆஸ்ரிதவிரோதி நிவர்த்தகமான வவதாரங்களை யுடை யையாய் வைத்து, இவளிப்படி யார்த்தையாகைக் கென்செய்தாயென்கிறாள்.

(இ-ள்.) இறையும்-ஏகதேஸமும். வட்கு-தனக்கு நிரூபகமான லஜ் ஜையை, இலள்-உடையளாயிருக்கிறிலள். அத்தாலே யென் முன்பென்று பாராதே, மணிவண்ணா-முடிந்தாளலாம்படியான, நீலரத்ந ஸ்வபாவனாய்க் கொண்டு எனக்கு பவ்யனானவனே, என்னும்-என்னும்; இவ்வார்த்த த்வ நிக்கு வருவதியென்று, வானமே-ஆகாஸத்தை. நோக்கும்-பார்க்கும்; காணா மையாலே, மையாக்கும்-மயங்கும்; ப்ரதிபந்தகத்தாலே விளம்பித்ததென்னா மைக்கு, உட்கு-மிடுக்கை. உடை-உடையரான. அசுரர்-ஆஸுரப்ரக்ருதி களினுடைய, உயிர்-ப்ராணன்களை. எல்லாம்-எல்லாம்,நிரவஸேஷமாக, உண்ட-க்ரஸித்த; ஒருவனே-ஏகவீரனே. என்னும்-என்னும். அந்த விரோதி நிரஸந ஸாமர்த்யத்தை நினைத்து, உள்-உள், உருகும்-உடையாநிற்கும். (க)"நச க்ஷுஷா பஸ்யதி - நசக்ஷுஷாபஸ்யதி" என்கிறபடியே, கட்கு-கண் ணுக்கு இலீ-காணவரிய நீ. உன்னை-கண்டல்லது தரிக்கவொண்ணாத வுன் னை காணுமாறு-காணும்படி, அருளாய்-க்ருபைபண்ணி யருளவேணும்; நீ காட்ட நினைத்தபோது. காகுத்தா-(உ)"பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்-பும்ஸாம்த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்றும், (உ)"த்ருஸ்யஸ்வி ஸ்மிதாகாராஃ-த்ருஸ்யர்விஸ்மிதாகாராஃ" என்றும், நாட்டோடு காட்

---

† குண்டலிதத்வயம் க்வாசித்கம்.
(க) தை-நா-க.
(உ) ரா-அயோ ௩-உக.
(௩) ரா-ஆ-க௩௩.

டோடு வாசியற தர்மிப்பித்த சக்ரவர்த்தித் திருமகனும், கண்ணனே - (க) "தாஸாஶரிர் ஸஞ்ஜ-தாஸாமாவிரபூத்" என்று இடைச்சிகளுக்கும் வடிவைக்காட்டின க்ருஷ்ணனு மவதரித்தவனல்லேயோ, என்னும் - என்னும். அதுக்குப் பிற்பட்டாரு மிழவாதபடி, திண்-திண்ணியதாய், கொடி - கொடியையுடைத்தான. மதிள்-மதிள், சூழ்-சூழ்ந்த, திருவரங்கத்தாய்-கோயிலிலே ஸந்நிஹிதனானவனே, இவள்திறத்து-இவளிப்படி யார்த்தையாகைக்கு, என் செய்திட்டாய்-நீ செய்ததென்.

வடிவழகிப்படி மதிமயக்குமோவென்று கருத்து. வட்குதல் - வெட்குதலாய், லஜ்ஜை. உட்கு - மிடுக்கு. (ங)

ஆறு:— (வட்கிலளிறையும்) உன்னைக் காணப்பெறாத வ்யஸநத்தாலே, தன்னுடைய ஸ்வரூபநிரூபகமான ஸ்த்ரீத்வகுணங்களையு மிழந்தாள். பின்னை நெடும்போதுகூட லப்தஸம்ஜ்ஞையாய், நிரதிஶயௌஜ்ஜ்வல்யஸௌலப்யாதி கல்யாணகுணங்களை யுடையவனே யென்னும். "ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றினப்போலே பெரியதிருவடி திருத்தோளிலே யேறியருளி வந்து தோன்றுவதுகாண்" என்றுகாரத்தைப்பார்த்துக்கொண்டிருக்கும். அங்குங் காணாதொழிந்தவாறே மயங்கும். (உ)[விரோணஸஞ்ஜ்ஞாம் ப்ரதிலப்ய] - சிரேணஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்ய] ஆஶ்ரித ப்ரதிகூலராயதிபலபராக்ரமரான வஸுரரையெல்லாம் நிரஸித்து நிருபமமான ஸாமர்த்த்யத்தை யுடையவனே, உன்னைக் காண்கைக்கு என் பக்கலுள்ள ப்ரதிபந்தகத்தையெல்லாம் போக்கி யருளாயென்னும். பின்னையு மவன் வரக்காணாமையாலே நெஞ்சுருகும். "ப்ராக்ருதமான சக்ஷுஸ்ஸுக்களுக்கு நானொருநாளும் விஷயமாகேன்" என்று உனக்கொரு நிர்ப்பந்தமுண்டாகில், நானொருத்தியு முன்னைக்காணும்படி க்ருபைபண்ணாயென்னும். அங்ஙனே செய்யக்கடவதோ வென்னில்; "உன்னைக் காணவேணும்" என்றாசைப்பட்டார் காண்கைக்காகவன்றோ சக்ரவர்த்தித் திருமகனும் ஸ்ரீவஸுதேவர் திருமகனும் பிறந்தருளிற்றென்று சொல்லும். இவளோடே ஸம்ஶ்லேஷிக்கைக்காக த்வஜபதாகாலங்க்ருதமான ப்ராகாரங்களாலே பரிவ்ருதமான கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற நீ, இவள் திறத்தென்செய்ய நினைத்தருளினா யென்கிறாள். (ங)

(க) பாக 8ா ஙஉ உ. (உ) ரா-ஸு ஙஉ-அ.

ஈடு ; அவ ;—மூன்றாம்பாட்டு. இவளிவ்வவஸ்தையை ப்ராப்தையாகைக்கு இவளிடையாட்டத்தில் நீர்செய்ததென்னென்கிறாள்.

(வட்கிலளிறையும்) இதுக்கு-ஜீயரருளிச்செய்வது - “இவள் முடிந்தாள்” என்று. † (வட்கென்று - லஜ்ஜை) லஜ்ஜையையிட்டிறே ஸ்திரீத்வத்தையறிவது; ஸ்வரூபத்தைப் பற்றிவரும் குணம் போனால் ஸ்வரூபமும் போயிற்றாமத்தனையிறே; நிரூபகத்தையொழிய நிரூப்யஸித்தியில்லையே. இவள் லஜ்ஜை குடிபோனமைக்கு ஸூசகமென்னென்னில்(மணிவண்ணாவென்னும்) பர்த்ருநாமக்ரஹணம் பண்ணாநின்றாள். பெற்ற தாய் முன்னே வடிவழகைச் சொல்லாநின்றாள். நான் கேட்டாலும் மறைக்குமத்தைத் தான் வெளியிடாநின்றாள். காமிநி யாசைப்படுவது வடிவழகையிறே; தானகப்பட்ட துறையைச் சொல்லாநின்றாள். மெய்யேநினைத்து, மெய்யே சொல்லி, மெய்யே யநுபவிக்கை யிவர்க்கு ப்ரக்ருதியாய்விட்டதே! (க)“உன் சின்னமுந் திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக் கைதொழவே யருளெனக்கு” என்று அவன்பாடு இவள்வேண்டிக்கொள்வது மிதுவேயிறே. (மணிவண்ணாவென்னும்) வடிவழகைச் சொல்லுவது, ஸௌலப்யத்தைச் சொல்லுவதாகாநின்றாள்.(உ)“ [illegible] அத்ருஷ்டபூர்வவ்யஸநா ம்ருதுஸீலா மநஸ்விநீ । தேநதுஃகேந ருததீ நைவமாம்கிஞ்சிதப்ரவீத்” என்று, எல்லாத்தசையிலும் வாய்விடக் கடவதன்றிக்கே யிருப்பதொன்றிறே யிது.

(வானமேநோக்கும்) “மணிவண்ணா!” என்கிற வார்த்த த்வநி கேட்டிருக்க க்ஷமனல்லன், த்வநிவழியே ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோன்றினாப்போலே தோன்றி யருளுமென்று ஆகாஸத்தையே பாராநிற்கும். (ங)“[illegible]-பரமாபதமாபந்ந:” என்கிறவதுக்கு மவ்வருகேயிறே யிவளுடைய தசை. அங்கு வந்து தோற்றக் காணாமையாலே, (மையாக்கும்) மயங்காநின்றாள். அறிவு கெடாநின்றாள்.

மயங்கத்தீருமோ, விரோதி கனத்திருக்கிலென்ன (உட்குடையித்யாதி) நான் வரப்பார்த்தால் ப்ரதிபந்தக முண்டத்தனையல்லது,

---

† குண்டலிதம் க்வாசித்கம். (க) எ-க-அ.

(உ) ரா-அயோ ருஅ ஙரு. (ங) விஷ்ணுதர்ம-

நீயே வரப்பார்த்தால் நிவாரகருண்டோ. உட்கென்று - மிடுக்கு. எதிரிகள்மிடுக்கருமாய் பலருமாமத்தனையன்றோவேண்டுவது அழியச்செய்கைக்கு. (உண்ட)(க)"பௌரஜநார்த்தநஃ க்ருத்தஃ - பௌரஜநார்த்தநஃக்ருத்தஃ" என்கிறபடியே. (ஒருவனே யென்னும்) வடிவழகுக்குப் போலியுண்டாகிலும் வீரத்துக்குப் போலி சொல்லலாவதில்லை. (உட்குடை யித்யாதி) தான் வீரபத்நி யென்னுமிடந் தோற்றச் சொல்லாநின்றாள். (உ) "த்வம் நீசஶஶவத் ஸ்ம்ருதஃ - த்வம் நீசஶஶவத்ஸ்ம்ருதஃ" என்னுமவளிறே. (உள்ளுருகும்) "என்ன குறை யுண்டாயிழுக்கிறேன்" என்று ஶிதிலையாம். விளம்பஹேதுவின்றிக்கே யிருக்க, பவியாதொழிந்தவாறே நீர்ப்பண்டம்போலே யுருகும்.

உருகுங்காட்டில் அதீந்த்ரியவஸ்து கண்ணுக்கிலக்காமோ வென்பர்களே ; அருளாலே பெறுவார்க் கநந்நொரு நியதி யுண்டோவென்னுமாயிற்றிவள். (ங) "ந சக்ஷுஷா பஶ்யதி - நசக்ஷுஷாபஶ்யதி" என்கிறது-தாந்தாமேகாண விழிவார்க்கு; (ச) "தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் - தஸ்யைஷ ஆத்மாவிவ்ருணுதேதநூம்ஸ்வாம்" என்று - அவன்தானே காட்டுமன்று அருமையில்லை. அர்ஜுநாதிகளுக்கு திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்துக் காட்டிற்றில்லையோ. (கட்கிலீ) கண்ணுக்கிலீ யென்றபடி. (உன்னைக் காணுமாறருளாய்) உன்னைக் காணவரிது ஸ்வயத்நத்தாலே பெறவிருப்பார்க்கன்றோ ; உன்னருளடியாகக் காண்பார்க்குமரிதோ?

அருளாலே நாமார்க்குக்காட்டினோமென்ன (காகுத்தா) (ரு) "ரூபௌதார்யகுணைஃ - ரூபௌதார்யகுணைஃ" என்றும் (சா) "ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் - ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம்" என்றும், நாகரிகர்க்கும் வநவாஸிகளுக்கும் காட்டிக்கொடு திரிந்திலையோ. ஒருகால் செய்தது கொண்டோவென்ன; (கண்ணனே) ஸஜாதீயைகளான பெண்களுக்கு உன்னைக் காட்டிற்றிலையோ; (எ)[தாஸாமாவிரபூத் - தாஸாமாவிரபூத்] ஒரு நீர்ச்சாவியிலே யொருபாட்டம்

(க) வி-பு-க-கக-உச.
(உ) ரா-ஸு-உஉ-கசா
(ங) தை-நா-க
(ச) கட-க-உ
(ரு) ரா-அயோ-ங-உக
(சா) ரா-ஆர-க-கங
(எ) பாக-கம-ஙஉ-உ.

மழைவிழுந்தாப்போலே யிருக்கை. [ஸ்மயமாநமுகாம்புஜ: - ஸ்மயமாநமுகாம்புஜ:] அவர்கள் முன்னே தோற்றினபின்பு வடிவில்பிறந்தசெவ்வி. [பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ - பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ] பெண்கள் நெஞ்சில் மறத்தைமாற்றுவது, பரிவட்ட வாய்ப்பையும் தோளில் மாலையையுங் காட்டியாயிற்று. [ஸாக்ஷாந்மந்மதமந்மத: - ஸாக்ஷாந்மந்மதமந்மத:] காமன்கையிலே நாடுபடுமத்தைக் காமன்றான் படும்படியிருக்கை.

(திட்கோடியித்யாதி) அவதாரகாலத்தில் உதவிற்றிலீரேயென்ன; அவதாரகாலத்தில் உதவப்பெறாதார் இழவுதீர்க்கவன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று. உகந்தார்க்குக் காட்சிகொடுக்கக் கொடிகட்டிக்கொண்டன்றோ கிடக்கிறது திண்ணிய மதிளென்னுதல், திண்ணியகொடி யென்னுதல். அவிழ்த்துக்கட்டாத கொடி யென்கை. "வருவாரெல்லாரும் வாருங்கோள்" என்று கட்டின கொடி. (இவள்திறத்தென்செய்திட்டாயே) இவளிப்படி பிச்சேற வென்னமருந்திட்டாய். அவனிவளறியாதபடி யொருமுகத்தாலே மருந்திடுமே. (௧)"மையலேற்றிமயக்க வுன்முகம் மாயமந்திரந்தான் கொலோ" என்று, தன்முகத்தைக் காட்டுகையிறே அவன் மருந்திடுகையாவது. இவள்கேட்கிற தென்னென்னில்? அதுவாகில் அதுக்குப்ரதிக்ரியையாக,(௨) "த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத்கலாம் - த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத்கலாம்" என்கிற விவளை அவன் முன்னேநிறுத்தி, இவள் பட்டதெல்லாம் அவனைப்படுத்துவாளாக நினைக்கிறாள். (௩.)

இட்டகாலிட்ட † கைகளாயிருக்கும் எழுந்துலாய்மயங்கும் கைகூப்பும் * கட்டமேகாதலென்று மூர்ச்சிக்கும் கடல்வண்ணா! கடியைகாணென்னும் * வட்டவாய்நேமி வலங்கையா! என்னும் வந்திடாயென்றென்றேமயங்கும் * சிட்டனே! செழுநீர்த்திருவரங்கத்தாய்! இவள்திறத்து என்சிந்தித்தாயே?

ப;—அநந்தரம், அபரிச்சிந்நமஹிமனாய்வைத்து இவளை யார்த்தையாக்கினநீ, இவளளவி லென்னினைத்திருக்கிறா யென்கிறாள்.

---

(௧) நாய்ச்சி தி-மொ-௨-௪. (௨) ரா-ஸு ௩௬-௧௪.

† 'கையளாய்' என்று பாடாந்தரம்.

(இ-ள்.) ஆர்த்தியினதிஶயத்தாலே பரவஶையாய், இட்டவிட்ட - இட்டு வைத்தவிடத்தே கிடக்கும்படியான, கால் - காலையும், கைகள் - கைகளையும், ஆய் - உடையளாய், இருக்கும் - இருக்கும்; ஆர்த்தி முதிர்ந்தபடியாலே, ஸந்நிபதிதரைப்போலே, எழுந்து - பாரவஶ்யங்குலைந் தெழுந்திருந்து, உலாய் - உலாவாநிற்கும்; மயங்கும் - அநந்தரத்திலே மோஹிக்கும்; காலமுணர்த்த மோஹந் தெளிந்தவளவிலே, "வரக்கூடும்" என்று, கைகூப்பும் - அஞ்ஜலிபண்ணும்; வாக்காணுமையாலே, காதல் - காதல், கட்டமே - கட்டமாயிருந்ததீ, என்று - என்று வெறுத்து, மூர்ச்சிக்கும் - மூர்ச்சிக்கும். கடல்வண்ணா - தனக்குள்ளே யெல்லாவற்றையு மொதுக்கி ரக்ஷிக்கு மபரிச்சிந்நாகாரமான கடலின் படியையுடையவனே, கடியைகாண் - எனக்குக் கடியையா யிராநின்றாய் காண், என்னும் - என்னும். ஆஶ்ரிதரக்ஷணத்தில், வட்டவாய் - ஸர்வதோமுகமான, நேமி - திருவாழியை, வலங்கையா - வலக்கையிலே யுடையவனே, என்னும் - என்னும்; நடுவே யிளைப்பாறி, வந்திடாய் - கையுந் திருவாழியுமாய்க்கொண்டு வந்திடாய், என்றென்றே - என்று பலகாலு மாவர்த்தித் தபேக்ஷித்து, மயங்கும் - "அபேக்ஷையிலாவ்ருத்தியாலே ஸ்வரூபமிழந்தோம், அவன் வாராமையாலே யபிமதமு மிழந்தோம்" என்றறிவழியாநிற்கும்; இப்படி யிவளைக் கலேஶிப்பித்து, சிட்டனே - சிஷ்டபாவனைபண்ணி, செழுநீர்த் திருவரங்கத்தாய் - அழகிய நீர்க்கரையிலே கிடக்கிறவனே, இவள் திறத்து - வ்யதிரேகத்தில் மோஹிக்கும்படியான விவள் திறத்து. என் - என், சிந்தித்தாய் - நினைத்திருக்கிறாய்.

மோஹிப்பிக்கவே நினைத்திருக்கிறாயோ. தேற்றங் கொடுக்க நினைத்திருக்கிறாயோ வென்று கருத்து. (ச)

ஆறு ;—(இட்டகால்) இவள் பராதீநசேஷ்டிதமான கரசரணாத்யவயவங்களை யுடையளாயிருக்கும். இப்படி சேஷ்டிதக்ஷமையன்றியே யிருக்கச்செய்தே, அவஸாந ஸமயத்திலே ப்ரதீபம்போலே ஸஹஸா வெழுந்து உலாவி மயங்கிக் கிடக்கும்; பின்னையும் ப்ரபுத்தையாய்த் தன்னுடைய வ்யஸநாதிஶயத்தாலே யுன்னைத் தொழாநிற்கும். ஸ்நேஹமானதித்தனை பொல்லாதாகாதே, ஸ்நேஹப்ரக்ருதிகளல்லாதார் என்னபாக்யம் பண்ணினாரோவென்று சொல்லி மோஹிக்கும். அநவதிகாதிஶயாஸங்க்யேயகல்யாணகுணகணனென்று உன்னைச் சொல்லுகிற விதெல்லாம்போய், நீ சாலநிர்க்ருணன்காணென்று சொல்லும். வலத்திருக்கையிலே திருவாழியை யேந்திக்கொண்டிருக்கிற வவ்வழகை நான் காணும்படி

வந்திடா யென்று சொல்ல வுபக்ரமிக்கும்; முடியச்சொல்ல க்ஷமை யல்லாமை வட்டவாய்நேமிவலங்கையா வென்னும், பின்னையும் நெடும்போதுகூட வந்திடா யென்னும்; வரக்காணாமையாலே பின்னையும் வந்திடா யென்னும். வரக்காணாமையாலே மயங்கும். இங்ஙனே செல்லாநிற்கும். செழுநீர்த் திருவரங்கத்தாய், இதுவோ வுன்னுடைய சீலவத்த்வம்; இவள்திறத் தென்செய்ய நினைத்தருளினா யென்கிறாள். (௪)

ஈடு; அவ;—நாலாம்பாட்டு. உம்மையொழிய ஜீவிக்கமாட்டாத இவள் திறத்துச் செய்தருள நினைத்திருக்கிறதென்னென்கிறாள்.

(இட்டகாலிட்டகைகளாயிருக்கும்) இவளுக்கு நீருடம்புகொடுக்கவேண்டா, இவள் அவயவங்களிவளதீநமாகப் பண்ணவமையும். (க) "ஸவேஹிரூஷ்வைலூஷ்க்ஷிரா வாலாஷ்ஷு விவாஷாலாஷீ-ஸகிபிர்ந்ய ஸ்தப்ரகீர்ண பரதந்த்ரவிபாண்டுராங்கீ" என்று, தோழிமார் போகட்டவிடத்தே கிடக்குமித்தனை. ஸ்வாதீநமல்லாமையாலே தோழிமார் இட்டுவைத்த காலும் கையுமாயிருக்கும். (எழுந்துலாய்மயங்கும்) அவியும் விளக்குக் கிளர்ந்தெரியுமாப்போலே, அடியற்ற வெழுச்சியுமடியற்ற வுலாவுகையுமா யிராநின்றது. அதுகிளம்பின ஸமநந்தரத்திலே அவியுமாப்போலே மயங்காநின்றாள். (கைகூப்பும்) உணர்த்தியில் தொழுமவளல்லள், மயங்கினால் தொழாதிருக்க வல்லளல்லள். ஸாதநபுத்த்யா தொழுமதில்லை, ஆற்றாமையாலே வருமது தவிரமாட்டாள்.

(கட்டமேகாதலென்று) ஸாதநபுத்த்யாதொழுதாளாகில் "கட்டமே காதல்" என்னக்கூடாதிறே. விஸ்லேஷத்தில் நலிவுக்குடலாகையாலே ப்ரேமம் தண்ணிதென்கிறாள். (கடல்வண்ணாகடியைகாணென்னும்) கடல் ஸகல பதார்த்தங்களையும் தன்னுள்ளே யடக்கி, ஒன்றையொன்று நலியாதபடி நோக்குமாயிற்று; அப்படியே ஸர்வரக்ஷகனான நீ நிர்க்ருணனாயென்னும். அன்றிக்கே, பிரிந்தார்க்குத் தரிக்கவொண்ணாத வடிவுபடைத்த நீ காதுகனாநின்றாயென்னும்.

(வட்டவாய்நேமி) "சங்குசக்கரங்கள்" என்று சொல்லும் நிலையும் போச்சு. இப்போது கண்ணுக்கு விஷயமன்றிக்கே யிருக்கச்

(க)

செய்தேயும், அதினுடைய ஸந்நிவேசம் தீஸ்த்தமாயிருக்கிறபடி. பிடித்தவிடமெங்கும் வாயாய்க்கிடைரிருப்பது. விரோதிபோக்கப் பரிகரமின்றிக்கே யிருக்கிறாயன்றே. (வந்திடாயென்றென்றேமயங்கும்) ஒருகால் "வந்திடாய்" என்றாலாறியிருக்க வல்லளல்லளே. விடாய்த்தவன் தாஹம் சமிக்குந்தனையும் "தண்ணீர், தண்ணீர்" என்னுமித்தனையிறே; அப்படியே, "வந்திடாய், வந்திடாய்" என்று உருவ அத்தனையே சொல்லும்; மற்றொன்றறியாள். (மயங்கும்) வாஸனையே உபாத்யாயராகச் சொல்லுமத்தனை. (என்றென்றே) வெங்கலத்வநிபோலே சொல்லுக்குச்சொல் ஒய்கிறபடி.

(சிட்டனே) சிட்டன் - திருமாலென்றபடி. பிராட்டிவிஷயத்திலே வ்யாமோஹத்தை யுடையவனென்னுதல்; பிராட்டியைத் தன் பக்கலிலே பித்தாக்கித் துடிக்கப்பண்ணுமவனென்னுதல். உம்முடைய படி சால அழகிதாயிருந்தது. உம்மைப்போலே சில சிஷ்டர்களைந்திருந்ததிறே அபலைகள் குடிகெடுக்கைக்கு. அழகிதாக வாந்ருசம்ஸ்ய ப்ரதாநராயிருந்தீர்; ப்ரஹ்மஹத்யைகளைப் பண்ணிப் பூணூலை வெளுக்கவிட்டுக் கையிலே பவித்ரத்தையுமிட்டு ஓத்துச் சொல்லித் திரிவாரைப்போலே யிருந்தது உம்முடையபடி. (செழுநீர்த் திருவரங்கத்தாய்) ச்ரமஹரமான நீரையுடைய கோயில். தண்ணீர்ப்பந்தலிலே காதுகர் ஒதுங்கினவோபாதியாகாதே நீரிவ்வூரில் சாய்ந்ததும். (இவள்திறத்தென்சிந்தித்தாயே) ஸர்வஜ்ஞனுக்கும், இவளுக்கோடுகிற தசைக்குப் பரிஹாரம் சிந்திக்கவேணுமென்றிருக்கிறாள்; திருத்தாயார் தெளிவிருக்கிறபடி; "அவன் நினைவே கார்யமாய்த் தலைக்கட்டுவது" என்று அவனைக் காலைக்கட்டிக் கேட்கிறாள். (க) "ச்ரேயோ த்யாயதி கேசவ: - ச்ரேயோத்யாயதி கேசவ:" என்று, அநுகூலவிஷயத்தில் சிந்திப்பானுமவனிறே. இங்ஙனே மநோரதமாயே போமித்தனையோ; நிர்ணயாந்தமாகக் கடவதன்றோ? (௪)

ஐந்தாம்பாட்டு.

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கைகூப்பும் திருவரங்கத்துள்ளாய்! என்னும் வந்திக்கும் * ஆங்கே மழைக்கண் நீர்மல்க வந்திடாயென்றென்றே மயங்கும் * அந்திப்போது அவுணனுடலிடந்தானே! அலைகடல்கடைந்த ஆரமுதே! * சந்தித்து உன்சரணம் சார்வதே வலித்த தையலை மையல் செய்தானே! (௫)

(க)

ப:—அநந்தரம், ஆஶ்ரித ஸாபேக்ஷிதஞ் செய்யும்படியான பவ்யதையை யுடையையாயிருக்க. இவள் ப்ரதிக்ஷண மவஸ்தாபேதம் பிறக்கும்படியான வார்த்தியையுடையளாகா நின்றாளென்கிறாள்.

(இ-ள்.) அந்தி - ஸந்த்யையென்று, போது - ஒருகாலவிஶேஷத்திலே, அவுணன் - அஸுரனான ஹிரண்யனுடைய, உடல் - ஶரீரத்தை, இடந்தானே- பிளந்தவனாய், அலை - அலையையுடைத்தான, கடல் - கடலை, கடைந்த - கடைந்து, ஆரமுதே - நிரதிஶய போக்யனாய் வைத்து, அப்படி காலநியதியுமின்றியே ப்ரபலவிரோதியு மின்றியே, அருந்தொழில் செய்வித்துக்கொள்ளவும் வேண்டாதபடி. ஆந்தராநுபவமாத்ரமன்றியே, சந்தித்து - பாஹ்யமான ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி, உன் - உன், சரணமே - திருவடிகளையே. சார்வது - சேர்ந்தநுபவிக்கவேணுமென்கிற, வலித்த - சிக்கெனவையுடையளாயிருக்கிற, தையலை - இப்பெண்பிள்ளையை, மையல்செய்தானே - மதிகெடுத்தவனே, இவள், சிந்திக்கும் பூர்வஸம்ஶ்லேஷ ப்ரகாரத்தைச் சிந்தியாநிற்கும், திசைக்கும் - அதப்போதே ஸித்தியாமையாலே அறிவழியா நிற்கும்; தேறும் - அஸங்கிதமாகத் தேறாநிற்கும்; அவ்வளவிலே வந்தாயாகக் கருதி, கை - கை, கூப்பும்-கூப்பாநிற்கும், ஆஸந்நமாக, திருவரங்கத்து - கோயிலிலே, உள்ளாய் - கண்வளர்ந்தருளுகிறவனே! என்னும் - என்று கூப்பிடாநிற்கும், வந்திக்கும் - அவ்வடிவழகை நினைத்துத் தலையாலே வணங்கும்; அவ்வளவிலும் வரக்காணாமையாலே, ஆங்கே - அவ்விடந்தன்னிலே யிருந்து, மழை - குளிர்ந்த, கண்ணீர்-கண்ணீர், மல்க-மல்கும்படி, வந்திடாய் - வந்துகொள்ளாய்; என்றென்றே - என்று பலகாலுஞ்சொல்லி, மயங்கும் - உக்தி பலவ்யாப்தையாகக் காணாமையாலே மோஹிக்கும்

காமாதுரைகள் விகாரத்தி லிவளுக்கில்லாததனவில்லை யென்று கருத்து.

ஆறு,—(சிந்திக்கும்) உன்னழகையு முன்னழகோடு பண்டு ஸம்ஶ்லேஷித்தபடியையும் நினைக்கும். நினையாமோஹிக்கும். நெடும்போதுகூட லப்த ஸம்ஜ்ஞையாம். தன்னுடைய வபேக்ஷிதம் பெறுகைக்காக உன்னைத் தொழாநிற்கும். தன்னுடைய வ்யஸநம் பொறுக்கமாட்டாமையாலே, திருவரங்கத்துள்ளா யென்னும். த்வந்நாதையாயிருந்துவைத்தே நாதஹீநையைப்போலே திருவடிகளிலே விழுந்துகிடக்கும் ; அங்ஙனே விழுந்துகிடந்து, தன்னுடைய வழகிய கண்கள் நீர்மல்க, வந்திடாயென்றென்றே மயங்காநிற்கும். உன் திருவடிகளை யொருகால் கண்டு ஸம்ஶ்லேஷிக்க வேணுமென்னு

மாசையாலே தன்னை தரித்துக்கொண்டிருக்கிற இப்பெண்பிள்ளையை யிப்பாடுபடுத்தவேணுமோ. உன்னுடைய நிரவதிகமான வாஸ்ரித வாத்ஸல்யமெல்லா மெங்கே போயிற்றென்கிறாள். (௫)

ஈடு ; அவ.—அஞ்சாம்பாட்டு. இவளுக்கு ப்ரதிக்ஷணம் பேதித்து ஒன்றோடொன்று சேராதே வருகிற வவஸ்தாபேதங்களை யறிவித்து, இவளை யிப்படி படுத்துகை உம்முடைய நீர்மைக்குப் போருமோவென்கிறாள்.

(சிந்திக்கும்) உம்முடைய ஸௌந்தர்யாதிகளையு மும்மோட்டைக் கலவியையும் நினைக்கும். முன்பிவ்வநுஸந்தாநமு மின்றிக்கே யாயிற்றிருந்தது, மோஹத்தோபாதி யிதுவு மொரு விக்ருதியாயிருக்கிறபடி. (திசைக்கும்) அப்போதே சாணப்பெருமையாலே மோஹிக்கும். (தேறும்) ஒரு ஹேதுவின்றிக்கே யிருக்கத் தேறாநின்றாள். இதுதானும் பயாவஹமாயிருக்கிறதாயிற்று ; மோஹமசெல்லாநிற்க, அபேக்ஷிதம் பெற்றாரைப்போலே தேறுகை பயாவஹமிறே. சரமதசையில் பிறக்கும் தெளிவுக்கும் அஞ்சவேணுமே. உய்ந்தபிள்ளை பாடும்போது, "கெட்டேன், இவள் 'தேறும்' என்பதே" என்று ஜீயரருளிச்செய்வராம். (கைகூப்பும்) இதிவளுக்கு ப்ரக்ருதி. கீழே "மயங்கும் கைகூப்பும்" என்றது, இங்கே "தேறும் கைகூப்பும்" என்றது ; அல்லாதன ஸஞ்சாரியாய்ச் செல்லாநிற்க, இதொன்றும் ஸ்திரமாய்ச் செல்லாநிற்கும் ; ஸ்வரூபாநுபந்தியாகையாலே. (௧) "𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌪𑍁𑌟𑌾𑌃 - நித்யாஞ்ஜலிபுடா:" என்னக்கடவதிறே. மோஹத்திலும் உணர்த்தியிலும் ஸத்தையுண்டே. (௨) "வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்றதிறே நிலைநின்ற ஸ்வரூபம். அநுவர்த்தமாநமானதிறே பரமார்த்தமாவது.

(திருவரங்கத்துள்ளாயென்னும்) "பெருமாளேயென்னும்" என்று ஜீயர். அவ்வூரில் ஸம்பந்தங்கொண்டுபோலேகாணும் அவரையும் விரும்பிற்று. (வந்திக்கும்) "திருவரங்கத்துள்ளாய்" என்றது நெஞ்சிலே வடிம்பிட்டு, "ஒருமுகமே, முறுவலே, ஒருவளையமே" என்று ஸ்தோத்ரம்பண்ணா நின்றாளென்னுதல் ; பக்நாபிமானையாய்த் திருவடிகளிலே விழுந்துகிடக்குமென்னுதல். (ஆங்கே) அவ்வவஸ்தையிலே (மழைக்கண்ணீரித்யாதி) குளிர்ந்த கண்ணீர்மல்க, வந்திடாயென்றென்று சொல்லி, அச்சொலவோடே யறிவுகெடும்.

---

(௧) பார-மோக்ஷ. (௨) ௩-௩-௧.

நினைத்தபோதாக வரப்போமோவென்ன (அந்திப்போது) (க) “ த்வத்த: ஸர்வம் அஹம் ஸர்வம் - மத்தஸ்ஸர்வ மஹம்ஸர்வம்” என்று தெளிந்திருப்பார்க்கோ உதவலாவது, அறிவுகெடுவார்க்கு உதவலாகாதோ. அவன் வரத்துக்கு அவிருத்தமாயிருப்பதொருகாலத்திலே, ஆஸுரப்ரக்ருதியாயிருக்கிற அவுணனுடைய ஶரீரத்தைப் பிளந்து பொகட்டிலையோ. தமப்பன் பகையானாலோ உதவலாவது, நீர் பகையானால் உதவலாகாதோ. இவ்வளவில் உதவாமைக்கு மேற்படப் பகையில்லையிறே; அதொருகால் சிறுக்கனுக்கு உதவினமையுண்டு, அது தப்பிற்றிறேயென்ன; பின்போ நீயுதவாதது (அலைகடல்கடைந்த) ப்ரயோஜநாந்தரபரர்க்கும் அகப்படக் கடலைக்கடைந்து கொடுத்திலையோ. உன்னைக்கொண்டொருப்ரயோஜநங் கொள்வார்க்கோ உதவலாவது, உன்னையே “ப்ரயோஜநம்” என்றிருப்பார்க்கு உதவலாகாதோ. (ஆரமுதே) இவருடைய வம்ருதத்தைக் கொண்டாயிற்று அவர்கள் கடல் கடைந்தது.

(சந்தித்தித்யாதி) உன்னைக் கிட்டித் திருவடிகளைச் சாரவேணுமென்று வ்யவஸிதையாயிருக்கிற இவளை யிப்படி யறிவுகெடுப்பதே. (வலித்த) ப்ராணனை பலாத்காரத்தாலே தரித்த. அன்றிக்கே, உன்னைக்கிட்டி ஸந்நிதியிலே முடியுமித்தனையென்று ப்ராணனை தரித்திருக்கிறவளை யென்னுதல். (வலித்த) அத்யவஸித்த. (உ) “ த்ராவஹ்ரம் ஹ்ரதே ஜிஜீவிஷேயம்-தாவத்த்யஹம் த்ராத ஜிஜீவிஷேயம்” என்றுகாணுமிருக்கிறது. (மையல்செய்தானே) உம்மை யாசைப்பட்டவளுக்கும் மயக்கமேயோ பலித்துவிட்டது. (ரு)

ஆறும்பாட்டு.

மையல்செய்து என்னைமனங்கவர்ந்தானே! என்னும் மாமாயனே! என்னும் * செய்யவாய்மணியே! என்னும் தண்புனல்சூழ் திருவரங்கத்துள்ளாய்! என்னும்* வெய்யவாள்தண்டுசங்குசக்கரம் வில்லேந்தும் விண்ணோர்முதல்! என்னும் * பைகொள்பாம்பணையாய்! இவள்திறத்தருளாய் பாவியேன் செயற்பாலதுவே. (௬)

(க) வி-பு-க-ககூ-அரு. (உ) ரா-ஸு-ரு-கரு ருO.

ப:—அநந்தரம், ஆஸ்ரித ஸம்ரக்ஷணார்த்தமான வாயுத பூர்த்தியை யுடையையா யிருக்கச்செய்தே இவளை யிப்படி யலற்றும்படி பண்ணின நீ, இவளளவில் நான்செய்யக் கடவபடி யருளிச்செய்ய வேணுமென்கிறாள்.

(இ-ள்.) உன்னுடைய பவ்யதையாலே, என்னை - என்னை, மையல்செய்து - மயல்கொள்ளப்பண்ணி, மனம் - நெஞ்சை, கவர்ந்தானே - அபஹரித்தவனே, என்னும் - என்னும், மாமாயனே - மையல்கொள்ளுகைக்குப் பண்ணின நிரவதிகாஸ்சர்ய சேஷ்டிதங்களை யுடையவனே, என்னும் - என்னும், பவ்யதா ப்ரகாஸகமான வுக்தியாலே ஸ்ப்புரிக்கிற, செய்ய - சிவந்த, வாய் - அதரஸோபையை யுடையையாய்க் கொண்டு, மணியே - மணிபோலே முடிந்தாளலாம்படி ஸுலபனானவனே, என்னும் - என்னும், தண் - உன்னைக்கிட்டியென்பரிதாபந் தீருகைக்கீடாகக்குளிர்ந்த, புனல் - நீர், சூழ் - சூழ்ந்த, திருவரங்கத்து - கோயிலிலே, உள்ளாய் - ஸந்நிஹிதனானவனே, என்னும்-என்னும், வெய்ய - விரோதிவிஷயத்தில் வெம்மையேவடிவான, வாள் தண்டு சங்கு சக்கரம் வில் - ஸ்ரீ பஞ்சாயுதங்களையும், ஏந்தும் - ப்ராணரக்ஷாவிளம்பம் பொறுதாரைப்போலே யெப்போது மேந்தியிருந்து, அவ்வழகை, விண்ணோர்-ஸூரிகளுக்கநுபவிப்பித்து, முதல் - அவர்கள் ஸத்தாதி ஹேதுபூதனானவனே. என்னும்-என்னும், பை-உன்னுடைய ஸ்பர்ஸத்தாலே விரிகிறபணத்தை, கொள்-உடையனாய், பாம்பு-ஜாதிப்ரயுக்தமான மென்மை குளிர்த்தி நாற்றத்தாலே நிரதிஸய போக்யமான திருவனந்தாழ்வானை, அணையாய் - படுக்கையாகவுடையவனே, இவள்திறத்து - நீ படுக்கைபொருந்திக்கிடக்கத் தறைப்பட்டுக் கிடந்தலற்றுகிற விவள்திறத்து, பாவியேன்-இவளை யிப்படி காணவைத்த பாபத்தையுடைய நான், செயற்பாலது - செய்யும்ப்ரகாரம், அருளாய் - அருளிச்செய்ய வேணும்

நீ யநாதரித்தவளவி லென்னாற் செய்யலாவதொரு பரிஹாரமுண்டாக வுன்னாலும் சொல்லமுடியாதென்று கருத்து. மையல்செய்தென்று-பிச்சரைப்போலே பாவித்துக் காட்டியென்றுமாம். (சு)

ஆறு ;—(மையல்செய்து) அதிக்ஷூத்ரமான காகத்தின் பக்கலிலே ப்ரஹ்மாஸ்த்ரத்தை விட்டருளின வுன்னுடைய ஸர்வ வஸீகரணமான ப்ரணயித்வ குணத்தாலே யென்னுடைய மநஸ்ஸை யபஹரித்தவனேயென்னும். வக்ஷ்யமாணமான அவனுடைய மஹாஸ்சர்யபூதமான ஸௌந்தர்யத்தை யநுஸந்தித்து, மஹாஸ்சர்ய பூதனேயென்று சொல்லும். நிரதிஸயதீப்தி யுக்தமாயிருப்பதொரு நீல

ரத்நம், செந்தாமரை பூத்தாப்போலே யிருந்த திருவுடம்பையும் திருப்பவளத்தையு முடையவனே யென்று அவ்வழகைச் சொல்லும். அடியேனுக் காத்மதாநம் பண்ணுகைக்காகவன்றோ கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளுகிற தென்னும்; ஸர்வஜ்ஞருமாய் ஸர்வஶக்தியுமா யத்யுக்ரமாயிருந்த ரதாங்க சங்க சார்ங்காதி திவ்யாயுதங்களை யேந்தி யருளுகிறது எனக்காகவன்றோ வென்னும். இவளுக்காக நீ கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளாநிற்கச்செய்தே, இவள்பக்கல் க்ருபைபண்ணி யருளுகிறதில்லை; இதுக்கு ஹேது என்னுடைய பாபமேயிறே யென்கிறாள். (சு)

ஈடு; அவ;—ஆறும்பாட்டு. இவள் இவ்வளவு ஆபந்நையாயிருக்க, இவள் ஆளார்த்தி தீர்த்தருளாதொழிகைக்குக் காரணம் என்னுடையகர்மவிபாகமென்கிறாள்.

(மையல்செய்து) உணர்த்தியுண்டாகில் நெஞ்சிழவாள்காணும். எதிரிகளுடைய அநவதாநம் பார்த்திருந்து அவர்கள் கோட்டை கொள்ளுவாரைப்போலே. (என்னை) கடலைத்தறைகண்டா னென்னுமாப்போலே. (மனங்கவர்ந்தானே) புழுகூற்றிச்சட்டம் பொகடுவாரைப்போலே. (மையலித்யாதி) கொன்று கிழிச்சீரை யறுப்பாரைப்போலே. (மாமாயனேயென்னும்) மையல்செய்த ப்ரகாரங்கள். கலக்கிற ஸமயத்தில் தாழநின்று கையைக் காலைப்பிடித்துப் பரிமாறின பரிமாற்றங்காணும் இவள் நெஞ்சில் பட்டுக்கிடக்கிறது. ஸ்வதஸ்ஸித்தமான மேன்மைபோலல்லவாயிற்று ப்ரணயித்வத்தாலே தாழநின்றநிலை. ஸம்ஶ்லேஷதசையிலாஶ்சர்யமான சேஷ்டிதங்களை யுடையவனே யென்னும்.

(செய்யவாய் மணியேயென்னும்) இதுவும் அந்தமாயங்களிலே யொன்று. தைர்யபங்கம்பிறந்து "நானுன்சரக்கன்றோ" என்று சொல்லுகிறபோதை அதரத்தில் பழுப்பு. (க) "ஹஸிதாஹஸிதாயாஙா - ஸவிலாஸஸ்மிதாதரம்" என்னக்கடவதிறே. (மணியே) புஷ்பம் விகஸிதமாம்போது எங்குமொக்க வொருசெவ்வி பிறக்குமாப்போலே, ஸ்மிதம்பண்ணுகிறபோது வடிவிலே யெங்கு

(க) வி பு·ரு கஎ·உக.

மொக்க வொருசெவ்வி பிறந்தபடி. (தண்புனல்) ஸ்மிதத்தில் குளிர்த்திபோலேயாயிற்றாரில்குளிர்த்தியும். அவ்வாயில் குளிர்த்திபோலேகாணு மிவ்வாயில் குளிர்த்தியும். † (வாய்-இடம்.)

(வெய்யவாளித்யாதி) திவ்யாயுதங்கள், எதிரிகளையழிக்கைக்குடலாயிருக்குமாப்போலே காமிநிகளை யழிக்கைக்கு முடலாயிருக்குமிறே. உகப்பாரையு முகவாதாரையு மொக்கத்தோற்பிக்குமவை. முன்னே கைகண்டு வைக்கிறவையிறே. காணவே யெதிரிகள் மண்ணுண்ணும்படியான திவ்யாயுதங்களை தரித்திருக்கிற நீ என் விரோதிகளைப்போக்கி முகங்காட்டாதொழிவதே. (விண்ணோர்முதலென்னும்) திவ்யாயுதங்களோட்டைச் சேர்த்தியால் வந்தவழகைக்காட்டி நடத்த, அதுவே ஜீவநமாகவாயிற்று அந்நாடு கிடப்பது. இல்லையாகில், அங்கே விணையுண்டாய் தரித்துக்கொண்டிருக்கிறானன்றே.

(பைகோளித்யாதி) ஸ்மிதத்தோடு, திவ்யாயுதங்களோடு, நித்யவிபூதியுக்தனாயிருக்கிற விருப்போடு, திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளினத்தோடு வாசியற வெல்லா முத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்று. பகவத்விக்ரஹ ஸ்பர்ஶத்தாலுண்டான ஹர்ஷத்தாலே விகஸிதமான பணங்களையுடையனான திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனே. தனிப்படுக்கையிலே சாய்வதே நீர் இவள் தறைக்கிடைகிடக்க. (இவள்திறத்தருளாய்) படுக்கையில் சேர்த்தி பெறாவிட்டால், நாட்டுக்குப் பண்ணுமருளுமின்றிக்கே யொழியவேணுமோ, (இவள்திறத்து) பாடோடிக்கிடக்கிற விவள்திறத்து. (அருளாய்) அருள்கொள்வார் தேட்டமான நீ, அருள்பெறில் ஜீவிக்குமிவளை யிப்படி தறைக்கிடைகிடக்க விட்டுவைப்பதே. (அருளாய் - அருளுகிறதில்லை யென்றபடி.)

(பாவியேன்) நீரருளாதவராயல்ல, இவள் அது பெறாவிடில் ஜீவிப்பாளாயல்ல; இதுக்கடி நான்பண்ணின பாபமிறே. (க) "ஜ்ஞாதவ்வைவா தூ நிஶிதூரோவஸீஜ - மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்" என்னுமாப்போலே. (செயற்பாலது) என்னுடைய செயலிடத்தது அருளாமைக்கடி. (பாவியேன் செயலிடத்தது-இவள் பக்கலிலும் குறையில்லை, உம்முடைய பக்கலிலும் குறையில்லை, இருவருமான சேர்த்தி பெறவிருக்கிற வென்பாபமிறே யிதுக்குஹேது. (சு)

(க) ரா-அயோ.

ஏழாம்பாட்டு.

பாலதுன்பங்க ளின்பங்கள் படைத்தாய்! பற்றிலார்பற்றநின்றானே! * காலசக்கரத்தாய்! கடலிடம்கொண்ட கடல்வண்ணா! கண்ணனே! என்னும் * சேல்கொள் தண்புனல்சூழ் திருவரங்கத்தாய்! என்னும் என்தீர்த்தனே! என்னும் * கோலமாமழைக் கண்பனிமல்க இருக்கும் என்னுடைக் கோமளக்கொழுந்தே. (எ)

ப:—அநந்தரம். ஆஶ்ரித ஸம்ரக்ஷணார்த்தமான அர்ணவஶாயித்வாதி குணங்களையுடையவன் ஸ்வபாவங்களைச்சொல்லி க்லேஶியாநின்றாளென்கிறாள்.

(இ-ள்) என்னுடை - என்னுடைய, கோமளம் - ம்ருதுஸ்வபாவமான கொழுந்து - லதாக்ரம்போலே மெல்லியளாயிருக்கிறவிவள், பால - இடந்தோறு மிடந்தோறும், துன்பங்கள் - அநாஶ்ரித விஷயத்திலே துன்பங்களையும், இன்பங்கள் - ஆஶ்ரிதரிடத்திலே யின்பங்களையும், படைத்தாய் - உண்டாக்கினவனாய், எத்தனையேனு மபராதிகளாயும், பற்று - புறப்பற்று, இலார் - அற்றரான ஜயந்தன்போல்வாரும், பற்ற - பற்றும்படி, நின்றானே - அஶரண்ய ஶரண்யனாய் நிற்பானாய், காலசக்கரத்தாய் - ஆஶ்ரிதருடைய ப்ராப்திகாலம் நீயிட்ட வழக்காம்படி மாஸருதுவத்ஸராதி பரிவ்ருத்தியை யுடைத்தான காலசக்ரத்துக்கு நிர்வாஹகனாய்க் கொண்டு, ஆஶ்ரிதரக்ஷணார்த்தமாக, கடல் - திருப்பாற்கடலிலே, கடல்வண்ணா - கடலிலே யொருகடல் சாய்ந்தாப்போலே, இடங்கொண்ட - கண்வளர்ந்தருளுமவனாய், க்ஷீரார்ணவநிகேதநனான அந்த ஆகாரத்தைவிட்டு, கண்ணனே - ரக்ஷணார்த்தமாக க்ருஷ்ணனாய்வந்தவனே, என்னும் - என்னும், அதுக்கும் பிற்பட்டார்க்காக, சேல் - சேல்களை, கொள் - உடைத்தான, தண் - குளிர்ந்த, புனல் - புனல், சூழ் - சூழ்ந்த, திருவரங்கத்தாய் - கோயிலிலே ஸந்நிஹிதனானவனே, என்னும் - என்னும், அந்த ஸௌலப்யத்திலே, என் - நானவகாஹிக்கைக்கு, தீர்த்தனே - துறையானவனே, என்னும் - என்னும், இவ்வார்த்தத்வநியில் வரக்காணாமையாலே. கோலம் - தர்ஶநீயமாய், மா - பெருத்து, மழை - குளிர்ந்த, கண் - கண்ணானது, பனி - நீர், மல்க - விஞ்சும்படி, இருக்கும் - நிர்வ்யாபாரையாய் நிற்கும்.

இப்பாட்டு - திருத்தாயார்வார்த்தையான முன்னிலை யில்லாமையாலே, அவள் தன்னுடைய வுட்கொண்டிரங்குதல். அன்றியே, கடல்வண்ணா வென்னுமளவும் - தாய்வார்த்தையான நாயகன் முன்னிலையாய், கண்ணனேயென்று தொடங்கி - நாயகி பாசுரத்தைச் சொன்னாளாகவுமாம். (எ)

ஆறு ;—(பாலதுன்பங்கள்)ஸுகதுஃகங்களை அநுகூல ப்ரதிகூலாநுபாவ்யமாக நீபண்ணின வ்யவஸ்த்தையை யென்னளவிலே விபர்யஸ்தமாக்கவோ பார்த்தருளிற்றென்றும், உன்னுடைய அஸரண்யஸரண்யத்வ மெங்ஙனே போயிற்றென்றும், ஆஸ்ரிதவிரோதிகளுடைய ஆயுரவஸாந கணனைகஸ்வபாவமான திருவாழியை யேந்திக்கொண்டிருக்கிறது அடியேனுக்காகவன்றோவென்றும், திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறதும், ஸ்ரீநந்தகோபர் திருமகனாய்வந்து திருவவதாரம் பண்ணியருளினதும், கோயிலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறதும் ஆஸ்ரிதார்த்தமாகவன்றோ வென்றும், த்வத்குணைக தாரகபோஷக போக்யத்வ விரோதியாய் மத்கதமான அஸேஷதோஷங்களையும் போக்கினாப்போலே, த்வத்ஸம்ஸ்லேஷ விரோதியான என்னுடைய பாபங்களையும்போக்கியருளாயென்றும் சொல்லிக்கொண்டு ; பிரிவென்னும் சொல்லுங்கூடப் பொறுக்கமாட்டாதபடி ம்ருதுஸ்வபாவையான வென்னுடைய பெண்பிள்ளை, தன்னுடையவழகிய கண்கள் நீர்மல்க விருக்குமென்கிறாள். (எ)

ஈடு ;—அவ ; ஏழாம்பாட்டு. ஆஸ்ரயங்களை யநுஸந்தித்து, பொறுக்குமளவுகளிலேயன்றோ ஸுகதுஃக்கங்களைச் சுமத்துவது : இப்படி யென்னைப் படுத்தலாமோ மன்றாநின்றாளென்கிறாள். "ஆஸ்ரிதரை வாழ்விக்கையுமநாஸ்ரிதரை நலிகையுமன்றிக்கே, இப்போது விபரீதமாயிற்றோ வும்முடையபடி யென்கிறாள்" என்று பிள்ளான். இக்கோமளக்கொழுந்துக்கு, கைம்முதலொன்று மில்லாதார் பற்றினால் ரக்ஷிக்கக்கடவ நீர்மையுடையவன் ஸந்நிதியிலே யிதெல்லாம் படவேண்டுகிறது என்னோட்டை ஸம்பந்தமென்று மநோரதிக்கிறாள்.

(பாலவித்யாதி) இடமறிந்து ஸுகதுஃக்கங்களைப் படைத்தவனே. பாலென்றது - இடமென்றபடி. அப்பாலிப்பாலென்றால் - அவ்விட மிவ்விடமென்றபடி; பாலவாக - ஸ்த்தாநேஸ்த்தாநேயாக. உம்மைப்பிரிந்தாரெல்லாரு மநுபவிக்கும் துஃக்கத்தை யிவளொருத்தியையு மநுபவிப்பிக்கப்பார்த்தால் இவளால் பொறுக்கப்போமோ. அங்ஙனன்றிக்கே, ஆஸ்ரிதர் வாழவும் அநாஸ்ரிதர் கெடும்படியாகவுமன்றோ நீ பண்ணிவைத்தது. பாலென்பது-முறை. (க) * செய்குந்

(க) உ-சு-க.

தாவரும் தீமை யுன்னடியார்க்குத் தீர்த்தசுரர்க்குத் தீமைகள் செய்குந்தனன்றோ. பண்டுகட்டின மர்யாதையு மிவனுக்கில்லையோ. பாலென்று - பாசமும், இயல்வும், இடமும், ந்யாயமும், இவை நாலுக்கும் பேர்.

தந்தாமால் பொறுக்கவொண்ணாதவை தாந்தாமே யேறிட்டுக் கொள்ளும்போது நம்மால் செய்யலாவதுண்டோ; நம்பக்கல் குறையில்லை, பேறுதந்தாமதானால் தாங்களும் சிலசெய்யவேணுமென்று அவனுக்குக் கருத்தாக (பற்றிலார்பற்றநின்றானே) ஒரு கைம்முதலில்லாதார்க்காகவன்றோ இங்குவந்து சாய்ந்தருளிற்று. இக்கிடை நித்யஸூரிகளுக்காகவோ. உம்முடைய பக்கல் பற்றறுத்துக்கொண்ட ஜயந்தன்போல்வார்க்கும் பற்றாயிருக்குமவரன்றோ நீர்; (௧) * 𑌤𑌮𑍇𑌵 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃-தமேவஶரணங்கத: அன்றோ; அதுண்டானாலும் அதுக்கொரு காலமுண்டேயென்ன (காலசக்கரத்தாய்) அக்காலசக்ரம் நீயிட்ட வழக்கன்றோ. ஆஶ்ரிதர்க்காக ப்பகலை யிரவாக்கினவனன்றோ. அன்றிக்கே, ப்ரதிபந்தகமுண்டேயென்னில்; ப்ரதிபந்தகத்துக்கு ம்ருத்யுவான திருவாழியன்றோ தரித்திருக்கிறது.

பரிகரமுண்டானாலும் 'நான் தூரஸ்தனன்றோ என்னவொண்ணாதே! (கடலிடங்கொண்ட கடல்வண்ணா) நீ யெங்களைக்காலம்பார்த்தன்றோ கிடக்கிறது. ஒருகடலொருகடலிலே சாய்ந்தாப்போலே அணித்தாகத்திருப்பாற்கடலிலே சாய்ந்திலையோ. ஆனாலங்கே வரலாகாதோவென்ன; அவ்வலையலைக் கேட்கமாட்டாத இடையர்க்கு மிடைச்சிகளுக்குமாக க்ருஷ்ணனாய் வந்து உதவிற்றிலையோ வென்கிறாள் (கண்ணனேயென்னும்) (௨) "𑌨𑌾𑌗𑌪𑌰𑍍𑌯𑌙𑍍𑌕𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌹𑍍𑌯𑌾𑌗𑌤𑍋 𑌮𑌥𑍁𑌰𑌾𑌂 𑌪𑍁𑌰𑍀𑌮𑍍 - நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரீம்" என்று அக்கிடையைவிட்டு இடையிலேவந்து உதவிற்றிலையோ?

அது தப்பிற்றேயென்ன; அவ்வவதாரம் பரத்வமென்னும் படியன்றோ கோயிலிலேவந்து சாய்ந்தருளிற்று (சேல்கொளித்யாதி) (௩) * 𑌜𑌲𑌾𑌨𑍍𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌵 - ஜலாந்மத்ஸ்யாவிவ வன்றோ; ஜலசரஸத்த்வங்கள் ஜலத்தைப்பிரிந்து தரிக்கிலன்றோ விவளும்மைப்பிரிந்து தரி

(௧) ரா-ஸு-௫அ-௫-௫. (௨) ஹரிவம்ஶ-௧௧௫.
(௩) ரா-அயோ-௫௩-௩௧.

க்கவல்லளாவது. அவ்வூரிலே வர்த்திக்கிற உமக்குப்போருமோ இவளுக்கு முகங்காட்டாதொழிகிறவிடம். (என் தீர்த்தனேயென்னும்) நீ யுபேக்ஷித்தாலு முன்னையொழிய வேனக்குச் செல்லாதபடி பண்ணினவனே யென்னுதல்,† (புறம்புள்ளாரோடு பொருந்தாதபடியான ஸாத்தியோகத்தைச் சொல்லுதல்), நாணிழிந்தாடும் துறை யென்னுதல்.

(கோலமித்யாதி) தர்ஸநீயமாய்ப் பரந்து ப்ரமஹரமான கண்ணீர்மல்க விராநின்றாள். கண்ணுங்கண்ணநீருமான அழகு காட்டி லெறித்த நிலாவாவதே. இக்கண்ணநீருக்கு ஸாதநாநுஷ்டாநத்தைப்பண்ணி பலவேளையிலே யிழப்பதே. (என்னுடைக்கோமளக் கொழுந்தே) கலக்கப்பொறாத மார்த்தவத்தையுடையவள் பிரியப் பொறுக்குமோ. “தசைமுறுகினால் வைத்யர் கண்முகம் பாராதாப் போலே, மகள் அவஸ்தையைக்கண்டு தளர்ந்து பெரியபெருமாள் முகம்பாராதேவார்த்தை சொல்லுகிறாள்” என்றருளிச்செய்வர். (கொழுந்து) உபக்நம் தேட்டமானவளவிலே தறையிலே படரவிடுவதே. (க) [𑌪𑌤𑌿𑌸𑌂𑌯𑍋𑌗𑌸𑍁𑌲𑌭𑌂 𑌵𑌯𑌃 - பதிஸம்யோகஸுலபம்வய:] இப்பாட்டி லொருதலைக்கட்டின்றிக்கே யிருக்குமிதுக்குக் கருத்து “‘பரிஹரிக்கு மெல்லைகழிந்தாள், நாமிவர்க்குச் சொல்லுவதென்’ என்று தன்னிலே நோவுபடுகிறாள்” என்று, வங்கிப்புரத்துநம்பி பணிக்கும். (எ)

எட்டாம்பாட்டு

கொழுந்துவானவர்கட்கு! என்னும் குன்றேந்திக் கோநிரை காத்தவன்! என்னும்* அழும் தொழும் ஆவியனலவெவ்வுயிர்க்கும் அஞ்சனவண்ணனே! என்னும் * எழுந்துமேல்நோக்கி இமைப்பிலளிருக்கும் எங்ஙனேநோக்குகேன்? என்னும் * செழுந்தடம்புனல் சூழ்திருவரங்கத்தாய்! என்செய்கேன் என்திருமகட்கே? (அ)

ப.—அநந்தரம், உன்னுடைய வதிமாநுஷ சேஷ்டிதத்திலே யகப்பட்டு மேன்மேலன க்லேஷ்டையாகிற விவளுக் கென்செய்வேனென்கிறாள்.

---

† குண்டலிதம் க்வாஸித்கம். (க) ரா-அயோ-ககஅ-ஙச.

(இ - ள்.) வானவர்கட்கு - நித்யஸூரிகளுக்கு, கொழுந்து - ப்ரோபூதனவன், என்னும் - என்னும், அந்த மேன்மையோடேகூட ஆஸ்ரித ரக்ஷணார்த்தமாக அவதரித்து, குன்று - மலையை, ஏந்தி - அநாயாஸேநவேந்தி, கோநிரை-பசுக்களை, காத்தவன் - ரக்ஷித்த அதிமாநுஷ சேஷ்டிதத்தையுடையவனே, என்னும்-என்னும், அந்த ரக்ஷணம் தன்னளவிலே பலியாமையாலே, அழும்-பக்திபரவஸரைப்போலே கண்ணும் கண்ணநீருமாயிருக்கும், தொழும்-ப்ரபந்நரைப்போலே அஞ்ஜலிபந்தம் பண்ணாநிற்கும், இரண்டும் பலியாமையாலே, ஆவி-அஸாஹ்யமான ஆத்மவஸ்து, அனல - தக்தமாம்படி, வெ - வெவ்விதாக உயிர்க்கும் - மூச்சுவிடும், அஞ்சனவண்ணனே - இப்படி யார்த்தையாக்கின ஸ்யாமளவிக்ரஹத்தையுடையவனே, என்னும்-என்னும், "இக்குரலைக்கேட்டு வரக்கூடும்" என்று, மேல் - மேலே, எழுந்து - தலையெடுத்து, நோக்கி - பார்த்து, இமைப்பிலள் - இமையாதே, இருக்கும் - இருக்கும், எங்ஙனே - எந்தப்ரகாரத்தாலே, நோக்குகேன் - உன்னைக்காண்பேன், என்னும்-என்னும், செழு-தர்ஸநீயமாய், தடம் - பெருத்த, புனல் - புனல், சூழ்-சூழ்ந்த, திருவரங்கத்தாய்-கோயிலிலே ஸந்நிஹிதனானவனே, என் - என்னுடைய, திருமகட்கு - லக்ஷ்மீஸமானையான விவளுக்கு, என் - எத்தை, செய்கேன் - செய்வேன்.

ஆர்த்திக்கடியான ப்ரேமத்தை யளவுபடுத்துவேனோ, வாராதவுன்னை வரப்பண்ணுவேனோ, இரண்டும் முடியாதிறே யென்று கருத்து. (௮)

ஆறு;—(கொழுந்து) ஸ்ரீ வைகுண்டநிலயனாய்* அயர்வறுமமரர்க ளதிபதியா யவாப்தஸமஸ்தகாமனாயிருந்துவைத்து, கோபவேஷ பூஷிதனாய்க்கொண்டு பிறந்தருளி, வர்ஷத்தினாலே அதிபீட்யமாநமான கோப கோபீ ஜநங்களையும் பசுக்களையும் ஸ்ரீ கோவர்த்தநத்தையெடுத்து ரக்ஷித்தருளின வுன்னுடைய நிரவதிகமான காருண்ய குணத்துக்குங்கூட விஷயமல்லேனோவென்னும். பின்னையும், நீ பார்த்தருளா தொழிந்தவாறே யழாநிற்கும். தன்னுடைய அபேக்ஷிதம் பெறுகைக்காக வுன்னைத் தொழாநிற்கும்; தன்னுடைய வாத்மஸ்வரூபம்அங்காரமயமாம்படி தீர்க்கோஷ்ண நிஸ்வாஸத்தைப் பண்ணும். என்னுடைய ஸந்தாபமெல்லாம் போம்படி, உன்னுடைய அதிஸீதளமான அஞ்ஜந மேனியைக்காட்டி யருளாயென்னும். நீ வரும்படி காணவேணுமென் றெழுந்திருந்து அநிமிஷலோசநையா யாகாஸத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும். அங்குக் காணாதொழிந்தவாறே, உன்னைக் காண்கைக்கு உபாயமேதோவென்

னும். செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத்தாய், என் திருமகட்கு இனி நான்செய்வ தென்னென்று கூப்பிடுகிறாள். (அ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. இவளுக்கு மேன்மேலன வருகிற நோவுகள் தீர்க்கைக்கு நான் செய்வதென்னென்கிறாள்.

(கொழுந்து வானவர்கட்கேன்னும்) நித்யஸூரிகளுக்கும் தலையானவனேயென்னும். அன்றியே, அவர்கள் வேராகத்தான் கொழுந்தானவனென்னுதல். † (அவர்களாலே லப்தஸத்தாகனுகை.) (குன்றேந்தி) லோகாந்தரத்தில் பரிமாற்றந் தேடவேணுமோ, பசுக்களுக்கும் தத்ப்ராயரான இடையர்க்கும் உதவினவனன்றோ. மேன்மையில்லாமை யிழக்கிறேனோ, நீர்மையில்லாமை யிழக்கிறேனோ வென்னும்.

(அழும்) மலையைதரித்தொரு வர்ஷத்தைப்பரிஹரித்த நீர் இவ் வர்ஷத்தைப் பரிஹரித்தாலாகாதோ. (க) "வஹூயாஸதே தத்ரூ வவஷிணீ - பஹூதாஸந்ததுஃகவர்ஷிணி" என்கிறவிது பரிஹரித்தாலாகாதோ? (அழும்) பாலர் செய்வதையும் செய்யுமென்னுதல், ஸ்நேஹிகள் செய்வதையும் செய்யுமென்னுதல் (தொழும்) புகலற்றார் செய்வதைச் செய்யுமென்னுதல், வேதாந்த ஜ்ஞானமுடையார் செய்வதைச் செய்யுமென்னுதல். (ஆவியனல வெவ்வுயிர்க்கும்) தொழுதவநந்தரம் வரக்காணாமையாலே, "ப்ரஹ்மாஸ்த்ரம் வாய்மடிந்தது" என்று, அதாஹ்யமான வாத்மவஸ்து அக்நிமயமாம்படி நெடுமூச்செறியும். (உ) "தீர்கோஷ்ணம் ச நிஸ்வஸ்ய-தீர்க்கமுஷ்ணஞ்ச நிஸ்வஸ்ய" என்கிறபடியே.

(அஞ்சனவண்ணனேயென்னும்) நெருப்பிலே நீரைச்சொரிந்தாப்போலே அக்குளிர்ந்த வடிவைக்கொண்டுவந்து தோற்றவல்லையேயென்னும் (ந) "ஜேவஸ்ராஜ - மேகஸ்யாமம்" என்னும் வடிவிறே-கைகேயிவார்த்தையால் பிறந்த தாபமடைய வாறுங்கிடீர்! அவ்வடிவழகிலே விழிக்கப்பெற்றோமாகி லென்றார்களிறே.

(எழுந்தித்யாதி) வடிவை நினைத்தவாறே தரித்தெழுந்திருந்து, வரஸம்பாவனையுள்ள திக்கைப்பார்த்து, "ப்ரதமபரிஸ்பந்தமேது

---

† குண்டலிதம் க்வாசித்கம்.

(க) ஸ்தோ-ர-சக.

(உ) ரா-யு-ககஎ-சு.

(ந) ரா-அயோ-அந-அ.

டங்கிக் காணவேணும்" என்று இமைகொட்டாதே பார்த்துக்கொண்டிருக்கும். (எங்ஙனே நோக்குகேனென்னும்) தான் பார்த்த திக்கில் வரக்காணாமையாலே, "பின்னேவந்து கட்டிக்கொள்ளும்" என்று புரிந்து பாராநிற்கும். (எழுந்து மேல்நோக்கி) வடிவை நினைத்தவாறே தளர்த்தியிலே யெழுந்திருந்து, "ஆனைக்கு உதவினாப்போலேவரக்கூடும்" என்று மேல்நோக்கிப்பார்த்து, "ப்ரதமபரிஷ்பந்தமே துடங்கிக் காணவேணும்" என்றுமை இமைகொட்டாதே யிருக்கும்; (எங்ஙனே நோக்குகேனென்னும்) பின்னையும் தோற்றக்காணாமையாலே, நானுன்னைக்காணும் விரகேதென்னும்.

(செழுந்தடம்புனல்சூழ் திருவரங்கத்தாய்) அழகிதாய்ப்பெருத்த நீர்சூழ்ந்த கோயிலை யிடமாகவுடையவனே. இப்படி ஶ்ரமஹரமானதேஶத்திலே நீர்வந்து சாய்ந்தது இவள் வரவுபார்த்தன்றோ. அத்தலை யித்தலை யாயிற்றோ. (என்செய்கேன்) கர்த்தவ்யமடங்கலும் தானே யநுஷ்டித்தாள், நானினிச்செய்வதென். உபாயாந்தர ஸாத்யமோ வும்முடைய தர்ஶநம். (என் திருமகட்கே) இவளை யிழக்கலாமோ வுமக்கு. உம்மை யொருவரையு மாசைப்பட்ட வேற்றமன்றோ அவளது, உம்மையுமவளையும் சேர ஆசைப்பட்ட ஏற்றமுடையவளல்லளோ இவள். ஸாக்ஷால்லக்ஷ்மியோடொக்கச் சொல்லலாமாகாதே இவளை. (அ)

ஒன்பதாம்பாட்டு.

என்திருமகள் சேர்மார்வனே! என்னுமென்னுடையாவியே!
என்னும் * நின்திருவெயிற்றால் இடந்துநீகொண்ட நிலமகள்கேள்
வனே! என்னும் * அன்றுருவேழும் தழுவிநீகொண்ட ஆய்மக
ளன்பனே! என்னும் * தென்திருவரங்கம் கோயில்கொண்டானே!
தெளிகிலேன்முடிவு இவள்தனக்கே. (௯)

ப;—அநந்தரம், லக்ஷ்மீ பூமி நீளாநாயகனுன வுன் ப்ரணயித்வாதிஶயத்திலே யகப்பட்ட விவளுக்குக் காரியந் தலைக்கட்ட விருக்கிறபடி யறிகிறிலேனென்கிறாள்.

(இ-ள்.) என் - எனக்கு ஸ்வாமிநியான, திருமகள் - லக்ஷ்மியானவள், சேர் - தனக்கபிமதஸ்தாநமாகச் சேர்ந்த, மார்பனே - திருமார்பை யுடையவ

னே, என்னும் - என்னும், அச்சேர்த்தியழகோடே, என்னுடை - எனக்கு, ஆவியே - தாரகமான ப்ராணனுய்க்கொண் டென்னெஞ்சிலே யிருந்தவனே, என்னும்-என்னும், (க) 'நீலவரை யிரண்டுபிறைகவ்வி" என்கிற கணக்கிலே வடிவுக்குப் பரபாகமான, நின் - உன்னுடைய, திருவெயிற்றால் - திருவெ யிற்றாலே, இடந்து-ப்ரளயத்திலே முழுகி அண்டகபாலத்திலொன்று மிடந்தெ டுத்து, நீ - நீ, கொண்ட - உனக் கபிமதை யாகக்கொண்ட, நிலமகள்-ஸ்ரீ பூமிப் பிராட்டிக்கு, கேள்வனே - ஸத்ருஶநாயகனே, என்னும் - என்னும், அன்று - ருஷபங்களை ஶால்கமாக நியமித்தவன்று, உரு - இடிபோலே பயாவஹத்வநி யான ருஷபங்கள், ஏழும் - ஏழையும், தழுவி - அபிமதவஸ்து கண்டாப்போலே ஹர்ஷம்போலே அநாயாஸேந தழுவி, நீ - நீ, கொண்ட, நிதியெடுத்துக் கொண் டாப்போலே ஸ்வீகரித்த, ஆய்மகள் - ஸத்ருஶகோபகுலத்திலேபிறந்த நப்பின் னைப்பிராட்டிக்கு, அன்பனே - பத்தபாவனானவனே, என்னும் - என்னும், இப் படி யவர்கள்பக்கலிலே யுன் ப்ரணயித்வத்தை ப்ரகாசிப்பித்தாப்போலே யிவ ளுக்கு முதவுகைக்காக, தென் - கட்டளைப்பட்ட, திருவரங்கம் - ஸ்ரீரங்கக்ஷேத் ரத்தை, கோயில் - வாஸஸ்தாநமாக, கொண்டானே - அங்கீகரித்தவனே, இவ ள்தனக்கு - இவளுக்கு, முடிவு—ஆர்த்திபர்யவஸாந ப்ரகாரம், தெளிகிலேன் - அறிகிறிலேன். உருமென்றும் பாடமாம்.

ஆறு,—(என்றிருமகள்) ஸர்வலோக மஹேஶ்வரியாய் * ஸமஸ் தகல்யாணகுணம்ருதோததியா யிருந்த பெரியபிராட்டியார்க்கும் ஶேஷியாய், உன்னுடைய குணங்களாலே தாஸ்ய முபாகதையான ஸ்ரீ பூமிப்பிராட்டியாருக்கும் ஶேஷியாய், தன்னுடைய நிரவதிக ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத் யஸ ங்க்யேய கல்யாண குணங்களாலே பரமபோக்ய பூதையான நப்பின் னைப்பிராட்டிக்கும் ப்ரணயியாயிருந்த நீ; தத்பரிக்ரஹமாகையாலே யென்னை த்வதேகதாரகை யாக்கினாப்போலே, இன்னமும் " தத் ரிஹ ஹஷ - தத்பரிக்ரஹம் " என்றென்னை உன் திருக்கண்களாலே பார்த்தருளா யென்று சொல்லும். இவளுக்காகக் கோயிலிலே கண் வளர்ந்தருளுகிற நீ யிவளைப் பார்த்தருளுகிறிலை, இனி யிவளுக்கெ ன்னுய்விளையுமென் றென்று மறிகிறிலே னென்கிறாள். (கூ)

ஈடு ; அவ. — ஒன்பதாம்பாட்டு. இவளுடைய துஃக்கத்துக் கொருமுடிவு காண்கிறிலே னென்கிறாள்.

(க) கo-கoு-எ.

(என்திருமகள்சேர்மார்பனேயென்னும்) என் பேற்றுக்குப் புருஷகாரமில்லாம விருக்கிறேனென்றுமாம். விசிஷ்டத்திலன்று, 'என்' என்கிறவிது-விசேஷணாம்சத்திலே. † (அதாவது ; 'என்' என்கிறவிடம்-திருமகளிலே யந்வயிக்கிறது, மார்பனே என்கிறவிடத் திலந்வயிக்கிறதன்று.) அநந்தாழ்வான் தன் பெண்பிள்ளையை "என் திருமகள்" என்று திருநாமஞ் சாத்தினான். பட்டர் பெருமாளுக்கு, "அடியேனை 'ஸ்த்ரீதநமாகப் பிராட்டிக்குவந்தவன்' என்று திருவுள் ளம்பற்றவும், நானும் 'இவர் எங்கள் நாய்ச்சியாருக்கு நல்லர்' என் று, அவ்வழியே 'அழகியமணவாளப்பெருமாள்' என்று நினைத்தி ருக்கவுமாகவேணும்" என்று வேண்டிக்கொண்டார். (சேர்மார்பனே) ரஹஸ்யத்தில் நித்யயோகத்தைச் சொல்லுகிறது. அவளொருக்ஷ ணம் பிரியவிருக்கிலன்றோ வெனக்குப் பேறு தாழ்க்கவேண்டுவது.

"பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்யுமவை கேட்கைக்காக நஞ்சீயரை யழைத்தருளித் தாமறுதுசெய்யா நிற்கச்செய்தே, இத் திருவாய்மொழி யியலைக் கேட்டருளா நிற்க, இப்பாட்டளவிலே வந்த வாறே 'என்திருமகள் சேர்மார்பனேயென்னுமென்னுடையாவியே யென்னும்' என்றியலைச் சேர்த்தருளிச்செய்ய, அத்தைக் கேட்டுக் கையையுதறி 'ஸ்ரீரங்கநாத' என்றணையிலே சாய்ந்தருளினார் பட் டர்" என்றருளிச்செய்வர். "அப்போது திருமேனியிலே பிறந்த விக்ருதியைக்கண்டு 'இவர்க்கு பகவத்ப்ராப்தி யணித்தாகிறதோ' என்றஞ்சி யிருந்தேன்" என்று ஜீயரருளிச்செய்வர். (என்னுடை யாவியே யென்னும்) இவர்க்கு ப்ராண னொருவாயு விசேஷமல்ல, ஒருமிதுநமாயிற்று. திருமகள்சேர்மார்பனைக்கொண்டு எனக்கு தாரகனானவனே யென்னும்.

(நின்னித்யாதி) ப்ரணயிநிகளுக்குக் காரியஞ்செய்யும்போது உன்னை யழியமாறியன்றோ கார்யஞ்செய்வது. ஸ்ரீ பூமிப்பிராட்டி ப க்கல் முகம் பெறலாவது அவள் விபூதியைத் தன்முகேந நோக்கினா யிறே. "நின்திருவெயிறு" என்னுமித்தனை யழகுக்கு. (இடந்து நீ கொண்ட) நீ யிடந்துகொண்ட. ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு வல்ல பனானவனே.

---

† குண்டலிதம் க்வாசித்கம்.

(அன்றித்யாதி) ஒருநாளுந்தவின நீ யின்றுதவிணுலாகாதோ. நப்பின்னைப்பிராட்டியுடைய தசையை - அன்றென்னு மித்தனே. ஒன்றிரண்டன்றிக்கே யிருக்கிற ருஷபங்களேழையும் தழுவி. அவள் திருமுலைத் தடத்தை யணைத்தாப்போலே யிருக்கிறதாயிற்று அவளைப்பெறுகைக்கு உபாயமாகையாலே. உருவென்று - இடி. இடிபோலே பயங்கரமான குரலையுடைய வேறென்னுதல். உருவென்று மிடுக்காய், மிடுக்குத்தான் வடிவுகொண்டாப்போலே யென்னுதல். “உருவுட்கு” என்று உருச்சொல்லு. நீ கொண்ட - நீகைக்கொண்ட. (ஆய்மகளன்பனேயென்னும்) என்னைக் கைவிட்டு என் ஸ்வாமிநிகள் பக்கலிலெங்ஙனே முகம்பெற விருக்கிறுயென்னும்.

(தென்திருவரங்கம் கோயில்கோண்டானே) தெற்குத்திக்குக்கு ஶ்லாக்யமான ஸ்ரீரங்கக்ஷேத்ரத்தை வாஸஸ்தாநமாக வுடையவனே. “எருதேழடர்த்த வவதாரத்திலே முகங்காட்டப் பெற்றதில்லை” என்னும் குறையுண்டோ. அவதாரங்கள் போலன்றியே நித்யவாஸம்பண்ணுகிறது, பிற்பாடர்க்குதவவன்றோ. (க) “ஶதஸம்ஸாரநிர்முக்தஃ -கதஸ்ஸ்வம்ஸ்த்தாநமுத்தமம்” என்னவேண்டாதபடி கோயில்கொண்டாணுயிற்று.- (தேளிகிலேன்) அங்குக் குறையற்றபின்பு “தப்பாது” என்று தெளியவிறேயடுப்பது, அது மாட்டுகிறிலேன். (உ) “ஶாஶ்வதீஃ - மாஶ்ஶசஃ” என்றத்தை யநுஷ்ட்டாநபர்யந்தமாக்கிக்கொண்டு நீ கிடந்தால், (௩) “ஸ்த்திதோஸ்மி கதஸந்தேஹஃ - ஸ்த்திதோஸ்மி கதஸந்தேஹஃ” என்றிருக்கவிறேயடுப்பது; அது மாட்டுகிறிலேன். இவள் தனக்கு - முடிவு-தெளிகிறிலேன். இவளவஸ்த்தை யிதுவாயிருக்க, ஒரு ஜ்ஞாநலாபத்தாலே யாறியிருக்கப்போமோ. (௬)

பத்தாம்பாட்டு

முடிவு இவள்தனக்கு ஒன்றறிகிலேனென்னும் மூவுலகாளியே! என்னும் * கடிகமழ்கோன்றைச்சடையனே! என்னும் நான்முகக்கடவுளே! என்னும் * வடிவுடைவானோர்தலைவனே! என்னும் வண்திருவரங்கனே! என்னும் * அடியடையாதாள்போல் இவளணுகி யடைந்தனள் முகில்வண்ணனடியே. (கo)

(க) பாரத -

(உ) கீதை-கஅ-௬௬.

(௩) கீதை-கஅ-எ௩.

ப:—அநந்தரம், ஈஶ்வராபிமாநிகளுக்கு மந்தராத்மாவான ஸர்வேஶ்வரனு னவன் இவளுடைய வார்த்தியையறிந்து தன் ஶீலாதிஶயத்தாலு மௌதார்யத்தாலும் தன் வடிவழகாலும் ஆந்தர ஸம்ஶ்லேஷத்தை *விஶ்லேஷித்து ப்ரகாஶிப்பிக்க இவளுக்கு அத்தால்பிறந்த விஶ்வாஸத்தைக்கண்டு ஸ்வகதமாகத் தாயார் ஸந்துஷ்டையாய்ச் சொல்லுகிறாள்:

(இ-ள்.) இவள்-ப்ரத்யக்ஷஸித்தஅவஸாதத்தையுடையவிவள், தனக்கு-இப்படியவஸந்நையானதன்படிக்கு, முடிவு-முடிவு, ஒன்று-ஒன்று, அறிகிலேன்-அறிகிறிலேன், என்னும் - என்னும், மூவுலகாளியே - த்ரைலோக்யேஶ்வரனை இந்த்ரனுக்கந்தராத்மாவாய்க்கொண்டு நிர்வஹித்தவனே, என்னும் - என்னும், கடிகமழ் - பரிமளப்ரவாஹியான, கொன்றை - கொன்றைத்தாரை யுடைத்தான, சடையனே - ஜடையையுடையவனான ருத்ரனை யதிஷ்டித்து நின்று அவனுடைய ஈஶ்வரத்வோபாஸகத்வங்களுக்குள்ளீடானவனே, என்னும்-என்னும், நான்முகன்-இவர்களுக்குஶேஷியான சதுர்முகனை, கடவுளே-தைவத்துக்காத்மாவானவனே, என்னும் - என்னும், இப்படி யீஶ்வராபிமாநிகளான ப்ரயோஜநாந்தரபரர்க்கும் ப்ரகாஶியான ஶீலத்துக்குமேலே, வடிவுடை - தன்னோடுலப்தஸாரூப்யரான, வானோர் - நித்யஸூரிகளுக்கு, தலைவனே - ஶேஷியானவனே, என்னும் - என்னும், அம்மேன்மையோடே, வண்-ஆசைப்பட்டார்க்குத் தன்னைக்கொடுக்குமௌதார்யத்தையுடையனாய்க்கொண்டு, திருவரங்கனே - கோயிலுக்குநிர்வாஹகனானவனே, என்னும் - என்னும், இப்படி நீர்மையையும் மேன்மையையு மௌதார்யத்தையு மநுஸந்தித்திட்டு, இனி, அடி - அவன்திருவடிகளை, அடையாதாள்போல் - கிட்டமாட்டாள்போலே யென்னும்படியிருக்க, இவள் - இவள், முகில்-ஜலஸ்தலவிபாகமற வுபகரிக்கும் காளமேகம்போலேயிருக்கிற, வண்ணன் - வடிவையுடையவனுடைய, உபகாரகத்வாதிஶயத்தாலே, அடி - அவன்திருவடிகளை, அணுகி - கிட்டி, அடைந்தனள் - ப்ராபித்தாளாயிருந்தது. (கΟ)

ஆறு;—(முடிவிவள்தனக்கு) இப்பெண்பிள்ளை, தனக்கு முடிகைக்கோருபாயமறிகிறிலேனென்னும். ப்ரஹ்மருத்ராதி ஸகல தேவதைகளுக்கு மந்தராத்மதயாவஸ்திதனாய், அவர்களுடைய ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்த்யைஶ்வர்யாதி ஹேதுபூதனானவனே, உன்திருவடிகளில் அவர்களோபாதி யுறவுபோராதோவென்னும்; * அயர்வறுமமரர்களையுங்கூடத் தோற்பித்தடிமையாக்கிக்கொண்டிருக்கிற வுன்னைக்காட்டி யருளாயென்னும். கோயிலிலே புகுந்து

* முன்பதிப்பில் "விஶ்லேஷித்து" என்று காண்கிறது.

கண்வளர்ந்தருளி யாச்ரிதர்க்கு ஆத்மதாநம்பண்ணிக்கொண்டிருக்கிற பரமோதாரனேயென்னும். "இனிப்பெருமாள் திருவடிகளைச் சேர்ந்து முடியமாட்டாள், போய்முடிந்தாள்" என்னும்படி ஆர்த்த ஸாபந்நையானவிவள், வ்ருத்தமான விச்லேஷ நிபந்தநமான நிரவதிக து:க்கமெல்லாம்விஸ்ம்ருதமாம்படி, தானாசைப்பட்டபடியே பெரியபெருமாள் திருவடிகளையே ஸம்ச்லேஷிக்கப்பெற்றாளென்று இவளுடைய திருத்தாயார் ப்ரீதையாகிறாள். (கO)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு. இனிக்கிட்டமாட்டாளோ! வென்னும்படி யவஸந்நையானவிவள், பெரியபெருமாள் திருவடிகளை ஸம்ச்லேஷிக்கப்பெற்றாளென்கிறாள்.

(முடிவிவள்தனக்கொன்றறிகிலேனென்னும்) பெண்பிள்ளை வார்த்தையைத் திருத்தாயாரநுபாஷிக்கையாலே; "இவள், தனக்கு - முடிவு - ஒன்றறிகிலேன்" என்று நின்றாளென்கிறாள். இத்து:க்கஸாகரத்தை தக்கரைகாணும் விரகறிகிறிலேனென்னுதல், முடிந்துபிழைக்கும் விரகறிகிறிலேனென்னுதல்.

(மூவுலகித்யாதி) "மூவுலகாளியே, கடிகமழ்கொன்றைச்சடையனே, நான்முகக்கடவுளே யென்னும் - வடிவுடைவானோர்க்குத்தலைவனேயென்னும்" என்று திருமாலையாண்டான் வையதிகரண்யமாக்கி நிர்வஹிக்கும். 'என்னும்' என்னுமது - என்னுமவளாய். எம்பெருமானார் கேட்டருளி, ஸாமாநாதிகரண்யத்தாலே யருளிச்செய்தருளினார்; த்ரைலோக்யத்துக்கும் கடவனான இந்த்ரனுக் கந்தர்யாமியாய் நின்று அவனுடைய வதிகாரத்தை நிர்வஹிக்கிறவனேயென்னும்; பரிமளத்தையுடைத்தான கொன்றையை ஜடையிலேயுடைய ருத்ரனுக் கந்தர்யாமியாய்நின்று அவனுடைய பதத்தை நிர்வஹிக்கிறவனேயென்னும்; அவர்களிரு டிவ்விருவருமுள்ளாரோடு வாசியற வெல்லார்க்கும் நிர்வாஹகனாயிருக்கிற சதுர்முகனாகிற தேவதைக் கந்தர்யாமியானவனேயென்னும். (வடிவுடையித்யாதி) பகவதநுபவத்தால்வந்த ஹர்ஷம வடிவிலே தோற்றும்படியிருக்கிற நித்யஸூரிகளுக்கு நாதனானவனேயென்னும்.

"வடிவுடைவானோர் தலைவனே" என்றத்தோடு, "மூவுலகாளியே" என்றத்தோடு, "கடிகமழ்கொன்றைச்சடையனே" என்றத்தோடு, "நான்முகக்கடவுளே" என்றத்தோடு வாசியற்றிருக்கிறதா

யிற்று இவர்க்கு * மயர்வறமதிநலம்பெறுகையாலே. விஶேஷஜ்ஞும் ஸத்தில் பர்யவஸிக்குமவரல்லரே. ஸர்வநிர்வாஹகனென்று உணர்ந்திருக்கு மவராயிற்றிவர்.

(வண்திருவரங்கனேயென்னும்) நித்யஸூரிகளே யநுபவித்துப் போகையன்றிக்கே, நித்யஸம்ஸாரிகளு மிழவாமைக்கன்றோ விங்குவந்து கண்வளர்ந்தருளுகிறது. இங்குச்சாய்ந்தருளினதின் பலம் நான்பெறவேண்டாவோவென்னும். ஆசைப்பட்டார்க்குத் தன்னைக் கொடுக்கு மௌதார்யம்.

(அடியடையாதாளித்யாதி) "ஜீவிப்பாரைப்போலேயிருந்து, கடுகமுடிந்துகொடுநின்றாள்" என்று நிர்வஹிப்பாருமுண்டு; "அப்போது மேல்ப்ரபந்தம் நடவாது. ஆகையாலே, திருவடிகளைக்கிட்டாதாரைப்போலே யிருந்து க்ரமத்திலே கிட்டிக்கொண்டுநின்றாள்" என்றருளிச்செய்யும்படி; இதுதான் - மாநஸாநுபவத்திலே யொரு வைஶத்யத்தைச்சொன்னபடி. (அடியடையாதாள்போல்) இவளிப்போதே திருவடிகளைச்சேரமாட்டாள், இன்னம் சிறிதுகாலமிருக்குமென்றுபோலேயிருந்தது ; முடிந்துகொடுநின்றா ளென்னுதல். இனி ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றாளோவென்று தோற்றும்படி யவஸந்நையானவிவள் கிட்டி ஸம்ஶ்லேஷிக்கப்பெற்றாள், காளமேகநிபஶ்யாமமான பெரியபெருமாள் திருவடிகளையேயென்னுதல். (க0)

பதிற்றாம்பாட்டு.

முகில்வண்ணனடியையடைந்து அருள்சூடி யுய்ந்தவன் மொய்புனல்பொருநல் * துகில்வண்ணத்தூநீர்ச்சேர்ப்பன் வண்பொழில் சூழ் வண்குருகூர்ச்சடகோபன் * முகில்வண்ணனடிமேல்சொன்னசொல்மாலை ஆயிரத்துஇப்பத்தும்வல்லார் * முகில்வண்ணவானத்துஇமையவர்சூழ இருப்பர் பேரின்பவெள்ளத்தே. (கக)

ப;—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸித்தவர்கள் பரமபதத்திலே ஸூரிகள் நடுவே ஆநந்த நிர்ப்பரராயிருப்பரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

(இ-ள்.) முகில்வண்ணன் - உதாரமானமேகஸ்வபாவரான பெரியபெருமாளுடைய, அடியை - திருவடிகளையே, அடைந்து - ப்ராபித்து, அதுக்கடி

யான, அருள் - அவருடையக்ருபையை, சூடி - தலைக்கொண்டு, உய்ந்தவன்-உஜ்ஜீவித்தவராய், மொய் - மிக்க, புனல் - புனலையுடைத்தான, பொருநல் - திருப்பொருநலினுடைய, துகில் - துகிலின், வண்ணம்-நிறம்போலே, தூ - பரிசுத்தமான, நீர் - ஜலத்தையுடைத்தான, சேர்ப்பன் - பர்யந்தப்ரதேஸத்தையுடையராய், வண் - மதுபுஷ்பஸம்ருத்தியாலுள்ள வைலக்ஷண்யத்தையுடைய, பொழில் - பொழில்களாலே, சூழ் - சூழப்பட்டு, வண் - நிரதிஸய ஸம்பத்விசிஷ்டமான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், முகில் - காளமேகம்போலே, வண்ணன் - நிரதிஸயஸௌந்தர்யயுக்தரானபெரியபெருமாள், அடிமேல் - திருவடிகள்விஷயமாக, சொன்ன - அருளிச்செய்த, சொல் - ஸப்தாத்மகமான, மாலை - மாலைகள், ஆயிரத்து - ஆயிரத்து, இப்பத்தும் - இப்பத்தையும், வல்லார் - பாவவ்ருத்தியோடே யப்ஸிக்கவல்லவர்கள், ஸ்ரீவைகுண்டநாதன் திருமேனியில்நிழலீட்டாலே, முகில்-மேகஸ்யாமளமான, வண்ணம் - நிறத்தையுடைய, வானத்து - பரமபதத்திலே, இமையவர் - நித்யஸூரிகள், சூழ - பரிவேஷ்டிக்க, பேரின்பவெள்ளத்தே - நிரதிஸயாநந்தஸாகரமத்யத்திலே, இருப்பர் - இருப்பார்கள்.

இது - எழுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு ;— (முகில்வண்ணன்) பெரியபெருமாள் திருவடிகளைச் சேர்ந்து ஸர்வப்ரகார ஸம்ஸ்லேஷமும்பண்ணப் பெறுகையாலே லப்தோஜ்ஜீவநராய்; ஸுப்ரஸந்நஸலிலபூரபரிபூர்ணமான திருப்பொருநலாலும், அதிரமணீய திவ்யகந்தஸுமநோபிராம தருநிகரங்களாலும் பரிகர்மிதமான திவ்யநகர நிலயராயிருந்த சடகோபன், முகில்வண்ண னடிமேற்சொன்னசொன்மாலையாயிரத்துளிப்பத்தும் வல்லார், பெரியபெருமாள்திருமேனியில் நீலமான ஜ்யோதிஸ்ஸின் வெள்ளத்தாலே திவ்யமான திருநாட்டிலே * அயர்வறுமமரர்கள் சூழ, ஸவிபூதிகபரமபுருஷாநுபவஜநித நிரவதிகாநந்த மஹார்ணவாந்தர்நிமக்நராயிருப்பாரென்கிறார். (கக)

ஈடு; அவ —நிகமத்தில்—திருவாய்மொழி யப்யஸிக்கவல்லார், இவர்பட்ட க்லேசம்படாதே திருநாட்டிலே நிரதிஸயாநந்த யுக்தராய், நித்யஸூரிகள் சூழவிருக்கப்பெறுவரென்கிறார்.

(முகில்வண்ணனித்யாதி) பெரியபெருமாள் திருவடிகளைக் கிட்டி யந்குத்தைப்ரஸாதத்தைப் பெற்று தரித்தவன். பூர்வா

வஸ்த்தையில், ஸத்தையு மழியும்படியாயிருக்கையாலே-உய்ந்தவனென்கிறது; மொய்யென்று - மிகுதிக்கும், வலிக்கும் பேர். இப்போது, நீரோட்டத்தால் வந்தவலியைநினைக்கிறது. வலியையுடைத்தான ஜலத்தோடேகூடின பொருநலில் துகிலினுடைய வண்ணத்தையுடைத்தான தூநீர்த்துறைவன். சேர்ப்பன் - துறைவன். நெய்தல் நிலத்தில் தலைமகன். மொய்புனலென்னுநிற்க, தூநீரென்றது - பெருவெள்ளமாயிருக்கச்செய்தே தெளிந்திருக்கும்படியைப் பற்ற. (க) “[illegible] - ரமணீயம்ப்ரஸந்நாம்பு ஸந்மநுஷ்யமநோயதா” என்கிறபடியே. தர்ஶநீயமான பொழிலையுடைத்தாய் உதாரமான திருநகரிக்குநாதன்.

(முகிலித்யாதி) காளமேகம்போலே நிரதிஶய ஸௌந்தர்ய யுக்தரான பெரியபெருமாள் விஷயமாக வருளிச்செய்த ஶப்தாத்மகமான மாலைகளாயிரத்திப்பத்தையும் பாவவ்ருத்தியோடே யப்யஸிக்கவல்லவர்கள். “பெரியபெருமாள்திருவடிகளிலே-திருவாய்மொழியாயிரமுஞ்சொல்லிற்று; (உ) ‘திருமோகூர்க்கீத்தபத்து,’ (ங) ‘திருவேங்கடத்துக்கிவைபத்து’ என்று பிரித்துக்கொடுத்தவித்தனை; பெருமாள்திருப்பலகையிலமுது படியிலே மற்றைத்திருப்பதிகள் நாயன்மார்க்கு மளந்துகொடுக்குமாப்போலே” என்று பிள்ளையருளிச்செய்வர். (முகில்வண்ணவானத்து) அங்கிருக்கிறவனுடைய நிழலீட்டாலே அவன்படியாயிருக்கிறவானமென்னுதல், முகில்வண்ணனுடைய வானமென்னுதல். (இமையவரித்யாதி) இவள்மோஹித்துக்கிடக்கத் திருத்தாயார் தனியேயிருந்து கூப்பிட்டவெளிவரவுதீர, நித்யஸூரிகள் திரளவிருக்க அவர்கள்நடுவே யாநந்தநிர்ப்பரராயிருந்தநுபவிக்கப்பெறுவர்கள்.

இரண்டாந் திருவாய்மொழி முற்றிற்று.

(க) ரா-பால-உ-ரு.

(உ) கO-ஸ கக.

(ங) சு-கO-கங.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஏழாம்பத்து

மூன்றாந் திருவாய்மொழி.

வெள்ளைச்சுரிசங்கு - ப்ரவேஶங்கள்.

ஆறு;—(வெள்ளைச்சுரிசங்கு) இப்பிராட்டியோடே பெரியபெருமாள் ஸம்ஶ்லேஷ ரஸத்தை யநுபவித்து, அந்த ஸம்ஶ்லேஷரஸமுள்ளடங்காதபடி பெருகினவாறே, அது ஸாத்மிக்கைக்காகவும், ஆஶ்ரிதப்ரதிகூல ம்ருகம்ருகயார்த்தமாகவும் தென்திருப்பேரையிலே யெழுந்தருளத்திருவுள்ளத்தே கோலியருளி, இவளுடைய ஸம்வாதார்த்தமாக விவளிடத்திலே யதிமாத்ர ஸம்மாநத்தைப்பண்ணியருளி “தென்திருப்பேரையிலே வேட்டைக்குப் போய்வருகிறோம்” என்றருளிச்செய்ய, இப்படி (க) * பதிஸம்மாநிதையானவிவள் அவ்யுத்பந்ந விஶ்லேஷையாகையாலும், இவனெழுந்தருளுகை யிவனைக் காணாதொழிகைக்கு ஹேதுவென்னுமிட மறியாமையாலும் எழுந்தருள ஸம்மதித்து, விஜயத்தை யாஶாஸித்து. திவ்யாயுதங்களைக்கொடுத்தருளி, (க) “பதிஸம்மாநிதா ஸீதா பர்தாரமஸிதேக்ஷணா-ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாந்யபிதத்யுஷீ” என்னும் ப்ரக்ரியையாலே திருப்பல்லாண்டுபாடிக்கொண்டு திருவணுக்கன் திருவாசலளவும் பின்னேயெழுந்தருளப் பெரியதிருவடி திருத்தோளிலே யேறியருளி, ஒரு தாமரைத்தடாகம் மலர்ந்தாப்போலேயிருந்த திருக்கண்களாலே யிவளைப்புரிந்து பார்த்தருளி யிவளாலே அநுஜ்ஞாதனுய்த் தென்திருப்பேரையிலேயெழுந்தருள, இவள் அவனைக்காணாமையாலே யத்யந்த மவஸந்நையாய் அவனெழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலே யெழுந்தருள வுத்யோகிக்க, இவளுடைய திருத்தாயாரும் தோழிமாரும் மற்றுமுள்ள பந்துக்களு மிவளை ப்ரதிபந்திக்க; நான் போகை தவிரேன், தனியேபோனேனென்னும்பழி உங்களுக்கு வாராமே நீங்களே யென்னைத் தென்திருப்பேரையிலே யிண்டக்கொண்டு போய்விடுங்கோளென்கிறாள்.

ப.—மூன்றாந்திருவாய்மொழியில், கீழ் - பெரியபெருமாளுடைய வௌதார்யகுணாநுஸந்தாநத்தாலே யாஶ்வஸ்தரான விவர்க்கு பாஹ்யாநுபவாலாபமநுவர்த்திக்கையாலே யத்யந்த மார்த்தராய், அந்தவார்த்தி ஶமிக்கைக்கு அவ

(க) ரா-அயோ-௧௬-௨௧.

ஞஸந்நமாகத்திருப்பேரையிலே யெழுந்தருளி யிருக்கிறபடியை யநுஸந்தித்து; ஆந்தரா நுபாவ்யமான வவனுடைய வாயுதாதி வைலக்ஷண்யத்தையும், அதிஶ யிதமான பாத்வஸௌலப்யங்களையும், ஆகர்ஷகமான வவயவாதி ஶோபையை யும், அநுபாவ்யமான வாஶ்சர்யகுணாதி யோகத்தையும், அநிஷ்டவர்க்க நிரஸந த்தையும், ஔதார்யாதிஶயத்தையும், ப்ரபல ப்ரதிபந்தக பங்கத்தையும், ப்ரக் ருஷ்டபக்தி வர்த்தகத்வத்தையும், ப்ரளயாபத்ஸகத்வத்தையும், ஆஶ்ரிதவிரோ திநிபர்ஹணத்தையும் சிந்தித்து, ஏவம்பூதனானவ னெழுந்தருளி யிருக்கிற தேசத்திலே செல்லுகையிலுண்டான த்வராவிஶேஷத்தைக்கண்ட பார்ஶ்வஸ் த்தரான ஸுஹ்ருத்துக்களுக்கும் பரிவர்க்கும் ப்ராப்திஜநித வ்யவஸாயத்தை யறிவித்த ப்ரகாரத்தை; நாயகனான மகரநெடுங்குழைக்காத னெழுந்தருளி யிருக்கிற தென்திருப்பேரையிலே செல்லுகையிலே த்வரையையுடைய நாயகி யானவள், “இது அநுரூபமன்று” என்று விலக்கத்தேடுகிற தோழிமார் தாய்மார் முதலானாரைக்குறித்து, “நானத்தேசத்திலே செல்லல் தவிரேன்; நீங்கள் கொடுபோய்விடுங்கோள், இல்லையாகில் நானேபோவேன்” என்று தன் துணிவை வெளியிட்ட பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். *

ஈடு;—அவ; கீழ் (க) “இட்டகாலிட்டகை” என்கிறபடியே யி வள்மோஹித்துக்கிடக்க, இவளுக்குமுன்னே தோழிமாரும் தறைப் பட, திருத்தாயாரொருத்தியு மிவள்தஶையை யநுஸந்தித்து அரு கேயிருந்து கூப்பிட்டுப் போருமது தவிர்ந்து; இப்பெண்பிள்ளை தா னேயெழுந்திருந்து கால்நடை தந்து போமளவாய் விழுந்தது; அ துக்கடி-(உ) “பற்றிலார்பற்றநின்றானே” என்று-பெரியபெருமாளு டைய வஶரண்ய ஶரண்யத்வந் தொடக்கமான விவளுக்குப் பற்று சான குணங்களையும் ஸௌந்தர்யாதி விக்ரஹகுணங்களையும் இவள் தான்வாய்வெருவியும் திருத்தாயார் சொல்லவும்கேட்டு அத்தாலே தரித்தாள்; போனவுயிரை மீட்கவற்றாயிறே குணாநுபவமி ருப்பது.

கீழ்ப்பிறந்த மோஹமும் தெளிந்து, விஶ்லேஷ வ்யஸநமுமநு ஸந்திக்க வல்லளாய், பின்பு “அவனைக்கிட்டியல்லது நில்லேன்” என்னுமாற்றாமையும் பிறந்து, அதுபெருமையாலே அவஸந்நை யாக, இவள்விடாய்க் கீடாம்படி அணித்தாகத் தென்திருப்பேரை யிலே வீற்றிருந்த மகரநெடுங் குழைக்காதனுடைய வபேக்ஷிதாதி

(க) எ-உ-ச. (உ) எ-உ-எ.

களிலே யபஹ்ருதசித்தையாய், " அவனிருந்தவிடத்தேறப்போக வேணும் " என்றொருப்பட, பழையபடியே தோழிமாரும் தாய்மாரு மவளைச்சூழப்போந்து;"உனக்கித்தனை யதிமாத்ரப்ராவண்யமாகாது, நமக்கிது பழியாய் விளையும் " என்ன, "நீங்கள் சொல்லுகிறவற்றால் ப்ரயோஜநமுண்டாகமாட்டாது, நானவன்பக்கலிலே அபஹ்ருதசித்தையானேன், ஆனபின்பு நானேபோனேனாகாமே நீங்களென்னோ டொன்பட்டு அங்கே கொடுபோய்ச் சேர்க்கப் பாருங்கோள் " என்று தனக்குப் பிறந்த துணிவை யவர்களுக் கறிவித்துச்சொல்லுகிறதா யிருக்கிறது.

அங்ஙனன்றிக்கே பிள்ளான் பணிக்கும்படி - "முகில்வண்ணனடியே - இவளணுகியடைந்தனள்" என்றதாகையாலே (௧) "ஸமாஶ்வஸ தஸ்ஸ ஹஸி - ஸமாஶ்வாஸ்ஸத்ராஹம் " என்கிறபடியே பெரிய பெருமாளோடே சிரகால முந்மஸ்தகரஸமான ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாய், பிரிந்துகூடாவிடி லிரண்டுதலைக்கு மழிவு வருமளவாச்சுதாய், இனி யெல்லாவளவிலு மொரு நீராகக்கலக்கிறது தர்மியிரண்டும்கூடியிறே, ஆகையாலே பிரியாவிடில் தர்மிலோபபர்யந்தமாகப் புக; இவ்வளவில், நாயகனானவிவன் இரண்டுதலையும் ஜீவிக்கப்பார்ப்பானொருவ னாகையாலே பிரிவை ப்ரஸங்கிக்க, இவளும் விஶ்லேஷத்தில் வாஸனையில்லாதா ளொருத்தியாகையாலே, " கலவியிலேயொருவகையோ " என்றுகொண்டு இவளுமநுமதிபண்ண, அவனுமவ்வேட்டை நிமித்தமாகப்புறப்பட, இவளும் திருவனுக்கன் திருவாசலிலளவுமொருப்படுத்திமீள ; எல்லாவளவிலும் பிரிவு தன் காரியம் செய்தன்றி நில்லாதிறே.

" அநந்தர மிவள் நோவுபடப்புக, இத்தைக்கண்ட தோழிமாரும் தாய்மாரும் ' உனக்கோடுகிறதென் ' என்றுகேட்க, 'ஸ்ரீஜநகராஜன் திருமகள் காட்டிலே கூடப்போய் அவரிருந்தவிடம் நின்றவிடம் உலாவினவிடந்தோறும் கூடவிருந்தநுபவித்தாப்போலே, நானுமவனிருந்தவிடத்தே போய்ப் புக்கல்லது நில்லேன்' என்ன, ' உனக்கிது தலைமைக்குப்போராது, நீ சொல்லுகிறவை வார்த்தையன்று ' என்ன, அவர்களை 'நீங்கள் நிரோதிக்கிறத்தால் பெற்றதென், நான் போகை தவிரேன்; நீங்களே யென்னைக் கொடுபோய்

(௧) ரா·ஸு-௩௩-௧௮.

விடுங்கோள்' என்ன, அவர்கள் 'அதுக்கு நாங்கள் வழிப்படோம்' என்ன, 'ஆகில் நானேயாகிலும் போகை தவிரேனென்கிருள்'' என்று.

(க) [ஸஹோஷிதஸ்ஸ ராஹ – ஸமாத்வா தஸ்ய த்ராஹம்] இப்போது காதாசித்க தர்ஸநமுங்கூட வரிதாம்படி யிருக்கிறநான், முன்பு சிரகாலமவரோடே யநுபவிக்கப்பெற்றேன்காண் [ராகவஸ்யநிவேஸநே – ராகவஸ்யநிவேஸநே] எங்கள்மாமனாருடைய மாளிகையிலே அவர் தண்ணீர்த்துரும் பறுத்துத் தர, நெடுங்கால மநுபவித்தேன். (க) [ஸமா த்வாதஸ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஸநே – புஞ்ஜாநாமாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ] (உ) "ஸர்வாந்காமாந் – ஸர்வாந்காமாந்" என்கிறபடியே எல்லா மநுபவிக்கப் பெற்றேன்; அப்படியுமன்றிறே யிங்கு; (ந) "பஹவோ ந்ருப கல்யாணகுணாঃ – பஹவோந்ருபகல்யாணகுணாঃ" என்று குணங்களிரட்டித்தவிடமிறேயிது.

ஆக வித்தால் சொல்லிற்றாயிற்று - நமக்கு ஸப்தாதிவிஷயங் களினின்று மிந்த்ரியங்களை மீட்கவொண்ணுதாப்போலேயிறே இவ ரை பகவத்விஷயத்தினின்றும் மீட்கவொண்ணுதபடி. அது கர்ம மடியாக வருகிறது, இது பகவத்ப்ரஸாதமடியாக வருகிறது. திருத் தாயார் பேச்சாய்வருகிறவை-ஆழ்வார்தமக்குப் பிறந்த தஸாவிசே ஷம்; தலைமகளாய்ப் பேசுகிறதும் - இவர்க்குப் பிறந்ததோ ரவஸ்த் தாவிசேஷம் ; அதில், நிஷேதிக்கிற திருத்தாயார்முகத்தால்சொல் லுகிறது - ஸ்வரூபமான ப்ராவண்யத்திலே உபாயம் சொருகிற் செய்வதென்னென்னு மதுக்குச் சொல்லுகிறது ; பெண்பிள்ளை கருத்தால் சொல்லுகிறது - உபாயமவனேயாகில் ப்ராவண்யம் ஸ்வ ரூபமாமத்தனையன்றே வென்று. ஆக, இவ்விரண்டர்த்தத்தையு மிரண்டு முகத்தாலே ஆழ்வார் தாமநுஸந்தித்த படியைச் சொல் லுகிறது; மோஹமுந்தெளிந்து தானே கூப்பிடவல்லளானவிதுவே இத்திருவாய்மொழிக்கேற்றம். *

(க) ரா-ஸு-நந-கச. (உ) தை-ஆ-க.
(ந) ரா-அயோ-உ-உக.

முதற்பாட்டு.

வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தித் தாமரைக்கண்ணன்! என்னெஞ்சினூடே * புள்ளைக்கடாகின்றவாற்றைக்காணீர் என்சொல்லிச்சொல்லுகேன் ? அன்னைமீர்காள் ! * வெள்ளச்சுகமவன்வீற்றிருந்த வேதவொலியும்விழாவொலியும் * பிள்ளைக்குழாவிளையாட்டொலியும்அறாத் திருப்பேரையில்சேர்வன்நானே. (க)

ப:—*முதற்பாட்டில், அநுபாவ்யமான வாயுதங்களோடு மவயவங்களோடும் தன்னெஞ்சிலே பெரியதிருவடியை நடத்திப்ரகாசிக்கிற வாகாரத்தாலே யீடுபட்டு, அவனிருந்த தென்திருப்பேரையிலே செல்லுகையிலுண்டான துணிவைத்தாயாரைக்குறித்துச்சொல்லுகிறாள்.*

(இ-ள்.) *அன்னைமீர்காள் - வாசாமகோசரமான வகவாயில் விகாரமறியாதே, "பெற்றவர்களிறேநாம்" என்றே விலக்கத்தேடுகிறவர்களே, நானுசைப்பட்டபடியே, வெள்ளை - வெளுத்தநிறத்தையும், சுரி - சுரியையுமுடைத்தான, சங்கொடு - ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடே, ஆழி - திருவாழியையும், ஏந்தி- ஏந்தி, தாமரைக்கண்ணன் - நான்தளரும்படி யநங்யார்ஹையாக்கின தாமரைக்கண்ணையுடையவன், தானும் தன்விபூதியும் புகுந்தாலுமிட முடைத்தான, என் - என், நெஞ்சின் - நெஞ்சின், ஊடே - உள்ளே, புள்ளை - பெரியதிருவடியை, கடாகின்ற - தன்னபிநிவேஶாநுரூபமாகநடத்துகிற, ஆற்றை - ப்ரகாரத்தை, காணீர்-நீங்களறிகிறிலிகோள், இவ்வநுபவத்துக்கு, என்சொல்லி - என்னபாசுரமிட்டு, சொல்லுகேன் - நான்சொல்லுவேன், இவ்வளவில், வெள்ளச்சுகம் - பகவதநுபவத்தாலே யபரிமித ஸுகார்ணவத்தை யுடைத்தாய், அவன் - என்னெஞ்சுக்குள்ளே ப்ரகாசிக்கிறவன், வீற்று - தன்மேன்மை தோன்ற, இருந்த - இருக்குமிடமாய், வேதவொலியும் - அந்த ஆஸநஶோபையை யநுபவிக்கிறவர்களுடைய வேதகோஷமும், விழா - நிரந்தரோத்ஸவத்தாலுண்டான, ஒலியும் - வாத்யாதிகோஷமும், (க) "வாஹாஸு வி[illegible] ஊ நா: - பாலா அபிக்ரீடமாநா:" என்கிறபடியே அவனுடைய குணசேஷ்டிதாதிகளைப் போற்றிட்டுக்கொண்டு, பிள்ளைக்குழா - பிள்ளைகள் திரள் விளையாடு - விளையாடும், ஒலியும் - கோஷமும், அறா - அவிச்சிந்நமாய் நடக்கும், திருப்பேரையில் - திருப்பேரையிலே, நான் - நான், சேர்வன் - சேருவன்.* (க)

(க) ரா-அயோ-௬-௧௧.

ஆறு:—நிரதிஶயயௌஜ்ஜ்வல்ய பரிபூர்ணநிர்மல ஶாரத சந்த்ரமண்டலம் போலேயிருந்த ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், நிரதிஶய தீப்தி யுக்தஸூர்யமண்டலம்போலே யிருந்த திருவாழியையுமேந்தி (௧)*பொன்மலையின் மீமிசைக்கார்முகில்போலே பெரியதிருவடி திருத்தோளிலே யேறி யருளி, (௨) *இலங்கொளிசேரரவிந்தம்போன்ற நீண்ட கண்களையுடையனானவன் என்னெஞ்சினூடே சாரிகைத் திரிந்தருளுகிறபடி நீங்கள் காண்கிறிலிகோள். இன்னபடி யென்று எனக்குச் சொல்ல நிலமாகிறதில்லை. ஆதலாலவனை யொருக்ஷணம் காணாதொழியில் தரிக்கமாட்டேன்; வேதகோஷத்தாலும் மஹோத்ஸவ கோஷத்தாலும் * க்ரீடமாநரான பாலர்களுடைய பரமபுருஷகுணஸ்துதி கோஷத்தாலும் பரிபூர்ணமான திருப்பேரையிலே மத்ஸம்ஶ்லேஷஜநித நிரவதிக ஸுகமஹோததி நிமக்நனாய் பரிபூர்ணனாய்க்கொண்டிருக்கிற விருப்பைக்காணவேணும்; நீங்களென்னைக் கொண்டுபோய் விடீர்களாகில் நானேயாகிலும் போவேனென்று, தன்னை ப்ரதிபந்திக்கிற தாயாரையும் தோழிமாரையுங் குறித்துச் சொல்லுகிறாள். (௧)

ஈடு; அவ;—இப்பிராட்டி வாசாமகோசரமாம்படி தனக்கு வர்த்திக்கிறவ்யஸநத்தாலே, தென்திருப்பேரையிலே போகவேணுமென்று தனக்குப்பிறந்த தஶையை, வினவுகிறதிருத்தாய்மார்க்குச் சொல்லுகிறாள்.

(வெள்ளைச்சுரிசங்கொடாழியேந்தி) (௩) "தவளவொண்சங்கு சக்கரம்" என்றும், (௪) "கூராராழிவெண்சங்கு" என்றும், (௫) "சங்குசக்கரங்களென்று கைகூப்பும்" என்றும், கையுந்திருவாழியுமான வழகு கைவிடாதே யிவரை யநுவர்த்திக்கிறபடி. (௬) * முகில்வண்ணனிறே; அந்நிறத்துக்குப் பரபாகமானவெளுப்பையும் சுரியையுமுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்; அங்ஙனுமொருவிஶேஷணமிட்டுச் சொல்ல வேண்டாதபடியான வழகையுடைத்தான திருவாழியை யுமேந்தி.

(தாமரைக்கண்ணன்) (௭)"தாமரைக்கண்ணனன்றேதளரும்" என்றது பின்னாட்டுகிறபடி. திருமேனிக்கு திவ்யாயுதங்கள் ப்ரகா

(௧) ௯-௨-௬. (௨) தி-மொ-௨-௫-௮.
(௩) ௬-௫-௧. (௪) ௬-௯-௧.
(௫) ௭-௨-௧. (௬) ௭-௩-௧௦.
(௭) ௭-௨-௧.

ஶகமாயிருக்குமாப்போலே, ஆத்மகுணங்களுக்கு நோக்குப்ரகாஶக மாயிருக்கிறபடியும். அகவாயில் தண்ணளியெல்லாம் கண்வழியே யிறே தோற்றுவது. ப்ரதிகூலர்க்கு திவ்யாயுதங்களோடொக்கத் திருக்கண்களும்விரோதியாய்த்தோற்றுமாப்போலேயிறே அநுகூலர்க்குத் திருக்கண்களோபாதி திவ்யாயுதங்களும் அழகுக் குடலாய்த் தோற்றும்படி. திருக்கண்களோடே திவ்யாயுதங்களையும், திவ்யாயுதங்களோடே திருக்கண்களையும் சேர்த்தநுபவிப்பர்கள். ஆயுதங்களோடே திருக்கண்களைக்கூட்டுகிறது தோற்பித்த படிக்கு; (க) "ஜிதம் தே - ஜிதந்தே" என்னப்பண்ணுமிறே. கண்களோடு திவ்யாயுதங்களைக்கூட்டுகிறது அழகுக்கு.

இவ்விடத்தே நிலாத்துக்குறிபகவர்வார்த்தையை யருளிச்செய்வர் ஜீயர். கைக்கு ஆழ்வார்கள் ஆபரணமாயிருக்குமாப்போலேயாயிற்று முகத்துக்குத்திருக்கண்களாபரணமாயிருக்கும்படியும். (௨) "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழு - மருக்கனணி நிறமுங்கண்டேன் - செருக்கிளரும் - பொன்னாழிகண்டேன் புரிசங்கம்கைக்கண்டே - னென்னாழிவண்ணன்பாலின்று" என்று வடிவழகோபாதி திவ்யாயுதங்களுமாபரணமா யழகிதாயிறேயிருப்பது. ஆழ்வார்கள் தான் அவனைக்கைசெய்திருக்கையாலே ஆபரணகோடியாயிறே யிருப்பது. கைசெய்கையென்று - அலங்கரிக்கைக்குப்பேர்.

(என்னெஞ்சினூடே) தங்கள் நெஞ்சிலில்லாமையாலே "இது கூடாது" என்றிருப்பர்களிறே. (என்னெஞ்சினூடேபுள்ளைக்கடாகின்ற) இவர்க்கு * மயர்வறமதிநலமருளி (௩) "நெஞ்சமேநீணகர்" என்னும்படியிறே திருத்திற்று; ஒரு த்ரிபாத்விபூதியிலு மிடமுடைத்தாயிருக்கை; திருவடி திருத்தோளிலேயேறி அங்குள்ளார்க்கு உஜ்ஜீவநமாகச் சாரிகைவந்துகாட்டுமாப்போலே, இவர் நெஞ்சினுள்ளேவிஸ்ருங்கலமாக வழகுசெண்டேறுகிறபடி (நெஞ்சினூடே) 'அகவாயிலுள்ளது கண்ணுக்குத்தெரியாதோ" என்றிருக்கிறார்களாயிற்றிவர்கள்; (ச) "நிர்க்குண: பரமாத்மாஸௌ தேஹம் தே வ்யாப்ய திஷ்டதி - நிர்க்குண: பரமாத்மாஸௌ தேஹம் தேவ்யாப்ய

(க) ஜித-ஸ்தோ. (௨) ௩-திரு-அந்-க.

(௩) ௩-௮-௨. (ச) பார-ஆர.

இஷ்டட்டதி" என்னுமாப்போலே "நெஞ்சிலில்லையாகில் நானுமில்லை யென்றுநினைத்திருக்கலாயிற்றுக்கிடீர்" என்றிருக்கிறாளிவள்.

†(ஒருவாசத்தடத்தில்)ஹம்ஸசக்ரவாகங்கள்போலே ஆழ்வார்களும், காடு படவலர்ந்த தாமரைபோலே யிருக்கிற திவ்யாவயவங்களும், அத்தடாகத்தில் நீருநிலையும்போலே யிருக்கிற திருமேனியுமாய், அத்தைக்கினிய வொருமேருவஹித்தாப்போலே யிருக்கிற பெரிய திருவடியோடேகூட விவர் திருவுள்ளத்தே யுலாவுகிறபடி. இப்படியேயிறே அநுகூலரோடு பரிமாறும்படி.

நஞ்ஜீயர் கோயிலுக்கெழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக் கண்டு "ஈஶ்வரனுக்கு ஸ்வரூபவ்யாப்தியேயோ, விக்ரஹவ்யாப்தியுமுண்டோ" என்றுகேட்க, "பாஷ்யகாரர் ‡ தோற்றவருளிச்செய்து கொண்டுபோந்தது ஸ்வரூபவ்யாப்தியாயிருக்கும்; ஆகிலும் எம்பாரொருநாள் 'உபாஸகாநுக்ரஹார்த்தமாக வாஶ்ரிதருடைய நெஞ்சிலேவிக்ரஹத்தோடே வ்யாபித்திருக்கும்' என்றருளிச்செய்யக்கேட்டேன்" என்று பணித்தான்.

†((க) "குஹாயாம்-குஹாயாம்" (உ) "ஹ்ருத்வரேஷ்டம் புராணம் - கஹ்வரேஷ்ட்டம்புராணம்", (ந.) 'அரவத்தமளியினோடு மழகிய பாற்கடலோடுமரவிந்தப் பாவையுந்தானு மகம்படி வந்து புகுந்து' என்றும், (ச) "யேஷாமிந்தீவரஶ்யாமோ ஹ்ருதயே ஸுப்ரதிஷ்டித: - யேஷாமிந்தீவரஶ்யாமோ ஹ்ருதயேஸுப்ரதிஷ்டித:" என்றும், "என்னெஞ்சினூடே புள்ளைக்கடாகின்ற" என்றுஞ் சொல்லுகிறபடியே. ஶுபாஶ்ரயப்ரகரணங்களிலும் (உ) "தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் - தஸ்யைஷ ஆத்மாவிவ்ருணுதேதநூம்ஸ்வாம்" என்கிறபடியே அவ்வடிவேயாயிற்று த்யேயமாகச் சொல்லுகிறது; பின்பு (ரு) "ஏஷ ஸர்வஸ்வபூதஸ்து - ஏஷஸர்வஸ்வபூதஸ்து" என்றுகொடுப்பதுமவ்வடிவேயாயிற்று. புறம்புள்ளார் சொன்னபடி சொல்லுகிறார்கள்; நம்மாழ்வார்கள் போனவழியிதுக்கு மேற்படவில்லை. "இதுக்கு முன்னேயொன்றுண்டு" என்று சொல்லுகிறவர்கள் - ஸ்வரூபஸம்பாவஞ் சொல்லுகிறார்களித்தனை, விக்ரஹமில்லையென்றன்று.

(க) தை-ஆ-க. (உ) கட-க-உ.
(ந) பெரியாழ்-தி-மொ-ரு-உ-கம. (ச) ஸஹஸ்ர-
(ரு) ரா-யு-க-கச.

† குண்டலிதத்வயம் க்வாசித்கம். ‡ (பா)தோற்றச்செய்து என்று பாடாந்தரம்.

(புள்ளைக்கடாகின்ற) "அகவாயில் நின்று சுழிக்குமத்தனையோ" என்று அவன் த்வரித்து வடிம்பிட்டுத்தாக்க "ஓங்காண், நீயறிந்தாயோ" என்று ப்ரேரித்து மீளாநிற்கும்; (௧)"யீ‌ஜ்த்‌: - தீமத:" என்கிறபடியே பக்ஷபாதத்தோடே சேர்க்கையிலேயிறே அவனுக்கும்பணி. (கடாகின்ற) பூதமாய் விஸ்மரிக்கிறீகோளென்று; பவிஷ்யமா யுபதேசிக்கிறதன்று, வர்த்தமாநத்துக்குஉபதேசம் வேணுமோ. (காணீர்) காண்கிறிலீர். வர்த்தமாநமும் கார்யகரமின்றிக்கே யொழிகிறது நிரோதிக்கிற நிர்ப்பந்தத்தாலேயிறே. உங்களுக்கு (௧) (வ-ப)ரகோஷம்கேட்கிறதில்லையோ. ப்ரஸித்தமான வர்த்தமுபதேசிக்கவேண்டுவதே. (காணீர்) உங்களுக்குக் கண்ணும் செவியுமின்றிக்கே யிருந்தோ நிஷேதிக்கிறது. என்னைப்போலே. (௨) *உட்கண்ணாலே காணிகோள்.

நாங்கள் கண்டிலோம். கண்டநீசொல்லிக்காணென்கிறார்கள். (என்சொல்லிச்சொல்லுகேன்) எனக்குச்சொல்லலாவதில்லை, என்ன பாசுரமிட்டு எத்தைச்சொல்லுவது. உங்கள் கண்ணுக்கு விஷயமாகாதாப்போலே யென்வாக்குக்கும் விஷயமாகிறதில்லை; இவர்க்கு நெஞ்சுநிறைந்தது வாய்கொள்ளுகிறதில்லைகாணும். (என்சொல்லிச் சொல்லுகேன்) நான்பலஹாநியாலே சொல்லமாட்டேன், விஷயமியத்தாராஹித்யத்தாலே சொல்லிமுடிக்கப்போகாது, உங்களுக்கு ப்ரதிபத்திபண்ணுகைக்கு பரிகரமில்லாமையாலே சொல்லத்தான் வேண்டா. (அன்னைமீர்காள்) ஜ்ஞாதாம்ஸங்கொண்டு (௩)*பொயயஜ: வாரஸ்ரா - போதயந்த: பரஸ்பரம் பண்ணலாயிற்றிறே ஸஜாதீயைகளானிகோளாகில். (என்சொல்லிச் சொல்லுகேனன்னைமீர்காள்) எனக்கோடுகிற வ்யஸநத்துக்குப் பாசுரமில்லை, அவஸ்த்தாஜ்ஞாநமின்றிக்கே பழமைகொண்டாடுகிறிகோளித்தனையிறே. நிஷேதிக்கைக் கநுவர்த்தநீயைகளாமத்தனையோ வேண்டுவது.

எங்களுக்குக் காணவும் கேட்கவும் கண்ணும்செவியுமில்லையாகில், நீதான்செய்யப்பார்த்ததென்னென்; ஹிதஞ் சொல்லி மீட்க நினைப்பாரில்லாத வூரிலே போய்ப்புகு மித்தனையென்கிறாள்; பிரிந்துபோனாரை நினைக்கவொட்டாத தேசமிறே. (௪) "நோபஜ

(௧) ரா-ஸு-௧௬-௪. (௨) பெ-௮-௨௮.
(௩) கீதை-௧௦-௯ (௪) சாந்தோ-௮-௧௨.

நஸூநு - நோபஜநம் ஸ்மரந்" என்கிறபடியே. (வெள்ளச்சுகமவன்) ஸுகவெள்ளத்தையுடையவன். விஶ்லேஷதசையிலும் ஸம்ஶ்லேஷ ஜநிதமான நிரதிசயஸுகம் மாறாதவன்; பிரிவிலுமறையாறுபடாதபடி காணும் கலவியிலவன் தேக்கின ஸுகாதிஶயமிருந்தபடி. (வெள்ளை) என்று பாடமானபோது மறுவற்றஸுகமென்கை. துஃகாமிஶ்ரஸுகமென்றபடி. (அவன்வீற்றிருந்த - தென்திருப்பேரையில்) என்றந்வயம். (க) *இட்டகாலிட்டகையளாயிருக்கிற விருப்புக்கெதிர்த்தட்டாயிருக்கிற விருப்பிறே யது. இத்தலையைத் துடிக்கவிட்டுத்தன்னைஸ்வர்யந்தோற்ற ஸுகோத்தரமாக விருக்கிறபடி. (அவன்வீற்றிருந்த) இத்தலையைத் தோற்பித்த தன்வெற்றியெல்லாமவ்விருப்பிலே தோற்றும்படி யிருந்த அவன் மெய்மறந்து அப்படியிருந்தால் நாமும் மெய்மறந்திருக்கவோ. பரிபூர்ணனாய் அவன் செருக்காலே யிருந்தால், குறைவாளராய் நோவுபடுகிற நாமுமிருக்கவோ. அவன் முறைதப்பநின்றால் நாமும் முறைதப்புமித்தனையன்றோ. பிரிந்தால் முறைபார்த்திருக்கலாம் விஷயத்துடனே கலந்தோமாகிலன்றோ நாமாறியிருக்கலாவது; முறையை யழித்தாகிலும் மடலெடுத்துக்கொண்டு போமித்தனையன்றோ. (உ) " நமக்கேநலமாதலில் " என்னக்கடவதிறே.

(வேதவொலியும்) அவன்நெஞ்சொழிந்து பழம்புணர்ப்புக்கேளாநின்றான்காணும். அதாவது - பண்டுதான்வென்ற வெற்றிமாலைகள் கேட்கையிறே. அதாவது - (ந) "ஜிதந்தெ புண்டரீகாக்ஷ - ஜிதந்தேபுண்டரீகாக்ஷ" என்கிற வெற்றிமாலைகளிறே. (விழாவொலியும்) இவளைத் தோற்பித்ததுக்கு நெய்யாடல் போற்றுகிறபடி. (அற) தீர்த்தம் ப்ரஸாதித்த பிற்றைநாளே திருமுளைச்சாத்தா நிற்குமத்தனை. ஸ்யமந்தகமணி கைப்பட்டபின்பு அக்ரூரனடுத்தடுத்து அஶ்வமேதம்பண்ணினாப்போலே, அவர்க்கு மடுத்தடுத்து உத்ஸவமாய்ச் செல்லுகிறவித்தனை; ஸ்த்ரீரத்நமிறே இவள். இவளிருக்கிறவிடமிறே மங்களகோஷங்கள் மாறிக்கிடக்கிறது.

(பிள்ளைக்குழா விளையாட்டொலியுமறா) பருவம் நிரம்பியிருக்கச்செய்தே நிஷேதிப்பாரிருக்கிற வூரைவிட்டு, பருவம் நிரம்புவத

(க) எ-உ-ச. (உ) தி-மொ-க-ந-க.
(ந) ஜிதந்தை-ஸ்தோ.

ற்குமுன்னே பகவதநுபவமே யாத்ரையாய்ச்செல்லுவாரிருந்தவூரில் போய்ப் புகுமித்தனையன்கிறாள். அவ்வூரில் பருவம்நிரம்பாத பிள்ளைகளுமகப்பட மகரநெடுங்குழைக்காதனுடைய வடிவழகிலே தோற்று, வாய்வெருவாநிற்பர்கள். (க) " [illegible] - பாலா அபி க்ரீடமாநாக்ருஹத்வாரேஷு ஸங்கஶ: । ராமாபிஷ்டவஸம்யுக்தாஶ்சக்ருரேவமித: கதா: " என்னும்படியே.

(உ) " [illegible] - ராமோராமோராம இதி " " சோறு சோறு சோறு " என்பாரைப்போலே. [[illegible] - ப்ரஜாநாமபவந்கதா:] ஜிதர்மாக்களுக்கெல்லாம் பாசுரமிதுவே. [[illegible] - ராமபூதம் ஜகதபூத்] நாடடங்க ராமாத்வைதமானபடி. நித்யவிபூதியிலே பரிமாறக்கடவது இங்கே பரிமாறுகைக்கு ஹேதுவென்னென்னில் [[illegible] - ராமேராஜ்யம் ப்ரஶாஸதி] நாடடங்கலும் தந்தாமுடைய கர்மபலம்புஜிக்கப் பெற்றார்களில்லை, ராமபாக்யமே யநுபவித்துவிட்டது. (ங) [[illegible] - நசாக்நிஜம்பயம் இஞ்சித்] அக்நியும் சோறுவேவிக்கவேண்டு மௌஷ்ண்யத்துக்கு மேற்படவுடைத்தாவதில்லை. [[illegible] - நாப்ஸுமஜ்ஜந்திஜந்தவ:] கொண்டாழக்கடவ ஜலந்தானே கொண்டுமிதக்கப் புக்கது ராமசரத்துக்கஞ்சி. பண்டேகைகண்டிருப்பதொன்றே ஜலந்தான். (ச) * வேலைவேவ வில்வளைத்தவனிறே.

(திருப்பேரையிற்சேர்வன்நானே) ஜயித்தாரிருந்த விடத்தே தோற்றார்சென்று விழுமத்தனையிறே. * தாமரைக்கண்ணனென்னெஞ்சினூடே யிறே, ஆகையாலே "ஜிதந்தே - ஜிதந்தே" என்று சென்று விழுமத்தனையிறே. (க)

இரண்டாம்பாட்டு.

நாணக்கருங்குழல்தோழிமீர்காள்! அன்னையர்காள்! அயற்சேரியீர்காள்! * நான்இத்தனிநெஞ்சம்காக்கமாட்டேன் என்வசமன்றிது, இராப்பகல்போய்* தேன்மொய்த்தபூம்பொழில்தண்பணைசூழ் தென்திருப்பேரையில்வீற்றிருந்த * வானப்பிரான்மணிவண்ணன் கண்ணன் செங்கனிவாயின் திறத்ததுவே. (உ)

(க) ரா-அயோ-கூ-சகூ. (உ) ரா-யு.

(ங) ரா-பா க-உங. (ச) தி-ச, வி-ஙக

ப:—அநந்தரம், நிரவதிகமான பரத்வ ஸௌலப்யங்களையுடையவன்பக்கலிலே ஸக்தமாய்ப்போன வென்னெஞ்சைத் தகையமாட்டுகிறிலே னென்று தோழிமாரையும் தாய்மாரையு மயலாரையுங்குறித்துச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) நானம் - பரிமளோத்தரமான கந்தத்ரவ்யத்தாலே வாஸிதமாய், கரு - கறுத்த, குழல் - குழலையுடையரான, தோழிமீர்காள் - தோழிமீர்காள், அன்னையர்காள் - அவர்களோடன்றேடுவாசியற நியந்த்ரிகளான வன்னைமீர்காள்! அயற்சேரியீர்காள் - செய்திவினவவந்த அயற்சேரியீர்காள்! நான் - அதிப்ரவணையான நான், தனி - என்னிலுமதிசயித ப்ராவண்யத்தையுடைத்தாய் ஸ்வதந்த்ரமான, இ - இந்த, நெஞ்சம் - நெஞ்சை, காக்கமாட்டேன் - என்னைவிட்டுப்போகாமல் தகையமாட்டேன், என் - எனக்கு, வசம் - விதேயம், அன்று - அல்ல, இது - இது, இராப்பகல் - இரவோடு பகலோடு வாசியற, போய் - என்னைவிட்டுப்போய், தேன் - வண்டுகள், மொய்த்த - மொய்த்த, பூம்பொழில் - பூம்பொழிலையுடைத்தாய், தண் - குளிர்ந்த, பணை - நீர்நிலங்கள், சூழ் - சூழ்ந்திருக்கிற, தென் - கட்டளைப்பட்ட, திருப்பேரையில் - திருப்பேரையிலே, வீற்று - தன்பெருமைதோன்றும்படி, இருந்த - இருக்கிற, வானம் - பரமபதநிலயனை, பிரான் - மேன்மையுடையனாய், மணி - உஜ்ஜ்வலமான மாணிக்கம்போலேயிருக்கிற, வண்ணன் - வடிவையுடையனாய், கண்ணன் - ஆஶ்ரிதபவ்யனான க்ருஷ்ணனுடைய, செம் - சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாயின் - அதரஶோபையிலே, இறந்தது - ஸக்தமாயிற்று;

நானம் - மயிர்க்கிடும் கந்தத்ரவ்யம், புழுகாகவுமாம். (உ)

ஆறு ;—(நானக்கருங்குழல்) அதி பரிமள நீலாலகாலங்க்ருதவதநாரவிந்தங்களை யுடைய தோழிமாரு மன்னையரும் மற்றுமுள்ள பந்துஜநங்களும் "நீ தனியேபோகையீடல்ல" என்று சொல்ல, அவர்களைக்குறித்து; நானென்னுடைய ஸ்வதந்த்ரமான நெஞ்சைக் காக்கமாட்டேன், எனக்கு விதேயமன்று, ஆஶ்ரயஸௌலபத்தைக் காகத் திருநாட்டில் நின்றும் ஸ்ரீவஸுதேவர் திருமகனாய்வந்து பிறந்தருளி, அக்காலத்தில் பெறுதாருடைய விழவுதிரும்படி, தேன் மொய்த்த பூம்பொழில் தண்பணைசூழ் தென்திருப்பேரையில் பரிபூர்ணனா யெழுந்தருளி யிருந்தவனுடைய, மந்தஸ்மிதலேஷத்தாலே புதுக்கணித்த திருப்பவளத்திலே என்னெஞ்சு இராப்பகல் போய்ப்படிந்து கிடக்கும், இனிநானென்னெஞ்சை போகாதிருக்கும்படி யென்கிறாள். (உ)

ஈடு ; அவ ;— இரண்டாம்பாட்டு. தாய்மார் முகம்பார்த்துச் சொன்னாளாயிற்ற - கீழ்ப்பாட்டில் நின்றது ; "இவளிவ்வளவில் மீளுமவளன்றிக்கே யிருந்தாள்" என்றுதாய்மாரோடு தோழிமாரோடு அயற்சேரி யுள்ளாரோடு வாசியறவந்து திரண்டு ஹிதஞ்சொல்லப்புக்கார்கள்: உங்கள் ஹிதவசநங்கேளாதபடி நிரவதிகமான பாத்வெளலப்யங்களையுடையவன் பக்கலிலே ஸக்தமாய்ப்போன வென்னெஞ்சைத்தகைய மாட்டுகிறிலேன், என்னெஞ்சைக்கடல் கொண்டது காணுங்கோளென்கிறாள்.

(நானக்கருங்குழல் தோழிமீர்காள்) நானம்-நறுநாற்றம். அவர்களுக் கொருபழி சொல்லுமாப்போலே சொல்லுகிறாள், அவர்கள் தலையான நறுநாற்றத்துடனே வந்து நிற்கையாலே. மயிர் படமாந்தும்படியிறேயிவள் படி. உங்கள் ஸந்நிதியில்லையாகில் நானிங்கேயிரேனோ. (க) * மைவண்ண நறுங்குஞ்சிக்கு ஸ்மாரகமாயிராநின்றதே இவர்கள் குழல். (உ) "வயஸ்யோஸி ஹ்ருத்யோமே ஹ்யேகம் துঃக்கம் ஸுகஞ்சநௌ" என்று இவளுடைய ஸுகதுঃக்கங்களே தங்களுக்கும் ஸுகதுঃகமாம்படியிருக்கையிறே தோழிமாராகையாவது ; இவள் மயிர்முடி பேணாதே, பரிமளங்காணில் முடியும்படியாயிருக்க, இவர்கள் குழல்பேணிப் பரிமளங்கொண்டு காரியங்கொள்ளப் போருமோவென்னில் ; கலவியில் இவளோடு அவன் நெருங்க நெருங்கச்சாத்திக்கழித்தபடியே ஸர்வஸ்வதாநம் பண்ணுவது இவர்களுக்கே; அப்போதவன்பண்ணின ப்ரஸாதாதிஶயத்தாலே, அது சருகானாலும் அவர்கள் மாறாதே வைத்துக்கொண்டிருப்பார்களே, அதிவளுக்கு ஸ்மாரகமாய் நலிகிறபடி, அன்றிக்கே, இவர்கள்தான் பரிமளங்கொண்டு காரியங்கொள்ளவும் வல்லவர்கள், அதாவது - தாங்கள் தளர்ந்தகாட்டில் இவள் மிகவும் தளருமென்றொப்பித்துக் கொண்டிருப்பார்கள்; தந்தாமுடையபொறுமையும் பாரார்களாயிற்று இவளை யுஜ்ஜீவிப்பிக்கைக்காக. அகாரவாச்யனானவனும் ஜீவித்து மகாரவாச்யனானவிவனும் ஜீவித்து அநாதிகாலம் போரச்செய்தேயுமுஜ்ஜீவிக்கப்பெறாதே நடுவேகிடந்துபோயிற்றே, இனி (வ) கடக்ருத்யமிறே யுஜ்ஜீவிப்பிக்கை, அப்படியேயிவளை யிசைவித்து உஜ்ஜீவிப்பிக்கவேணுமே. தந்தாம்க்லேசங்கள் பாரார்களிறே 'ஸோஷிக்க

(க) தி-நெ-உக (உ) ரா-கி-ரு-கஅ.

திஶயம்வேணும்'' என்றிருப்பார்; பெருமாளிலும் க்லேஶம் மிஞ்சி யிருக்கச்செய்தே பெருமாளுடைய ரக்ஷணத்துக்காக இளையபெருமாள் தம்மைப்பேணிக்கொண்டு தரித்திருக்குமாப்போலே. பரமபோகிகளிறே யிளையபெருமாள் தாம். (௧) [ஸௌமித்ரே ஶ்ருணு வந்யாநாம் - ஸௌமித்ரே பஶ்யபம்பாயா:] அந்நாத்தைபோக்யதை நெஞ்சிலே படச்செய்தேயும், பெருமாளுக்கு அந்யபரதை விளக்கைக்காக முகத்தை மாறவைத்துக்கொண்டுநின்றார்; பிள்ளாய், பாராய இதிருந்தபடி யென்கிறார்.

(ஞானக்கருங்குழல்) ஒரு தமிழன் "ஞானமென்று-குழலுக்கு விசேஷணமாகையாலே, நாவிபோன்றகுழல்'' என்றான். அத்தால் நினைக்கிறதும் - பரிமளத்தை. (தோழிமீர்காள்) ப்ரியஞ்சொல்லுவாரும் ஹிதஞ்சொல்லுவார் கோடியிலே புகுவதே. (தோழிமீர்காளன்னையர்காளயற்சேரியீர்காள்) தானறிந்து தோழிமார்க்குச்சொல்லாதே யிருப்பதோரவஸ்தையும், தோழிமாரும் தானுமறிந்து தாயறியாதே யிருப்பதோரவஸ்தையும், தானும் தோழியும் தாயுமறிந்து பிறரறியாதிருப்பதோ ரவஸ்தையுமா யாயிற்றிருப்பது; அந்நிலைகுலைந்து எல்லாரையு மொக்க ஸம்போதிக்கும்படி யாயிற்று ஜகத்ப்ரஸித்தமானபடி. பிறர்க்குச் சொல்ல வேண்டுவ தில்லையிறே; ஆயிருக்க, ப்ரதிகூலர்க்குங்கூட தயைபண்ணவேண்டும்படி காணுமிவளுடையவார்த்தி. (௨)[ஸாதுராவண [illegible] - மாம் ஸமாநய து:கிதாம்] என்று என்னை நீ பெருமாளுடனே கூட்டவல்லையே யென்றாளிறே ராவணனை. (௩) "[illegible] - ததாகுரு தயாம்மயி'' என்றும், (௪) "வாவாயஸ்ஸ்வாநுஹி - வாசாதர்ம மவாப்நுஹி'' என்றுமொரு திருவடிபோல்வார்க்குச் சொல்லக்கூடவவார்த்தையையிறே பிரித்தவனைப் பார்த்துச்சொல்லிற்று. (தோழிமீர்காளித்யாதி) எங்ஙனே நானுகந்தது உகந்திகோள். எங்ஙனே யெனக்கு ப்ரியஹிதம்பார்த்திகோள், எங்ஙனே யுதாஸீநைகளாயிருந்திகோள்.

எங்கள்பக்கல் குறையுண்டோ, நீமர்யாதை தப்பினவாறே நாங்களும் முறைதப்பினோ மித்தனையன்றோ வென்ன (ஞானித்தனி

(௧) ரா-கி-௧-௯௰.
(௨) ரா-ஸு-௨௧-௧௮.
(௩) ரா-ஸு-௪௰-௩.
(௪) ரா-ஸு-௩௯-௧௰.

நெஞ்சங்காக்கமாட்டேன்) உங்களுக்குமிங்ஙனே யேதேனு மிருப்ப தொரு ஹேதுவுண்டோ முறைதப்புகைக்கு. (நான்)நீங்களுமேதே னும் நெஞ்சிழந்திகோளோ. உங்களளவல்லவென்றபடி. (இத்தனி நெஞ்சம்) உங்களில் நான் வ்யாவ்ருத்தை யானாப்போலேயாயிற்று என்னிலுமென்னெஞ்சு வ்யாவ்ருத்தமானபடி. (தனிநெஞ்சம்) சொ ல்விற்றுக்கேளாத ஸ்வதந்த்ரமான நெஞ்சம். (க) "தத்தவஸ்யவஶ ஸம்ஶவெக - தத்தஸ்ய ஶத்ருஸம்பவேத்" என்றிருப்பார் நெஞ் சமுமிதுக்கொப்பல்ல. (காக்கமாட்டேன்) (பாலகஸாமர்த்யம் வேணுமேகாக்க.) (உ) "முந்துறநெஞ்சே - இயற்றுவாயெம்மொடு நீகூடி" என்றிருக்கு மித்தனையொழிய, இவளால் தடுத்துவைக்கப் போகாதே. (௩) "ஶாரவஃகிம்கரிஷ்யதி - குரவஃகிம்கரிஷ்யந்தி" என்று ஒருவரையும்பாராதே போகாநின்றது, ஒன்று கேட்டுமீளு மளவல்ல; மீட்கலாமளவும் காற்காட்டிப்பார்த்து, போகாமையாலே கைவாங்கினமை தோற்றுகிறதுகாணும்-மாட்டேனென்கிற வுறைப் பாலே. ஸம்ஸாரிகள் ஶப்தாதிவிஷயங்களினின்றும் மீளமாட்டா தாப்போலேயிறே இவர் பகவத்விஷயத்தினின்றும் மீளமாட்டா தபடி.

"மாட்டேன்" என்று சொல்லுமிதுவார்த்தையோ, எல்லா வளவிலும் தந்தாம் நெஞ்சு தந்தாமுக்கு விதேயமாகவேண்டாவோ வென்னில் (என்வசமன்றிது) என் செய்வோம், தாய்வேறு கன்று வேறாக்கும் விஷயமானால். கைகேயிசொற்கேட்டு ஸ்ரீபரதாழ்வான் ராஜ்யம்பண்ணுமன்றாயிற்று இவளும் இத்தாயார் வார்த்தைகேட்டு மீளுவது. இப்போது நானுங்கள் மகளன்றே; மகளென்னுபவ்ய ராவரோ; என்னைப்போலுமன்றே யென்னெஞ்சு. எனக்குத்தா னென்றிருக்கும் நிலை குலைந்தது, தன் வழியே நாலெழுகும்படி யாயிற்று.

தந்தாமுடைய நெஞ்சு அபவ்யமானாலும், பவ்யமாயிருப்பதொ ருபோது பார்த்து ஹிதஞ்சொல்லவேண்டாவோ வென்ன (இராப் பகல்போய்) ஸ்ருஷ்டமானகாலத்திலே யிதுக்கு ஹிதம் சொல்லலா வதொருபோதுகாண்கிறிலேன், ஒருபோது பகவத்விஷயத்திலும்

(க) ரா-ஸு ௩-௯ ௧0. (உ) பெரியதிருவ-௧.
(௩) வி-பு-ரு-௧அ-உஉ.

கைவைத்து, ஒருபோது ஸம்ஸாரயாத்ரையிலும் கைவைக்கு மவ வல்லவிறே யிவளுடைய ப்ராவண்யம். இங்கே யிருப்பதொருபோதுண்டாகிலிறே ஒன்று சொல்லிமீட்கலாவது.

(தேன்மொய்த்த வித்யாதி) இது மீட்கலாம் விஷயத்திலேயோ வகப்பட்டது. அவ்வூரில் **போக்யதையிலே படிந்தாரையும்** மீட்கப்போமோ. தேனென்று - வண்டு. (பூம்பொழிலித்யாதி) பூத்த பொழிலையும் குளிர்ந்த நீர்நிலங்களையுமுடைத்தான தென்திருப்பேரையில். (வீற்றிருந்த) பரமபதத்தி லிருப்படங்கலும் தோற்றும்படி யிருக்கை. அவ்விடம்போலுமன்றிறே யிவ்விடம்; ஒருவர் கூறையெழுவருடுக்கிறவிடமிறே. அவ்விடத்தோடொக்க இவ்விடத்தையும் திருத்திக்கொண்டிருக்கிற விடமிறே (வானப்பிரான்) இத்தால் கண்ணழிவற்றமேன்மையைச் சொல்லுகிறது.

(தென்திருப்பேரையில் வீற்றிருந்தவானப்பிரான்) ஸ்ரீவைகுண்டத்திலிருப்பைவிட்டு நமக்காகவிங்கேயிருக்கிற வுபகாரகன். (மணிவண்ணன்) மேன்மையில்லையாகிலும் விடவொண்ணாதவடிவில்பசையிருக்கிறபடி. (கண்ணன்) அங்குள்ளார்க்குப் படிவிடுமுடம்பை இங்குள்ளார்க்கு வரையாதே கொடுத்துக்கொண்டிருக்கிறவன். (வானப்பிரானித்யாதி) மேன்மை யளவிடவோ, வடிவழகளவிடவோ, நீர்மையளவிடவோ. (செங்கனிவாயின் திறத்ததுவே) கிண்ணகத்திலொரு சுழியிலே யகப்படுவாரைப்போலே, வாய்க்கரையிலே யகப்பட்டது. ஆசைப்பட்டவிஷயத்தைக் கரைகண்டதாகிலன்றோ மீளுவது. சிவந்துகனிந்த திருப்பவளத்திலிடையாட்டத்தது. இது மீள நினைக்கிலன்றோ வுங்கள்வார்த்தை கேட்கைக்கு அவகாசமுள்ளது. (௨)

மூன்றாம்பாட்டு.

செங்கனிவாயின்திறத்ததாயும் செஞ்சுடர்நீள்முடித்தாழ்ந்ததாயும் * சங்கொடுசக்கரம்கண்டுகந்தும் தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும் * திங்களும்நாளும்விழாவறாத தென்திருப்பேரையில் வீற்றிருந்த * நங்கள்பிரானுக்குஎன்நெஞ்சம்தோழீ ! நாணும்நிறையும்இழந்ததுவே. (௩)

ப;—அநந்தரம், அவனுடைய வயவாதிரோபையிலே யகப்பட்ட நெஞ்சு, நாணும்நிறையு மிழந்ததென்று அந்தரங்கையான தோழிக்குச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) செம் - சிவந்த, கனி - கனிபோலே போக்யமாய், இன் - ஸாந்த்வவாதாதிகளாலே ஆகர்ஷகமான, வாய் - திருப்பவளத்திலே, திறத்ததாயும் - அதிசிவிஷ்டமாயும், ஆதிராஜ்யஸூசகமாய், செம் - சிவந்த, சுடர் - ஒளியையுடைத்தாய், நீள் - உத்துங்கமான, முடி - திருவபிஷேகத்திலே, தாழ்ந்ததாயும் - அம்மேன்மைக்கீடாகத்தாழ்ந்து வர்த்திப்பதாயும், சங்கொடுசக்கரம்- அந்தபாத்வத்தை நிர்வஹித்துக்கொடுக்கும் திவ்யாயுதங்களை, கண்டு - கண்டு, உகந்தும் - ஹர்ஷயுக்தமாயும், தாமரை - அதிசயிதபோக்யமான தாமரைபோன்ற, கண்களுக்கு - திருக்கண்களுக்கு, அற்று - புறம்புதொற்றற்று, தீர்ந்தும் - அநந்யார்ஹமாயுமிருக்கிற, என் - என், நெஞ்சம் - நெஞ்சானது, தோழீ - முன்பு ஸம்ஶ்லேஷிக்கைக்கு ஸஹகாரியான தோழீ, திங்களும் - மாஸங்கள்தோறும், நாளும் - திவஸங்கள்தோறும், விழா - உத்ஸவங்கள், அறாத - இடைவிடாமல்செல்லுகிற, தென் - தென், திருப்பேரையில் - திருப்பேரையிலே, வீற்று - தன்வாசிதோன்ற, இருந்த - எழுந்தருளியிருந்தவனாய், நங்கள் - நம்போல்வார்க்கு முகந்தருகிற, பிரானுக்கு - அர்ச்சாவதாரஸௌலபஞனவுபகாரகனுக்கு, நாணும் - ஸ்வாபாவிகமான லஜ்ஜையையும், நிறையும் - அடக்கத்தையும், இழந்தது - இழந்தது. (ந)

ஆறு ;—(செங்கனிவாயின்) உன்னுடையலஜ்ஜைக்கும் நிறைவுக்கும் போருமோ தனியேபோகையென்று தோழிசொல்ல; திருப்பவளத்தழகிலே போய்ப்படிந்தும், திருப்பவளத்திலொளிகொழுந்து விட்டு பேஞேக்கிவளர்ந்ததோவென்னும்படி நீண்டிருந்த திருவபிஷேகத்தி லழகிலே தாழ்ந்தும், திருவாழியும் திருச்சங்குமேந்தினவழகைக் கண்டுகந்தும், மற்றோரழகுக்கு உரித்தல்லாதபடி தாமரைக்கண்களுக் கற்றுத்தீர்ந்தும், என்னுடைய நெஞ்சானது, திங்களும் நாளும் விழாவறாத தென்திருப்பேரையிலே வீற்றிருந்த நங்கள்பிரானுக்கு நாணும் நிறைவு மிழந்தது ; இனி யெனக்குநாணும் நிறைவுமுண்டோவென்று தோழியை நோக்கிச்சொல்லுகிறாள்.(ந)

ஈடு ; அவ ; — மூன்றாம்பாட்டு. சேர்க்குமவளொருத்தியுமே யாக அல்லாதபங்களமடங்கலும் " நமக்குநிலமன்று " என்றுகை

வாங்கிற்று; தோழியானவள் " இது நமக்குப்போராதுகாண், நெஞ்சையொருங்கப் பிடித்து தரித்திருக்க வேண்டாவோ " என்ன; அந்நெஞ்சுதானினிச்செய்வதென், அவயவாதிசோபைகளிலே யகப்பட்டு அதுவும் தனக்குள்ள தடங்கலு மிழந்ததுகாணென்கிறாள்.

செங்கனிவாயின் திறத்ததாயும், செஞ்சுடர் நீண்முடித்தாழ்ந்ததாயும், சங்கொடுசக்கரங் கண்டுகந்தும், தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும்- நெஞ்சு-நாணு நிறையுமிழந்ததுகா ணென்கிறாள். ஸௌபரியென்பானொருத்தன் ஒரு ஸங்கற்பமடியாக ஐம்பது வடிவுகொண்டானிறே; அவ்வளவல்லவிறே யிவள் கலந்தவிஷயம் பண்ணவல்லது. அவன் வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாப்போலே யாயிற்று இதுவுமவயவங்கள்தோறும் தனித்தனியகப்படவல்லபடி. (க) "ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி - ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி" என்கிறபடியே யநுபவியாநின்றால் பிறக்கும் நாநாபாவம், பிரிவிலேநெஞ்சுக்குண்டாகாநின்றது.

(செங்கனிவாயின்திறத்ததாயும்) "பிரிந்துகடக்கவிருக்கிலேன், உன் கண்வட்டத்திலே கிடக்கிலேன், இது உன்சரக்கன்றோ," என்றுசொல்ல வுபக்ரமித்து, தழுதழுத்துவருகிற திருவதரத்திலே யகப்பட்டபடி. அதிலு மதரத்தில் பழுப்புக்குள்ளிழியமாட்டுகிறதில்லை. (வாயின்திறத்ததாயும்) அதுதானொரு மஹாபாரதத்துக்குப் போருமாகாதே. (செஞ்சுடரித்யாதி) பிரிவை ப்ரஸங்கித்துப் போகின்றபோது, ஆதிராஜ்யஸூசகமாய் " உபயவிபூதிநாதன் " என்று தோற்றும்படி யிருக்கிற திருவபிஷேகத்தைக்கண்டு தறைப்பட்டுக்காலைப்பிடித்தது.

(சங்கொடித்யாதி) பிரிந்தால் விரோதியைப்போக்குகைக்குப்பரிகரமாய், வைத்தகண்மாற வொண்ணாதவழகையுடைய வாழ்வார்களைக் கண்டுகந்தது, (தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும்) " தவாஸ்மி - தவாஸ்மி " என்று சொல்லப்புக்கு மாட்டாதொழிந்தால், குறையும் தலைக்கட்டின திருக்கண்களுக்காயிற்று அநந்யார்ஹமாக வெழுதிக்கொடுத்தது. பிரிகிறபோது நோக்கினநோக்கிலே, பிறர்க்காகாதபடி யுஜ்ஜீவிக்கப்பண்ணினான். அம்ருதமதநத்தில்

(க) சாந்தோ எ-உ௬.

தானெட்டுவடிவு கொண்டாப்போலே காணும் இதுவும் விஷயாதீநமா கப்பலவடிவு கொள்ளுகிறபடி. அவனுடைய வைஶ்வர்யமடைய இதுக்குண்டாகக் கடவதிறே.

(திங்களுநாளுமித்யாதி) உத்தேஶ்யபூமியிலே நித்யோத்ஸவம் செல்லாநிற்க, அதிங்கே நங்கண்வட்டத்தே துஃகத்துக் கிலக்காயி ருக்குமோ. மாஸத்திருநாளும் நித்யத்திருநாளுமோவாத. (வீற்றி ருந்தநங்கள் பிரானுக்கு) இவ்விருப்பு நமக்காக்கிக்கொண்டிருக்கிற வுபகாரகனுக்கு. பரத்வம் நித்யமுக்தர்க்கு; வ்யூஹம்- முக்தப்ரா யர்க்கு; விபவம் புண்ணியம்பண்ணினார்க்கு; இவ்விருப்பு பாபம் பண்ணின ஸம்ஸாரிகளுக்காகவிறே. (என்னெஞ்சம்) அவனுடைய வுபகாரமும் ஸௌந்தர்யாதிகளும் வயிர வுருக்காகை. நெஞ்சினு டைய வன்மையறிதியிறே; நெஞ்சுமவனுமொரு கோவையிலே யடைப்புண்டபடி.

(நங்கள்பிரானுக் கென்னெஞ்சம்) (க) "ராவணோ ஹ-ேதி வெ்வெஉஹீ்ஃ - ராகவோர்ஹதிவைதேஹீம்" என்னுமாப்போலே. (தோழீ) நெஞ்சைத்திருத்திக்கலப்பிக்கப்பட்ட வருத்தமறிதியிறே. இப்போது நீயுங்கூட வெதிர்த்தலையாம்படியிறேவாய்த்தது. (நாணு நிறையுமிழந்ததுவே) இதிழவாததுண்டோ. அரைக்ஷணமவன் பேர நின்று படுத்தினபாடெல்லா மென்றான். நான் தன்னையிழந்தேன், தாய்மார் தோழிமார்க ளென்னை யிழந்தார்கள். நெஞ்சு நாணுநிறை யுமிழந்தது. (௩)

நான்காம்பாட்டு.

இழந்தஎம்மாமைதிறத்துப்போன என்நெஞ்சினாரும்அங்கே யொழிந்தார் * உழந்து இனியாரைக்கொண்டு என்உசாகோ? ஓதக் கடலொலிபோல * எங்கும் எழுந்தநல்வேதத்தொலிநின்றோங்கு தென்திருப்பேரையில்வீற்றிருந்த* முழங்குசங்கக்கையன்மாயத்தாழ் ந்தேன் அன்னையர்காள்! என்னைஎன்முனிந்தே? (௪)

ப.— அநந்தரம், அவனுடைய குணசேஷ்டிதங்களிலே யகப்பட்ட வென்னெஞ்சு மங்கேபோயிற்று, இனி யாரைக்கொண்டு போதுபோக்குவ தென்று, நியமிக்கிற தாயாரைக் குறித்துச் சொல்லுகிறாள்.

(க) ரா-ஸு-க௬-ஙு.

(இ-ள்.) இழந்த - முன்பேயிழந்த, எம் - என், மாமைத்திறத்து - நிறத்துக்காக, போன - போன, என் - என், நெஞ்சினாரும் - நெஞ்சினாரும், அங்கே - அங்கே யாஸந்நராய், ஒழிந்தார் - ராஜகுலத்தாலே யென்னை யொழிந்து நின்றார், இனி, இனி-அந்தரங்கமான நெஞ்சுபோனபின்பு, உழந்து - அலமர்ந்து. ஆரை - இவ்வநுபவ விரையிலநபிஜ்ஞரானாரை, கொண்டு-கொண்டு, என் - அவர்களுக்கு நிலமல்லாத வெந்தவர்த்தத்தை, உசாகோ-உசாவுவேன், உசாவவிருக்கிற நான்காணும், ஓதம் - திரைக்கிளப்பத்தை யுடைத்தான, கடலொலிபோல - கடலொலிபோலே, எங்கும் - ஸர்வப்ரதேசத்திலும், எழுந்த - கிளர்ந்த, நல்வேதத்தொலி - ஸாமவேதகோஷமானது, நின்று - எக்காலத்திலும் நின்று, ஓங்கு - கிளர்ந்துவருகிற. தென் - தென், திருப்பேரையில் - திருப்பேரையிலே, வீற்றிருந்த - எழுந்தருளியிருப்பானாய், முழங்கு - அந்த வேதகோஷ ப்ரதித்வநியாலே முழங்குகிற, சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தை, கையன் - திருக்கையிலே யுடையவனுடைய, மாயத்து - ஆஶ்சர்யமான ஶீலஸௌலப்யாதி ப்ரகாஶக சேஷ்டிதங்களிலே, ஆழ்ந்தேன் - அவகாஹித்தேன். அன்னையர்காள் - "மூப்பும் முறையு முடையோம்" என்றிருக்கிறவன்னைமீர். என்னை - துணையற்றீடுபட்டிருக்கிற வென்னை, முனிந்து - முனிந்து, என் - என்ன ப்ரயோஜநமுண்டு. (௪)

ஆறு ;—(இழந்த) "யுக்தமோ அயுக்தமோ" என்று நிரூபியாதே போகப்பெறலாமோ வென்று அன்னைமார் தன்னைமுனிய; இழந்த வெம்மாமைத் திறத்துப்போன வென்னெஞ்சினாரும் அவனுடைய வழகைக்கண்டென்னை மறந்து, வாராதே யங்கேயொழிந்தார்; இனி யிங்கிருந்தென்ன புருஷார்த்தம் ஸாதிப்பது; ஆரோடேயெத்தை நிரூபிப்பது. ஓதங்கிளருகிற கடலினுடைய கோஷம்போலே யிருந்த மங்களமான வேத கோஷத்தாலே ஸம்ருத்தமான தென்திருப்பேரையிலே வீற்றிருந்தருளினவனுடைய, (௧) * நான்ஞவசுரர் நலிவெய்து நல்லவமரர் பொலிவெய்தும்படி முழங்குகிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யேந்தின வழகுவெள்ளத்திலே புக்கழுந்தினேன்; இனியென்னை முனிந்து ப்ரயோஜநமென்னென்று தன்னுடைய வன்னைமாரை நோக்கிச்சொல்லுகிறாள். (௪)

ஈடு; அவ;—நான்காம்பாட்டு. "ஏதேனுமொன்றைக்கொண்டு வருந்தியாகிலும் போதுபோக்காதே யிங்ஙனே செய்யலாமோ" என்று பொடிகிறதாய்மாரைக்குறித்து; என்னெஞ்சம் அவனாலே யப

(௧) ௧௦-௭-௫.

ஷ்றுகமாயிற்று, நானதைக்கொண்டு போதுபோக்குவதென்கிறாள்.

(இழந்தவெம்மாமைத்திறத்துப்போன) நாணுநிறையு மிழந்ததென்றவிடம்-உபலக்ஷணமாகாதே, அநுபாஷணத்திலே நிறமிழந்தமையும் தோற்றச்சொல்லா நின்றாள். ("இழந்தவெம்மாமை" என்று அநுபாஷணத்திலே-மாமையென்கிற நிறம் பூர்வமேயிழந்தமைதோற்றுகிறது,ஆகையாலே நாணுநிறையுமென்றுஉபலக்ஷணம்;) "அத்தலையிலுள்ளது நாம் ஸர்வஸ்வஹரணம்பண்ணுகை போய், நமக்குள்ளதிலே யொன்றைச் சிலர்கொடுபோகையாவதென்" என்றபிமாநித்து, "இப்போதே மீட்டுக்கொடுவருகிறேன்" என்று த்வரித்துப்போன நெஞ்சும் அங்கேபடையற்றது. (என்னெஞ்சினாருமங்கே யொழிந்தார்) அங்கேபுக்காரையும் தப்படியாக்கிக்கொண்டார். "பிரியேன்" என்று சொன்னவரிறே யித்தலையைப்பிரிந்து நினையாதிருக்கிறார். (நெஞ்சினார்) அலைந்த பரிவட்டமுந் தாமுமா யணுக்கடித்துத் திரியாநின்றாராயிற்று. (நெஞ்சினார்) (௧) "வ்ரவெக்ஷ்ராதிவாஹிநீம்-ப்ரவேக்ஷ்யாமிசவாஹிநீம்" என்று தாசித்தலையில் வ்யாபரிப்பேன் நானென்றானிறே ஸ்ரீவிபீஷணாழ்வான்.

(இழந்தவித்யாதி) நிறந்தொடக்கமான விழந்தவையடைய மீட்பதாகச் சொல்லிப்போன நெஞ்சினாருமங்கே கால்தாழ்ந்தார். வினைத்தலையிலே படையறுக்குமாப்போலே;வரிசையுங்கொடுத்துத் தம்மோடு ஸாம்யாபத்தியுங் கொடுத்தார். (வினைத்தலையில் படையறுக்கையாவது - யுத்தஸமயத்திலே யெதிர்த்தலையில் ஸேனையைத் தன்பக்கலிலே யாக்கிக்கொள்ளுகை.) (௨) "ராஜா ஹ்ருஷிஸீஷணா-ராஜாஹ்யேஷவிபீஷண:" என்னுமாப்போலே வரிசைபெற்றுத்திரியாநின்றார். ராவணன் முன்னே, அவன்சோற்றையுண்ட ஶுக ஸாரணர்கள் விபீஷணாழ்வானை, "ராஜா" என்பானென் னென்னில்; எழுத்து உருவழியாதே கிடந்தாலும், புள்ளிகுத்தினால் அத்தைக்கழித்து மேலேபோமாப்போலே, முடிகொடுக்குமவர்கையாலே வைக்கையாலே. என்றாலும், ராவணன் க்ரௌர்யத்தை யறிந்துவைத்துக் கூசாதே யிங்ஙன் சொல்லுவானென்னென்னில்; "சித்ரம்குத்துமோ" என்றிருந்தார்கள். "நிலவரைக்கொண்டு வினைசெய்யலாம்" என்று தரங்கொடுப்பரிறே,

---

(௧) ரா-யு-௧௯-௨௩. (௨) ரா-யு-௨௮-௨௭.

(என்னெஞ்சினாருமங்கேயொழிந்தார்) நிறம் மீட்கப்போனாரும் நிறங்கொடுபோனாரோ டொத்தார். இத்தலையில் வெறுமைகண்டு போனதுவும் ஸௌஷ்கல்யங் கண்டுபோனவனோ டொத்தது; போவார் போவாரெல்லாம் இத்தலைக்குக் காரியமாகக்காணும் போம் போது சொல்லிப்போவது. அவன்றானே "இத்தலையூற்றிருக்க வேணும்" என்று போனானன்; இதித்தலையில் வெறுமைகண்டு, நோக்குகைக்காகப் போயிற்று. நாந்தாமவர்களை வெறுக்கிறதென், (க) "நோபஜநம்ஸ்மரந்" என்று புக்கார் மீளாத தேசமானபின்பு. (அங்கேயொழிந்தார்) "கடலுக்குக் குறை நிரப்பவேணும்" என்று திரியாநின்றார்.

(உழந்தித்யாதி) பண்டு நெஞ்சிழந்தவர்களும் வருந்தி தரித்துச் சிலரோடே வ்ருத்த கீர்த்தநம்பண்ணி யிருந்திலர்களோ. நீயுமப் படியே வருந்தியாகிலும் சிலரோடே காலக்ஷேபம் பண்ணவேண்டாவோ வென்ன (இனி-உழந்து-ஆரைக்கொண்டென்னுசாகோ) உழந்து-வருந்தி. (இனி)-என்னெஞ்சை யிழந்தபின்பு. இனி துஃகப்பட்டு ஆரோடேகூட வெத்தைச்சொல்லி நான் காலம்போக்குவது. லங்கையிலே யிருந்தவளுக்கு ஒருவளுதல் ஒருவன் குடியாதலுண்டு: அதுவுமில்லையே யெனக்கு. (உ)[ஜ்யேஷ்டாகந்யாநலாநாம விபீஷணஸுதா] இங்கேயிருந்தே அங்குத்தைக்காவாளொருத்திகாண். [கவெ கபெ] ஓரோவவஸ்தைகளிலே நீயுதவுமாப்போலேகாண் இவளுமோரோதசைகளிலே உதவவல்லபடி; பலசொல்லியென், உன்னோடொப்பாளொருத்தி.

(ஆரைக்கொண்டென்னுசாகோ) தேஹாத்மாபிமாநிகளான ஸம்ஸாரிகளைக்கொண்டு போதுபோக்கவோ, (௩) "ஸம்ஸாரஹேது-ஈச்வரோஹம்" என்றிருக்கிற ப்ரஹ்மேசாநாதிகளைக்கொண்டு போதுபோக்கவோ, பகவதநுபவத்திலே அநந்யபரராயிருக்கிற நித்யஸூரிகளைக்கொண்டு போதுபோக்கவோ, இத்தலையை யுரிசூறைகொண்டு போனவனைக்கொண்டு போதுபோக்கவோ; ஆரைக்கொண்டெத்தை உசாவுவது. (என்னுசாகோ)(௪)"ஸர்வாத்மநா த்ராஹி-ஸமாத்வாதயாதத்ராஹம்" என்று சொல்லலாமிறே அவளுக்

(க) சாந்தோ-அ-கஉ. (உ) ரா-ஸு-௩எ-கக.
(௩) கீதை-கக-கச. (௪) ரா-ஸு-௩௩ கஅ.

கு, அப்படியே நமக்கு மேதேனுமுண்டோ. கலவியிலபர்யாப்தியிரு க்கிறபடி, (ஆரைக்கொண்டு) நெஞ்சுபோலே நமக்குப் பாங்காயிருப் பாருண்டோ.

ஆனால் செய்யவடுப்பதென்னென்னில் (ஓதக்கடலித்யாதி) அ ங்குத்தையது இங்கே நடையாடா நின்றபின்பு, நாமுமங்கேபோய்ப் புகுமத்தனை. ஓதங்கிளர்ந்த கடல்போலே யிருந்துள்ள வேதகோஷ மானது எங்கும் பரம்பாநின்ற தென்திருப்பேரையில் வீற்றிருந்த. (நல்வேதம்) (க) “ வெதா நாஂஸாமவெதொஸ்மி - வேதாநாம்ஸாம வேதோஸ்மி ” என்கிற ஸாமத்வநியாய்க் கிடக்குமத்தனை பார்த்த பார்த்தவிடமெங்கும். அவ்விருப்பைக்கண்டு முக்தர் ஸாமகாநம்பண் ணி ப்ரீதிக்குப்போக்கு விடுமாப்போலே. (முழங்குசங்கக்கையன்) வேதத்வநியானது ஸ்ரீ பாஞ்சஜந்யத்தைக்கிட்டி ப்ரதித்வநி யெழா நிற்கும். (மாயத்தாழ்ந்தேன்) அவனுடைய ஸ்மிதவீக்ஷணாதிகளி லே மீளவொண்ணாதபடி அகப்பட்டேன்.

(அன்னையர்காளென்னை யென்முனிந்தே) ப்ராப்தியுண்டென் னுச் சீறுமத்தனையோ. சீற்றத்துக்கெதிர்த்தலையும் வேண்டாவோ. தர்மியுண்டாய் முனியவேணுமே. (மாயத்தாழ்ந்தேன்-என்னையென் முனிந்தே) ஸ்வாதீநனையன்றோ முனிந்தால் ப்ரயோஜநமுள்ளது.

ஐந்தாம்பாட்டு.

முனிந்துசகடமுதைத்து மாயப்பேய் முலையுண்டு மருதிடை போய் * கனிந்தவிளவுக்குக்கன்றெறிந்த கண்ணபிரானுக்கு என் பெண்மைதோற்றேன் * முனிந்து இனியென்செய்தீர்? அன்னைமீர் காள்! முன்னி அவன்வந்துவீற்றிருந்த * கனிந்தபொழில் திருப்பே ரையிற்கே காலம்பெற என்னைக்காட்டுமினே. (ரு)

ப.—அநந்தரம், அநிஷ்டநிரஸந ஶீலனான க்ருஷ்ணனுக்கு என்னுடைய ஸ்த்ரீத்வத்தை யிழந்தேன்; நிரர்த்தகமாக நியமிக்கத்தேடாதே, விளம்பியாதே. அவனிருக்கிற தேசத்திலே கொடுபோய்க் காட்டுங்கோளென்கிறாள்.

(இ-ள்.) முனிந்து - முலைவரவு தாழ்த்துச்சீறி, அத்தாலே திருவடிகளை நிமிர்த்து, சகடம் - ஶகடத்தை, உதைத்து - உதைத்து, மாயம் - தாய்வடிவு

(க) கீதை-க0-உஉ

கொண்டுவந்த, பேய்-பேய், முடியும்படி. முலை - முலை, உண்டு - உண்டு, மருதிடை - த்வந்த்வமான மருதிடையே. போய் - வழிகண்டுபோய், கனிந்த-பழுத்த, விளவுக்கு - விளவாய்நின்ற அஸுரனைக்குறித்து, கன்று - கன்றாய் வந்த அஸுரனை, எறிந்த - எறிந்த. கண்ணன் - க்ருஷ்ணனாகிற, பிரானுக்கு - மஹோபகாரகனுக்கு. என் - என்னுடைய, பெண்மை - ஸ்த்ரீத்வத்தை, தோற்றேன் - இழந்தேன் இனி - இவ்வளவிலும். இவ்வவஸ்தையறிந்தே அன்னைமீர்காள் - தாய்மாரே, முனிந்து - என்னை நியமித்து, என்னிஷ்டஞ்செய்திகோளல்லீர், உங்களிஷ்டம் தலைக்கட்டிற்றில்லை, என் - என்னகாரியம். செய்தீர் - செய்தீராய்நின்றீர், என்னபிமதம்கேட்கில். அவன் - அவன், முன்னி-முற்கோலி, வந்து - வந்து, வீற்றிருந்த - எழுந்தருளியிருக்கிற; கனிந்த - பக்வபலபூர்ணமான, பொழில் - பொழிலையுடைய. திருப்பேரையிற்கே - திருப்பேரையிற்கே, என்னை - க்ரமப்ராப்தி பற்றாதவென்னை, காலம்பெற - விளம்பியாதபடி, காட்டுமின் - கொடுபோய்க் காட்டுங்கோள். (௫)

ஆறு;—(முனிந்து) உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப் போருமோவென்று அவர்கள் பின்னையும் தன்னை முனிய; (௧)*ஸ்தந்யார்த்தியாய் ரோஷத்தாலே சகடத்தைப் பாய்ந்த திவ்யசேஷ்டிதத்துக்கும் வஞ்சனையால் வந்தபேய்ச்சி மாயும்படி முலையுண்ட திவ்யசேஷ்டிதத்துக்கும், கனிந்தவிளவுக்குக் கன்றெறிகைக்காக விளங்கனியைக் குறித்துப் பார்த்தருளின பார்வைக்கு மென் பெண்மைதோற்றேன். நீங்களினியென்னை முனிந்துசெய்வதென்; என்னுடைய வரவுபார்த்து முன்னமேபோய் அவன்வீற்றிருந்த நிரவதிகபோக்யமான சோலையையுடைத்தான தென்திருப்பேரையிலே கொண்டுபோய் அவன்பக்கலிலே யென்னை யீண்டக்காட்டிக்கொடுங்கோளென்கிறாள் (௫)

ஈடு; அவ;—ஐந்தாம்பாட்டு. "இங்ஙனே விரைகை ஸ்த்ரீத்வத்துக்குப் போராதுகாண்" என்று தாய்மாரலைக்க; அதுவும்பண்டே போயிற்று. ப்ரயோஜநமில்லாத தசையிலே கொடுபோகநில்லாதே, என்னையேற்கவே கொடுபோய்த் தென்திருப்பேரையிலே விடுங்கோளென்கிறாள். முனிகிறது தான் எனக்கு ஹிதம்பார்த்தே, ஆனாலென் ஹிதத்திலே ப்ரவர்த்திக்கப் பாருங்கோள்.

(முனிந்தித்யாதி) என்னினைவுதன்னை புத்திபண்ணுங்கோள், அவன் முனிவிலே யகப்பட்ட நான் இனியுங்கள் முனிவுக்கு மீளுவனோ. ஹிதமுமாய் ப்ரியமுமான முனிவிலே யகப்பட்ட நான் அஹி

(௧) வி பு-௫·௯-௧.

தமுமாய் அப்ரியமுமான வுங்கள் முனிவுக்கு மீளுவனோ. (முனிந்து சகடமுதைத்து) முலைவரவு தாழ்த்ததென்று சீறி நீட்டின திருவடிகளுக்கிலக்காய்ப் பொடிபட்டதாயிற்று சகடம்; * (க) ஸநந்த்ராயீ-ஶயாநோ ராமஸ்தந்யார்த்தீ ப்ரருரோத ஹ விறே. (மாயப்பேய் முலையுண்டு) "முலையைநினைத்துச்சீறினன்" என்று முலை கொடுக்கத்தாய் வடிவுகொண்டுவந்த வஞ்சகையான பேய்ச்சியை முடித்து. (மருதிடைபோய்) முலையுண்டால் தவழுமத்தனையிறே. புறம்பு நின்றும் வந்துநலிகை யன்றிக்கே, நின்றவிடத்தே நின்று தப்பாமேகொல்ல நினைத்த யமளார்ஜுநங்களைப் பொடிபடுத்தி.

(கனிந்தவித்யாதி) அஸுராவேஶத்தாலே ஒன்று கனிந்தவிளவாய், ஒன்று கன்றாய்நின்றது; அதிலேயொன்றையிட்டொன்றையெறிந்து இரண்டையும் முடித்த. (கண்ணபிரானுக்கென்பெண்மைதோற்றேன்) அழியுமவற்றையுமழித்தான், அழியாதவற்றையுமழித்தான். வன்மையாலே யழித்தானவற்றை; * (கண்ணபிரானிறே;) மென்மையாலே யழித்தானிவற்றை. (பிரானுக்கு) அவற்றின் கையில் தானகப்படாதே தப்பித்தன்னைத் தந்த வுபகாரத்துக்கெழுதிக்கொடுக்கிறாள்காணும்.

ஶேஷியான தன்னையுண்டாக்கி, என்னை ஶேஷத்வத்தினுடைய வெல்லையிலே நிறுத்தினன். (உ) "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந" என்கிற வவதாரங்களோபாதி பரப்புப்போருங்காணும் இவ்வவதாரத்தில் இவளைப் பெறுகைக்குப்பண்ணின ப்ரவ்ருத்திகளுமவனுக்கு. ஆஶ்ரிதவாத்ஸல்ய கார்யமான முனிவிறே. (கண்ணபிரானுக்கென் பெண்மைதோற்றேன்) (ங) "யஸ்மாத் க்ஷரமதீதோऽஹமக்ஷராதபி சோத்தம: - அதோஸ்மிலோகேவேதேசப்ரதித: புருஷோத்தம:" என்றும், (ச) "ஜாநாதி ஸம்மோஹோ-ஜாநாதிபுருஷோத்தமம்" என்றுஞ்சொல்லுகிற தன்னுடைய பும்ஸ்த்வத்தைக் காட்டிக்காணும் இவளுடைய ஸ்த்ரீத்வத்தை யபஹரித்தது. (பெண்மைதோற்றேன்) தோலாதது தோற்றேன்.

(முனிந்தினி இத்யாதி) இனி மீட்கலாமென்றோ! நினைக்கிறது. மீட்கநினைக்கிற நீங்கள் அவனுடைய வபதாநங்களுக்கு முன்னேயன்

(க) வி-பு-ரு ௬-க.
(உ) கீதை-௪-ரு
(ங) கீதை கரு-கஅ.
(ச) கீ-கரு-க௯.

றோ மீட்கப்பார்ப்பது. (என்செய்தீர்) எனக்கநுகூலைகளானீரல்லீர், மீட்கத்தொடங்கினது தலைக்கட்டிற்றன்று. (அன்னைமீர்காள்) ஜந்ம ப்ராப்ருதி யென்ப்ரக்ருதியறிந்து போருகிறநீங்கள் மீட்கப்பார்ப்பதே. "அவன்பண்ணின வுபகாரங்களை யறியாமையிறே நீங்கள் பொடிகிறது. அவன்பண்ணின வுபகாரம் மறக்க வொண்ணாதாகில் நினைக்கிறாய், பெற்றுவளர்த்த வெங்களுடைய வுபகாரமும் நினைக்க வேணுங்காண்" என்ன (முன்னியவன்வந்துவீற்றிருந்த) உபகாரத்தில் முற்பாடனவன் காணுங்கோள். (முன்னி) முற்பாடனாய்நின்று, (க)"வெ-ஙெவ-ஜ-பூர்வஜ" என்னும்படியே யென்னைப்பெறுகைக்கு அவஸரப்ரதீக்ஷனாய்க்கொண்டு தன்வேறுபாடுதோற்றவிருக்கிற.

(கனிந்தபொழிலித்யாதி) கொண்டுபுக்குக் காட்டுவார்தாழ்வே, அங்குள்ளதெல்லாம் பக்வபலமாயிருக்கும். கனிந்தமரங்கண்டால் "அஸாராவேஸமுண்டு" என்றஞ்சவேண்டாதசோலை. (காலம்பெறவென்னைக்காட்டுமினே) இக்குடிக்குமெனக்கும் பரிஹாரமொன்றேயிறே. பின்னையு மென்னையங்கேகொண்டுபோய்ப் பரிஹரிக்கை தவிரீகோள்; நானுளேனானபோதே அத்தைச்செய்யப்பாருங்கோள். பின்னை * ஹமெதஜஐஸெ த-வைவம்ய-கதேஜலே ஸேது பந்தமாகாமே, நான்ஜீவிக்குமெல்லையிலேகாட்டுங்கோள். (ரு)

ஆறும்பாட்டு.

காலம்பெறஎன்னைக்காட்டுமின்கள் காதல்கடலின்மிகப்பெரிதால் * நீலமுகில்வண்ணத்தெம்பெருமான் நிற்கும்முன்னேவந்து என்கைக்குமெய்தான் * ஞாலத்துஅவன்வந்துவீற்றிருந்த நான்மறையாளரும்வேள்வியோவா* கோலச்செந்நெற்கள்கவரிவீசும் கூடுபுனல்திருப்பேரையிற்கே. (சா)

ப.—அநந்தரம், உதாரஸ்வபாவனானவன் ஸந்நிஹிதனாய் வைத்து ஸம்ஶ்லேஷப்ரதனல்லாமையாலே அபிநிவேஶம் கரைபுரண்டு செல்லாநின்றது, அவனிருக்கிற தேஶத்திலே சடக்கெனக் கொடுபோங்கோளென்கிறாள்.

(இ-ள்) நீலமுகில் - காளமேகம்போலே, வண்ணம் - உதாரஸ்வபாவமான வடிவழகைக்காட்டி, எம் - என்னை யடிமைகொண்ட, பெருமான்-ஸ்வா

(உ) ஜித-ஸ்தோ-கக.

மியானவன், முன்னே - என்முன்னே, வந்து - வந்து, நிற்கும் - உருவெளிப் பாடாம்படி நில்லாநிற்கும், வந்தவன் தானே மேல்விழுந்தணையாதொழிகை யன்றியே, என் - என், கைக்கும் - கைக்கும், எய்தான் - எட்டாதபடி அம்மே கம்போலே தூரஸ்தனாகாநிற்கும்; ஆகையாலே, காதல் - காதலானது, கட லில் - * கடல்புரையுமளவன்றியே, மிக - மிக, பெரிது - பெரிதாயிராநின் றது, ஆனபின்பு, ஞாலத்து - பூமியிலே. வந்து - அவ்வடிவழகோடேவந்து, அவன் - அவன், வீற்று - தன்னெளதார்யந் தோற்றும்படி இருந்த - இருக்கு மிடமாய், அங்குவர்த்திக்கிற, நான்மறையாளரும் - சதுர்வேதிகளான விலக்ஷ ணபுருஷர்களும், வேள்வி - தத்தாராதநரூபமான வைதிகாநுஷ்டாநத்தில், ஓவா - ஓவாதே நடக்கும்படியாய், கோலம் - தர்சநீயமான, செந்நெற்கள் - செந்நெற்கதிர்கள், கவரி - கவரிபோலே, வீசும் - அசையும்படியுமாய், கூடி னதநுரூபமாகச்சேர்ந்த, புனல் - ஜலஸம்ருத்தியையுமுடைய, திருப்பேரை யிற்கே - திருப்பேரையிற்கே, என்னை - விளம்பாக்ஷமையானவென்னை, கால ம்பெற - கடுக, காட்டுமின்கள் - கொடுபோய்க் காட்டுங்கோள். (௬)

ஆறு ;—(காலம்பெற) "வேட்டைக்கெழுந்தருளினவத்தனே யன்றோ, இப்போதே யெழுந்தருளுகிறானிறே, இங்ஙனே பதறவே ணுமோ" என்று அவர்கள்சொல்ல ;

எனக்கு அவன் திறத்திலுள்ள வபிநிவேசவெள்ளத்துக் கொருமுடிவில்லை ; நீலமேகநிபமான திவ்யரூபத்திலுடைய வழ காலே யென்னைத்தோற்பித் தடிமையாக்கினவன் என்கண்களிலே வந்துதோற்றாநிற்கும், என்கைக்கு மெய்தான். பரமபுருஷ ஸமா ராதநைகவேஷ நித்யநைமித்திகாதி ஸர்வகர்மாநுஷ்டாந நிரத ராய் வேதவித்க்ரேஸரான திவ்யஜநங்களாலே ஸததபரிபூர்ணமாய் அதிரமணீயபரிணதசாலி சாமரங்களாலே வீஜ்யமாநமாய், ஸம்ப்ர ஸந்நஸலில தாம்ரபர்ணீ ஸரித்பரிவ்ருதமாயிருந்த திருப்பேரை யிலே யெனக்காகவெழுந்தருளியிருந்த பெரியபெருமாள் பக்கலிலே காலம்பெற வென்னைக்காட்டுமின்களென்று தன்னுடைய வன்னை மாரை நோக்கிச்சொல்லுகிறாள். (௬)

ஈடு; அவ;—ஆறும்பாட்டு. நீங்கள் "கொடுபோவோமோ! அல்லோமோ" என்று விசாரிக்கும் தசையன்றிக்கே, எனக்கபிநிவே சமானது அறமிக்கது ; எனக்கிங்குத்தரிப்பரிது, கண்டெனவென்

னைத் தென்திருப்பேரையிலே கொடுபுக்கு மகரநெடுங்குழைக்காதனைக்காட்டுங்கோளென்கிறாள்.

(காலம்பெறவென்னைக்காட்டுமின்கள்)குடிக்குப் பரிஹாரமன்றாகிலும் எனக்குப் பரிஹாரம் இதல்லதில்லை; இனி யென்மேல் குற்றமில்லை. என், இப்படிக் கடுகவேண்டுவானென்னென்னில் (காதல் கடலின் மிகப்பெரிதால்) இக்காதல் அளவுப்பட்டோ விருக்கிறது. முதற்சொன்ன வார்த்தையைக்காணுங்கோள் நீங்கள் நினைக்கிறது. * கடல்புரையவென்றாளே. ஒருகாரியப்பாட்டாலே விளைந்ததுபோலன்றிறே உகப்பாலேவிளைந்ததிருப்பது.

ஆனாலும் காதலையளவுபடுத்தி, நாங்கள் சொல்லுகிற வார்த்தையைக்கேட்டு எங்களோடே யொழுகவேண்டாவோவென்ன (நீலமுகில்வண்ணத்தெம்பெருமான்) நானுங்கள் வழியேபோகவோ, இவன்வழியேபோகவோ. என்னையப்படி சேர்த்துவிடவந்து முன்னேநிற்க, நான்மீளும்படியென். அப்படியாலே அவன்துவக்காநிற்க, உங்கள் வார்த்தையைக்கேட்கவோ. ப்ரமஹரான வடிவைக்கொண்டு முன்னேநின்று காதலுக்கு வர்த்த(ய-ம்) கனாநின்றான். இக்காதலையொருபடியே வளர்க்கிறதிறே; (௧) * கடல்புரையவிளைவித்த தும்காரமர்மேனியிறே. (நிற்கும்முன்னேவந்து) இவன்கிட்டநின்றிலனாகில் நானுங்கள் வார்த்தையைக்கேட்டு மீளேனோ. ஆனாலுனக்குப்பொல்லாதோவென்ன (என்கைக்குமெய்தான்) அழகிதிறே யெனக்கிப்படிதரப்பெறில. வார்த்தைசொல்லுதல், அணைத்தல் செய்யாமையேயன்று; என்கைக்கு மெட்டுகிறிலன்.

இனி நீசெய்யப்பார்த்ததென்னென்ன; உருவெளிப்பாடன்றியிலே கண்ணாலேகண்டநுபவிக்கலாம்தேசத்திலே போகப்பார்த்தேன் (ஞாலத்தவன்வந்துவீற்றிருந்த) தூரப்போய்க்காணவேண்டாதபடி, பரமபதத்தி லைஶ்வர்யமெல்லாமிங்கே தோற்றும்படியிருந்த. (நான்மறையாளரும் வேள்வியோவா) வேதார்த்தவித்துக்களும் ஸமாராதநத்திலே நிரந்தரமாக ப்ரவ்ருத்தரானார்கள். என்னோடு ஸஜாதீயரும், தந்தாமுக்கு வகுத்த கைங்கர்யம்பெற்று வர்த்தியாநிற்பார்கள்.

---

(௧) ரு-௩-௪.

(கோலச்செந்நெலித்யாதி) வ்ருஷ்டயந்தரத்தி விஷயமாக அங்குள்ளார்க்கு யத்நிக்கவேண்டாதே யிருக்கை. அவையாநுஷங்கிக பலமாய் வருமத்தனை. (க) "நீள்செல்வப்வேண்டாதான்றன்னையே தான்வேண்டும்" என்றும், (உ) "அங்கங்கேயவைபோதரும்" என்றும் சொல்லக்கடவதிறே; தர்ஶநீயமான செந்நெற்களானவை அங்குத்தைக்குக் கவரிவீசினாப்போலே யசையாநிற்கும். (கூடு புனல்திருப்பேரையிற்கே) ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷஜலம், இவை மூன்றுங்கூடியிருக்கையாலே ஜலஸம்ருத்தியை யுடைத்தாயிருக்கை. (திருப்பேரையிற்கே - காலம்பெறவென்னைக்காட்டுமின்கள்) என் விடாய்தீர ப்ரமஹ்ரமான தேஶத்திலே கொடுபோய்ப் பொகடப் பாருங்கோள். அங்குள்ள செந்நெலுக்கு நீர் தாரகமா யிருக்குமா போலே யிவளுக்கு மவ்வூரில் காட்சியே தாரகமாயிருக்கிறபடி. (சு)

ஏழாம்பாட்டு.

பேரெயில்சூழ்கடல்தென்னிலங்கை செற்ற பிரான்வந்துவீற்றி
ருந்த * பேரையிற்கேபுக்குஎன்னெஞ்சம்நாடிப் பேர்த்துவரவெங்
கும்காணமாட்டேன் * ஆரை இனிஇங்குடையம்? தோழீ! என்
னெஞ்சம்கூவவல்லாரும்இல்லை * ஆரையினிக்கொண்டுஎன்சா
திக்கின்றது? என்னெஞ்சம்கண்டதுவேகண்டேனே. (எ)

அநந்தரம், ப்ராப்திக்கு ப்ரபலப்ரதிபந்தகமான லங்காநிரஸநத்தைப் பண்ணினவன் வர்த்திக்கிற தேசத்திலே சென்று புக்க நெஞ்சு மீளவரக்காண்கிறிலேன், நானுமினியங்கே போமித்தனையென்கிறாள்.

(இ-ள்.) பேர் - பெரிய, எயில் - மதிளாலே சூழ் - சூழப்பட்டு, கடல் - அதுக்ககழான கடலையுடைத்தாய், தென்-கட்டளைப்பட்ட, இலங்கை - இலங்கையை, செற்ற - செறுத்தழியச்செய்த, பிரான் - உபகாரகனானவன். வந்து- ஶ்ரமந்தீருகைக்காகவந்து, வீற்று - அந்தவீரஸ்ரீ தோன்றும்படி, இருந்த - எழுந்தருளியிருக்கிற, பேரையிற்கே - திருப்பேரையிற்கே, புக்கு - சென்றுபுக்கு, என் - என். நெஞ்சம் - நெஞ்சமானது, நாடி - அவனைத்தேடி, பேர்த்து - மீண்டு, எங்கும் - ஓரிடத்திலும், வர - வர. காணமாட்டேன்-காண்கிறிலேன், இனி - ஆனபின்பு, தோழீ-என்னோடு ஸமது:கையாயிருக்கிறதோழீ. இங்கு-

(க) பெருமாள் திரு-டு-கூ. (உ) பெரியா-திரு-டு-க-௪.

இவ்வவஸ்த்தையில், நியமிக்கிற தாய்மாரையும் பழிசொல்லுமூரானையுமொழிய, துணையாக, ஆரை - ஆரை, உடையம் - உடையோம், போன, என் - என், நெஞ்சம் - நெஞ்சை, கூவ - அழைத்துத்தர, வல்லாரும் - வல்லாரும், இல்லை - இல்லை இனி - நெஞ்சுதவாதே நீயும் தளர்ந்தபின்பு, ஆரை - ஆரை, கொண்டு - கொண்டு, என் - என்னப்ரயோஜநத்தை, சாதிக்கின்றது - ஸாதிப்பது, ஆகையாலே, என் - என், நெஞ்சம் - நெஞ்சு, கண்டதுவே - கண்ட விஷயத்தையே, கண்டேன் - நானும்கண்டுவிட்டேன்.

நாடியென்று - நாட்டம்பெற்றென்றுமாம். (எ)

ஆறு;—(பேரெயில்சூழ்) உனக்கவன்பக்கலுள்ள வபிநிவேசம் நிரவதிகமாயிருந்ததாகிலும் அவனே யெழுந்தருளுமளவு மிங்கே யிருக்குமத்தனை, அங்குப்போகையுக்தமன்றென்று தோழிசொல்ல;

அத்யுச்சரித ப்ராகார ஜலதிபரிகா (ஸா)பரிவ்ருதமான லங்கையிலே ராவணனை, * ஸபுத்ரஜநபாந்தவமாகக் கொன்றருளி விஜயலக்ஷ்மீபரிவ்ருதனாய்க்கொண்டு தென்திருப்பேரையிலே யெழுந்தருளியிருந்த விருப்பைக் கண்ட நெஞ்சு இன்னம் மீண்டுவாராது; எனக்கிங்கொரு துணையுமில்லை, துணையானவென்னெஞ்சை யழைக்க வல்லாருமில்லை. இங்காரைக்கொண்டென்ன புருஷார்த்தம் ஸாதிப்பது, இனியென்னெஞ்சுபுக்க தேசத்திலே போய்ப்புகுமித்தனையென்று தன் தோழியைக்குறித்துச் சொல்லுகிறாள்.

ஈடு; அவ;—(க) ஏழாம்பாட்டு. (க)" ஸஹஸா நமஹிஷ்ட்ராஷி ஷுணநமதாரமதிர் - அஹஞ்சாநுகமிஷ்யாமி லக்ஷ்மணோநகதாம்கதிம்" என்ற பெருமாளைப்போலே யிப்பிராட்டியும்; என்னெஞ்சு தரிக்கைக்கு விரகுபார்த்துத் திருப்பேரையிலே புக்காப்போலே நானுமங்கே புகுமத்தனை யென்கிறாள். (பேரெயிலித்யாதி) கீழிலளவுகள்குலைந்த பின்பு இனி நான் செய்யப்பார்த்ததிதுவென்கிறாள்.

(பேரெயில்)-பெரியமதிள். (சூழ்கடல்) இம்மதிளுக் ககழாம்படி அம்மதிளைச்சூழ்ந்த கடலையுடைத்தாய், கேட்கவஞ்சும்படியான ஆரை மூலையடியே நடக்கப்பண்ணின வுபகாரகன். (வந்துவீற்றிருந்த) அப்போதுமுகம் மாறவைத்த விழவுதீற வணைக்கலாம்படி கிட்

(க) ரா-உத்த-

டவந்திருக்கிற. (க) "விமலஸஸாங்க நிபாநநா - விமலஸஸாங்க நிபாநநா" என்கிறபடியே-எப்போது பெருமாள் முகம்வைக்கவொண்ணுதபடி கொடியரா யிருந்தார், அவ்வளவிலுமிவள் மறுவற்ற சந்த்ரமண்டலம்போலே முகத்தில் குளிர்த்திமாருதே யிருந்தாள். (உ) [தீபோநேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸிமேத்ருடம் - தீபோநேத்ராதுரஸ்யேவ ப்ரதிகூலாஸிமேத்ருடம்] இதுக்காளவந்தா ரருளிச்செய்யும்படி- "நேத்ரதோஷத்தால் வந்ததுபோக்கி, தீபதோஷத்தால் வந்ததன்று" என்று.

(செற்றபிரான் வந்து வீற்றிருந்த) ப்ரதிகூலநிரஸநம் பண்ணி விடாய்த்து வந்திருக்கும். (ரு) "பர்த்தாரம் பரிஷஸ்வஜே - பர்த்தாரம் பரிஷஸ்வஜே" என்னும்படியே ஸிஸிரோபசாரம்பண்ணப் போகவேணும். (பேரையிற்கே யித்யாதி) அவனிருந்த திருப்பேரையிலேபுக்குத்தேடி யென்னெஞ்சானது ஓரிடத்திலும் மீண்டு வரக்காண்கிறிலேன். மீளவொண்ணுத லங்கையிலே புக்க திருவடியும் மீண்டுவந்தான், அணித்தான வில்லூரிலே புக்க நெஞ்சு மீண்டு வரக்காண்கிறிலேன். நெஞ்சுங்கூடவாராதபின்பு அவன் வாராமை சொல்லவேண்டாவிறே, நெஞ்சின்வரவுபார்த்துக் கண்மறைந்து காணு மிவள் நிற்கிறது. (மாட்டேன்) கண்டு ஜீவியாதே நானிங்ஙனே முடிந்து போமித்தனையாகாதே.

அபிமதன்வருந்தனையும், அவனுக்காக வ்ருத்தகீர்த்தநம்பண்ணி தரித்திருக்கவேண்டாவோவென்னில் (ஆரையினி யிங்குடையந் தோழீ) நெஞ்சுமில்லாதவன்று இனியாருண்டு. (தோழீ) "நெஞ்சிலண்ணியநாளே" என்றுயாகில், நீயோருயே. இப்போது நானிங்கில்லையோ (என்னெஞ்சங் கூவவல்லாருமில்லை) நெஞ்சைமீட்கைக்கு நீவேணுமே, நெஞ்சை யவனுக்காக்கின நீ வேணுமே யெனக் காக்கும்போதும்; உன்தசையிது, உனக்குக்கால்கள் நடைதாராது. அல்லாதார்க்கு "கூட்டவேணும்" என்னும் த்வரையில்லை. ஆர் நெஞ்சையழைப்பர்.

(ஆரையினிக்கோண்டேன் சாதிக்கின்றது) ஆரைக்கொண்டு தான் ஸாதிப்பது; இனி ஸாத்யந்தானெது? நெஞ்சுமவனும் வந்தால்

(க) ரா-யு-ககஎ-ருக. (உ) ரா-யு ககஅ-கஎ.

(ரு) ரா-ஆர-ரு௦-௪௦.

இனி நான்தானுண்டாக வேணுமே, இங்கு வெறுந்தறையாயிறே கிடக்கிறது; ஆனால் செய்யப்பார்த்த தென்னென்னில் (என்னெஞ்சங்கண்டதுவேகண்டேனே) மீளாதே நெஞ்சுபோனவழியே போகப்பார்த்தேன். (க) "அக்ரதஸ்தே கமிஷ்யாமி ம்ருத்நந்தீ குசகண்டகாந் - அக்ரதோகமிஷ்யாமி லக்ஷ்மணேநகதாம்கதிம்" என்கிறபடியே நெஞ்சுபோனவழியே போகப்பார்த்தேன். (எ)

எட்டாம்பாட்டு

கண்டதுவேகொண்டெல்லாருங்கூடிக் கார்க்கடல்வண்ணனோடென்திறத்துக்கொண்டு * அலர்தூற்றிற்றதுமுதலாக் கொண்ட என்காதல்உரைக்கில்தோழீ ! * மண்திணிஞாலமும்ஏழ்கடலும் நீள்விசும்புங்கழியப்பெரிதால் * தெண்திரைசூழ்ந்துஅவன்வீற்றிருந்த தென்திருப்பேரையில்சேர்வன்சென்றே. (அ)

ப.—அநந்தரம், அவனோட்டை ஸம்பந்தமடியாக, ஊர்ப்பழிவிளையும்படி வந்தகாதலானது ஸர்வலோகத்தையும் விளாக்கொலைகொண்டு போகாநின்றது; ஆனபின்பு, அவனிருக்கிற திருப்பேரையிலே சென்று புகுவேனென்கிறாள்.

(இ-ள்,) கண்டதுவே - புறவாயில்கண்ட வைவர்ண்யாதிகளையே, கொண்டு - கொண்டு, எல்லாரும் - தாய்மாரோ ரோரோடு வாசியற வெல்லாரும், கூடி - ஒருமிடறாய்க்கூடி, கார் - கருத்த, கடல் - கடல்போலே ஸ்ரமஹரமான, வண்ணனோடு - வடிவையுடையவனோடேகூடி, என்திறத்து - என்னிடையாட்டமான ஸம்பந்தத்தை, கொண்டு - அவலம்பித்துக்கொண்டு, அலர் - பழியை, தூற்றிற்றது - தூற்றினவதுவே, முதலா - ஹேதுவாக, கொண்ட - இடங்கொண்ட, என் - என், காதல் - காதல், தோழீ - அடியிலேயிதுக்கு ப்ரவர்த்தகையான தோழீ, உரைக்கில் - பாசுரமிட்டுரைக்கப்பார்க்கில், "கடலின்மிகப்பெரிது" என்றவளவேயல்ல, மண் - மண், திணி - செறிந்த - ஞாலமும் - பூமியும், அத்தைச்சூழ்ந்த, கடல் - கடல், ஏழும் - ஏழும், நீள், இதெல்லாவற்றுக்கு மிடங்கொடுக்கும் மஹாவகாஶமான, விசும்பும் - ஆகாஶமும், கழிய - தனக்குள்ளேயாம்படியவ்வருகே, பெரிது - பெருத்திராநின்றது, ஆனபின்பு, தெள் - தெளிந்த, திரை - நீர்த்திரையை யுடைத்தாகையாலே

(க) ரா-உத்த-கoஎ-௩

ஸ்ரமஹரமாய், சூழ்ந்தவன் - காதலைப்பெருக்கவளைத்தவன், வீற்றிருந்த-இருக்கிற, தென் - தென், திருப்பேரையில் - திருப்பேரையிலே, சென்று - என் தாபமாறும்படி சென்று, சேர்வன் - சேரக்கடவேன். (௮)

ஆறு;— (கண்டதுவேகொண்டு) ஆந்தரமான வபிநிவேஶம் ஸமக்ரமாயிருக்கச்செய்தே புறம்புதோற்றுகிற மாத்ரத்தையேகொண்டு, தத்ஸௌந்தர்ய குணஜநிதமான வென்னபிநிவேஶத்தைக்குற்றமாகவுங்கொண்டு லோகமெல்லாங்கூடி "ஒருத்திக்கு எம்பெருமான் பக்கலுள்ள வபிநிவேஶமே!; இப்படி யபிநிவேஶிக்கை குடிப்பழியன்றோ" என்று என்னையலர்தூற்ற, அதடியாகக்கொண்டு கிளர்ந்தெழுந்த வென்னபிநிவேஶத்தின் பெருமை சொல்லநிலமன்று. சொல்லில், தோழீ, இவ்வஸங்க்யேயமான வண்டங்களும் அளவிருந்த திருநாடும் நிறையப்பெருகி, அதுவுமிடம் போராமல் பொங்கிப்பெருகாநின்றது: ஆதலால் அவனெழுந்தருளியிருந்த தென் திருப்பேரையிலே நானேயாகிலுஞ்சென்று ஸம்ஶ்லேஷிக்கைதவிரேனென்கிறாள். (௮)

ஈடு; அவ;—எட்டாம்பாட்டு. எனக்கு "அவனைக்காணவேணும்" என்னுமபிநிவேஶம் "கடலில் மிகப்பெரிது" என்னுமளவன்றிக்கே, அறமிக்கது; ஆனபின்பு நீங்களாகவிசையிர்கோளாகில், தன் வேண்டற்பாடுதோற்ற வெழுந்தருளியிருக்கிற தென்திருப்பேரையிலே நான்போய்ப் புகுவேனென்கிறாள்.

(கண்டதுவேகொண்டு) அவன்பேர்சொல்லுதல், (௧) "தலையில்வணங்கவுமாங்கொலோ" என்று ஒருப்ரணாமஞ்செய்தல் செய்யுமிறே; அம்மாத்ரத்தையேகொண்டு. புறவிதழ்கண்டு படுகிறபடியிதுவானால், அகவாயிலோடுகிறதறியிலென்படுவர்கள். (எல்லாருங்கூடி) பரிவரோடு, ஹிதகாமரோடு, "இவையிரண்டுந்தானென்" என்றிருப்பாரோடு வாசியறக்கூடி. பிறரைப்பழிசொல்லவென்னில், தம்மில் தாம் சேராதவர்களும் சேர்வர்களிறே. (கார்க்கடல்வண்ணனோடென்திறத்துக்கொண்டு) இவள் நிறம்விவர்ணமாம்போது, அவன்திறத்தே யிழந்ததாகவேண்டாவோ; கடலேறிவடிந்தவிடமென்று தோற்றுகிறதில்லையோ. என்னிடையாட்டத்தை ப்ரமஹரமான நிறைத்தையுடையவனோடே கூட்டி.

---

(௧) ௫-௩-௭.

(அலர்தூற்றிற்றதுமுதலாக்கொண்ட வென்காதலுரைக்கில்) இவர்கள் பேசாதேயிருந்தார்களாகில் நானும் ஸுகமேயிரேனே. நான்பழிக்கஞ்சி மீளுவேனென்று காணும் இவர்கள் பழிசொல்லப் புக்கது (அலர்தூற்றிற்று) அலர்தூற்றினார்கள். (அதுமுதலித்யாதி) அதுதானே யடியாகக்கொண்ட வென்காதலானது ஸமுத்ரஸமாகமாகப் பணைக்கப்புக்கது ; (காதலுரைக்கில்) தன்காதல் தன்னாலும் சொல் லிமுடிய வொண்ணாதுகாணும். (க) "யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்கிற விஷயத்தைச்சொல்லிலும் இவள்காதல் பேச்சுக்குநிலமன்று. இக்காதலுக்கு விஷயபூதனானவனையும் விளாக்கொலைகொள்ளவற்றான காதலிறே. (உ) "சுடர் ஞானவின்பம்" என்று - பகவதாநந்தத்தைச் சொல்லிவைத்து, "அதனிற்பெரியவென்னவா" என்றதிறே.

(தோழீ) இக்காதலைவிளைக்கைக்கு நீபண்ணும் க்ருஷியறிதியிறே. இதிருந்தபடிபாராய்; (மண்டிணிஞாலமித்யாதி) "காதல் கடலில்மிகப்பெரிதால்" என்றவிடம் - ஓராதே சொன்னோம் ; ஆறெங்ஙனே சொல்லும்படியென்னில் ; பெரியவற்றில் பெரியதென்னுமித்தனையல்லது, ஒருபாசுரமிட்டுச் சொல்லலாவதில்லை. மண்ணாலே நெருங்கின பூமியென்றபடி. அத்தையும் சூழ்ந்தகடலேழும், அவற்றுக்கெல்லா மவகாஸமான வாகாஸமும், இவை யித்தனைக்கு மவ்வருகுபட்டிருக்கை.

இப்படி காதல்கரைபுரண்டால் செய்யப்பார்த்த தென்னென்ன (தெண்டிரையித்யாதி) இக்காதல் மறுநனையும்படியான விஷயமிருந்தவிடத்தே போய்ப்புகுமத்தனை; தெளிந்ததிரைகளாலே சூழப்பட்டு அவன்வீற்றிருந்த தென்திருப்பேரையிலே போய்ப்புகுமத்தனை. (௩) "தடாகாநி ச ரம்யாணி பத்மோத்பலயுதாநி ச நாநாபக்ஷிஸமாகீர்ணாநி நாநாபுஷ்பயுதாநி ச | விஹ்ருத்ய ஸலிலக்லிந்நா தவாங்கேஷுபாவிஸம்" என்கிறபடியே அநுபவயோக்யமான தேசத்திலேபோய்ப் புகக்கடவோம். (சேர்வன்சென்றே) இனிப்பகட்டால் தீராது, புக்கல்லது விடேன். ஆள் விடுதல், அவன் வரவுபார்த்தி

(க) தை-ஆந-௧. (உ) ௧௦-௧௰-௧௦.
(௩) ரா-ஸு-௩௮-௧௪.

ருத்தல் செய்யேன். (சென்றே-சேர்வன்) இனியெதிரே அவன்வரி னும் மீளேன். அவனைச்சேருகையன்று உத்தேஶ்யம், அங்கே சென்று கிட்டுகை. (அ)

ஒன்பதாம்பாட்டு.

சேர்வன்சென்றுஎன்னுடைத்தோழிமீர்காள் ! அன்னையர் காள்! என்னைத்தேற்றவேண்டா * நீர்களுரைக்கின்றது என் இதற் கு? நெஞ்சும்நிறைவும்எனக்கிங்கில்லை* கார்வண்ணன்கார்க்கடல் ஞாலமுண்ட கண்ணபிரான்வந்துவீற்றிருந்த * ஏர்வளவொண் கழனிப்பழனத் || தென்திருப்பேரையின்மாநகரே. (௯)

ப —அநந்தரம், ப்ரளயாபத்ஸகனானவன் வர்த்திக்கிற தேசத்திலே சென்று புகத்தவிரேன், நீங்களென்னைத் தேற்றி யுரைக்கிறதுக்கு ப்ரயோ ஜநமில்லையென்று தோழிமாரையும் தாய்மாரையும்பார்த்துச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) என்னுடை - எனக்குஸமாந து:கைகளாயிருக்கச்செய்தே ஹித ஞ்சொல்ல வொருப்பட்ட, தோழிமீர்காள் - தோழிமீர்காள், அன்னையர்காள் - ஹிதபரைகளாயேபோருமன்னைமீர்காள், என்னை-என்னை, தேற்றவேண்டா - தேற்றவேண்டுவதில்லை, இதற்கு - இந்தவவஸ்த்தைக்கு, தேறுகைக்குறுப் பாக, நீர்கள் - நீங்கள், என் - என்னவார்த்தை, உரைக்கின்றது - சொல்லு வது, நெஞ்சும் - தேறியிருக்கைக்கடியானநெஞ்சும், நிறைவும் - பூர்த்தியும், எனக்கு - எனக்குறுப்பாம்படி, இங்கு - இங்கு, இல்லை - இல்லை, அவையங் கேயானபின்பு தேற்றமுமங்கேபோயிற்று, ஆதலால் நெஞ்சையும் நிறைவை யுமபஹரிக்கைக்கடியான, கார் - ஶ்யாமளமான, வண்ணன் - வடிவையும், கார்க்கடல் - ப்ரளயாபந்நமான, ஞாலம் - ஜகத்தை, உண்ட - அமுதுசெய்த வாபத்ஸகத்வத்தையும், பிரான் - ஆஶ்ரிதோபகாரகமான பவ்யதையையுமு டைய, கண்ணன் - க்ருஷ்ணன், வந்து - வந்து, வீற்றிருந்த - இருக்குமிட மாய், ஏர் - ஏரினுடைய, வளம் - மிகுதியையுடைத்தாய், ஒண் - தர்ஶநீய மான, கழனி - கழனியையும், பழனம் - நீர்நிலங்களையுமுடைத்தான, தென், திருப்பேரெயில் - திருப்பேரெயிலாகிற, மாநகர் - மஹாநகரத்தை, சென்று - சென்று, சேர்வன் - கிட்டிவிடக்கடவேன். (௯)

|| (பா) திருப்பேரெயில்.

ஆறு ;—(சேர்வன்சென்று) " இப்போதே தானே யெழுந்தரு ளுகிறானிறே, இப்படிப்பதறவேணுமோ" என்றும், "போகைதானு மீடல்ல " என்றும் தோழிமாருமன்னையருஞ்சொல்ல ; நீங்களென் னையொன்றும் தேற்றவேண்டா. " போகைக்குநீங்கள் சொல்லுகிற விரோதமென் ; போனால் வரக்கடவ விரோதமுண்டோ " என்றி வள்சொல்ல, "உன்னுடைய தைர்யசாதுர்யாதிகளுக்குப்போராது" என்று அவர்கள்சொல்ல, அவனுடைய ஸௌந்தர்யஸௌஶீல்யகா ருண்யாதி குணங்களாலே யென்னுடைய தைர்யசாதுர்யாதிகள் அபஹ்ருதங்களாயிற்றின ; ஆதலால், அதிஸம்ருத்தமாய திரமணீ யமாய் என்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்காக அவன் வந்தெழுந்தருளி யிருந்த தென்திருப்பேரையிலே சேர்வன் சென்றென்கிறாள். (௯)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு; நீங்களினியென்னைத் தேற்றி. ப்ரயோஜநமில்லை, தென்திருப்பேரையிலே போய்ப் புகக்கடவே னென்கிறாள்.

(சேர்வன்சென்று) உன்னாற்றாமையாலே சில சொல்லுகிறாயா கில் இது கடைப்படவற்றோவென்ன ; அவஶ்யமங்கே புக்கல்லது விடேனென்கிறாள். (என்னுடைத்தோழிமீர்காளித்யாதி) எனக்கா யிருப்பாரும், என்னைத்தங்களுக்காக நினைத்திருப்பாரு மொன்றும் சொல்லவேண்டா; தோழிமாரோடுதாய்மாரோடு வாசியில்லைகாணும் இவளைத்தேற்றப்போகாமைக்கு; அஜ்ஞரோ வ்யவஸிதரை யுபதே ஶத்தாலே மீட்கப்பார்ப்பார். விஷயாதீநமாக வருகிறத்தை ஸாதநத் திலே சிலவெழுதுகிறவர்களோ வெனக்கு வார்த்தைசொல்லுவார். இவள்தன்னை மறந்து, அவனையே பார்த்துப் பேசுகிறாள் ; அவர்கள் அவனைமறந்து, தந்தாமையே பார்த்துமீட்கத் தேடுகிறார்கள்.

(நீர்களுரைக்கின்றதென்னிதற்கு) கலங்கினரோ ! தெளிந்தா ரைத்தேற்றுவார். நீங்கள் நிற்கிற நிலையெது, என்னிலையெது. போகையிலே துணிந்திருக்கிறவென்னை, " புறப்படுகைபழி " என் றிருக்கிற நீங்கள் சொல்லுவதென் (இதற்கு) எனக்கோடுகிறதசை க்கு. ஆனாலும், நெஞ்சுமடக்கமுமுடையார்க்கு இதுவார்த்தையோ; நாங்கள்சொன்னபடி செய்து எங்கள் வழியேயொழுகவேண்டாவோ வென்ன (நேஞ்சுநிறைவுமெனக்கிங்கில்லை) அதுவேணுமாகி லங்கே போய்ச்சொல்லுங்கோள். மநஸ்ஸும் அடக்கமும் அவன்பக்கலின. நிறைவாவது-அடக்கம். நெஞ்சாவது-அது இட்டுவைக்கும் கலம்.

(கார்வண்ணனித்யாதி) நெஞ்சும் நிறைவுமெனக்காம்படியா யோ அவன்படியிருக்கிறது, (கார்வண்ணன்) தாய்மார் தோழிமாரா னவர்கள் வார்த்தைகேளாதபடியாக வடிவுபடைத்தவன். வெறும் வடிவழகேயோ வுள்ளதென்னில் (கார்க்கடல் ஞாலமுண்ட)' தளர்ந் தார்தாவளம். ஆபத்துவந்தால் ரக்ஷித்துவிடுமத்தனேயோவென்னில் (கண்ணபிரான்) தன்னைப் பிறர்க்காக்கிவைக்கு முபகாரகன். (வந்து வீற்றிருந்த) தன்னைஶ்வர்யமெல்லாந் தோற்றும்படியிருந்த.

(ஏரித்யாதி) ஏரினுடைய ஸம்ருத்தியையுடைத்தாய், அழகி தான கழனியையும் நீர் நிலங்களையுமுடைய திருப்பேரெயிலாகிற மாநகரிலே-சென்று-சேர்வன், உங்கள் தடைக்குமீளுதல், அவ்வழி யில் நிற்றல் செய்யேன். என்னைத்தேற்றவேண்டா. வளமென்று- மிருதிக்குப்பேர். (௯)

பத்தாம்பாட்டு.

நகரமும்நாடும்பிறவும்தேர்வேன் நாணெனக்கில்லை என்தோ ழிமீர்காள்! * சிகரமணிநெடுமாடநீடு தென்திருப்பேரையில்வீற்றி ருந்த * மகரநெடுங்குழைக்காதன்மாயன் நூற்றுவரை அன்றுமங்க நூற்ற * நிகரில்முகில்வண்ணன்நேமியான் என் நெஞ்சம்கவர்ந்து எனையூழியானே ? (௧0)

ப.—அநந்தரம், ஆஶ்ரிதவிரோதி நிரஸநஶீலனாய்த் திருப்பேரையிலேயி ருந்த மகா நெடுங்குழைக்காதன் என்னெஞ்சை யபஹரித்து அநேககாலமுண் டு, அவனிருந்த நகரத்தோடு நாட்டோடு மற்றுமுள்ள தேசங்களோடு வாசியற நானேபுறப்பட் டாராயக்கடவேன், எனக்கு லஜ்ஜையில்லை யென்கிறாள்,

(இ-ள்.) என் - எனக்கு, தோழிமீர்காள் - தோழிமாரென்று பெயராய் ஹிதஞ்சொல்லி நியமிக்கத்தேடுகிறவர்களே; சிகரம் - சிகரங்களையுடைத்தாய், மணி - மணிமயமாய், நெடு - ஓங்கின. மாடம் - மாடங்களையுடைத்தாய், நீடு - சிரகாலஸ்த்தாயியான, தென் - தென், திருப்பேரையில் - திருப்பேரையில், வீற்றிருந்த - எழுந்தருளியிருக்கிற, மகரம் - மகராகாரமான, நெடு - பெரிய, குழை - ஆபரணத்தையுடைய, காதன் - கர்ணபாஶங்களையுடையனாய், மாயன்- அவ்வாபரண ஶோபையோபாதி ஆஶ்சர்யங்களான குணசேஷ்டிதங்களையுடை யனாய், நூற்றுவரை - ஆஶ்ரிதவிரோதிகளான துர்யோதநாதிகளை, அன்று-

பாரதஸமரம் ப்ரவ்ருத்தமானவன்று, மங்க - நசிக்கும்படி, நூற்ற - மந்த்ரித்து, அத்தாலே, நிகர் - ஒப்பு, இல் - இல்லாத, முகில் - காளமேகநிபமான, வண்ணன் - வடிவிற்புகரையுடையனாய், நேமியான் - ஆஸ்ரிதஸம்ரக்ஷணார்த்தமான திருவாழியையுடையனானவன், இவ்வபதாநத்தைக்காட்டி, என் - என், நெஞ்சம் - நெஞ்சை, கவர்ந்து-அபஹரித்துக்கொண்டு, எனையூழியான் - எத்தனைகாலத்தான், ஆனபின்பு, நகரமும் - அவனிருந்தநகரமும், நாடும் - அத்தோடு சேர்ந்த நாடும், பிறவும் - மற்றுமுண்டான பத்தநாதிகளும், நானே, தேர்வேன் - போயாராயக்கடவேன், நாண் - "இவர்கள் பழிக்கும்படி யிவர்கள் ஸந்நிதியிலே போகும்படியென்" என்கிற ஸ்த்ரீத்வப்ரயுக்தமான லஜ்ஜை, எனக்கு - எனக்கு, இல்லை - இல்லை. (கO)

ஆறு ;— (நகரமும்) அவனெழுந்தருளியிருந்த தென்திருப்பேரையிலே நீயே போகில் ஊரும் நாடும் மற்றுமெல்லாரு முன்னைப் பழிசொல்லாரோவென்று தோழிமார் சொல்ல ;

"அவர்களையிறே நான் தேடுகிறது" என்றிவள் சொல்ல, "பழி சொன்னாலுனக்கு லஜ்ஜையாகாதோ" என்று பின்னையும் தோழிமார்சொல்ல; அவனுடைய நிரதிஶயாஸ்சர்ய ஸௌந்தர்யாதி கல்யாண குணங்களாலும், அவனுடைய வாஸ்சர்ய திவ்யசேஷ்டிதங்களாலும் என்னுடைய நெஞ்சும் லஜ்ஜையு மபஹ்ருதமா யெத்தனைகால முண்டு; ஆதலாலினித்தென் திருப்பேரையிலே நானேயாகிலும் போமத்தனையென் றத்யவஸிக்கிறாள். (கO)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. "இருந்ததே குடியாக நாட்டாருன்னைப் பழிசொல்லார்களோ" என்று தோழிமார்கள்சொல்ல ; அவர்களன்றோ வெனக்குத் தேட்டமென்கிறாள்.

(நகர்முநாடுமித்யாதி) உன் துணிவு துணிவாக, நாட்டார் நகரத்தார் மற்றுமுள்ளாரு மெல்லாமறிந்து பழிசொல்லுகிறார்களிறே யென்ன; எனக்குத்தான் அவனையோதேட்டம்; நகரம், நாடு, பத்தநாதிகள், இவற்றிலுள்ளாருடைய பழியேயன்றோ வெனக்குத் தேட்டம். (தேர்வேன்) தேடுகிறேனென்றபடி. நீங்கள் சேரிகோளாகில் அவன் தானுகவாரானாகில், அவனுடனே கூட்டிப் பழிசொல்லுகிற விவர்களன்றோ ஸத்தையை நோக்குகிறார்கள் ; "அலரெழிலாருயிர் நிற்கும்" என்றானிறே; பிறவும்-மற்றுமுள்ளனவும்.

(நாணெனக்கில்லை) லஜ்ஜை யிங்கில்லாமையேயன்று, அங்குப் போனாலுமில்லை; இவ்வயத்திதன்னில் முதலிலே யில்லாமை. (என் தோழிமீர்காள்) இது நானுங்களுக்குச் சொல்லி யறியவேண்டும் படியாவதே.

(சிகரமித்யாதி) பர்வதசிகரங்களைக் கொடுவந்து வைத்தாப் போலே ஒக்கமுடைத்தாய், ரத்நமயமான மாடங்களையுடைய பெரிதான தென்திருப்பேரையிலே வீற்றிருந்த (மகரநேடுங்குழைக்காதன்) மகராகாரமான பெரியவாபரணத்தையுடைய கர்ணபாசங்களையுடையவன். அவனுடைய வோரோரவயவங்களிலே படிந்தாரை மீட்கலாயோவிருப்பது. (மாயன்) சொல்லிச்சொல்லாத தேஹகாந்தியையு மாத்மகுணங்களையும் நினைக்கிறது. (மாயன்) ஆஸ்ரிதபக்ஷபாதம். (நூற்றுவரையன்று மங்கநூற்ற) சிலரை யழிக்கநினைத்தால், ஒன்றும் சேஷியாதபடி யழிக்குமவன். துர்யோதநாதிகளை பாரதஸமரம் ப்ரவ்ருத்தமானவன்று நசிக்கும்படி மந்த்ரித்த.

(நிகரில்முகில்வண்ணன்) ஒப்பில்லாத காளமேகம்போலேயிருக்கிறவடிவழகு; இத்தால் - விரோதியைவளர்த்தாலும் விடவொண்ணாதவடிவழகென்கை. (நேமியான்) ஆஸ்ரிதவிரோதிகளைப் போக்கும்போது பகலை யிரவாக்கும் பரிகரத்தையுடையவன். திருவாழியைக் கொண்டு பீஷ்மாதிகளையும் தொடராநிற்குமிறே. (நிகரில் முகில்வண்ணன் நேமியான்) துர்யோதநாதிகளுக்கு மின்னுமிடியுமாய், பாண்டவர்களார்த்திதீர வர்ஷித்து நின்றபடி. அவனுன் விரோதிகளைப் போக்கிக் கூடநினையாதபின்பு, அவன் தானே வந்து உன்காலிலே விழும்படி மந்த்ரித்தாலோ வென்ன (என்னெஞ்சங்கவர்ந்தேனையூழியானே) அதுக்கிடான பரிகரமிழந்து நானெத்தனை காலமுண்டு. வடிவழகையு மாயுதச்சேர்த்தியையுங் காட்டி யென்னெஞ்சை யபஹரித்துப்போ யெத்தனைகாலத்தான். (ஏனையூழியானே) அநேககல்பமுண்டு. துர்யோதநாதிகளை வெல்ல வெண்ணினாப்போலே என்னெஞ்சை யபஹரிக்கைக் கெத்தனைகாலமெண்ணினாறே. (௧௦)

பதிஞேராம்பாட்டு.

ஊழிதோறூழி உருவும்பேரும் செய்கையும்வேறவன்வையம் காக்கும் * ஆழிநீர்வண்ணனை அச்சுதனை அணிகுருகூர்ச் சடகோபன்சொன்ன * கேழிலந்தாதி ஓராயிரத்துள் இவை திருப்பேரையில்மேயபத்தும் * ஆழியங்கையனை ஏத்தவல்லாரவர் அடிமைத்திறத்தாழியாரே.

ப —அநந்தரம், இத்திருவாய்மொழியைச்சொல்லி ஸ்துதிக்கவல்லவர்கள் பகவத்கைங்கர்யத்தி லவகாஹநத்தையுடையவராவரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

(இ-ள். ஊழிதோறூழிதோறு - கல்பந்தோறும் கல்பந்தோறும், பேருமுருவுஞ்செய்கையும் - நாமரூபவ்யாபாரங்களை, வேறவன் - வேறாகவுடையனாய்க்கொண்டு, வையம் - ஜகத்தை, காக்கும் - ரக்ஷிக்குமவனாய், ஆழிநீர் - ஸமுத்ரஜலம்போலேபசுத்த, வண்ணனை - அஸாதாரணவிக்ரஹத்தையுடையனாய், அச்சுதனை - ரக்ஷ்யவர்க்கத்தை நழுவவிடாதவனானவனை, அணி - ஜகத்துக்கலங்காரமான, குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, கேழ் - ஒப்பு, இல் - இல்லாத, ஓரந்தாதி, ஆயிரத்துள், திருப்பேரையில் - திருப்பேரையில், மேய - சேர்ந்த, இவைபத்தும் - இப்பத்தைக் கொண்டு, ஆழியங்கையனை - கையுந்திருவாழியுமான ஸர்வேஶ்வரனை, ஏத்த - ஸ்துதிக்க, வல்லாரவர் - வல்லரானவர்கள், அடிமைத்திறத்து - மோக்ஷவ்ருத்திவிஷயத்தில், ஆழியாரே - அவகாட(மாஞ)ரே. (கக)

இது - எண்சீராசிரியவிருத்தம்.

ஆறு :—(ஊழிதோறூழி) ப்ரதியுகம் பிந்நரூப நாமசேஷ்டிதனாய்க்கொண்டு ஸ்வாஸாதாரண திவ்யரூபேணவதீர்ணனாய் ஆஶ்ரிதரை ரக்ஷித்த நளும் ஸ்வபாவனாயிருந்த வச்சுதனை யணிகுருகூர்ச்சடகோபன் சொன்ன, ஸகலகுணங்களாலும் நிருபமமாயிருந்த திருவாய்மொழியில் தென்திருப்பேரையைச்சொன்ன வித்திருவாய்மொழியைக்கொண்டு, அவனுடைய, திருவாழியுங்கையுமாயிருக்குமழகை யேத்தவல்லார், திருவாழிபோலொக்க வடிமைசெய்யப் பெறுவாரென்கிறார் (கக)

ஈடு;—நிகமத்தில் - இத்திருவாய்மொழி கற்றார் பகவத்கைங்கர்யத்திலே மிகவு மவகாஹித்தாரென்கிறார்.

(ஊழியித்யாதி) ஆஶ்ரித ரக்ஷணார்த்தமாக, கல்பந்தோறும் கல்பந்தோறும், திருமேனியும் திருநாமமும் சேஷ்டிதங்களும் வேறு படக் கொள்ளுமவன் இதுக்குப்ரயோஜநமென்னென்னில் (வையங்காக்கும்) ஜகத்ரக்ஷணார்த்தமாக. (ஊழிதோறூழியித்யாதி) அப்படியே ரக்ஷித்திலனாகில் இப்படி விஶ்வஸிப்பாரில்லையே யிவனை "ரக்ஷகன்" என்று. (ஆழிநீர்வண்ணனை) நோக்காதே படுகொலையடிக்கிலும் விடவொண்ணாதவடிவு; வேறுபடாதே யங்குள்ளார்க்குக் காட்சிகொடுக்கு மஸாதாரண விக்ரஹத்தைச் சொல்லுகிறது. (அச்சுதனை) அவ்வடிவு தனக்கொருநாளு மழிவில்லையென்னுதல், பற்றினாரை யொருநாளும் விடானென்னுதல்.

(அணிகுருகூர்) ஆபரணமானதிருநகரி. (கேழிலந்தாதி) ஒப்பில்லாத வந்தாதி. தம்மாலும் பிறராலும் மீட்கவொண்ணாதபடி பகவத்விஷயத்திலுண்டான வ்யவஸாயத்தைச்சொன்ன பத்தாகையாலே ஒப்பின்றிக்கே யிருக்கிறபடி. ஒப்பில்லாத வாயிரத்துள் திருப்பேரையிலே சேர்ந்த விப்பத்தைக்கொண்டு (ஆழியங்கையனையேத்த வல்லார்) இதெல்லாவற்றாலும் சொல்லிற்றாயிற்று - கையுந்திருவாழியுமானவழகிலே யிவரகப்பட்டபடி. அல்லாதவழகுக ளொருபடியுமிதொருபடியுமாயிருக்கை; இது கைமேலே யநுபவித்துக்காணலாமே. (அவரடிமைத்திறத்தாழியாரே) அடிமைவர்க்கத்தில் திருவாழியின் தன்மையையுடையவரென்னுதல், அடிமையிடையாட்டத்தி லொருவரால் மீட்கவொண்ணாதபடி யுட்புகுவரென்னுதல்.(கக)

ஏழாம்பத்தில் மூன்றாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாம்பத்து

நான்காந்திருவாய்மொழி

ஆழியெழ - ப்ரவேஶங்கள்.

ஆறு;—(ஆழியெழ) இப்படி தென்திருப்பேரையிலே தாமே போகவஶ்யவஸித்திருந்த ஸமயத்தில் (க) "यदा व्रजति संग्रामं ग्रामार्थे नगरस्य वा । गत्वा सौमित्रिसहितो नाविजित्य निवर्तते ॥ संग्रामात् पुनरागम्य कुञ्जरेण रथेन वा । पौरान् स्वजनवन्नित्यं कुशलं परिपृच्छति - யதாவ்ரஜதிஸங்க்ராமம் க்ராமார்த்தேநகரஸ்யவா । கத்வா ஸௌமித்ரிஸஹிதோ நாவிஜித்யநிவர்த்ததே ॥ ஸங்க்ராமாத்புநராகம்ய குஞ்ஜரேண ரதேநவா । பௌராந்ஸ்வஜநவந்நித்யம் குஶலம்பரிப்ருச்சதி" என்னும் ப்ரக்ரியையாலே தென்திருப்பேரையிலே ம்ருகயார்த்தமாக வெழுந்தருளின பெரியபெருமாள் விஜயலக்ஷ்மீ பரிவ்ருதராய்க்கொண்டெழுந்தருளினபடியைக்கண்டு நிரதிஶயப்ரீதியுக்தராய் ஸம்ப்ராந்தமாநஸராய்க்கொண்டு, (உ) "तं दृष्ट्वा शत्रुहन्तारं महर्षीणां सुखावहम् । बभूव हृष्टा वैदेही भर्तारं परिषस्वजे - தம்த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் । பபூவஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம்பரிஷஸ்வஜே" என்னும் ந்யாயத்தாலே ப்ரதிகூலநிரஸநஜநிதஶ்ரமத்துக்கு ஶிஶிரோபசாரமாகப் பெரியபெருமாளோடே ஸம்ஶ்லேஷித்து, ததீய திவ்யசேஷ்டிதங்களைச்சொல்லி; என்னப்பன் செய்தருளினபடியென்? பிரான்செய்தருளினபடியென்னென்றநுபவிக்கிறார். *

ப.—நாலாந்திருவாய்மொழியில், விஶ்லேஷஜநிதமான, வார்த்தியாலே ப்ராப்தித்வரையை யுடையவிவர்; தம்முடைய வார்த்திஹேதுவான ப்ரபல ப்ரதிபந்தகங்களைப் போக்குகைக்கு, ஸர்வஶக்தியான ஸர்வேஶ்வரனையொழிய ஸமர்த்தரில்லையென்றறுதியிட்டு; அவனுடைய த்ரைவிக்ரம வ்யாபாரத்தையும், அம்ருத மதநத்தையும், பூம்யுத்தாரணத்தையும், ஜகந்நிகரணத்தையும், பாரதஸமரப்ரவர்த்தகத்வத்தையும், ஹிரண்யவதத்தையும், லங்காபங்கத்

(க) ரா-அயோ-உ-௩௭.

(உ) ரா-ஆர-௩௦-௪௦.

தையும், பாணயுத்தத்தையும், ஜகத்ஸ்ருஷ்டிப்ரகாரத்தையும், கோவர்த்தனோத்தாரணத்தையு மநுஸந்தித்து, ஏவம்விதவிஜயாபதாநவிஶிஷ்டனான ஸர்வேஶ்வரனுடைய விரோதி நிரஸந ஸாமர்த்த்யத்தை யநுஸந்தித்தருளுகிறார்.

ஈடு;—கீழிற்றிருவாய்மொழியில் - பகவத்விஷயத்திலே இவர் அபஹ்ருதசித்தரானபடி சொல்லிற்று; கீழிவர்க்குப் பிறந்த வஸாதம், ஒன்றைக்கொடுத்து மாற்றுதல், ஒருவராலே பரிஹரித்தல் செய்யுமதொன்றன்றிறே; "இனியிவர்க்குச் செய்யலாவதென்" என்றுபார்த்தருளி, "ஒன்றுகொடுக்கலாவது இதுக்குமேலில்லையிறே" என்றுபார்த்துத் தன்னுடைய விஜயபரம்பரைகளைப் பத்தும்பத்தாகக் காட்டிக்கொடுக்கக் கண்டநுபவித்து ஹ்ருஷ்டராகிறார்.

அவனுக்குறுப்பாமன்று தாமும்வேண்டி, அவனுக்குறுப்பாகாதவன்று தாமும் வேண்டாவென்றிருக்கும் ;—* வளவேழுலகிலாழ்வாரிறே இவர்தாம்; தம்மையழியமாறியும் அத்தலைக்கு நன்மைதேடுமவரிறே; இப்படி யிவர் ப்ரக்ருதி யறியுமவனாகையாலே, தன்னுடைய வபதாநங்களைக்காட்டி யிவருடைய விழவெல்லாந் தீரும்படி ஸமாதாநம்பண்ண, அநுபவித்துத் தலைக்கட்டுகிறார். பூதகாலத்திலுள்ளவையடங்கலும் ஸமகாலத்திற்போலே ப்ரத்யக்ஷவிஷயமாம்படிபண்ணிக்கொடுத்தான். அடியிலே யிவர்தாம் ஸாக்ஷாத்கரிக்கவல்லராம்படி பண்ணிக்கொடுத்தானிறே. * மயர்வறமதிநலமருளினபின்பும் இவ்வளவும்வர வாஸனைபண்ணுவித்தானே, ஆகையா லிவர்க்கொரு குறைகளில்லையே.

அன்றிக்கே, கீழே "பேரெயில்சூழ்கடல் தென்னிலங்கை செற்றபிரான்" என்று - ராமாவதாரவிஜயம் ப்ரஸ்துதமாகையாலே, அவ்வழியாலும் எல்லாவவதாரங்களிலுமுண்டான விஜயங்களை யநுஸந்தித்து; ராமாவதாரத்தில் விஜயங்களைக் கண்டுகக்கும் சக்ரவர்த்தியைப்போலவும், க்ருஷ்ணாவதாரத்தில் விஜயங்களைக் கண்டுகக்கும் ஸ்ரீவஸுதேவரைப்போலவும் இவருமுகந்துபேசுகிறாரென்னுதல்.

(க) [ஸஹம்வை-நங: - அஹம்புர:] என் ப்ரக்ருதியை யறிந்து என்வழியே போந்தநீ, "பெருமாள்காடேறப்போக" என்றால்

(க) ரா-அயோ-கஉ-கoரு.

நான் ஜீவிப்பேனென்று சொன்னேயே. [[illegible] - தேவகுமாரரூபம்] அதுகிடக்க, இவரையே நீதான் "காடேறப் போக" என்கிறது. "இவர்க்குமவ்வளவேயோ" என்று சிறியாத்தான் கேட்க, "'கண்ணெச்சிலாம்' என்று தரம்போராதாரையொப்பாகச் சொல்லி ரிஷி கரிப்புசுகிறான்" என்கிறார். [[illegible] - அலங்க்ருதம்] அத்தாலும் வெறும்புறங்கிடீர் ஒருபோலி சொல்லலாவது; ஒப்பித்தாலொக்கச் சொல்லலாவாரில்லை. [[illegible] - ஸம்ஸ்தம்] இவனுக்கிரண்டுபடியும் உத்தேச்யமாயிருக்கிறபடி. [[illegible] - ஆவ்ராஜந்தம்] புஷ்பமலரும்போது எங்குமொக்கப் பிறக்கும் விகாஸம்போலே. அதுவும் வண்டைநோக்கியிறே யலருவது, இவரும் போக்தாக்களைக் குறித்திறே. [[illegible] - நந்தாமித்யாதி] கண்டபடியே யிருக்கச்செய்தே, காணுதுகண்டாரைப்போலேயாயிற்று நாடோறும் நாடோறும் க்ஷணந்தோறும் க்ஷணந்தோறுமுகக்கும்படி. [[illegible] - தர்ஸநேந] அணைத்தல், வார்த்தைசொல்லுதல் செய்யவேண்டா; காட்சியேயமையும். கரைபுரண்டவநுபவமுள்ளவிடத்திற்போலேகாணும் ப்ரயோஜநம். (க) * [illegible] - ஸதாபஸ்யந்தியிறே. [[illegible] - பவாமித்ருஷ்ட்வாசபுநர்யுவேவ] அறுபதினாயிரம் ஸம்வத்ஸரம் வயஸ்ஸைப்புக்கு வ்ருத்தனான சக்ரவர்த்தி, பெருமாளைக்கண்டபின்பு, பெருமாளுக்கும் தனக்கும் வாசி தெரியாதபடியானான். (உ) "காமனைப்பயந்தகாளை" என்னுமா போலே. தன்னையநுபவிப்பாரையும் தன்னைப்போலேயாக்கி யுஜ்ஜீவிப்பிக்கும் விஷயம்போலேகாணும். (ந) "[illegible] - யுவேவவஸுதேவோபூத் விஹாயாப்யாகதாம்ஜராம்" என்னும்படியானாரிறே ஸ்ரீ வஸுதேவரும்.

"கீழே 'கண்ணபிரானுக்கென்பெண்மை தோற்றேன்' என்றுகொண்டு - இத்தலையில் தோல்விக்கு எதிர்த்தலையான வத்தலையில் விஜயங்களை யநுஸந்திக்கிறார்" என்று பிள்ளை திருநறையூரரையர் பணிக்கும்படி. *

(க) வி. ஸ.　　(உ) ௧௦-உ-அ.
(ந) வி. பு ரு-உ௦-ருஉ.

முதற்பாட்டு

ஆழியெழச் சங்கும்வில்லுமெழ * திசை
வாழியெழத் தண்டும்வாளுமெழ * அண்டம்
மோழையெழ முடிபாதமெழ * அப்பன்
ஊழியெழ உலகம்கொண்டவாறே. (க)

ப;—முதற்பாட்டில், திருவுலகளந்தருளின ப்ரகாரத்தை யநுஸந்தித்து ஸந்துஷ்டாரகிறார்.

(இ-ள்.) திருவுலகளந்தருளவளருகிறபோது, திவ்யாயுதங்கள், பரிவாலே, (க) "ஸ்வபராக்ராய-ஸ்பு ராதாயுத:" என்கிற கணக்கிலே, ஆழி - ப்ரதாநனான திருவாழியாழ்வான், எழ - முன்னேயுயர்ந்துதோன்றவும், அநந்தரம், சங்கும் - ஸ்ரீபாஞ்சஜந்யமும், வில்லும் - ஸ்ரீஸார்ங்கமும், எழ - தோன்றவும், தண்டும் - கதையும், வாளும் - நந்தகமும், எழ - தோன்றவும், இவ்வாயுதபூர்த்தியைக் கண்டுகொந்து, (உ) "ஸவெஜஸ்ஸாராணா - ஸங்கைஸ்ஸாராணும்" என்கிறபடியே. திசை - திக்குத்தோறும் நின்றநின்றநிலையிலே வாழி - தேவமநுஷ்யாதிகளுடைய மங்களாஸாஸநகோஷம், எழ - கிளம்பும்படியாகவும், அவிளம்பமாக வளர்ந்தபடியாலே, அண்டம் - அண்டகபாலம் பிளந்து, ஆவரணஜலம், மோழை - குமிழி, எழ - கிளம்பும்படியாகவும், வளர்ந்தருளின சடக்காலே, முடி - திருமுடியும், பாதம்-எடுத்ததிருவடியும், எழ - ஒக்கக்கிளம்பும்படியாகவும், ஆஸுரப்ரக்ருதியான மஹாபலி யபிமாநம்நடந்த காலம்போய், ஊழி - விலக்ஷணகாலம், எழ - கிளம்பும்படியாகவும், அப்பன் - ஸர்வஸ்வாமியான ஸர்வேஸ்வரன், உலகம் - லோகத்தை, கொண்ட - அளந்துகொண்ட, ஆறு - ப்ரகாரம். ஏ - இருந்தபடியே.

மோழை - குமிழி. (க)

ஆறு:—சதுர்த்தஸபுவநாந்தர் வர்த்திகளான ஸர்வாத்மாக்களினுடைய ஸம்ஸ்தாயமாநனாய், ஸ்ருஷ்ட்யந்தமென்னும்படி பிதுரிதாண்டபித்திகமாக ஸம்வர்த்தி(யி-ர)ததிவ்யாவயவ திவ்யாயுதோபேதனாய்க்கொண்டு என்னப்பன் மஹாபலியைஜயித்து லோகத்தை யளந்துகொண்டருளினபடி யென்னென்கிறார். (க)

ஈடு ; அவ ;—முதற்பாட்டு; அவையெல்லாவற்றுக்கு மடியாக, திருவுலகளந்தருளின பெரிய விஜயத்தை யநுஸந்திக்கிறார்.

(க) வி-பு-ரு-ஙு-கஎ. (உ) வி-த-மாங்கள்யஸ்தவ.

(க) " தேவாஸ்ஸ்வஸ்தாநமாயாந்தி நிஹதா தைத்யதாநவா: । ந பயம் வித்யதே கிஞ்சிஜ்ஜிதம் பகவதா ஜகத் - தேவாஸ்ஸ்வஸ்த்தாநமாயாந்தி நிஹதாதைத்யதாநவா: ॥ நபயம்வித்யதேகிஞ்சிஜ்ஜிதம்பகவதாஜகத் " என்கிறபடியே தனக்காக்கிக்கொண்ட செயலிறே. ராவணனைப்போலே யெதிரியாக்கிக்கொல்லாதே, குணலவமுண்டாகையாலே நின்றநிலையிலே தோற்பித்துக்கொண்டபடி.

நாயகனுக்கு அடியாரிறே வென்று கொடுப்பார் (ஆழியெழ) " த்ரைலோக்யத்தையும் காற்கீழேயிட்டுக்கொள்ளவேணும் " என்னும் கறுவுதலுள்ளது ஸர்வேஶ்வரனுக்கேயிறே, அவ்வபிஸந்தியின்றிக்கே யிருக்கச்செய்தேயும் அவனுக்குமுன்பே பரிகரம் முற்பட்டபடி. " காட்டுக்குப்போம் " என்றுநியமித்தது பெருமாளையே யாயிருக்க, இளையபெருமாள் முற்பட்டாப்போலே. (உ) "பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தே த்ருமசீரைரலங்க்ருத: - பூர்வஜஸ்யாநுயாத்ரார்த்தேத்ருமசீரைரலங்க்ருத: " என்றுகொண்டுபோக்குக்கீடாக முற்கோலி யலங்கரித்துக்கொண்டு நின்றாரிறே. (ஆழியெழ) தோற்றத்திலே யரசுபோராயிற்று; * ஹேதிராஜனிறே-திவ்யாயுதங்களுக்கெல்லாம் ப்ரதாநமிறே திருவாழி.

பரிகரம்நிற்க மஹாராஜர் ராவணன்மேலே பாய்ந்தாப்போலே' " பையல்முடியுந்தானுமாய்ப் பெருமாள்திருமுன்பேநிற்பதே, ஈரரசாயிற்றே" என்றுபொறாமையாலே மேல்விழுந்தாரிறே. (ந) [ஸ்வயம் ஹரிவரோ நாத: - அதஹரிவரநாத:] தம்மோடொக்கவினைசெய்ய வல்லபேர் 'தனித்தனியேயநேகரிறே [ப்ராப்யஸங்க்ராமகீர்த்திம் - ப்ராப்யஸங்க்ராமகீர்த்திம்] இவர்களோடுகூடி நின்றொத்தபோராகவொண்ணாது; தாசித்தலையிலே யோரேற்றம்செய்து தரம்பெறவேணுமென்றிருந்தார். பூசல்தலையிலே பெருமாளுக்குண்டான கீர்த்தியையும் தந்தலையிலே யேறிட்டுக்கொண்டார். [நிஷ்பபாத - நிஷ்பபாதம்] அத்தலையிலு மவனோடொக்க வினைசெய்ய வல்லாரநேகரிறே. " அவன்கீழ்த்திரியுமவர்கள் தரம்போரார் " என்று அவன்றன்னோடே பொருதபடி. [ஆஜௌ - ஆஜௌ]

(க) வி-பு-

(உ) ரா-ஸு-நந-உக.

(ந) ரா-யு-சo-உ.

அவர்களைப்போலே வழியல்லாவழியே யிளைப்பிக்கையன்றிக்கே செவ்வைப்பூசல்செய்திளைப்பித்தபடி. [𑌯𑍋𑌜𑌯𑌿𑌤𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑍇𑌣 - யோஜயித்வாஶ்ரமேண] இதுக்கு முன்பு கூடாததொன்றே கூட்டினார். [𑌗𑌗𑌨𑌮𑌤𑌿𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌲𑌙𑍍𑌘𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 - ககநமதிவிஶாலம்லங்கயித்வா] பரப்பையுடைத்தான வாகாஶத்தைத்திறலாலே வருத்தமறக்கடந்தார், [𑌅𑌰𑍍𑌕𑌸𑍂𑌨𑍁𑌃 - அர்க்கஸூநு:] மீட்சியில் தம் வரவு தெரியாதபடிமீண்டார். பிறப்புக்கீடாகச்செய்தார். தன்னிலமிறே; ஆதித்யனோரிடத்தினின்று மோரிடத்தேறப்போம்போது தெரியாதிறே. [𑌹𑌰𑌿𑌵𑌰𑌗𑌣𑌮𑌧𑍍𑌯𑍇 - ஹரிவரகணமத்யே] "இவர்களிலொரு வ்யாவ்ருத்திதோற்றவொண்ணாது" என்று இவர்கள் நடுவேநின்றார். [𑌰𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌂 𑌜𑌗𑌾𑌮 - ராமபார்ஶ்வம்ஜகாம] தூசித்தலையிலே மதிக்கவொருவினைசெய்தாரன்றே முன்னிற்கப்பெறுவார்" என்று பெருமாள் பார்ஶ்வத்திலே வந்துநின்றார்.

(ஆழியெழ) "ஆயிரக்காதம் பறப்பதின்குட்டி ஐஞ்ஞூற்றுக்காதம் சிறகடிக்கொள்ளும்" என்னுமாபோலே முற்கோலிவளர்ந்தபடி. சிறகடிக்கொள்ளுகை யாவது - பின்புதூரப்பறக்கைக்கு யோக்யமாம்படி பால்யத்திலேயப்யஸிக்கை. பயஶங்கையில்லாதவிடத்தேயிருந்து பயப்படக்கடவார், பயஸ்தாநத்தைக்கண்டால் பேசாதிரார்களிறே. பயஶங்கையில்லாதவிடத்தும் பயப்படப்பண்ணுகிறது விஷயவைலக்ஷண்யமிறே. துர்யோதநகோஷ்டியிலே க்ருஷ்ணனெழுந்தருளினபோது அவர்கள்பண்ணின வஞ்சநத்தைக்கண்டு அதிஶங்கைபண்ணி, தம்முடைய திருமாளிகையில்படுக்கையையும் தடவிப்பார்த்தாரிறே; (க) "𑌸𑌂𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍𑌨𑌾𑌸𑌨𑌂 𑌶𑍌𑌰𑍇𑌰𑍍𑌵𑌿𑌦𑍁𑌰𑌸𑍍𑌸 𑌮𑌹𑌾𑌮𑌤𑌿𑌃 - ஸம்ஸ்ப்ருஶந்நாஸநம் ஶௌரேர்விதுரஸ்ஸமஹாமதி:" என்கிறபடியே - கடல்கலங்குவது தன்னளவிலேயிறே. பிள்ளையுறங்காவில்லிதாஸர் "'மஹாமதி:' என்றது - மதிகேடரென்கிறபடியோ" என்றார். பிள்ளைதாம் பெருமாளெழுந்தருளும்போது எங்கேனுமொரு சலநம்பிறக்கில் நம்ப்ராணனைவிடுமத்தனை" என்று சொட்டையையுருவிப்பிடித்துக்கொண்டு ஸேவிப்பராம்; நம்முதலிகள் அத்தைக்கண்டு இவரை "மஹாமதிகள்" என்றழைப்பார்கள். அறிவுண்டாகையாவது - பகவத்விஷயத்திலே மதி

(க) பா. உத்.

கெடுகையிறே. (ஆழியெழ) இவன் வளர்ந்தருளுகைக்குக் கணிசித்த படியைக்கண்டு, "தனியாகவொண்ணாது" என்று பயப்பட்டுத் திருவாழியாழ்வா னொருகையாலேயேறினார்.

(சங்கும்வில்லுமெழ) தூசியேறினவர்கள் பொரப்புக்கவாறே நின்றவிளவணி கலங்கி மேலேநடக்குமாபோலே, மற்றையாழ்வார்களும் மற்றைக்கையிலே யேறினார்கள். இரைபெறாதவிடத்தேயிருந்துசீறுபாறு என்னக்கடவவர்கள் இரையுள்ள விடத்திலொருவர்க்கொருவர் விட்டுக்கொடார்களிறே. இனத்திலே யொருவன் ஜீவிக்கக்கண்டவாறே பந்துவர்க்கம் வந்து மேல்விழுமாபோலே, மற்றை திவ்யாயுதங்களும் மேல்விழுந்தபடி. (க) [இடங்கைவலம்புரிநின்றார்ப்ப] இவனுடைய வடிவழகை யநுஸந்தித்து ஸ்ரீபாஞ்சஜந்யமானது நின்றார்ப்ப. [எரியித்யாதி] அவனைப்போலார்த்துக்கொள்ளவவஸரமற்று, அக்நியையுமிழ்ந்துகொண்டு, நமுசிப்ரப்ருதிகளை வாய் வாய் என்றது திருவாழி. [விடங்காலுமித்யாதி] கிடந்தவிடத்தேகிடந்து ஶத்ருக்கள்மேலே விஷாக்நியையுமிழுமத்தனையிறே திருவநந்தாழ்வானாலாவது. [அரவணைமேற்றோன்றல்] திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடையப்ரதாநன். [திசையளப்பான் பூவாரடிநிமிர்த்தபோது] ஒருபூவைக்கொண்டாகாதே காடுமோடையு மளந்துகொண்டது. பூவையிட்டுப்பூவைக் கொண்டான் காணும். அப்படுக்கையிலே பொருந்தும் ஸௌகுமார்யத்தை யுடையவன் இக்காடுமோடையுமான ஜகத்தையளக்கப்புக்கால், இவர்களுக்கிப்படி படவேண்டாவோ. அவனிப்படியளவா நின்றால் இவர்கள் பேசாதிரார்களிறே.

(திசைவாழியெழ) "அவனுக்கென்வருகிறதோ" என்றாயிற்று திவ்யாயுதங்கள் கிளருகிறது, "அவைதனக்கென்வருகிறதோ" என்று (உ) "வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு, படைபோர்புக்கு முழங்கு மப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டு" என்னுநிற்பர்களிறே. (ங) "நின்கையில் வேல்போற்றி" என்று வேல் தனக்கும் பரியவேண்டியிருக்குமிறே. திக்குகள்தோறும் அநுகூலருடைய, "வாழிவாழி" என்கிற மங்களாஶாஸநத்வநிகள்

(க) உ-திருவ-எக. (உ) திருப்பல்-க.
(ங) திருப்பாவை-உச.

கிளர. திவ்யாயுதங்களிலும் அவனுக்கு ரக்ஷை இவர்களுடைய மங்களாஶாஸநமென்றிருக்கிறார் - திவ்யாயுதங்களுக்கு நடுவே யிவற்றைச் சொல்லுகையாலே. (திசைவாழியெழ) (க) * ஏத்தவேழுலகங்கொண்ட கோலக்கூத்தனிறே. (உ) "𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌕𑍍𑌰𑌮𑌾𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌸𑍍𑌫𑍁𑌰𑌦𑌾𑌯𑍁𑌧𑌃 - த்ரிவிக்ரம:க்ரமாக்ராந்தத்ரைலோக்யஸ்ஸ்புரதாயுத:"

(தண்டும்வாளுமெழ) "தூசித்தலையில் அவர்களே கைதொடராய்த் தரம்பெற்றுப்போக வொண்ணாது" என்று நின்றபேரணியும் குலைந்து மேல்விழுமாபோலே; "பிறப்பட்டோம், கெட்டோம்" என்றொருவர்க்கொருவர் படுகிறபடி; ஒருவர்க்கிட்ட சோற்றைப் பலராசைப்படுமாபோலே காணுமிவர்கள் படுகிறபாடு. அநுகூலன்வந்துபுகுர, (ங) "வத்யதாம் - வத்யதாம்" என்கிறவர்கள், ப்ரதிகூலருள்ளவிடத்தில் பேசாதிரார்களிறே. (ச) "என்னிதுமாயமென்னப்ப னறிந்திலன்! முன்னியவண்ணமேகொண்டளவாய்" என்று நமுசிவந்து, என் பிதா உன்வஞ்சநமறிந்திலன். நீமுன்புபோலே நின்றளக்கவேணுமென்று திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடந்தானிறே. அன்றேபிறந்து அன்றே வளர்ந்தானொருவனுடைய வ்யாபாரமிறே இதடைய; ஆகையாலே பரிகைக்கு ஹேதுவுண்டென்றபடி. (ரு) [சீராற்பிறந்தித்யாதி] உன்கையிலேபருத்திபட்ட பன்னிரண்டும்படுகிறபூமியை நீரேற்கும்போது இப்படிப் படவேணுமோவென்கிறார்.

(அண்டம்மோழையெழ) இந்த்ரனுக்காக த்ரைலோக்யமித்தனையு மளந்துகொடுப்பதாக விறேயுபக்ரமித்தது; கணிசமிவ்வளவல்லாமையாலே அண்டாவகாஶமுள்ள விடமெங்கும் சென்றளந்து, அண்டகடாஹத்திலே திருவடிசென்று (சு) "ஒண்மிதியிற்புனலுருவி யொருகால்நிற்ப" என்கிறபடியே கீழிலண்டகடாஹத்தை யுருவிநிற்க, கீழிலாவரணஜலம் மேலேயெழ. ஆவரணஜலத்துக்கு நடுவே யொருகழல்போலேயிதக்கு மித்தனையிறே அண்டம். "ரக்ஷகமானசெயலே பாதகமாகிறதோ" என்றஞ்சவேண்டும்படியிறே

(க) உ-உ-கக. (உ) வி-பு-ரு-ரு-கஎ.

(ங) ரா யு-கஎ-உஎ. (ச) பெரியா-தி-க-கஅ.

(ரு) பெரிய-திருவி. (சு) திரு-நெ-ரு.

அப்போதைக்கறுவுதல். மோழை - குமிழி. (முடிபாதமெழ) திருவபிஷேகத்தளவும் திருவடிகள் கிளர. "முடிமேலேபாதமெழ" என்றுஞ்சொல்லுவார்கள் ந்ருத்தலக்ஷணத்துக்காக.

(அப்பனூழியெழ) மஹாபலி அப்ராப்தமாக ராஜ்யம்பண்ணுகையால் வந்தபொல்லாக்காலமானதுபோய், நல்லடிக்காலமாயிற்று. நல்லடிக்காலம் கிளரும்படியாகவும் (அப்பன் - உலகங்கொண்டவாறே) மஹோபகாரகனான ஸர்வேஶ்வரன் லோகத்தைக்கொண்ட வாஶ்சர்யமிருந்தபடியென்னென்னுதல். அன்றியே லோகத்தைக்கொண்ட ப்ரகாரமிருந்தபடி யென்னென்னுதல். "அப்பன், அப்பன்" என்று ஹ்ருஷ்டராகிறாராகவுமாம். (அப்பன்) இந்த்ரனுக்கு ராஜ்யத்தைக்கொடுத்த செயலாலே யெனக்கு ஸத்தையைத் தந்தானென்கிறார். (க)

இரண்டாம்பாட்டு.

ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி * அர
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி * கடல்
மாறுசுழன்று அழைக்கின்றவொலி * அப்பன்
சாறுபட அமுதம்கொண்டநான்றே. (உ)

ப:—அநந்தரம், அம்ருதமதந வ்ருத்தாந்தத்தையநுஸந்தித்து ஸந்துஷ்டராகிறார்.

(இ-ள்.) அப்பன் - மஹோபகாரகனான ஸர்வேஶ்வரன். தேவர்களுக்கு, சாறு - மஹோத்ஸவம், பட - உண்டாம்படியாக. கடலைக்கடைந்து, அமுதம் - அம்ருதத்தை, கொண்ட - கொண்ட, நான்று - நாள், கடைந்தவேகத்தாலே, ஆறு - ஆறுகளானவை, மலைக்கு - தனக்குப் பிறப்பிடமானமலையைநோக்கி, எதிர்ந்து - எதிரே, ஓடும் - ஓடுகிற, ஒலி - ஒலியும், அரவு - வாஸுகியாகிற பாம்பினுடைய, ஊறு - உடம்பை, சுலாய் - சுற்றி, மலை - மந்தரத்திலே, தேய்க்கும் - தேய்க்கிற, ஒலி - ஒலியும், கடைகையாலே, கடல் - கடல், மாறு - இடம் வலமாகமாறி, சுழன்று - சுழன்று, அழைக்கின்ற - கூப்பிடுகிற, ஒலி - ஒலியும், ஆயிற்றின - ஆயிற்றின.

சாறு - உத்ஸவம்; ஸாரமுமாம். நான்று - நாள். ஊறு - உடம்பு. சுலாய் - சுற்றி. (உ)

ஆறு;—(ஆறு) கடைந்தருளுகிறபோது மலைகளிற்காட்டில்கடலுக்குளைகயாலே, ஆறுமலையைநோக்கி யோடுகிற வோசையும், பாம்பினுடம்பைச்சுற்றி மலையைத்தேய்க்கிற த்வநியும், பர்வதத்தைவலித்தபோது இடமும் வலமுமாய்ச் சுழன்று கோஷிக்கிற கோஷமும், என்னப்பன் நீர்கோதாம்படி பசைபடக்கடைந்து அம்ருதம்வாங்கின நாள் இவையெல்லா முளவாயினவென்று ஸமுத்ர மதநப்ரக்ரியையை யநுபவிக்கிறார். (௨)

ஈடு; அவ;—இரண்டாம்பாட்டு; ஸமுத்ரமதந வைசித்ரியை யநுஸந்திக்கிறார்.

(ஆறுமலைக்கெதிர்ந்தோடுமொலி) கடலிலே மந்தரத்தை நட்டவாறே கடல்கொந்தளித்து, ஸஹ்யம்போய்த்தாழ்ந்துகொடுத்தது; நீரானது தாழ்ந்தவிடத்தே யோடக்கடவதிறே ஆறுகளானவை மலையைக்குறித் தெதிரிட்டோடுகிற பாதை, த்வநியானது இவர்க்குச்செவிப்படுகிறபடி. இவர்க்குக் காலத்ரயத்திலுமுள்ளதெல்லாம் தெரியும்படியிறே அவன்வெளிச்சிறப்பித்தது. ஆறுஸஹ்யங்களை நோக்கி யெதிரேயோடுகிறவோசையும். (அரவூருசுலாய்மலைதேய்க்குமொலி) ஊரு - உடம்பு. சுலாய்-சுற்றி. வாஸுகியினுடைய வுடலைச்சுற்றிக் கடைகிறபோதைச் சரசரவென்கிற த்வநியும்.

(கடல்மாறுசுழன்றழைக்கின்றவொலி) மந்தரத்தைக்கொடுக்குநட்டுத்திரித்தபோது, கீழ்கடல் மேல்கடலாய்க் கிடாய்ப்பாய்த்தல்போலே திரையோடு திரைதாக்கிக்கிளருகிற வொலியும். (அப்பன்) உபகாரகன். (சாறுபட) கடலில் நீர்கோதாம்படி ப்ரயோஜநமான வம்ருதமுண்டாக. சாறென்று - உத்ஸவமாய், தேவஜாதிக்கு உத்ஸவமுண்டாம்படியாகவென்னுதல்; சாறுபட - விழவுபடவென்றபடி. நீரிலே ரஸமானபசைபடவென்னுதல், உத்ஸவமாம்படியென்னுதல். (அமுதங்கொண்டநான்றே) அம்ருதமதநம்பண்ணின காலத்தில் இவையெல்லாமுண்டாயிற்று. (௨)

மூன்றாம்பாட்டு

நான்றில ஏழ்மண்ணும்தானத்தவே * பின்னும்
நான்றில ஏழ்மலைதானத்தவே * பின்னும்
நான்றில ஏழ்கடல்தானத்தவே * அப்பன்
ஊன்றியிடந்து எயிற்றில்கொண்டநாளே. (௩)

ப;—அநந்தரம், பூம்யுத்தரண வ்ருத்தாந்தத்தை யநுஸந்தித்து ப்ரீதராகிறார்.

(இ-ள்.) அப்பன் - தன்வடிவை யழியமாறி, நீருக்கிரையாதவராஹவேஷத்தைக்கொண்ட மஹோபகாரகன், ப்ரளயார்த்தக்கதையான பூமியை, ஊன்றி - அண்டகபாலத்திலொட்டு விடும்படி குத்தி, இடந்து - இடந்து, எயிற்றில் - எயிற்றின்மேலே, கொண்ட - கொண்ட, நாள்-காலத்தில். ஏழ் - ஸப்தத்வீபரூபமான, மண்ணும் - பூபேதங்களானவை, நான்றில- நழுவாதே, தானத்த - ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின, பின்னும் - அதுக்குமேலே, அதுக்கு தாரகமான, ஏழ்மலை - ஸப்தகுலபர்வதங்களும், நான்றில - சலியாதனவாய்க் கொண்டு, தானத்த - ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின, பின்னும் - அதுக்கு மேலே, ஏழ்கடல் - ஸப்தஸமுத்ரங்களும், நான்றில - உடைந்தொழுகாதே, தானத்த - ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின. (௩)

ஆறு ;—(நான்றில) என்னப்பன், ரஸாதலகதையான பூமியைத் திருவெயிற்றிலே யிடந்தெடுத்தருளினபோது, ஸப்தத்வீபங்களும் ஸப்தகுலபர்வதங்களும் ஸப்தஸமுத்ரங்களும் தந்தாமுடைய ஸ்த்தாநங்களிலே நிஶ்சலமாயிருக்கும்படி யெடுத்தருளினான் ; இதென்ன வாஶ்சர்யம் என்னப்பனென்னப்பனென்கிறார். (௩)

ஈடு ; அவ ;—மூன்றும்பாட்டு; மஹாவராஹ வ்ருத்தாந்தத்தை யநுஸந்திக்கிறார்.

(நான்றிலவேழ் மண்ணும் தானத்தவே) ஏழுபூமியும் நாலாதபடி யெடுக்கை. ஸப்தத்வீபவதியான பூமியை யெடுக்கச்செய்தே, ஒன்றும் நாலாதே முன்புபோலே ஸ்வஸ்த்தாநத்திலே கிடக்கும்படி. இவன் பெரியவானைத் தொழிலைச்செய்யா நிற்கச்செய்தேயும், முன்பு போலே யொருகுறையற, உண்பாருடுப்பாராய்ச் செல்லுகிறபடி. ஆதாரமானவன்கூட நிற்கையாலே யிவற்றுக்கொரு குறை வாராதே. ஸப்தத்வீபமும் சலித்ததில்லை, ஸ்வஸ்த்தாநஸ்த்தங்களாயிற்றின.

(பின்னும்) அதுக்குமேலே. (நான்றிலவேழ்மலைதானத்தவே) பூமிக்காணியடித்தாப்போலே யிருக்கிற ஸப்தகுல பர்வதங்களும் ஒன்றுங்குலையாதே ஸ்வஸ்வஸ்த்தாநங்களிலே நிற்கும்படி. ஒரு கோத்ரஸ்கலநம் பிறந்ததில்லை. பின்னும் பின்னுமென்று வருகிற

துக்குக்கருத்து-இவற்றிலே யொரு வ்யாபாரமமையுங்கிடீர், அது க்குமேலே யிவையும் செய்தா னென்னைக்காக.

(நான்றிலவேழ்கடல்தானத்தவே) அவைதாம் காடிந்யத்தாலே குலையாதே யொழிந்த தென்னவுமாமிறே; அதுவுமில்லையிறே இது க்கு; த்ரவத்ரவ்யமிறேஜலம். அதுவும் ஸ்வஸ்த்தாநத்திலே கிடக் கும்படியாக அவற்றின் காடிந்யமும் இவற்றின் த்ரவத்வமும்ப்ர யோஜகம்; அவன் திருவுள்ளக்கருத்துயாதொன்று, அதுவேகார்ய கரமாவதென்கை.

இவையிப்படிகிடக்கிறது அவனவஹுிதனாய்க்கொண்டு ரக்ஷிக் கும்போதோ வென்னில் (ஊன்றியிடந்தெயிற்றிற்கொண்டநாளே) மறுபாடுருவத்தைக்கும்படிகுத்தி, அண்டபித்தியினின்று மொட் டுவிடுவித்தெடுத்தெறட்டு, எயிற்றிலே யெற்றிக் கொண்டு வ்யாப ரித்தபோது, (க) "மண்ணெல்லாமிடந்தெடுத்து மதங்கள்செய்து" என்கிறபடியே. அவனிப்படிமுக்யமாக ரக்ஷிக்கப்புக்கால் அவைசலிக் குமோ. அசலங்களோடு சலங்களோடுவாசியற ஸ்வஸ்த்தாநத்திலே நின்றன.

(ந)

நான்காம்பாட்டு.

நாளுமெழ நிலநீருமெழ * விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ * மலை
தாளுமெழச் சுடர்தானுமெழ * அப்பன்
ஊளியெழ உலகமுண்டவூணே. (ச)

ப.—அநந்தரம், ஜகந்நிகரணத்தை யநுஸந்தித்து ஸந்துஷ்டராகிறார்.

(இ-ள்.) நாளும் - திவஸாதிவிபாகம், எழ - நிலைகுலைந்துபோகவும், நில நீரும் - ப்ருதிவீஜலங்களும், எழ - நிலைகுலைந்துபோகவும், விண்ணும் - ஆகா ஶமும், கோளும் - க்ரஹங்களும், எழ - நிலைகுலைந்துபோகவும், எரிகாலும் - அக்நிவாயுக்களும், எழ - நிலைகுலைந்துபோகவும், மலை - பர்வதங்கள், தாள் - அடி, எழவும் - பறிந்துபோகவும், சுடர்தானும் - நக்ஷத்ராதி தேஜ:பதார்த்தங் களும், எழ - குலையவும், அப்பன் - ப்ரளயாபத்ஸகனான மஹோபகாரகன், ஊளியெழ - "பசித்துண்டான்" என்றுதோன்றும்படியாக, உலகம் - லோகத் தை, உண்ட - உண்ட, ஊண் - உண், ஏ - இருந்தபடியே. (ச)

கோள் - க்ரஹம். ஊளி - பசி. "உறிஞ்சினவோசை" என்பாருமுளர்.

(க) தி-மொ-உ-ச-ந.

ஆறு :—(நாளுமெழ) * கலாமுஹூர்த்தாதிமயமான காலத்தையும், ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்களையும், ஸகல குலாசலங்களையும், நக்ஷத்ர ஜ்யோதிஸ்ஸுக்களையும், ப்ரளயகால ஸலில பூராபிபூதமான ஸமஸ்த ஜகத்தையும் அநாயாஸேந ரக்ஷணம்பண்ணினைப்போலே நிரவஸேஷமாகவுண்டருளினான் என்னப்பனென்னப்பனென்கிறார். (௪)

ஈடு; அவ ;—நாலாம்பாட்டு; மஹாப்ரளயத்தில் ரக்ஷணப்ரகாரத்தை யருளிச்செய்கிறார். " 'இப்போதிருக்கிறப்போலே மார்க்கண்டேயன் திருவயிற்றினுள்ளேயொன்றுமழியாதே யிருக்கக்கண்டான்' என்கிற புராணாநுரூபமாக அவாந்தரப்ரளயத்தை யிவ்விடத்தே யருளிச்செய்கிறாராகவுமாம்" என்றருளிச்செய்வர்.

(நாளுமெழ) காலவ்யவஸ்தைபோக. (க) "நாஹோ ந ராத்ரி: - நாஹோராத்ரி:" என்னும்படியே. எழ - போ. ஆண்டென்றும், மாஸமென்றும், நாளென்றும், கலையென்றும், காஷ்டையென்றும் சொல்லுகிறவையெல்லாம் ஆதித்யனுடைய கத்யாகதியாலே வருகிறவையிறே; வ்யவச்சேதகனான ஆதித்யன் உள்ளே புக்கால் வ்யவச்சேத்யமான வினையும் போமித்தனையிறே. (நிலநீருமெழ) காரணங்களோடு கார்யங்களோடுவாசியற வுள்ளேபுக; கார்யமுள்ளவிடத்தே காரணமநுவர்த்திக்கக் காணாநின்றோம்; (உ) "மாமாயை - மங்கவொட்டு" என்று - ப்ரக்ருதிதத்வத்தைச்சொல்லாநிற்கச்செய்தே, "இங்கிவ்வுயிரேய்பிரகிருதி" என்று சொல்லாநின்றாரிறே - இதுதான் காரணத்திலே போகாமைக்காக. உயிரேய்பிரகிருதியென்கிறார் - சேதநஸம்ஸ்ருஷ்டையான ப்ரக்ருதியென்று தோற்றுகைக்காக.

(விண்ணுங்கோளுமெழ) ஆகாசமும் அங்குள்ள க்ரஹங்களுமெழ. (எரிகாலுமெழ) அக்நிதத்த்வமும் வாயுதத்த்வமும்போக. (மலைதாளுமெழ) பர்வதங்களடியோடே பறிந்துள்ளேபுக. வேர்க்குருத்தோடே பறிய. (சுடர்தானுமெழ) அநுக்தமான தேஜஸ்தத்த்வங்களுமுள்ளேபுக. (அப்பனூளியெழ) ஊளி - ஸப்தம். எழவென்றது - தோற்றவென்றபடி. ஓரோ க்ஷோபங்களுண்டானால் நம்முடைய வடையவளைந்தானுக்குள்ளே புகும்போது திருவாச

(க) வி-பு-க-உ-உங. (உ) க௦-எ-க௦.

வில் பிறக்கு மாரவாரம்போலே, திருவயிற்றிற்புகுகிறபோது ப்ராணிகளுக் குண்டான ஸம்ப்ரமத்வநிகள் கிளர. அன்றியே, " 'இவற்றை யுறிஞ்சுகிறபோதை த்வநிகாண்' என்றம்மாள் பணிக்கும்படி" என்றருளிச்செய்வர். அத்தால் நினைக்கிறது ஈஶ்வரத்வப் பிடாராலன்றியே பத்தும்பத்தாக வாஶ்ரிதரக்ஷணமேயா யிருக்கிறபடி. (ச)

ஐந்தாம்பாட்டு.

ஊணுடைமல்லர் ததர்ந்தவொலி * மன்னர்
ஆணுடைச்சேனை நடுங்குமொலி *விண்ணுள்
ஏணுடைத்தேவர் வெளிப்பட்டவொலி * அப்பன்
காணுடைப்பாரதம் கையறைபோழ்தே. (ரு)

ப — அநந்தரம், பாரதஸமரப்ரவர்த்தகத்வத்தை யநுஸந்திக்கிறார்.

அப்பன் - ஆஶ்ரிதபக்ஷபாதியான க்ருஷ்ணன், காணுடை - தர்ஶநீயமான, பாரதம் - பாரதத்தை, கை - கைவகுத்து, அறை - பொருத, போழ்து- போது, ஊண் - பலகரமான வூணை, உடை - உடைய, மல்லர் - பெருமிடுக்கரானமல்லரானவர்கள், த்வந்த்வயுத்தம்பண்ணி, ததர்ந்த - நெரிந்துவிழுகிற, ஒலி - ஓசையும், மன்னர்-ராஜாக்களுடைய. ஆண் - வீரபுருஷரை, உடை - உடைத்தான, சேனை - சேனைகளானவை. க்ருஷ்ணபலாநுஸந்தாநத்தாலே யஞ்சி, நடுங்கும் - நடுங்குகிற, ஒலி - ஶப்தமும், விண்ணுள் - ஆகாஶத்திலே, ஏண் - தந்தாம்பதமர்யாதைகளை, உடை - உடைய, தேவர் - ப்ரதாநதேவர்கள், யுத்ததர்ஶநார்த்தமாக, வெளிப்பட்ட - வெளிப்பட்டுக்கொண்டாடுகிற, ஒலி - ஓசையும், ஆயிற்று - ஆயிற்று.

ததர்தல் - நெரிதல். (ரு)

ஆறு ;—(ஊணுடைமல்லர்) அதிபல பராக்ரமரான மல்லருடைய வித்வம்ஸந த்வநியும், ஶௌர்ய வீர்யாதி பரிபூர்ணஸைந்ய ஸஹிதரான ராஜாக்களுடைய பயஜநிதமான மஹாகோஷமும், ப்ரீதரான ப்ரஹ்மேஶாநாதிகளுடைய ஸ்வவிஷய ஸ்துதிகோஷமுமெழும்படியாக, தர்ஶநீயமான மஹாபாரத யுத்தத்திலே அணிவகுத்து என்னப்பன்ஸாரத்யம்பண்ணினபடியென்னென்கிறார். (ரு)

ஈடு ; அவ ;—ஐந்தாம்பாட்டு; பாரதஸமர வ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார்.

(ஊனுடைமல்லர்ததர்ந்தவொலி) ஏற்றிலக்கை பெற்றுண்கிற மிடுக்கையுடையரான துர்யோதநன் பரிகரம் தேர்க்காலிலே நெரிந்தவோசை. மல்லென்று - மிடுக்கு. மிடுக்கையுடைய பரிகரமென்றபடி. மல்லர்க்கு மிடுக்குண்டாகைக்காக துர்த்ரவ்யங்களையும் மாம்ஸங்களையும் புஜிப்பித்து ஆட்டத்துவெளியிலே நிறுத்தினாயிற்று நலிகைக்காக; அத்தையறிந்து பையல்களைத் தேர்க்காற்கீழேயிட்டு நெரித்தபோதை த்வநி. பலத்தைப்போரப்பொலியச்சொல்லிவைத்து, ததர்ந்தவென்கிறார்காணும் - பசளைக்கலம் நெரித்தாப்போலே அநாயாஸேந நெரித்தபடியைப்பற்ற. (மன்னரித்யாதி) ராஜாக்களுடைய வாண்பிள்ளைத்தனத்தை யுடைத்தான ஸேனை, "க்ருஷ்ணன் ஸாரத்யம்பண்ணுவதாக வேறினான்" என்று கேட்டவாறே "நாம்முடிந்தோமன்றோ" என்று அவ்வளவில் குடல் குழம்பிக்கூப்பிட்டவொலி, ஆண்பிள்ளைகளான பீஷ்மத்ரோணாதிகளிறே தூசியேறினபேர்.

(விண்ணுளேனுடைத்தேவர் வெளிப்பட்டவொலி) ஸர்வேச்வரனோடொக்க இன்றாரின்றாரென்னும்படி தந்தாமைச் சமைய விட்டுக்கொண்டு அபிமாநிகளா யோரோவிருப்பிடங்களையுடையராயிருக்கிற தேவஜாதி, கண்ணுக்குத் தோற்றும்படி நின்று ஸ்தோத்ரம்பண்ணுகிற த்வநி. (க) ஸப்ரஹ்மா ஸஶிவஸேந்த்ர: - ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர:" என்றொருகோவையிலேயெண்ணலாம்படியிருக்கிறவர்கள். இந்த அந்தராஜாதிகளைத் தன்னுடனே ஸஹபடிக்கலாம்படி தன்னைத்தாழவிட்டுவைக்குமே! தன் ஸௌலப்யத்தாலே.

(அப்பன்) பூபாரநிர்ஹரணம்பண்ணினவுபகாரகன். (காணுடையித்யாதி) சக்ஷுராதி கரணங்களைப்படைத்ததுக்கு ப்ரயோஜநம் அற்றைநிலையைக்காண்கையிறே. ஸேநாதூளியும், கையுமுழவுகோலும் சிறுவாய்க்கயிறும், நாற்றின திருவடிகளுமாய் நிற்கிற நிலையிறே. (உ) "ஶாதி - மாம்" என்கிறநிலையிறே அது. தர்ஶநீய

(க) தை-நா-௧௧.

(உ) கீதை-௧௮-௬௬.

மாநபாரதம். (கையறைபோழ்து) கையுமணியும் வகுத்து அங்கோடிங்கோடுலாவிப்படைபொருத்தி, "நீங்களின்னபடி செய்யக்கடவீர்கோள். நாங்களின்னபடி செய்யக்கடவோம்" என்று கைதட்டிவிட்டபோது இத்தவதியெல்லாமுண்டாயிற்று. (ரு)

ஆரும்பாட்டு

போழ்துமெலிந்த புன்செக்கரில் * வான்திசை
சூழுமெழுந்து உதிரப்புனலா * மலை
கீழ்துபிளந்த சிங்கமொத்ததால் * அப்பன்
ஆழ்துயர்செய்து அசுரரைக்கொல்லுமாறே. (சு)

ப.—அநந்தரம், ஹிரண்யவத வ்ருத்தாந்தத்தை யநுஸந்திக்கிறார்.

(இ-ள்.) போழ்து - திவஸம், மெலிந்த - க்ஷயித்தவளவிலே, புன்-இளம், செக்கரில் - செக்கர்போலே, வான் - ஆகாசமும், திசை - திக்குக்களும், சூழும் - சூழ, எழுந்து - கிளம்பி, உதிரப்புனல் - ரக்தஜலம் ஆ - ஆம்படியாக, அப்பன் - ஆஸ்ரிதோபகாரகனான நரஸிம்ஹரூபியானவன், ஆழ் துயர் - அதிஶயிதது:கத்தை, செய்து - விளைத்து, அசுரரை - அஸுரனான ஹிரண்யனை, கொல்லும் - கொல்லும், ஆறு - ப்ரகாரம், மலை - மலை, கீழ்து - கீழ்தாம்படி பிளந்த - பிளந்த, சிங்கம் - சிங்கத்தை, ஒத்தது - ஒத்திருந்தது.

புன்செக்கரில் - புன்செக்கரான ஸந்த்யாகாலத்திலென்றுமாம். (சு)

ஆறு ;—(போழ்து) பஶ்சிம ஸந்த்யாஸமயத்திலே ஸகலபுவநவிவரமும் ருதிரபூரபூரிதமாம்படி, மேருஶிகரத்திலேயேறி யொரு ஸிம்ஹமானது மேருஶிகரத்தைப் பிளந்தாப்போலே, ஹிரண்யனை வ்யதிதனாம்படி பண்ணி யென்னப்பன் பிளந்தருளினபடி யென்னென்கிறார். (சு)

ஈடு ; அவ ;—ஆறும்பாட்டு; ஹிரண்யவத வ்ருத்தாந்தத்தை யருளிச்செய்கிறார். (போழ்துமெலிந்த) (க) "ஃபலிதப்ராயோ வாஸர: - பலிதப்ராயோ வாஸர:" என்னுமாபோலே, பொழுது போகாநிற்கச் செய்தே. (புன்சேக்கரில்) செக்கர்வானமிடுகிறவளவிலே; அவன் வரத்திலகப்படாத ஸந்த்யாகாலத்திலே. "இராப்படற்பேன், பகல் படற்பேன்" என்று வரங்கொண்டானே. (வான்தி

(க)

சைசூழ மெழுந்துதிரப்புனலா) பரப்பை யுடைத்தானவாகாயம், திக்குகளடங்கலும், பள்ளங்கண்ட விட மெங்கும் வெள்ளம் பரக்குமா போலே, ருதிரமானது கொழித்துப் பரக்கும்படி.

(மலைகீழ்து பிளந்தசிங்கமொத்ததால்) ஒருமலையைக் கீழேயிட்டுக்கொண்டு மேலேயிருந்து அத்தைப்பிளந்த ஸிம்ஹமென்னுதல். அன்றிக்கே, கிழித்துப்பிளந்த ஸிம்ஹம். மகிழ்ந்துபிளந்த ஸிம்ஹமென்னுமாம். † (மகிழ் - அநாயாஸத்தால்ஸித்தம். அதாவது - இரண்டுகூறாக்கிப் பிளந்த ஸிம்ஹமென்கை.) (க) " இரண்டுகூறுசெய்துகந்தசிங்கம் " என்னக்கடவதிறே. ஒக்கப்பிளந்த சிங்கமொத்ததால். † (கீழ்ந்து - உகந்து.)

(அப்பனூழ்துயர்செய்து) நரஸிம்ஹத்தினுடைய மொறுந்தமுகத்தைக்கண்டபோதே, மேல்போயநுபவிக்கக்கடவ வநுபவமடைய அப்போதே யநுபவித்தற்றான். அநாதிகாலம் பகவத்பாகவத விஷயங்களிலேபண்ணிப்போந்த ப்ராதிகூல்யமடைய அரைக்ஷணத்திலேயநுபவித்தற்றபடி. மிகவும் து:க்கத்தைவிளைத்து. (அசுரரைக் கோல்லுமாறே) அஸுரனைக்கொன்றபடி. இத்தால் சொல்விற்றுயிற்று - ஸர்வஸாதாரணனாய் நிற்கும்நிலையொழிய, பித்ராதிகள் முகமாக ப்ரஜைகள் பக்கலிலே வத்ஸலனாய் நிற்பதொரு நிலையுமுண்டிறே; அது குலைந்தால் அவன் ஶத்ருவாயும்நிற்குமிறே, அப்போதும் இவன்றான் முன்னின்று ரக்ஷிக்குமென்கை. இத்தாலும்சொல்விற்றுயிற்று - ஆபத்துக்கனத்ததனையும் கடிகவந்து ரக்ஷிக்குமென்கை; தமப்பன்பகையாக வுதவினவன், அவனிலண்ணியனான தான் தனக்குப்பகையானால் உதவச்சொல்லவேணுமோ. (உ) " ஆத்மைவ ரிபுராத்மந: - ஆத்மைவரிபுராத்மந: " என்கிறபடியே தனக்குத்தானேயிறே ஶத்ரு. (சு)

ஏழாம்பாட்டு.

மாறுநிரைத்து இரைக்குஞ்சரங்கள் * இனம்
நூறுபிணம் மலைபோல்புரள * கடல்
ஆறுமடுத்து உதிரப்புனலா * அப்பன்
நீறுபட இலங்கைசெற்றநேரே. (எ)

(க) தி-ச-வி-சுஉ. உ) கீதை-சு-ரு.
† குண்டலிதத்வயம் க்வாசித்கம்.

ப.—அநந்தரம், லங்காபங்க ப்ரகாரத்தை யநுஸந்திக்கிறார்.

(இ-ள்.) சாரிகைதிரிந்தபடியாலே, மாறு - எதிரெதிராக, நிரைத்து - நிறைத்து, இரைக்கும் - ஶப்திக்கிற, சரங்கள் - சரங்களாலே, இனம் - இனமினமாக, நூறு - நூறுநூறும்படி, பிணம் - ராக்ஷஸஶவங்களானவை, மலைபோல் - மலைபோலே, புரள - புரண்டுவிழவும், ஆறு - ஆறுகளாலே சென்று, மடுத்து - மடுத்து, கடல் - கடல், உதிரப்புனல் - உதிரப்புனல், ஆ - ஆம்படியாகவும், அப்பன் - ஆஶ்ரிதோபகாரகனை சக்ரவர்த்தித்திருமகனானவன் இலங்கை - லங்கையை, நீறுபட - பஸ்மஸாத்தாம்படி. செற்ற - பொருத நேர் - செவ்வையிருந்தபடி.

நூறுதல் - நஶிக்கலாகவுமாம். (எ)

ஆறு ;—(மாறுநிரைத்து) சாரிகைவருகிற ஶைக்ர்யாதிஶயத்தாலே ஸர்வதிக்குகளிலும் நின்று விட்ட திருச்சரங்கள் யுகபத்தேவதன்னிலே ஸந்தித்து இரைக்கும்படியாகவும், ராக்ஷஸஶரீரங்கள் * சிந்நமாம்படியும் பிந்நமாம்படியும் ஶரைர்தக்தமாம்படியும் ப்ரபக்நமாம்படியும், ஶஸ்த்ரபீடிதமாம்படியும், ருதிரவெள்ளத்தாலே கடலெல்லாம் நிறைந்து ஆறுகளிலே யெதிர்க்கும்படியும் ஶரவர்ஷத்தைவர்ஷித்து என்னப்பன் பொடிபட விலங்கையைச்செற்றானென்கிறார். (எ)

ஈடு ; அவ ;—ஏழாம்பாட்டு; ராமவ்ருத்தாந்தத்தை யருளிச் செய்கிறார்.

(மாறுநிரைத்திரைக்குஞ்சரங்கள்) சாரிகைவந்தசடக்கு, நாலுதிக்கும் விட்டவம்புகளெதிரம்பாய் ஒன்றோடொன்று பொருதுகலார் கலார் என்று த்வநிக்கிற த்வநி, கடலிரைத்தாப்போலே யிராநின்றது. சாரிகைவந்த சடக்குத் தன்னில்தானெதிரம்பு கோத்ததுகாணும். (இனநூறு பிணமலைபோல்புரள) நூறுநூறாக இனமினமான பிணங்களானவை, அம்புபட்டுருவின சடக்காலே யுயிரோரிடத்தொதுங்கப்பெறாதே யிரண்டுதுண்டத்திலும் கலந்து மலைபோலே கிடந்துதுடிக்கிறபடி.

(கடலாறுமடுத்துதிரப்புனலா) (க) " [illegible] - ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம் " என்று புக்கதெல்

(க) கீதை-உ-எ0:

லாங் கொண்டிருக்கக்கடவ கடல், ருதிரவெள்ளத்தாலே நிரம்பி ஆறுகளிலே மடுக்கும்படி. (க) "வையமூடுபெருநீரில்மும்மைபெரி தே" என்றுரிறே. (நீறுபட) (உ) "ஸமாநவஷூர்ஸீ – ஸ்மஸமாந ஸத்ருஸீ" என்று சொன்னபடியே பஸ்மமாம்படியாக (இலங்கை செற்றநேரே) (நேர்) பொழுதென்றும், நேரமென்றும் - காலபரம். "இலங்கைசெற்றபொழுது - மாறுநிரைத்திரைக்கும்சரங்கள்" என்றந்வயம். அன்றிக்கே, இலங்கையைச்செற்ற வாய்ப்பென்னு தல். மாயாப்ரயோகத்தாலல்ல,செவ்வைப்பூசலிலே நின்றுகிடீர் இல ங்கையையழித்ததென்னுதல். நேர் - நேராகவென்னுதல். அப் போது, ஏகாரம் - தேற்றேகாரம். ஆர்ஜவத்தாலே யிலங்கை செற்றது. (எ)

எட்டாம்பாட்டு.

நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான் * பின்னும்
நேர்சரிந்தான் எரியும்அனலோன் * பின்னும்
நேர்சரிந்தான் முக்கண்மூர்த்திகண்டீர் * அப்பன்
நேர்சரிவாணன் திண்தோள்கொண்டவன்றே. (அ)

ப;—அநந்தரம், பாணயுத்தப்ரகாரத்தை யநுஸந்தித்தருளுகிறார்.

(இ-ள்.) அப்பன் - அநிருத்தனுக்குபகாரகனான க்ருஷ்ணன், ருத்ராதிக ளோடுமுன்னிட்டு, நேர்சரி - ஒதுங்கின. வாணன் - பாணனுடைய, திண் - வரப லாதிகளாலே த்ருடமான, தோள் - தோள்களை, கொண்ட - துணித்துவென் றிகொண்ட, அன்று - அன்று, கோழி - மயிலை, கொடி - கொடியாக, கொண் டான் - கொண்ட ஸுப்ரஹ்மண்யன், நேர்சரிந்தான் - எதிர்நில்லாமல் சாய்ந் துபோனான், பின்னும் - அதுக்குமேலே, எரியும் - (ங) "ரு-மெளஜூரவாவஸ ஷடியஷூஸீ: – ருத்ரோவாஏஷ:யதக்நி:" என்று ருத்ரன் தானும்படியான க்ரௌர்யத்தையுடையனு யுத்தஜ்வாலாதிகளான, அனலோன் - அக்நியான வன், நேர்சரிந்தான் - எதிர்நில்லாமல்சரிந்தான், பின்னும் - அதுக்குமேலே, முக்கண் - த்ரிநேத்ரனுகையாலே ஸக்த்யதிஸயத்தையுடைய, மூர்த்தி - ப்ர தாநனானருத்ரன், தான் முன்னிற்கமாட்டாமையாலே, நேர்சரிந்தான் - முது கிட்டுப்போனான், கண்டீர்-கண்டிகோளே.

(க) தி-மொ-கக-௪-௪. (உ) ரா ஸு உக உக.
(ங) யஜு-உ-அஷ்-கங.

கோழி - மயில். கண்டீரென்று - ப்ரஸித்தியைச்சொல்லுகிறது. (அ)

ஆறு ;—(நேர்சரிந்தான்) பாணனுடைய தோள்களைத்துணித்தவன்று; தோற்கைக்குக் கொடிகட்டிக்கொண்டு வந்தாப்போலே ஸுப்ரஹ்மண்யன் முகம் மாறித்தோற்றான், கிளர்ந்தெரிகிறவக்நியுமப்படியே தோற்றான், த்ரிணேத்ரனும் பராஜயவ்ரீளையாலே அவகுண்டிதனாய்க் கொண்டுபோனான், என்னப்பன் ஜயித்தருளினபடியென்னென்கிறார். (அ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு, பாணவிஜய வ்ருத்தாந்தத்தையருளிச்செய்கிறார்.

(நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான்) மயிலை த்வஜமாகவுடையனாய் தேவஸேநாபதியாய் இளமறியாய்த் தூசித்தலையிலே நிற்கிற ஸுப்ரஹ்மண்யன், தோற்றரவிலே கெட்டான்.

(பின்னுமித்யாதி) அவ்வளவிலே நாற்பத்தொன்ப தக்நிகளும் பெரிய கிளர்த்தியோடே யெரிந்துதோற்றிற்று; அவையுமெல்லாம் பின்னிட்டன.

(பின்னுமித்யாதி) "மகன்கொடிகட்டிக்கொண்டுசென்று இளிம்புபட்டான்" என்று தன் கொடியைப் பொகட்டுவந்து தோற்றினவநந்தரத்திலே, கண்ணைப்புதைத்துக் கெட்டோடத்தொடங்கினான்; அவன் மறைத்துக்கொண்டுபோக, இவர் "முக்கண்மூர்த்தி கண்டீர்" என்று - கண்ணைக்காட்டிக் கொடுக்கிறார். எல்லாம் செய்தாலும் உடம்பிலடையாளத்தை மறைக்கப்போகாதிறே. (க) "வாணனீராயிரந்தோள்களைத்துணித்தநாளந்தவந்தவாகுலம்" என்று பாசுரமிட்டுச்சொல்லவொண்ணாத வ்யாகுலமிறே யது.

(அப்பன்) நிருபாதிகரக்ஷகன். (நேர்சரிவாணன்) ப்ரதாநனான வாணன் தான்வாராத்தோற்றினான், அவனும் பின்னிட்டோடத்தொடங்கினானென்னுதல் ; நின்றவிடத்திலேநின்று முதுகுகாட்டினானென்னுதல்; கையிலாயுதம் பொகட்டாரையும், மயிர்விரித்தாரையும் கொல்லக்கடவதல்லவிறே. (திண்டோள்கொண்டவன்றே) தன்னோடொக்கவாறல் பிறலாயிருப்பதொரு தேவதையைப்பற்றி, அறனுக்குள்ளே யிருப்பாரைப்போலே, திண்ணியனாயிருந்தானாயிற்று. புருஷோத்தம ஸமாஶ்ரயணம்பண்ணி யிருப்பாரைப்போலே காபாலிகந்தரைப்பற்றி நிர்ப்பரனாயிருந்தான் ; ஸர்வேஶ்வ

(க) தி-ச-வி-எ௰.

ரணைப்பற்றி (க) "ந பிபேதி குதஶ்சந - நபிபேதிகுதஸ்சந" என்றிருப்பாரையபாவித்தான்.

(திண்டோள்கொண்ட) "உஷைபித்ருஹீநையாகவொண்ணாது" என்றுகரத்தைக் கழித்துவிட்டான். "கரபாதையிறேயிவனைக்கண்டார் காலிலெல்லாம் விழப்பண்ணிற்று" என்று அவனுக்குள்ள கரத்தைக்கழித்து, இறையிலியாக்கிவிட்டான். (உ) "யௌ தத்பூஜாகரௌ கரௌ - யௌதத்பூஜாகரௌகரௌ" என்றும், (உ) "விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும் - விசித்ராதேஹஸம்பத்திரீஶ்வராயநிவேதிதும்" என்றும் விசித்துக்கிடக்கச்செய்தேயும், ஆயிரம் கையையுங்கொண்டு அப்ராப்தவிஷயத்திலே கார்யங் கொள்ளுகையாலே அவற்றையே கழித்துவிட்டான்.

அத்தேவதைதானேவந்து, "வரந்தந்தநீயே அத்தையழிக்கவோ, நீயிவனைக்கொல்லில் என் கையில்குணிவாரில்லையினி" என்று பற்காட்டுகையாலேவிட்டான். (ங) "க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம் - க்ருஷ்ணக்ருஷ்ணமஹாபாஹோ ஜாநேத்வாம்புருஷோத்தமம்" தேவரையுள்ளபடியறியாதே அம்பைவிட்டுக்கொண்டுநின்ற நிலையைக்கண்டு "அவ்வளவோ" என்றிருந்தேன். "கழுத்திலேகயிறிட்டபின்புகாண் நானின்னதென்றறிந்தேன்" என்பாரைப்போலே. இத்தால் சொல்லிற்றாயிற்று - ஈஶ்வரனையொழிந்தாரடங்கலும், தாங்களுளரானபோது ரக்ஷகராக அபிமாநித்து, ஆபத்துவந்தவாறே இவர்களைக்காட்டிக்கொடுத்துத் தந்தாமைக்கொண்டு தப்புவர்கள்; ஸர்வாவஸ்தையிலும் தன்னையழியமாறியாயினும் ஆஶ்ரிதரக்ஷணம் பண்ணுவான் ஸர்வேஶ்வரன்; ஆகையாலே ஆஶ்ரயணீயனிவனே, அல்லாதாராஶ்ரயணீயரல்லரென்னுமிடம் சொல்லிற்று. (அ)

ஒன்பதாம்பாட்டு

அன்றுமண்நீரெரிகால் விண்மலைமுதல் *
அன்றுசுடர் இரண்டுபிறவும் * பின்னும்
அன்று மழையுயிர்தேவும்மற்றும் * அப்பன்
அன்றுமுதல் உலகம்செய்ததுமே. (கூ)

(க) தை-ஆ க. (உ) விஷ்ணுதர்ம. (ங) வி-பு-ரு-ரு-சக.

ப.—அநந்தரம், ஜகத்ஸ்ருஷ்டிப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) அப்பன் - ஜகதுத்பாதகனான மஹோபகாரன், முதல் - ப்ரதமத்திலே, உலகம் - லோகத்தை, செய்ததும் - உண்டாக்கிற்றும், அன்று - ஆத்யமான ஸ்ருஷ்டிகாலத்திலே, மண்ணீரெரிகால்விண் - அதுக்கு ஹேதுபூதமான ப்ருதிவ்யாதிபூதபஞ்சகங்களையும். மலைமுதல்-பௌதிகங்களில் பர்வதாதி பதார்த்தங்களையும். செய்ததும் - செய்ததும், அன்று - அக்காலத்திலே, சுடர்- சந்த்ராதித்யர்கள், இரண்டு - இருவரையும், பிறவும் — அல்லாத தேஜ: பதார்த்தங்களையும், செய்ததும் - செய்ததும், அன்று — அக்காலத்திலே, பின்னும் - அதுக்குமேலே, மழை - வர்ஷத்தையும், உயிர் - வர்ஷோபஜீவிகளான ப்ராணிகளையும் தேவும் - வர்ஷப்ரதரான தேவர்களையும், மற்றும் - மற்றும் ப்ராணி பதார்த்தங்களையும், செய்ததும் - உண்டாக்கிற்றும், அன்று - அக்காலத்திலே.

க்ரமஸ்ருஷ்டியன்று, யுகபத்ஸ்ருஷ்டி யென்று கருத்து (க)

ஆறு ;—(அன்று) ஸங்கல்ப லேஸத்தாலே நிகில ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணியருளுகிற ஸர்வேஸ்வரனுக்கு அத்யல்பபல ப்ரதிகூலநிரஸந மொரு பொருளோ வென்கிறார்.

ஈடு ; அவ ; — ஒன்பதாம்பாட்டு, ஸ்ருஷ்டியும் விஸஜாதீயமாகையாலே அத்தையும் விஜயமாக அநுஸந்திக்கிறாராகவுமாம்.

(அப்பன்-முதலுலகம் செய்ததும்-அன்று) மஹோபகாரகன் ப்ரதமத்திலே லோகத்தையுண்டாக்கிற்றும் ஆத்யமான ஸ்ருஷ்டிகாலத்திலே, அதுக்கு ஹேதுவாக (மண்ணீரித்யாதி) அன்றிக்கே, கீழும் மேலும்-க்ருஷ்ணவ்ருத்தாந்தமாகையாலே, பாணனை தமித்தவன்றுகிடீர் ஜகத்தையுண்டாக்கிற்றென்று அத்தையே பேசுகிறாராகவுமாம்; பயிர்செய்கையேயன்றே வேண்டுவது, பயிரழியாமல் நோக்கினவன்றிறே பயிர்செய்ததாவது.

(அன்றித்யாதி) காரணங்களோடு கார்யங்களோடு வாசியற வுண்டாக்கினபடி. (சுடரிரண்டு) சந்த்ராதித்யர்களை யுண்டாக்கினபடி. (பிறவும்) மற்றுமுண்டான நக்ஷத்ராதி தேஜ:பதார்த்தங்களும். அதுக்குமேலே ; வர்ஷிக்கக்கடவதான மேகம், (மழை - மேகம்.) வர்ஷத்திலே ஜீவிக்கக்கடவ மற்றை யாத்மாக்கள், வர்ஷத்துக்கு உத்பாதகரான தேவர்கள், மற்றுமுண்டான திர்யக்ஸ்தாவராதிகள்.

(அப்பன்) ஸர்வோத்பாதகனானவன். (அன்றுமுதலுலகம்செய்ததுமே) தனித்தனியே சொல்லவேணுமோ, பாணனை தமித்து ஈரர

சுறுத்தவன்றுகிடீர் இத்தையெல்லாம்ஸ்ருஷ்டித்ததென்கிறுர், என்னுதல். நாமரூபங்களையிழந்து (க) "ஸதேவ - ஸோம்ய" என்கிற தசையிலே (க) "பஹுஸ்யாம் ப்ரஜாயேய" என்று ஸங்கல்பித்த வன்றுமுதலென்றுமாம். (௯)

பத்தாம்பாட்டு.

மேய்நிரைகீழ்புக மாபுரள * சுனை
வாய்நிறைநீர் பிளிறிச்சொரிய * இன
ஆநிரைபாடி அங்கேயொடுங்க * அப்பன்
தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே. (௧௦)

ப.—அநந்தரம் கோவர்த்தநோத்தாரணத்தை யநுபவிக்கிறுர்.

(இ-ள்.) மேய் - மேய்கிற, நிரை - பசுக்களானவைகள், கீழ் - கீழே, புக - ஒதுங்கும்படியாகவும், கீழ்மேலாகவெடுத்தபடியாலே, மா - பர்வதவர்த்திகளான கஜாதிம்ருகங்கள், புரள - புரண்டுவிழும்படியாகவும், சுனை - சுனைகளினுடைய, வாய் - வாயளவும், நிறை - நிறைந்த, நீர் - நீரானது பிளிறி - பெரியகோஷத்தோடு, சொரிய - சொரியும்படியாகவும், இனம் - இனமினமான, ஆய் - ஆயரையும், நிரை - பசுத்திரளையு முடைய, பாடி - திருவாய்ப்பாடியும், அங்கே - அங்கே, ஒடுங்க - ஒடுங்கும்படியாகவும், அப்பன் - ஆபந்நிவாரகனான க்ருஷ்ணனானவன், தீ - விநாஸஹேதுவான, மழை - மழையை, காத்து - காத்து, குன்றம் - கோவர்த்தநமாகிற பர்வதத்தை, எடுத்தான் - எடுத்தான். (௧௦)

ஆறு;—(மேய்நிரை) பசுக்களுக்கு மிடையர்க்கும், கீழே புக்கு நிர்ப்பயமாக வர்த்திக்கும்படியாகவும்; மஹீதரோபரிவர்த்தமான வநகரியூதங்கள் கீழே புரளும்படியாகவும். பூர்ணரஸஸரஸ்ஸுக்கள் அதோமுகமாய் ஸகோஷமாய் ப்ரவஹிக்கும்படியாகவும் ஸ்ரீகோவர்த்தநத்தை யெடுத்தருளி, பாதகமான வர்ஷத்தைத் தடுத்தருளி, இந்த்ரனை ஜயித்தருளினுன் என்னப்ப னென்னப்பனென்கிறுர். (௧௦)

ஈடு; அவ;—பத்தாம்பாட்டு; கோவர்த்தநோத்தாரணம்பண்ணி ரக்ஷித்த செயலை யநுஸந்திக்கிறுர்.

(க) சாந்தோ - ௬-௨.

(மேய்நிரைகீழ்புக) மேய்கிறபசுக்கள் புல்லுமுமிழாதே யசை யிட்டுக்கொண்டு கீழேபுகுர. (மாபுரள) மலையையெடுத்து மறிக்கையாலே அங்குவர்த்திக்கிற ம்ருகங்களெல்லாம் புரண்டுவிழ, மா - ம்ருகம். (சுனைவாய்நிறைநீர்பிளிறிச்சோரிய) சுனையிடத்துநிறைந்து நிற்கிறநீரானது, நிறைகுடத்தைக் கவிழப்பிடித்தாப்போலே ஸப்தித்துக்கொண்டுசொரிய, ஒருமழைகாக்கப்புக்கு, அங்கேயநேகம் மழையையுண்டாக்கினபடி. (இனவாநிரைபாடியங்கே யொடுங்க) பசுத்திரளும் திருவாய்ப்பாடியு மங்கேயொடுங்க. (ஒருதரத்தில் பசு வொழுங்கையுடையவூர்).

(அப்பன்) ஆபத்ஸகனானவுபகாரகன். (தீமழைகாத்து) விநாஸத்தைவிளைக்கவந்தமழையாகையாலே தீமழையென்கிறார். இடையரும் பசுக்களுமன்றிக்கே அன்று தாமாகாதே நோவுபட்டார். (குன்றமெடுத்தானே) மலையை யெடுத்துக்காத்த மஹோபகாரகனென்கிறார். "பசிக்ராஹமாறுந்தனையும் வர்ஷித்துப்போவானுக்கு" என்றேழுநாளிறே மலையைதரித்துக்கொடு நின்று நோக்கிற்று. ராவணாதிகளாகிலிறே அழியச்செய்யலாவது, அநுகூலனுக்குவந்த ப்ராதிகூல்யமாகையாலே செய்யலாவதித்தனையிறே. இத்தால் சொல்லிற்றாயிற்று - ஆஸ்ரிதன் தப்பினாலும் தான் பொறுத்து ரக்ஷிக்குமென்றபடி. (கo)

பதிற்றுப்பாட்டு

குன்றமெடுத்தபிரான் அடியாரோடும் *
ஒன்றிநின்ற சடகோபனுரைசெயல் *
நன்றிபுனைந்த ஓராயிரத்துள் இவை *
வென்றிதரும்பத்தும் மேவிக்கற்பார்க்கே. (கக)

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழி, கற்றார்க்கு ஸர்வப்ரகாரவிஜயத்தைக் கொடுக்குமென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்) குன்றமெடுத்த - கோவர்த்தநோத்தாரணம்பண்ணின, பிரான் - மஹோபகாரகனான க்ருஷ்ணனுக்கு, அடியாரோடும் - அஸாதாரண ஸேஷபூதரான பாகவதர்களோடே, ஒன்றி-ஏகீபவித்து, நின்ற - நின்ற ஸ்வரூபத்தையுடையராய்க்கொண்டு, சடகோபன் - ஆழ்வாருடைய, உரைசெயல் - வாசிகவ்ருத்திரூபமாய், ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிரத்துள்ளே, நன்றி -

ஸர்வேஶ்வரனுடைய விஜயாபதாநங்களை ப்ரதிபாதிக்கையாகிற நன்மையை, புனைந்த - உடைய, இவைபத்தும் - இப்பத்தும், மேவி - அர்த்தஸஹிதமாக, கற்பார்க்கு - அப்யஸிப்பார்க்கு, வென்றி - ஸர்வப்ரகாரவிஜயத்தை, தரும் - கொடுக்கும் (கக)

இது ௨கலிவிருத்தம்.

ஆறு;—(குன்றமேடுத்த) ஆழ்வார் தாமும்கோவர்த்தநத்தின்கீழே திருவாய்ரோடே கூடிநின்று கோவர்த்தநோத்தாண பூர்வக விஜய ரூப ஸகல திவ்யசேஷ்டிதங்களையு மேத்தின இத்திருவாய்மொழியை ஸாதரமாகக்கற்பார்க்கு, இத்திருவாய்மொழியி லோரோர் பாட்டே விஜயத்தைக்கொடுக்குமென்கிறார். (கக)

ஈடு; அவ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யஸித்தவர்களுக்கு இதுதானே விஜயத்தைக் கொடுக்குமென்கிறார்.

(குன்றமெடுத்தவித்யாதி) கோவர்த்தநோத்தாணம்பண்ணின நீர்மையிலு மப்போதை யழகிலு மீடுபட்டிருக்குமவர்களோடேகூடி நின்று தாமும் ப்ரீதராய், ப்ரீதிக்குப் போக்கு வீடாகச்சொன்ன பாசுரமாயிற்று. (நன்றிபுனைந்தவோராயிரம்) ஸர்வேஶ்வரனுடைய பரத்வ ஸௌலப்யங்களை வகையிட்டுத் தொடுத்த வாயிரம். நன்மையாவது - ஸம்ஸாரி சேதநனுக்கு, இவனே ஸர்வஸ்மாத்பரனென்றும், ஸர்வஸுலபனென்றும், ஸர்வஸமாஶ்ரயணீயனென்றும் சொல்லுகையிறே. அவையிறே - முதற்றிருவாய்மொழிதொடங்கி யருளிச்செய்தது.

எம்பெருமானுடைய விஜயங்களைத் தொடுத்துச்சொன்ன விப்பத்தும். (மேவிக்கற்பார்க்கு-வென்றிதரும்) ஸாதரமாகக் கற்பார் யாவர்சிலர், அவர்களுக்கு விஜயத்தைப் பண்ணிக்கொடுக்கும்; ஐஶ்வர்யார்த்திக்கு ஐஶ்வர்யவிரோதியைவென்று கொடுக்கும், கேவலனுக்கு விரோதிநிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்கும்; பகவச்சரணார்த்திகளில், உபாஸகனுக்கு இந்த்ரியஜயாதிகளைப் பண்ணிக்கொடுக்கும்; ப்ரபந்நனுக்குக் கைங்கர்யவிரோதிகளைவென்றுகொடுக்கும். (கக)

ஏழாம்பத்து நாலாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாம்பத்து

ஐந்தாம் திருவாய்மொழி

கற்பார் - ப்ரவேஶங்கள்.

ஆறு ;—(கற்பாரிராமபிரானை) ப்ரஸ்துத த்ரைலோக்ய விக்ரமணாத்யநேக திவ்யசேஷ்டிதங்களுடைய பரோபகாரத்வ லக்ஷணகுணத்வாகாரத்தை யநுபவிக்கிறார். அதவா, ப்ரஸ்துத தஶரதாத்மஜ திவ்யசேஷ்டிதங்களிலே திருவுள்ளந் தாழ்ந்து, மற்று மப்ரஸ்துத திவ்யசேஷ்டிதங்களையும் " ததீயம் " என்னுமிவ்வாகாரத்தா லநுபவிக்கிறார். *

ப.—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ் - அநேகவித விஜயாபதாநங்களை யுடையனான ஸர்வேஶ்வரனுடைய வதிஶயித ஶக்தியோகத்தை யநுஸந்தித்து விரோதி நிரஸந ஸமர்த்தனவனேயென் றறுதியிட்டவர், " அவனையொழிய வேறு ரக்ஷகரில்லை " என்னு மிவ்வர்த்தத்தை வெளியிடுகைக்காக ; ஸ்வாபிமாநாந்தர்ப்பாவ மாத்ரத்தாலே அவனுடைய வதிஶயிதபுருஷார்த்த ப்ரதத்வத்தையும், அநிஷ்டநிவ்ருத்தி யுக்தமான ரக்ஷண ப்ரகாரத்தையும், ஶிஶுபாலமோக்ஷத்தையும், ஜகத்ஸ்ருஷ்ட்ருத்வத்தையும், ஸ்ரீவராஹவ்ருத்தாந்தத்தையும், ஆஶ்ரிதார்த்தமான வர்த்தித்வஸாமர்த்தியத்தையும், மார்க்கண்டேயரக்ஷணப்ரகாரத்தையும், ஆஶ்ரிதோபகாரகமான ஹிரண்யநிரஸநத்தையும், பாண்டவவிரோதி பஞ்ஜநத்தையும், ஸம்ஸாரநிவர்த்தகத்வத்தையும் அநுஸந்தித்து ஏவம்விதஸ்வபாவனாய் அதிஶயிதஶீலப்ரகாஶகமான வவதாரவைலக்ஷண்யத்தையுடைய ஸர்வேஶ்வரனையொழிய, அநிஷ்டநிவ்ருத்த்யர்த்தமாகவு மிஷ்டப்ராப்த்யர்த்தமாகவுமாஶ்ரயணீயர் வேறொருவரில்லை யென்னுமிடம் ஸர்வஸம்ப்ரதிபந்நமென்றருளிச்செய்கிறார். *

ஈடு; அவ;—கீழிற்றிருவாய்மொழியில் - எம்பெருமானுடைய விஜயங்களை யநுபவித்தார் ; அவைதாம் ஆஶ்ரிதார்த்தமாயிறேயிருப்பது ; "அவன்தன்னை யிவர்களுக் காக்கிவைக்க, இவர்கள் பாஹ்யவிஷயங்களிலே அந்யபரராவதே" என்றுஶ்சர்யப்படுகிறார். (க) " யஸ்யாஸ்மி - யஸ்யாஸ்மி " என்று - யாவனொருவனுடைய ஸத்தையேபிடித்து அவனுக்கேயாயிருக்கும், அப்படி யிருக்கிறவன்தான் உத்பத்தியே பிடித்து இவனுக்காக்கிவைக்கிறானிறே.

(க) யஜு-ரு-அஷ்-எ.

ரக்ஷணத்துக் கேகாந்தமான ஜந்மங்களிலேவந்து பிறந்தபடியையும், தன் ஸ்வரூபரூபகுணங்களை யடையப் பிறர்க்காக்கிவைக்கிறபடியையும், அதுக்கடியான க்ருபையைத் தனக்கு வடிவாகவுடையனாயிருக்கிறபடியையும், க்ருபாகார்யமான செயல்களையு மநுஸந்தித்து, (௧) "அபவரகே ஹிரண்யநிதிம் நிதாய உபரி ஸஞ்சரந்தோ யதா ந த்ரக்ஷ்யந்தி – அபவரகே ஹிரண்யநிதிம் நிதாய உபரி ஸஞ்சரந்தோ யதாநத்ரக்ஷ்யந்தி" என்கிறபடியே - முற்றத்திலே ஹிரண்யநிதி புதைத்துக்கிடக்க, அத்தை யறியாதே மேலே ஸஞ்சரித்துப் புறங்கால் வீங்குவாரைப்போலே; இஸ்ஸம்பத்துத் தங்களுக்காயிருக்க ஸம்ஸாரிகள்புறம்பே போதுபோக்குவதே யென்று ஸ்சர்யப்படுகிறார்.

ஆழ்வாரொருகால், இத்திருவாய்மொழி யடங்கலும் - ராமாவதார விஷயமாக்கி நிர்வஹித்தாரும். அதுக்கடி - ஆயிரத்திலொன்றும் கடலில் குளப்படியும்போலே, பெருமாளுடைய குணத்திலேகதேசங்களிறே அல்லாத வவதாரங்களெல்லாவற்றிலு முள்ளதென்று. (௨) "பேரெயில்சூழ்கடல் தென்னிலங்கைசெற்றபிரான்" என்றும், (௩) "மாறுநிரைத்திரைக்கும் சரங்கள்" என்றும் - கீழ் ப்ரஸ்துதமான ராமவ்ருத்தாந்தத்தை யநுஸந்தித்து, அவ்வழியாலேயிறே அவதாரங்கள் தம்மை யநுஸந்திக்கிறது. அல்லாதவவதாரங்களிலே ப்ரவணரானவர்களும் அவ்வவதாரம் ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதமானால் (௪) "மனத்துக்கினியானை" என்றிறே சொல்லுவது.

"பட்டர்ராமாவதாரத்திலேபோர பக்ஷபதித்திருப்பர்" என்று அவரருளிச்செய்யுமது கேட்கைக்காகச் சிறியாத்தானொருநாள் "பெருமாளுக்கெல்லா நன்மைகளுண்டாகிலும், கழுத்திலே யோலைகட்டி 'தூதுபோ' என்னப்போன க்ருஷ்ணன் நீர்மையில்லையே" என்ன "அதங்ஙனல்லகாண், கழுத்திலே யோலைகட்டி 'தூதுபோ' என்பாரில்லாமைதவிர்ந்தாரத்தனைகாண்" என்றருளிச்செய்தார். (௫) *நாடுடைமன்னர் வேறேசிலரில்லையே. அபிஷிக்த க்ஷத்ரியகுலத்திலே பிறக்கையாலே போகவிடுவாரைப்பெற்றதில்லை. முடியைத் தவிர்ந்து சடையைப்புனைந்து நாட்டைவிட்டுக் காடேறப்போனவர்,

(௧) (௨) ௭-௩ ௭. (௩) ௭-௪-௭. (௪) திருப்பாவை. (௫) ௯-௯-௪.

தூதுபோகாமையில்லையிறே ; "காடேறப்போகவுமாம், துர்யோதந கோஷ்ட்டியிலே போகையிறே யரிது; (க)[[illegible] - யத்ரஸூக்தம்துருக்தம்வாஸமம் ஸ்யாந்மதுஸூதந] இறே - "பாண்டவர்கள் கிடக்கைக்கு அஞ்சூர் தரவேணும்" என்றிவன்சொன்ன வார்த்தைக்கும், "பந்துக்களுக் கொருகோற்குத்தும் கொடேன்" என்றவன் சொன்னவார்த்தைக் கும் வாசியறியாத கோஷ்டியிலேயிறே போய்ப்புக்கது." ராமாவ தாரத்தில் தூதுபோன திருவடியுடைய வேற்றம் தந்திருவுள்ளத்தி லேபட்டுக்கிடந்திறே (உ) *அவனே பின்னோர்தூதாதி மன்னர்க்கா கிப் பெருநிலத்தா ரின்னார் தூதனென நின்றது.

முதற்பாட்டு.

கற்பார்இராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ ?*
புற்பாமுதலாப் புல்லெறும்பாதியொன்றின்றியே *
நற்பாலயோத்தியில்வாழும் சராசரம்முற்றவும் *
நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார்பெற்றநாட்டுளே. (க)

ப.—முதற்பாட்டில், சக்ரவர்த்தி திருமகனுடைய புருஷார்த்த ப்ரதத் வத்தையநுஸந்தித்து, கல்வியிலாதாரமுடையார்க்கு அவரையொழிய ஜ்ஞா தவ்யமில்லையென்கிறார்.

(சென்றுசேனையைநாசஞ்செய்திட்டு) இதுதானும் அர்ஜுநாதிகளம்பாலே யன்றென்றபடி. "ஆயுதமெடுக்கவொண்ணாது" என்று வேண்டிக்கொண்டபடியாலே, ஸாரத்யம்பண்ணித் தேர்க்காலாலே யுழக்கிப்பொகட்டான். (நடந்தநல்வார்த்தையறிந்துமே) தன்மேலே * ஶரவர்ஷமாக வர்ஷிக்கிறவித்தண்ணிய பூமியிநின்றும், தன் வரவுக்கெதிர்கொள்வாரிருந்தவிடத்தேபோய்ப் புக்கானென்கிற பெரியவார்த்தையையறிந்தும். (க) [க்ருஷ்ணாஶ்ரயா க்ருஷ்ணபலா - க்ருஷ்ணநாதா ச பாண்டவா:] துர்யோதநாதிகளில்லாதவிடத்தே போய்ப்புகப்பெற்றதிறே.

கீழ்ச்செய்த செயலடங்கலும், தன்ஸ்வாதந்த்ர்யங் கிடக்கச் செய்தே செய்தவையிறே. ஸ்வரக்ஷணத்துக்குத் திருவுகிராகிலுமுண்டேயங்கு, அவைபோலன்றிறேயிங்கு; ஆஶ்ரிதபாரதந்த்ரனாய்த் தன்னையழியமாறி, பாண்டவர்களுக்காக, உடம்புக்கீடிடாதே எதிரிகளம்புக் கிலக்காக்கின வின்னீர்மைக்குப் போருமோ கீழ்ச்சொன்ன குணங்கள். (கூ)

பத்தாம்பாட்டு

வார்த்தையறிபவர் மாயவற்காளன்றியாவரோ? *
போர்த்தபிறப்போடுநோயோடுமூப்பொடு இறப்பிவை
பேர்த்து * பெருந்துன்பம்வேரறநீக்கித் தன்தாளின்கீழ்ச்
சேர்த்து* அவன்செய்யும் சேமத்தைஎண்ணித்தெளிவுற்றே. (கo)

ப.—அநந்தரம், கீழ்ச்சொன்ன வுபகாரத்தளவன்றியே ஸகலஸாம்ஸாரிக தோஷ நிவர்த்தகத்வமாகிற மஹாகுணத்தை யநுஸந்திக்கிறார்.

(ஈ ன்.) வார்த்தை-(உ) "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ - அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - மாமேகம்ஶரணம்வ்ரஜ ஸர்வபாபேப்யோ

(க) பார-மௌஸல் (உ) கீதை-கஅ-கக.

மோக்ஷயிஷ்யாமி ” என்ற நல்வார்த்தை, அறிபவர்-அறியுமவர்கள், போர்த்த-ஸ்வரூபப்ரகாஶம்பிறவாதபடி அஜ்ஞாநத்தாலே திரோதம் பண்ணிப்போந்த பிறப்பொடு - ஜந்மத்தோடும், நோயொடு - அந்தஶரீராநுபந்தியாய்வரும் வ்யாதியோடும், மூப்பொடு - அதுபோலன்றியே அபரிஹார்யமான மூப்போடும், இறப்பு - அத்தோட வர்ஜநீயமாய்வரும் விநாஶமுமாகிற, அவை - அந்த ஷட்பாவவிகாரங்களை, பேர்த்து - விட்டுக்கழியும்படி பண்ணி, பெருந்துன்பம் - அபர்யந்தது:கரூபமான கர்ப்பநரகக்லேசங்களையும், வேற - தந்மூலமான கர்மவிநாஶபர்யந்தமாக, நீக்கி - போக்கி. ஸ்வாத்மாநுபவங்களிலகப்படாதபடி, தன்-தன், தாளின் - திருவடிகளின். கீழ் - கீழே, சேர்த்தியவன் - சேரும்படிபண்ணி (க) “ மா ஶுச: — மாஶுச: ” என்று ஶோகநிவ்ருத்திபண்ணினவன். செய்யும் - (உ) „ ந ச புநராவர்த்ததே — நசபுநராவர்த்ததே ” என்கிறபடியே மீண்டுவாராதபடிபண்ணும், சேமத்தை - ரக்ஷையை, எண்ணி - அநுஸந்தித்து, தெளிவுற்று - வ்யவஸிதராய்க்கொண்டு, மாயவற்கு - தங்களுக்காஶ்ரயணீயனாய் விரோதிநிவர்த்தகனான வாஶ்சர்யபூதனுக்கு. அன்றி - ஒழிய, வேறொருவர்க்கு, ஆள் - ஆள், ஆவரோ - ஆவரோ. (கo)

ஆறு ;—(வார்த்தையறிபவர்) (ந) “விவேஶ வைஷ்ணவம் தேஜஸ் ஸஶரீரஸ் ஸஹாநுக: — விவேஶவைஷ்ணவம்தேஜஸ் ஸஶரீரஸ் ஸஹாநுக:” என்று கொண்டு ஆஶ்ரிதரை * ஆத்மஸ்வரூப திரோதாநகர ஜந்மவ்யாதி ஜராமரணாதி நிரவதிக து:காகர ஸம்ஸாரத்தைப்போக்கி, கைவல்யரூப மஹாநர்த்தத்திலும் புகாமே தன் தாளிணைக்கீழ்ச்சேர்த்து ஆத்மாந்த ஸம்ஶ்லேஷத்தைப் பண்ணியருளும் மஹாகுணத்தை உள்ளபடியே யறிந்துவைத்தும், சேதநராயிருப்பார், ஆஶ்சர்யபூதனை சக்ரவர்த்தி திருமகனுக்கல்லது ஆளாவரோவென்கிறார். (கo)

ஈடு ; அவ ; பத்தாம்பாட்டு ; கீழ் சேதநர்க்குப்பண்ணின வுபகாரங்களெல்லாம் ஸம்ஸாரத்திலே யிருக்கச்செய்தே பண்ணினவையிறே; அவைபோலல்ல, ஸம்ஸாரம் மறுவலிடாதபடிபண்ணித் தன் திருவடிகளிலே சேர்த்துக்கொண்டதொரு மஹோபகாரத்தையருளிச்செய்கிறார்.

(வார்த்தையறிபவர்) மஹாபாரதமெல்லாவற்றாலும் சொல்லிற்றாயிற்று அதொரு வார்த்தையாகாதே. ப்ரயோஜநவத்தாவதிறே - வார்த்தையாவது. (க) „ மாமேகம் - மாமேகம்” என்றத்தை

(க) கீதை-கஅ-சுசு (உ) சாந்தோ-அ-கடு

(ந) ரா-உத்தர-ககo-கஉ

யிறே-யிங்கு வார்த்தையென்கிறது; கீழடங்கலும் கடல்போலே; அதிலம்ருதம்போலேயிது. (மாயவற்காளன்றியாவரோ) அவன் "என்னையேபற்று" என்றுசொல்லாநின்றால், இவர்கள் அவனை யொழியவும் பற்றுவர்களோ. (மாயவன் - வ்யாமோஹத்தையுடையவன்.) ரஹஸ்யங்களெல்லாம் வெளியிட்டானிறே அவள்குழல் முடிக்கைக்காக.

(போர்த்தபிறப்பித்யாதி) பாணிக்கூடு வரிந்தாப்போலே, இவ் வாத்மாவையறியவொண்ணாதபடி சூழப்பொதிந்துகிடக்கிற ஜந்மங்கள், அவைபுக்கவிடத்தே புகக்கடவவ்யாதி, அங்ஙனேயாகிலும் சிறிதுநாள்செல்லாதபடி இடிவிழுந்தாப்போலே நிற்கிறஜரை, அங்ஙனேயாகிலுமிருக்கவொண்ணாதபடி இவனுக்கநபிமதமானவிநாசம், இவற்றையெல்லாம். (போர்த்து) ஈஸ்வரனுக்கும் ஒருவிரகுபார்த்துத்தள்ளவேண்டும்படியிறே அவற்றின்கனம். விரகர் நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே தள்ளி.

(பெருந்துன்பம் வேரறநீக்கி) ஜந்மம்போனால் அநந்தரம் வரக்கடவதான கைவல்யமாகிற மஹாதுஃகத்தை ஸவாஸநமாகப்போக்கி. "கீழ்நின்றநிலைதான் நன்று" என்னும்படியிறே இதின்தண்மை. அது பின்னையொரு பரிரபரிக்ரஹம்பண்ணியாகிலும் பகவத்ஸமாஸ்ரயணம்பண்ண யோக்யதையுண்டிறே, இது நித்யவிநாசமிறே. (தன்றாளின்கீழ்ச்சேர்த்து) பாதரேகைபோலேயிருக்கத் திருவடிகளிலேசேர்த்து (அவன்செய்யும் சேமத்தையெண்ணி) பின்னை இவனுடைய மீட்சி தன்புத்த்யதீநமாம்படி பண்ணிவிடுகை. இவன் நினைவோடு தன் ஸங்கல்பத்தோடு வாசியறும்படிபண்ணுகை. இவனும் சேதநனாயிருக்கச்செய்தே, முக்தனானாற்கொள்ளும் நாநாபவநமும் அவன் புத்த்யதீநமாயிறேயிருப்பது. இவன்கையிலே இவனைக்காட்டிக்கொடுத்தாலும் அவனுக்கஞ்சவேண்டாதபடியாயிருக்கை.

(எண்ணித்தெளிவுற்று) இத்தை மநோரதித்துத்தெளிந்து. அவன் "என்னையேபற்று" என்று சொன்னதில், தலைபாடியிலே, "ஸகலவிரோதிகளையும் நானேபோக்கி யென்னைத்தருவன்" என்று சொன்னத்தைத் தெளிந்திருக்குமவர்கள் (தலையாடி - "ஸவ-ஹவா வெஹெ்ாஹொக்ஷயிஷ்ாமி - ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்றது. அவனுக்கல்லதாளாவரோ.

கீழ்ச்சொன்ன குணங்களெல்லாம், "மண்திண்ணவேணும்" என்றழுத ப்ரஜைக்கு அத்தையிட்டு அதுக்குப்பரிஹாரம் பண்ணுமாபோலேயாயிற்று; இங்கு இவற்றினுடைய ஹிதமேபார்த்து ஸம்ஸாரந் தொடக்கமான ஸகலதுரிதங்களும் மறுவலிடாதபடிபோக்கித் தன்திருவடிகளின் கீழேவைத்து ரக்ஷித்த பெரியநீர்மைக்குப்போருமோ கீழ்ச்சொன்னவையடங்கலும். கீழ்ப்பண்ணினபரிஹாரங்கள் க்ராந்திகிடக்கப்பண்ணும் பரிஹாரங்கள்போலே; ஸம்ஸாரங்கிடக்கப் பண்ணின பரிஹாரங்களிறே; அது நிர்வ்ரணமாம்படி சிகித்ஸித்து நோக்குவாரைப்போலே இதிற்சொல்லுகிறகுணம், கீழிலவை ஸம்ஸாரிகளிச்சையாலே செய்தவை; இது ஈஶ்வரேச்சையாலே செய்ததிறே. (௧௦)

பதிற்றாம்பாட்டு.

தெளிவுற்றுவீவின்றிநின்றவர்க்கு இன்பக்கதிசெய்யும் *
தெளிவுற்றகண்ணனைத் தென்குருகூர்ச்சடகோபன்சொல் *
தெளிவுற்றஆயிரத்துள் இவைபத்தும்வல்லாரவர் *
தெளிவுற்றசிந்தையர் பாமருமூவுலகத்துள்ளே. (௧௧)

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸிக்க வல்லவர்கள் ஸம்ஸாரத்துக்குள்ளே விஶதஜ்ஞாந சித்தராவரென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) தெளிவு - "உபாயோபேயங்களவனே" என்னும் தெளிவை, உற்று - பெற்று, அதுக்கு, வீவு - விச்சேதம், இன்றி - இன்றியே, நின்றவர்க்கு - ஸ்த்திரஸ்வரூபராய் நின்றவர்களுக்கு இன்பம் - நிரதிஶயாநந்தரூபமான, கதி - ப்ராப்யத்தை, செய்யும் - பண்ணிக்கொடுக்குமவனாய், தெளிவுற்ற - இவன் கலங்கினவன்றும் தான் தெளிந்து நோக்குமவனாய், கண்ணனை - ஆஶ்ரிதஸுலபனான க்ருஷ்ணனை, தென் - தர்ஶநீயமான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்ததாய், தெளிவுற்ற - ஸ்வஸம்பந்திகளைத் தெளிவுற்றிருக்கக்கடவதான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இவை - இவை, பத்தும் - பத்தும், வல்லாரவர் - அப்யஸிக்கவல்லாரானவர்கள், பா - கர்மநிபந்தநமான பரப்பை, மரு - உடைத்தான, மூன்று - குணத்ரய க்ருதபேதத்தையுடைய, உலகத்துள்ளே - லோகத்துக்

குள்ளே, தெளிவு - ஶாஸ்த்ரஸத்த்வகார்யமான ஜ்ஞாநவைஶத்யத்தை, உற்ற - உடைத்தாயுள்ள, சிந்தையர் - நெஞ்சையுடையரா யிருப்பர்கள்.

இது - கலித்துறை. (கக)

ஆறு ;—(தெளிவுற்று) அநந்யப்ரயோஜநமாக வொருகால் தன்னை நினைத்தவர்களுக்குத் தன்திருவடிகளை ஆத்மாந்த போக்யமாக் கிக்கொடுத்து வைத்து, பின்னையும் “அவர்களுக் கொன்றுஞ் செய்யப்பெற்றிலோம்” என்று அவர்கள் செயலை நினைத்துக்கொண்டிருக்கு மிந்த மஹாகுணவிஶிஷ்டனை யெம்பெருமானை ஸாக்ஷாத் கரித்துச்சொன்ன வித்திருவாய்மொழியைவல்லார், இந்த லோகத்திலே யிருந்துவைத்தே அவனை யறிந்து ததேகபோக ராவரென்கிறார். (கக)

ஈடு:—நிகமத்தில் - இத்திருவாய்மொழி யப்யஸித்தார், ஸம்ஸாரத்துக்குள்ளே யிருந்துவைத்தே ஶாஸ்த்ரபாவரென்கிறார்.

(தெளிவுற்றித்யாதி) “ப்ராப்யப்ராபகங்களிரண்டுமவனே” என்றத்யவஸித்து, பின்னை நாட்டார் செயல்கள் கண்டாதல், யுக்த்யாபாஸங்கள் கண்டாதல் பிற்காலியாதே நின்றவர்களுக்கு. பாரத ஸமரத்திலே நின்று அர்ஜுநனை நோக்கி, “நான்சொன்னவிது உனக்குத்தெரிந்திற்றே, எதிரேபோந்ததோ” என்ன, (க) “ஸ்தி2தோஸ்மி - ஸ்த்திதோஸ்மி” என்ன, அவன் “ஆனால் நங் காரியஞ்செய்யப் பார்த்ததென்” என்றுகேட்க, (க) [கரிஷ்யே வசநம் தவ - கரிஷ்யேவசநம்தவ] தேவரீரேவின வடிமைசெய்யக் கடவேன்” என்றானிறே.

“அர்ஜுநன்றானெம்பெருமானைப்பெற்றானோ, இல்லையோ” என்று நம்பிள்ளை ஜீயரைக்கேட்க, “உமக்கதுகொண்டு காரியமென், இது சொன்னவன் ஸர்வஸாதாரணனாகில் பகவதுக்தியென்னுமிடம் நிஶ்சிதமாகில் தந்தாமுடைய கர்மாநுகூலமாகவும் ருச்யநுகூலமாகவும் பெறுகிறார்கள்; பெற்றவர்களை யாராய்ந்துபார்த்து அத்தாலேயன்றே நாம் பற்றப்பார்க்கிறது” என்றருளிச்செய்தார். சேர்ந்து குளிர்ந்த தண்ணீரிருந்தால், அதுகுடித்து தாஹங்கெட்டவனைக் கண்டன்றிறே தாஹித்தவன் தண்ணீர்குடிப்பது.

(க) கீதை-க௮-எ௩.

(இன்பக்கதிசெய்யும்) நிரதிஶயாநந்தயுக்தமான ப்ராப்யத்தைப் பண்ணிக்கொடுக்கும். (தெளிவுற்றகண்ணனை) இவன்தெளியமாட்டாத விழவுதீர இவனுக்கு நித்யகைங்கர்யத்தைக் கொடுக்கையிலே தான் தெளிந்தபடியே யிருக்கும் க்ருஷ்ணனை. (க)
* ஊஹம்ஸ்மராமி – அஹம் ஸ்மராமிபோலே.

(தெளிவுற்றவாயிரம்) ஸஹ்யத்திலே கலங்கின நீரானது ஓரோப்ரதேசங்களிலேவந்து தெளிந்து உபயோகயோக்யமாமாபோலே, அதிக்ருதாதிகாரமாய் கூளமும் பலாப்பிசினும்போலே ஒன்றை நிஷ்கர்ஷித்துப் பிரிக்கவொண்ணாதபடியாயிருக்கிற வேதார்த்தமானது, ஸர்வாதிகாரமாய் ஸர்வஸம்ஶயங்களுந் தீர்ந்து தெளிந்தது இவர்பக்கலிலே வந்தவாறே.

(இவைபத்தும்வல்லாரவர் தெளிவுற்றசிந்தையர்) இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவர்கள்; இவ்வாழ்வார் தம்மைப்போலே தெளிவுற்ற நெஞ்சை யுடையராவர். தேசவிசேஷத்திலே போனாலோ வப்படி தெளிவதென்னில் (பாமருமூவுலகத்துள்ளே) பாபத்தை-பாவென்று கடைக்குறைத்தலாய், பாபபூயிஷ்டமான தேசத்திலே யென்றபடி; அவ்வருகே யொரு தேசவிசேஷத்திலே போனால் பெறக்கடவதெளிவை, அதுக்கெதிர்த்தட்டான விங்கே யிருந்தே யுடையராவர். ஸர்வேஶ்வரன் தானே யிங்குவந்தவதரிக்கிலும் ஶோகமோஹத்தைப்பண்ணவல்ல ஸம்ஸாரத்தே யிருந்தே தெளிவுற்ற சிந்தையர். ஹேயப்ரத்யநீகமான வஸ்துவையும் தன் வழியாக்கவல்ல விவ்விபூதியிலே யிருந்துவைத்தே- ஶுத்தபாவராயிருப்பர். (கக)

ஐந்தாம்திருவாய்மொழி முற்றிற்று.

(க) வாராஹசரமம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஏழாம்பத்து

ஆறாந் திருவாய்மொழி

பாமரு - ப்ரவேஶங்கள்.

ஆறு ;—(பாமருமூவுலகும்) இப்படி யாஶ்ரிதரை ப்ரக்ருதிஸம்பந்தத்தைப்போக்கித் தன் திருவடிகளிலே சேர்த்தருளு மிம்மஹாகுணம் கிடக்கச்செய்தே, "நான்பின்னையும் இப்ப்ரக்ருதியோடேகூட வர்த்திக்கிற வத்தனையாகாதே" என்று தத்ஸம்ஶ்லேஷவிரோதியான தம்முடைய ப்ரக்ருதி ஸம்பந்தாநு ஸந்தாநத்தாலே அத்யந்த மவஸந்நராய், ப்ரக்ருதி ஸம்பந்தத்தைப் போக்கியருளி உன் திருவடிகளிலே யென்னைச் சேர்த்தருளவேணுமென்று சக்ரவர்த்தி திருமகனை நோக்கிக் கூப்பிடுகிறார். *

ப —ஆறாந்திருவாய்மொழியில், இப்படி யாஶ்ரிதபவ்யனாய் விரோதிநிவாரகனான ஸர்வேஶ்வரனுடைய குணநிக்யத்தைக் கீழே யநுஸந்தித்து, அவனை யொழிய வேறு விரோதிநிவர்த்தக ரில்லாமையாலே; அவனுடைய காரணத்வாதி ப்ரயுக்தமான ஸம்பந்தவிசேஷத்தையும் தத்கார்யமான ஸர்வாத்மபாவத்தையும், ரக்ஷணோபயோகமான பரத்வஸௌலப்யங்களையும், அவற்றோடேகூடின போக்யதாதிஶயத்தையும், அந்த போக்யதா ப்ரயுக்தமாய் அத்யுஜ்ஜ்வலமாயுள்ள ப்ராப்யதையையும், அந்தப்ராப்யதா ப்ரகாஶகமான வாபிரூப்யாதிஶயத்தையும், ஸ்வேநரூபேணவும் காரணபுருஷரூபேணவு முண்டான ரக்ஷணப்ரகாரத்தையும், தது பயுக்தமான மாலிப்ரப்ருதி நிரஸநத்தையும், விபீஷணபக்ஷபாதத்தையும், ஸ்வஜநரக்ஷணத்தையு மநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிஶிஷ்டனான ஸர்வேஶ்வரனுடைய ப்ராப்தியாலும் பக்ஷபாதத்தாலும் அவனைக்கொண்டு விரோதியைக் கழித்துக்கொண்டு அவனை ப்ராபிப்பதாக அத்யார்த்தராய்க் கூப்பிடுகிறார். *

ஈடு ;—இப்படி தெளிந்தால், பின்னைச் செய்வது கூப்பிடுகை போலேகாணும்; இல்லையாகில் "ஸம்ஸாரம் நன்று" என்று கலங்கினாராவரே. "அம்மங்கியம்மாள், 'இத்திருவாய்மொழி பாடக் கேட்டநுபவித்துப் போருமிதுக்கு மேற்பட, இதிலோடுகிற வார்த்திக்கு நம்மால் பாசுரமிட்டுச் சொல்லப்போகாது' என்று பணிக்கும்" என்றருளிச்செய்வர்.

கிழே-* ஆழியெழச்சங்கிலே-ஸர்வேஶ்வரன் காட்டிக்கொடுத்த விஜயங்களை யநுபவிக்கைக் குறுப்பாக, அவனுடைய வபதாரங்களை யநுஸந்தித்தார்; அந்த ப்ரஸங்கத்தாலே அவனுடைய வவதாரங்களையும் அதுக்கடியான க்ருபாதிகுணங்களையுமநுஸந்தித்து, இக்குணங்களும் நடையாடாநிற்க, இதிலே ப்ராப்தியுண்டாயிருக்க, தாங்கள் சேதநராயிருக்க, ஸம்ஸாரிகளித்தை யிழப்பதே?'' என்று விஸ்மிதராளுர்: ''அவர்கள் அபேக்ஷை யில்லாமையாலே யிழக்கிருர்கள், அபேக்ஷையுடைய நாமிழப்போமல்லோம்; அவனுடைய வவதாரங்களையும் வடிவழகையுமநுபவிப்போம்'' என்று பார்த்த விடத்து, அவற்றை யப்போதே கிட்டி யநுபவிக்கப் பெருமல் மிக வுமவஸந்நராய்; ஸர்வேஶ்வரனுக்குப் பரமபதத்திலு மிருப்பரிதாம்படி யார்த்தியாலே, கிரம்பிற் றெருகடல் கையெடுத்துக் கூப்பிடுமா போலே கூப்பிடுகிற கூப்பிடுகேட்டு அவ்விருப்புக் குலைந்துவந்து முகங்காட்டவேண்டும்படி, அவன் ப்ராப்யனுயிருக்கிறபடியையும், ப்ராபகனுயிருக்கிறபடியையும், விரோதிநிரஸநஶீலனு யிருக்கிறபடியையுஞ்சொல்லி, கேட்டாரடைய சீராம்படி பெருமிடறு செய்து கூப்பிடுகிறுர்.

(க) [ஸஹவொநூவ - பஹூவொந்ருப] சக்ரவர்த்தி, ''பெருமாளைத்திருவபிஷேகம் பண்ணுவிக்க'' என்றுகோலி, ''அறுபதினுயிரமாண்டு ஒருதலைமிதிக்க வொருதலை கிளம்பும்படியான ராஜ்யத்தை வருந்தி யொருபடி யடிப்படுத்தினேம், இத்தை யொரு சிறுபிள்ளை தலையிலே வைத்தால் பொறுக்குமோ! பொருதோ!'' என்று விசாரித்து, ''இதுதன்னை நாட்டோடே கூட்டிப் பார்ப்போம்'' என்று கோலி, ராஜலோகத்தை யடையத் திரட்டி, ''நானிங்ஙனே பெருமாளைத்திருவபிஷேகம்பண்ணுவிக்கப் பாராநின்றேன்; உங்களுக்கிஷ்டமோ அன்றே?'' என்றுகேட்க, அநந்தரம் ''கிழவா போகாய்'' என்ன, (உ) [கூயஂ நூ—ஊயியஂரெணவரயிவீஃநூ—ஶர ஸதி। ஹவஂதொஊ ஷ—ஃஙஷி ய—வாஜஂஃஃ தஜஃ - கதம்து மயிதர்மேண ப்ருதிவீமநுஶாஸதி। பவந்தோத்ரஷ்டுமிச்சந்தி யுவராஜம்மஹாத்மஜம்] ''நாமொருப்பட்ட கார்யம் நன்ருய் விழுந்தது, ராஜலோகமிப்படி த்வரிக்கப்பெறுவதே!'' என்று, அதிலே போர

(க) ரா-அயோ-உ-உச. (உ) ரா-அயோ-உ-உரு.

ஹ்ருஷ்டனாய், அந்த ஹர்ஷத்தை நெஞ்சிலே யிட்டுவைத்து, "அது தன்னை யிவர்கள்வாயாலே சொல்லக் கேட்கலாகாதோ" என்று "வாரீர்கோள், அறுபதினாயிரமாண்டு ராஜ்யம்பண்ணுகிறவிடத்து, இற்றைவரை 'எனக்கு' என்றொரு ஸுகம் கோலாதே உங்கள் ரக்ஷணத்துக்கா மவையே தேடிக்கொடுபோந்த நானொருவார்த்தை சொன்னால், 'இப்போது நீயிருந்தாயாகில் வீகமென், க்ரமத்திலே செய்துகொள்ளுகிறோம்' என்னுதல், அன்றாகில், 'உனக்கு ப்ரியமாகிலப்படி செய்யலாகாதோ' என்றொருவார்த்தைசொல்லி யாறியிருத்தல் செய்கையொழிய, படுகொலைக்காரர் கையிலே யகப்பட்டார் 'தப்பவேணும்' என்று பார்க்குமாபோலே நீங்களிங்ஙனே கூப்பிடுகைக்கு நான் பண்ணின வபராதமென்" என்ன (க) [[illegible] - பஹவோந்ருப கல்யாண குணா:புத்ரஸ்யஸந்திதே] "எதிரிகளம்பாலழியப்பெற்றதில்லை உன்னுடையவிஷயம், உன்மகனுடைய குணத்தாலே நாட்டைப் படுகொலைக்குத்திணைப்பாண்டீ" என்றார்களாயிற்று, நாங்கள் குணஜிதரா யிவ்வார்த்தை சொன்னோ மித்தனையல்லது ஒரு கார்யபுத்த்யா சொன்னோமல்லோம்நாம். (உ) [[illegible] - தாதூநாமிவஸைலேந்த்ரோ குணாநாமாகரோமஹாந்] தாதுக்களானவை "இன்னமலையிற்பொன்" என்று விலைபோமாபோலே, புறம்பே சிலகுணங்கள் கண்டால் "பெருமாள்பக்கல்குணம்" என்றிட்டாயிற்றங்குவிலைபோவது-"இவ்வ்யக்தியில் குணம்" என்றாயிற்றுப்புறம்பு விலைபோவது; இப்படிப்பட்டவனுடைய குணங்களைச் சொல்லிக் கூப்பிடுகிறார். *

முதற்பாட்டு.

பாமருமூவுலகும்படைத்த பற்பநாபாவோ ! *
பாமருமூவுலகுமளந்த பற்பபாதாவோ ! *
தாமரைக்கண்ணனேவோ ! தனியேன்தனியாளாவோ ! *
தாமரைக்கையாவோ ! உன்னைஎன்றுகோல்சேர்வதுவே ! (க)

ப — முதற்பாட்டில், காரணத்வாதிகளாலே அஸாதாரணஸம்பந்தத்தை யுடையவுன்னையென்று கிட்டியநுபவிப்பதென்கிறார்.

(க) ரா-அயோ-உ-உசு. (உ) ரா-கிஷ்-கரு-உக.

(இ-ள்.) பா - பரப்பை, மரு - உடைத்தாய், மூவுலகம் - "க்ருதகம், அக்ருதகம், க்ருதாக்ருதகம் - க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம்" என்கிற த்ரைவித்யத்தையுடைத்தானலோகத்தை, படைத்த - உண்டாக்கின, பற்பம் - தாமரைப்பூவையுடைய, நாபா - திருநாபியையுடையவனே, பாமருமூவுலகம் — ஏவம்விதமானலோகத்தை, அளந்த - அநந்யார்ஹமாம்படியளந்த, பற்பம் - தாமரைப்பூப்போலேநிரதிஶயபோக்யமான, பாதா - திருவடிகளையுடையவனே, அநந்யார்ஹராணவையங்கீகரித்துரக்ஷிப்பதாய் தாமரை - தாமரைபோலேதர்ஶநீயமான, கண்ணா - திருக்கண்களையுடையவனே, அவர்களைஸ்வஸ்பர்ஶஸுகத்தாலேபாவநந்திகளாக்கும், தாமரை - தாமரைபோலேவிலக்ஷணமான, கையா - கைகளையுடையவனே, தனியேன் — விரோதிபூயஸ்தையாலேஅஸஹாயனனென்னுடைய தனி - விரோதிநிவர்த்தகத்வத்திலத்விதீயனாய், ஆளா - ஆளக்கடவஸ்வாமியானவனே, உனை - இப்படிப்ராப்தனுமாய் போக்யனுமாய் ரக்ஷகனுமானவுன்னை, என்றுகொல்- என்றோ, சேர்வது - ப்ராபிப்பது.

பதந்தோறும், ஓவென்றது - அதிஶயிதமானவார்த்திவிசேஷத்தைக்காட்டுகிறது (க)

ஆறு ;—தேவாதிஸ்தாவராந்தமான நிகிலஜந்துஜால பரிபூர்ணமான ஸகலலோகங்களையும் படைத்தபரமகாருணிகனே, பின்னையும் அந்த ஸ்ருஷ்டமான லோகத்திலே ஸ்ரீவாமநனாய்வந்தவதரித்தருளி அநாலோசிதகுணாகுணமாக ஸர்வாத்மாக்களு முஜ்ஜீவிக்கும்படி ஸகலலோகத்தையுமளந்தருளின பரமஶீலவானே, எனக்கு நீயல்லதுகதியில்லை; ஆனபின்பு, உன்னுடைய அதிரமணீயவிகஸித ஸரஸீருஹ ஸத்ருஶமான திருநாபியையும், விகஸிதநளிந ஸத்ருஶமான திருவடிகளையும், திருக்கண்களையும், திருக்கைகளையும், * கண்களாரளவும்நின்று காணும்படிஉன்னை யென்றோ நான்சேர்வதென்று கூப்பிடுகிறார். (க)

ஈடு; அவ;—முதற்பாட்டு; ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணியுபகரித்து நிரதிஶய போக்யனாயிருக்கிறவுன்னை, உன்னாலே யுபகாரங்கொண்டு உன் சுவடறிந்த நான் கிட்டுவதென்றோவென்கிறார்.

(பாமருமூவுலகும்படைத்த பற்பநாபாவோ) பாவென்று-பதார்த்தவாசகமாய், பாமருவியிருந்துள்ள; அதாவது- பதார்த்தங்களினுடைய நெருக்கத்தையுடைத்தான மூவுலகென்னுதல். பாமரு

வென்று- ஒருசொல்லாய், பாபமேமருவியிருந்துள்ள மூவுலகென்னு தல்; (அன்றிக்கே, பாவென்று-பரம்புதலாய், பரப்பையுடைத்தா யிருந்துள்ளவென்னுதல்.) மூவுலகென்று-கீழும், மேலும், நடுவுமா ன லோகங்களைச் சொல்லுதல். அன்றிக்கே, "க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதகம் - க்ருதகம், அக்ருதகம், க்ருதகாக்ருதம்" என்றிவ்வகையிலே யாக்கிச்சொல்லுதல். (படைத்த பற்பநாபா வோ) "என்தாயே" என்பாரைப்போலே. இத்தை யுண்டாக்கு கைக்கடியான ப்ராப்தியேயாய், போக்யதையின்றிக்கே யொழிந்ததா கிற்றான் நாஜறியிரேனே. நீயித்தைவருந்தி யுண்டாக்கிற்று அழிக் கைக்காகவோ. இல்லாதவஸ்துக்களை யுண்டாக்கக் கடவநீ, உள்ள வஸ்துவை யழிக்கிறதென் ?

(பாமருமூவுலகுமளந்த) இவற்றையுண்டாக்கி "மேல்பட்டது படுகிறது" என்றிருந்தாயாகிற்றறியிரேனே. இத்தைக்கண்ணி லே வெண்ணெயிட்டுக்கொண்டு நோக்குமவனன்றோ; பெற்றதாய் வளர்க்குமாபோலே. (க) "படிக்களவாக நிமிர்த்தநின் பாதபங்கய மே தலைக்கணியாய்" என்று-ஆசையுடையநானிருக்க, இச்சையில் லாதார் தலையிலே திருவடிகளைவைப்பதே !. மஹாபலிபோல்வார், பருந்திருஞ்சிறுப்போலே யித்தையபஹரித்தால், எல்லைநடந்து மீட் டுக்கொள்ளு மவனன்றோநீ.

அதுசெய்தமையுண்டு, உமக்கிப்போது அபேக்ஷிதமென்னென் ன (தாமரைக்கண்ணனேவோ) உத்பத்தியும், வளர்க்கையும், ஜீவநமு மெல்லா முன்பக்கலிலேயாயிற்று. (உ) "அவலோகநதாநேந பூயோ மாம் பாலய - அவலோகநதாநேநபூயோமாம்பாலய" என் னுமாபோலே, திருக்கண்களாலே நோக்கவேணுமென்கிறார். ஆக, திருக்கண்களிலழகை யநுஸந்தித்தார்.

அக்கண்ணழகே ஜீவநமாக விருக்கும் நித்யஸூரிகள் திரளில் தம்மை யிருக்கக்கண்டிலர்; அத்தாலே "தனியேன்" என்கிறார். (தனியேன்தனியாளாவோ) ஸ்த்ரீகளுடையநோக்கே தாரகமாயிருக் குமவர்களுடைய திரளுக்குங்கூட்டன்றிக்கே, உன்னோக்கேதாரக மா யிருக்குமவ்விபூதியிலுள்ளாருட னுங்கூட்டாகாதே, என்னை மூன் றும் விபூதியாக்கியாளுகிறவனே. அன்றிக்கே, உன்க்ருபையேதாரக

(க) கூ உ-உ (உ) வி-பு-க-உ0-கக

மாகவிருக்கிறவென்னை, உன்க்ருபைக்குஎன்னையொழியவேறுவிஷய மில்லையாம்படி யாளுகிறவனே யென்றுமாம்.

(தாமரைக்கையாவோ) அக்ரூரனுபாதிபோரேனோ. (க) [ஸௌஸூநதீத்ரீ - ஸோப்யேநமித்யாதி] திருக்கையிலடையாளமித்தனையு மிலச்சினைப்படியே அவனுடம்பிலே காணலாம்படி அவனை ஸ்பர்ஶித்து, அவனந்த ஸ்பர்ஶத்தாலே ஸ்தப்தனுப்நிற்கையாலே கைகயப்பிடித்தெறட்டு, பின்னையணைக்கைக்கு இருவரைக் கண்டதில்லை. (உ) " கரேண ம்ருதுநா தேவ: பாபாந் நிர்மோசயந் ஹரி: " என்கிறபடியே.

(உன்னையென்று கோல்சேர்வதுவே) (ங) " பூர்ணே சதுர்த்தஶே வர்ஷே பஞ்சம்யாம் " என்று நாளிட்டுக்கொடுக்கலாவது தம்பிமார்க்கோ, அஸாதாரணரான வடியாரானல் "இன்னநாள்பெறக்கடவது" என்றொரு நாளிட்டுக்கொடுக்கலாகாதோ. ஶேஷபூதனுகில் ஶேஷி கொடுத்தநாள் பெறக்கடவதாயிறே யிருக்கவடுப்பது, அங்ஙன் க்ரமப்ராப்திபார்த்து ஆறி யிருக்கமாட்டுகிறிலேன். (தனியேன் - உன்னையென்றுகோல் சேர்வதுவே) நாராயணனை யொழிந்திருப்பதொரு நாரமில்லையே; இனிச்சேருகையாவது - (ச)*அடியார்கள் குழாங்களை-உடன்கூடுகையிறே. (உன்னையென்றுகோல்சேர்வது) என்னுநிற்க, அதுசேரும்படி யென்னென்னில்; (ரு) * ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக்கண்டுவைக்கையாலே, " உன்னைச்சேர " என்றபோதே தன்னடையேவருமிறே. (க)

இரண்டாம்பாட்டு.

என்றுகோல்சேர்வது? அந்தோ! அரன்நான்முகனேத்தும் * செய்ய,
நின்திருப்பாதத்தையான் நிலம்நீரெரிகால் * விண்ணுயிர்
என்றிவைதாம்முதலாமுற்றுமாய் நின்றஎந்தாயோ !,*
குன்றெடுத்து ஆநிரைமேய்த்து அவைகாத்தஎம்கூத்தாவோ ! (உ)

(க) வி-பு-ரு-கஅ-உ. (உ) ஹரிவம்ஶ உஎ. ரு-கடு.
(ங) ரா-யு-கஉஎ-க. (ச) உ-ங-கo.
(ரு) ச-சு-கo.

ப.—அநந்தரம், ஸர்வாத்மபூதனுய் ஆபத்ஸகனுன வுன்னுடைய திருவடிகளை யென்று கிட்டுவேனென்கிருர்.

(இ - ள்) நிலம் நீர் எரிகால் விண் - ப்ருதிவ்யாதிபூதபஞ்சகமும், உயிர் - பௌதிகமரீரவிமிஷ்டமான ப்ராணிவர்க்கமும், என்று - ஆகிற, இவைதான் - இவை, முதலா - முதலாக, முற்றும் - ஸமஸ்தபதார்த்தங்களும், ஆய் - ப்ரகாரமாம்படி, நின்ற - நின்ற, எந்தாய் - ஸ்வாமியாய், அந்த ஸாமாந்யரக்ஷணமன்றியே, அவதாரப்ரயுக்தவிசேஷரக்ஷணமான, ஆநிரை - பசுத்திரளை, மேய்த்து - மேய்த்து, அதுக்கு வர்ஷத்தால் வந்த பாதை தீரும்படி, குன்று - மலையை, எடுத்து - எடுத்து, அவை - அவை, காத்த - காத்த, எங்கூத்தா - மநோஹாரிசேஷ்டிதத்தையெனக்கு ப்ரகாசிப்பித்தவனே, அரன் - ருத்ரனும், நான்முகன் - ப்ரஹ்மாவும், ஏத்தும் - ஸ்துதிக்கும்படியாய், செய்ய - தர்மநீயமான, நின் - உன், திருப்பாதத்தை - திருவடிகளை, யான் - அநந்யப்ரயோஜநனுன நான், சேர்வது - சேர்வது, என்றுகொல் - என்ருே, அந்தோ - ஐயோ!

ப்ரயோஜநாந்தரபரர்கும் ஸுலபமானதிருவடிகளை, அநந்யப்ரயோஜநனுன நான் கிட்டுகைக்குக் கூப்பிடவேண்டுவதே யென்று கருத்து. (உ)

ஆரு ;—(என்றுகோல்) சிதசிதாத்மக ஸமஸ்தவஸ்துக்களுக்கு மாத்மபூதனே, நிர்ஹேதுகமாக ஸ்ரீ கோவர்த்தநத்தை யெடுத்தருளிப் பசுக்களை ரக்ஷித்தருளின பரமகாருணிகனே, ஐஶ்வர்யபரவணரான ப்ரஹ்மேமாநாதிகளுக்குங்கூட ஸ்ப்ருஹணீய நிரதிஶய போக்யமான வுன்திருவடிமலர்களை யென்ருே நான் சேர்வதென்று கூப்பிடுகிருர். (உ)

ஈடு ; அவ ;— இரண்டாம்பாட்டு. அந்யபரராய்ப் புறம்பே தாரகாதிகளாம்படி யிருக்கிறவர்களுக்குங்கூட ஸ்ப்ருஹணீயமாம்படி யிருக்கிற திருவடிகளை, அநந்யபரனுய் இதுவே ப்ரயோஜநமாக விருக்கிற நானென்று பெறக்கடவேனென்கிருர்.

(என்றுகோல்) திருக்கையில் ஸ்பர்ஶஸுகத்தை யபேக்ஷித்து, "என்று கொல்சேர்வது" என்றவளவிறே-கீழ்; அதுக்கொரு ப்ரதிவசநம்பெருதேயிருக்க, "என்றுகொல்சேர்வது" என்கிற தென்னதசைதான். (அந்தோ) இனி, "என்றுகொல்சேர்வது" என்பாருமின்றியே யொழியக்கிடாய்ப்புகுகிறது; நான் முடிந்தேனென்கிருர். (அந்தோ!) என்கிற ஸ்வரத்தாலே - தம்முடைய வாற்றாமையை யாவிஷ்கரிக்கிருர்.

(அரன்நான்முகனேத்தும் செய்யநின்திருப்பாதத்தை) அழிப்பாருடன் ஆக்குவாருடன் வாசியற வுக்கும்படியான திருவடிகளை, ப்ரயோஜநாந்தரபரர்க்குங்கூட ஸ்ப்ருஹணீயமாம்படி யிருக்கிற திருவடிகளை அநந்யப்ரயோஜநனான நானென்று பெறக்கடவேன். தந்தாமுடையதொழில்களிலே அந்யபராயிருக்கிற ப்ரஹ்மாதிகளும் அநந்யபரரா யேத்தும்படி ஸ்ப்ருஹணீயமாய்ச் சிவந்திருந்துள்ள வுன் திருவடிகளை, அநந்யபரனான நான் கிட்டப்பெறுவதென்றோ. [அரன்நான்முகனேத்தும் செய்யநின்திருப்பாதத்தை யான்- என்று சொல்சேர்வது.]

(நிலநீரீத்யாதி) பெற்றபின்பு நோக்குகை யன்றிக்கே "ப்ரஜையைப்பெறவேணும்" என்று ஏற்கவே வருந்தும் தாயைப்போலே, ஸ்ருஷ்டிக்குமுன்பே யிவற்றை யுண்டாக்குகைக்காக த்ரிவ்ருத்கரணத்தை நினைத்து பஞ்சீகரணத்தைப்பண்ணி, இவற்றையடைய ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டமான பதார்த்தங்களுடைய வஸ்துத்வ நாமபாக்த்வங்களுக்காக ஜீவத்வாரா அநுப்ரவேசித்து, பின்னை யிவற்றைச்சொன்ன பாசுரம், அசித்தும் அசிதபிமாநிஜீவனும் ஜீவாந்தர்யாமியான பரமாத்மாவுமான விஸ்ஸங்காதத்துக்கு வாசகமாய்க்கொண்டு, தன்னளவிலேவரும்படி நிற்கிறநிலையைச்சொல்லுகிறது - முற்றுமாய்நின்ற வென்கிற வித்தாலே,

இவை யறியாதிருக்க, இவற்றின் பேற்றுக்கு அவன் வருந்த வேண்டுகிற ஹேதுவென்னென்னில் (எந்தாயோ) அதுக்கடியான ஸம்பந்தத்தைச் சொல்லுகிறது. இவற்றை யுண்டாக்கும் நாளிலே யுண்டாக்கி, "இனிமேல்வருமாபத்து, இவைதானே பரிஹரித்துக்கொள்ளுகிறது" என்று விட்டுவைக்கையன்றிக்கே, அரியனசெய்தும் நோக்குமவனென்கிறார். (குன்றேடுத்து) மலையையெடுத்திறே நோக்கிற்று. (ஆநிரைமேய்த்து) நோக்குமிடத்து, வரையாதே பசுக்களை நோக்குமவனாயிற்று (அவைகாத்தவெங்கூத்தாவோ) [ஆநிரைமேய்த்து - குன்றெடுத்து - அவைகாத்தவெங்கூத்தாவோ.] வர்ஷத்திலே நோவுபடுகிற பசுக்களை ரக்ஷிக்கைக்காக மலையையெடுத்தானவன், அப்போது த்ரிபங்கியாய் நின்ற வடிவுதான் வல்லாராடினாப்போலே தமக்காகர்ஷகமாயிருக்கையாலே-எங்கூத்தாவோவென்கிறார். ஆக, இவ்விரண்டுபாட்டாலும்-அவனுடைய ஸ்ப்ருஹணீய

தையைச் சொல்லி, ப்ராப்யத்வம் சொல்லிற்று ; மேலஞ்சுபாட்டாலே-அவனுடைய ப்ராபகத்வம் சொல்லுகிறது. (௨)

மூன்றாம்பாட்டு.

காத்தஎங்கூத்தாவோ ! மலையேந்திக்கல்மாரிதன்னை *
பூத்தண்துழாய்முடியாய்! புனைகொன்றையஞ்செஞ்சடையாய்! *
வாய்த்தஎன்நான்முகனே ! வந்துஎன்னாருயிர்நீயானால் *
ஏத்தரும்கீர்த்தியினாய் ! உன்னைஎங்குத்தலைப்பெய்வனே ? (௩)

ப.—அநந்தரம், ஸர்வஸுலபனாய் ஸர்வாதிகனான நீயெனக்கு தாரகனும்படி செல்லாமை விளைந்திருக்க, நானுன்னை யெங்கேகிட்டுவதென்கிறார்.

(இ - ள்.) மலை - மலையை, ஏந்தி - ஏந்தி, கல்மாரிதன்னை - கல்மழை, காத்த - காத்தபோது, எங்கூத்தா - வல்லாராடினாப்போலே தர்ஶநீயமான நிலையையுடையையாய், பூ - ஸர்வேஶ்வரத்வஸூசகமாய் விகஸிதமான பூந்தாரையுடைத்தாய், தண் - ப்ரமஹரமான, துழாய் - திருத்துழாய்மாலையை, முடியாய் - திருமுடியிலே யுடையையாய், புனை - அத்தேபாதிதன்னையுமீஶ்வரனாகவபிமானித்துப்புனைந்த, - கொன்றை - கொன்றைமாலையையும், அம் - அத்தாலேயழகுபெற்று, செம் - அந்தவீஶ்வரத்வஸாதகமாயுள்ள வுபாஸகத்வஸூசகமாய்ச்சிவந்த, சடையாய் - ஜடையையுமுடையனான ருத்ரனைப்ரகாரமாகவுடையையாய், வாய்த்த - அவனுக்குமுத்பாதகனாய்த் தன்பக்கலிலே யுத்பந்நனான, என்நான்முகனே - சதுர்முகனைப்ரகாரமாகவுடையையாயிருக்கிற வாகாரத்தையெனக்கு ப்ரகாசிப்பித்தவனாய், ஏத்த - அந்தபரத்வஸௌலப்யங்களுக் கெல்லைகண்டேத்த, அரும் - அரிய, கீர்த்தியினாய் - கீர்த்தியையுடையவனே, என்னபேக்ஷையின்றியே, நீ - நீ, வந்து - வந்து, என் - எனக்கு, ஆருயிர் - பரிபூர்ணதாரகன், ஆனால் - ஆம்படியாலே, உன்னை - ஸர்வாதிகனாய் ஸர்வஸுலபனாயிருக்கிறவுன்னை, எங்கு - எங்கே, தலைப்பெய்வன் - கிட்டியநுபவிப்பேன்.

ஓ - ஓ, ஈஶ்வராபிமாநிகளுக்கு மறிவில்லாதார்க்குங்கிடைத்தவிது, த்வதேகதாரகனாய் வாஶியறிந்து கூப்பிடுமெனக்கரிதாவதேயென்றுகருத்து. (௩)

ஆறு ;—(காத்தவெங்கூத்தாவே) த்வததீநஸ்வரூப சதுர்முக பஶுபதி ப்ராக்ருதிகளாய், த்வததீந மத்ஸ்வரூபனுமாய், இயத்தா ஸங்க்யாரஹிதமாகையாலே அஶக்யஸ்தவமான கல்யாணகுணவி

ஷ்டனுமா யிருந்தவனே, வர்ஷபீடிதமான பசுக்களை ரக்ஷித்தரு ளுகைக்காக ஸ்ரீ கோவர்த்தநத்தை யெடுத்துக்கொண்டு நின்றரு ளின வுன்னுடைய தர்ஶநீயமான வந்நிலையையும், அப்போது திரு வாயர் திருத்துழாயைக் கொண்டொப்பித்தருளப்பண்ணின வவ்வ ழகையும், கேவலமுன்னுடைய க்ருபையாலேயென்றோ காண்ப தென்கிறார். (ந)

சு; அவ ;—மூன்றும்பாட்டு. ப்ரஹ்மாதிகளுக்கும் காரண பூதனானநீ, நிர்ஹேதுகமாக வந்து த்வதேகதாரகனும்படியென்னைப் பண்ணியருளினுய்; ஆனபின்பு, நீயேகுறையும் செய்தருளவேணு மென்கிறார்.

(காத்தவெங்கூத்தாவோ) கீழே க்ருஷ்ணவ்ருத்தாந்தம் ப்ர ஸ்துதமிறே; "ஆநிரைமேய்த்தவைகாத்தவெங்கூத்தாவோ" என்று; "எத்திறம்" என்றால், பின்னையும் "எத்திறம்" என்று அதி லேபோமித்தனையிறே. கீழ்ச்சொன்னது வடிம்பிட்டு, திரியட்டும் "காத்தவெங்கூத்தாவோ" என்கிறார். (மலையேந்திக்கல்மாரிதன் னை) கல்லாலே வர்ஷிக்கையாலே மலையையெடுத்துப்பரிஹரித்தான்; நீராலேவர்ஷித்தானுகில் கடலையெடுத்து நோக்குங்காணும், பசுக் கள் ஸ்வரக்ஷணத்துக்கு மலையையெடுத்ததோ.

(பூத்தண்டுழாயித்யாதி) தத்தத்ஸ்வரூபங்களுக்கு அஸாதார ணமான லக்ஷணம்சொல்லுகிறது. (பூத்தண்டுழாய்முடியாய்) தனக் கஸாதாரணமாய் ஐஶ்வர்யஸூசகமான மாலையாயிற்றிது. தன்னு டைய ஸத்தை தன்னதீநமாம்படியிருக்கும் வஸ்துவுக்கு லக்ஷண மாயிற்று இம்மாலை. இத்தால் இவர் பெற்றதாயிற்றென்னிப்போ தென்னில் ; உன் ஸத்தையுன்னதீநமானவோபாதி என்ஸத்தையு முன்னதீநமாயிருக்க, நானெங்ஙனேயுன்னைப்பெறுகைக்கு ஸாதநா நுஷ்டாநம்பண்ணிக் காணும்படியென்கை. (புனைகொன்றையஞ் செஞ்சடையாய்) பிறர் ஸத்தையோ தான் உன்னதீநமன்றிக்கே யிருக்கிறது. பசுக்களின்ஸத்தையுன்னதீநமானுப்போலே, ஈஶ்வ ராபிமாநிகளாயிருப்பாருடைய ஸத்தையுமுன்னதீநமாயன்றோவிரு க்கிறது, (புனையித்யாதி) புனையப்பட்டகொன்றையையுடைத்தாய், அழகியதாய்ச் சிவந்திருந்துள்ள ஜடையையுடைய ருத்ரனும்நீயிட் டவழக்கு.

(வாய்த்தவென்நான்முகனே) கீழிரண்டு பதத்திலும்சொன்ன மாலைகள் அவ்வவர்க்கஸாதாரணமா யிருக்குமாபோலேயாயிற்று, இவனுக்கும் தனக்கடைத்த காரியத்துக்கு நாலுமுகம் அஸாதாரணமாயிருக்கும்படி. (வாய்த்த - ஸ்ருஷ்டியையுடைய, சதுர்முகன்.) இன்னமும் ஈஶ்வரன்றனக்கும் "இப்படி ஸ்ருஷ்டிப்போம்" என்றும் முடியாதபடியாயிற்று ப்ரஹ்மஸ்ருஷ்டியி லுண்டான வாய்ப்பு.

"என்" என்கிறவிதுக்கு - விஶேஷ்யத்திலே யூற்றமாகக் கடவது. வையதிகரண்யத்தாலே சொன்னால் - கழற்றிக்கொள்ளுகைக்கு முடலாய், கேவலபேதத்தையே சொல்லுகிறதென்று ப்ரமிக்கைக்குமுடலாயிருக்கும்; ஸாமாநாதிகரண்யத்தாலேசொன்னால் ஶேஷஶேஷிபாவமாகிற பிரிவும் தோற்றியிருக்கும். ஆக, ஸாமாநாதிகரண்யவையதிகரண்யங்களிரண்டுக்கும் பலம் நிலநியமநமிறே. ஆனாலும், ஸாமாநாதிகரண்யத்தாலே சொல்லுமதுக்கு இத்தனைவாசியுண்டு. (க) [𑌸𑍍𑌵𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 - ஸ்வமுத்திஶ்ய] ஸ்வார்த்தமாகவிறே யிவற்றையுபாதாநம்பண்ணிற்று. [𑌉𑌪𑌾𑌤𑍍𑌤𑍇 𑌸𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌨𑌿𑌯𑌮𑌨𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍌 𑌸𑍍𑌵𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 - உபாத்தே ஸத்தாஸ்திதிநியமநாத்யைஶ்சிதசிதௌஸ்வமுத்திஶ்ய] ஸத்தை யேபிடித்து ஸ்திதிநியமநாதிகளகப்பட அவனதீநமாயிருக்கையாலே, பிரியநின்று ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகைக்கொரு ப்ராப்தியில்லையாம்படியாயிற்று அத்யந்தபாரதந்த்ர்யமிருக்கும்படி.

(வந்தேதென்னுருயிர்நீ) பிறர்பக்கல் பண்ணின வுபகாரத்தைச் சொல்லவேணுமோ, என்பக்கல்பண்ணின வுபகாரந்தானே யமையாதோ. "நீயொருவனுளை" என்று கனக்கண்டுமறியாதே புறம்பே அந்யபரனாயிருக்கிறவென்னை, அத்தைத்தவிர்த்து உன்படியையறிவித்து உன்னையொழிய தரியாதபடியான தசையைப்பிறப்பித்தாய். (ஆனால்) இப்படியிருந்தபின்பு. (ஏத்தருங்கீர்த்தியினாய்) நீ ஸத்தையுண்டாக்க உன்னாலே லப்தஸத்தாகனாயிருக்கிறநான் "ஏத்துவேன்" என்றால், என்னாலேதானேத்தலாம்படியிருந்ததோ. ஆனால், உன்படியது, என்படியிது; இங்ஙனேயிருந்தபின்பு. (உன்னையெங்குத்தலைப்பெய்வனே) நானொருபாயாநுஷ்டாநம் பண்ணி

(க) ஸ்-ஸ்த-உ-அஎ.

உன்னையெங்கேவந்து கிட்டப்புகுகிறேன். என்றுலேவந்து கிட்டு கையென்றென்றுண்டோ. (ந)

நான்காம்பாட்டு.

எங்குத்தலைப்பெய்வன்நான் ? எழில்மூவுலகும்நீயே *
அங்குஉயர்முக்கண்பிரான் பிரமபெருமானவன்நீ *
வெங்கதிர்வச்சிரக்கை இந்திரன்முதலாத்தெய்வம்நீ *
கொங்கலர்தண்ணந்துழாய்முடி என்னுடைக்கோவலனே ! (ச)

ப.—அநந்தரம், ஸர்வஸ்மாத்பரனும் ஆஸ்ரிதபவ்யனும் அதிஸயிதபோக்யனானவுன்னை, அகிஞ்சநனான நானெங்கே கிட்டுவதென்கிறார்.

(இ - ள்.) கொங்கு - மதுவையுடைத்தாய், அலர் - விகஸிதமான, தண்ணந்துழாய் - செவ்வித்திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடி - மயிர்முடியையுடையையாய், என்னுடை - அவ்வழகை யெனக்குப்ரகாஸிப்பித்த, கோவலனே - பவ்யனான க்ருஷ்ணனே, எழில் - தர்ஸநீயவைலக்ஷண்யத்தையுடைய, மூவுலகும் - த்ரிவிதலோகமும், நீயே - நீயிட்டவழக்காய், அங்கு - அந்தலோகத்திலே, உயர் - ஜ்ஞாநஸக்த்யாதிகளாலே யுச்ச்ரிதனாய்த் தோற்றியிருக்கிற, முக்கட்பிரான் - ஈஸ்வராபிமாநியான த்ர்யக்ஷனும், பிரமன் - அவனுக்கு ஸ்வாமியான வாதிக்யத்தையுடையப்ரஹ்மாவென்று, பெருமானவன் - ப்ரஸித்தனானவனும், நீ - நீயிட்டவழக்காய், வெங்கதிர் - ஸத்ருக்களுக்கஸஹ்யமாம்படி ப்ரதாபோஜ்ஜ்வலமான, வச்சிரம் - வஜ்ரத்தை, கை - கையிலேயுடைய, இந்திரன் - இந்த்ரன், முதலா - முதலான, தெய்வம் - தேவவர்க்கமும், நீ - நீயிட்டவழக்கு, ஆனபின்பு, நான் - த்வத்ப்ராப்திஹேதுக்கமொன்றுமில்லாதநான், எங்கு - எங்ஙனே, தலைப்பெய்வன் - வந்துகிட்டுவேன். (ச)

ஆறு ;—(எங்குத்தலைப்பெய்வன்) ப்ரஹ்மேஸாநாதி ஸர்வ ஜந்துக்களுடைய ஸத்தாமாத்ரமேயோ த்வத்ஸங்கல்பாயத்தம் ; அவர்களுடைய வைஸ்வர்யமும் த்வத்ப்ரஸாதாதீநமன்றோ ; ஆதலால், ப்ரதிபந்தகத்தையும் போக்கியருளி அடியேனை உன்திருவடிகளிலே சேர்த்தருளவேணுமென்கிறார். (ச)

ஈடு ; அவ ;—நான்காம்பாட்டு. கீழ்ப்பாட்டில் - அவர்கள் ஸ்வரூபம் ததநீநமென்றது ; அவ்வவ ஸ்வரூபகதமாயிருப்பன சிலஸ்திதிக்கங்களுண்டிறே, அவையும் ததநீநமென்கிறது - இதில்.

(எங்குத்தலைப்பெய்வன்நான்) ஒரு துர்ப்பலனை "மலையைச் சுமா" என்றால், அவனாலே அதுசெய்து தலைக்கட்டப்போமோ. (எழில்மூவுலகும்நீயே) த்ரைலோக்யத்தி லுண்டான பதார்த்தங்களினுடைய வுத்கர்ஷமும் த்வததீநம்.

(அங்குயர்முக்கட்பிரான்) அந்த வண்டத்திலல்லாத தேவதைகளிற்காட்டில் ருத்ரன்பக்கலிலே வந்தவாறே யோருத்கர்ஷமுண்டிறே; அந்த வுச்ச்ராயமும் த்வததீநம். (பிரமபெருமானவன்நீ) அவன்றனக்குங்கூட ஜநகனும் சதுர்த்தஸ புவநேஸ்வரனுமாகையால் வருவதோரேற்றமுண்டிறே ப்ரஹ்மாவுக்கு, அதுவும் நீயிட்டவழக்கு. (வெங்கதிர்த்யாதி) (க) "வஜ்ரஹஸ்த: புரந்தர:" என்கிறபடியே - வெவ்வியகதிரையுடைத்தான வஜ்ரத்தைக் கையிலேயுடையனாயிருக்கிற விந்த்ரன் தொடக்கமான தேவதைகளுடைய வுச்ச்ராயமும் நீயிட்டவழக்கு.

(கொங்கலர்த்யாதி) உன்னையொழிந்த பதார்த்தங்களினுடைய வுத்கர்ஷமும் உனததீநமாம்படி யிருக்கிறநீ, உன்னுடைய வுச்ச்ராயம் நானிட்ட வழக்காம் படியானாய். மதுவையுடைத்தாய் விகஸிதமான செவ்வித்திருத்துழாயாலே யலங்க்ருதமான மயிர்முடியையுடையையாய், அவ்வழகையெனக்கு ப்ரகாஸிப்பித்த வாஸ்ரிதபவ்யனான க்ருஷ்ணனே. கொங்கலர் தண்ணந்துழாய்முடி யென்கையாலே - போக்யதாப்ரகர்ஷஞ்சொல்லிற்று ; என்னுடைக்கோவலனே யென்கையாலே - ஆஸ்ரிதபவ்யதையைச் சொல்லுகிறது. (ச)

ஐந்தாம்பாட்டு

என்னுடைக்கோவலனே! என்போல்லாக்கருமாணிக்கமே! *
உன்னுடைஉந்திமலர் உலகமவைமூன்றும்பரந்து * [டிட்டு *
உன்னுடைச்சோதிவெள்ளத்து அகம்பாலுன்னைக்கண்டுகொண்
என்னுடையாருயிரார் எங்ஙனேகொல்வந்தெய்துவரே ? (ரு)

ப.—அநந்தரம், நிரதிஸய ப்ராப்யபூதனான வுன்னை, லௌகிக விஷயங்களிலே கைகழிந்திருக்கிற வென்னாத்மா வெங்ஙனே கிட்டக்கடவதென்கிறார்.

(க) ப்ருஹத்ஸௌத்ராமணீ-ருச.

(இ - ள்.) என்னுடைக்கோவலனே - "பசுவைமேய்" என்று நியமிக்கலாம்படியான வாஸ்ரிதபவ்யதையையெனக்கு ப்ரகாஸிப்பித்தவனாய், பொல்லா - தொளையாத, என்கருமாணிக்கமே - நீலரத்நம்போலேயெனக்கவிகலபோக்யனானவனே, உன்னுடை - உன்னுடைய, உந்தி - திருநாபியிலே, மலர் - விகஸிதமான, உலகமவை - லோகங்களுடைய, மூன்றும் - ப்ரஸித்தமான குணத்ரய விபாகயுக்தமான விஷயங்களிலே, பாந்து - பாந்துவைத்து, தம்மை யவற்றுக்கு போக்தாவாக வபிமாநம்பண்ணி யிருக்கிற. என்னுடை - என்னுடைய, ஆருயிரார் - ஆத்மாவானவர், உன்னுடை - உன்னுடைய, சோதிவெள்ளம் - விலக்ஷண தேஜோராஸிரூபமான தேசத்துக்கு, அகம்பால் - உள்ளே, உன்னை - நிரதிஶயப்ராப்ய பூதனான வுன்னை, கண்டுகொண்டிட்டு (க) "ஸதா பஶ்யந்தி - ஸதாபஶ்யந்தி" என்கிறகணக்கிலே, நிதியெடுத்துக் காண்பாரைப்போலே கண்டுகொண்டு, வந்தெய்துவர் - ப்ராபிப்பது, எங்ஙனேகொல் - எங்ஙனேயாயிருக்கிறது.

ஸாம்ஸாரிகவிஷயத்தில் கைகழிந்த வெனக்குக் கிட்ட விரகெங்ஙனே யென்றுகருத்து. உந்திமலரிலே யென்றுமாம். (௫)

ஆறு ;—(என்னுடைக்கோவலனே) ப்ரஹ்மேஶாநாதிகளுடைய ஸத்தாவிபூதிகள் மத்ப்ரஸாதாதீநமேயாகிலும், த்வதபேக்ஷிதமத்தர்ஶந ப்ராப்த்யுபாயத்தை நீயேயநுஷ்டிக்கவேண்டுமென்றொருநிர்ப்பந்தமுண்டாகில், த்வந்நாபீகமலோத்பூத ஸகலலோகாந்தர்வர்த்தி ஸர்வவிஷயங்களிலும் ப்ரவணமான வென்னுடையவாத்மா, ப்ரதிபந்தநிரஸநத்தைப்பண்ணி நிரதிஶய தேஜோமயமான திருநாட்டிலே யுன்னைக்கண்டு ப்ராபிக்கும்படி யெங்ஙனே ; இம்மஹாத்மாவுக்கு முடியாததுண்டோவென்று தம்மையுபாலம்பித்துக்கொண்டு சொல்லுகிறார். (௫)

ஈடு; அவ் ;—ஐந்தாம்பாட்டு. எல்லாம்செய்தாலும், (உ) *ஶாஸ்த்ரபலம் ப்ரயோக்த்ரி - ஶாஸ்த்ரபலம்ப்ரயோக்தரியன்றோ ; பலம் உம்மதானபின்புநீரும் சிறிதுயத்நம்பண்ணவேணுங்காணுமென்ன; நீஸ்ருஷ்டித்தலோகங்களில் விஷயங்கள்தோறு மகப்பட்டுக்கிடக்கிற நான், உன்னைப்பெறுகைக்கு ஒருஸாதநத்தை யநுஷ்டித்துவந்து பெறுகையென்றொன்றுண்டோ வென்கிறார்,

---

(க) விஷ்ணுஸூக்தம். (உ) பூர்வமீமாம்ஸா.

(என்னுடைக்கோவலனே) பாண்டவர்களுடையவ னுளுப் போலேயாயிற்று, இதுஶீலமிருந்தபடி. (என்பொல்லாக்கருமாணிக்கமே) இதுவடிவழகிருந்தபடி. “அழகிது” என்னில் நாட்டொப்பாமென்று பார்த்து, விஜாதீயமானஶப்தத்தாலே சொல்லுகிறாராதல். அன்றியே, தொளையாமணியென்றுதல். பொல்லல்—தொளைத்தல். அநுபபுக்தமான ரத்நம்போலே யென்னுதல்.

(உன்னுடையித்யாதி) உன்படியிதுவாயிருக்க, உன்னையொழிந்தவிஷயங்களினுடைய வடிவழகிலும் குணங்களிலும் கால்தாழ்ந்து போந்தவனுபிருந்தேன்நான். உன்னுந்தியிலே மலராநின்றுள்ள லோகங்கள் மூன்றிலுமுண்டான விஷயங்கள்தோறும், தனித்தனியேயற்றுக் கால்தாழ்ந்துபோந்தவனாயிருந்தேன் நான். நீஸர்வஶக்தியோகத்தாலே வ்யாபிக்குமிடமடைய நான் என்னுடைய சாபலத்தாலே கால்தாழ்ந்து திரிந்தேன். இதென்னிலேயிருந்தபடி.

அதுக்குமேலே நீயெட்டாநிலத்தை யிருப்பிடமாகவுடையையாயிருந்தாய் (உன்னுடைச்சோதியித்யாதி) உனக்கேயஸாதாரணமாய், நிரவதிகதேஜோரூபமாய், (க) “க்ஷயந்தமஸ்ய ரஜஸ꞉ பராகே - அத்யர்க்காநலதீப்தம் தத்ஸ்தாநம்” என்று சொல்லப்படுகிற ஸ்ரீவைகுண்டத்தை யிருப்பிடமாகவுடையையா யிருக்கிறவுன்னை, ப்ரக்ருதிப்ராக்ருதங்களிலுண்டான ஸம்பந்தமற்று நெடுந்தூரம் வழிவந்து அதுக்கநுரூபமா யிருப்பதொரு ஶரீரத்தைப்பரிக்ரஹித்து, பரமபதப்ராப்திபண்ணினலநுபவிக்கவேண்டி யிருந்தது.

ஆக, என்னிலேயிருந்தபடியிது, உன்னிலேயிருந்தபடியது, என்னெஞ்சில் ப்ராவண்யமிருந்தபடியிது; ஆனபின்பு, இந்த முதலியார் கடுகவந்து உன்னைக்கிட்டாரோ. (என்னுடையாருயிரார்) ஶப்தாதிகளிலே ப்ரவணமானவென்னாத்மா. “முதலியார்” என்று க்ஷேபிக்கிறார். ஆக, ஸ்வரூபம் த்வததீநமாயிருந்தது; அவ்வவருடைய வுத்கர்ஷங்களும் த்வததீநமாயிருந்தது. என்னிலேயிது, உன்னிலேயது, என்னெஞ்சில் ப்ராவண்யமிது; ஆனபின்பு, நானொரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணிவந்து கிட்டுகை யென்றொரு பொருளுண்டோவென்கிறார். (ரு)

ஆறும்பாட்டு.

வந்தெய்துமாறு அறியேன் மல்குநீலச்சுடர்தழைப்ப *
செஞ்சுடர்ச்சோதிகள்பூத்து ஒருமாணிக்கம்சேர்வதுபோல் *
அந்தரமேல்செம்பட்டோடு அடிஉந்திகைமார்வுகண்வாய் *
செஞ்சுடர்ச்சோதிவிடவுறை என்திருமார்பனையே. (சு)

ப.—அநந்தரம், ப்ராப்யதா ப்ரகாஶகமான நிரதிஶயாபிரூப்யத்தையுடைய வுன்னை நான்வந்து கிட்டுமுபாயமறிகிறிலே னென்கிறார்.

(இ-ள்.) மல்கு - செறிந்த, நீலச்சுடர் - நீலச்சுடரானது, - தழைப்ப - பரம்பாநிற்க, இடையிடையே, செம் - சிவந்த, சுடர் - ஒளியையுடைத்தான, சோதிகள் - தேஜோவிசேஷங்களை, பூத்து - பூத்திருப்பது, ஒரு - ஒரு, மாணிக்கம் - நீலரத்நமானது, சேர்வதுபோல் - பொருந்தியிருந்தாப்போலே, அந்தர மேல் - பரமவ்யோமத்திலே, செம் - சிவந்த, பட்டோடு - திருப்பீதாம்பரத் தோடே, அடி - திருவடிகளும், உந்தி - திருவுந்தியும், கை - திருக்கை, மார்பு - திருமார்பு, கண் - திருக்கண், வாய் - திருப்பவளமும், செம் - சிவந்த, சுடர் - ப்ரகாஶத்தையுடைத்தான, சோதி - தேஜஸ்ஸை, விட - பரப்பாநிற்கும்படி, உறை - எழுந்தருளியிருக்கிறவிருப்பை, என் - எனக்குப்ரகாசிப்பித்த, திரு மார்பனை - ஸ்ரீமானானவனை, நான், வந்து - வந்து, எய்தும் - கிட்டும், ஆறு - உபாயம், அறியேன் - அறிகிறிலேன்.

அறியும் நீவந்துகொண்டுபோ மித்தனையென்று கருத்து. (சு)

ஆறு;—(வந்தெய்துமாறறியேன்) அஸமமாய், நீலமாயிருந்த ஜ்யோதிஸ்ஸைத்தழைத்துச் சிவந்தவொளியைப்பூத்ததொரு மாணிக்கங்கிடந்தாப்போலே, திவ்யரூபகதநீலஜ்யோதிஸ்ஸாலும், பீதாம்பரசரணநிமக்நநாபீகமலகரதல கௌஸ்துப லக்ஷ்மீவிராஜித வக்ஷஸ்தல விலோசநவதநாருணகிரணங்களாலும் தீப்யமாநனுமாய், ஶ்ரிய:பதியாய்க் கோயிலிலே கண்வளர்ந்தருளுகிறவுன்னைக்காணு தொழியில் தரிக்கமாட்டுகிறிலேன்; காண்கைக்கோருபாயமும் காண்கிறிலேனென்கிறார். (சு)

ஈடு; அவ;— ஆறும்பாட்டு. ஆனாலும், ஏதேனுமொருபடி நீரும் சிறிது செய்துவந்து கிட்டவேண்டாவோவென்ன; உன்னை வந்துகிட்டுமுபாயமறியேனென்கிறார்.

(வந்தெய்துமாறறியேன்) வந்துகிட்டுமுபாயமு மறிகிறிலேன். நீதானே மேல்விழுந்து உன்வடிவழகைக்காட்டாநின்றால் அத்தை விலக்காமைக்கு வேண்டுவதுண்டு ; என்றாலுன்னையொரு ஸாதநாநுஷ்டாநம்பண்ணிவந்து கிட்டப்போகாது. ஆனாலிழந்தாலோ வென்ன; இழக்கலாயோவுன்படி யிருக்கிறதென்கிறார் (மல்குநீலச்சுடர்தழைப்ப) வடிவழகில்லையென்றுவிடவோ, பெறுவிக்கைக்குப் புருஷகாரமில்லையென்றுவிடவோ, எனக்காசையில்லையாய்விடவோ. (மல்குநீலச்சுடர்) குறைவற்றநீலப்புகரானது. (தழைப்ப) கர்மநிபந்தநமாகவந்ததல்லாமையாலே மேன்மேலனமிக்குவருமிறே; இவ்வளவென்ன வொண்ணாதபடி மேன்மேலனவளராநிற்கும்.

(செஞ்சுடர்ச்சோதிகள்பூத்து) சிவந்தசுடரை யுடைத்தாயிருந்துள்ள தேஜஸ்ஸானது, காலப்பூவலர்ந்தாப்போலேபூத்து. (ஒருமாணிக்கம்சேர்வதுபோல்) அநுபவயோக்யமாம்படி யொருமாணிக்கமானது சாய்ந்தாப்போலே. மல்குநீலச்சுடர் தழைப்பவென்கையாலே - நிறமிருந்தபடிசொல்லிற்று ; செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தென்கையாலே - திவ்யாவயவங்களிருந்தபடிசொல்லிற்று ; ஒருமாணிக்கம்சேர்வதுபோ லென்கையாலே-இரண்டுக்கு மாச்ரயமான திருமேனி தன்னைச்சொல்லுகிறது.

செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தென்கிறவிடத்தில் - தெரியாதபடி மறைத்துச் சொல்லிற்றொன்றுண்டிறே, அதுதன்னை வ்யக்தமாகச் சொல்லுகிறார் மேல் (அந்தரமேலித்யாதி) அந்தரம் - நடுவு; உடம்புக்குநடுவு அரை. திருவரையில் திருப்பீதாம்பரத்தோடே, திருவடிகள் ; திருநாபிகமலம், திருக்கைகள், பெரியபிராட்டியாரெழுந்தருளி யிருக்கையாலே கீழ்ச்சொன்னவற்றோடொக்கச் சொல்லலாம்படி சிவந்திருக்கிற திருமார்பு, திருக்கண்கள், திருப்பவளம், இவை.

(செஞ்சுடர்ச்சோதிவிட) சிவந்தசுடரையுடைத்தான தேஜஸ்ஸைப்ரஸரிக்க. (உறையென்திருமார்பனையே) இதுவுமோராபரணம்போலே. என் ஸ்வாமிநியானபெரியபிராட்டியாரைத் திருமார்விலே யுடையவனை. திருப்பாற்கடலிலே நீருறுத்தாதபடி திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக்கொண்டு, அதிலேநாநாவர்ணமாயிருப்பதொரு மேல்விரியைவிரித்தாப்போலே, அவன்சாய்ந்தருள,

மேலெழுந்தருளியிருக்குமாயிற்றுப்பிராட்டி. (மேல்விரி - திருப்படுக்கைமேலே யலங்காரமாகப்படுத்துமது.) (க) "வாஸுரேயெண ஸூஸ்வஹ: - பர்யாயேணப்ரஸுப்தஃ" என்னக்கடவதிறே. (சு)

ஏழாம்பாட்டு.

என்திருமார்பன்தன்னை என்மலைமகள்கூறன்தன்னை *
என்றும்என்நாமகளை அகம்பால்கொண்டநான்முகனை *
நின்றசசிபதியை நிலங்கீண்டெயில்மூன்றெரித்த *
வென்றுபுலம்துரந்த விசும்பாளியைக்காணேனே ! (எ)

ப.—அநந்தரம், ஸ்வேநரூபேணவும் கார்யபுருஷரூபேணவும் நின்று ஸர்வப்ரகாரரக்ஷணம்பண்ணுகிற வவனைக்காணப்பெறேனேயென்கிறார்.

(இ-ள்,) என்திருமார்பன் றன்னை - ஸேஷித்வஸூசகமான, ஸ்ரிய:பதித்வத்தை யெனக்கு ப்ரகாஸிப்பித்தவனாய், என்மலைமகள் கூறன் றன்னை - பார்வதியை ஸரீரார்த்தத்திலேயுடைய ருத்ரனைப்ரகாரமாகவுடையனாய் நிற்கிற நிலையையெனக்குக்காட்டினவனாய், என்றும்-என்றும், என்நாமகளையகம்பால்கொண்டநான்முகனை - நாமகளான ஸரஸ்வதியை அந்தரங்கமஹிஷியாய்க்கொண்ட சதுர்முகப்ரகாரத்வத்தை யெனக்குப்ரகாஸிப்பித்தவனாய், நின்ற - இவர்களோடு ஸமகணனையிலேநிற்பானாய், சசிபதியை - ஸசீபதியான விந்த்ரனைப்ரகாரமாகவுடையனாய், ஸ்வேநரூபேண, நிலங்கீண்டும் - பூம்யுத்தரணம்பண்ணியும், ருத்ராந்தராத்மாவாய்க்கொண்டு, மூன்றெயிலெரித்த - த்ரிபுரதஹநம்பண்ணியும் ப்ரஹ்மாவுக்குள்ளீடாகநின்று, ஸ்ருஷ்ட்யுபயுக்தமாக, புலன் - இந்த்ரியங்களை, வென்று - ஜயித்து, துரந்த-ஓட்டியும், இந்த்ரஸரீரியாய்க்கொண்டு, விசும்பாளியை - ஸ்வர்க்கநிர்வஹணம்பண்ணியும்ரக்ஷித்தவனை, காணேனே - காணமாட்டேனே

இப்படி ஸர்வப்ரகாரரக்ஷணவ்யாபாரத்தை யுடையவனைக்காண்கையே ப்ரயோஜநமான வெனக்குக்காணக்கிட்டாதொழிவதே யென்றுகருத்து. எயில் - மதிளாய், புரத்தைக்காட்டுகிறது. (எ)

ஆறு;—(என்திருமார்பன்றன்னை) உன்னுடையபோகப்ரவ்ருத்திகள் த்வததீநமானாப்போலே, ப்ரஹ்மருத்ராதிகளுடைய போக

(க) ரா-ஸு-ங-அ உ0.

ப்ரவ்ருத்திகளும் த்வததீநம்; ஆனபின்பு, என்னுடையவபேக்ஷிதமும் த்வத்ப்ரஸாதைகலப்யம்; இங்ஙனேயிருக்கச்செய்தே, நீயோ என்னபேக்ஷிதம் செய்தருளுகிறிலை; நானினியுன்னைக்காணப்பெறுதே போமத்தனையாகாதே யென்கிறார். (எ)

ஈடு; அவ;—ஏழாம்பாட்டு. உத்தேஶ்யலாபம் அவனாலேயாயிருந்தது, இத்தலையாலே ப்ரவர்த்திகைக்கு ப்ராப்தியில்லாதபடியான பாரதந்த்ர்யமுண்டாயிருந்தது, அத்தலையாலே பெறுமிடத்தில் ஒரு கண்ணழிவின்றிக்கே யிருந்தது; இப்படியிருக்கச்செய்தேயு மிழந்திருக்கக்காண்கையாலே, "நானிவ்விழவோடே கிடந்து முடிந்துபோமித்தனையாகாதே" என்கிறார்.

(என்றிருமார்பன்றன்னை) இவ்விடத்திலே "என்" என்கிற விதுக்கு - விஶேஷணம்ஶத்திலே யந்வயம்; * (க) என்திருமகள் சேர்மார்வனிற்போலே. என்ஸ்வாமிநியான பெரியபிராட்டியாரைத் திருமார்விலேயுடையவனை. (இதுவிஶேஷணத்திலும் விஶேஷ்யத்திலும் விஶிஷ்டத்திலும்; ஆஶ்ரயணதசை ப்ராப்திதசை போகதசை.

(என்மலைமகளித்யாதி) இவ்வோபதங்களில் "என்" என்கிற விதுக்கு - விஶேஷ்யாம்ஶத்திலே யூற்றம். அவனுடைய விபூதியோகத்துக்கு உறுப்பாகச் சொல்லுமித்தனைபோக்கி, (உ) "மறந்தும்புறந்தொழாமாந்தர்" என்றிருக்குமவர், இவர்களோடே தமக்கோரந்வய முண்டென்கிறு ரல்லரே. (என்மலைமகள்கூறன்றன்னை) ஹிமவானுடைய பெண்பிள்ளையைத் தன்னுடம்பிலொரு பார்ஶ்வத்திலே யுடையனாயிருக்கிறருத்ரனைத் தானிட்டவழக்காக வுடையனாயிருக்கிறவனை.

(என்றுமித்யாதி) ஸரஸ்வதியை, என்றுமொக்கத் தன்பக்கலிலே யுடையனாயிருக்கிற சதுர்முகனுக்கந்தராத்மாவாயுள்ளவனை. (நின்றசசீபதியை) இவர்களை யெண்ணினல் தன்னை யெண்ணலாம்படி ஐஶ்வர்யத்தால் குறைவற்றிருக்கிற விந்த்ரனுக் கந்தராத்மாவாயுள்ளவனை. (ங) "ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ: - ஸப்ரஹ்மாஸஶிவ:" என்றால் (ங) "ஸேந்த்ர: - ஸேந்த்ர:" என்றெக்கச் சொல்லலாம்படி முட்டுப்பொறுத்துநின்ற விந்த்ரனுக்கந்தர்யாமியாயுள்ளவனை.

(க) எ-உ-எ, (உ) ச-திருவ-கூஅ;
(ங) தை-நா-கக

இப்போது இவைசொல்லுகிறதுக்குக் கருத்தென்னென்றால்; கீழே-ஸ்வரூபமுமுச்ச்ராயமும் ததீநமென்றது; இங்கே - ப்ராப்த யௌவநரான புத்ராதிகளை ஸத்ருஸவிஷயங்களிலே விவாஹம்பண்ணுவிக்கும்பித்ராதிகளைப்போலே, இவர்களுடைய மஹிஷீலாபமும் தந்தாமாலல்ல, ஸர்வேஸ்வரனாலே யென்கை. (நிலங்கீண்டித்யாதி) இவர்களுடைய ப்ரவ்ருத்திகளுமெல்லாம் ததீநமென்கிறதுமேல்; (நிலங்கீண்டு) ப்ராளயார்ணவமக்நையாய் அண்டபித்தியிலேபுக் கொட்டினபூமியை மஹாவராஹமாய்ப் புக்கெடுத்துக்கொண் டேறின போதை வ்யாபாரம் ததீநமானாப்போலே, அவர்களுடைய வ்யாபாரங்களும் ததீநமென்கிறது. (எயில்மூன்றெரித்த) மதிள்மூன்றையெரித்த. (க) "விஷ்ணுராத்மா-விஷ்ணுராத்மா" என்னக்கடவதிறே; அதுவுமவனிட்டவழக்கு.

(வென்றுபுலன்துரந்த) ஸ்ருஷ்டிக்குறுப்பாக விந்த்ரியஜயத்தைப்பண்ணினவனை. புலன்களை வென்றோட்டின. (விசும்பாளியை) ஸ்வர்க்கத்தை வன்னியமறுத்தாளுகிறவனை. (இங்குப்ரவ்ருத்திவிஸிஷ்டரானவிவர்களோடே ஸமாநாதிகரித்தது-ஸகலப்ரவ்ருத்தியுமவனதீநையாகையாலே யென்னுடையவபேக்ஷிதஸித்திக்கு அவனையொழிய வென்றுஞ்செய்யலாவதில்லை யென்கைக்காக.) (காணேனே) ஆகச்சொல்லிற்றாயிற்றது-உத்தேஸ்யலாபமவனாலேயாயிருந்தது, அதுக்குறுப்பான ப்ரவ்ருத்தியில் வ்யாபரிக்க ப்ராப்தியில்லாதபடி அதுவு மவனிட்டவழக்காயிருந்தது. இனி இத்தலையாலே பேறுமன்று விளம்பஹேதுவின்றிக்கே யிருந்தது; அவனாலே பேறுமன்று விளம்ப ஹேதுவின்றிக்கேயிருந்தது. இப்படியிருக்கச்செய்தேயும் தம்மை யிழந்திருக்கக் கண்டார்; ஆகையாலே "இனி இவ்விழவோடே யிங்ஙனே முடிந்துபோமித்தனையாகாதே" என்று க்லேஸிக்கிறார். (ஏ)

எட்டாம்பாட்டு.

ஆளியைக்காண்பரியாய் அரிகாண்நரியாய் * அரக்கர்
ஊளையிட்டு அன்று இலங்கைகடந்து பிலம்புக்கொளிப்ப *
மீளியம்புள்ளைக்கடாய் விறல்மாலியைக்கொன்று * பின்னும்
ஆளுயர்குன்றங்கள்செய்து அடர்த்தானையும்காண்டுங்கொலோ ?

(க) பார-கர்ண

ப,—அநந்தரம், மாலிப்ரப்ருதிகளை நிரஸித்த வுபேந்த்ரமூர்த்தியானவனைக் காணக்கூடுமோவென்கிறார்.

(இ - ள்.) ஆளியை-யாளியை, காண் - கண்ட, பரியாய் - குதிரைபோலவும், அரி - ஸிம்ஹத்தை, காண் - கண்ட, நரியாய் - நரிபோலவும், அரக்கர்-ராக்ஷஸரானவர்கள், அன்று - யுத்தோத்யோகம்பிறந்தவன்று, ஊளையிட்டு - பயாதிஶயத்தாலே கதறிக்கொண்டு, ஞளவி கூட்டைவிட்டுப்பறந்துபோமாபோலே, இலங்கை - இலங்கையை, கடந்து - விட்டு, பிலம் - பிலத்வாரத்திலே, புக்கு-புக்கு, ஒளிப்ப - பாதாளத்திலே யொளிக்கும்படி, மீளி - பெருமிடுக்கனும், அம் - தர்ஶநீயனுமான, புள்ளை - பெரியதிருவடியை, கடாய் - நடத்தி, விறல் - ப்ரபலனான, மாலியை - மாலியை, கொன்று - கொன்று, பின்னும் - அவ்வளவிலேவிடாதே. ஆள் - அதிக்ரூரானபுருஷர்களை, கொன்று, உயர் - உயர்ந்த, குன்றங்கள் - மலைகளாக, செய்து - பண்ணி, அடர்த்தானையும் - அவர்களையழிக்குமுபேந்த்ரனையும், காண்டுங்கொல் - காணக்கூடுமோ.

மாலிஸுமாலி ப்ரப்ருதிகளை யழியச்செய்தாப்போலே, நம்முடைய வஹங்கார மமகார ப்ரதாநமான ராகத்வேஷாதிகளையுமழிக்கக்காண்போமோவென்று கருத்து. மீளி ~ மிடுக்கு. (அ)

ஆறு ;— (ஆளியை) ஆளியைக்கண்ட குதிரையைப்போலேயும், ஸிம்ஹத்தைக்கண்ட நரியைப்போலேயும், ஹதஶேஷரான ராக்ஷஸரெல்லாரும் பீதபீதரா யூளையிட்டு லங்கையினின்றும் ரஸாதலத்திலே புக்கொளிக்கும்படியாக ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுபூதரான பெரியதிருவடி திருத்தோளிலேயேறி லங்கையைச்சென்றடர்த்து, அதிபலபராக்ரமராயிருந்த மாலிஸுமாலிகளை ஸஸைந்யமாகக்கொன்றருளினாப்போலே, விரோதியானவென்னுடைய பாபங்களையும் போக்கி யெனக் கென்றோ தன்னைக்காட்டி யருளுவதென்கிறார்.(அ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு; மாலிதொடக்கமான ப்ரதிகூலவர்க்கத்தைக் கொன்றருளின ஸர்வேஶ்வரனைக் காணவல்லோமே யென்கிறார்.

முதலிரண்டுபாட்டாலே - ப்ராப்யன் அவனே என்னுமிடஞ்சொல்லி, மேலேந்துபாட்டாலே - ப்ராபகன் அவனே தன்னைப் பெறுகைக்கு என்னுமிடத்தைச்சொல்லி, இப்பாட்டாலும் மேலிற்பாட்டாலும்-அவனுடைய விரோதி நிரஸநஶீலதையைச் சொல்லி, ப்ரதிபந்தகத்தைப் போக்குவான் அவனே யென்னுமிடத்தைச்சொல்லுகிறது.

(ஆளியைக்காண்பரியாய்) ஆளியைக்கண்ட குதிரையைப் போலவும். (அரிகாணரியாய்) ஸிம்ஹத்தைக்கண்ட நரியைப்போல வும். ஸ்ரீராமாயணத்தே-அந்தராக்ஷஸர் பயப்பட்டபடியாகப் பலவு தாஹரணங்களையிட்டுச் சொல்லிப் போரக்கடவதிறே; இங்கே இர ண்டுவகையாலே யத்தை ஸூசிப்பிக்கிறார். பரி-குதிரை. (அரக்க ரூளையிட்டு) கீழே "நரி" என்கையாலே-அந்த ஸமாதியாலே சொல் லுகிறார். (ராக்ஷஸர்திரளநின்றொரு ப்ரவ்ருத்தி பண்ணமாட்டாதே கதறிக்கொண்டு.)

(அன்றித்யாதி) "மாலி, மால்யவான், ஸுமாலி" என்கிறவர் களை, பெரியதிருவடியை மேற்கொண் டழியச்செய்கிறவன்று. தூசி த்தலையில் நேர்நின்று வ்யாபரிக்க க்ஷமரல்லாமையாலே லங்கையை விட்டுப்போய், பாதாளத்திலே புக்கொளிக்க. புற்றுக்க ளெப்போது மொக்கப் பாம்பு பற்றுறாதாப்போலே, என்றுமொக்க ராக்ஷஸர்மாறு தே, "மாலி, ஸுமாலி, மால்யவான்" என்றாப்போலே சொல்லுகிற வர்கள் வர்த்தித்துப் போந்தார்களாய், பெரியதிருவடி முதுகிலே வந்து தோன்றி அவர்களை நிரஸித்தானாகச் சொல்லக்கடவதிறே; அத்தை யிங்கே ப்ரஸங்கிக்கிறார். (பிலம்புக்கோளிப்ப) கையிலாயு தம் பொகட்டாரையும், முதுகுகாட்டினாரையும் கொல்லக்கடவதல் லவிறே; ஆகையால், தப்பியோடிப்போ யொளிப்பாரும் உள்ளேபட் டுப்போனாருமாய்ப் போனார்களாயிற்று.

(மீளியம்புள்ளைக்கடாய்) மீளியமென்று-ஒருசொல்லாய், வலி யையுடைய பெரியதிருவடியை நடத்தியென்னுதல்; "மீளி-அம்- புள்" என்று பிரித்து (க) "கறையணிமூக்குடைப்புள்ளைக்கடாவி" என்கிறபடியே ப்ரதிகூலர்க்கு ம்ருத்யுபோலே யிருப்பானாய், (உ) "தூவாயபுள்ளூர்ந்து" என்கிறபடியே அநுகூலர்க்கு தர்ஶநீயமான வேஷத்தையுடைத்தான பெரியதிருவடியை நடத்தியென்னுதல். பெரியதிருவடி முதுகிலேவந்து தோற்றும்போதை யழகையேயிறே இவர்கள் பாவித்துக்கிடப்பது. மீளியென்று-வலிக்கும், ம்ருத்யுவுக் கும், பாலைநிலத்தில் தலைமகனுக்கும் பேராகச்சொல்லுவர்கள். (வி றல்மாலியைக்கொன்று) ஆக, ப்ரஸித்தரிலே யொருவனைச்சொல் லிற்று.

(க) ரு-௪௦-உ (உ) தி-மொ-சு-அரு

(பின்னுமித்யாதி) பின்பும், ஆண்பிள்ளைகளாயிருப்பா ரநேக ரை யழியச்செய்து, அவர்களாலே பிணமலையாம்படிபண்ணி. ஆளாலே உயர்ந்தமலைக ளுண்டாம்படிபண்ணி. (அடர்த்தானையும் காண்டுங்கொலோ) அவனுஸம்ஸாரவர்க்கத்தை பழியச்செய்தாப்போலே, நம் விரோதிகளைப்போக்கி நமக்குக் காட்சியிலே யந்வயமாய், நாம் கண்டோமாய்த் தலைக்கட்டவல்லோமோ. (அ)

ஒன்பதாம்பாட்டு.

காண்டுங்கொலோ? நெஞ்சமே! கடியவினையேமுயலும் *
ஆண்திறல்மீளிமொய்ம்பின் அரக்கன்குலத்தைத்தடிந்து *
மீண்டும்அவன்தம்பிக்கே விரிநீரிலங்கையருளி *
ஆண்டுதன்சோதிபுக்க அமரரரியேற்றினையே. (கூ)

ப —அநந்தரம், விபீஷணபக்ஷபாதத்தாலே ராவணகுலத்தை நிஶ்ஶேஷமாகமுடித்து அவனுக்கு லங்காதிபத்யத்தையுங்கொடுத்துத் தானு மபிஷிக்தனாய் ராஜ்யம்பண்ணி * தன்னுடைச்சோதியேற வெழுந்தருளின சக்ரவர்த்தித்திருமகனை, அந்த மேன்மையோடே யிருக்கச்செய்தே அவனைநாம் காணவல்லோமோவென்று நெஞ்சைக்குறித் தருளிச்செய்கிறார்

(இ-ள்.) கடிய - அதிக்ரூரமான, வினையே-பரஹிம்ஸாவ்ருத்தியையே, முயலும் - கல்பித்துப்பண்ணும் மஹோத்யோகத்தையுடையனாய், ஆண் - ப்ரதாபோஜ்ஜ்வலமான பும்ஸ்த்வத்தையுடையனாய்க்கொண்டு, திறல் - பராபிபாவுகமான பௌர்யத்தையும், மீளி - ஸிம்ஹம்போலேயிருக்கும், மொய்ம்பில் - பெருமிடுக்கையுமுடையனான, அரக்கன்-ராக்ஷஸஜந்மாவான ராவணனுடைய, குலத்தை - ப்ராதாவான கும்பகர்ணனும் இந்த்ரஜித்ப்ரமுகபுத்ரருமானகுலத்தை, தடிந்து - நிஶ்ஶேஷமாக வறுத்துப்பொகட்டு, அவ்வளவில்விடாதே, மீண்டும் - பின்னையும், அவன்தம்பியாயிருக்கச்செய்தே, ஆஶ்ரயேணோபகாரமடியாக, அவன்றம்பிக்கே - விபீஷணனுக்கு, விரி - விஸ்தீர்ணமான, நீர் - ஸமுத்ரஜலத்தையுடைத்தான, இலங்கை - லங்கையை அருளி - ராஜ்யமாகக்கொடுத்து, ஆண்டு - திருவயோத்யையிலெழுந்தருளி யபிஷிக்தராய்ப் பதினோராயிரம் ஸம்வத்ஸரம் ராஜ்யம்பண்ணி, தன் - தனக்கஸாதாரணமாய், சோதி - ஜ்யோதிரூப்மான பரமபதத்திலே, புக்க-சென்றிருப்பானாய், இந்தமேன்மையாலே, அமரர்-நித்யஸூரிகளுக்கு, அரி-ஸிம்ஹஶ்ரேஷ்டம்போலே, ஏற்றினை-

செருக்குத்தோன்ற வெழுந்தருளியிருக்கிறவனை, நெஞ்சமே - பிரிவுக்குக்கூட்டா யீடுபட்டுப்போந்தநெஞ்சமே, நாம், காண்டுங்கொலோ-காணக்கூடுமோ.

மீண்டென்று ஆண்டென்கிறவிடத்திலே யந்வயிக்கவுமாம்; ரஜஸ்தம: கார்யமான வந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களையும், தஜ்ஜநிதகாமக்ரோதாதிகளையும், ராவணகும்பகர்ணாதிகளை ஸஸந்தாநமாக வழித்தாப்போலேயழித்து, * தர்மாத்மாவான விபீஷணனுக்கு லங்காராஜ்யத்தைக்கொடுத்தாப்போலே, ஶுத்தஸத்த்வகார்யமான ஜ்ஞாநவைஶத்யத்தையுடைய நமக்கு கைங்கர்யஸாம்ராஜ்யத்தைத்தரும் ஸர்வேஶ்வரனைக்காணக்கூடுமோவென்று கருத்து. மீளியென்று-ம்ருத்யுவென்றுமாம். மொய்ம்பு-மிடுக்கு. திறல்-ஶௌர்யம். (கூ)

ஆறு;—(காண்டுங்கொலோ) பின்னையும் க்ரூரகர்மத்திலே நிரதனாய் 'வீர்யதேஜோவிஶிஷ்டனாய் ம்ருத்யு ஸத்ருஶனுமாயிருந்த ராவணனுடைய குலோத்ஸாதநத்தைப்பண்ணி, "அவனைக்கொன்றோமே" என்று திருவுள்ளத்திலேநொந்து, அவன் தம்பியான ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு லங்கைஶ்வர்யத்தைக்கொடுத்தருளி, மீண்டெழுந்தருளி, ஸ்வவிஶ்லேஷ ஜநித நிரவதிகவ்யஸநத்தாலே விநஷ்டப்ராயமான திருவயோத்யா நகரிலுள்ள ஸ்த்தாவரஜங்கமாத்மகமான ஸர்வஜந்துஜாதத்தையும் ரக்ஷித்தருளி, அவர்களையுங்கூடக்கொண்டு திருநாட்டிலே யெழுந்தருளி, திருமாமணிமண்டபத்திலே * அயர்வறுமமரர்கள் நடுவே ப்ரதிகூலநிரஸந ஜமானஜயத்தோடேகூடவெழுந்தருளியிருக்கிறவிருப்பை, நெஞ்சே நாமுமொருநாள் காணவல்லோமோவென்கிறார். (கூ)

ஈடு ; அவ ;—ஒன்பதாம்பாட்டு. ராவணாதிகளை நிரஸித்த தஶரதாத்மஜனை, நெஞ்சேகாணவல்லோமே யென்கிறார்.

(காண்டுங்கொலோநெஞ்சமே) இழவாலேகட்டிக்கொண்டு கதறுகைக்குக் கூட்டானநீ, இப்பேற்றாலே நிர்வ்ருதராயநுபவிக்கு மநுபவத்துக்கும் நீகூட்டாய் நாமவனைக்காணவல்லோமேயோ. (கடிய வினையேமுயலும்) தாயையும் தமப்பனையுமிரண்டிடத்திலே யாக்குவாரைப்போலேயிறே, பெருமாளையும் பிராட்டியையு மிரண்டிடத்திலேயாக்கிற்று. இதில் தாழ்ந்திருப்பதொரு செயலில்லை யாயிற்று இவன் செய்யுமவற்றில். ஸர்வேஶ்வரனுக்கு "க்ரமத்தாலே பலம்கொடுக்கிறோம்" என்றாறி யிருக்கவொண்ணாதபடி யாயிற்றுக் கொடிய செயல்கள் செய்யும்படி. "உ ... ஹவஹௌ ... தே - இஹைவபலமஶ்நுதே" என்னும்படியே.

அவதாரணத்தால்-ஸதாசாரஸம்பந்தமில்லாதவன். (ஆண்டிற லித்யாதி) ஆண்பிள்ளைத்தனத்தில்வந்தால், திறலையுடைய ஸிம்ஹம் போன்ற மிடுக்கையுடைய வரக்கன். மீளி - ஸிம்ஹம். அன்றியே, திறலையுடையனும், பராபிபவநஸாமர்த்யத்தையுடையனும், ம்ருத் யுகல்பமான மிடுக்கையுடையனுன ராவணனுடைய குலத்தைத்த டிந்து. தடிகை - கடிகை. (க) "கரிஷ்யெ மெசுயிஷீ ஹொஹராம விரோஷஸாகூஷஸம் - கரிஷ்யேமைதிலீ ஹேதோரபிரோசமராக்ஷஸம்" என்கிறபடியே குலமாகநிரஸித்து.

(அவன்தம்பிக்கேவிரிநீரிலங்கையருளி) (உ) "யதிவாராவண ஸ்வயம் - யதிவாராவணஸ்ஸ்வயம்" என்று - ஶரணமென்ற பாசுரமுகிதாயிருந்தது, "அவனோடு ஸம்பந்தமுடையானொருவன் வந்தானைகயன்றிக்கே, அவன்றானே வரப்பெறுவதுகாண்" என்று செவிசிப்பாய்ந்திருந்தாரிறே, அங்குநின்றும் வந்தானொருவனைக் கைக்கொண்டாராக வமையாதோ, இந்நிர்ப்பந்தமென்னென்னில்; அவனோடு ஸம்பந்தமுடையானொருவனைக் கைக்கொண்டால் அவன்றானும் நாலுபேருமே யாய்ப்போம்; அவன்றானே வரப்பெற்றதாகில் துறப்புக்கூடாக நோக்கிற்றாகலாமிறே; இனித்தான் ப்ராதிகூல்யத்தில் முதிரநின்றானுமவனே யாகையாலே, ரக்ஷகாபேக்ஷையுள்ளதும் அவனுக்கேயிறே. இப்படி அவனை விஷயீகரிக்கக்கோலிப்பெறாத விழவுதீர்ந்தது இவனைக்கைக்கொண்டபின்பாயிற்று. (ந) "அநுஜோராவணஸ்யாஹம் - அநுஜோராவணஸ்யாஹம்" என்று அவன்வர, இவரும் "அவன்றம்பியே" என்றாயிற்று அவனைக்கைக்கொண்டது. (விரிநீரிலங்கையருளி) கடல் சூழ்ந்த லங்கையைக்கொடுத்தருளி.

(மீண்டும் - ஆண்டு) ராவணவதாநந்தரத்திலே, ப்ரஹ்மாதிதேவர்கள் "தேவரையம்புக்கிலக்காக்கி, நாங்களெங்கள்கார்யம் தலைக்கட்டிக்கொண்டோம்; இனி, தன்னுடைச்சோதியேற வெழுந்தருளவமையும்" என்ன, அவ்வளவிலே ருத்ரன், "தேவர் அங்ஙன்செய்தருளவொண்ணாது, திருவபிஷேகத்துக்கு விக்நம்பிறக்

(க) ரா-ஆர-கூசு-கூக. (உ) ரா-யு-கஅ-ந௪.

(ந) ரா-யு-கஅ-ந௪.

கையாலே திருத்தாய்மாரு மிழவுபட்டிருந்தார்கள்; நாடுமுடைய னொந்திருந்தது, ஸ்ரீபரதாழ்வானு மார்த்தனுயிருந்தான், ஆன பின்பு, (க) " ஆஸ்ராவஸ்ஹரா தம்ஸ்ந்ரு - ஆஸ்வாஸ்யபரதம்ஸீகம் " என்கிறபடியே ஸ்ரீபரதாழ்வான் தொடக்கமானாரிழவுகளெல்லாந்தீ ரும்படி மீண்டெழுந்தருளி, திருமுடிசூடி, நாட்டைவாழ்விக்கவே ணும்" என்ன, அதுதிருவுள்ளத்துக்குப்பொருந்தும் செயலாகை யாலே பதினோராயிரமாண்டொருபடிப்படவிருந்து நாட்டைவாழ் வித்தருளி.

(தன்சோதிபுக்க) அம்புக்கிலக்காக்குவா ரிருந்தவிடத்தை விட்டுத் தனக்கஸாதாரணமாய் நிரவதிகதேஜோரூபமாயிருக்கிற பரமபதத்திலேபோய்ப்புக்க (அமரரரியேற்றினையே) அம்பிட்டெய் வாரின்றிக்கே ஆநுகூல்யமே ஸ்வபாவமாய் கைங்கர்யைகநிஷ்ட்ட ரான நித்யஸூரிகள் நடுவே அவனிருக்குமிருப்பைக் காணவல்லோ மே. கோவ்ருஷஸங்கத்தின்நடுவே யொருவ்ருஷபம் செருக்கித்திரியு மாபோலே, நித்யஸூரிகள்கொண்டாட, அவர்கள் நடுவே அத்தா லேசெருக்கிமேனாணித்திருக்கு மிருப்பைச்சொல்லுகிறது. நித்ய ஸூரிகள் திரளிலே அவ்வோலக்கத்தின்நடுவேயிருக்கு மிருப்பைக் காண்கையிறே ப்ராப்யமாகிறது. (கூ)

பத்தாம்பாட்டு.

ஏற்றரும்வைகுந்தத்தை அருளும்நமக்கு * ஆயர்குலத்து
ஈற்றிளம்பிள்ளையொன்றாய்ப்புக்கு மாயங்களேஇயற்றி *
கூற்றியல்கஞ்சனைக்கொன்று ஐவர்க்காய்க்கொடுஞ்சேனைதடிந்து *
ஆற்றல்மிக்கான் பெரியபரஞ்சோதிபுக்கஅரியே. (க0)

ப.—அநந்தரம், ஸ்வஜநமான ஸ்ரீவஸுதேவ பாண்டவ ப்ரப்ருதிகளு டைய விரோதிகளை நிரஸித்து ரக்ஷித்த க்ருஷ்ணன், நமக்குப் பரமபதத்தை யருளுமென்கிறார்.

(இ-ள்.) ஈன்று - பிறந்தபோதே, இளம் - அதிமௌக்த்யத்தையுடைய, பிள்ளை - பிள்ளையாய்க்கொண்டு, ஆயர்குலத்து - கோபகுலத்திலே, ஒன்றாய் - ஏகீபவித்து, புக்கு - புக்கு, மாயங்களே - பூதநாசகட யமளார்ஜுநநிரஸநரூப

(க) ரா-யு-கஉஉ-கூ-

மாண வத்யாஸ்சர்யங்களையே, இயற்றி - ப்ரவர்த்தித்து, கூற்று - உடலையு முயிரையும்பிரிக்கும்ம்ருத்யுவின், இயல் - ஸ்வபாவத்தை யுடையனுய்க்கொண்டு, கஞ்சனை - ஸ்ரீவஸுதேவர்தேவகியார்க்கு ப்ராணபூதனுன தன்னைப்பிரித்த கம்ஸனை, கொன்று - நசிப்பித்து, பின்பு, ஐவர்க்கு - பாண்டவர்களைவர்க்கு, ஆய் - ஆய், கொடும் - க்ரூரமான, சேனை - துர்யோதநஸேனையை, தடிந்து - அழியச்செய்து, இதெல்லாம்செய்தபின்பு, (௧) "ஸுமஹதப்யஹம் ... ருணம்ப்ரவ்ருத்தமிவமே" என்று ஒன்றும்செய்யாதானைப்போலே சீற்றம்மிஞ்சுகையாலே, மிக்க - மிக்க, ஆற்றலான் - பொறையையுடையனுய், பெரிய - அபரிச்சிந்நமாஹாத்ம்யத்தையுடைத்தாய், பரஞ்ஜ்யோதிஸ்ஸப்தவாச்யமான பரமபதத்திலே, புக்க - பூபாரநிர்ஹரணாநந்தரமெழுந்தருளிப்புக்க, அரி - சீரியசிங்கமான க்ருஷ்ணனுனவன், ஏற்றரும் - * பரமயோகிவாங்மநஸா பரிச்சேத்யஸ்வரூபஸ்வபாவமான, வைகுந்தத்தை - பரமபதத்தை, நமக்கு - நமக்கு, அருளும் - தன்க்ருபையாலே தந்தருளும்.

(௨) "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று ஸமஸ்தவிரோதிநிவர்த்தகனுனவன், "ஹரி: ... மாமுச:" என்கிறபடியே நம்மார்த்திதீரும்படி பலப்ரதனுமென்று கருத்து. அரியென்று- ஸம்ஜ்ஞையுமாம். பாபஹரஸ்வபாவனென்றுமாம். (௰)

ஆறு;—(ஏற்றரும்) ஸ்ரீநந்தகோபகுமாரனுய்வந்து பிறந்தருளி, * திண்கொளசுரரைத்தேய வளர்ந்தருளி, பந்துருபேணபோய்ப்புக்கு ப்ரதிகூலனுன கம்ஸனை வஞ்சித்துக்கொன்றருளி, பின்னைப்பாண்டவர்களுக்காக தத்ப்ரதிகூலனுன துர்யோதநனையும், க்ரூரமானவனுடைய ஸேனையையும் நிஸ்ஸேஷமாக நசிப்பித்துப்பாண்டவர்களுக்கு ராஜ்யத்தைக்கொடுத்து, பின்னையுமவர்களுக்கொன்றும் செய்யாதானுய்த் திருநாட்டிலேபோய்ப்புக்கருளின பரமபுருஷனே அந்ததுஷ்ப்ராபமான திருநாட்டைநமக்கும் தந்தருளுமென்று தம் திருவுள்ளத்தையாஸ்வஸிப்பிக்கிறுர். (௰)

௲௫ ; அவ ;— பத்தாம்பாட்டு. ப்ராப்யனவனே யென்னுமிடத்தைச்சொல்லி, தன்னைப்பெறுகைக்கு ஸாதநம்தானே யென்னுமிடத்தையுஞ்சொல்லி, விரோதிநிரஸநம்பண்ணுவானுமவனே யென்னுமிடத்தையுஞ்சொல்லி, இப்படிநமக்குப்பேற்றுக்குக் கண்ணழிவி

(௧) பார-உத்யோ-ருஅ-௨௨ (௨) கீதை-௧அ-௬௬-

ன்றிக்கே யிருந்தபின்பு அவன் தன்னை நமக்குத்தருமென்றறுதி யிடுகிறார்.

(ஏற்றரும்வைகுந்தத்தையருளும்நமக்கு) ஒருவராலும் ஸ்வ யத்நத்தாலே ப்ராபிக்கவொண்ணாதிருக்கிற ஸ்ரீவைகுண்டத்தை அவன்றானே தரப்பெறவிருக்கிற நமக்குத்தரும்.

எல்லாவழியாலும் அவன்ஸ்வபாவத்தையறிந்து "அத்தைத் தரும்" என்றிருந்தீரேயாகிலும், பெறவிருக்கிறநம்படியைப் பாரா ஞ்ஞோவென்னில் (ஆயர்குலத்தீற்றிளம்பிள்ளை) நம்படிபார்க்கவறியாத முக்தன். (௧) "ஈ-ஜ-ஹஸாய-ஜை-ஸெளஸை-முக்தஸாயுஜ்யதோ பூ:" என்னக்கடவதிறே, இவ்விடமிரண்டுவகையாலே ஸம்பந்தம் வசிக்கக்கடவது. ஈறென்றுகொண்டு - முடிவாய், ஈறானவிளம் பிள்ளை யென்றாய் - அதிமுக்தனென்றபடி. அன்றிக்கே, ஈன்றி ளம்பிள்ளையென்றாய் - கற்றிளம்பிள்ளையென்றபடி. இரண்டாலும் - அதிமுக்தனென்றபடி. (ஒன்றாய்ப்புக்கு) கம்ஸனும் பொய்யேமாது லனாய் "வில்விழவுக்கு" என்றழைத்துவிட, இவனும்பொய்யே மருமகனாய் அதுக்கெல்லாம் தானேகடவனாக வபிமாநித்துப்போய்ப் புக்கானாயிற்று. அன்றிக்கே, "வில்விழவு" என்றுகொண்டொரு வ்யாஜத்தையிட்டுப்போய்ப்புக்கென்னுதல்.

(மாயங்களேயியற்றி) ஆயுதசாலையிலே புக்கு ஆயுதங்களைமுறி ப்பது, ஈரங்கொல்லியைக்கொன்று பரிவட்டம் சாத்துவது, குவல யாபீடத்தின் கொம்பைமுறிப்பது, மல்லரைக்கொல்லுவதான வாஸ்சர்யங்களையே செய்து. இயற்றுதல் - ப்ரவர்த்தித்தல், இவ னிப்படிசெய்யப்புக்கவாறே அவற்றைக்கேட்டுப் பொறுக்கமாட்டா மை ம்ருத்யுபோலே கிளர்ந்தானாயிற்றுக்கம்ஸன் (கூற்றியல்கஞ்ச னைக்கொன்று) மஞ்சத்திலேநிற்கிறகம்ஸனைமுகம்கீழ்ப்பட விழவிட் டுக்கொன்றுபொகட்டானாயிற்று. இயல்வு - ஸ்வபாவம். (௨) "விம ஊஸகிரீடஉவநீதஉெவாதயாஉாஸ - விகளத்கிரீடமவநீதலேபா தயாமாஸ" என்றதுக்குப்பொருள் - "ராஜத்ரோஹிகளைக்கொல் லும்போது ராஜசிஹ்நங்களைவாங்கிக் கொல்லுவாரைப் போலே காண்" என்றம்மாள். தான்கொடுத்த தரமாகையாலே மற்றொ ருவர்க்குத் தேற்றத்துக்குடலாகவேணுமிறே. (அதாவது - ஈஸ்

(௧) ஸ்தோத்ர-௬௩. (௨) வி-பு-ரு-௨௦-அ௪.

வரன்கொடுத்த சிஹ்நங்களிருக்கில் அவன்றன்னுலும் கொல்லப் போகாதென்கை.

ஆக, தன்னைத்தானறிவதற்குமுன்பு, கம்ஸன்வரவிட்டவர்க ளையும் அவன்றன்னையும் தப்புகைக்குப் பணிபோந்தது. பருவம் நிரம்பித் தன்னைத்தானறிந்தபின்பு பாண்டவர்கள் கார்யம்செய்து திரிந்தவித்தனை, (ஐவர்க்காய்க்கோடுஞ்சேனைதடிந்து) பாண்டவர்க ளைச் சீறினவர்களுடைய "ஸாரதி, ஸாரதி" என்று வாய்பாறிக் கொண்டுவர, அவர்களையடையத்தேர்க்காலாலே யுழக்கிப்பொகட் டாருயிற்று.

(ஆற்றல்மிக்கான்) ப்ரதிபக்ஷத்தையும் வேரோடே வாங்கிப் பொகட்டு, தர்மபுத்ரன்தலையிலே முடியையும்வைத்து, இவள்குழ ந்தகுழலையும் முடிப்பித்த விடத்திலும், (௧) "நாதிஸ்வஸ்தமநா: - நாதிஸ்வஸ்தமநா:" என்றிறே யெழுந்தருளிற்றும். ஆற்ற லென்று - பொறையாய், பொறைமிக்கவனென்னுதல், அன்றிக்கே, வலியாய், வலிமிக்கவனென்னுதல்- இவற்றையுடைய வழியச்செய் கைகடியானவலியைச்சொன்னபடி. (பெரியபரஞ்சோதிபுக்கவரியே) கம்ஸனும் துர்யோதநனுமில்லாதவிடத்தில் பரமபதத்திலேபோய்ப் புக்க பின்பும், "நித்யஸூரிகள் நடுவேயிருந்தோமிறே" என்று பாராதே, "கம்ஸன்", "துர்யோதனன்", "கர்ணன்" என்று, ஆசிலேவைத்தகையுந்தானுமாய் விரோதிகள்மேலே சீறின சீற்றத் தின் வாஸநை அங்கேயுமநுவர்த்தித்தபடி. (௧௦)

பதிஞேராம்பாட்டு.

புக்கஅரியுருவாய் அவணனுடல்கீண்டுகந்த *
சக்கரச்செல்வன்தன்னைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன *
மிக்கஓராயிரத்துள் இவைபத்தும்வல்லாரவரை *
தொக்குப்பல்லாண்டிசைத்துக் கவரிசெய்வர்ஏழையரே. (௧௧)

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவர்களை, பக வத்கைங்கர்யபரரான *மதிமுகமடந்தையர் சாமரவ்யஜநாதிகளைக்கொண்டு ஸத் கரிப்பர்களென்று பலத்தையருளிச்செய்கிறார்.

(௧) பார-உத்-௫அ-௨௨.

(இ-ள்.) அ - அத்யத்புதமான, அரியுருவாய் - ஸிம்ஹவிக்ரஹத்தையுடையனாய், புக்கு - ஶத்ருவிஷயத்தில்புக்கு, அவுணன் - ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யனுடைய, உடல் - ஶரீரத்தை, கீண்டு - பிளந்து, உகந்த - அநாயாஸேந ப்ரஹ்லாதவிரோதிபோனபடியாலே ப்ரீதனாயிருப்பானாய், விரோதிநிரஸநத்திலவகாஶமில்லாதபடியாலே, சக்கரச்செல்வன்றன்னை - அழகுக்கு மைஶ்வர்யத்துக்கு முறுப்பான திருவாழியையுடையவனை, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், மிக்க - பகவத்குணசேஷ்டிதாதிகளை கார்த்ஸ்ந்யேந ப்ரதிபாதிக்கும் பெருமையையுடைத்தாய், ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளே, பகவத்விஷயத்தில் ப்ராப்யத்வவிரோதிநிவர்த்தகத்வங்களடியான வபிநிவேஶத்துக்கு ப்ரகாஶகமான, இவை - இவை, பத்தும் - பத்தும், வல்லாரவரை - அப்யஸிக்கவல்லரானவர்களை, ஏழையர் - பகவத்கைங்கர்யபரர்களாய் பாகவதநிஞ்சித்கார சபலைகளாயிருக்கிற * மதிமுகமடந்தையர், தொக்கு - திரண்டு, பல்லாண்டிசைத்து - மங்களாஶாஸநம்பண்ணி, கவரி - தத்விஷயத்தில்பண்ணும் சாமரவ்யஜநாதிகளை, செய்வர் - பண்ணியுபசரியாநிற்பர்கள்.

புக்கவரியுருவென்று - காதாசித்கமாக ப்ரவேஶித்த நரஸிம்ஹரூபத்தையுடையனென்றுமாம். இது - கலித்துறை. (கக)

ஆறு;—(புக்கவரியுருவாய்) வாசாமகோசரமாம்படி மஹாஶ்சர்யமான ஸிம்ஹரூபதரனாய்ப்புக்கு அஸுரனைப்பிளந்தருளி ப்ரஹ்ருஷ்டனாய், தத்தத்ப்ரதிகூல நிரஸநோசித ஸர்வதிவ்யாயுத ஸம்பத்பரிபூர்ணனாய், ஆஶ்ரிதார்த்த ஸ்வரூபரூபகுண விபூதிகனான பரமபுருஷனுக்கு ப்ரதிபாதகமாய், ப்ரதிபாத்யத்தினாலும் மஹத்தான திருவாய்மொழிகளில் இத்திருவாய்மொழிவல்லார்க்கு பகவத்பரிசர்யைக போகராயிருப்பாரெல்லாரும், நிறந்நிறமாக ஸர்வஶேஷவ்ருத்திகளும் பண்ணுவார்களென்கிறார். (கக)

ஈடு;—நிகமத்தில் - இத்திருவாய்மொழிகற்றாரை, * மதிமுகமடந்தையர் விரும்பித் திருப்பல்லாண்டுபாடி ஶ்லாகிப்பார்களென்கிறார். (நம்முடைய ப்ரக்ருதி நமக்கு பயஹேதுவென்று உபேக்ஷித்தால் நிரஸிக்குமென்று கருத்து.)

(புக்கவரியுருவாய்) அவ்வரியுருவாய் - புக்கு. அவ்வரியுருவென்னு மித்தனையாயிற்றுச்சொல்லலாவது. நரஸிம்ஹமானவேஷத்தைக்கொண்டு விரோதி ஸந்நிதியிலேகிட்டி. அன்றிக்கே, ஹிரண்

யனுடலைப்பிளந்துகொடு புறப்பட்டபோதைக்கடுமை. புறம்பிட்டொருவன்வந்து செய்தானைக்காட்டில், உள்ளேநின்று மொரு ஸிம்ஹம் பிளந்துகொடு புறப்பட்டாப்போலே யாயிற்று; அத்தைச்சொல்லுதல். (தாதாத்விகமாகப்ரவேசித்த நரஸிம்ஹரூபத்தையுடையவனென்கை.) (அவுணனித்யாதி) ஹிரண்யனுடலைப்பிளந்துபொகட்டு, "சிறுக்கன்விரோதி போகப்பெற்றோம்" என்று உகந்தானாயிற்று.

(சக்கரச்செல்வன்றன்னை) ஹிரண்யனுடைய வுடலுங்கூடத் திருவுகிருக்கு அரை வயிறாய்ப்போகையாலே, பின்னை யழகுக்குப் பத்திரங்கட்டினவித்தனையாயிற்று. அழகுக்கு மைஶ்வர்யத்துக்கு முறுப்பான திருவாழியையுடையவனை;

(குருகூரித்யாதி) ஆழ்வாரருளிச்செய்த, மிக்கவோராயிரத்து-பகவத்விஷயத்தையுள்ளவளவும் சொன்னவாயிரத்திலும் வைத்துக்கொண்டு, இப்பத்தையுங்கற்றவர்களை.

(தோக்கித்யாதி) கிண்ணகத்திலிழிவாரைப்போலே தனியிழியவொண்ணாமை திரண்டுகொண்டு, "பொலிகபொலிக" என்று மங்களாஶாஸநம்பண்ணி, ஸர்வேஶ்வரன்பக்கல் பண்ணக்கடவவஸாதாரண பரிசர்யைகளையுடைய விப்பத்தை யப்யஸித்தவர்கள் பக்கலிலே பண்ணாநிற்பர்கள் * மதிமுகமடந்தையர். நெடுநாள் ஸம்ஸாரத்திலேபட்ட விழவெல்லாந்தீரும்படி அவர்களாலேகொண்டாடப்பெறுவர்கள். (தொக்கு - திரண்டு. கவரி - சாமரம். ஏழையர் - பாகவதகிஞ்சித்கார சபலைகளான *மதிமுகமடந்தையர். (௧௧)

ஆறாம்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாம்பத்து

ஏழாந்திருவாய்மொழி

ஏழையர் - ப்ரவேஸங்கள்.

ஆறு;—(ஏழையராவி) இப்படி யெம்பெருமானுடைய வாஸ்ரித வாத்ஸல்யாதி குணாநுஸந்தாநத்தாலே ஸ்வாபேக்ஷிதத்தைச் செய்தருளுமென்றுஸ்வஸ்தரான வாழ்வார், அவன்செய்தருளாமை யாலே பின்னையு மவனோடே ஸம்ஸ்லேஷிக்கவாசைப்பட்டு, தத் ஸௌந்தர்யாநுஸந்தாந ப்ரகர்ஷஜநித தத்ஸாக்ஷாத்காரராய், தத் ஸம்ஸ்லேஷமலபமாநராய் ஸாக்ஷாத்க்ருதாதி ரமணீய ததீய திவ்யா வயவங்களாலே பீட்யமாநராய்க்கொண்டு அந்யாபதேஸத்தாலே கூப்பிடுகிறார். *

ப —ஏழாந்திருவாய்மொழியில், இப்படி ஆர்த்தியோடே கூப்பிட்டவர், (௧)" அடியுந்திகைமார்புகண்வாய்" என்று ப்ரஸ்துதமான விக்ரஹவைலக்ஷண் யத்தை யநுஸந்தித்து, (௨) "ஸவ-ஸ்வாமீ-வமீ-வஹ்ருதே-ஸர்வம்வாமுக முச்யதே" என்கிறபடியே விலக்ஷணமான வுத்தமாங்காவயவங்கள் தனித்தனி யேயும் ஸமுதாயமாகவும் ப்ரத்யக்ஷவத்விஸதமாம்படி ப்ரகாஸிக்க; அபரிச்சிந் ன்வபாவனான க்ருஷ்ணனுடைய திருக்கண்களையும், ஆஸ்ரிதவிஷயாபிநி விஷ்டனான வவனுடையநாஸாதண்டத்தையும், ஸ்யாமளவிக்ரஹத்துக்குப்பா பாகமான வதரஸோபையையும், காமனுக்கு முத்பாதகனும்படி கமநீயதையை யுடையவனுடைய ப்ரூயுகளத்தையும், கோவர்த்தநோத்தாரணம்பண்ணின வ்யா யாஸத்தையுடையவனுடைய மந்தஸ்மிதத்தையும், அநந்தஸாயியான வவனு டைய கர்ணிகாலங்க்ருதமான கர்ணபாஸத்தையும், மஹாபுஜனான வவனுடைய லலாடஸோபையையும், ஏவம்விதாவயவ விஸிஷ்டமான க்ருஷ்ணனுடைய ஸாமாந்யமுகஸோபையையும், ஆஸ்சர்யபூதனான வவனுடைய மயிர்முடியழ கையும், ஸர்வாதிகத்வ ஸூசகமான வபிஷேகஸோபையையு மநுஸந்தித்து; அது ஸம்ஸ்லேஷபர்யந்தமல்லாமையாலே அத்யந்தமார்த்தரான விவருடைய வார்த்திகண்டு நிர்விண்ணரான ஸுஹ்ருத்துக்களுக்கும் பரிவர்க்கும் தமக்கோ டுகிறதசையை யாவிஷ்கரித்த ப்ரகாரத்தை, நாயகனான க்ருஷ்ணனுடைய விஸ்லேஷதசையிலே அவனுடைய திவ்யாவயவங்கள் உருவெளிப்பாடாய்த்

(௧) எ-௧-௧. (௨)

தோன்றக்கிட்டி யநுபவிக்கப்பெறாமையாலே க்லிஷ்டையான நாயகியானவள் தனக்கு ஹிதஞ்சொல்லி நியமிக்கிற தோழிமார்க்கும் தாய்மார்க்கும் தன்னுடைய வீடுபாட்டையறிவித்த பாசுரத்தாலே யருளிச்செய்கிறார். *

ஈடு ; அவ ; — கீழ்த்திருவாய்மொழியிலே - "மல்குநீலச்சுடர் தழைப்பச் - செஞ்சுடர்ச்சோதிகள் பூத்தொருமாணிக்கஞ்சேர்வது போல் - அந்தரமேற்செம்பட்டோடடியுந்தி கைமார்புகண்வாய் செஞ்சுடர்ச்சோதி விடவுறை யென்திருமார்பனையே" (க) என்று அவன்வடிவழகை யநுஸந்தித்தார்; அவ்வடிவழகுதானே நெஞ்சிலே யூற்றிருந்து அத்தையேபாவித்து, அந்த பாவநாப்ரகர்ஷத்தாலே ப்ரத்யக்ஷஸமாநாகாரராய், பின்னை "ப்ரத்யக்ஷம்" என்றே புத்திபண்ணியணைக்கக் கணிசித்துக் கையைநீட்டி, அப்போதே பெறாமையாலே தமக்குப்பிறந்த வாற்றாமையை, எம்பெருமானோடே கலந்து பிரிந்து உருவு வெளிப்பாட்டாலே நோவுபடுகிறாளொருபிராட்டி பாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

ஸர்வேஶ்வரனோடே கலந்து பிரிந்து தளர்ந்து உருவுவெளிப்பாட்டாலே நோவுபடுகிறாளொருபிராட்டி, சேதநர் சேதநரோடுகலக்கும்போது த்ருஷ்டிபந்தம் முன்னாகப் பின்னையிறே அல்லாத பரிமாற்றங்களை யாசைப்படுவது; ஆகையாலே, திருக்கண்களி லழகை யநுஸந்தித்து, அவ்வழியாலே திருமுகத்தி லழகையநுஸந்தித்து அநந்தர மவ்வருகே சிலபரிமாற்றங்களை யாசைப்பட்டு, அப்போதே அதுகைவாராமையாலே நோவுபட; இவள்தசையை யநுஸந்தித்த தோழிமாரும் தாய்மாரும் "உனக்கோடுகிறதென்" என்றுகேட்க, சிலர்க்குச் சொல்லிச் சிலர்க்கு மறைக்கும்படியாயன்றே யாற்றாமை ப்ரஸித்தமானபடி; ஆகையாலே, அவர்களைக்குறித்து "அவனுடைய திருமுகத்திலழகானது தனித்தனியும் திரளவும் வந்தென்னை நலியாநின்றது" என்ன, "நீயிங்ஙனே சொல்லுமது உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப்போராது, அவனுடைய தலைமைக்கும்போராது, நீதானெங்களை நோக்கக்கடவதாயிருப்பதொரு ஸ்வபாவமுண்டே, அதுக்கும்போராது, ஆனபின்பு, இத்தைத்தவிர்" என்று ஹிதஞ்சொல்லுவாரும் பொடிவாருமாக; "நீங்கள் பொடிகிறவிதுகேட்டு மீளுமளவல்ல அதென்னை நலிகிறபடி; இனித்தானே தேனுமாக, உறைத்ததிலே யூன்றிநிற்குமத்தனையிறே; ஆனபின்பு,நீங்களென்னை விட்டுப்

(க) எ-சு-சு.

பிடிக்கவமையும்" என்று அவர்களுக்குத் தன்பக்கல் நசையறவேண்டும்படி தனக்குப்பிறந்த வாற்றாமையை யறிவிக்கிறாளாயிருக்கிறது.

ஸர்வேச்வரனுடைய குணங்களை யாசைப்படுகையும், அதுதான் மாநஸாநுபவமாயிருக்கையும், அநுபூதகுணங்களொழிய குணாந்தரங்களிலே யபேக்ஷைபண்ணுகையும், அதுதன்னில் க்ரமப்ராப்திபற்றாமையும், அதுதான் கீழ்நின்றநிலையை மறக்கும்படி பண்ணுகையுமாகிற விவையிறே இவர்க்குத் திருவாய்மொழி யெங்கு மோடுகிற ஸ்வபாவந்தான். அவற்றிற்காட்டில், உருவு வெளிப்பாடாகச்சொல்லுகிற விதிலே பின்ன வம்சமென்னென்னில்; கீழ்ப்பிறந்த வைஶத்யமுங் கிடக்கச்செய்தே மேலே அபேக்ஷிக்குமதாயிற்று-உருவு வெளிப்பாடாகிறது. அல்லாதவிடத்தில், கீழ்ப்பிறந்த வைஶத்யத்தை யழித்திறே மேலிலபேக்ஷிப்பது. * எங்ஙனேயோவினும்-ப்ராயேண விதுவேயன்றோ வோடுகிறது. அதிலிதுக்குவாசியென்னென்னில்; அதில்-ப்ரீத்யப்ரீதி ஸமமாயிருக்கும், இங்கு-அப்ரீதி மிக்கிருக்கும். திருக்கண்களிலழகை "இணைக்கூற்றம்" என்னும்படியாயிற்று இங்கு பாதகத்வத்திலுறைப்பிருக்கும்படி.

முதற்பாட்டு.

ஏழையராவியுண்ணும் இணைக்கூற்றங்கொலோ? அறியேன் *
ஆழியங்கண்ணபிரான் திருக்கண்கள்கொலோ? அறியேன் *
சூழவும்தாமரைநாண்மலர்போல் வந்துதோன்றும்கண்டீர் *
தோழியர்காள்! அன்னைமீர்! என்செய்கேன்? துயராட்டியேனே.

ப.—முதற்பாட்டில், க்ருஷ்ணனுடைய திருக்கண்கள் தன்னை நலிகிறபடி சொல்லுகிறாள்.

(இ-ள்) ஏழையர் - சபலைகளானபெண் பிறந்தாருடைய, ஆவி - ப்ராணனை, உண்ணும் - க்ரஸிக்கக்கடவதாய், இணை - ஒன்றுக்கொன்று சேர்த்தியானவிரட்டை, கூற்றங்கொலோ - ம்ருத்யுவோ, அறியேன் - பாதகத்வத்தாலே கண்ணென்றறுதியிடமாட்டுகிறிலேன், அங்ஙனன்றியே, ஆழி - ரத்நாகரம்போலே, அம் - அபரிச்சிந்நவிலக்ஷணஸ்வபாவனாய், என்னோடு ப்ரதமத்திலே, கண்ணன் - விதேயனாய், பிரான் - ஸம்ஶ்லேஷித்து உபகரித்த க்ருஷ்ணனுடைய, திரு - விலக்ஷணமான, கண்கள்கொலோ - திருக்கண்கள்தானோ,

அறியேன் - தர்ஸநீயதையாலே, ம்ருத்யுவென்றறுதியிட மாட்டுகிறிலேன், சூழவும் - அகலப்போகவொண்ணாதபடி சுற்றும், தாமரை-தாமரையினுடைய. நாண்மலர்போல் - செவ்விப்பூப்போலே, வந்து - வந்து, தோன்றும் - தோன்றாநின்றது, கண்டீர் - காணுங்கோள், தோழியர்காள் அன்னைமீர் - ஆந்தரங்கலேஸமறியாதே அந்தரங்கரான தோழிமாரோடு, ப்ரக்ருதியறிந்து பெற்றுவளர்த்த தாய்மாரோடு வாசியற நியமிக்கிறவர்களே, துயராட்டியேன் - ஸ்வஸம்வேத்யமான க்லேஸத்தையுடையநான், என்செய்கேன் - க்லேஸநிவ்ருத்திக்கென்னபரிஹாரம் பண்ணுவேன்.

தோன்றுகிற திருக்கண்களை மறைக்கமாட்டேன்; கிட்டியநுபவிக்கமாட்டேனென்றுகருத்து. (க)

ஆறு;—பரமபுருஷ ஸம்ஸ்லேஷாபேக்ஷவநிதாஜந ப்ராணஹாரி ம்ருத்யு யுகளமோ, அன்றியே, ஆயதாதிரமணீய விலோசந விஜித ஸகலலோகனான வெம்பெருமானுடைய திருக்கண்கள்கொலோ, அறிகிறிலேன்; அப்போதலர்ந்த தாமரைப்பூப்போலே சூழவந்து தோன்றி என்னை பாதியாநின்றன; தோழியர்காள், அன்னைமீர், என்றும் துஃக்கமே படப்பிறந்தேனாகாதேயென்று, (க) "ஹா ராம ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே ஹா ராமமாதஸ் ஸஹ மே ஜநந்யா - ஹா ராம ஹா லக்ஷ்மண ஹா ஸுமித்ரே ஹா ராமமாதஸ் ஸஹ மேஜநந்யா" என்று அஸோகவநிகையில் பிராட்டி கூப்பிட்டாப்போலே கூப்பிடுகிறாள். (க)

ஈடு; அவ;—முதற்பாட்டு. இம்முகத்துக்கு நேத்ரபூதர் நாமன்றோவென்று புறப்பட, திருக்கண்களிலழகுவந்து தம்மை நலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

(ஏழையராவிபித்யாதி) ஓரோவிஷயங்களிலே சாபலத்தைப் பண்ணி, அவை பெறுவிடில் தரிக்கமாட்டாத வபலைகளுடைய ப்ராணன்களை முடிக்கிற ம்ருத்யுக்களிரண்டோ. பிரிந்தாற்றுமையை விளைத்தவனுக்கு மன்றிக்கே, "இதாகாது" என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்கும் பருவங்கழிந்த தாய்மார்க்கு மன்றிக்கே, அபலைகளையே முடிப்பனவிரண்டு கூற்றமோ. தன்கண்ணழகு தானறிகிறிலனே. தன்னையும் நலிந்ததாகில் வாரானோ, கண்ணாடிப்புறத்திலுங் கண்டறியானோ. (ஆவியுண்ணும்) ராமஸரம்போலே, ஒப்பனைகுறி

(க) ரா-ஸு-உ அ-அ.

யழியாதேயிருக்க வுயிரை முடியாநின்றது. (இணைக்கூற்றங்கோலோ) ம்ருத்யுக்களிருவர் தங்களிலே க்ருதஸங்கேதராய் வந்தாப்போலேகாணும் திருக்கண்களிலழகு பாதகமாகிறபடி. (அறியேன்) அறியேனென்பானென்னென்னில்; ம்ருத்யுக்களிருவர் க்ருதஸங்கேதராய்வந்தாலும் அபலைகளையே நலியவேண்டும் நிர்ப்பந்தமில்லையே; (க) * "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" - பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணமிறே. அத்தாலே சொல்லுகிறது

(ஆழியங்கண்ணபிரான் திருக்கண்கள் கோலோவறியேன்) அன்றிக்கே, பெண்பிறந்தாரையே நலியக்கடவானவைதாமேயோ. அல்பமண்ணியாரேபாதகராமன்று தப்பவிரகில்லை. இப்படிமுதலுறவு பண்ணிப்பொருந்தவிட்ட வித்திருக்கண்கள்தாமேயோ. உபகாரசீலனை க்ருஷ்ணனுடைய கடல்போன்ற கண்களென்னுதல்; கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடைய வுபகாரசீலனை க்ருஷ்ணனுடைய திருக்கண்களென்னுதல். (அறியேன்) இதுக்கு முன்புபிரிந்தறியாமையாலே திருக்கண்கள் பாதகமாமென்று வ்யுத்பத்தியில்லை. (உ) "உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்" என்றிறே கேட்டிருப்பது - இக்கடாக்ஷமே தாரகமாகவிறே லோகமடையஜீவிப்பது. நாம்கேட்டிருந்தபடியன்றிக்கே யிராநின்றதிப்போது காண்கிறபடி.

ஆனால்தப்பினாலோ வென்னில் (சூழவும்நீயாதி) மூலபலத்தினன்று பார்த்த பார்த்தவிடமெல்லாம் பெருமாளே யானாப்போலேயாயிற்று. ராமஶரத்துக்கு ராக்ஷஸர்க்குத் தப்பலாமன்றாயிற்று இக்கண்ணழகின்கீழ் அபலைகளா யிருப்பார்க்குத் தப்பலாவது. (௩) "புண்டரீகநெடுந் தடங்கள்போலப்பொலிந் தெமக்கெல்லாவிடத்தவும்" என்னக்கடவதிறே. ஸர்ப்பபயம்போலே யிருக்கை. இருப்க்கநினைத்த விடமெங்கும் தானேயாயிராநின்றது. இப்போது "தாமரைநாண்மலர்போல்" என்பானென்னென்னில்; (ஸம்ஶ்லேஷதசையிற்செவ்வியைச்சொல்லுகிறாள்.) (௪) "ஸஹஸ்தாஜ்ஜ்வல தாநிகரீர்நேவார்நிவவர்த்தித: - மஹாதாஜ்வலதாநித்ய மகநிரேவாக்

(க) ரா-அயோ-௩-௨௯. (௨) தி-மொ-எ-க-க.

(௩) தி-வி-௩-௬. (௪) ரா-ஸு-௩௫-௪௪.

நிபர்வதஃ'' (க) [நெவஷ்ராநீசஸாநு-நைவதம்ஸாந்நமஸாந்] இத்யாதி; பெருமாளேர்ந்ததும் கடித்ததுந் துடைக்கவறியார் என்ன; "அதுக்கடியென்" என்ன [த்வஹெதநாதோராதுநா - த்வத்க்தே நாந்தராத்மநா] பெருமாளிங்கே குடிபோர அங்கிவை யார்தானறிவார் என்றாளிறே. பிரிவிலிவ்வளவல்லவிறே அத்தலைக்காற்றாமை. அதறிகிறிலளே யிவள். தன்னோடேவந்துகலந்து விளைநீரடைத்துக்கொண்டு பிரிகிறபோதைச் செவ்வியிறே யிவளறிவது, அதுவேயிறே யிவள் நெஞ்சில் பட்டுக்கிடப்பது; பின்பவன்பட்டதறியாளே, ஆகையாலே சொல்லுகிறாள்.

(வந்துதோன்றும்) ப்ரத்யக்ஷத்திலத்தலையாலே வரவாறுப்போலே, உருவுவெளிப்பாட்டிலுமத்தலையாலே வந்துதோன்றவாயிற்றுத் தானறிகிறது. (கண்டீர்) உங்களுக்கிதுதோற்றுகிறதில்லையோ. (தோழியர்காளன்னைமீர்) சிலர்க்குச்சொல்லிச்சிலர்க்கு மறைக்கும்படியன்றிறே யிவள்தசை. "தோழிமார்க்குச் சொன்ன வித்தைத்தாய்மார்க்குச் சொல்லுவோமல்லோம்" என்றுமறைக்குமளவல்ல வாயிற்று இவளுக்குப் பிறந்ததஶாவிஶேஷம். (என்செய்கேன்) இத்தைத்தப்பப்பார்ப்பதோ, அநுபவிக்கப்பார்ப்பதோ, எத்தைச்செய்கேன். (துயராட்டியேனே) (உ) "ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந் நபிபேதிகுதஶ்சந" என்றிருக்க வேண்டியிருக்க, அங்ஙனன்றிக்கே, (ங) "அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிறபடியே பழையக்லேஶமே ஸித்திக்கும்படி யாயிற்றே. (க)

இரண்டாம்பாட்டு.

ஆட்டியுந்தூற்றியுநின்று அன்னைமீர்! என்னைநீர்நலிந்துஎன்? *
மாட்டேயர்கற்பகத்தின் வல்லியோ? கொழுந்தோ? அறியேன் *
ஈட்டியவெண்ணெயுண்டான் திருமூக்கு, எனதாவியுள்ளே *
மாட்டியவல்விளக்கின் சுடராய்நிற்கும்வாலியதே. (உ)

ப.—அநந்தரம், ஆஶ்ரிதருடைய த்ரவ்யத்தி லபிநிவேஶத்தாலே நவநீதசோரனை க்ருஷ்ணனுடைய நாஸாதண்டமானது என்னெஞ்சுக்குள்ளே ப்ரகாஶியாநின்றதென்கிறாள்.

(க) ரா-அ-ந-௯. (உ) தைத்-ஆ-உ-௪.

(இ-ள்.) அன்னைமீர் - ப்ரியபரைகளான தாய்மாரா யிருக்கிற, நீர் - நீங்கள், ஆட்டியும் - ஹிதஞ்சொல்லி இருந்தவிடத்திலிராதபடி பண்ணியும், தூற்றியும் - புறம்பே பழிதூற்றியும். நின்று - ஒருபடிப்பட நின்று, என்னை - என்னை, நலிந்து - நலிகிறத்தால், என் - என்னப்ரயோஜநமுண்டு, உங்கள் நலிவும் பலியாமைக்கடி, மாட்டு - பரிஸரத்திலே, உயர் - ஓங்கியிருப்பதொரு, கற்பகத்தின் - கற்பகத்தினுடைய, வல்லியோ - கொடியோ, கொழுந்தோ - கொழுந்தோ, அறியேன் - அறிகிறிலேன், ஈட்டிய-கடைந்து திரட்டிவைத்த, வெண்ணெய் - வெண்ணெயை, உண்டான் - களவிலேயமுதுசெய்தவனுடைய, திருமூக்கு - திருமூக்கானது, எனது - என், ஆவியுள்ளே - நெஞ்சுக்குள்ளே, மாட்டிய - தூண்டப்பட்டு, வாலியது - பெருத்து, வல்- ஸ்த்திரமான, விளக்கின்சுடராய்நிற்கும் - தீபஜ்வாலைபோலே ப்ரகாசியா நின்றது.

ருஜுவாகையாலே - கொடியென்னவுமாய்; அது அசைந்தோங்கின தலையை யுடைத்தாகையாலே - கொழுந்தென்னவுமாயிருக்கிறது. வாலிமை - பெருமை; மாட்டிய - தூண்டின, வன்மை - ஸ்த்தைர்யம். (உ)

ஆறு;—(ஆட்டியும்) ஸௌரப்யோபாதாநமாய்க்கொண்டு மூலைத்தெழுந்த கற்பகத்தினுடைய கோமளமானவல்லியோ, அன்றிக்கே, அதினுடைய கொழுந்தோ, அதுவுமன்று, ஈட்டியவெண்ணெயுண்டான் திருமூக்கு: அந்த வெண்ணெயுடைய திவ்யவாஸநாவாஸிதமான வத்திருமூக்கழகு, என்னுடைய வாத்மாவினுள்ளே யாரோபிதமாய், மஹத்தாயிருப்பதொரு விளக்கினுடைய ஜ்வாலை போலே நின்று தஹியா நின்றது; அவ்வளவன்று, அதிலும் பாதகமாயிரா நின்றது; என்னை யலைத்துக்கொண்டு எங்கும் கோஷித்து நின்று என்னை பாதித்தால், அன்னைமீருங்களுக்கென்ன ப்ரயோஜநமுண்டென்கிறாள். (உ)

ஈடு: அவ;— இரண்டாம்பாட்டு. "இரண்டுக்கும் நடுவே நாமிருக்க விவை முற்படுகையாவதென், அத்தனையோ நம்மூக்குவலி" என்று திருமூக்கிலழகு நலிகிறபடியைச் சொல்லுகிறது.

(ஆட்டியும் தூற்றியும்) ஆட்டுகையாவது-தாந்தாம் பழிசொல்லியலைக்கை. தூற்றுகையாவது - பிறருமறியப் பழிசொல்லுகை. "அச்சமுறுத்தி மீட்கலாமோ" என்றொருகாலலைக்கை ப்ராப்தமிறே; அங்ஙனன்றிக்கே (நின்று) முன்பு செய்ததுக் கொருப்ரயோஜநம் காணுதிருக்கச் செய்தேயும் விடாதே நின்று. (அன்னைமீரென்னை

நீர்நலிந்தேன்) ஹிதத்திலே நடக்கும் பித்ராதிகளைப்போலே, என் ப்ரியத்திலே நடக்கும் நீங்களென்னை நலிகிறதென். என்னுகப்பே பேறாக நினைத்திருக்கக்கடவ நீங்கள் நலிகிறதென். (நலிந்தேன்) அந்த வுருவு வெளிப்பாட்டைப் பரிஹரிக்கலாமென்றோ, என்னை மீட்கலாமென்றோ. ஒரு ப்ரயோஜநமில்லாததிலேயும் ப்ரவர்த்திக்கக்கடவதோ. அவனுடைய ஸூக்ஷ்மவலி யிருக்கிறபடியையுமறிந்து நீங்களென்செய்யப்புகுகிறீர்கோள்.

நாங்கள் சொல்லுகிற ஹிதவசநத்தாலொரு ப்ரயோஜநமில்லையாகில், என்செய்தால் ப்ரயோஜநமுண்டென்ன (மாட்டேயித்யாதி) வல்லிகோளாகில் இஸ்ஸம்ஶயத்தை யறுத்துத் தாருங்கோள். மாடு-அருகு. கண்ணருகென்றபடி. ஒரு கடலருகே அக்கடலூற்றே தாரகமாக வளருகிற தொரு கொடிபோலே யாயிற்று, திருக்கண்களருகே திருமூக்கிருக்கிறபடி. (உயர்) (க)“உந்நஸம்-உந்நஸம்” என்கிறபடியே. (கற்பகத்தின் வல்லியோ கொழுந்தோ) ஒழுகுநீட்சியாலே கொடியென்னவுமாய், ஸ்ரத்தை மாறுமையாலே-கொழுந்தென்னவுமாயிராநின்றது. அறிபேனென்கிறது - “இன்னது” என்று நிஶ்சயிக்க வரிதாகையாலே, ஸர்வதா ஸாம்யத்தாலே.

(ஈட்டியவித்யாதி, எங்களுக்கறியப்போமோ, இதிலே யுட்புக நின்றநுபவிக்கிற நீ பின்னைச் சொல்லாயென்ன (ஈட்டியவித்யாதி) அநுகூலஸ்பர்ஶமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரிக்கமாட்டாதே வெண்ணெய் களவுகாணப் புக்குக்கொண்டியிலேபிடியுண்டு, பின்பத்தை யில்லைசெய்கைக்காக முகத்திலே தடவிக்கொள்ளுமே; அவ்வெண்ணெயிலே முடைநாற்றமும் உருவு வெளிப்பாட்டிலே தோற்றுகிறதாயிற்றிவளுக்கு. அப்போதைக முடைநாற்ற முபலப்தமாம்படியாயிற்று உருவுவெளிப்பாட்டில் மெய்.

நீ சக்ஷுர்விஷயமாகச் சொல்லுகிற விது எங்களுக்குத் தெரிகிறதில்லையேயென்ன (எனதாவியுள்ளே) என் ஹ்ருதயத்துக்குள்ளே (மாட்டிய) சுடர்வெட்டியவென்னுதல், ஏற்றினவென்னுதல். (வல்விளக்கின்சுடராய்) (பெரியவிளக்கினொளியையுடைத்தாய்) விரஹத்தாலவியாத விளக்காயிற்று. “‘ஏற்றியபெருவிளக்கு’ என்றொரு தமிழனிட்டுவைத்தான்” என்றருளிச்செய்வர். (நிற்கும்வாலி

(க) ஸ்தோ-ர-௫-உ

யதே) வலிதாய்நின்று நலியாநிற்கும்; தீபமாகிறது தான் க்ஷணிகமுமாய் ப்ராதேஶிகமுமாயிறே யிருப்பது; இதங்ஙனன்றிக்கே, எப்போதுமாய் எங்குமுண்டாயிராநின்றது. பாதகத்வத்திலுறைப்பை யநுஸந்தித்துச் சொல்லுகிற வார்த்தையிறேபிது. (மாட்டியவாலியதான வல்விளக்கின் சுடராய்நிற்கும். வாலிமை-பெருமை. வன்மை-ஸ்த்தைர்யம்.) (உ)

மூன்றாம்பாட்டு

வாலியதோர்கனிகொல்? வினையாட்டியேன்வல்வினைகொல்?*
கோலந்திரள்பவளக் கொழுந்துண்டங்கொலோ? அறியேன் *
நீலநெடுமுகில்போல் திருமேனியம்மான்தொண்டைவாய் *
ஏலும் † திசையுளெல்லாம் வந்துதோன்றுமென்னின்னுயிர்க்கே.

ப.—அநந்தரம், ஶ்யாமளமான வடிவுக்கு பாபாகமான வதரஶோபையானது, பார்த்தபார்த்தவிடமெங்கும் தோன்றாநின்றதென்கிறாள்.

(இ-ள்.) வாலியது - போதுசெய்யாத நன்மையையுடைத்தாய், ஓர் - மென்மையாலும் நிறத்தாலும் இனிமையாலும் அத்வி தீயமாயிருப்பதொரு, கனிகொல் - பழமென்னலாயிருக்கிறதோ, வினைபாட்டியேன் - இப்பலத்தை யப்போதேயநுபவிக்கப்பெறாத பாபத்தையுடைய வென்னுடைய, வல் அநுபவித்துக்கழிக்கவரிய, வினைகொல் - பாபமொருவடிவுகொண்டதாயிருக்கிறதோ, கோலம் - ஸௌந்தர்ய ஸௌலப்ய ஸௌகுமார்ய ஸாரஸ்யாதிகள், திரள் - திரண்டதொரு, பவளம் - பவளத்தினுடைய, கொழும் - கொழுவிதான, துண்டங்கொலோ- துண்டமென்னலாயிருக்கிறதோ, அறியேன் - இன்னதென்று நிர்த்தரித்தறியலாயிருக்கிறதில்லை நீலம் - ஶ்யாமளமாய், நெடும் பெருத்த, முகில்போல் - மேகம்போலே, திருமேனி - அழகையுடையனான அம்மான் - ஸ்வாமியுடைய, தொண்டை - தொண்டைப்பழத்தின் நிறத்தை யுடைத்தான, வாய் - திருவதரமானது, ஏலும் - என்றுகொண்டேபார்த்த, திசையுளெல்லாம் - திக்கெல்லாம், என் - என், இன் - இனிய, உயிர்க்கு - உயிரை நோக்கி, வந்து - வந்து, தோன்றும். தோன்றாநின்றது. (ந)

ஆறு:-(வாலியதோர்) பக்வமாய் அம்ருதரஸமாயிருப்பதொரு கனியோ; அன்றியே, பாதகமாகையாலே ஸஹஜவிரஹவ்யஸநையாயிருந்த வென்னுடைய மஹாபாபமோ, * ஸௌந்தர்ய ஸாரஸமு

தாயமான பவளத்தினுடைய கொழுவியதாயிருப்ப தொருமுறி யோ, அவையெல்லாமல்ல; நீலமஹா வலாஹகரமணீய திவ்யரூபனு னவனுடைய சாருதரபிம்ப ஸத்ருஶமான திருப்பவளம், ததீயதிவ் யரூப ஸௌந்தர்ய ஸஹக்ருதமாய்க்கொண்டு என்னை முடிக்கைக் காக வெல்லாத்திக்குக்களிலும் வந்து தோன்றுநின்றதென்கிறாள்.

ஈடு ; அவ ;— மூன்றும்பாட்டு. அது தன்மூக்குவலிகாட்ட நாம் பேசாதேயிருந்தால், "அத்தனையோ விதின்வாய்வலி" என்று நம்மையேசுவர்களென்று, திருப்பவளத்திலழகுவந்து நலிகிறபடி யை யருளிச்செய்கிறார்.

(வாலியதோர்கனிகோல்) முன்புபிஞ்சாய், அநந்தரம் பக்வ மாய், பின்பு அநுபவபோக்யமன்றிக்கே போவனசில பலங்களுண் டிறே; அங்ஙனன்றிக்கே, என்றுமொக்க ஏகரூபமாயிருப்பதொரு கனியோ. அத்தலையில் போக்யதை போதுசெய்யாமையாலே யித்த லையிலாற்றாமையும் போதுசெய்யாதே. (வினையாட்டியேன்வல்வி னைகோல்) போக்யவஸ்து பாதகமாயிற்று போக்தாக்கள்பண்ணின பாபத்தாலேயிறே-அம்ருதமே விஷமாம்படியான பாபத்தைப்பண் ணினேன். பாபத்தைப்பண்ணின வென்னுடைய பாபமானது பக்வ மாய்க்கொண்டு அங்கே குடியேறிற்றோ. அங்கேகிடந்திறே யிங்கநு பவிப்பிப்பது- பகவத்விஷயத்தில் நிக்ரஹரூபேணகிடந்திறே யிங்க நுபவிப்பிப்பது. க்ரியையாகையாலே செய்தபோதே நசித்துப்போ மே. இவன்பண்ணின பாபத்துக்கு, தானே ஸ்வதந்த்ரமாய்நின்று பலப்ரதமாகைக்கு ப்ராப்தியில்லையே. (வல்வினைகோல்) அநுபவ விநாஶ்யமாகாதபடியான பாபமாயிற்று.

(கோலந்திரளித்யாதி) அழகுதிரண்டிருந்துள்ள பவளத்தினு டைய ஸாரத்தையுடைத்தான முறியோ, அறிகிறிலேன். முறி யோவென்கிறது - புழுதிபுடைத்திராமைக்கு ; முறித்தவாயானது ஒளியுண்டாய் நெய்த்திருக்குமிறே.

(நீலமித்யாதி) இதுதானென்று முண்டாயிருக்கச்செய்தே, இ துக்குமுன்பு பாதகமாயிற்றில்லையிறே ; கூட்டுப்படைநின்றவாறே நலியாநின்றதாயிற்று. நீலமாய் போக்யதை யளவிறந்திருந்துள்ள முகில்போன்றவடிவையுடைய ஸர்வேஶ்வரனுடைய. (தொண்டை வாய்) தொண்டை-கோவை. கோவைப்பழம்போலே கனிந்துநெய்

த்திறே திருப்பவளந்தானிருப்பது. தன்னிற்றானுண்டானபகை பார்த்திருக்கிறதில்லையாயிற்று இவளைநலிகிறவிடத்தில். இரண்டுக்கும் சேரவன்னியமில்லையிறே. (வன்னியம்-ஸ்வாதந்த்ர்யம். ஒருவன்பக்கலிருவர் பகையானால், இருவரும் ஸ்வதந்த்ரரானால் அவனை வெல்லவொண்ணாது; ஆகையாலே, இருவருமொருமிடறாய் நலிவர்கள்; அப்படியேயிங்கும்.)

அவை நலிந்துகொடு தோற்றுகின்றதாகில் தப்பப்பார்த்தாலோ வென்ன; வாய்வலிதப்பலாயோவிருக்கிற தென்கிறாள் மேல் (ஏலும் திசையுளேல்லாம்) நானு மிவைநலியாதவிடந்தேடித் தப்பவிரகுபாராநின்றேன், அவ்வோவிடங்களிலேவந்து தோன்றுகின்றது. பார்த்தபார்த்தவிடமெல்லாம் தானேயாயிராநின்றது. தோன்றுகிறதுக்குக் கருத்தென்னென்னில் (என்னின்னுயிர்க்கே) என்னுடைய நற்சீவனைமுடிக்கைக்காக. (௩)

நான்காம்பாட்டு.

இன்னுயிர்க்குஏழையர்மேல் வளையும்இணைநீலவிற்கோல் ? *
மன்னியசீர்மதனன் கருப்புச்சிலைகோல் ? * மதனன்
தன்னுயிர்த்தாதை கண்ணபெருமான்புருவமவையே *
என்னுயிர்மேலனவாய் அடுகின்றனவென்றுநின்றே. (௪)

ப.—அநந்தரம், காமோத்பாதகனாய் * (க) ஸாக்ஷாந் மந்மதமந்மதனான க்ருஷ்ணனுடைய திருப்புருவங்களானவை யென்னாத்மாவை நலியாநின்றன வென்கிறாள்,

(இ-ள்.) இன் - நல்ல. உயிர்க்கு - ப்ராணனை யபஹரிக்கைக்காக, ஏழையர்மேல் - சபலைகளான பெண்பிறந்தார்மேலே, வளையும் - தானே வளைந்து நலிவதான, நீலம் - நீலநிறத்தையுடைய, இணை - இரண்டு, விற்கோல் - வில்லென்னலாயிருக்கிறதோ; அங்ஙனன்றியே, மன்னியசீர் - ஸத்திரஸௌந்தர்யாதிகுண யுக்தனான, மதனன் - காமனுடைய, கருப்புச்சிலைகோல் - காமுகரை நலியும் கருப்புவில்லென்னலா யிருக்கிறதோ, மதனன்றன் - அந்தகாமன்றனக்கு, உயிர் - ஸத்தாப்ரதனாய்க்கொண்டு, தாதை - உத்பாதகனாய், கண்ணன் - க்ருஷ்ணனான, பெருமான் - ஸர்வாதிகனுடைய, புருவமவையே -

---

(க) பாக-கO-௯௨-௨.

(க) * தன்கைச்சார்ங்கமதுவேபோலுந் திருப்புருவங்கள்தாம், என் - என், உயிர்மேலனவாய் - ஆத்மாவின்மேலே அபிமுகங்களாய்க்கொண்டு, என்றும் - என்றும், நின்றே - ஒருபடிப்பட நின்று, அடுகின்றன - நலியாநின்றன.

அவையேயென்றது - முன்பு த்ருஷ்டாந்ததயா ஸங்கித்த வ்யக்திகளிற் காட்டில் பாதகத்வம் கனத்திருக்கையாலே. (ச)

ஆறு;—(இன்னுயிர்க்கு) பரமபுருஷ ஸந்தர்ஸநத்திலே ஸாலஸமான காமிநீஜநத்தினுடைய ப்ராணனையே லக்ஷ்யமாக வுடையவையாய், நம்ரமாய் நீலமாயிருப்பன விரண்டுவிற்களோ, அன்றிக் கே, மதநனுடைய ஸௌந்தர்யநிகேதநமான விக்ஷுகோதண்டமோ! இவையெல்லாமல்ல; ஸௌந்தர்யஸாரஜ்ஞ மதநனுக்கு ஜந்மபூமியானபுண்டரீகவிலோசநனுடைய புருவங்களே, இவை யென்னுடைய ப்ராணன்களை யெப்போதும் பாதிக்கிறனவென்கிறாள். (ச)

ஈடு; அவ; —நான்காம்பாட்டு. "என்றான், இங்ஙனே அதரோத்தரமாயிற்றே போய்" என்று திருப்புருவத்தி லழகுவளைந்து கொடுவந்து நலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

(இன்னுயிர்க்கு) என்னுடைய நற்சீவனைக் கொள்ளுகைக்காக. (ஏழையர்மேல் வளையும்) வளைப்பாருமின்றிக்கே வளைக்கைக்கு விஷயமுமின்றிக்கே-அகர்மகமாகவும் அகர்த்ருகமாகவும் வளையாநின்றது; விஷயமில்லாமையாலே கர்மமில்லை, வளைப்பாரில்லாமையாலே கர்த்தாவில்லை. ஏழையர்மேலே வளைகிற நீலமான விரண்டு வில்லோ. (உ)"ஸஜ்யம் வா நிவேஸ்ய வா வெஹ்ய ஹீநாஸநுத்ஸ்ருஜ்ய நாஸநெந ஸக்ரசாபநிபேசாபே க்ருஹீத்வாஸத்ருநாஸநே" என்னும்படியே; இந்த்ரதநுஸ்ஸுக்கு "அபலைகளையே நலியவேணும்" என்னும் நிர்ப்பந்தமில்லையிறே. (மன்னியசீரித்யாதி) பெண்பிறந்தாரையே நலியக்கடவதான காமனுடைய வில்லுத்தானேயோ. அதுதன்னிலும் ருத்ரனாலே வடிவிழப்பதற்கு முன்புத்தை அவன்கையில் வில்லாகவேணும். (கருப்புச்சிலைக்கோல்) கண்ணுக்காபாஸமாய் பாதகத்வமுறைத்திருக்கிறபடி.

அவனோட்டை ஸம்பந்தத்தால் வந்த ராஜகுலங்கொண்டு திரிகிறவன்கையில் வில்லுக்கு இத்தனை யுறைப்புண்டாக மாட்டாது,

(க) நா-தி-கச-ச. (உ) ரா-கிஷ்-நட-க.

அவன் தனக்குங்கூட ஜநகனை க்ருஷ்ணனுடைய திருப்புருவங்கள் தாமேயாகவேணும். (மதனனித்யாதி) (க) * தன்கைச்சார்ங்கமது வேபோல் புருவவட்டமழகியவனுடைய புருவங்கள்தாமே யாகவேணும். ஆண்டாள்வார்த்தை யிருக்கிறபடியிறே. [தருமமறியாக்குறும்பனை] தர்மமறியும்போது அபிஷிக்தக்ஷத்ரியன் வயிற்றிலே பிறந்தவனாகவேண்டாவே. யாதவர்கள் நேரேமுடிசூடுவதில்லையிறே. * ஆந்ருஶம்ஸ்யமிருக்கும்படி முதலிலே புதியதுண்டறியாதவனாயிற்று. ஸ்ரீநந்தகோபர், தம்முடைய ராஜ்யத்திலே மூலையடியேநடந்து திரிவாரொருபிள்ளையையாயிற்றுப் பெற்றது. [தன்கை யித்யாதி] கையிலே வில்லைக்கண்டால், "முகத்திலே யிருக்கக்கடவது கையிலே யிருந்ததீ!" என்னலாம்படியா யிருக்கும். முகத்திலேகண்டவாறே, "கையிலேயிருக்கக்கடவதிது முகத்திலே யிருந்ததீ!" என்னலாயிருக்கும். [அதுவேபோல்] என்கிறதாயிற்று - ஸர்வதா ஸாம்யத்தாலே. [புருவவட்டமழகிய] "தருமமறியான்" என்றிழக்கவொண்ணாதபடி யாயிற்று வடிவழகிருப்பது. [பொருத்தமிலியை] சில பதார்த்தங்களுண்டிறே - நிறமழகியதாய் பார்த்தவாறே, உபயோக யோக்யமன்றிக்கே யிருப்பன; அவைபோலே, வடிவழகேயாய், ஆசைப்பட்டார்பக்கல் ரஸந்தொங்கிலும் தொங்கானாயிற்று. [கண்டீரே] அவனுக்குப் பொருத்தமில்லாவிட்டால், நமக்குப் பொருத்தமில்லையாகிலிறே விட்டிருக்கலாவது; அவன்பொருந்தாமை தமக்குத் தொடர்ந்துதிரியுமத்தனையாயிற்று. (புருவமவையே) கீழ்ச்சொன்னவழகுகள்தா மநுகூலமென்னும்படியாகவாயிற்று இவை பாதகமாகிறபடி.

(என்னுயிர்மேலனவாய்) இருப்பதங்கேயா யிருக்கச்செய்தேயும், நோக்கென்மேலேயாயிராநின்றது. (உ) * எங்கும்பக்கநோக்கறியாதிறே யிருப்பது. (அடுகின்றன) கொல்லாநின்றன. (என்று நின்றே) பாதகமாக நிற்கச்செய்தேயும் அநித்யமாயிருப்பன சிலபதார்த்தங்களுண்டிறே, இவையங்ஙனன்றிக்கே யென்றுமொக்கநின்று நலியாநின்றன. என்னை நலிகைக்காக நித்யத்வத்தை யெறட்டுக்கொண்டது; (ங) "நித்யம் நித்யாக்ருதிதரம்" என்கிறது தானேயிறே நலிகிறது. (ச)

(க) நா-தி-கச-ஙு. (உ) உ-ஙு-உ. (ங)

ப.—அநந்தரம், இந்தவவதாரகந்தமான வநந்தஶாயியினுடைய திருமகரக்குழைகள் நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) ஏழையர்க்கும் - அநுகூலப்ரதிகூல விபாகமல்லாதபடி யாசைப்பட்டவபலைகளுக்கும், அசுரர்க்கு மரக்கர்கட்கும் - எதிரிடும் அஸுரராக்ஷஸர்களுக்கும், உய்விடம் - பிழைக்குமிடம், எவ்விடம் - எவ்விடம், என்று-என்று, இலங்கி - பெரியதேஜஸ்ஸையுடைத்தாய்க்கொண்டு, மகரம் - மகராகாரமாய், தழைக்கும் - தழைத்தனசில, தளிர்கொல் - தளிர்களோவென்னலாய், பை - திருமேனியோட்டை ஸ்பர்ஶத்தாலே விரிகிறபணங்களையுடைத்தாய், விடம் - விரோதிகளுக் கஸஹ்யமான விஷத்தை யுடைத்தாயிருக்கிற, பாம்பணையான் - திருவரவணையையுடையனவான, திரு - தர்ஶநீயமான, குண்டலம் - மகரகுண்டலங்களையுடைத்தான, காதுகளே - காதுகள்தாமே, ஒன்றும் - ஒருப்ரகாரத்தாலும் கைவிடலின்றி - கைவிடாதே, அடுகின்றன - நலியாநின்றன, காண்மின்கள் - காணுங்கோள்.

போக்யமான மகரகுண்டலம் விரோதிகளுக்கு பாதகமாவது அஸஹ்யதையாலே. காண்மின்களென்று - தன்னோபாதி அவர்களுக்கும் தோற்றுமென்றிருக்கிறாள். (௬)

ஆறு ;— (உய்விடம்) அபலைகளுக்கும் அஸுரர்களுக்கும் ராக்ஷஸர்க்கு முய்விட மெவ்விடமென்றிலங்கி திருமகரகுண்டலம் தளிருகிறதளிரோ; தன்னோட்டை ஸ்பர்ஶத்தாலே விகஸிதமான பணங்களையும், ப்ரதிகூலருக் கனுகவொண்ணாதபடி நஞ்சையுமுடையனாய், தன்னுடைய திருவழகுக்கு உத்தம்பகனான திருவனந்தாழ்வானை யணையாகவுடைய வெம்பெருமானுடைய திருக்குண்டலக்காதுகளே நிரந்தரமாக நலியாநின்றன, பாரீகோளென்கிறாள். (௬)

ஈடு ; அவ ; ஆறும்பாட்டு. "நாம் செவிப்பட்டிருக்க விவற்றை முன்னேபோக விட்டிருந்தோம்" என்று திருக்காதிலழகுவந்து நலிகிறபடியைச் சொல்லுகிறது. காதாட்டிக்கொண்டு சொல்லுவரோ.

(உய்விடமித்யாதி) அஸுரராக்ஷஸர்களுக்கும் அபலைகளுக்கும் தப்பிப்போய்ப் பிழைக்குமிடமெவ்விடமென்று, உஜ்ஜ்வலமாய்க்கொண்டு மகரம் தழைக்கின்றதளிரோ. அஸுராதிகள், அழகு கண்டால் பொறுக்கமாட்டாதே முடிவர்கள் ; அபலைகள் லபிக்கப்பெறாதே முடிவர்கள். "அபலைகளை நலியுமாபோலே அஸுரராக்ஷ

ஸர்களுக்கும் ஸ்நேஹத்தை விளைத்து பாதகமாகாநின்றது" என்றொரு தமிழனிட்டுவைத்தா னென்றத்தை ஜீயர்கேட்டருளி, "இப்பொருளழகிது, ஆனாலும், அபகஷ்தர்மம் - அஸாதாரணஷஸர்களுக்கும் பாதகமாகாநின்றதென்று இப்போதிது சொல்லுகை, தேட்டமன்றிறே; ஆனபின்பு அதுவேண்டா" என்றருளிச்செய்தாராம்.

(பைவிடமித்யாதி) தன்னோட்டை ஸ்பர்ஶத்தாலே விகஸிதமாகாநின்றுள்ள பணங்களையும், உகவாதார் முடியும்படியான விஷத்தையு முடையனான திருவனந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனுடைய திருக்குண்டலக்காதுகளே. திருக்காதிலழகு பாதகமாகிறப்போலே யாயிற்று, திருவனந்தாழ்வானோட்டைச் சேர்த்தியும் பாதகமாகிறபடி. பெறுகைக்கு அநந்த புருஷகாரமுண்டாயிருக்கக் கிடேர்நான்னோவுபடுகிறது; காதுகளேயென்று-கீழில் பாதகமானவை நன்றென்னும்படி யாயிற்று இது நலிகிறபடி. அவை தண்ணீர்ப்பந்தல்வைத்ததென்னும்படியாக வாயிற்று; (க) "மாலை-நல்கிற்றையெல்லாம்" என்னுமாபோலே. (கைவிடலோன்றுமின்றி) ஒருகாலும் கைவிடாதே. ஒருகால்விட்டுப் பற்றுமதன்றிக்கே. (அடுகின்றன) முடியாநின்றன. (காண்மின்களே) அவர்களுக்கும் எல்லா முருவு வெளிப்படாய்த் தோற்றுமென்றிருக்கிறாள். (க) *வாயுந்திரையுகளி லாழ்வாரிறே. (சு)

ஏழாம்பாட்டு.

காண்மின்கள்அன்னையர்காள்! என்று காட்டும்வகையறியேன் *
நாள்மன்னுவெண்திங்கள்கோல்? நயந்தார்கட்குநச்சிலைகோல்? *
சேண்மன்னுநால்தடந்தோள் பெருமான்தன்திருநுதலே *
கோள்மன்னிஆவியடும் கொடியேனுயிர்கோளிழைத்தே. (எ)

ப.—அநந்தரம், மஹாபுஜனான க்ருஷ்ணனுடைய திருநெற்றியழகு தன்னை நலியாநின்றதென்கிறாள்.

(இ-ள்.) என்னை நலிகிறப்ரகாரத்தை, அன்னையர்காள்-அன்னையர்காள், காண்மின்கள் - நீங்கள்காணுங்கோள், என்று - என்று, காட்டும் - காட்டும், வகை - ப்ரகாரம், அறியேன் - அறிகிறிலேன், நாள் - அஷ்டமீபர்யந்தமான

(க) தி-வி-௩௫. (உ) உ-க.

நாளோடே, மன்னு - மன்னி, வெண் - அர்த்தாகாரனுகையாலே களங்கமற்று வெளுத்த, திங்கள்கொல் - சந்த்ரனோ, நயந்தார்கட்கு - ஆசைப்பட்டவர்களுக்கு, நச்சு - நச்சுவடிவா யிருப்பதொரு. இலைகொல் - இலையோ, சேண் - ஓங்குதலை, மன்னு - உடைத்தாய், நால் - நாலுவகைப்பட்டு, தடம் - பணைத்த, தோள் - தோள்களால், பெருமான்றன் - பெரியனான க்ருஷ்ணனுடைய, திரு - தர்ஸநீயமான, நுதலே - திருநெற்றிதானோ, கோள்-மிடுக்கை, மன்னி-அவலம்பித்துக்கொண்டு, கொடியேன் - அழகேபாதகமாம்படியான கொடுமையை யுடையவென், உயிர் - ப்ராணனை, கோள் - கொள்ளுகையை, இழைத்து - நிரூபித்து, ஆவி - என்னாத்மாவை, அடும் - நலியாநின்றது.

கோள் - மிடுக்கு, ஒளியாகவுமாம். (எ)

ஆறு ;—(காண்மின்கள்) (நாள்மன்னு) பூர்வபக்ஷத்தி லஷ்டமீசந்த்ரனோ.

அன்றிக்கே, ஆசைப்பட்டார்க்கு நச்சவேண்டாதிருக்கிறதோ; கொழுந்துவிட்டுச் சுற்றுடைத்தான நாலுதிருத்தோள்களையுடைய ஸர்வேஶ்வரனுடைய திருநெற்றியே. இப்படி நோவுபடுகைக்குப் பாபத்தைப்பண்ணின வென் ப்ராணனைமுடிக்கையிலே துணிந்து அபிநிவேசித்து நலியாநின்றது; இத்தைக்காண்மின்க ளன்னையர்காளென்று காட்டும்வகை யறிகிறிலே னென்கிறாள். (எ)

ஈடு; அவ;—ஏழாம்பாட்டு. "இவையவள்முன்னே நிற்கவற்றோ, இவற்றுக்கெல்லாம் நாம் நெற்றிக்கையன்றோ" என்று திருநுதலிலழகுவந்து நலிகிறபடியை யருளிச்செய்கிறார்.

(காண்மின்களித்யாதி) இது நலியாநின்றதாகச் சொல்லாநின்றாய்; எங்களுக்கிது தெரிந்திருக்கிறதில்லை; எங்களுக்கும் தெரியும்படி சொல்லிக்காணாயென்ன (காண்மின்களித்யாதி) நீங்களுமித்தைக் காணுங்கோளென்று, உங்களுக்குக்காட்டும் ப்ரகாரமறிகிறிலேன். என்கைக்குப்பிடிதருதல், உங்களுக்கு உருவுவெளிப்பாடுண்டாதல் செய்யிலிறே யென்னால் காட்டலாவது. (அன்னையர்காள்) ஆண்களுக்குக்காட்டிலிறே பருவம் நிரம்பின வுங்களுக்குக்காட்டலாவது,

(நாண்மன்னுவெண்டிங்கள்கோல்) பூர்வாஷ்டமீசந்த்ரனோ இளகிப் பதித்திருக்கைக்கும், "காட்டு, காட்டு" என்றுவளருகை

கும் தர்ஶநீயமாயிருக்கைக்கும். (நயந்தார்கட்கு நச்சிலைகோல்) ஆசைப்பட்டார்க்கு நச்சுப்பூண்டோவென்னுதல், தன்னையாசைப்பட்டார்க்கு ஆசைப்படவேண்டாதிருக்கிறதோ வென்னுதல். (க) "நச்சுமாமருந்தம்" என்னுமவரிறே, இப்போதுகண்ணுஞ்சுழலை யிட்டு இவ்வார்த்தைச்சொல்லுகிறார். "இன்னமலையிலே யுண்டு" என்று அங்கேபோய்த்தேடி வருந்தவேண்டாதே, ஆசைப்படுவதுமாய் மேல்காற்றிலேகாட்டப் பரிஹாரமுமாம் மருந்தாயிற்றிது. மாமருந்தம் - அபத்யஸஹமான ஔஷதம். இவன்தலையிலே பழியிட்டுக் கைவிடு மௌஷதமன்று, வானமாமலையில் தலையான ஔஷதமிறே இப்போது இவளுக்கு நச்சுப்பூண்டாகிறது.

(சேணித்யாதி) ஓக்கத்தையுடைத்தாய், கல்பகதருப்பணைத் தாப்போலேயாய்ச் சுற்றுடைத்தா யிருக்கிற திருத்தோளிலழகாலே யென்னை அநந்யார்ஹையாக்கினவனுடைய திருநெற்றியே. (உ) "ஆயதாஸ்ச ஸுவ்ருத்தாஸ்ச - ஆயதாஶ்சஸுவ்ருத்தாஶ்ச" என்னும்படியே திருவடியகப்பட்டதுறையிலேகாணும் இவளுமகப்பட்டது. (கொடியேனுயிர்கோளிழைத்து- கோள்மன்னியாவியடும்) என்னுயிரினுடைய வழகை யழித்துக்கொள்கையிலே விருப்பத்தைப்பண்ணி முடியாநின்றது. (அழகுபாதகமாம்படி பாபத்தைப் பண்ணின வென்ப்ராணனைமுடிக்கையிலே துணிந்து, அதிலே யபிநிவேசித்து, ப்ராணனைமுடியாநின்றதென்றுமாம். (எ)

எட்டாம்பாட்டு

கோளிழைத்தாமரையும் கொடியும்பவளமும்வில்லும் *
கோளிழைத்தண்முத்தமும் தளிரும்குளிர்வான்பிறையும் *
கோளிழையாவுடைய கொழுஞ்சோதிவட்டங்கொல்?* கண்ணன்
கோளிழைவாண்முகமாய்க் கொடியேனுயிர்கோள்கின்றதே. (அ)

ப.—அநந்தரம், உத்தமான வவயவ ஸௌந்தர்யத்தையுடைய க்ருஷ்ணனுடைய முகஶோபையானது தன்னை நலிகிறபடியைச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) கோள் - தன்னுடைய வொளியே, இழை - தனக்காபரணமான, தாமரையும் - தாமரைகளும், கொடியும் - கொடியும், பவளமும் - பவ

(க) ௬-௪-௫. (உ) ரா-கிஷ்-௬-௧௫.

ளமும், வில்லும் - வில்லும், கோள் - தன்னுடைய வொளியை, இழை - தனக்கிழையாகவுடைத்தாய், தண் - குளிர்ந்த, முத்தமும் - முத்தும், தளிரும் - தளிர்களும், குளிர் - ஶீதளமாய், வான் - அழகியதான, பிறையும் - பிறையுமானவிவற்றை, கோள் - கொள்கையை, இழையா - தனக்காபரணமாக, உடைய - உடைத்தாய், கொழும் - பூர்ணமான, சோதிவட்டங்கொல் - ஜ்யோதிர்மண்டலமோ. கண்ணன் - க்ருஷ்ணனுடைய, உக்தமான வுபமாநங்களுக்கு உபமேயபூதமான திருக்கண்கள், நாஸாதண்டம், திருப்பவளம், திருப்புருவம், திருமுறுவல், கர்ணபாஶம், திருநெற்றி யாகிற வவயவங்களை யுடைத்தாயிருப்பதாய், கோள் - தன்னொளிதானே, இழை - ஆபரணமாம்படி, வாள் - உஜ்ஜ்வலமான, முகமாய் - திருமுகமாய்க்கொண்டு, கொடியேன் - அழகாலே நலிவுபடும் பாபத்தின்கொடுமையையுடைய வென், உயிர் - ப்ராணனை, கொள்கின்றது - அபஹரியாநின்றது.

கோள் - ஒளி. (அ)

ஆறு ;—(கோளிழைத்தாமரையும்) தன்னொளியைத் தனக்காபரணமாகவுடைய தாமரையும், கொடியும், பவளமும், வில்லும், அழகை யாபரணமாகவுடைய குளிர்ந்தமுத்தும், தளிரும், குளிர்ந்து பெருத்தபிறையுமாய், தன்னழகே தனக்காபரணா யிருக்கிற ஜ்யோதிர்மண்டலமோ; தன்னொளியே தனக்காபரணமாகவுடைய க்ருஷ்ணனுடைய வழகிய திருமுகமென்றொரு பேரையிட்டுக் கொண்டு இப்படி துஃக்கப்படுகைக்கீடான பாபத்தையுடைய வென்னுடையப்ராணனை நலிகிறதென்கிறாள். (அ)

ஈடு ; அவ ;—எட்டாம்பாட்டு. "தலையானபேரை நெற்றிக்கையிலேவிட்டுக் காட்டிக்கொடுக்கவொண்ணாது" என்று, கீழ்நலிந்தவை யெல்லாம் சேரவொருமுகமாய் வந்து நலிகிறபடி சொல்லுகிறது. அங்குமிங்கும் சிதறிக்கிடந்தபடையை, ஶத்ருக்கள்வந்து முடுகினவாறே யொன்றாகத்திரட்டி யொருகாலே தள்ளுவாரைப் போலே, தனித்தனியே நலிந்தவழகுகளெல்லாம் திரளவந்து நலிகிறபடியைச்சொல்லுகிறார்,

(கோளிழைத்தாமரையும்) ஜாதியொன்றா யிருக்கச்செய்தேயும், "பொற்கால்தாமரை, நூற்கால்தாமரை" என்று தாமரையிலே சிலபேதமுண்டிறே; அதில், நூற்கால் தாமரையென்னுதல்; அன்றியிலே, கொள்கையிலே அணிந்திருக்கிற தாமரையென்னு

தல்; தன்னழகே தனக்காபரணமாகவுடைய தாமரையென்னுதல். தேஜஸ்ஸேயாபரணமான தாமரையென்னுதல். திருக்கண்ணும்; (கோடியும்) திருமூக்கும். (பவளமும்) திருவதரமும். (வில்லும்) திருப்புருவமும்.

(கோளிழைத்தண் முத்தமும்) தன்தேஜஸ்ஸேயாபரணமாக வுடைய குளிர்ந்த திருமுத்துநிரையும். அன்றியே, இழையிலே கோப்புண்ட முத்துப்போலே யிருக்கிற குளிர்ந்த திருமுத்தென்னு தல். (தளிரும்) திருக்காதும். (குளிர்வான்பிறையும்) திருநெற் றியும்; நேத்ரபூதரானவரும், "மூக்குவலியோம்" என்றவரும், வாய்சொல்லிப்போனவரும், அதரோத்தரமாயிற்றே யென்று வளை த்துக்கொடுபோனவரும், வாய்க்கரையிலே யிருந்தவரும், தாம் செவிப்பட்டவாறே போனவரும், "இவற்றுக்குநெற்றிநாம்" என்று போனவருமெல்லாமொருமுகமாய்.

(கோளிழையாவித்யாதி) கொள்ளப்பட்ட வாபரணத்தையு டைத்தான ஜ்யோதிர்மண்டலமோ. ரூபகமிருக்கிறபடி. (தன்ன ழகே தனக்காபரணமாயிருப்பதொரு ஜ்யோதிர்மண்டலமோ வென் னுதல்).

(கண்ணன்கோளிழையித்யாதி) கண்ணனுடைய, தன்னழ கேதனக்காபரணமாய் ஒளியையுடைத்தான முகமென்றொரு வ்யா ஜத்தையிட்டு (கொடியேனுயிர்கோள்கின்றதே) கொடியேன்-உயிர் பெறுங்காலத்திலே யுயிரிழக்கும்படியான பாபத்தைப் பண்ணி னேன், வாழுங்காலத்திலே கெடும்படியான பாபத்தைப்பண்ணின வென்னுடைய வுயிரைக்கொள்கின்றது = கோளிழையாவுடைய கொழுஞ்சோதி வட்டங்கொல். (அ)

ஒன்பதாம்பாட்டு.

கொள்கின்றகோளிருளைச் சுகிர்ந்திட்டகொழுஞ்சுருளின் *
உள்கொண்டநீலநன்னூல்தழைகொல்? * அன்றுமாயன்குழல்*
விள்கின்றபூந்தண்துழாய் விரைநாறவந்து என்னுயிரை *
கள்கின்றவாறு அறியீர் அன்னைமீர்! கழறுநிற்றிரே. (கூ)

ப.—அநந்தரம், ஆஶ்சர்யரூபனான க்ருஷ்ணனுடைய வுபமாதீதமான திருக்குழல்நலிகிற ப்ரகாரத்தைச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) கொள்கின்ற - லோகத்தை யடங்கக்கொள்ளக்கடவதான, கோள் - மிக்கையுடைய, இருளை - இருளை, சுகர்ந்திட்ட - கந்தல்கழியும்படி யெஃகிப்படப்பட்டதாய், கொழும் - செறிந்த, சுருளின் - சுருட்சியினுடைய கையழுக்குப்படாமல். உள் - உள்ளே, கொண்ட - நாற்றுக்கொள்ளப்பட்ட, நீலம் - நீலநிறத்தை யுடைத்தான, நல் - அழகிய, நூல்தழைகொள் - நூல்திரளோ, அன்று - அக்ருத்ரிமமானவிது அப்படியல்லவிறே, மாயன் - ஆஶ்சர்யரூபனான க்ருஷ்ணனுடைய, குழல் - உபமாதீதமான திருக்குழலானது, விள்கின்ற - விகஸிதமான, பூ - புஷ்பத்தையுடைத்தாய். தண் - செவ்வியையுடைத்தான, துழாய் - திருத்துழாயின், விரை - பரிமளமானது, நாற - பரம்பும்படி, வந்து - வந்து, என் - என், உயிரை - ஆத்மாவை, கள்கின்ற - சௌர்யம்பண்ணுகிற, ஆறு - ப்ரகாரம், அறியீர் - அறிகிறிலிகோள், அன்னைமீர் - தாய்மாராயிருந்துவைத்து, கழறுகிற்றிர் - அவஸ்தையையறியாதே நியமியா நின்றிகோள்.

கள்கை - களவிலே கொள்கை. (௯)

ஆறு ;—(கொள்கின்ற) ப்ரளயகாலத்தில் திவாராத்ரவிபாகமின்றிக்கே ஜகத்தையடைய வ்யாபியாநின்ற மிக்கதமஸ்ஸைப் புறவாயிலே வெளிறானவம்ஶத்தைக்கழித்து அதினுள்ளே யுண்டான கொழுவிய விருண்ட சுருளினுடைய ஸாரமான கறுத்தநூற்றிரளோ; அங்ஙனமன்று ; அத்யாஶ்சர்யமான வழகையுடைய க்ருஷ்ணனுடைய திருக்குழல், அலராநின்றுள்ள வழகிய திருத்துழாயினுடைய பரிமளம் நாறவந்து என்னுடைய ப்ராணனையபஹரிக்கிறபடி யறிகிறிலிகோள், ஏதேனுமொன்றைச் சொல்லிப்பொடியாநின்றிகோளென்கிறாள். (௯)

ஈடு ;—அவ ;—ஒன்பதாம்பாட்டு. ‘ இவ்வவஸ்தைக்கன்றோ நமக்குப்பூவும் புழுகுமிட்டு ஸிரஸாவஹித்துக்கொடுபோந்தது ” என்று திருக்குழற் கற்றையிலழகுவந்து நலியாநின்றபடியைச் சொல்லுகிறாள்.

(கொள்கின்றவித்யாதி) திருக்குழலிலழகுக் கோருபமானஞ் சொல்லப்புக்கு, அழகுக்கு அதுதான் நேர்கொடு நேருபமானமாகப் போராமையாலே அதுதன்னைக்கிடந்து சிக்ஷிக்கிறது. ப்ரளயகாலத்தில் திவாராத்ரவிபாகமற வெங்கு மொக்கத்தானேயாம்படி,

கொள்ளாநின்றுள்ள- வ்யாபியாநின்றுள்ள, கோட்பாட்டையுடைய விருளென்னுதல்; கோளென்று - மிடுக்காய், மிடுக்கையுடைய விருளென்னுதல். அதுதன்னை, சுகிருவது - எஃகுவது; இப்படி யெஃகுகிறது, தன்னில்கெழுமின வம்ஸத்தைத்திரட்டுவது, அதுதன்னிலுமுண்டான புறவிதழைக்கழித்து அகவாயில் வயிரமாய் நீலமானநிறத்தையுடைத்தாய் நன்றாயிருந்துள்ள நூற்றிரளோ.

(அன்றுமாயன்குழல்) இவள்நெஞ்சிலே யழகிதாக வுயிர்பட்டதுகாணும். இத்தனை பரிக்ஷித்தாலாயிற்று உபமாநமாகப் போராதென்னலாவது; பின்னையும், ஆஶ்சர்யபூதனானவனுடைய திருக்குழலென்னுமித்தனை. இத்தனையிதிவெப்பானது அவனதுஸ்வாபாவிகமான திருக்குழலுக்கு ஸத்ருஶமோ (விள்கின்றவித்யாதி) அலராநிற்பதாய் அழகியதாய்க்குளிர்ந்திருந்துள்ள திருத்துழாயில் பரிமளமானதுமுகத்திலேயலையெறியவாயிற்றுவந்துதோற்றுகிறது; திருக்குழலிலழகுக்கு, திருத்துழாயில் பரிமளமானது தூசியேறி நடக்கவாயிற்று வந்துபாதகமாகிறது.

(என்னுயிரைக்கள்கின்றவாறறியீர்) கள்கின்ற - களவுகாண்கிற; நீங்களெல்லாருமஸந்நிதியிருக்கச்செய்தே, என்னொருத்தியுடைய வாத்மவஸ்துவை வந்துகளவுகாண்கிற ப்ரகாரமறிகிறிலீகோள். களவுகாண்கையாவதென்னென்னில்; இத்தலையிலிசைவின்றிக்கே யிருக்கக்கைக்கொள்ளுகை, அவனிறே களவுகாண்கிறான் இத்தலையத்தலையானபடி; அப்ராப்தனையபஹரித்தால் பரிஹரிக்கலாம்; ப்ராப்தனானவனபஹரித்தால் பரிஹாரமில்லையிறே. இதுகைப்பட்டவாறே ஒருப்ரமாணங்கொடு நின்று வழக்குப்பேசத்தொடங்குமிறே அவன்.

(அன்னைமீர்கழறாநிற்றிரே) நீங்களபிபவித்து, இக்களவுக்கு நானும் பெருநிலைநின்றுகூட்டுப்பட்டேனாகப்பொடியா நின்றிகோள்; இந்தவுருவுவெளிப்பாட்டைப் பரிஹரிக்கலாகவுங் வேண்டாவோ. ஒரு நியந்த்ரு நியாம்யபாவமேபோ வேண்டுவது பொடிகைக்கு. (கழறுகை - அபிபவித்து வார்த்தைசொல்லுகை கழறல்-கோவச்சொல்லுதல்). (க)

பத்தாம்பாட்டு

நிற்றிமுற்றத்துளென்று நெரித்தகையராய் * என்னைநீர்
சுற்றியும்சூழ்ந்தும்வைதிர் சுடர்ச்சோதிமணிநிறமாய் *
முற்றஇம்மூவுலகும் விரிகின்றசுடர்முடிக்கே *
ஒற்றுமைகொண்டதுஉள்ளம் அன்னைமீர்! நசையென்நுங்கட்கே ?

ப.—அநந்தரம், ஸர்வாதிகத்வ ஸூசகமான திருவபிஷேகத்திலே தன்னெஞ்சு ஒன்றுபட்டபடியைச்சொல்லுகிறாள்.

(இ-ள்.) உள்ளில்நின்றும், முற்றத்துள் - முற்றத்திலே, நிற்றி - நிற்றி, என்று - என்று, நெரித்த - நெரித்த, கையராய் - கையையுடையீராய்க்கொண்டு, என்னை - என்னை, நீர் - நீங்கள், சுற்றியும் - சுற்றிக்கொண்டு நின்று, சூழ்ந்தும் - பழியாலே சூழ்ச்சிசெய்தும், வைதிர்- வையாநின்றீகோள்; சுடர் - சுடராய்ப்பரம்பின, சோதி - ஒளியையுடைத்தான, மணி- ரத்நங்களினுடைய - நிறமாய் - நிறத்தை யுடைத்தாய்க்கொண்டு, இம்மூவுலகு - த்ரிவிதசேதநாசேதநாத்மகமானலோகத்தை, முற்றவும் - அடங்கலும், விரிகின்ற - வ்யாபிக்கிற, சுடர் - தேஜஸ்ஸையுடைத்தான, முடிக்கே - திருவபிஷேகத்திலே, உள்ளம் - நெஞ்சானது, ஒற்றுமைக்கொண்டது - ஒருமைப்பட்டது, அன்னைமீர் - அன்னைமீர், நுங்கட்கு - வைகிறவுங்களுக்கு, நசை - என்பக்கல்நசைபண்ணி, என் - என்னப்ரயோஜநமுண்டு. (௧௦)

ஆறு ;—(நிற்றிமுற்றத்துள்) தன்னகத்துமுற்றத்தே நின்றுயென்று அயுக்தஞ்செய்தேனாகக்கொண்டு, என்னுடைய தசையையறிந்தநீங்கள், விடாதேசுற்றியும் சூழ்ந்தும் வையாநின்றீகோள் ; நிரவதிக தேஜஸ்ஸான ரத்நங்களுடைய வொளியையுடைத்தாய்க்கொண்டு, ஸமஸ்தலோகங்களையு மோரிடமொழியாமே வ்யாபிக்கிற தேஜஸ்ஸையுடைய திருவபிஷேகத்தில் என்னுடைய ஹ்ருதயமகப்பட்டது ; இனி யென்னைப்பொடிந்து அன்னைமீருங்களுக்கொரு ப்ரயோஜநமில்லை யென்கிறாள். (௰)

ஈடு ; அவ;—"ஶ்ரிய:பதியுங்கூட நம்மை ஸிரஸாவஹித்துப் போருகிறது இவ்வவஸ்தைக்கன்றோ" என்று திருவபிஷேகத்திலழகுவந்துநலிகிறபடியைச்சொல்லுகிறாள்.

(நிற்றியித்யாதி) இத்தனையும் நசையறச்சொல்லாவிடில் அவர்கள் விடார்கள்போலே; (நிற்றிமுற்றத்துளென்று) முற்றத்துள்நிற்றி

யென்பர்கள். படுக்கையினின்று மெழுந்திருந்துஎல்லாரும் காணும்படிமுற்றத்திலே நிற்கைக்கு மேற்படப்பழியில்லையாக நினைத்திராநின்றார்கள். (ந) " யாநஸம்ஸ்ரா - யாஸம்ஸ்யா " இத்யாதி (க)"ராஜமார்க்ககதாஜநா: - ராஜமார்க்ககதாஜநா:" என்றவோபாதியாக நினைத்திராநின்றார்களாயிற்று இத்தை முற்றத்திலே புறப்பட்டுநிற்கும்படிபிறந்தஸாஹஸத்துக்கு நெரித்தகையராய்.

(என்னைநீர்) உருவு வெளிப்பாடு புறப்பட விடுவித்து நிறுத்த நிற்கிறவென்னை, இத்தால் நலிவுவாராதபடி பாக்யம்பண்ணின நீங்கள். அவன்புறப்பட விடுவித்துநிறுத்த நிற்கிறவென்னை; இது கொண்டுகாரியமில்லாதநீங்கள். (சுற்றியும் சூழ்ந்தும்வைதிர்) "இவளைத்தப்புவித்தேமாம்விரகென்" என்றுநெஞ்சிலே விசாரிக்கையும், கால்வாங்கிப்போரநிற்கவு மொண்ணாதபடி சூழநிற்கையுமென்னுதல். அன்றிக்கே, போயும்வந்தும் பொடியாநின்றீகோளென்னுதல்.

(சுடர்ச்சோதியித்யாதி) தப்புவிக்கைக்கு வார்த்தைசொல்லுகிறவிவர்களைப்போலே யொருப்ரதேசத்திலல்லவிறே அகப்படுத்தி நலியக்கோலுகிறவது நிற்கும்படி. மிக்கபுகரையுடைத்தான ரத்நத்தினுடைய தேஜஸ்ஸையுடைத்தாய்க்கொண்டு கண்டவிடமெங்கும் பரம்பாநின்றுள்ள தேஜஸ்ஸையுடைய திருவபிஷேகத்திலே யொருமைப்பட்டது என்னுடைய ஹ்ருதயமென்னுதல்; அங்கே விலைசெய்து கொடுத்ததென்னுதல்.

(அன்னைமீர்நசையென்னுங்கட்கே) தாய்மாரான நீங்களென் பக்கல் நசையறவமையும்; தாய்மாராவார், பெற்றுவளர்த்து போகயோக்யதை பிறந்தால் பின்பு கைப்பிடித்தவன்கையிலே காட்டிக்கொடுத்துக் கடக்க நிற்குமத்தனைபோக்கி, பொடியக்கடவர்களோ. ப்ராப்தயௌவனைகளானாலும், பெற்றப்ராப்திகொண்டு ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்கக்கடவதோ. (கo)

பதினொன்றாம்பாட்டு

கட்கரியபிரமன்சிவன் இந்திரனென்று இவர்க்கும் *
கட்கரியகண்ணனைக் குருகூர்ச்சடகோபன் சொன்ன *
உட்குடையாயிரத்துள் இவையுமோருபத்தும்வல்லார் *
உட்குடைவானவரோடு உடனாய்என்றும்மாயாரே. (கக)

(க) ரா-அயோ-நந-எ.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸித்தவர்கள், நித்யஸூரிகளோடே நித்யஸம்ஶ்லிஷ்டராவரென்று பலத்தையருளிச்செய்கிறார்

(இ-ள்) கட்கு - மநுஷ்யாதிகள்கண்ணுக்கு; அரிய - அரியரான, பிரமன் சிவ னிந்திரன் - ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகள், என்று - என்றுசொல்லப்பட்ட, இவர் - இவர்கள், கட்கும் - கண்ணுக்கும், அரிய - காணவரியனை, கண்ணனை - க்ருஷ்ணனை, குருகூர்ச்சடகோபன் - உருவுவெளிப்பாடாம்படி மாநஸாநுபவம்பண்ணினவாழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், உட்கு - ஸ்வார்த்தமான பகவத்ஸ்வரூபரூபகுணாதிகளுடைய ப்ரதிபாதநத்தில் ஶக்தியை, உடை - உடைத்தான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், ஒரு - பகவத்ஸௌந்தர்யாதிஶய ப்ரதிபாதகத்வத்தாலே அத்விதீயமான, இவையும் பத்தும் - இவைபத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், உட்குடை - நிரந்தரபகவதநுபவஶக்தியுக்தரான, வானவரோடு - பரமபதவாஸிகளோடே, என்றும் - ஸர்வகாலமும், உடனாய் - ஸமவேதராய், மாயார் - ஸம்ஸாரஸம்பந்த ரூபமான ஸ்வரூபவிநாஶமற்று வர்த்திப்பர்கள். உட்கு - மிடுக்கு.

இதுவும் - கலித்துறை. (கக)

ஆறு ;—(கட்கரிய) மநுஷ்யருடைய விந்த்ரியங்களுக்கு விஷயமன்றிக்கேயிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் கண்ணாற்காண வரியனை க்ருஷ்ணனைக்குருகூர்ச்சடகோபன் சொன்ன (உட்குடையாயிரம்) வாச்யத்தை வஶிக்கவல்ல ஶக்தியோகத்தையுடைய வாயிரத்தி லித்திருவாய்மொழி வல்லார் பகவத்குணசேஷ்டிதாதிகளைப் பூர்ணமாகவநுபவிக்கவல்ல * அயர்வறுமமரர்களோடே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணப்பெறுவர்களென்கிறார். (கக)

ஈடு ;—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யஸித்தவர்கள், பகவத்விஶ்லேஷத்தால் க்லேஶப்படாதே, நித்யஸூரிகளோடேகூடி நித்யாநுபவம்பண்ணப்பெறுவ ரென்கிறார்.

(கட்கரியவித்யாதி) மநுஷ்யருடையகண்ணுக் கவிஷயமாம்படியிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கும் கண்ணுக்கவிஷயமாம்படி யிருக்கிற க்ருஷ்ணனை. ப்ரஹ்மாதிகள் கண்ணுக்கவிஷயமாம்படி யிருக்கிற க்ருஷ்ணன் மறக்கவொண்ணாதபடி உருவு வெளிப்பாடாய்த்தோன்ற அத்தாலே நலிவுபட்டு, போனபோனவிடமெங்கும் சூழ்ந்துகொண்ட தென்னும்படியாயிற்று இவர்க்கு ப்ரகாஶித்தபடி. அவர்கள்

கண்ணுக்கரிய னுைப்போலேயாயிற்று இவர்கண்ணுக்கு (க) "சூழவுந்தாமரை நாண்மலர்போல்வந்துதோன்றும்" என்னும்படி ப்ரகாசித்தபடி.

(குருகூர்ச்சடகோபன்சொன்ன) ஆழ்வாரருளிச்செய்த (உட்குடையாயிரத்துளித்யாதி) ப்ரதிபாத்யார்த்தத்தையுள்ளபடி ப்ரதிபாதிக்கவல்ல ஶக்தியையுடைத்தான வாயிரத்திலும் வைத்துக்கொண்டு, இப்பத்தையு மப்யஸிக்கவல்லார்கள், நித்யாநுபவம்பண்ணுநின்றாலும் மேன்மேலன பகவத்குணங்களை பூர்ணமாகவநுபவிக்கைக்கிடான போக்யதையுடைய நித்யஸூரிகளோடொரு கோவையாய்.

(என்றும்மாயாரே) மாய்கையு முருவுவெளிப்பாடும் பர்யாயமென்றிருக்கிறார்காணும். மாயார் - பிரியார். * அடியார்கள் குழாங்களை - உடன் கூடி நித்யாநுபவம்பண்ணப்பெறுவர்கள். பகவதபசார பாகவதாபசாரங்களுண்டானால் வருமதுபோலன்றே, பகவதங்கீகாரமுண்டாய் அது நிலைநில்லாமையால் படும்க்லேஶம். ப்ராஸங்கோத்தாப்போலே கண்ணைக்கண்கோத்திற்கிடக்கிறது. (சூழவும்) இதெல்லாம் அவன் கழுத்துக்குமேலேபடுத்தின க்லேஶமிறே. (கக)

ஏழாம்பத்து - ஏழாந்திருவாய்மொழி முற்றிற்று.

(க) ஏ-எ-க.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாம்பத்து

எட்டாந்திருவாய்மொழி

மாயா - ப்ரவேஶங்கள்.

ஆறு ;—கீழ் உருவு வெளிப்பாடென்றறிந்து நோவுபடச்செய்தே தன்னைக்காட்டி ஆர்த்தி தீராதொழிகிறபடியையும், அங்ஙனே யிருக்க முடியாதபடி நம்மை நடத்துகிறபடியையுங்கண்டு "இவ்வாஶ்சர்ய மிருந்தபடியென்" என்று எம்பெருமானுக்கறிவிக்க; அவனும் "இவ்வளவோவென்படி" என்று தன்னுடைய விசித்ர விபூதித்வத்தைக்காட்டி யருளக்கண்டு, "இதிருந்தபடியென்" என்று விஸ்மிதராகிறார். *

ப:—எட்டாந்திருவாய்மொழியில், கீழ் - உருவுவெளிப்பாடான ப்ரகாஶம் நடக்கச்செய்தே அநுபவம் பெறாதபடி நிரோதித்து ஆர்த்தியை அதிஶயிப்பித்த வைசித்ர்யங்கண்டவர் ; இந்த விசித்ரஶக்தியோகத்துக்கு ஹேதுவானவனுடைய வாஶ்சர்யமாயுள்ள வர்த்தித்வ ரூபத்தையும், அபிமதஸித்தியால்வந்த வாதிக்யத்தையும், அம்மேன்மைகிடக்கச்செய்தே யுண்டான வாஶ்ரிதபவ்யதையையும், உத்துங்கபவ்யதைகளிரண்டுக்கும் ஸூசகமான புண்டரீகாக்ஷத்வத்தையும், அநந்யப்ரயோஜநர்க்கதிசயித போக்யனாம்படியையும், சித்தப்ராமகமான சேஷ்டிதாதிகளையும், கர்மாத்யநுரூபமான து:கஜநகத்வத்தையும், அதிஶயிதஜ்ஞாநர்க்குமவபோதநார்ஹதையையும், துரவபோதத்வ ஹேதுவான ஸௌக்ஷ்ம்யாதிஶயத்தையும், ஸூத்ருட ப்ரமாணஸித்தமான ஸூக்ஷ்ம சிதசித்ப்ராகாரத்வத்தையும் அநுஸந்தித்து; ஏவம் ப்ரகாரவிஶிஷ்டனான நீ, ஒன்றுக்கொன்றொவ்வாத விசித்ராகாரமான ஜகத்தை விபூதியாகக்கொண்டு நிற்கிற வாஶ்சர்ய ஶக்தியோக மிருந்தபடி யென்னென்று புத்தி ஸங்க்ருஹீதனான வீஶ்வரனுக்கு விண்ணப்பஞ்செய்து, தம்முடைய விரோதி நிவ்ருத்தியில் பணியில்லாமையை நினைத்து ஸந்துஷ்டராகிறார். *

ஈடு;—கீழ்த்திருவாய்மொழி - உருவுவெளிப்பாடாய்ச்சென்றது. கைக்கெட்டாமையாலே உருவுவெளிப்பாடென்றறிவரிறே. இனி, ஸர்வேஶ்வரன் தான் நினைத்தகாரியம் செய்து தலைக்கட்டிக்கொள்ளுமளவும் நம்மையிங்கே வைக்கிறானென்னுமிடமுமறிவ

ரிறே; ஆகிலும், அவனை யொழிய தரிக்கமாட்டாதவராகையாலே இத்தை நினைத்தாறியிருக்கவும் மாட்டாரே. "விரோதியைப் போக்கித் தரவேணும்" என்று இவரர்த்தித்தாலும் அவனும் இவரைக்கொண்டு தான் நினைத்த ப்ரபந்தங்கள் தலைக்கட்டிக்கொள்ளுமளவு மிவரபேக்ஷிதம் செய்யானே. இவரபேக்ஷிதம் செய்யாதிருக்கச்செய்தேயும், இவரை யிங்கேவைத்து ஜீவிப்பிக்கு முபாயங்களுமறிந்திருக்குமே.

ஆகையாலே, சில பதார்த்தங்களை யுயிர்போகாதபடி யொன்றிலே கோத்திட்டு வைக்குமாபோலே, முடியவுமொட்டாதே ஜீவிக்கவு மொட்டாதே நடுவேயிருத்தி நலிகிறபடியை யநுஸந்தித்து, "எனக்கு இதில் பொருந்தாமை யுண்டாயிருக்கச்செய்தேயும் இஸ்ஸம்ஸாரத்திலே வைத்து என்னை நடத்திக்கொடு போருகிற விவ்வாஸ்சர்யத்தை யெனக்கருளிச்செய்யவேணும்" என்ன, ஒன்றைக்கேட்க வேறேசிலவற்றைச்சொல்லுவாரைப்போலே, 'இதொன்றுங்கண்டோ நீராஸ்சர்யப்படுகிறது, இவ்வளவல்லாத நம்முடைய விசித்ரஜகதாகாரத்தையைப்பாரீர்" என்று தன்னுடைய வாஸ்சர்ய ஜகதாகாரத்தையைக் காட்டிக்கொடுக்க; அதுதானும் தான்நினைத்ததன்றேயாகிலும் அவன்காட்டிக்கொடுத்ததாகையாலே அதுவு மிவர்க்கு ப்ரீதிஹேதுவாயிருக்குமிறே. ஆக, இவரொன்றைக்கேட்க அவனநேகாஸ்சர்யங்களைக் காட்டிப் பரிஹரித்தான்.

அக்ரூரன், யமுனையிலேபுக்கு முழுகினவாறே பிள்ளைகளை நீருக்குள்ளே கண்டஞ்சாக்கரையிலே பார்த்தான், அங்கேயுங்கண்டான்; கண்டு, (க) ,, [illegible] - ஜகதேதந் மஹாஸ்சர்யம்ரூபம்யஸ்யமஹாத்மந꞉ । தேநாஸ்சர்யவரேணாஹம் பவதாக்ருஷ்ணஸங்கத꞉" என்றுகொண்டு அவனாஸ்சர்யப்பட்டாப்போலே, இவரும் அவனுடைய விசித்ர ஜகதாகாரத்தையை யநுஸந்தித்து விஸ்மிதராகிறார். *

(க) வி-பு-ரு-கஅ-எ.

முதற்பாட்டு

மாயா ! வாமனனே ! மதுசூதா ! நீயருளாய் *
தீயாய்நீராய்நிலனாய் விசும்பாய்க்காலாய் *
தாயாய்தந்தையாய்மக்களாய் மற்றுமாய் முற்றுமாய் *
நீயாய்நீநின்றவாறு இவையென்னநியாயங்களே. (க)

ப --முதற்பாட்டில், காரணரூபமாயும் கார்யரூபமாயு மிருக்கிற ஸகல பதார்த்தங்களையும் விபூதியாக வுடையையாயிருக்கிற ப்ரகார மென்னாயிருக்கிறது, இத்தை ஆஸ்சர்ய ரூபனான நீ யருளிச்செய்யவேணுமென்கிறார்.

(இ - ள்.) மாயா - ஸ்வாபாவிகமான வாஸ்சர்யஸக்தியை யுடையையாய் வாமனனே - அதுக்கநுரூபமாக, மஹாமேருவைமஞ்சாடியாகச் சுருக்கினாப் போலே வடிவைச்சிறுக விட்டு இரந்த வாமனனாய், மதுசூதா-உன்னுடைய ஸக்திவைசித்ர்யத்தில் ஸந்தேஹித்தாருடைய ஸம்ஸயத்தை, மதுவைநிரஸித்தாப் போலே நிரஸித்துக்கொடுக்கு மவனே, நீ - நீயே, அருளாய் - உன் ப்ரகாரத்தை யருளிச்செய்யவேணும், தீநீர்நிலன் விசும்புகால் - அண்டகாரணமான பூதபஞ்சகமும், தாய்தந்தைமக்கள் மற்றும் - அண்டாந்தர்வர்த்திகளில் ஒருவர் செய்த தொருவர் செய்யாதபடியான மாதா பித்ரு புத்ர ப்ரப்ருதிகளும், முற்றும் - தத்ஸம்பந்திகளாயுள்ள ஸமஸ்த பதார்த்தங்களும், ஆய் - நீ யிட்டவழக்காம்படி தத்தத்ப்ரகார விஸிஷ்டனாய்-அவ்வளவே யன்றியே, நீயாய் - அஸாதாரணகாரயுக்தனாய், நீ, நின்ற- நிற்கிற இவையாறு - இப்ப்ரகாரம், என்ன என்ன, நியாயங்கள் - உபபத்தியுக்தங்களா யிருக்கின்றன.

காரணரூப வஸ்துக்களா யிருக்கிறவைதானே கார்யரூபமாகையாலே ஸர்வாத்மகனான தான் தத்கததோஷஸ்பர்ஸமில்லாதபடி வ்யாவ்ருத்தனா யிருக்கையும் ஒருவர்க்கறிய வொண்ணாதபடியாலே யிந்த வேதாந்தரஹஸ்யோபபத்திகளை நீயேயருளிச்செய்யவேணுமென் றாராயிற்று. (க)

ஆறு;—(மாயாவாமனனே) அத்யாஸ்சர்யபூதனாய் ஆஸ்ரிதவிரோதிநிரஸநஸீலனான நீ யென்னைத் தெளிவிக்கவேணும். லோகத்தில், வஹ்நிஜலபூம்யாகாச வாயுக்களையும் தாயையும் தந்தையையும் மக்களையும் மற்றெல்லாரையும் விபூதியாகவுடையையாய், இவற்றோடுபிரியவஸாதாரணாகாரத்தையு முடையையாய்க்கொண்டு நீநின்றபடியென் என்று விஸ்மிதராய் எம்பெருமானைக் கேட்கிறார்.

ஈடு; அவ ;—முதற்பாட்டு; விசித்ரமானகார்ய காரணங்களை யெல்லாம் விபூதியாக வுடையனாயிருக்கிற விருப்பை யநுஸந்தித்து, இவை யென்னபடிகளென்றாஸ்சர்யப்படுகிறார்.

(மாயா) மாயா வென்கிறவித்து இத்திருவாய்மொழிக்காக ஸங்க்ரஹமாயிருக்கிறது. (வாமனனே) மாயா வென்கிற பதத்திற் சொல்லுகிற வாஸ்சர்யத்துக்கு வ்யாப்தி க்ரஹணபூமியாயிருக்கிறது. அன்றேபிறந்து அன்றேவளர்ந்து மஹாபலி பக்கலிலே சென்று அவன் முன்னே நின்று, தான் சொன்னவை யெல்லாம் செய்யவேண்டும்படி வார்த்தை யருளிச்செய்து, சிற்றடியைக்காட்டிப் பெரியவடியாலேயளந்துகொண்டு, இப்படிப்பண்ணின வ்யாபாரங்களையுடைய முன்னேட்டுக்கொண்டு வாமநனே யென்கிறார். (மதுசூதா) ஆஸ்சர்ய சேஷ்டிதங்களுக்கெல்லாம் ஸ்ரீவாமநனைப் போலேயாயிற்று, விரோதிநிரஸநத்துக்கு மதுஸூதநனென்கிறது. (மதுசூதாநீயருளாய்) மதுவாகிறவஸுரனை நிரஸித்தாப்போலே, எனக்கோடுகிற ஸம்ஸாரத்தையும் நீயேபோக்கித் தந்தருளவேணும்.

(தீயாயித்யாதி) கார்யகதமானவைசித்ரி, காரணத்திலேயுமுண்டாயிருக்குமிறே; இனித்தான், ஒன்றின்படியாயிராதிறே மற்றையது. இப்படிவிலக்ஷணமான ப்ரகாரங்களை யுடையவான பூதபஞ்சகங்களுக்கும் நிர்வாஹகனாய். (தாயாயித்யாதி) கார்யவர்க்கத்திலும், தாய்செய்தது தமப்பன் செய்யமாட்டான், தமப்பன் பண்ணுமுபகாரம் புத்ரர்கள் பண்ணமாட்டார்கள், புத்ரர்கள் பண்ணுமுபகாரம் பந்துக்கள் பண்ணமாட்டார்கள். இப்படி ஸர்வவித பந்துக்களுமாய். (முற்றுமாய்) அநுக்தமான ஸம்பந்திகளாயுள்ள ஸகல சேதநா சேதநங்களுக்கும் நிர்வாஹகனானவனே.

(நீயாய்) ஜகத்காரணனாயிருக்குமளவல்லவிறே அஸாதாரணவிக்ரஹயுக்தனாயிருக்குமிருப்பு; இவர்க்குப் பரமபதத்திலே ஸூரிபோக்யனாயிருக்கிற விருப்போடு, ஜகத்காரணனாய் நிற்கிற நிலையோடு வாசியற போக்யனாம்படியிறே யிவர்க்குப்பிறந்த ஜ்ஞாநவைஶத்யம். (நீநின்றவாறு) இப்படி இவை யெல்லாமாய்க்கொண்டு நீநின்றப்ரகாரம். (இவையென்னநியாயங்களே) இவை யென்ன படிகள்தான்.

முதற்றிருவாய்மொழியிலே இவனுடைய வைஶ்வர்யத்தை யநுபவித்திருக்கச்செய்தேயும், இதுக்குமுன்பு கண்டறியாதாப்

போலே புதியரா யநுபவிக்கிறு ராயிற்று. குணாநுபவத்தில் க்ஷண ந்தோறும் புதுமைபிறந்து (க)* அப்பொழுதைக்கப்பொழுதென் னாராவமுதமா யநுபவிக்குமாபோலே யாயிற்று, விபூத்யநுபவத்தி லும் புதியராயநுபவிக்கவல்லபடி (இவையென்னவியாயங்கள் - நீ யருளாய்) இத்தை யருளிச்செய்யவேணும். (உ) "ஏதந்மே ஸம்ஸயம் க்ருஷ்ண சேத்துமர்ஹஸ்யஸேஷத: - த்வதந்ய: ஸம்ஸயஸ்யாஸ்ய ச்சேத்தா நஹ்யுபபத்யதே" என்று அர்ஜுநன் ஸம்ஸயம் தீர்த்தாப்போலே, என்னுடைய ஸம்ஸயத்தையும் தீர்த்தருளவே ணும். (க)

இரண்டாம்பாட்டு

அங்கண்மலர்த்தண்துழாய்முடி அச்சுதனே ! அருளாய் *
திங்களும்ஞாயிறுமாய்ச் செழும்பல்சுடராய் இருளாய் *
பொங்குபொழிமழையாய்ப் புகழாய்ப்பழியாய்பின்னும்நீ *
வெங்கண்வெங்கூற்றமுமாய் இவையென்னவிசித்திரமே (உ)

ப —அநந்தரம், அபிமதஸித்தியால்வந்த பூர்த்தியாலே அத்யுச்ச்ரிதனு யுள்ளநீ, சந்த்ரஸூர்யப்ரமுக ஸகலபதார்த்தங்களையும் விபூதியாக வுடையை யான வைசித்ர்யத்தை யருளிச்செய்யவேணுமென்கிறுர்.

(இ-ள்.) அம் - விலக்ஷணமான, கள் - மதுவையுடைய, மலர் - பூவை யுடைத்தாய், தண் ஸ்ரமஹரமான, துழாய்- திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடி - மயிர்முடியையுடையையாய், அச்சுதனே - ஆர்த்தித்தவஸ்து கைப் புகுந்தவாறே ஸ்வஹித்வபூர்த்தியாலே அப்ரச்யுதஸ்வபாவனானவனே, அரு ளாய் - நீயருளிச்செய்யவேணும், தாபஸீதகரான, திங்களும் - சந்த்ரனும், ஞாயிறுமாய் - ஸூர்யனுமாயும், செழும் - விலக்ஷணமாய், பல் - பலவாயுள்ள, சுடராய் - தாராக்ரஹநக்ஷத்ரங்களான தேஜ:பதார்த்தங்களாயும், இருளாய் - ப்ராணிகளுக்கு பதார்த்ததர்ஸநம்பண்ணவொண்ணுதவிருளாய், பொங்கு - அந்தப்ராணிகளுடைய வபிவ்ருத்திஹேதுவாய்க்கொண்டு உச்ச்ரிதமாய், பொ ழி - சொரியும், மழையாய் - மழையாய், புகழாய் - அத்தாலுண்டான ஸஸ்யா திபதார்த்தஸம்பத்தியாலே ஸம்பாத்யமானபுகழாய், பழியாய், அவற்றினு டைய பாத்ரவ்யயாதி வ்யதிரேகத்தால்வரும் பழியாய் - அப்பழிமிகைத்தகால

(க) உ-டு-௪ (உ) கீதை-௬-௩௯.

த்து, பின்னும் - பின்னையும், வெங்கண் - அவர்களை யுபஸம்ஹரிக்கைக்கடியாய் க்ரூரேக்ஷணனாய், வெம் - க்ரூரஸ்வபாவனுமான, கூற்றமுமாய் - ம்ருத்யுவாயும்நிற்கிற, இவை - இந்தப்ரகாரங்கள், என்ன - என்ன, விசித்திரம் - வைசித்ர்யங்கள். (உ)

ஆறு ;—(அங்கண்மலர்) அழகிய மதுவோடுகூடின பூவையுடையதிருத்துழாயைத் திருமுடியிலே யுடையையாய், இவ்வழகுக் கொருநாளு மொருச்யுதியில்லாதவனே ; திங்களும் ஞாயிறுமாய், அழகியதாய்ப் பலவகைப்பட்ட நக்ஷத்ரங்களுமாய், தமஸ்ஸுமாய், பொங்குபொழிமழையாய், புகழாய், பழியாய், பின்னும் நீ, வெவ்விய கண்ணையுடைய வெவ்விய ம்ருத்யுவுமான படிகளென்ன வைசித்ரிதானென்கிறார். (உ)

ஈடு; அவ ; -இரண்டாம்பாட்டு. சந்த்ர ஸூர்யாதி பதார்த்தங்களுடைய தனக்கு விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

(அங்கண்மலரித்யாதி) அழகியதாய் மதுவோடேகூடின மலரையுடைத்தாய்க் குளிர்ந்திருந்துள்ள திருத்துழாயைத் திருமுடியிலே யுடையையாய், அந்த வொப்பனையால் வந்தவழகுக் கொருநாளு மொருவேறுபாடின்றிக்கே யென்றுமொக்க நித்யமாம்படியிருக்கிறவனே. வைத்தவளையத்தோபாதியும் போக்யமாகிறதாயிற்று விபூத்யநுபவமிவர்க்கு. "கீழ்த்திருவாய்மொழியில் 'விள்கின்றபூந்தண்டுழாய்விரைநாறவந்து' என்று சொன்னத்தை ஸ்மரிக்கிறார்" என்று பிள்ளான்பணிக்கும். * மாயன்குழல்விள்கின்ற பூந்தண்டுழா யுருவுவெளிப்பாடாய் பாதகமானைதவிர்ந்து, ஸாக்ஷாத்கரித் தநுபவிக்கிறாரிறே.

(திங்களும்ஞாயிறுமாய்) (க) "ஸூர்யாம்ஶுஜநிதம் தாபம் நிர்வாபயதி ரஶ்மிபி: - ஸூர்யாம்ஶுஜநிதம்தாபம் நிர்யேதாபதிர்ஶமம்" என்கிறபடியே, ஆதித்யகிரணங்களால் பிறந்ததாபமெல்லாம்போம்படி சேதநர்க்கு ஆப்யாயநத்தைப்பண்ணக்கடவனை சந்த்ரனும், அவனால்வந்த நீர்க்களிப்பை யறுத்துக்கொடுக்குமாதித்யனுமாய். (செழும்பல்சுடராய்)' சேதநர்க்குவரும் வ்யாபா

(க) வி-பு-ரு-கo-கரு.

லாபங்களையறிகைக்கீடான ஸஞ்சாரத்தையுடைத்தான நக்ஷத்ரங்களுமாய். (இருளாய்) சேதநர்க்குபோகயோக்யமானவிருளாய். (பொங்குபொழிமழையாய்) ஸகலப்ராணிகளுக்கும் ஜீவிக்கலாம்படி ஸஸ்யங்களையுண்டாக்கும் வர்ஷமுமாய். (புகழாய்) எல்லாருமாசைப்படும்யஶஸ்ஸாய். (பழியாய்) எல்லார்க்கும் வருந்திப்பரிஹரிக்கவேண்டும்பழியாய். (பின்னும்) அதுக்குமேலே.

(வெங்கண்வெங்கூற்றமுமாய்) (க) "வ்யாஹாரஸங்காரீ உக்ரேணகாலதேஹேந ருத்ரேண ஸர்வபூதஹ்ருதா ... புராபூத்வா ம்ருத்யுர்த்தாந்தஸ்ஸர்வபூதஹ்ருதேரத: । நக்ரோதவஶமாபந்ந: ப்ரக்ருதிம் ஹாதுமர்ஹஸி" என்கிறபடியே, இவை அதிப்ரவ்ருத்தமானவாறே குளிரநோக்குமது தவிர்ந்து, வெவ்விதானநோக்கையுடையையாய். (வெங்கூற்றம்) அந்தகன் "தண்ணீர்" என்னும்படி வெவ்வியகூற்றமுமாய். ஸம்ஹாரத்தில் ருத்ராந்தர்யாமித்வத்தைச்சொன்னபடி (இவையென்னவிசித்திரமே) இவையென்ன வைசித்ரிதான்-அருளாய். (உ)

மூன்றாம்பாட்டு.

சித்திரத்தேர்வலவா ! திருச்சக்கரத்தாய் ! அருளாய் *
எத்தனையோருகமும் அவையாய்அவற்றுள்இயலும் *
ஒத்தவொண்பல்பொருள்கள் உலப்பில்லனவாய்வியவாய் *
வித்தகத்தாய் நிற்றிநீ இவையென்னவிடமங்களே. (௩)

ப.—அநந்தரம், உத்துங்களுய்வைத்து ஆஶ்ரிதபாதந்த்ரனுயிருக்கிற நீ, காலோபலக்ஷித ஸகலபதார்த்தங்களுமாயிருக்க, அவற்றோடு தொற்றற்றுநிற்கிற வைஷம்யத்தை யருளிச்செய்யவேணுமென்கிறார்.

(இ-ள்.) அவஸ்தாநுரூபமாக, சித்திரம் - விசித்ரமாம்படி, தேர் - தேரை, வலவா - நடத்தவல்லனாய், திருச்சக்கரத்தாய் - அந்த வைசித்ர்யம்போலே பகலையிரவாக்கும்பரிகரமான திருவாழியை யுடையவனே, அருளாய் - நீ யருளிச்செய்யவேணும், எத்தனை - க்ருத த்ரேதா த்வாபர கலிரூபமான வெல்லாவகையையு முடைத்தாய், ஓர் - ஒன்றோடொன்றொவ்வாதபடி அத்

(க) பா-ஆர-சுடு-ச-

விதீயமான, உகமும் - யுகங்களுக்கு நிர்வாஹகனாய், அவையாய் - அந்த கால கார்யமாய்க்கொண்டு, அவற்றுள் — அதுக்குள்ளே, இயலும் - நடப்பதாய், ஒத்த - ஜ்ஞாநைகாகாரத்யாலொத்து, ஒண் - ஸ்வயம்ப்ரகாஶத்வ ஜ்ஞாத்ருத்வாதி குணவைலக்ஷண்யத்தையுடைத்தாய், பல் - (க) „ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி — ஏகோ பஹூநாம்” என்கிற மர்யாதையாலே ஸ்வரூபபேதத்தையுடைத்தாய்; உலப்பில்லன - அஸங்க்யாதமான, பொருள்கள் - சிதசித்பதார்த்தங்களை, ஆய் - ப்ரகாரமாக வுடையையாய், வியவு - அவற்றினுடைய ஸாமயாகார திரோதாயகமான தேவமநுஷ்யாத்யாகாரங்களாலுண்டான வேறுபாட்டுக்கு, ஆய் - நிர்வாஹகனாய், இப்படியிருக்கச்செய்தே, வித்தகத்தால் (உ) „நசீதிதாநி ஸம்ஹிதாநி, மத்ஸ்த்திதாநிபூதாநி,” “நவாஹம் தேஷ்வவஸ்த்தித:— நசாஹந்தேஷ்வவஸ்த்தித:” என்கிறகணக்கிலே தத்கததோஷாஸம்ஸ்ப்ருஷ்டனான விஸ்மயநீயதையோடே, நீ - நீ, நின்றி - நில்லாநின்றாய், இவை - இவை, என்ன - என்ன, விடமங்கள் - வைலக்ஷண்யங்கள். (ரு)

ஆறு ;— (சித்திரத்தேர்வலவா) ஸாரத்யம்பண்ணும்போது, அத்யாஶ்சர்யமாம்படி தேரைநடத்தவல்லவனே; ஜயத்ரதவதத்தின்று பகலை யிரவாக்கின வத்யாஶ்சர்யமான திருவாழியையுடையவனே; க்ருதாதிகளான வநேகயுகங்களையும், அவ்வவகாலங்களிலுண்டாயோரோவகையாலே ஒத்தும், ஓரோவகையாலேவேறுபட்டும், தேவமநுஷ்யாதி ரூபேணபலவாய், ப்ரதிவ்யக்த்யஸங்க்யாதமானபதார்த்தங்களையும் விபூதியாகவுடையையாய், இப்படி விஸ்மயநீயனாய் நில்லாநின்றாய், இவையென்னசேராச்சேர்த்திகளென்கிறார்; (ரு)

ஈடு ; அவ ;—மூன்றாம்பாட்டு. க்ருத த்ரேதாதியுகங்களையும், அவ்வவகாலங்களிலுண்டான தேவமநுஷ்யாதிகளையும் விபூதியாக வுடையவனென்கிறார்.

(சித்திரத்தேர்வலவா) விசித்ரமாம்படியாகத்தேரைநடத்தவல்லவனே. வைசித்ரியாவது - த்ரோணன் கையுமணியும் வகுத்து வாசலைப்பற்றிநிற்க, அவனைவளைந்து அவனுக்கவ்வருகே தேரைக் கொடுபோய்நிறுத்தி அவனுக்கு வ்யாபரிக்கைக்கிட மறுத்தானாயிற்று. பீஷ்மன்கையிலம்பு தூரப்போய்விழும், அர்ஜுநன் கையிலம்பு இவ்வருகேவிழும்; ஆகையாலே, அவனம்புவிடப்புக்கவாறே

(க) சா-உ-ஞ (உ) கீதை-கூ-ச

தேரைப் பின்னே சுழலக்கொடுபோயும், இவனம்புவிடப்புக்கவாறே தேரைக்கிட்ட நிறுத்தியும் இப்படிதேரை நடத்தும்படியைப் பற்ற - சித்திரத்தேர்வலவாவென்கிறது. (திருச்சக்கரத்தாய்) பகலையிரவாக்கும் பரிகரத்தையுடையவனே.

(எத்தனையோருகமுமவையாய்) க்ருதாதியுகங்களுக்கெல்லாம் நிர்வாஹகனாய், (அவற்றுள்ளியலும்) அவற்றுக்குள்ளே வர்த்திக்கிற. (ஒத்தவித்யாதி) (ஒத்திருப்பதுமாய் - வியவாயிருப்பதுமான - ஒண்பல்பொருள்களுலப்பில்லனவாய்) ஓராகாரத்தாலே யொத்தும், ஆகாராந்தரத்தாலே வேறுபட்டுமிருப்பனவுமாய், விலக்ஷணமுமான பலவகைப்பட்ட பதார்த்தங்களநேகங்களை யுடையையாய். தேவமநுஷ்யாதி ஜாதியாலே யொத்தும், வ்யக்திபேதத்தாலே வேறுபட்டும். ஸகலாத்மாக்களும் ஜ்ஞாநைகாகாரதயா ஒத்திருக்கச் செய்தேயும், அஹம்த்வமாதிபேதத்தாலே பிந்நராயிருப்பர்களிறே. (வித்தகத்தாய்நிற்றிநீ) இப்படி விஸ்மயநீயனாய்க்கொண்டு நில்லாநின்றாய் நீ.

(இவையென்னவிடமங்களே) இவையென்ன சேராச் சேர்த்தியான செயல்கள்தான். (௩)

நான்காம்பாட்டு.

கள்ளவிழ்தாமரைக்கண் கண்ணனே! எனக்குஒன்றுஅருளாய் *
உள்ளதும்இல்லதுமாய் உலப்பில்லனவாய்வியவா ய்*
வெள்ளத்தடங்கடலுள் விடநாகணைமேல்மருவி *
உள்ளப்பல்யோகுசெய்தி இவையென்ன உபாயங்களே. (௪)

ப.—அநந்தரம், பரத்வ ஸௌலப்யரூபமான போக்யதைதோன்றும்படி புண்டரீகாக்ஷனான நீ, நித்யாநித்ய ஸமஸ்த பதார்த்தங்களையும் ப்ரகாரமாகவுடையையாய், அவற்றினுடைய ரக்ஷண சிந்தை பண்ணுகிற வுபாயமிருக்கிறபடி யென்னென்கிறார்.

(இ-ள்.) கள் - மதுவை, அவிழ் - மலருகிற, தாமரை - செவ்வித்தாமரைப் பூப்போலேயிருக்கிற, கண் - திருக்கண்களையுடையனான, கண்ணனே - க்ருஷ்ணனே, எனக்கு, நீ நினைக்கிற ரக்ஷணோபாயங்களின்னதென்று, ஒன்று - ஒன்றை, அருளாய் - அருளிச்செய்யவேணும், உள்ளதும் -

நித்யமாகையாலே யென்றுமுள்ளதாய், இல்லதுமாய் - அவஸ்த்தாந்தர பாக்காகையாலே இல்லாமையையுடைத்தாய், உலப்பில்லனவாய் - அஸங்க்யாதமாய், வியவாய் - அவாந்தரமான வேறுபாட்டையுடைத்தாயிருக்கிற பதார்த்தங்களை ப்ரகாரமாகவுடையையாய்; இந்தஸகல சேதநாசேதநங்களையும் ரக்ஷிக்கைக்காக, வெள்ளம் - பூர்ணமாய், தடம் - இடமுடைத்தான, கடலுள் - க்ஷீரார்ணவத்திலே, விடம் - விரோதிகளுக்கு கநபியவஹியுமம்படி விஷத்தையுமிழுகிற, நாகணைமேல்- திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே, மருவி-மேவி, உள்ளம் - திருவுள்ளத்திலே பல் - பஹுவிதமான, யோகு - ரக்ஷணயோகங்களை, செய்தி - சிந்தியாநின்றாய், இவை - இவை, என்ன - என்ன, உபாயங்கள் - உபாயங்களாயிருக்கின்றன.

அவதாரணோபாயமோ, அநிஷ்டநிவ்ருத்த்யுபாயமோ, அபிமத ப்ராபணோபாயமோ ஆஸ்ரிதஸம்ஸ்லேஷோபாயமோ, *ஆவர்ஜநோபாயமோ வென்றறிகிறிலேன்; ஒன்றை நிஷ்கர்ஷித்தருளிச்செய்யவேணுமென்று கருத்து.

யோகு - உபாயம். (ச)

ஆறு ;— (கள்ளவிழ்) மதுஸ்யந்தியான தாமரைப்போன்ற திருக்கண்களையுடைய கண்ணனே எனக்கொன்றருளிச் செய்யவேணும். நித்யமாயிருக்கையாலே யுண்டென்று சொல்லலாம் சேதநனும், பரிணாமஸ்வபாவமாய்க்கொண்டு ப்ரதிக்ஷணமவஸ்த்தாந்தரபாக்காகையாலே யில்லையென்னலாம் ப்ரக்ருதியுமாய், வெள்ளத்தடங்கடலுள் விடநாகணைமேல் மருவி, திருவுள்ளத்தாலே பலரக்ஷணசிந்தைகளைப் பண்ணுகிற்றி, இவையென்னவிரகுக ளென்கிறார்.

ஈடு ; அவ ;—நான்காம்பாட்டு. லோகத்தில் நித்யாநித்ய பதார்த்தங்களை விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

(கள்ளவிழ்த்யாதி) அப்போதலர்ந்த தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கண்களையுடையனாய் பவ்யனாயிருக்கிறவனே, அவனுடைய திருக்கண்கள்போலே யாயிற்று இவர்க்கு விபூதியுமாகர்ஷகமாயிருக்கிறபடி. அன்றிக்கே, திருக்கண்களொபாதி பாதகமாகாநின்றதாயிற்று விபூத்யநுபவமுமிவர்க்கு. பாதகமாகையாவதென்னென்னில்; " இன்னது " என்று நிஶ்சயிக்கமாட்டாதே ஸம்ஶயித்துப்பட்ட தொரு க்லேஶமுண்டிறே, அதுவும் பாதகமாயிருக்குமிறே. "கீழிற்றிருவாய்மொழியிலே - ' சூழவுந்தாமரை நாண்மலர்

* அவர்ஜநோபாயமோ.

போல்வந்து தோன்றும்' என்றத்தை ஸ்மரிக்கிறார்" என்று பிள்ளான் பணிக்கும் அத்தை ஜீயர்கேட்டருளி, "ஸ்லோகத்திற்ஸ்ரீதியின்படியே இதுவுமாகப்பெற்றதாகில் அழகிது; அங்ஙனன்றிக்கே, இது ரஸாந்தரமா யறிவுண்டானபின்பு ப்ரகரணத்தோடு பொருந்தமாட்டாது" என்றருளிச்செய்தாராம்.

(உள்ளதுமித்யாதி) உலப்பில்லதவாய்க்கொண்டு உள்ளதுமாய் வியவாய்க்கொண்டு இல்லதுமா யிருந்துள்ள சேதநாசேதநங்களுக்கு நிர்வாஹகனாய் (க) "[illegible] - யத்துகாலாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதி வை । பரிணாமாதி ஸம்பூதாம் தத்வஸ்து ந்ருப தச்ச கிம்" என்கிறபடியே, அசித்து நஸ்வரமா யிருக்கையாலே யில்லதென்று சொல்லலாயிருக்கும்; ஆத்மவஸ்து ஏகரூபமாயிருக்கையாலே உள்ளதென்கிறது.

(வெள்ளத்தடங்கடலு ளித்யாதி) திருப்பாற்கடலிலே, ப்ரதிகூலர்க்குக்கிட்டவொண்ணாதபடி விஷத்தை யுமிழாநின்றுள்ள திருவநந்தாழ்வான்மேலே பொருந்தி. (உ) "ஆங்காரவாரமது கேட்டழலுமிழும் - பூங்காரரவணையான்" என்கிறபடியே, அஸ்த்தானே பயஸங்கைபண்ணி யழலுமிழுமவனிறே. (உள்ளப்பல்யோகு செய்தி) திருவுள்ளத்திலே பலரக்ஷண சிந்தைபண்ணாநின்றி. சேதநபேதத்தோபாதியும் போருமாயிற்று அவன் பண்ணும் ரக்ஷணசிந்தையில் பரப்பு.

இப்போதிது ஸ்லோகம் மேலோடுமன்வயிக்கிறபடி யென்னென்னில்; அசித்தாவது நஸ்வரமாய்க்கொண்டு த்யாஜ்யமாயிருக்கும்; ஆத்மவஸ்து ஏகரூபமாய்க்கொண்டு உபாதேயமாயிருக்கும், இவையிரண்டுக்கும் நியந்தாவாயிருக்கு மீஸ்வரன். "இச்சேதநன்றானும் தான் பண்ணிற்றொரு கர்மமும் 'தனக்கு' என்னவொரு ருசியுமாயிருக்கையாலே, இவன், 'தனக்கு' என்னவோரிச்சைபிறக்கிலல்லது நம்மைப்பெற விரகற்றிருந்தது; இவனுக்கோ அதில்லையாயிராநின்றது; இனிச்செய்யும்படியென்" என்று, இவன், (௩) "இந்நின்றநீர்மையினியாமுறாமை" என்றால்செய்யுமத்தை, இவன்

(க) வி-பு-உ-கங-ககூ (உ) ௪-திருவ-௧௦ (௩) திருவி-௧-

தலையிலிசைவின்றிக்கே யிருக்கச்செய்தே, இவன்நம்மைவந்து கிட்டினும் விரகேதோ" என்று, அதுக்குறுப்பாக வுபாயசிந்தை பண்ணிக்கண்வளர்ந்தருளுகிறபடி.

(இவையென்னவுபாயங்களே) சேதநர் பலரானால் அவ்வவருடைய ரக்ஷணங்களும் பலவாயிறேயிருப்பது; அதுக்கீடான வுபாயமுமறியுமே ஸர்வஜ்ஞனுகையாலே. இவையென்னவிரகுகளே. (௪)

ஐந்தாம்பாட்டு.

பாசங்கள்நீக்கி என்னைஉனக்கேஅறக்கொண்டிட்டு * நீ
வாசமலர்த்தண்துழாய்முடி மாயவனே! அருளாய் *
காயமும்சீவனுமாய்க் கழிவாய்ப்பிறப்பாய், பின்னும்நீ *
மாயங்கள்செய்துவைத்தி இவையென்னமயக்குக்களே! (ரு)

ப — அநந்தரம், என்னை யநந்யப்ரயோஜநனும்படி பண்ணு மதிஶயித போக்யதையையுடையநீ, ஶரீராத்மாக்களுடைய ஸம்பந்தமும் உத்பத்திவிநாஶமும் நீயிட்டவழக்காயிருக்க. அதிலே யகப்படுத்திவைக்கிற ப்ரகாரங்களென்ன ப்ரமங்களாயிருக்கின்றனவென்கிறார்.

(இ-ள்) என்னை - த்வதேகஶேஷமாய் த்வதேகாகாங்க்ஷமான ஸ்வரூபத்தையுடையவென்னை, பாசங்கள் - அநநுரூபவிஷயஸங்கங்களை, நீக்கி - கழித்து (க) "தனக்கேயாகவென்னைக்கொள்ளுமீதே" என்னும்படி, உனக்கேயற - த்வதேகப்ரயோஜநனாக, கொண்டிட்டு - அங்கீகரித்துவைத்து, வாசம் - அந்த அநந்யப்ரயோஜநத்வாபாதகமாய் பரிமளப்ரசுரமான மலர் - பூவையுடைய, தண்டுழாய் - செவ்வித்திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடி - மயிர்முடியையுடைய, மாயவனே - ஆஶ்சர்யபோக்யபூதனே, நீ - ரக்ஷகனுமாய் போக்யனுமானநீ, காயமும் - பந்தகஶரீரமும், சீவனும் - பத்தஜீவனும், கழிவு பிறப்பு - இவற்றுக்குவாக்கடவதான விநாஶோத்பத்திகளும், ஆய் - நீயிட்ட வழக்காம்படியாயிருக்க. பின்னும் - பின்னையும், நீ, ஶரீராதிகளிலே ஸக்தனும்படி மாயங்கள் - அவித்யாகர்மவாஸநாருசிகளாகிற வஞ்சநங்களை, செய்து - பண்ணி, வைத்தி - வையாநின்றாய்; இவை - இவை, என்ன - என்ன, மயக்குக்கள் - ப்ராமகவ்யாபாரங்களா யிருக்கின்றன; அருளாய் - அருளிச்செய்ய வேணும். (ரு)

(க) உ-க-அ

ஆறு;—(பாசங்கணீக்கி) ஸுஜாதபரிமளதுளஸீதள பூஷிதயான திருமுடியையுடையையாய், ஆத்யாஶ்சர்யபூதனான நீ, ப்ராக்ருதவிஷய ப்ராவண்யத்தைத் தவிர்த்து த்வதேககாரகனும்படி யென்னைப்பண்ணிவைத்து, பின்னையும் இப்ராக்ருதியிலேயிட்டுவைக்கிற வாஶ்சர்யத்தை யருளிச்செய்யவேணும். ஶரீரஜீவஜந்மமரணாதி நிர்வாஹகனாய், அவித்யாதிகளாகிற வஞ்சநங்களைப்பண்ணி வையாநின்றாய்; இவையென்ன தார்ஜ்ஜேப ப்ரவ்ருத்திகளென்கிறார். (ரு)

ஈடு; அவ;— ஐந்தாம்பாட்டு. இத்திருவாய்மொழிக்கு நிதாநமான பாட்டாயிற்றிது. அதாவது - * மயர்வறமதிநலமருளி, பின்னையும் எனக்குப்பொருந்தாதபடியான ஸம்ஸாரத்திலே யென்னை வைத்து ஜீவிப்பித்துக் கொடுபோகிற விவ்வாஶ்சர்ய மிருந்தபடியை யெனக்கருளிச்செய்யவேணுமென்கிறார்.

(பாசங்கள்நீக்கி) மயர்வையறுத்து. அவித்யாதிகளைப்போக்கி. (க) * பலசெய்வினைவன்கயிற்றால் சூழ்த்துக்கொண்டதைநீக்கி. (என்னை) விஷயாந்தரங்களிலே கால்தாழ்ந்திருக்கிறவென்னை. (உனக்கேயறக்கொண்டிட்டு) (உ) * துயரறுசுடரடிதொழும்படியாகப் பண்ணி. பாசங்கள்நீக்கிற்றும் தனக்கேயறக்கொண்டதுமெத்தைக்காட்டியென்னில் (வாசமலரித்யாதி) வைத்தவளையத்திலழகைக்காட்டியாயிற்று, புறம்புண்டான பற்றறுத்ததும், தனக்கேயாம்படியாகப்பண்ணிற்றும். பரிமளத்தையுடைத்தாய் மலரோடே கூடின ஶ்ரமஹரமான திருத்துழாய்மாலையைத் திருமுடியிலேயுடைய வாஶ்சர்ய ஸௌந்தர்யயுக்தனே (அருளாய்) இவ்வளவுபுகுரநின்ற வென்னையிங்கேயிட்டுவைத்து நலியவோ. (காயமுமித்யாதி) ஶரீரமும் ஆத்மாவுமாய். உத்பத்திவிநாஶங்களுமாய்.

(பின்னுமித்யாதி) உன்பக்கலிலே யறிவைப்பிறப்பித்து, பின்னையுமிதில் பொருந்தாதபடியானவென்னை ஸம்ஸாரத்திலே வையாநின்றாய். (இவையென்ன மயக்குக்களே) இவையென்ன தெரியாச்செயல்கள்தாம். புறம்புண்டானபற்றையறுத்து உன்பக்கலிலே ஸங்கத்தைப் பிறப்பிக்கையாலே நீ யங்கீகரித்தாயோவென்றிராநின்றேன்; பின்னையுமிஸ்ஸம்ஸாரத்திலே வைக்கையாலே கைவிடநினைத்தாயோ வென்றிராநின்றேன், இதென்னப்ரமம். (ரு)

(க) ரு-க-௬ (உ) க-க-க.

ஆறாம்பாட்டு

மயக்கா! வாமனனே! மதியாம்வண்ணம்ஒன்று அருளாய் *
அயர்ப்பாய்த்தேற்றமுமாய் அழலாய்க்குளிராய்வியவாய் *
வியப்பாய்வென்றிகளாய் வினையாய்ப்பயனாய், பின்னும்நீ *
துயக்காய்நீநின்றவாறு இவையென்னதுயரங்களே ! (சா)

ப.—அநந்தரம், ப்ரமகசேஷ்டிதங்களையுடைய வாமநனை நீ, விஸ்ம்ருத்யாதிவிசித்ரனாய்க்கொண்டு பண்ணுகிற க்லேஶங்க ளென்னாயிருக்கின்றன வென்கிறார்.

(இ-ள்.) மயக்கா - வடிவாலும் நடையாலும் உக்தியாலும் மஹாபலியினுடையநெஞ்சு ப்ரமிக்கும்படிபண்ணின, வாமனனே - வாமநனே, மதியாம் வண்ணம் - எனக்குக்கலக்கந்தீர்ந்து அறிவுண்டாம்படி ஒன்று, அருளாய் - அருளிச்செய்யவேணும், அயர்ப்பு - மறப்பும், தேற்றமும் - தெளிவும், ஆய் - நீயிட்டவழக்காய். அழல் - தாபமும், குளிர் - ஶைத்யமும் ஆய் - நீயிட்டவழக்காய், வியவு - விஸ்மயநீயமும், வியப்பு - விஸ்மயமும், ஆய் - நீயிட்டவழக்காய், வென்றிகள் - லோகத்தில் விஜயஸித்திகளும், ஆய் - நீயிட்டவழக்காய், வினை - புண்யபாபரூபகர்மங்களும், பயன் - தத்தத்பலங்களும், ஆய் - நீயிட்டவழக்காய், பின்னும் - அதுக்குமேலே, துயக்கு - இவற்றினில் சேதநர் கலங்குகிறகலக்கமும், நீயாய் - நீயிட்டவழக்காய், நீ, நின்ற - இம்முகத்தாலே லீலாரஸிகனாய்க்கொண்டுநிற்கிற, ஆறு - ப்ரகாரங்களான, இவை - இவை, ஜகத்துக்கு, என்ன - என்ன, துயரங்கள் - க்லேஶங்களாயிருக்கின்றன.

வியவு - வியக்கப்பட்டன. வியப்பு - விஸ்மயமாயிருந்தவையும், மிகுதலுமாம். (சா)

ஆறு ;—(மயக்காவாமனனே) ஸ்ரீவாமநனை வடிகாலே பிச்சேற்றி, நினைத்தது முடித்துக்கொள்ளவல்ல விரகனான நீ, தெளிவுடையேனாம்படியொன்றுபண்ணியருளாய். அஜ்ஞாநஜ்ஞாநோஷ்ண ஶீத விஸ்மயநீய விஸ்மயஜய பாபபுண்ய தத்பல நிர்வாஹகனாய். அதுக்குமேலே, அந்யதாஜ்ஞாநாதிஜநகனாய் நீ நின்ற ப்ரகாரமென்ன து:காத்மகங்களென்கிறார். (சா)

ஈடு ; அவ ;—ஆறாம்பாட்டு. விஸ்மராஜ்ஞதிவிருத்தபதார்த்தங்களை விபூதியாகவுடையனாயிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

(மயக்கா) இன்னாரென்றின்றிக்கே, ஆரேனுமாகக் கிட்டினாரை மயங்கப்பண்ணுமவனே. அதெங்கேகண்டோமென்னில் (வாமனனே) தேவகார்யம் செய்யப்போந்தநீ, அந்ததேவர்களை நெருக்கின மஹாபலிதானே நெஞ்சுநெகிழ்ந்து உன்கையிலே நீரைவார்த்துத்தானே யிசைந்துதரும்படி மயங்கப்பண்ணினவனே. (க) "மன்னைமனங்கொள்ளவஞ்சித்து நெஞ்சுருக்கி" என்கிறபடியே. (மதியாமித்யாதி) அநுகூல ப்ரதிகூல விபாகமற மயங்கப்பண்ணாதே நான்தெளிவையுடையேனும்படிபண்ணியருளவேணும்.

(அயர்ப்பாய்தேற்றமுமாய்) (உ) "𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑍋𑌹𑌨𑌂 𑌚 - மத்தஸ்ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச" என்றானிறே தானே. விஸ்ம்ருதியும் தெளிவுமாய். இவ்விடத்தில் விருத்தாகாரத்தைச்சொல்லுகிறதல்ல, விசித்ராகாரத்தைச்சொல்லுகிறது. (அழலாய்க்குளிராய்) சீதோஷ்ணங்களாய். (வியவாய் வியப்பாய்) விஸ்மயவிஸ்மயநீயங்களாய். (வென்றிகளாய்) விஜயங்களாய். (வினையாய்ப்பயனாய்) புண்யபாபகர்மங்களாய், அவற்றினுடைய பலங்களுமாய். (பின்னும் நீதுயக்கா) அதுக்குமேலே, உன்னையாச்ரயித்தாரும் மதிகலங்கும்படி, அந்யதாஜ்ஞாநவிபரீதஜ்ஞாநங்களைப்பண்ணி. (நீநின்றவாறு) நீநின்றப்ரகாரம். (இவையென்னதுயரங்களே) உனக்கிவை தப்பிலருமையின்றிக்கே லீலையாயிராநின்றது, எங்களுக்கு அவைதாம் து:காத்மகமாயிராநின்றன. (௬)

ஏழாம்பாட்டு.

துயரங்கள்செய்யுங்கண்ணா! சுடர்நீள்முடியாய்! அருளாய் *
துயரம்செய்மானங்களாய் மதனாகிஉக்கவைகளாய் *
துயரம்செய்காமங்களாய்த் துலையாய்நிலையாய்நடையாய் *
துயரங்கள்செய்துவைத்தி இவையென்னசுண்டாயங்களே!

ப.—அநந்தரம், கர்மாநுருபமான து:கங்களைப்பண்ணும் ஸ்வாமியானநீ, அந்தது:க்கஹேதுவான தர்மாநாதிகளை விபூதியாகவுடையையாய் சேதநரை து:கிப்பியாநின்றாய்; இவையென்ன லீலார்த்த ஸ்வார்த்த ப்ரவ்ருத்திகளென்கிறார்.

(க) பெரியதிருமடல்-௧௦௧. (உ) கீதை-௧௫-௧௫.

(இ-ள்.) துயரங்கள் - கர்மாநுரூபமான து:கங்களை, செய்யும் - பண்ணுமிடத்தில், கண்ணா - அவதாரதசையோடு, சுடர்நீண்முடியாய் - பரதசையோடு வாசியறநடத்துமவனே, துயரஞ்செய் - து:கஹேதுபூதமாயிருக்கிற, மானங்களாய் - அபிஜநாதிநிபந்தந துர்மாநங்களாய் மதனாகி - (க) "ஏதே தக்ஷரோ:-ஏதேமதா:" என்கிறபடியே அவையடியாகவரும் செருக்கும், உகவைகளாய் - அத்தால்வந்த ப்ரீதிகளுமாய், துயரம் - அபிநிவேஶாதிது:கங்களை, செய் - விளைக்கக்கடவ, காமங்களாய் - பதார்த்தத்ருஷ்ணாரூபகாமங்களாய், துலையாய் - அந்தபதார்த்தங்களினுடைய தாரதம்யாபாதக பரிமாணமாய், நிலையாய் நடையாய் - அவற்றினுடையஸ்த்திதிகமநங்களுமாய், இப்படி, சேதநர்க்கு, துயரங்கள் - து:கங்களை, செய்து - பண்ணி, வைத்தி - வைப்புதி, இவை - இவை, என்ன - என்ன, சுண்டாயங்கள் - பரதுக்கம்பாராத ஸ்வார்த்தப்ரவ்ருத்திகள், அருளாய் - அருளிச்செய்யவேணும்.

சுண்டாயம் - ஸ்வார்த்தப்ரவ்ருத்தி. (எ)

ஆறு;—(துயரங்கள்செய்யுங்கண்ணாசுடர்நீண்முடியாயருளாய்) உன்னுடைய திருவபிஷேகத்தி லழகாலே நலியும்க்ருஷ்ணனே, அப்படியே விபூதியினுடைய வாஸ்ஸல்யத்தாலேயும் நலிவுபடாமே தெளிவிக்கவேணும்; து:க்கஹேதுவான வபிமாநம், அத்தாலேவந்த மதம், உகப்பு, து:ககரமானகாமம், பரிமாணம், ஸ்த்திதிகமநங்கள், ஏவம்ரூபமாய் து:காத்மகமான வ்யாபாரங்களைப் பண்ணிவைத்தாய்; இவையென்ன விளையாட்டுக்களென்கிறார். (எ)

ஈடு; அவ;—ஏழாம்பாட்டு. து:க்கஹேதுவான வபிமாநந்தொடக்கமான விசித்ரபதார்த்தங்களை விபூதியாகவுடையனாயிருக்கிறபடியையருளிச்செய்கிறார்.

(துயரங்களித்யாதி) து:க்கங்களைப்பண்ணக்கடவக்ருஷ்ணனே. (எத்தாலேநலிவதென்னில்; (க) * முடிச்சோதியிற்படியே திருவபிஷேகத்திலழகைக்காட்டியாயிற்று) (சுடர்நீண்முடியாய்) தர்ஶநீயமாய் உபயவிபூதிக்கும் சூடினமுடி.) விபூத்யநுஸந்தாநமும் திருவபிஷேகத்தோபாதி பாதகமாகாநின்றதாயிற்று. (உ) "முற்றவிம்மூவுலகும் விரிகின்றசுடர்முடிக்கே பொற்றுமைக்கொண்டது' என்றது பின்னாட்டுகிறது" என்றான் பிள்ளான். அவனைக்கேட்டறியவேண்டுமாகையாலே பாதகமாயிறே.

(க) எ-எ-கo. (உ) எ-எ-கo.

(துயரம்செயித்யாதி) (க) " துாவொஹஂ - தாஸோஹம் " என்கிற வபிமாநமடிக்கழஞ்சு பெற்றிருக்கும். அங்ஙனன்றிக்கே, "- ஸாஹஂ - ஸோஹம்" என்று துக்கத்தைப்பண்ணு மபிமாநங் களாய். (மதனித்யாதி) களிப்பும், அதுக்கடியான வுகவையுமாய், (உ) ஸஜ்ஜாஞ்ஜாயதெ காமஃ - ஸங்கீநாஸாத்ணஸம்ஜி - ஸங் காத்ஸஞ்ஜாயதே காமஃ - புத்திநாஸாத்ப்ரணஶ்யதி " என்கிறபடியே விநாஶபர்யந்தமான காமங்களாய். அங்ஙனன்றே பகவத்காமம். (துலையாய்) ப்ரமாணமாய். நிறுக்குமதாய். (நிலையாய்நடையாய்) ஸ்தாவரஜங்கமங்களைச்சொல்லுதல், ஸ்திதிகமநங்களைச்சொ ல்லுதல், இப்படி து:கங்களைப்பண்ணுவியாநின்றாய். (இவையே ன்னசுண்டாயங்களே) உனக்கு லீலையாயிராநின்றது, எங்களுக்கு க்லேஶாவஹமாயிராநின்றது. (எ)

எட்டாம்பாட்டு.

என்னசுண்டாயங்களால் நின்றிட்டாய் ? என்னையாளும்கண்ணே!*
இன்னதோர்தன்மையையென்று உன்னையாவர்க்கும்தேற்றரியை *
முன்னியமூவுலகுமவையாய் அவற்றைப்படைத்து *
பின்னும்உள்ளாய்! புறத்தாய்! இவையென்ன இயற்கைகளே! (அ)

ப—அநந்தரம், அதிஶயிதஜ்ஞாநர்க்கு மவபோதிக்கைக் கரியையாய்க் கொண்டு ஸகலஜகத்துக்கும் ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகின்றாய், இவை யென்ன செய்திகளாயிருக்கிறதென்கிறார்.

(இ-ள்.) என்னசுண்டாயங்களால் - ஸ்வார்த்தமாயுள்ள வென்ன லீலா வ்யாபாரங்களாலே, எங்ஙனே-என்ன ப்ரகாரத்திலே, நின்றிட்டாய் - நின்றாய், என்கண்ணே - எனக்கு பவ்யனான க்ருஷ்ணனே, இன்னதோர் - இன்னபடிப் பட்ட, தன்மையை - ஸ்வபாவத்தையுடையை, என்று - என்று, உன்னை - அபரிச்சிந்ந ஸ்வபாவனானவுன்னை, யாவர்க்கும் - அதிஶயித ஜ்ஞாநராயிருப் பார்க்கும், தேற்ற - நிர்ணயித்துக்காட்ட, அரியை - அரியையாயிருப்பதி; முன்னிய - ப்ரவாஹாநாதியாயிருப்பதாய், மூவுலகும் - க்ருதகாதிபேதத்தை யுடைத்தான மூன்றுலோகத்தையும், அவையாய் - ததாத்மகனாய், அவற்றை- அவற்றை, படைத்து - ஸ்ருஷ்டித்து, பின்னும் - அதுக்குமேலே, உள் - அநுப்ரவேஶ நிபந்தநமான அந்தர்வ்யாப்தியையும், புறம் - ஆதாரத்வநிபந்தந

(க) ரா-ஸு-சஉ-ரு௪. (உ) கீதை-உ-சுஉ.

மான பஹிர்வ்யாப்தியையும், ஆய் - உடையை யாகாநின்றாய், இவை - இவை, என்ன - என்ன, இயற்கைகள் - ஸ்வாபாவிக வ்ருத்திகளாயிருக்கின்றன. (அ)

ஆறு ;— (என்னசுண்டாயங்கள்) என்னலீலாயுக்தனாய் நிற்கின்றாய் என்னையடிமைகொள்ளுகிற க்ருஷ்ணனே. இன்னதொரு ஸ்வபாவமென்று ஜ்ஞாநாதிகருக்கு மறியவொண்ணாத நீ, பழையதான மூவுலகுக்குங்கடவையாய் அவற்றை ஸ்ருஷ்டித்து, பின்னையு மந்தர்ப்பஹிஸ்ச வ்யாபித்துநின்றாய், இவையென்னவாஸ்சர்யமென்கிறார். (அ)

ஈடு ; அவ ;— எட்டாம்பாட்டு. ஸகலஜகத்தையும் ஸ்ருஷ்டித்து அந்தர்ப்பஹிஸ்ச வ்யாபித்து இப்படி நிர்வஹித்துவைத்து துர்ஜ்ஞேயனாயிருக்கிற விதென்ன வாஸ்சர்யமென்கிறார்.

(என்னவித்யாதி) என்னலீலைகளையுடையையாய் நிற்கிறாய் என்னை யடிமைகொள்ளுகிற க்ருஷ்ணனே. (இன்னதோரித்யாதி) இன்னபடிப்பட்ட ஸ்வபாவத்தையுடையையென்று, ஸர்வகாரணபூதனான வுன்னை, எத்தனையேனுமதிசயித ஜ்ஞாநரானவர்களாலு மறியவொண்ணாதபடி நிற்புதி. (க) "ஸ ஹாவிநவெத்து யத்தகஃ - ப்ரஹ்மாபிநவேத்யல்பம்ப்ரயத்நதஃ" என்கிறபடியே.

(முன்னியமூவுலகுமவையாய்) ப்ரவாஹரூபத்தாலே பழையதாய்ப் போருகிற மூவுலகுக்கும் கடவையாய். த்ரிவிதசேதநரென்னுதல், த்ரைலோக்யமென்னுதல். (அவற்றைப்படைத்து) விபூதியானபோது, அவற்றையுண்டாக்கியென்கிறது ; சேதநரானபோது அவர்களுக்கு ஜ்ஞாநவிகாஸத்தை யுண்டாக்கி யென்கிறது. (பின்னு முள்ளாய்புறத்தாய்) * அந்தர்ப்பஹிஸ்ச வ்யாபித்திருக்கிறவனே. (இவையென்னவியற்கைகளே) உனக்கிவைதான் லீலையாயிராநின்றது, எங்களுக்கிவைதா னாஸ்சர்யமா யிராநின்றது. (அ)

ஒன்பதாம்பாட்டு.

என்ன இயற்கைகளால் எங்ஙனேநின்றிட்டாய்? என்கண்ணா !*
துன்னுகரசரணம்முதலாக எல்லாவுறுப்பும் *
உன்னுசுவையொளி ஊறோசைநாற்றம்முற்றும்நீயே *
உன்னையுணரவுறில் உலப்பில்லை நுணுக்கங்களே. (கூ)

(க)

ப.—அநந்தரம், இப்படி யறியவரியையா யிருக்கைக்கடியான வதிஸௌக்ஷ்மயத்தாலே அக்கரணங்களோடு விஷயங்களோடுவாசியற வ்யாபரித்துநிற்கிற நிலையென்னுமிருக்கிறதென்கிறார்.

(இ-ள்.) உன்னுடைய வாகாரங்களைக்காட்டி, என்னை - என்னை, ஆளும்-அடிமைகொள்ளுகிற, கண்ணா - க்ருஷ்ணனே, ஒருபடியென்று நிஷ்கர்ஷிக்கவொண்ணாதபடி, என்ன - என்ன, இயற்கைகளால் - ப்ரகாரங்களாலே, நின்றிட்டாய் - நின்றருளினாய்; துன்னு - ஶரீரத்திலே செறியக்கடவதாய், கரசரணமுதலாக - கரசரணாதிகளான கர்மேந்த்ரியங்களும் ஜ்ஞாநேந்த்ரியங்களுமான, எல்லாவுறுப்பும் - எல்லாக்கரணங்களும், உன்னு - மநஸ்ஸோடே ப்ரவணமாயுத்யோகிக்கும்படியான, சுவையொளியூறொலிநாற்றம் - ரஸரூபஸ்பர்ஶஶப்தகந்தங்களாகிற, முற்றும் - ஸகலவிஷயங்களும், நீயே - நீயேயாம்படி, உன்னை - அவற்றுக்கந்தராத்மாவானவுன்னை, உணரவுறில் - நிரூபிக்கநினைக்கில், (க) "அணீயஸாமணீயாம்ஸம்" - "அணீயஸாம் - அணீயாம்ஸம்" என்கிறபடியே, நுணுக்கங்கள் - ஸௌக்ஷ்மயங்கள், உலப்பு - முடிவு இல்லை-இல்லையாயிருக்கும். (கூ)

ஆறு;—(என்னவியற்கைகள்) என்ன ஸ்வபாவங்களையுடையனாய் எந்தவாகாரத்திலே நிற்கிறாய் எனக்குபவ்யனான க்ருஷ்ணனே. நெருங்கினகரசரணம் முதலானவெல்லா வுறுப்பும் - அவயவங்களுக்கும், ரஸம், ரூபம், ஸ்பர்ஶம், ஶப்தம், கந்தம், இவையெல்லாவற்றுக்கும் கடவையான வுன்னையநுஸந்திக்கப்புக்கால் உன்னுடைய வைலக்ஷண்யத்துக்கு முடிவில்லை யென்கிறார். (கூ)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. ஜ்ஞாநேந்த்ரியங்களும் கர்மேந்த்ரியங்களும் ஶப்தாதி விஷயங்களும் அவனுக்கு விபூதியாயிருக்கிற விருப்பை யநுஸந்திக்கிறார்.

(என்னவியற்கைகளாலெங்ஙனே நின்றிட்டாயென்கண்ணா) என்ன ஸ்வபாவங்களையுடையையாய்க் கொண்டு என்னப்ரகாரத்தாலே நிற்கிறாய் எனக்கு பவ்யனாகக்ருஷ்ணனே.

(துன்னித்யாதி) நெருங்கியிருந்துள்ள கரசரணங்கள் தொடக்கமான வெல்லாவவயவங்களும், அநுஸந்திக்கப்படுவதாய்-ஆசைப்படப்படுவதாயிருந்துள்ள ஶப்தாதிகளுக்கும் கடவையாயிருந்தாய்.

(க) மநுஸ்ம்ருதி.

(உன்னையுணரவுறில்) உன்னையறியப்புகில். (உலப்பில்லைநுணுக்கங்களே) உன்வைலக்ஷண்யங்களுக்கு முடிவில்லை. (க) "அணீயாம ஸஹணீயஸாம்- அணீயாம் ஸமணீயஸாம்" என்கிறபடியே, அசித்வஸ்துவை ஸூக்ஷ்மரூபதயா எங்கும்புக்கு வ்யாபித்திருக்குமாத்மவஸ்து, இவ்விரண்டிலும் ஸூக்ஷ்மரூபேண வ்யாபித்திருப்புதி. (உன்னை நிரூபிக்கப்புகில் ஸௌக்ஷ்ம்யங்கள் முடிவில்லையாயிருக்கும். நுணுக்கம் - ஸௌக்ஷ்ம்யம்) (கூ)

பத்தாம்பாட்டு.

இல்லைநுணுக்கங்களே இதனிற்பிறிதேன்னும்வண்ணம் *
தோல்லைநன்னூலில்சோன்ன உருவும்அருவும்நீயே *
அல்லித்துழாயலங்கல் அணிமார்பா! என்அச்சுதனே *
வல்லதோர்வண்ணம்சோன்னல் அதுவேஉனக்குஆம்வண்ணமே.

ப.—அநந்தரம், நித்யமான வேதைகவேத்யமாயுள்ள ஸூக்ஷ்ம சித்சித்வஸ்துக்களை ப்ரகாரமாக வுடைய நீ, வாசாமகோசரமஹிமா வென்கிறார்.

(இ-ள்,) இதனில் - இதிற்காட்டில், பிறிது - வேறு, நுணுக்கங்கள் - ஸௌக்ஷ்ம்யம், இல்லை - இல்லை, என்னும்வண்ணம்-என்னும்படி, தொல்லை-அநாதியாய், நல் - அபௌருஷேயத்வாதி குணயோகத்தையுடைத்தான, நூலில் - வேதசாஸ்த்ரத்திலே, அவ்யக்தாக்ஷராவஸ்த்தையிலு மதிஸூக்ஷ்மமாக, சொன்ன - தமஶ்ஶப்தத்தாலே சொல்லப்பட்ட, உருவும் - அசித்தும், அருவும் - சித்தும், நீயே- (உ) "ஸதேவ - ஸதேவ" என்கிற மர்யாதையாலே நீயேயானுய், இப்படிசிதசிச்சரீரியானவளவன்றியே, அல்லி - பூந்தாரையுடைத்தான, துழாயலங்கல் - திருத்துழாய்மாலையை, அணி - அலங்காரமாகவுடைய, மார்ப - திருமார்பையுடையனுய், என், அச்சுதனே - அப்ரச்யுதாகாரனை விலக்ஷண விக்ரஹயுக்தனே, இப்படியிருக்கிற வுன்னுடைய ஸர்வப்ரகாரவைபவத்தை, வல்லதோர்வண்ணம் - வல்லப்ரகாரம், சொன்னல்- வேதாதிகள் சொன்னலும், உனக்கு - உனக்கு, அதுவே - அதுவே, வண்ணம் - ப்ரகாரம், ஆம் - ஆம்படி, ஆஶ்ரிதபவ்யனுயிருப்புதி (கo)

ஆறு ;—(இல்லை) இதிற்காட்டில், பிறிது - வேறு ஸூக்ஷ்மமில்லையென்னும்படி பழையதான வேதாந்தத்திலேசொன்ன வசித்

(க) மறுஸ்ம். (உ) சாந்தோ-கூ-உ.

துக்கும் சித்துக்கும் நிர்வாஹகனானவனே ; அல்லியையுடைய திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதமான வழகியமார்பையுடையையாய் இவ்வழகுக்கொருநாளுமொழிவில்லாதவனே ; வேதங்களும்ஸநகாதியோகிகளும்உன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளைப்பேசப்புக்கால் பேசினவம்ஸம் பேசிற்றுமித்தனைபோக்கி, பேசாததுக் கவதியில்லை. அதவா, உனக்கு நல்லாராய் உன்குணங்களிலே யீடுபட்டிருப்பார் உன்னை யேதேனு மொருபடி பேசினால், அதுவே யுனக்காம் ப்ரகாரமென்கிறார். (கo)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. வேதைகஸமதிகம்யனாய் காரணமா யதிஸூக்ஷ்மமா யிருந்துள்ள சேதநாசேதநங்களை விபூதியாகவுடையனா யிருக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

(இல்லைநுணுக்கமித்யாதி) இதிற்காட்டில் வேறுஸூக்ஷ்மமா யிருப்பதில்லையென்னும்படி. அதாவது-இவற்றுக்கு "தனக்கு" என்னவொருநாமரூபங்களின்றிக்கே, ப்ரஹ்மத்தினுடைய நாமரூபங்களையிட்டு வ்யவஹரிக்கவேண்டும்படி காரணாவஸ்த்தமாயிருக்கிற சேதநாசேதநங்கள் நீயிட்டவழக்கு. (தொல்லைநன்னூலிற்சொன்ன) (க) "सदेव सोम्येदमग्र आसीत् - ஸதேவஸோம்யேதமக்ர ஆஸீத்" என்றதிறே. (பழையதாய் ப்ரமாணஶ்ரேஷ்டமான வேதத்திலேசொல்லுகிறவசேதநத்துக்கும், அதிற்காட்டில் ஸூக்ஷ்மமான சேதநபதார்த்தத்துக்கும்நிர்வாஹகன்நீயே. ஆக ஜகதாகாரனாயிருக்கு மிருப்பைச்சொல்லிற்று.

(அல்லித்துழாயித்யாதி) நித்யவிபூதியுக்தனா யிருக்கும்படியைச்சொல்லுகிறது. அல்லியையுடைத்தான திருத்துழாய்மாலையாலே யலங்க்ருதமான திருமார்வையுடையையாய், அவ்விருப்புக்கொருநாளு மழிவில்லாதபடி பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிறவிருப்பை யெனக்கு ப்ரகாசிப்பிக்கிறவனே. (வல்லதோரித்யாதி) இதுக்கிரண்டுபடியாக வருளிச்செய்வர். இவன்றனக்குள்ள வளவெல்லாங் கொண்டுபேசினால், உன்பக்கல் சிலசொல்லிற்று மத்தனை போக்கியல்லது, உனக்கோரியத்தை யில்லையிறேயென்னுதல் ; அப்போதைக்கு, அதுவே யுனக்காம் வண்ணம்-அதுவன்றென்கிறது.

(க) சாந்தோ-௬-௨,

மற்றைப்படிக்கு, உன்பக்கல் ஸ்நேஹிகளாயிருப்பாரெத்தனையேனு மளவின்றிக்கே யிருந்தார்களாகிலும், அவர்களொன்றைச்சொன்னால், ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகள்நடுவே அவர்கள் தங்களுக்குங்கூடப் பேச்சுக்கு நிலமன்றிக்கே யிருக்கிற நம்மை, ஸம்ஸாரத்திலே அதிக்ஷுத்ரனாயிருக்கிற இவனறிந்தானாகச் சொல்லுவதே? என்று சீறுகையன்றிக்கே, இவன்சொன்னதுவே தனக்களவாக நினைத்திருக்கு மென்கிறது. (க0)

பதினோராம்பாட்டு.

ஆம்வண்ணம் இன்னதொன்றென்று அறிவதரிய அரியை *
ஆம்வண்ணத்தால் குருகூர்ச்சடகோபன் அறிந்துரைத்த *
ஆம்வண்ணவொண்தமிழ்கள் இவையாயிரத்துள் இப்பத்தும் *
ஆம்வண்ணத்தாலுரைப்பார் அமைந்தார்தமக்கென்றைக்குமே. (கக)

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவர்கள், யாவதாத்மபாவி பகவதநுபவத்துக் கீடாகச் சமைந்தார்களென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) ஆம் - உண்டான, வண்ணம் - ப்ரகாரம், இன்னது - இன்னபடிப்பட்டிருப்பது, ஒன்று - ஒன்று, என்று - என்று, அறிவது - அறிகைக்கு, அரிய - அரியனான, அரியை - ஸர்வேஸ்வரனை, *குருகூர்ச்சடகோபன் - * மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார், ஆம்வண்ணத்தால் - உள்ளபடி, அறிந்து - அறிந்து, உரைத்த - அங்குத்தைக் கநுரூபமாக வருளிச்செய்த, வண்ணம் - சந்தஸ்ஸை, ஆம் - உடைத்தாய், ஒண் - ஸர்வாதிகாரமாகிற நன்மையையுடைத்தான, தமிழ்கள் - தமிழாயுள்ள, இவை - இவை, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இப்பத்தும் - இந்தப்பத்தையும், ஆம்வண்ணத்தால் - தங்கள் ப்ரகாரத்துக்கீடாக, உரைப்பார் - சொல்லவல்லவர்கள், தமக்கு - தங்களுக்கு, என்றைக்கும் - யாவதாத்மபாவியான வநுபவத்துக் கீடாக, அமைந்தார் - சமைந்தார்கள்.

இது - கலிவிருத்தம். (கக)

ஆறு ;—(ஆம்வண்ணம்) ஒருவராலு மொருவகையு மறியவொண்ணாத ஸர்வேஸ்வரனை யுள்ளபடியே யறிந்து அங்குத்தைக்கு ஸத்ருஶமாக வாழ்வாரருளிச்செய்த வாயிரத்திலு மித்திருவாய்மொழியை யதாஶக்தி சொல்லுமவர்களே, என்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறார். (கக)

ஈடு; அவ;—பதினோராம்பாட்டு. நிகமத்தில் - அங்குத்தைக்குத் தகுதியாக வாழ்வாரருளிச்செய்த வாயிரந்திருவாய்மொழியிலு

மித்திருவாய்மொழியை யதாஶக்திசொல்லவல்லார் என்றைக்கும் க்ருதக்ருத்யரென்கிறார்.

(ஆம்வண்ணமித்யாதி) இன்னபடிப் பட்டிருப்பதொரு ஸ்வபாவத்தையுடையவனென்றுகொண்டு ஒருவராலுமறிய வரியனாயிருக்கிற ஸர்வேஶ்வரனைக் கவிபாடிற்று. (க) "யதோவாசோநிவர்த்தந்தே-யதோவாசோநிவர்த்தந்தே" என்று வேதங்களும் மீண்டவனை யாயிற்றுப் பேசிற்று. (ஆம்வண்ணமித்யாதி) அவனுக்குத் தகுதியாம்படி யாழ்வாரருளிச்செய்த; "அறிவதரியவரியை" என்றதால் ஆம்வண்ணத்தால் உரைக்கையாவதென், வ்யாஹதமன்றோவென்னில் (அறிந்துரைத்த) அவன் * மயர்வறமதிநலமருளவாயிற்று இவர்பேசிற்று. ஸ்வயத்நத்தாலே யறியப்பார்க்கிலிறே அரிதென்றது; அவன்கொடுத்த வறிவுகொண்டறிவார்க்குக் குறையில்லையிறே.

(உ) "நெறிவாசல்தானேயாய் நின்றானையைந்து, பொறிவாசல் போர்க்கதவஞ்சாத்தி-யறிவானாம்" என்று ஆக்ஷேபிப்பது ஸ்வயத்நத்தாலே யறியப்பார்ப்பாரையிறே. (ஆம்வண்ணவொண்டமிழ்களித்யாதி) அவனுக்குத் தகுதியாம்படியிருக்கிற வழகிய தமிழென்னுதல்; தகுதியாயிருந்துள்ள சந்தஸ்ஸுக்களை யுடைத்தாய், ஸர்வாதிகாரமாகிற நன்மையையுடைத்தான தமிழென்னுதல்; வண்ணம்-சந்தஸ்ஸு; அன்றிக்கே, வண்ணமென்று-ஓசையாய், நல்ல த்வநியை யுடைத்தான செந்தமிழென்னுதல். (தமிழ்களிவையாயிரத்துளிப்பத்தும்) தமிழாயிருந்துள்ள விவையாயிரத்துளிப்பத்தையும்.

(ஆம்வண்ணத்தாலுரைப்பார்) பின்னை, இத்தைச் சொல்லுமவர்களுக்கும் *மயர்வறமதிநலமருளப்பெற்று அவனுக்குத் தகுதியான சொல்லாலே சொல்லவேணுமோவென்னில்; அத்தேவை யெல்லா மாழ்வார்தம்மோடே; இவர்களுக்குத் தாங்கள் வல்லவளவும் சொல்லவமையும். (அமைந்தார்தமக்கென்றைக்குமே) அவர்களுக்கு இவ்வாத்மா வுள்ள தன்னையும், ஈஶ்வரன் முழங்கைத்தண்ணீர் வேண்டா, ஆழ்வார் பரிக்ரஹமானதுவேபோரும். என்றைக்கும் தந்தாமுக்குத்தாமே யமைந்தார்களா யிருப்பார்கள். (கக)

(க) தை-ஆந கூ.

(உ) க-திருவ-ச.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாம்பத்து
ஒன்பதாந்திருவாய்மொழி

என்றைக்கும் - ப்ரவேஶங்கள்.

ஆறு;—இப்படி மஹாஶ்சர்யமான ஜகத்ரூபத்தையும், அப்ராக்ருதஸ்வாஸாதாரண திவ்யரூபத்தையும், இவையவன் பக்கலிலே ஸங்கதமாயிருக்கிறபடியையு மநுஸந்தித்து அத்யந்த விஸ்மிதராய், நிரதிஶயப்ரீதியுக்தராய், நிரஸ்தஸமஸ்தப்ரஸ்துத வ்யஸநராயிருந்து நிரவதிகாஶ்சர்யோபயவிதாகாரத்தை யுள்ளபடியே சொன்னார்; இதுதானும் நிரூபித்தவாறே அவன் செயலாயிருந்தது, இத்தை யநுஸந்தித்து, "அத்யந்தநிஹீநனாயிருந்த வென்னைக்கொண்டு திருவாய்மொழி சொல்லுவித்தருளுவதே" என்று, தம்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்தருளினவனுடைய ஸர்வஶக்தித்வ ஸௌஶீல்ய வாத்ஸல்யாதி கல்யாணகுணாநுபவ ஜநிதநிரவதிக ப்ரீதியாலே சொல்லுகிறார். *

ப.—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழ் - தம்முடையவிரோதி நிவ்ருத்திக்கநுரூபமான, ஈஶ்வரனுடைய வாஶ்சர்யஶக்தியோகத்துக்கு ப்ரகாஶகமாயுள்ள விசித்ரவிபூதிமத்தையை யநுபவித்து ஸந்துஷ்டரானவிவர், இவன் விரோதி நிவர்த்தநத்தில் விளம்பிக்கைக்கடியென்னென்று நிரூபித்து, அவன் தம்மை வாசிககைங்கர்யங்கொள்ளுகைக்காக வைத்த ப்ரகாரத்தைக் காட்டக்கண்டு ப்ரீதராய், தம்விரோதி கிடக்கச்செய்தே அத்தை மதியாமல் அஸத்கல்பமாக்கி யடிமைகொள்ளுகைக்கடியான நிருபாதிக ஸம்பந்தத்தையும், ப்ரதம ப்ரவர்த்தநத்தையும், பக்தார்த்தப்ரவ்ருத்தியையும், விரோதியை மதியாமல் விரும்பினபடியையும், விருப்பத்தால்வந்த மேன்மையையும், மேன்மைக்கெல்லைநிலத்தையும், அப்பரத்வாநுபவத்துக்கு விலக்கான பாபத்தினுடைய நிவர்த்தநத்தையும், அதிஶயிதாநுபாவ்ய குணயோகத்தையும், அதினுடைய நித்யாநுபாவ்யதையையும், நிஷ்ப்ரத்யுபகாரமான நிரவதிகோபகாரகத்வத்தையு மநுபவித்து ஏவம்வித ஸ்வபாவனானவன் என்விரோதியைக்கழித்து என்னை வாசிக கைங்கர்யங்கொண்டபடிக்கு எத்தைச்செய்வேனென்று உபகார ஸ்ம்ருதியாலே அத்யந்தம் ஹ்ருஷ்டராகிறார். *

ஈடு;—கீழேபலகாலும், "ஸர்வேஶ்வரன்றன்னைப்பெறுவார்க்கு ப்ரதிபந்தகங்களுண்டாயிருந்தாலும் தானே தன்னைத் தரப்பார்க்குமன்று தகையவல்லதொரு ப்ரதிபந்தகமின்றிக்கே யிருக்க, 'தன்னாலேபேறு' என்றிருக்கிறவென்னை யிங்கேவைத்ததென்" என்று கேட்டுப்போருவாரொருவர்; அவனும், இதுக்குநேரான பரிஹாரத்தைப்பண்ணாதே யேதேனுமொரு குணாவிஷ்காரத்தைப்பண்ணி அந்யபரதையைப் பிறப்பிக்குமாயிற்று இவர்க்கிதிலே நெஞ்சுசெல்லாதபடி.

இனி, கீழிற்றிருவாய்மொழியிலேயும் - "ஸம்ஸாரத்தில் பொருந்தாமையுண்டாய் உன்னையொழியச் செல்லாமையுண்டாய் நீயேயுபாயமாயிருக்க, பின்னையுமென்னை யிங்கேவைத்து ஜீவிப்பித்துக்கொடுபோகிற வாஶ்சர்யமிருந்தபடியென், இத்தை யெனக்கருளிச்செய்யவேணும்" என்ன, "கண்டீரே தானிதோராஶ்சர்யமிருந்தபடி" என்று அவ்வழியாலே தன்னுடைய வாஶ்சர்ய ஜகதாகாரதையைக் காட்டிக்கொடுத்து, அத்தோடே பணிபோரும்படி பண்ணினான். இவரும், அப்போது அத்தனையுமத்தை யநுஸந்தித்து, அது தலைக்கட்டினவாறே அநந்தரம் பழையபடியே கேட்கத்தொடங்குமவரிறே.

"இஸ்ஸம்ஸாரத்திலே பொருந்தாதிருக்கிறவென்னை யிங்கு வைத்ததுக்கு ஹேதுவென்" என்ன, "நம்மை யிதுக்கொருஹேது நிர்ப்பந்தித்துக் கேட்கவேணுமோ; கண்டதெல்லாவற்றிலும் நாக்கு நீட்டி அவற்றிலே ருசிபண்ணிப் போந்தீராகில், அதுக்கடியான கர்மங்கிடந்ததாகில், வாஸநாருசி கிடந்ததாகில், அவற்றாலே யிருந்தாலாகாதோ" என்ன, "அவையுங்கிடக்கச்செய்தே, அவற்றையும்பாராதே யெனக்கு * மயர்வற மதிநலமருளி * பாசங்கள் நீக்கியென்னை யுனக்கேயறக்கொண்ட பின்பு என்னை யிங்குவைக்கிறதென்" என்று வடிம்பிட்டுக்கேட்க, "நீர் நாம் உம்மைநமக்காக வோக்கிவைத்தீராகச்சொன்னீரே - (௧) 'தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே' என்று; ஆனபின்பு நமக்கதிஶயத்தைப் பிறப்பிக்கை உமக்கு ஸ்வரூபமாயிருக்குமிறே; ஆனபின்பு, உம்மைக்கொண்டு, ஸ்ரீபீஷ்மரை ஶரதல்பத்திலேயிட்டுவைத்து நாட்டுக்கு வெளிச்சிறப்பைப்பண்ணிக்கொடுத்தாப்போலே, நமக்கும் நம்முடையார்க்கும் போதுபோக்கா

(௧) ௨-௯-௪.

கச் சிலப்ரபந்தங்களைப் பண்ணுவிக்கப்பார்த்தோம், அது தலைக்கட்டுந்தனையுங்காணும் உம்மைவைப்பது'' என்று நேரானபரிஹாரந்தன்னை யருளிச்செய்ய, இவருமதத்தையநுஸந்தித்து, ஸர்வேஶ்வரனாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸர்வ ப்ரகார பரிபூர்ணனாயிருக்கிறவன்றனக்கு ஒரு குறையுண்டாய் அக்குறை பின்னைத் தம்மைக் கொண்டு தீர்ப்பதாகச் சொன்னவார்த்தையைப் பொறுக்கமாட்டிற்றிலர்.

“தனக்குச்சில ப்ரபந்தங்கள் வேண்டிலால், அதுக்கிடான ஜ்ஞாநஶக்த்யாதிகளால் குறைவற்ற ஸ்ரீவேதவ்யாஸபகவான், ஸ்ரீவால்மீகிபகவான், ஸ்ரீபராஶரபகவான் தொடக்கமானார், (௧)“செந்தமிழ்பாடுவார்’ என்று சொல்லப்படுகிற முதலாழ்வார்கள், இவர்களெல்லாருமுண்டாயிருக்க, அநாதிகாலம் ஸம்ஸாரத்திலே பழகி ஶப்தாதிவிஷயங்களிலே அந்யபரனாய் (௨) “அஸந்நேவ ஸ பவதி - அஸந்நேவஸபவதி” என்கிறபடியே அஸத்கல்பனாய் உருமாய்ந்துபோன வென்னைக் கொண்டு தனக்கீடாகக் கவிபாடுவித்துக்கொள்ளுவதாகச் சொன்ன வார்த்தை யென்னவார்த்தை, இதொரு சீர்மையிருக்கும்படியே, இதென்னநீர்மை” என்று, ஸர்வேஶ்வரன் தன்திறத்தில் பண்ணின வுபகாரத்தை யநுஸந்தித்து, அதுக்கொரு ப்ரத்யுபகாரங் காணாமையாலே தடுமாறிச்செல்லுகிறது.

முதற்பாட்டு

என்றைக்குமென்னை உய்யக்கொண்டுபோகிய *
அன்றைக்கன்றென்னைத் தன்னாக்கியென்னால்தன்னை *
இன்தமிழ்பாடிய ஈசனை ஆதியாய்
நின்றஎன்சோதியை * என்சொல்லிநிற்பனோ? (௧)

ப.—முதற்பாட்டில், நிருபாதிகஶேஷியானவன் என்னைக்கொண்டு தான் தன்னைக்கவிபாடிக்கொண்ட ஔஜ்ஜ்வல்யத்துக்குக்கு என்சொல்லித் தரிப்பேனென்கிறார்.

(இ-ள்.) என்றைக்கும் - ப்ரதமாங்கீகாரம் யாவதாத்ம பாவியாம்படி யங்கீகரித்து, போகிய - போகிற, அன்றைக்கன்று - காலந்தோறும், என்னை,

---

(௧) தி-மொ-உ-அ-உ. (உ) தை-ஆ-சு.

உய்பக்கொண்டு - விசேஷகடாக்ஷம்பண்ணி, என்னை - என்னை, தன்னாக்கி - தனக்கேயாம்படி செல்லாமையைப் பிறப்பித்து, என்னால் - கவிபாடுகைக்கீடான ஜ்ஞாநாதிகளில்லாதவென்னைக் காரணமாகக்கொண்டு, தன்னை-வேதங்களும் பிறகாலிக்கும்படியானபெருமையையுடைய தன்னை, இன் - ஶப்தார்த்தனே நிரதிஶயஸரஸமாய், தமிழ் - ஸர்வாதிகாரமான தமிழை, பாடிய-பாடின, ஈசனை - நிருபாதிகஶேஷியாய், ஆதியாய் - எனக்குள்ளீடாக நின்று பாடுகையாலே யிதுக்கு மூலபூதனாய், நின்ற-அத்தாலே நிலைபெற்று, என்சோதியை - உஜ்ஜ்வலவிக்ரஹனா யிருக்கிறபடியை யெனக்கு ப்ரகாஶிப்பித்தவனை, என் - எத்தை, சொல்லி - சொல்லி, நிற்பன் - தரிப்பேன்.

ப்ரதமமாபிமுக்யம்பண்ணும்படி யங்கீகரித்திலனென்னவோ, அத்தை முழுக்க நடத்திற்றிலனென்னவோ, என்னைத் தனக்கே யாக்கிற்றிலனென்னவோ, நான் பாடினேனாம்படி தான் பாடிற்றிலனென்னவோ, அத்தாலுஜ்ஜ்வலனாயிற்றிலனென்னவோ, எத்தைச்சொல்லி தரிக்கலாவதென்று கருத்து.(க)

ஆறு ;—(என்றைக்குமென்னை) ஆத்மாத்மகிங்கரத்வேந ஸ்வீகரித்து, ப்ரதிதிநமும் என்னைத் தன்னைப்போலே பரிஶுத்தனாக்கி, என்னை யுபகரணமாகக்கொண்டு திருவாய்மொழிபாடுந் தன்னுடைய ஸர்வஶக்தித்வத்தையும், ஏதத்ப்ரபந்த நிர்மாண ஹேதுத்வக்ருத நிரவதிகதேஜஸ்ஸையும் எத்தைச்சொல்லி பர்யவஸிப்பன். காலதத்த்வமுள்ளதெல்லாம் சொன்னாற்றான் ஆர்வனோவென்கிறார். (க)

ஈடு; அவ;— முதற்பாட்டு; அதிக்ஷுத்ரனாயிருக்கிற வென்னை ஜ்ஞாநஶக்த்யாதிகளையுடையே னாம்படிபண்ணி, என்னையிட்டுத் திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட வுபகாரத்தை யநுஸந்தித்துத் தரிக்கமாட்டுகிறிலேனென்கிறார்.

இப்படி நீர்படுகைக்கு அவன்செய்தநன்மைதானேதென்ன, இதுவென்கிறார் (என்றைக்குமென்னையுய்யக்கொண்டு) ஸர்வேஶ்வரனொருவனை யொருநாள் விஷயீகரித்தால், பின்னை அவ்விஷயீகாரந் தன்னையே காலதத்த்வமுள்ளதனையுமநுஸந்தித்து உஜ்ஜீவிக்கலாயாயிற்றிருப்பது. (க) "தஸ்மிந் ஸம்ஸ்ம்ருதே ... தச்சஸம்ஸ்ம்ருத்யஸம்ஸ்ம்ருத்ய" என்கிறபடியே-பின்னை யென்றுமொக்க வத்தை ஸ்மரித்து தரிக்கலாம்படியாயிற்றிருப்பது. (உ) "ஸ்ரு ந்ராவவவா

(க) கீதை-கஅ-எஎ. (உ) ரா-யு சுo-ரு.

ணாநாஷ-ஸ்மரந்ராகவபாணநாம்'' என்று அம்புக்கிலக்கானார் அலற்றுமாபோலே யாயிற்று, குணத்துக்கிலக்கானாருமலற்றும்படி; அம்புபட்டபுண் மருந்திட்டாற்றலாம், குணத்தால்வந்த புண்ணுக்குப் பரிஹாரமில்லையிறே. ஆக, ஸர்வேஶ்வரனொருகாலொருவனை விஷயீகரித்தால் அது தன்னையே யென்றுமொக்க ஸ்மரிக்கலாம்படியிருக்குமாயிற்று.

இப்படிப்பட்ட விஷயீகாரந்தன்னை யொருகால் பண்ணிவிட்டவித்தனையோவென்னில் (போகியவன்றைக்கன்று) கழிகிற நாள்தோறும் நாள்தோறு மிப்படியேயாயிற்று விஷயீகரித்தது; இது தானிருவர்படியாலு மாற்றப்போகாது. அவனுடைய விஷயீகாரத்துக் கிலக்கான விவர்படியைப்பார்த்தால், அத்தை யிவர் தாம்பொறுக்க வல்லவரல்லர்; அவனைப்பார்த்தால், தன்னை விஸ்வஸித்து உடனே கிடந்தவனை மடிதடவினவன் ''என்செய்தோமானோம்'' என்றநுதபிக்குமாபோலே, எல்லாஞ்செய்து மொன்றுஞ் செய்யாதானாய் "இவனுக்கென்செய்வோம்" என்றிருக்குமவன். (என்னைத்தன்னாக்கி) (க) ''அறிவிலேன்'' என்கிறபடியே அஜ்ஞாநாஶக்திகளுக்கிலக்காயிருக்கிற வென்னை, தன்னோடொக்க ஜ்ஞாநஶக்த்யாதிகளையுடையேனும்படி பண்ணியென்னுதல்; (என்னைத்தன்னாக்கி) தன்னுடையேனும்படிபண்ணி யென்னுதல்.

(என்னால்தன்னை) தன்னாலே தத்தஶக்திகனானவென்னாலே, ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாதிகளுக்கு அவிஷயமாம்படியிருக்கிறதன்னை (உ) ''யதோவாசோ நிவர்த்தந்தே - அப்ராப்ய மநஸா ஸஹ;'' (ந) ''யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ: - அவிஜ்ஞாதம் விஜாநதாம்'' என்கிறபடியே ப்ரமாணங்களுக் கவிஷயமாம்படியிருக்கிற தன்னை. (இன்தமிழ்பாடிய) இது தன்னிலோடுகிற வர்த்தமும் பரிமாற்றமும் கிடக்கச்செய்தே, சொல்லினிமைதானே ஆகர்ஷகமாயிருக்கும்படி. (பாடிய) என்னைக் கொண்டு பாடுவித்தானென்னுதல்; பாடினானென்னுதல். (ச) ''ஏதத்ஸாம காயந்நாஸ்தே'' என்று முக்தன் ஸாமகாநம்பண்ணுமாபோலே, அவனும் இவரோட்டை யநுபவத்

(க) ருி-எ-க. (உ) தை-ஆந-க.
(ந) கேநோப-உ. (ச) தை ப்ருகு-க0.

தால் வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு "தென்னு" என்று பாடுமாயிற்று. இப்படியினிபவித்து உண்டானபடி யெங்ஙனே யென்னில் (ஈசனை) சொல்லவேணுமோ? ஸர்வேஶ்வரன் செய்யமாட்டாததுண்டோ; அரிதோ அவனுக்கு;

கவிபாடினீர் நீராயிராநின்றீர், அவனைப் பாடினுகைச் சொல்லாநின்றீர், இது தான்செய்தபடி யென்னென்ன (ஆதியாய்நின்ற) நான் கவிபாடுகைக்கு ஹேதுவாய் நின்றான்-அவனடியாக நான் கவிபாடிற்று. ஹேதுவானபடி தானென்னென்னில் (என்சோதியை) பிடாத்தை விழவிட்டுத் தன் வடிவழகைக்காட்டினான். திருத்திரையெடுத்தால் கூப்பிடுமாபோலே கூப்பிட்டேன், அது கவியாய்த்தலைக்கட்டிற்று. வடிவழகைக்காட்டியாயிற்றுக் கவிக்குள்ளுறை கொடுத்தது. நீரும் கவிபாடினீராகில் பின்னை யிப்படி கிடந்து படுகிறதென்னென்ன (என்சொல்லிநிற்பனே) நானும்பாதிவழிவந்து அவனாலே விஷயீக்ருதனாயிருக்கிறேனே; அன்றிக்கே, பெற்றபேறுதானளவுபட்டு ஆறியிருக்கிறேனே, ஸாதநாநுஷ்டாநம்பண்ணினார்க்குப் பலம் தப்பாமையாலே நானுமிப்பேற்றுக்குச் சிலசெய்தேனாய், இது ப்ராப்தமென்றிருக்கிறேனே, பெற்றபேறுதான் ஸாத்யிக்குமதாயாறியிருக்கிறேனே, எத்தைச் சொல்லித் தரிப்பது.

(௧) "𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 । 𑌕𑍋 𑌹𑍍𑌯𑌨𑍍𑌯𑌃 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤𑌕𑍃𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 - க்ருஷ்ணத்வைபாயநம்வ்யாஸம் வித்திநாராயணம்ப்ரபும் । கோஹ்யந்ய:புண்டரீகாக்ஷாந் மஹாபாரதக்ருத்பவேத்" என்றாப்போலேயிருக்கிறதாயிற்று. இதுக்காளவந்தாரருளிச்செய்யும்படி - "ஸர்வேஶ்வரன் செய்யப்புக்கால் அரியதுமொன்றுண்டோ" என்றும். அங்ஙனன்றிக்கே, எம்பெருமானார், "இவர்தாம் சொன்னாராகிலுமொருபடிபோகச்சொல்லித் தலைக்கட்டுவர், அவனும் தானே சொன்னானாகில் நிரவத்யமாகத் தலைக்கட்டும்; சிறு ப்ரஜையெழுத்திடப்புக்கால் தானே யேதேனுமொருபடியிட்டுத் தலைக்கட்டும், பிதாவாதல் உபாத்யாயனாதல் இடப்புக்கால் தானே யெழுத்தாயிருக்கும்; அங்ஙனன்றிக்கே, இவன்கையைப் பிடித்திடுவிக்கப்புக்கவாறே, இவனே

(௧) வி-பு-௫-௪-௫.

ரிடத்தே யிழுக்க அவனேறிடத்தேயிழுக்கக் குதறிக்கொட்டியாய் ரூபமழிந்து சிதறிப்போம்; அப்படியே என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச்செய்தேயும், என்னால் வரும்தோஷம் தன்பக்கல் ஸ்பர்சியாதபடி பாடுவித்தானென்கிறார்'' என்று. (க)

இரண்டாம்பாட்டு.

என்சோல்லிநிற்பன்? என்னின்னுயிரின்றொன்றாய் *
என்சோல்லால்யான்சோன்ன இன்கவியென்பித்து *
தன்சோல்லால்தான்தன்னைக் கீர்த்தித்தமாயன் * என்
முன்சோல்லும் மூவுருவாம்முதல்வனே. (உ)

ப.—அநந்தரம், நான் தன்னைக்கவிபாடுகைக்கு, ப்ரதம ப்ரவர்த்தகனை தான் நான்பாடினேனென்று லோகத்தில் ப்ரஸித்தமாக்கித் தான் தன்னைப் பாடிக்கொண்ட வாஸ்சர்யபூதனை யெதுசொல்லி தரிப்பேனென்கிறார்.

(இ-ள்.) என் - என்னுடைய, இன் - விஷயாந்தரஸக்தமான, உயிர்-ஆத்மாவானது, இன்று - இன்று, ஒன்றாய் - தனக்கொருவஸ்துவாய், என் - என்னுடைய, சொல்லால் - வசநவ்யக்தியாலே, யான்-நான்கர்த்தாவாக, சொன்ன-சொன்ன, இன் - இனிய, கவி - கவி, என்பித்து - என்றுநாட்டிலேப்ரஸித்தமாக்கி, தன் - தன்னுடைய, சொல்லால் - வாக்காலே, தான் - தான்கர்த்தாவாய்க்கொண்டு, தன்னை - தன்னைவிஷயமாக்கி, கீர்த்தித்த- ஸ்துதித்தவனாய்-நான்சொன்னேனென்கைக்கு, என் - எனக்குள்ளேயிருந்து, முன்சொல்லும் - முன்னுருச்சொல்லக்கடவ, மாயன் - ஆஸ்சர்யபூதனாய், இதுக்கு உதாஹரணமென்னலாம்படி, மூவுருவாம் - மூர்த்தித்ரயத்தையுடையனாய், முதல்வன் - ஏகீபவித்திருக்கிற காரணபூதனை, என் - எத்தை, சொல்லி - சொல்லி, நிற்பன் - தரிப்பேன்.

அவ்வுபகாரம் பாசுரத்துக்கு நிலமல்லவென்று கருத்து. (உ)

ஆறு;—(என்சோல்லி) என்னையுமொருவஸ்துவாகக்கொண்டு, என்சொல்லால் யான்சொன்ன வின்கவியென்பித்து-ப்ரஹ்மருத்ராதிகளுக் காத்மாவாய் நின்று ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணினாப்போலே, என்னை யுபகரணமாகக்கொண்டு திருவாய்மொழி பாடியருளின தன்னுடைய விந்தகுணத்தை யெத்தைச்சொல்லி பர்யவஸிப்பதென்கிறார். (உ)

ஈடு; அவ;—இரண்டாம்பாட்டு. தான் தன்னைக்கவிப்பாடி, நான்பாடினேனென்று லோகத்தில் ப்ரஸித்தமாக்குவதே! "ஒருவனுடையபடி யிருந்தபடியென்" என்று அவனுடைய வாத்ஸல்யத்தைக் கண்டு விஸ்மிதராகிறார். அநாதிகாலம் அஹங்காரமமகாரங்களாலே நஷ்டப்ராயமாய்த் தன்பக்கல் வைமுக்யத்தைப் பண்ணிப்போந்தவென்னை, நிர்ஹேதுகமாக நானுமி முக்யம்பண்ணும்படி அவன் விஷயீகரித்தபடியை யநுஸந்தித்தால் எத்தைச்சொல்லி நான்தறையில் கால்பாவுவதென்கிறார்.

(என்சொல்லிநிற்பன்) அவனென்னை விஷயீகரித்த விஷயீகாரம் நிர்ஹேதுகமென்னவோ, ஸஹேதுகமென்னவோ. இத்தலையையாராய்ந்துபார்த்தவிடத்து ஒருஹேதுகாண்கிறிலர்; அத்தலையையநுஸந்தித்துப் பார்த்தவிடத்து ஒரு ஹேதுகாண்கிறிலர். அநாதிகாலம் கைவிட்டதுக்கு மொருஹேதுகாண்கிறிலர், இன்று கைக்கொண்டதுக்கு மொருஹேதுகாண்கிறிலர். என்றிய, அதுவென், உடையவனுகையாலே தன்னுடைமையை வேண்டினபோது விஷயீகரித்தானுனலோவென்னில்; அங்ஙனே செய்யப்போகிறதில்லை; தன்னுடைமையைத் தான் விஷயீகரித்தானுயிருக்கையன்றிக்கே, இவர்வாக்காலே தன்னைக்கவிபாட, தானுமுளனுய்த் தன் விபூதியுமுண்டாயிற்றாக நினைத்திராநின்றான் அவன்; ஆகையாலே தான் தரிக்கைக்கு ஒருற்றங்கோல்காண்கிறிலர்.

(என்னின்னுயிரின்றேன்றாய்) (இன்னுயிர்) பகவதபிப்ராயத்தாலே, அவனுடைய வங்கீகாரத்துக்கிலக்கானபடியாலே சொல்லுகிறாராதல்; அன்றிக்கே, விபரீதலக்ஷணையாலே பொல்லாதென்கிறாராதல். (இன்றேன்றாய்) இன்றைக்கு முன்பு இதுதன்னை யொன்றாக நினைத்திராராயிற்று, இன்றாயிற்றொருவஸ்துவாயிற்றது. இப்படி யும்மை விஷயீகரித்து அவன்றான்கொண்ட காரியந்தானேதென்ன (என்சொல்லாலித்யாதி) சொல்லுமென்னதாய், சொன்னேனும்நானுய், அதுதான் இனியகவியாம்படி நாட்டிலே ப்ரஸித்தமாக்கினன்; ஶப்தமாகில் ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரனதாயிருக்குமத்தனைபோக்கி, க்ஷுத்ரனை ஸம்ஸாரிக்கில்லையிறே. இனி சேதநனுக்குத் தனித்து ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு யோக்யதையில்லையிறே; ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் தததீநமா யிருக்கையாலே. இது

தன்னை யினியகவியென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினன், (க) "பாலேய்தமிழரிசைகாரர்பத்தர்பரவுமாயிரம்" என்கிறபடியே; தான் வென்று அல்லாதாரோடொக்க நின்று அர்ஜுநனைப்புகழுமாபோலே. (உ) "மலைபுரைதோள்" இத்யாதி. [செங்கணலைவலை] (ங) "அவாக்யநாதர:-அவாக்யநாதர:" என்றிருக்கக்கடவவன், அதனையவழிந்தேத்தத் தொடங்கினனாயிற்று.

"இன்கவியென்பித்து" என்றுநின்றீர், இங்ஙனன்றோவென்னில்; அன்று; பின்னைச்செய்தபடி யென்னென்னில் (தன்சொல்லாலித்யாதி) சொல்லும் தன்னது, சொன்னனும் தான், சொல்லிற்றும் தன்னை. கவிபாட்டுண்டேன் நானாகில் கிடீர்? கவிபாடினேன் நானவது. தான் தன்னைக் கவிபாடினனாகில், நீர் கவிபாடினீரென்று நாட்டிலே ப்ரஸித்தமாக்கினபடி யெங்ஙனேயென்னில் (மாயன்) சொல்லவேணுமோ, ஆஶ்சர்யஶக்தியுக்தனன்றோ. என்னை யுபகரணமாகக் கொண்டு தானே கவிபாடினன். உம்மை யுபகரணமாகக்கொண்டு கவிபாடினபடி யெங்ஙனேயென்ன (என்முன்சொல்லும்) அவன் முற்சந்தையிடப் பின்னே நான்சொன்னேன்.

தான் சொன்னனாகில் ஸ்ரீகீதையோபாதி அறமுறுகலாய்ப்போமிறே. நம்பிதிருவழுதிநாடுதாஸர், "ஸ்ரீகீதைபோவாரொருவன் ஸந்த்யாஸதஸ்ஸிலேவந்துகண்டால், பின்னையிவனுக்கு உழக்கரிசியைக்கொடுபித்துவிடுமித்தனைபோக்கி அங்கவர்கள் உள்ளிடங்கொடார்கள் ; திருவாய்மொழி யப்யஸித்தானொருவிண்ணப்பஞ்செய்வான் சென்றால், ஸர்வேஶ்வரனும் க்ராமத்திலுள்ளாரும் புறப்பட்டெதிர்கொண்டு தங்களிருப்பிடத்தையொழித்து அவனுக்குக்கொடுத்து ஆதரியாநிற்பர்கள்" என்று ப்ரஸாதிப்பர்.

அதுதானென்போலென்றால் (மூவுருவாம்முதல்வனே) ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவனை அத்யயநம்பண்ணுவித்து தேவர்களுக்கு வெளிச்சிறப்பைப்பண்ணுவித்து "அதுதன்னை ப்ரஹ்மா செய்தான்" என்று அவன்றலையிலே யேறிட்டும், ருத்ரனுக் கந்தராத்மாவாய்ப்புக்கு நின்று த்ரிபுரதஹநத்தைப் பண்ணுவித்து "ருத்ரன்செய்தான்" என்று அவன்றலையிலே யேறிட்டு விருதுபிடிக்கப்

(க) க-ரு-கக. (உ) பெரியாழ்வார்தி-உ-க-உ.

(ங) சாந்தோ-ங-கசு.

பண்ணிருப்போலேயும், தானே ப்ரபந்தத்தைப்பண்ணி, நான் பண்ணினேனென்று என்றலையிலே யேறிட்டு எனக்கொரு ப்ரஸித்தியைத்தந்தான்.

தானே கார்யஞ்செய்து பிறர்தலையிலே யேறிடுகை அவனுக்குப் பண்டே ஸ்வபாவமிறே! (க) "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி- யோப்ரஹ்மாணம்விததாதி பூர்வம்யோவைவேதாம்ஸ்சப்ரஹிணோதி" என்று ப்ரஹ்மாவை போதுவித்ததும், (உ) "விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமித தேஜஸ: । தஸ்மாத் தநுர்ஜ்யாஸம்ஸ்பர்ஶம் ஸ விஷேஹே மஹேஶ்வர:- விஷ்ணுராத்மாபகவதோபவஸ்யாமிததேஜஸ: । தஸ்மாத்தநுர்ஜ்யாஸம்ஸ்பர்ஶம்ஸவிஷேஹேமஹேஶ்வர:". இப்போது தானே நடத்திக்கொண்டதென்னென்றால்; ஸ்வேநரூபேண நின்று கார்யஞ்செய்யுமாபோலே ப்ரஹ்மருத்ராதிகளைத் தனக்கு ஶரீரமாகக்கொண்டு நின்று ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைப்பண்ணி, அவர்கள்மேலே யேறிட்டாப்போலே யிறே! என்மேலே யேறிட்டு, கவிபாடினேன் நானாகச்சொல்லித் தலைக்கட்டினபடியு மென்னைக்காகச்சொல்லிற்று. (உ)

மூன்றாம்பாட்டு

ஆமுதல்வன்இவனென்று தன்தேற்றி * என்
நாமுதல்வந்துபுகுந்து நல்லின்கவி *
தூமுதல்பத்தர்க்குத் தான்தன்னைச்சொன்ன * என்
வாய்முதலப்பனை என்றுமறப்பனோ ? (௩)

ப.—அநந்தரம், பக்தர்களுக்காக வென்னைக்கொண்டு தான் தன்னைக் கவிபாடின வுபகாரகனை யொருகால் மறக்கவிரகுண்டோ வென்கிறார்.

(இ-ள்.) முதல்வன் - காரணபூதனான தான், "இவன்-இவன், ஆம்-கவி பாடுகைக்காம்," என்று- என்று, தன்-தன்னை, தேற்றி-என்பக்கலிலே தேறும்படிபண்ணி, அதுக்கீடாக, முதல் - முந்துற, என் - என், நா-நாவிலே, வந்து- வந்து, புகுந்து - புகுந்து, நல் - அர்த்தஶப்தலக்ஷணங்களில் குறைவற்றிருப்பதாய், இன் - ஸந்தர்ப்பஸாரஸ்யத்தையுடைய, கவி-கவியை, தூ-ஸத்வஶுத்தி,

---

(க) ஶ்வேதா-௬.　　(உ) பார-கர்ண.

முதல்-முதலான, பத்தர்க்கு-பக்திகுணயோகத்தையுடையவர்க் கநுபாவ்யமாம்படி, தான் - தானே, தன்னை - தன்னை, சொன்ன - சொல்லாநின்றுகொண்டு, என்-என், வாய் - வாக்வ்ருத்திக்கு, முதல் - முதலான, அப்பனை-உபகாரகனை, என்று-என்று, மறப்பன்-மறப்பன்.

அவ்வுபகாரகத்வம் ப்ரகாஶியாத தொருகாலமுண்டாகிலிறே மறக்கலாவதென்றுகருத்து. கவிபாடுகைக்கு ப்ரதாநனுவா னிவனென்று என்னைத் தன் பக்கலிலே தேறும்படிபண்ணி யென்றுமாம். வாய்முதலென்று-வாய்த்த ஹேதுபூதனென்றுமாம். தாமுதல் பத்தரென்று-அநந்யப்ரயோஜநராய் ப்ரதாநரான பக்தரென்று மாம். (௩)

ஆறு;—(ஆமுதல்வன்) ஆமிவனே ஸர்வேஶ்வரனென்று தன்னையுள்ளபடியே யறிவித்து, என் நாவைநியமித்துக் கொண்டுவந்து புகுந்து, * அயர்வறுமமரர்களுக்கு போக்யமாக நல்லனவா யினியவானகவிகளைத் தான் தன்னைச்சொல்லுகையாகிற விம்மஹோபகாரத்தை யென்று மறப்பனென்கிறார். (௩)

ஈடு; அவ;—மூன்றாம்பாட்டு. ப்ரத்யுபகாரம்பண்ணாதொழியவுமாங்கிடீர் நான் மறந்துபிழைக்கப் பெற்றேனாகி லென்கிறார்.

(ஆமுதல்வனிவனென்றுதற்றேற்றி) முதல்வனுமிவனென்று தன்பக்கலிலே யெனக்குத் தெளிவுண்டாம்படியாகப்பண்ணி-காரணவாக்யங்களில் உபாஸ்யனாகச் சொல்லப்படுகிறான் தானேயென்று தன்பக்கலிலே நான்தெளியப்பண்ணியென்னுதல்; அன்றிக்கே, பரமபதத்தோபாதிஸம்ஸாரத்தையும் திருத்தநினைத்தோம், அதுக்கிவன்முதலாம்-அடியாமிவனென்று, தற்றேற்றி-என்பக்கலிலே தன் ஸ்வரூபாதிகளைத் தெளியப்பண்ணி யென்னுதல்.

இங்கேயருளிச்செய்யும்வார்த்தை-"திருப்புற்றுக்குக் கிழக்கே கரியமாணிக்காழ்வார் திருமுன்பின் ஸோபாநத்திலே ஆளவந்தா ரெழுந்தருளியிருக்க, உடையவர் திருப்புற்றுக்குக் கிழக்காக வெழுந்தருளி நிற்கிறவரைக்கண்டு, "ஆமுதல்வனிவன்" என்றருளிச்செய்தாராம்" என்று.

(என்நாமுதல்வந்துபுகுந்து) ஸர்வேஶ்வரன் ப்ரஹ்மாவைக்கடாக்ஷித்து, அவன்பின்னை (க) '[illegible]

(க) ரா-பா-உ-௩௦.

யம்வலாஹுவதீ - மச்சந்தா தேவதேப்ரஹ்மந் ப்ரவ்ருத்தேயம்ஸரஸ்வதீ'' என்கிறபடியே அவன் ஸரஸ்வதியையேவி, இப்படி நாலிரண்டு நிலைநின்றிறே ஸ்ரீவால்மீகிபகவானைப் பேசுவித்தது; அங்ஙனேரிடையிடின்றிக்கே, என்னுடைய நாக்கிலேதானே முற்பாடனாய் வந்து புகுந்தென்னுதல். அன்றிக்கே, என் நாவுக்கடியாய்வந்து புகுந்தென்னுதல். (நல்லின்கவி) லக்ஷணோபேதமாய், அந்தலக்ஷணங் கிடக்கச்செய்தே சொல்லினிமைதானே ஆகர்ஷகமாம்படியினிதான கவிகளை.

(தூமுதல்பத்தர்க்கு) அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்ய ஸூரிகளுக்கு. (க) ''கேட்டாரார் வானவர்கள்'' என்கிறபடியே, அவர்கள் கொண்டாடும்படி சொன்ன வென்னுதல். ஸம்ஸாரத்தில் தலையான முமுக்ஷுக்களுக்கு. (தான்தன்னைச்சொன்ன) தானே சொல்லுதல் நானேயொருபடி சொல்லுதல் செய்கையன்றிக்கே, * என்நாமுதல் வந்துபுகுந்து தான் தன்னைச் சொன்னுனயிற்று. (என் வாய்முதலப்பனை) எனக்குவாய்த்த காரணபூதனான மஹோபகாரகனை யென்னுதல்; ''என் நாமுதல்'' என்கிறது தன்னையே யநுபாஷித்து, என் வாக்குக்கு முதலானவப்பனையென்னுதல். (என்றுமறப்பனோ) முன்பு அநாதிகாலம் மறந்துபோந்ததாகில் இனிமேல் நினைக்கைக்குடலான காலத்தையெல்லாம் மறக்கைக்குடலாக்கினால் தான் மறப்பனோ. முன்பு நினைக்கையிலுள்ள வருமையோபாதியும் போரும் இனி மறக்கையிலுள்ள வருமையும். இனியேதேனுமொருநாள் தான் என்னை மறக்கப்போமோ. (௩)

நான்காம்பாட்டு.

அப்பனைஎன்றுமறப்பன்? என்னாகியே *
தப்புதலின்றித் தனைக்கவிதான்சொல்லி
ஒப்பிலாத்தீவினையேனை உய்யக்கொண்டு *
செப்பமேசெய்து திரிகின்றசீர்கண்டே. (௪)

ப.—அநந்தரம், என்விரோதியைப்பாராதே விரும்பி யென்னைக்கொண்டு தப்பாமல் கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்தைக் கண்டுவைத்து அவனைமறக்கும்படி யென்னென்கிறார்.

(க) கo-கூ-கக.

(இ-ள்.) என்னாகியே-என்பக்கலிலேதானாய், தப்புதல்-தப்புதல், இன்றி-இல்லாதபடி, தனை-தன்னை, தானே - தானே, கவி - கவி, சொல்லி - சொல்லி, ஒப்பு-ஒப்பு, இலா-அற்றிருப்பதாய், தீ - க்ரூரமான. வினையேனை - பாபத்தை யுடையேனான வென்னை, உய்ய-உஜ்ஜீவிக்கும்படி, கொண்டு - கைக்கொண்டு, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரோடு பரிமாறுமாபோலே, செப்பமே-செவ்வையே, செய்து-செய்து, திரிகின்ற வர்த்திக்கிற, சீர்-சீலத்தை, கண்டு-கண்டுவைத்து அப்பனை - இப்படி யுபகாரகனானவனை, என்று - அபகாரியானபோதுதான், மறப்பன்-மறப்பனோ. (௪)

ஆறா;-(அப்பனையென்று) என்னை யுபகரணமாகக்கொண்டு கவி சொல்லாநிற்கச்செய்தே, தப்பாதபடி சொல்லி ஒப்பில்லாத்தீவினையேனாயிருக்கச்செய்தே என்னை யாத்மாந்தமாக வடிமைகொண்டு, மேன்மேலன நன்மைசெய்து திரிகின்ற சீர்கண்டு, அப்பனையென்று மறப்பனென்கிறார். (௪)

ஈடு: அவ;—நான்காம்பாட்டு. தானே தன்னைக் கவிபாடிக் கொண்டானாகி லோராஸ்சர்ய மில்லை, அதுக்குப் பாங்கன்றிக்கேயிருக்கிற வென்னைக்கொண்டு தப்பாமே கவிபாடின விவ்வுபகாரத்தை இனிமறக்க வுபாயமில்லையென்கிறார்.

(அப்பனையென்றுமறப்பன்) உபகாரகனானவனை நானென்று மறப்பன். இனி அவனபகாரம்பண்ணினாற்றான் மறக்கப்போமோ.

உமக்கு மறக்கவொண்ணாமைக்கு அவன்பண்ணின வுபகாரமேதென்றால் (என்னாகியேதப்புதலின்றித்தனைக்கவிதான்சொல்லி) என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடுகிறவிடத்து, என்னுடைய ஸ்பர்ஶத்தாலே வந்ததோஷம் தட்டாதபடி கவிபாடினான். (என்னாகியே) என்பக்கலிலேதானாய் இவ்விடத்துக் கெம்பாரருளிச்செய்யும்படி- "தான்பாடினானாகில் நிரவத்யமாய்த்தலைக்கட்டும், நான் பாடினேனாகிலும் வருந்தியொருபடி தலைக்கட்டும், என்னையுபகரணமாகக்கொண்டு கவிபாடாநிற்கச்செய்தேயு மென்னோட்டை ஸ்பர்ஶத்தால் வந்ததோஷம் தட்டாதபடி கவிபாடித் தலைக்கட்டினான்" என்று.

(தனைக்கவிதான்சொல்லி) விஷயாநுரூபமாகக் கவிபாடினான். (ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு) என்னை யுபகரணமாகக்

கொண்டு இப்படி கவிபாடுவித்தது முன்பு நின்றநிலையிற்காட்டில் நானெவ்வளவு புகுரநின்றேனாக; நான் முன்புற்றநிலையிற்காட்டில் ஓரடிவர நின்றதுண்டோ. (ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு) நானுமவனுக்கொப்பனென்றென்கிறார்; ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வங்களுக்கு அவனுக் கொப்பில்லாதாப்போலே யாயிற்று, அஜ்ஞாநாஶக்திகளுக்கு எனக்கொப்பில்லாதபடியும். (உய்யக்கொண்டு) (க) "ஸஐேஒஜநஂதஒதாவிஷ-ஃ-ஸந்தமேநம்ததோவிதுঃ" என்கிறபடியே என்னையுஜ்ஜீவிக்கும்படி கைக்கொண்டு.

(செப்பமேசெயதுதிரிகின்ற) குடிலஹ்ருதயனாயிருக்கிற வென்னோடே, அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளோடு பரிமாறுமாபோலே என்னுடனே செவ்வையே பரிமாறினானென்னுதல்; எனக்கு ரக்ஷைபண்ணிப் போருகிறவென்னுதல். (சீர்கண்டே) இப்படியிருக்கிற சீலாதிகுணங்களை யநுஸந்தித்து - அப்பனையென்று மறப்பன். (ச)

ஐந்தாம்பாட்டு.

சீர்கண்டுகொண்டு திருந்துநல்லின்கவி *
நேர்படயான்சொல்லும் நீர்மையிலாமையில் *
ஏர்விலாவென்னைத் தன்னாக்கிஎன்னால்தன்னை *
பார்பரவின்கவி பாடும்பரமரே. (ரு)

ப — அநந்தரம், எனக்குக்கவிபாடுகைக்கு யோக்யதையின்றிக்கே யிருக்க எனக்கு யோக்யதையுண்டாக்கித் தானே தன்னைக் கவிபாடிக்கொள்ளும் பெரியவனாயிருந்தானென்கிறார்.

(இ-ள்.) சீர்-ப்ரதிபாத்யங்களான தன்குணங்களை, கண்டு-அபரோக்ஷித்து, கொண்டு-அநுஸந்தித்து, திருந்து ப்ரதிபாதகமாம்படி திருந்தியிருப்பதாய், நல்-ஶப்தார்த்தலக்ஷணோபேதமாய், இன்-(உ)*ஸம்ஶ்ரவேமதுரமான, கவி-கவிகளை நேர்பட-வாய்க்கும்படியாக, யான்-நான், சொல்லும் - சொல்லுகைக்கீடான, நீர்மை-ஜ்ஞாநஶக்த்யாதிஸ்வபாவம், இலாமையில் - இல்லாமையாலே, ஏர்விலா - அஸத்ருஶனான, என்னை-என்னை, தன்-தன்பக்கலிலே, ஆக்கி-ஜ்ஞாநப்ரேமாதிகளையுடையேனாம்படிபண்ணி, என்னால்-என்னாலே, தன்னை- தன்னை, பார்-

(க) தை-ஆந-க.
(உ) ரா-ஸு-நக-க.

கடிந ஸ்வபாவையான பூமியகப்பட பரவு கொண்டாடும்படி, இன்-மதுரமான, கவி கவியை, பாடும்-பாடுவால், பரமர் பரமனுயிராநின்றான். (ரு)

ஆறு;—(சீர்கண்டு) தன்னுடைய கல்யாண குணங்களையுள்ள படி கண்டுகொண்டு, திருந்துநல்லின்கவி நேர்பட யான் சொல்லும் நீர்மையிலாமையில் எனக்கு ஸத்ருஸரில்லை; இப்படி குணலேஸமின்றியேயிருந்தவென்னைத் தன்னைப்போலே ஹேயப்ரத்யநீகத்வ ஸர்வஜ்ஞத்வாதி குணவிஸிஷ்டனாக்கி, என்னால் தன்னை ஸர்வலோகமும் இக்கவியைஸ்துதிக்கும்படி இன்கவிபாடும் பரமனையென்று மறப்பனென்கிறார். (ரு)

ஈடு; அவ;— ஐந்தாம்பாட்டு. தன்னைக்கவிபாடுகைக்கீடான நீர்மையுமின்றிக்கே இச்சையுமின்றிக்கே யிருக்கச்செய்தே, லோகமெல்லாம் கொண்டாடும்படியான கவியை யென்னைக் கொண்டுபாடுவதே! என்ன ஸர்வேஸ்வரனோவென்கிறார்.

(சீர்கண்டுகொண்டு) கல்யாணகுணங்களை யவகாஹித்து. (திருந்தித்யாதி)கட்டளைப்பட்டு லக்ஷணோபேதமாய் இனிதானகவிகளை. (நேர்படவித்யாதி) இவையொன்றுமில்லையாகிலும், சொல்லுகிறவனுடைய நன்மையாலே வருவதொருநன்மையுமுண்டிறே கவிக்கு; அப்படி வாய்க்கச்சொல்லும் ஸ்வபாவத்தை நானுடையேனல்லாமையில். (ஏர்விலாவென்னை) ஏரென்று-அழகு, அதில்லாதவென்னை. (தன்னாக்கி) தன்னோடொக்கப்பண்ணி யென்னுதல். தனக்காக்கி யென்னுதல்.

(என்னால் தன்னையித்யாதி) என்னை யுபகரணமாகக்கொண்டு, தன்னைப் பாரிலுள்ளாரடையப்பரவும்படி யினிய கவிகளைப்பாடினான். விசேஷஜ்ஞரவிசேஷஜ்ஞரென்று வாசியின்றிக்கே எல்லாரும் கொண்டாடும்படிபண்ணினான். (பரமரே) (க) "நதத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே" என்கிற வாக்யங்கொண்டு இவனுடைய வுத்கர்ஷமறிய வேண்டா, என்னையிடுவித்துக் கவிபாடுவித்துக்கொண்ட விதுவே போரும் அவனுடைய வுத்கர்ஷமறிகைக்கு. (ரு)

(க) ஶ்வே-சு

ஆறும்பாட்டு.

இன்கவிபாடும் பரமகவிகளால் *
தன்கவிதான் தன்னைப்பாடுவியாது * இன்று
நன்குவந்துஎன்னுடனாக்கி என்னால்தன்னை *
வன்கவிபாடும் என்வைகுந்தநாதனே. (௯)

ப.—அநந்தரம். பெரியவர்களையிட்டுக் கவிபாடுவித்துக்கொள்ளாதே, என்னாலே தான் தன்னைக் கவிபாடுவித்துக்கொண்டு எனக்கு ஸ்ரீவைகுண்டநாதனான பெருமைதோன்ற விராநின்றானென்கிறார்.

(இ-ள்.) இன்-நிரதிசயமதுரமான, கவி-கவிகளை, பாடும்-பாடுமவர்களாய், பரமகவிகளால்-தங்களுக்கு மேலில்லாத கவிகளான பாராஶர பாராஶர்ய வால்மீகிப்ரப்ருதிகளாலும், முதலாழ்வார்களாலும், தன்-தனக்குத்தகுதியான, கவி-கவியை, தான்-தான், ப்ரயோஜகனாய்க்கொண்டு, தன்னை-நிரவதிகமாஹாத்ம்யயுக்தனான தன்னை, பாடுவியாது - எப்போதும் பாடுவியாதே, இன்று- இன்று, நன்கு - ஸாபிஸந்திகனாய்க்கொண்டு, வந்து - வந்து, அக்கவிபாட்டை, என்னுடன்-என்னோடே, ஆக்கி-ஆக்கி, என்-எனக்கு, வைகுந்தநாதனே-தான் ஸ்ரீவைகுண்டநாதனான பெருமையைத் தோற்றுவியா நின்றுகொண்டு, என்னால் - என்னாலே, தன்னை-அந்தப்பெருமையையுடைய தன்னை, பெருமைக்குத் தகுதியாம்படி, வன்-சிக்கென, கவி-கவி, பாடும்-பாடாநிற்கும். (௯)

ஆறு ;—(இன்கவி) இன்கவிபாடும்பரமகவிகள் தனக்குளராயிருக்கச்செய்தே, அவர்களைக்கொண்டு தன்னைக் கவிபாடுவியாதே, இன்று நன்குவந்து என்னுள்ளே புகுந்து, வேதங்களினுள்ளுமடங்காத தனக்குங்கூட வடங்காத கவிகளைப்பாடின என் வைகுந்தநாதனை யென்று மறப்பனென்கிறார். (௯)

ஈடு; அவ;—ஆறும்பாட்டு. வ்யாஸ பாராஶர வால்மீகி ப்ரமுகரான கவிகளைக்கொண்டு கவிபாடுவித்துக்கொள்ளாதே, என்னை யுபகரணமாகக்கொண்டு கவிபாடுவதே! என்று ப்ரீதராகிறார்.

(இன்கவிபாடும் பரமகவிகளால்) பின்னைத் தான் தனக்குச் சிலகவிகளைப் பாடவேண்டினால், அதுக்கிடாக விருப்பார் ஸ்ரீவேதவ்யாஸபகவான் ஸ்ரீபராஶரபகவான் ஸ்ரீவால்மீகிபகவானிவர்களுண்டாயிருக்க; மற்றும் வேணுமாகில் (௧) "செந்தமிழ்பாடுவார்" என்று

(௧) தி-மொ-௨-௮-௨.

சொல்லப்படுகிற முதலாழ்வார்களெல்லாருமுண்டாயிருக்க, என்னைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட விதுவுமொரு நீர்மையே! என்கிறார்.

முதலாழ்வார்களிலே யொருவரை "ஒருகவிசொல்விக்காணும்" என்ன [பெருகுமித்யாதி] ஆற்றுப்பெருக்குப்போலே பெருகாநின்றுள்ள மதத்தை யுடையவானையானது. [மாப்பிடிக்குமுன்னின்று] மதித்து முன்னடி தோற்றாதே வருகிற வித்தையுந் தனக்குக் கையாளாக்கிக்கொள்ளவற்றா யாயிற்று இதினுடைய ஶ்லாக்யதை யிருக்கிறபடி. [முன்னின்று] "நானிங்குத்தைக்குச் செய்யவேண்டுவதென்" என்று*ஏவிற்றுச்செய்கைக்கு அவஸரப்ரதீக்ஷமாய் நிற்குமாயிற்று. [இருகணிளமூங்கில்வாங்கி] இரண்டுகணேறி அதுக்குத் தக்க முற்றனவு மின்றிக்கேயிருக்கிற மூங்கில்குருத்தைவாங்கி. தான் மதித்து முன்னடிதோற்றாதே திரியச்செய்தேயும் பிடியின்பக்கலுண்டான வாதராதிசயத்தாலே அவதாநத்தோடே ஸாதரமாக வாங்கி. [அருகிருந்ததேன்கலந்து] திருமஞ்சநத்துக்கு உபகரணங்கள் சமைந்திருக்குமாபோலே, அருகே மலைமுழைஞ்சுகளிலே நிரம்பியிருக்கிற தேன்களிலே வாங்கித்தோய்த்து. மூங்கில் குருத்தையும் த்ரவத்ரவ்யத்தோபாதியாக வருளிச்செய்கிறார். [நீட்டும்] இதுதானிரந்துகொடாநிற்க, அத்தை "உனக்குவேண்டுவார்க்குக்கொடாய்" என்று நிற்குமாயிற்று [வான்கலந்தவித்யாதி] மூங்கில் குருத்தும் தேனும் கலந்தாப்போலே யாயிற்று, மேகமும் அவன்திருநிறமுங் கலந்திருக்கும்படி. இனிய கவிகளைப் பாடவல்ல மேலானகவிகளாலே.

(தன்கவி தான் தன்னைப்பாடுவியாது) கவியும் தன்னது, பாடினானும் தான். ப்ரதிபாத்யனும் தான். அவர்களைக்கொண்டு, தன்னுடைத்தானசொல்லாலே, அதுக்குப்ரதிபாத்யனான தான் தன்னைப் பாடுவியாதே. (இன்றுநன்குவந்து) இன்றுநானிங்ஙனே யுஜ்ஜீவிக்கும்படிக்கீடாக வந்தென்னுதல். அன்றிக்கே, நன்கு, உவந்து என்றாய்-நன்றாகவுகந்தென்றும்; இக்கவிபாடுகைதானே ப்ரயோஜநமாக வுகந்து. (என்னுடனாக்கி) என்னைப்பிரியாத வுபகரணமாகக் கொண்டு.

(வன்கவிபாடும்) சொற்செறிவை யுடைத்தாயிருக்கை, (க) "மொய்யசொல்லால்" என்கிறபடியே; ஸ்லதமாயிருக்கையன்றிக்கே (என்வைகுந்தநாதனே) "அழியாததான * கலங்காப்பெருநகரத்தை யிருப்பிடமாக வுடையோமானவோபாதி, அழியாதே வேதம்போலே நித்யமானவாயிரம் பாட்டுப்பாடுவிக்கவேணும்" என்று பார்த்தான். பரமபதத்தை யிருப்பிடமாக வுடையனானகையாலே வந்தவேற்றத் தோபாதியாக நினைத்திரா நின்றானாயிற்று, இக்கவிபாட்டுவிடையனா கையால் வந்தவேற்றத்தையும். (சு)

ஏழாம்பாட்டு.

வைகுந்தநாதன் எனவல்வினைமாய்ந்தற *
செய்குந்தன்தன்னை என்னாக்கி என்னால்தன்னை *
வைகுந்தனாகப்புகழ வண்தீங்கவி *
செய்குந்தன்தன்னை எந்நாள்சிந்தித்தார்வனோ? (ஏ)

ப.—அநந்தரம், என்விரோதியைப்போக்கித் தன்பெருமைக்கீடாகக் கவி பாடுவித்துக்கொண்ட வுபகாரகனை யநுஸந்தித்து ஒருநாள் த்ருப்திபிறக்குமோ வென்கிறார்.

(இ·ள்.) வைகுந்தநாதன் - ஸ்ரீவைகுண்டநாதனான பெருமையையுடையனாய்வைத்து, தன்னை யநுபவிக்கைக்கு விரோதியாய், வல்-ப்ரபலமான, என்-என், வினை-பாபத்தை, மாய்ந்தற- நசிக்கும்படி, செய் - பண்ணும், குந்தன்-தன்மையையுடைய, தன்னை-தன்னை, என்னாக்கி- எனக்கு விஷயமாக்கும்படியாக்கி, என்னால்-என்னைக்காரணமாகக்கொண்டு, தன்னை - அந்தப்பாரம்யத்தை யுடையதன்னை, வைகுந்தனாக-தன்னுடைய ஸர்வஸ்வபாவகுண்டநம் பிறவாத படியாக. புகழ-புகழும்படி. வண்-உதாரமாய். தீ - இனிதான, கவி - கவியை, செய் செய்யும்படியான, குந்தன்-உபகாரஸ்வபாவத்தையுடைய, தன்னை - தன்னை, சிந்தித்து-சிந்தித்து, எந்நாள்-எந்நாள், ஆர்வன்-த்ருப்திபிறப்பது. உள்ளதனையும் நினைத்தாலு மாராதென்று கருத்து.

வல்வினைமாய்ந்தறச் செய்குந்தனென்று-விரோதியைப்போக்கும் குந்தகிமாற வாயுதத்தை யுடையவனென்றுஞ் சொல்லுவர். கவிசெய்குந்தனென்று-குந்தப்பூப்போலே ஶுத்தஸ்வபாவனென்றுஞ் சொல்லுவர். தீங்கவியென்றுமாம். (ஏ)

(க) ௪-ரு-உ.

ஆறு:—(வைகுந்தநாதன்) ஸ்ரீவைகுண்டநாதனாயிருந்துவைத்து, என்னுடைய வல்வினைகளையெல்லாம்போக்கி, ஆதலால் குந்தனென்னும் திருநாமத்தையுடையனாய், என்னைத் தன்னைப்போலே தூயனாக்கி, என்னாற்றன்னை வைகுந்தனாகப்புகழ வண்டமிழ்கவிசெய் குந்தன்றன்னை காலதத்த்வமெல்லா மநுபவித்தாற்றான் ஆர்வனோ வென்கிறார். (எ)

ஈடு; அவ ;—ஏழாம்பாட்டு. என்னைக்கொண்டு, பரமோதாரமாய் நிரதிசயபோக்யமான கவியைப்பாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்துக்கு, இவனைக் காலதத்த்வ முள்ளதனையு மநுபவித்தாலும் த்ருப்தனாகிறிலேனென்கிறார்.

(வைகுந்தநாதன்) உபகரித்தவன் என்னோடணையநின்றானொருவனாய் நானறியிருக்கிறேனோ. *அயர்வறுமமரர்களதிபதி யொரு ஸம்ஸாரிபக்கலிலே மேல்விழாநின்றால் எங்ஙனே யாறியிருக்கும்படி. (க) "ஏஷ தத்த்வா ச வித்தாநி ப்ராப்ய சாநுத்தமம் யஶ: - லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி" என்கிறவிதுக்கு மவ்வருகாயிருக்கிறதிறேயிது. ஸ்ரீஸுக்ரீவமஹாராஜரை நாதராகவுடையராகைக்கு யோக்யதை ஸம்பாதித்தபடியாயிற்று முன்பு லோகநாதரானது. பெறுவார், பெறாதொழிவார், முன்னமிச்சியாநின்றார். கிடையாதத்திலேயிறே யிச்சைகள் தாம்செல்லுவது. (உ) * [illegible] - ஸராமோ வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே போலேயாயிற்று.

(என்வல்வினைமாயந்தற) வல்வினைபோகவேணுமென்றிராதவென்னுடைய. (ங) "மயர்வறமதிநலமருளினன்" என்றவித்தனையிறே. "எனக்கருளினன்" என்கைக்கு, அருளுவதற்குமுன்பு தாமொருவருளராகக்கண்டிலரிறே. (ச) "அஸத் ப்ரஹ்மேதி வேத சேத் - அஸந்நேவ ஸபவதி" என்னும் நிலையிறே முன்பு. (வல்வினைமாய்ந்தற) ஸர்வஶக்தியான தன்னாலேதான் இதுசெய்யலாமோ. (மாய்ந்தறச்செய்குந்தன்) என்னுடைய ப்ரபலவிரோதியைப்போக்கின ஶக்தியோகத்தையுடையவன். (ரு) "அடியார்க்குத்தீர்த் தகராக்குத்திமைகள் செய்கு

(க) ரா-கிஷ்-ச-கஅ
(உ) ரா-கிஷ்-ச-உக
(ங) க-க-க
(ச) தை-ஆந-சு
(ரு) உ-கூ-க.

ந்தா'' என்னக்கடவதிறே. முகுந்தா என்கிறத்தை, குந்தனென்று தலைக்குறைத்தலாய்க் கிடக்கிறதென்னவுமாம். அன்றிக்கே, குந்தனென்று-திருநாமமாகவுமாம். (க) "குந்தனென்று திருநாமமாயிற்றிறே. ஆஸ்ரிதர்பக்கலிலே பக்ஷபதித்து அவர்கள்பண்ணின பாபங்களை அநாஸ்ரிதர்பக்கலிலே அசலபிளந்தேறிட்டபடியான ஸத்தியோகத்தையிறே அவ்விடத்திற்சொல்லுகிறது. தன்னை யென்னுக்கியென்றது-என்னைத்தன்னோடொக்கப்பண்ணி யென்னுதல், தனக்காம்படி பண்ணியென்னுதல்.

(என்றால் தன்னைவைகுந்தனாகப்புகழ) பிதாவானவன் புத்ரனுக்கு ஒருபசுவை நீர்வார்த்துக்கொடுத்துத்திரிய அவன்பக்கலிலே பசுவை நீரேற்றுப் பெறுமாபோலே யிருப்பதொன்றுயிற்றிதுவும். (வைகுந்தனாகப்புகழ) நித்யவிபூதியிறேபது; இங்ஙனே யிருக்கச்செய்தேயும், இவர்புகழ்ந்தவித்தாலே தனக்கவ்விபூதி யுண்டாயிற்றதாக நினைத்திராநின்றான். ஆத்மவஸ்து நித்யமாயிருக்கச்செய்தே. (உ) 'அஸந்நேவ'' என்றும் ''ஸந்தமேநம்'' என்றும் சொல்லாநிற்கிற வோபாதியாயிற்று. ''இன்னுன்வாக்காலே கவிபாடினபின்பு அவன்வாழ்ந்தான்'' என்னக்கடவதிறே; அப்படியே புகழ்ந்தபின்பு தனக்கு அந்தவிபூதியி லிருப்புண்டாயிற்றதாக நினைத்திராநின்றானவன்.

(வண்டைங்கவியித்யாதி) உதாரமாயினிதாயிருந்துள்ள கவிகளைப்பாடி, அதுதன்னைத் தன்பேறாக நினைத்திருக்கிற ஸத்தியையுடையவனை. ''துயரறுசுடரடி'' என்கிறபடியே இவரைக்கொண்டு கவிபாடினபின்பு, தன் துயரந்தீர்ந்தானாயிருக்கிறபடி. இவர் துயர் போனபின்பு, தனக்கொரு துயருண்டாய் அதுபோனாப்போலே நினைத்திராநின்றானாயிற்று. ஸரீரத்துக்குவந்த வ்யாதி யநுபவிப்பான் ஸரீரியிறே.

(ங) [வ்யஸநேஷு மநுஷ்யாணாம்-வ்யஸநேஷு மநுஷ்யாணாம்] திவ்யாந்தஃபுரத்திலுள்ளார்க்காதல் திருத்தாய்மார்க்காதல் ஒரு வ்யஸநம்வந்தாலோ துஃக்கிதராவதென்றால் [மநுஷ்யாணாம்

(க) ஸஹஸ்ரநாமம் (உ) தை-ஆன-சு. (ங) ரா-அயோ-உ-சo

ஹ்ருஸம்ஹ ச்லிஷ்டகாஷ்டவத்- மநுஷ்யாணாம்ப்ருஸம்து:கிதோபவதி] து:கிதனானவனளவிலன்றிக்கே, ஆனையானுபட்டாப்போலே நோவுபடுவராயிற்று. [ஹ ச்லிஷ்டகாஷ்டவத் து:கிதோபவதி] இன்றொருபடியாய், பிற்றைநாளொருபடியாய், அநந்தர மாறிப்போம் இவர்களுக்கு; இவர்கள் க்லேசத்தில் நாள்தோறும் புதியராயிருப்பர். வ்யஸநம் இவனதானால் து:கமுமிவனதாகவேண்டியிருக்க, இவர் து:கிதராகைக்குஹேதுவென்னென்னில், "இவன்படுகிற க்லேசம் இவன் காவற்சோர்வால்வந்த தொன்றன்றே, நங்காவற்சோர்வாலே வந்த தொன்றன்றோ" என்று, ரக்ஷகராகையாலே நாள்தோறும் புதியராயிருப்பர். (க) "ஹ்ரீரேஷா ஹி ஸா த்வா- ஹ்ரீரேஷா ஹ்யமமா துலா" என்னக்கடவதிறே இவனையல்லவாயிற்று பிற்பாட்டுக்கவன் லஜ்ஜிக்கும்படி.

(எங்நாள்சிந்தித்தார்வனோ) பண்ணினவுபகாரம் கனத்திராநின்றது, உபகாரஸ்ம்ருதிக்குக்காலம் போருகிறதில்லை; நானென்செய்வேன். ஸரீரவிஸ்லேஷாநந்தரத்தில் தானேவாப்புகு நீராகையால் அநுஸந்திக்கைக்கு அவகாசமில்லை, இங்கிருக்கும்நாள் காலம்போருகிறதில்லை, பண்ணினவுபகாரமோ கனத்திராநின்றது; நானென்செய்கேன். (எ)

எட்டாம்பாட்டு.

ஆர்வனோ? ஆழியங்கை எம்பிரான்புகழ் *
பார்விண்நீர்முற்றும் கலந்துபருகிலும் *
ஏர்விலாஎன்னைத் தன்னாக்கிஎன்னால்தன்னை *
சீர்பெறஇன்கவி சொன்னதிறத்துக்கே. (அ)

ப:—அநந்தரம். ஸமஸ்தவிபூதியிலுமுள்ள வாகாரங்களை யுடையனாய்க்கொண்டு மஹோபகாரகனை வுன்புகழை யநுஸந்தித்தாலு மார்வனோவென்கிறார்.

(இ-ள்.) ஏர்வு-கவிபாடுகைக்குத் தகுதியான ஜ்ஞாநஸக்த்யாதிகள், இலா - இல்லாத, என்னை - என்னை, தன்னாக்கி - தன்விஷயத்திலே ஜ்ஞாநாதிகளை

(க) ரா-ஆர-௧௦-௩

யுண்டாக்கி, என்றால்-என்னையிட்டு. தன்னை - பூர்ணனான தன்னை, சீர்-சீலாதி குணலாபம், பெற - பிறக்கும்படி, இன் - இனிய, கவி-கவியை, சொன்ன - சொன்ன, திறத்துக்கு - ப்ரகாரத்துக்கு, ஆழியங்கை - கையுந்திருவாழியுமான வழகைக்காட்டி, எம்பிரான் - அறிவைப்பிறப்பித்து உறவையுண்டாக்கின வென் ஸ்வாமியுடைய, புகழ்-குணப்ரதையை, பார்-பூம்யுபலக்ஷிதமான வவதாரஸ்தலத்திலும், விண் - பரமாகாசரூபமான பரஸ்தலத்திலும், நீர்-க்ஷீரார்ணவமான வ்யூஹஸ்தலத்திலுமுள்ள, முற்றும்-சேதநரெல்லாருமாய்; கலந்து-கலந்து, பருகிலும்-அநுபவிக்கிலும், ஆர்வனோ-த்ருப்தனாவனோ. (௮)

ஆறு;—(ஆர்வனோ) என்னைக்கொண்டு தானுமுளனாம்படி கவிபாடின வந்தகுணத்தை, இவ்வண்டாந்தர்வர்த்திகளான வஸங்க்யேய வாத்மாக்களுடைய வாகாத்யுபகரணங்களையும் * அயர்வறுமமரர்களுடைய வாகாத் யுபகரணங்களையுங்கொண் டநுபவித்தால் தான் ஆர்வனோவென்கிறார். (௮)

ஈடு; அவ;—எட்டாம்பாட்டு. நானொருவனுமிருந்து ஜீவிக்கும் நாள் உபகாரஸ்ம்ருதிக்குக் காலம் போராதென்று நோவுபடுகிறேனோ, என்னுடைய வுபகார ஸ்ம்ருதியையு மபேக்ஷையையு முடையராய்க்கொண்டு புறம்பே அந்யபரராயிருக்கிற பகவத்வ்யதிரிக்த ஸமஸ்தசேதநரும் என்னுடனேகூடி நெடுங்காலமெல்லாம் நானுமவர்களுங்கூடிநின்றநுபவித்தால்தான் ஆர்வனோவென்கிறார்.

(ஆர்வனோவித்யாதி) [ஆழியங்கையெம்பிரான்புகழைப் பார் விண்ணீர்முற்றுங்கலந்துபருகிலும்-நானார்வனோ] தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளை யென்னுடைய கவிக்குவிஷயமாக்கின மஹோபகாரகனுடைய புகழை. (௧) "வாய்கொண்டுமானிடம்பாடவந்தகவியேனல்லேன், ஆய்கொண்டசீர்வள்ள லாழிப்பிரானெனக்கேயுளன்" என்கிறாரிறே. பாரிலுள்ளார், விண்ணிலுள்ளார், நீரிலுள்ளாரான விவர்களெல்லாருடைய வாகாத்யுபகரணங்களையும் போக்த்ருத்வத்தையும் ஶக்திவிசேஷங்களையு முடையேனாய்க்கொண்டு காலமெல்லாம் நின்றநுபவித்தாலுந்தான் நானார்வனோ. கலக்கை - அவற்றோடே சேர்க்கை.

அன்றிக்கே, பார்விண்ணென்று-உபயவிபூதியையுஞ்சொல்லி, நீரென்று-நீர்மையாய், ஸ்வபாவமாய், உபயவிபூதியிலுள்ளார் போக்

---

(௧) ௩-௯-௯-

த்ருத்வமாக்தி ஸ்வபாவத்தையுமுடையேனு யநுபவித்தாலும் என்ருகவுமாம்.

நீரிப்படி யெல்லாருடைய வுபகரணங்களையு முடையீராய்க் கொண்டு காலமெல்லா மநுபவியாநின்றுமாராமைக்கு அவன்பண்ணின வுபகாரந்தானேதென்றால் (ஏர்வித்யாதி) இங்கு நன்மையில்லையாகச் சொல்லுகிறது. கீழ்-கவிபாடுகைக்கிடான விச்சையுமில்லையென்றார்; இங்கு-அவ்விச்சைக்கடியான போக்யதையுமில்லையென்கிறார்.(க) "ஸுராஹணாவிவிதிஷந்தி-ப்ராஹ்மணுவிவிதிஷந்தி" என்றுநிற்கச்செய்தேயும், (உ) "யஜ்ஞேநதாநேந தபஸாநாஸகேந-யஜ்ஞேநதாநேநதபஸாநாஸகேந" என்று போக்யதையைச் சொல்லிற்றிறே; அதுவுமின்றிக்கேயிருக்கிற வென்னையென்கை.

(என்னுற்றன்னைச்சீர்பேறவின்கவிசோன்ன) ஸமஸ்தகல்யாணகுணத்மகனுனவன் இக்கவியாலே தனக்கு நிறமாம்படியாகச்சொன்ன. நான்கவிசொல்ல ஸர்வேஶ்வரனுன தனக்கு இத்தாலே நிறமாக நினைத்திராநின்றன். இச்சீர்மைக்கவரிலும் விடவொண்ணுதபடியாயிற்றுக் கவியினினிமை. (இன்கவிசோன்னதிறத்துக்கு) இப்படி இனியகவிகளைச்சொன்ன ப்ரகார மொன்றுக்கும். அல்லாதகுணங்கள் குமரிருந்துபோ மித்தனை. இப்ப்ரகாரமொன்றுக்கும்-ஆழியங்கையெம்பிரான்புகழைப் பார்விண்ணீர்முற்றுங்கலந்து பருகிலும் ஆர்வனே.

ஒன்பதாம்பாட்டு.

திறத்துக்கே துப்புரவாம் திருமாலின்சீர் *
இறப்பு எதிர்காலம் பருகிலும் ஆர்வனே? *
மறப்பிலா என்னைத் தன்னுக்கி என்னுல்தன்னை *
உறப்பல இன்கவி சோன்ன உதவிக்கே. (கூ)

ப.—அநந்தரம், கீழ்ச்சொன்ன ப்ரகாரத்திலே ஸர்வசேதந மக்திவிசிஷ்டனுய்க்கொண்டு ஸர்வகாலாநுபவம்பண்ணினுலு மார்வனேவென்கிறார்.

(இ-ள்.) ஒருகால் நினைவில்லாமையாலே, மறப்பு-மறப்பு, இலா-இல்லாதபடியான, என்னை-என்னை, தன்னுக்கி - தன்பக்கலிலே மறப்பறும்படியான

(க) ப்ருஹ-கூ-௪.

வறிவையுடையனுக்கி, என்றால்-என்னையிட்டு, தன்னை-தன்னை, உற-அவ்யவதாநேந வாசகமாய், பல - ஸஹஸ்ரஸங்க்யாதமாய், இன் - மதுரமான, கவி - கவியை, சொன்ன-சொன்ன, உதவிக்கு-உபகாரத்துக்கு, திறத்துக்கு-இழிந்த கார்யப்ரகாரங்களுக்கு, வய் - அநுரூபமான, துப்புரவாம் - ஶக்தியையுடையனை, திருமாலின் - ஶ்ரிய:பதியினுடைய, சீர்- ஔதார்யஶீலஸௌலப்யாதி குணங்களை, இறப்பெதிர்காலம் - அதீதாநாகதங்களான காலத்தையும் கூட்டிக்கொண்டு பூர்வோத்தர காலவர்த்தி ஸகலசேதந ஶக்தியுக்தனாய்க்கொண்டு, பருகிலும் - அநுபவிக்கிலும், ஆர்வனோ - ஆர்வனோ.

துப்புரவு - மிடுக்கு. (கூ)

ஆறு;—(திறத்துக்கு) அஜ்ஞாநத்துக்குங்கூட வாஶ்ரய மல்லாமையாலே அசித்கல்பனாயிருந்த வென்னைத்தன்னைப் போலேயாக்கி, என்னைக்கொண்டு பிராட்டியும் தானுமாகத் திருவாய்மொழி பாடின விம்மஹோபகாரத்தை, முன்புசொன்ன ஸர்வோபகரண யுக்தனாய்க்கொண்டு பூதபவிஷ்யத்வர்த்தமான காலமெல்லா மநுபவித்தால்தான் ஆர்வனோவென்கிறார். (கூ)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. என்னைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரகனை, ஸகலசேதநருடைய போக்த்ருத்வ ஶக்தியை யுடையேனாய்க்கொண்டு காலமெல்லாம் புஜித்தாலுமாரேனென்றார்-கீழ்; அந்தபோக்த்ருத்வ ஶக்தியுடனே காலத்வயமும் புஜித்தாலுமாரேனென்கிறார் இதில்.

(திறத்துக்கேயித்யாதி) ஏதேனுமோரிடையாட்டத்தில் வந்தால் ஒரு த்ருணத்தைக்கொண்டு காரியங்கொள்ளப் பார்த்தால் அத்தைக்கொண்டேகாரியத்தை அப்படி தலைக்கட்டிக்கொள்ளும்படிக் கீடான துப்புரவுண்டு - ஸாமர்த்த்யம், அத்தையுடையனை. அதுக்கடியென்னென்றால்; ஶ்ரிய:பதியாகையாலே. நினைத்தகாரியஞ்செய்து தலைக்கட்டுகைக்கீடான ஸாமர்த்த்யத்தையுடையனான ஶ்ரிய:பதியுடைய கல்யாணகுணங்களை. ஒருவன் செய்தது வாய்த்துவரப்புக்கவாறே, "அவன்குப்பைக்காலன்காண், ஸ்ரீமான்செய்ததெல்லாம் நன்றாய்வருங்காண்" என்னக்கடவதிறே.

(இறப்பெதிரித்யாதி) ஸமஸ்தசேதநருடையவும் வாகாத்யுபகரணங்களையும் போக்த்ருத்வாதி ஶக்திகளையும் நானுடையேனாயநு

பணிக்கப்புக்காலும், ஜீவிக்கைக்கடியான ஆயுஸ்ஸு அல்பமாகையா லே உபகாரஸ்ம்ருதிக்குக் காலம்போருகிறதில்லை; "எந்நாள்சிந்தித் தார்வனே" என்னவேண்டாதே, அவ்வவருடைய வுபகரணங்களையு முடையேனாய், போனகாலமும் மேல்வரக்கடவகாலமுமெல்லா மநு பவியாநின்றாலுந் தானார்வனே. வர்த்தமாநகாலம் தன்னடையேவரு மிறே. போனகாலமநுபவிப்பாராய்ச் சொல்லுகிறானன்று, எல்லாக் காலமு மநுபவித்தாலும் போராதென்கைக்காக. "எந்நாள் சிந்தித் தார்வனே" என்கிறதிற்காட்டில் லேற்றமில்லையாமிறே, கீழிற்பாட்டிற் சொன்ன சேதநரைக் கூட்டிக்கொள்ளாதபோது.

எல்லாருடைய வுபகரணங்களையுங்கொண்டு காலமெல்லா மநு பவித்தாலும் நிராராதேயொழிகிறது அவன்பண்ணின வெவ்வுபகா ரத்தை ஸ்மரித்தென்ன (மறப்பிலாவித்யாதி) மறப்பில்லையானவெ ன்னை. மறப்புக்குப் பூர்வக்ஷணவர்த்தியான நினைவுமெனக்கில்லை யென்கைக்காக-மறப்பிலாவென்கிற பாசுரத்தாலே யருளிச்செய்கி றார். மறப்பிலாவென்னவேண்டுவானென்னென்னில்; நினைவுள்ளவி டத்திலேயிறே மறப்புள்ளது. ஆக, காதாசித்கமான ஸ்ம்ருதியுங்கூ ட வெனக்கில்லையென்கிறார். (மறப்பிலாவென்னைத்தன்னாக்கி) கா தாசித்கமாக ஸ்மரித்துப் பின்னையொருகால்மறப்புண்டாய், அத்தை க்காணக்கண்ணிட்டுத் தானிப்படி விஷயீகரித்தானே. முதலிலே தன்பக்கல் ஸ்ம்ருதியின்றிக்கே யிருக்கிறவென்னைத் தன்னாக்கி.

(என்றால்) (க) "மறந்தேனுன்னைமுன்னம்" என்கிறவநுதாப முங்கூட வின்றிக்கேயிருக்கிற வென்னையிடுவித்து. (தன்னையுறப்ப லவின் கவிசொன்ன) என்றதுக்கு ஜீயரருளிச்செய்யும்படி- (உ) "ய தோவாசோ நிவர்த்தந்தே-யதோவாசோ நிவர்த்தந்தே" என்று வே தங்கள் மீண்டவிஷயத்தை மறுபாடுருவச்சொன்ன" என்று. அன் றிக்கே, பிள்ளான் பணிக்கும்படி- "ஸர்வேஶ்வரனுக்குச் சாலவுற்ற தென்கிறார்" என்று. (பலவின்கவிசொன்ன) (ந)"உத்தம ஸ்லோகஹ ஸ்ராணி ஸ்லோகாநாம் ஸூக்தாநி ருஷிபி:-சதுர்விம்ஶத்ஸஹஸ்ராணி ம்லோகாநாமுக்தவாந்ருஷி:" என்னுமாபோலே; ஸம்ஸாரத்திலே யிப்படி விலக்ஷணமாயிருப்பது ஆயிரம்பாட்டைப் பாடுவதே யென் கிறார். இனிய கவிகளைச்சொன்ன, உதவிக்கு-இவ்வுபகாரத்துக்கு- திருமாலின்சீரிறப்பெதிர் காலம்பருகினுமார்வனே. (க)

(க) தி-மொ-ரு-உ.உ. (உ) தை-ஆந-க.
(ந) ரா-பா-ச-உ.

பத்தாம்பாட்டு

உதவிக்கைம்மாறு என்னுயிர்என்னஉற்றேண்ணில் *
அதுவும்மற்றாங்கவன்தன்னது, என்னால்தன்னை *
பதவியஇன்கவி பாடிய அப்பனுக்கு *
எதுவும்ஒன்றுமில்லை செய்வதுஇங்குமங்கே. (கo)

ப:—அநந்தரம், அவனுடைய வுபகாரத்துக்கு ப்ரத்யுபகாரமொரு ப்ரகாரத்தாலு மில்லையென்கிறார்.

(இ-ள்.) உதவி - கவிபாடுவித்துக்கொண்ட வுபகாரத்துக்கு; கைம்மாறு-ப்ரத்யுபகாரம், என்-என், உயிர்-ஆத்மா, என்ன-என்று அத்தை, உற்று - சிக்கென, எண்ணில்-நிரூபித்துப்பார்க்கில், ஆங்கு - அந்தப்ரத்யுபகாராவஸ்தையில், அதுவும்-அந்தவாத்மாவும், மற்று-பின்னை, அவன்றன்னது - அவனுக்கஸாதாரண சேஷமாகையாலே, என்னால்-என்னையிட்டு, தன்னை-தன்னை, பதவிய-ம்ருதுவாய், இன்-இனிதான, கவி-கவியை, பாடிய - பாடின, அப்பனுக்கு - உபகாரனுக்கு, இங்கும் - இந்தவிபூதியிலும், அங்கும் - அந்தவிபூதியிலும், செய்வது-செய்யவடுப்பது, எதுவும்-ஏதேனுமல்பமாயிருப்பது, ஒன்று - ஒன்றும், ப்ரத்யுபகாரம், இல்லை-இல்லை.

ஜ்ஞாநம்பிறந்தத்தால் நித்யபரசேஷமான வாத்மாவுக்கு முமுக்ஷுதசையோடு முக்ததசையோடு வாசியற ஸமர்ப்பணீயணத்வமில்லையென்றுகருத்து. ஸ்வகீயத்வாபிமாநமுள்ளது அஜ்ஞாநதசையிலிறே. (கo)

ஆறு ;—(உதவி) இப்படியென்னைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்தருளின விம்மஹோபகாரத்துக்குக் கைம்மாறாக வென்னாத்மாவை அவனுக்கடிமையாகக் கொடுக்கவென்னில், அதுவும்பண்டே அவனுக்கடிமை யாதலால், இங்குமங்கு மிதுக்கொரு கைம்மாறுசெய்யலாவதில்லையென்று அவனுடைய மஹோபகாரத்தை யநுபவிக்கிறார். (கo)

ஈடு; அவ்;—பத்தாம்பாட்டு. உபகாரஸ்ம்ருதிக்குக் காலம்போருகிற தில்லையென்று நீர்புண்படாநில்லாதே, உம்மதாயிருப்பதொரு வஸ்துவை அவனுக்கு ப்ரத்யுபகாரமாகக்கொடுத்துப் பிழைத்துப்போக மாட்டீரோவென்ன; அப்படிசெய்யலாயிற்றிறே ஈஶ்வரனைப்போலே நானுமெனக்குடைமையா யிருப்பதொரு வஸ்துவும்பெற்றேனாகிலென்கிறார்.

(உதவி) உதவியுண்டு-உபகாரம், அதுக்குக்கைம்மாறாக - ப்ரத்யுபகாரமாக. (என்னுயிரென்ன) நித்யமாய் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் ஶ்லாக்யமா யிருப்பதொன்றுண்டிறே-ஆத்மவஸ்து, அத்தைக்கொடுத்தாலோவென்னில்; அதுசெய்யலாயிற்றிறே, அடியிலே * மயர்வறமதிநல மருளிற்றிலனாகில்; முன்னே அத்தைக்கொடுத்துவைத்தானே. ப்ராந்திஸமயத்தில் ஆத்ம ஸமர்ப்பணம்போலே யிருப்பதொன்றாயிற்று, உபகாரஸ்ம்ருதியாலே ப்ரத்யுபகாரந்தேடிக் கலங்குகிறவிது.

ப்ராந்திஸமயத்தில் ஆத்மஸமர்ப்பணந்தான்வேணும், தெளிந்தவநந்தரம் "என்னுடையவஸ்துவை அவனுக்குக் கொடுத்தேன்" என்றிருக்கக்கடவனல்லன். அநாதிகாலம் ஆத்மாபஹாரம்பண்ணிப்போந்த வதிலங்கடையாயிற்று, தெளிந்தவநந்தரம் "நானென்னுடைய வஸ்துவைத்தந்தேன்" என்றிருக்குமாகில். பின்னையும் பழைய வபஹாரமே யநுவர்த்தித்ததாமே; ஜ்ஞாநம் பிறந்தமை பொய்யாமிறே. ஸர்வமுக்தி ப்ரஸங்கபரிஹாரார்த்தமாக வாத்மஸமர்ப்பணந்தான் வேண்டிவரும்; நெஞ்சிலே வெளிச்சிறப்புண்டானால் அவன் வஸ்துவை அவனதாக விசைந்திருக்கக்கடவன். (க) "ஈயாவஶ்ரிதஃ-மயாஸமர்ப்பிதஃ" (க) "கஂவா கிந்-வஸஈவ-ஈயாஶிதெ - அதவாகிந்நுஸமர்ப்பயாமிதே" என்றுநின்றதிறே. (உ) "எனதாவி தந்தொழிந்தேன்" என்று, "எனதாவியாராயானார்" என்றாரிறே. ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால் பேற்றளவுஞ் செல்லவிவ்விரண்டாகாரமுமநுவர்த்திக்கக் கடவதாயிருக்கும். ஆக, ஆத்மஸமர்ப்பணத்துக்கும் உபகார ஸ்ம்ருதிக்கும் தனித்து இவனுக்கு ப்ராப்தியில்லாதபடியான விவனுடைய வத்யந்த பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது.

(உற்றெண்ணில்) ஆராயாதே மேலெழுந்தின்றுகொடுக்கில் கொடுக்கலாம், நெஞ்சிலே சிறிதுவெளிச்சிறப்புப்பிறந்து இதினுடைய ஸ்வரூபத்தையு மாராய்ந்துபார்த்துக் கொடுக்குமன்று கொடுக்க ப்ராப்தியில்லை. (அதுவும்) ஆத்மாவும் (மற்று) அப்படிப்பட்ட வாத்மீயங்களும். (ஆங்கவன்றன்னது) ப்ரத்யுபகாரம்பண்ணி தரிக்கவேண்டும் தசையில் அவனதாயிராநின்றது.

(க) ஸ்தோ-ர-ருஉ, (உ) உ-ரு-ச,

(என்றலித்யாதி) உபகாரஸ்ம்ருதிக்குங்கூட ப்ராப்தியில்லாத வென்றாலே, மஹோபகாரகனாயிருக்கிற தன்னை. (பதவியவின்கவி பாடியவப்பனுக்கு) கவிபாடுவிக்கிறவனுக்கு இக்கவிபாட்டாலே பண்டில்லாத நீர்மையுண்டாம்படியாகக் கவிபாடின வுபகாரகனுக்கு. (எதுவுமொன்று மில்லைசெய்வது) ஏதேனுமொன்றுஞ் செய்யலாவதில்லை.

இங்கிருக்கும் நாள் ஸங்கோசத்தாலே செய்யலாவதொன்றில்லையேயாகிலும், ஸங்கோசமற்று முக்தனானால் ப்ரத்யுபகாரம்பண்ணத்தட்டென்னென்னில் (இங்குமங்கே) இங்கானால், தேஹாத்மாபிமாநத்தாலே, "நான், என்னது" என்று பொய்க்கால்கட்டித் திரிகையாலே, "செய்யலாவதொன்றுண்டோ" என்று ப்ரமிக்கவுமாயிருக்கும்; அதுவுமின்றிக்கே, ஸங்கோசங் கழிந்தவளவில், தானே செய்யலாவதொன்றில்லை யென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. (க) "ஸ்வேந ரூபேணாபி நிஷ்பத்யதே - ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்று-ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்தவிடத்தில் ஸ்வரூபவிரோதியாக ப்ரவர்த்திக்கப்போகாதிறே.

பதினோராம்பாட்டு

இங்கும்அங்கும் திருமாலன்றியின்மைகண்டு *
அங்ஙனே வண்குருகூர்ச் சடகோபன் *
இங்ஙனேசொன்ன ஓராயிரத்துஇப்பத்தும் *
எங்ஙனேசொல்லினும் இன்பம்பயக்குமே.

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழி, தன்னோடேன்வயித்தார்க்கு நிரதிசயாநந்தத்தை யுண்டாக்காநிற்குமென்று பலத்தையருளிச்செய்கிறார்,

(இ-ள்.) இங்கும் - இந்தவிபூதியிலுண்டான வாஸ்யாணதசையிலும், அங்கும் - அந்தவிபூதியிலுண்டான கைங்கர்யதசையிலும், திருமால் - பூர்வோத்தரவாக்ய ப்ரமுகஸித்தமான ஸ்ரிய:பதித்வத்தையுடையவனை, அன்றி - ஒழிய, இன்மை-வேறில்லாமையை, கண்டு-அநுஸந்தித்து, அங்ஙனே - அந்தப்ரகாரத்தையுடையராய், வண்-உதாரான, குருகூர்ச்சடகோபன் ஆழ்வார், சொல் - தம்மை வாசிக கைங்கர்யங்கொண்ட, இங்ஙனே - இந்தப்ரகாரத்திலே, சொன்ன -

---

(க) சாந்தோ-அ-கஉ.

அருளிச்செய்த, ஓர், ஆயிரத்து-ஆயிரத்திலே, இப்பத்தும் - இப்பத்தும், எங்ஙனே - இவருடைய உபகாரஸ்ம்ருதிரூபமான-அர்த்தவ்யதிரேகேண, சொல்லிலும் - ஶப்தமாத்ரமேசொல்லிலும், ஆழ்வார்வைபவத்தாலும், இத்திருவாய்மொழியின் மாஹாத்ம்யத்தாலும், இன்பம் - பகவதநுபவஜநிதநிரதிஶயாநந்தத்தை, பயக்கும்-உண்டாக்கும்.

இது - கலிவிருத்தம். (கக)

ஆறு ;—(இங்குமங்கும்) ஶ்ரிய:பதியானவனல்லது உபகாரகரில்லையென்னுமிடத்தை யநுஸந்தித்து அந்த பாவயுக்தரான வாழ்வார், தம்மைத் திருவாய்மொழிபாடுவித்தருளின விம்மஹோபகாரத்தைச்சொன்ன வித்திருவாய்மொழி, எங்ஙனே சொல்லிலுமின்பம் பயக்குமென்கிறார்.

ஈடு ; அவ ;—பதினொன்றாம்பாட்டு. நிகமத்தில்-இத்திருவாய்மொழி, ஏதேனுமொருபடிசொல்லிலும் ஆநந்தத்தை யுண்டாக்குமென்கிறார்.

(இங்குமங்குந்திருமாலன்றி யின்மைகண்டு) ஸாதநாநுஷ்டாநஸமயத்தோடு ப்ராப்யவஸ்துவை ப்ராபித்த ஸமயத்தோடு வாசியற இஹலோக பரலோகங்க ளிரண்டிலும் ஶ்ரிய:பதியல்லதுபோக்கி இவ்வாத்மவஸ்துவுக்குத் தஞ்சமாயிருப்பார் வேறில்லையென்னுமத்தை யநுஸந்தித்து. (க) "பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு நின்கோயில்சீத்து" என்கிறபடியே, கைங்கர்யம்பண்ணுமிடத்திலும் அவள்முன்னாகப் பண்ணவேணுமிறே; ஆஶ்ரயணவேளையிலும் அவள்முன்னாக வேணுமிறே. (உ) "ஹதே தஸ்மிந் [illegible] ஹதே தஸ்மிந்குர்யு:" என்று, ராவணன் சொல்லுகையாலே அன்றிருந்து நலிந்தார்களாகில், இப்போதும் நலிவர்களோ? என்று அவர்கள்பக்கலிலும் குணத்தை யாரோபித்துச்சொல்லும் சீர்மையையுடையவளாயிற்று.

(அங்ஙனேயித்யாதி) நமக்கும், ஸதாசார்யன் அருகேயிருந்து "ஶ்ரிய:பதி யொழிய விவ்வாத்மவஸ்துவுக்குத் தஞ்சமாயிருப்பாரில்லை" என்று உபதேசித்தால், அத்தனைபோதும் "அப்படியே" என்றிருக்குமதுண்டிறே; இவரங்ஙனன்றிக்கே, அந்நினைவுக்கநுரூபமான

(க) கூ-உ-க. (உ) ரா-யு-ககரு-சக.

பரிமாற்றத்தையு முடையராயிருப்பாராயிற்று. ஆக' மநோவாக்கா யங்கள் மூன்று மொருபடிப்பட்டிருக்குமோவென்னில் (இங்ஙனித் யாதி) இப்பாவவ்ருத்தியிலே சொல்லிற்றாயிற்று ஆயிரம்பாட்டும்.

நீர், மநோவாக்காயங்கள் மூன்றிலும் "ஸரீயஃபதியேயிவ்வாத் மவஸ்துவுக்குத்தஞ்சம்" என்றத்யவஸித் தருளிச்செய்த விப்பாசு ரத்தை யப்யஸிப்பார்க்கு மநோவாக்காயங்கள் மூன்றும் பாஹ்யாதி விஷயங்களில்நின்றும் மீளவேணுமோ - நீர் (க) * சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே தந்தைதாயென்ற டைந்தவராயிராநின்றீர் ; இவர்களுக்கு மெல்லாம் பின்னை யிப்படி வேணுமோவென்னில் ; அத்தேவைகளெல்லாம் நம்மோடே, இது கற்பார்க்கு அதுவேண்டாவென்கிறார் (எங்ஙனேசோல்லிலு மின் பம்பயக்குமே) ஏதேனுமொருபடி சொல்லிலு மின்பமுண்டாம். என் னுடையபாசுரத்தைக் கற்றவர்களென்றிறே ஸம்வரணிவர்களைக்க டாக்ஷிப்பது ;

இல்லையாகில் இவர் தம்மைப்போலே மநோவாக்காயங்களு டைய நியதியுண்டா யநுபவிக்கப்பெறிலழகிது, அதில்லாதபோதும் பலவ்யபிசாரியாகாதென்கைக்காகச் சொல்லிற்றத்தனையிது. (இன் பம்பயக்குமே) (உ) "ஸைஷாநந்தஸ்ய மீமாம்ஸா भवति" என்கிறபடியே, நிரந்தரபகவதநுபவத்தால் பிறக்குமாநந்த மானது உண்டாம்.

ஏழாம்பத்து-ஒன்பதாந்திருவாய்மொழி முற்றிற்று.

(க) கூ-ரு-கக. (உ) தை-ஆந-ரு.

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஏழாம்பத்து

பத்தாந்திருவாய்மொழி

இன்பம் - ப்ரவேஶங்கள்.

ஆறு;—(இன்பம்பயக்க) இப்படி யென்னைத் திருவாய்மொழி பாடுவித்தருளுகைக்காக, திருநாட்டினின்றும் அங்கே யெழுந்தருளி யிருந்தபடியே ஸபரிகரமாகத் திருவாறன் விளையிலே வந்துபுகுந்து என்னைத் திருவாய்மொழி பாடுவித்துப் பாட்டைக்கேட்டருளி திருவடி, பெருமாள் குணங்களைச் சொல்லக்கேட்டருளி அஶோக வநிகையிலே பிராட்டி நிர்வ்ருதையா யிருந்தாப்போலே நிர்வ்ருதனா யிருந்த திருவாறன் விளையை என்றோசென்று நாமநுபவிக்கப் பெறுவதென்று மநோரதிக்கிறார். *

ப.—பத்தாந்திருவாய்மொழியில், கீழ்ப்படி தம்மைக்கொண்டு கவிபாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்தாலே தம்முடையவிரோதி அஸத்ஸமமாம்படி ஹ்ருஷ்டரானவர், அவனுபகாரத்துக்கொரு ப்ரத்யுபகாரங்காணாமையாலே, ஶேஷியானவனுக்கதிஶயஜநகமான ஶேஷவ்ருத்தியொழிய இல்லையென்றறுதியிட்டு, ப்ரதிஸம்பந்தியான வவனுடைய வஶேஷஶேஷித்வப்ரகாசகமான ஶ்ரிய:பதித்வபூர்த்தியையும், அநந்யார்ஹஶேஷத்வாபாதாநத்தையும், ஆஶ்ரிதரக்ஷணாகாரத்தையும், அநுபாவ்யமான விக்ரஹயோகத்தையும், அநுபவார்த்தமான வவதாரத்துக்கு மூலமாயுள்ள அநந்தஶயநத்வத்தையும், அநிஷ்டநிவ்ருத்திவிஶிஷ்டமான வபிமதஸாதகத்வத்தையும், ப்ரபலவிரோதி பஞ்ஜநத்வத்தையும், ஆர்த்தது:கநிவர்த்தகத்வத்தையும், பாபம்நிவ்ருத்தமாய் ப்ராப்யதேஶம் ஸித்திக்கிலும் உத்தேஶ்யமான ஆஸந்நதேஶயோகத்தையும், நிரதிஶயவ்யவஸாயஜநகத்வத்தையுமநுஸந்தித்து, ஏவம்விதஸ்வபாவனானவவன் நம்மை விரோதியைக்கழித்தடிமை கொள்ளுகைக்காக ஆஸந்நமான திருவாறன் விளையிலே ஸந்நிஹிதனான வவன் திருவடிகளிலே யடிமைசெய்யக்கடவோமென்று மநோரதித்து, இப்படி நிவர்த்த்யவிரோதிபலநிரூபண பூர்வகமாக வதினுடைய ஶரண்யநிவர்த்த்யத்வத்தை நிஷ்கர்ஷித்து நிகமிக்கிறார்.

ஈடு;—ஸர்வேஶ்வரன் தம்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக்கொண்ட மஹோபகாரத்துக்கு ப்ரத்யுபகாரந்தேடிக் காணாமை தடுமாறினார்-கீழ்த்திருவாய்மொழியிலே; இவர் தாம்தம்மு

டைய ப்ரமத்தாலே ப்ரத்யுபகாரந்தேடித் தடுமாறுகைத்தனைபோக்கி இவர்தமக்குக் கொடுக்கலாவதொன்றுமில்லை; அவனொன்று கொண்டு குறைதீரவேண்டும் ஸாபேக்ஷனல்லன்; இவர்தம்முடைய வுபகாரஸ்ம்ருதி யிருந்த விடத்திலிருக்கவொட்டாமையாலே செய்ததொன்றிறே; ஆனாலு மாறியிருக்க மாட்டாரே. இனி, நாமுமவனுக்கென்று கொடுத்தோமாய், அவனும் நம்பக்கலொன்று பெற்றானாகச் செய்யலாவதொன்றுண்டு. அவன், தனக்குவகுத்தகைங்கர்யத்தைப்பண்ணவே, அதுதன்னைத்தனக்கு ப்ரத்யுபகாரம்பண்ணிற்றாக நினைத்திருக்கும் ஸ்வபாவனாயிருந்தான்; ஆனபின்பு, நம்முடைய ஸ்வரூபாநுரூபமான வாத்மார்ந்ததாஸ்யத்திலே யதிகரிப்போமென்று பார்த்தார்.

இனித்தான், வேதவாக்யங்களும் (க) "ஸோஷ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா - ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்று - ஸ்வரூப ப்ராப்தியளவுஞ்சொல்லவே, அதுக்கவ்வருகில் கைங்கர்யமானது, அவகாதஸ்வேதம்போலே தன்னடையே வருமென்று ப்ரஹ்ம ப்ராப்தி யளவுஞ்சொல்லிவிடும். ஆழ்வார்கள் (உ) "வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்று அதுதன்னையே சொல்லாநிற்பர்கள்; ப்ராப்திபலமான கைங்கர்யத்தில் ருசியாலே. "ஸம்ஸாரம்த்யாஜ்யம், ஸர்வேஶ்வரனுத்தேஶ்யன்" என்கிற ஜ்ஞாநம்பிறந்து, பகவத்ஸமாஶ்ரயணம் பண்ணினவர்கள், (ங) "தேஷாம் ஜ்ஞாநதபோதக்தா: பேஷஜம் பகவத்ப்ராப்தி:" என்று பகவத் ப்ராப்தியளவிலே நின்றார்கள்; அவர்களிற்காட்டில் (ச) "மயர்வறமதிநலமருளினன்" என்று பகவத் ப்ரஸாத லப்தமான ஜ்ஞாநத்தையுடையரான விவர்களுக்குவாசியிதுவாயிற்று.

இனி, அடிமைசெய்யுமிடந்தன்னில் "ஶரீரஸம்பந்தமற்று பரமபதப்ராப்திபண்ணினால் பின்புசெய்கிறோம்" என்றவ்வளவு மாறியிருக்கும்படியன்றே உபகாரஸ்ம்ருதி இவரைநலிகிறபடி. ஆகையாலே, ஸ்ரீவால்மீகிபகவான் பாடின ஸ்ரீராமாயணங்கேட்கைக்குத் திருவயோத்யையிலே திருத்தம்பிமாரும் தாமுங்கூடப் பெருமாள் பேரோலக்கமிருந்தாப்போலே, ஸர்வேஶ்வரனும், நாம்பாடினதிருவாய்

(க) சாந்தோ-அ-கஉ (உ) ங-ங-க
(ங) வி-பு-ஐ-டு-ஐ (ச) க-க-க-

மொழி கேட்கைக்காகத் திருவாறன் விளையிலே, பர்யங்கவித்யையிற் சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வான்மேலே நாய்ச்சிமாரோடே கூட வெழுந்தருளி யிருந்தான். அங்கேபோய்த் திருவாய்மொழி கேட்பித்து அடிமைசெய்வோமென்று மநோரதிக்கிறாராய், அம்மநோரதந்தன்னிலும், ஸர்வேஶ்வரன் ப்ராப்யனாகில் அர்ச்சிராதிகதியோடு தேஶவிஶேஷத்தோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமிறே.

அதாவது-முன்பு அப்ராப்தமாய் பின்பு உபாஸநத்துக்குப்பலமாய் வருவனயாவைசில, அவையெல்லாம் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே; இப்படியே, திருவாறன்விளையிலே யெழுந்தருளியிருக்கிற ஸர்வேஶ்வரன் திருவடிகளிலேபோ யடிமைசெய்யக்கடவோம், அதுதானும்வேண்டா, அத்தேஶப்ராப்திதானேயமையும்; அதுதானும்வேண்டா, இங்கேயிருந்தே அங்கேறப்போவதாக மநோரதிக்கிற வம்மநோரதந்தானே யமையும். இனி, நாம் அத்தேஶத்தை "ப்ராப்யம்" என்று புத்திபண்ணிப்போருகிறவோபாதி அவனும் நாமிருந்த தேஶத்தைக்குறித்து வரக்கடவன்; அவ்வளவிலும் நாமவனை யநுவர்த்தித்து விட்டு நாம் அத்தேஶத்திலேபோய்ப் புகக்கடவோம், அத்தேஶமேநமக்கு ப்ராப்யம்; அங்கேபோய்ப்புகவே நம்முடையகைங்கர்ய விரோதிகளடையப்போம். இனி, நான் வேறொன்றிலே இச்சைபண்ணிலும், என்னெஞ்சானது அத்தேஶத்துக் கொழிய வேறொரு தேஶத்துக் காளாகமாட்டாது; (க) "ஹாவொ நாந்ருதமுக்த-பூர்வோநாந்யத்ரகச்சதி" என்கிறபடியே.

ஆக, திருவாறன் விளையிலே புக்கடிமைசெய்யக்கடவ படிகளை மநோரதித்து இனியராகிறார். ஸ்ரீராமாயணத்திற் காட்டிலிதுக்கு வாசி-பாடினாரே கேட்பிக்கையும், பாட்டுண்டாரே கேட்கையுமாயிற்று (உ) "ஸீதாயாஸ்ஸுரிதம்க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம்மஹத்" என்று நிற்கச்செய்தே, கவிபாட்டுண்டவனை யொழியத்தனியே யிருந்திறே கேட்டது. பாடினான் ஸ்ரீவால்மீகிபகவான், கேட்பித்தாரும் குஶலவர்களிறே.

(க) ரா-உத்தர-சுO-கரு (உ) ரா-பா.

முதற்பாட்டு.

இன்பம்பயக்க எழில்மலர்மாதரும்தானும் இவ்வேழுலகை *
இன்பம்பயக்கஇனிதுடன்வீற்றிருந்து ஆள்கின்றஎங்கள்பிரான் *
அன்புற்றமர்ந்துறைகின்ற அணிபொழில்சூழ்திருவாறன்விளை *
அன்புற்றமர்ந்துவலஞ்செய்து கைதொழுநாள்களுமாகுங்கொலோ ?

ப — முதற்பாட்டில், ஸேஷியானவன் லக்ஷ்மியோடே பரிபூர்ணனுயெழுந்தருளியிருக்கிற திருவாறன்விளையை யநுபவித்தடிமை செய்யுங்காலமுமாமோவென்கிறார்.

(இ-ள்.) எழில் - ஸௌந்தர்யாதி குணோபேதையாய், மலர்மாதரும் - பத்மவாஸிநீத்வத்தாலேவந்த போக்யதையையுடைய ல்க்ஷ்மியும், தானும் - அவர்கள் தான்விரும்பி மேல்விழும்படியான வைலக்ஷண்யத்தையுடைய தானும், இன்பம் - பரஸ்பராநந்தவ்ருத்தி, பயக்க - உண்டாம்படியாக, இனிதுடன் - போகஸாரஸ்யத்தோடேகூட, வீற்றிருந்து - ஸர்வஸேஷித்வ வ்யாவ்ருத்தி தோன்றும்படி யிருந்து, இவ்வேழுலகை - வ்யக்தாவ்யக்த காலஸஹித்த ஸத்வாத்மக சதுர்விதாசேதநவர்க்கமும், பத்தமுக்த நித்யரூபமான த்ரிவிதசேதநவர்க்கமுமாகிற ஏழுவகைப்பட்ட விந்தலோகங்களை, இன்பம்பயக்க - ஆநந்தகந்தளிதமாம்படி, ஆள்கின்ற - அடிமைகொள்ளாநிற்குமவனும், எங்கள்பிரான் - அப்படி யெங்களையும் வாசிக கைங்கர்யங்கொண்ட மஹோபகாரகனானவன், அன்புற்று - அடிமைகொள்ளுகைக் கேகாந்தஸ்த்தல மென்றுவிரும்பி, அமர்ந்து - அல்லாத பரவ்யூஹாதிஸ்த்தலத்திற்காட்டில் பொருத்தமுடையனாய், உறைகின்ற - நிரந்தரவாஸம்பண்ணுகிற, அணி - தர்ஸநீயமான, பொழில் - பொழில், சூழ் - சூழ்ந்த, திருவாறன்விளை - திருவாறன்விளையை, அன்புற்று - அடிமைசெய்கைக்கு ஆஸந்நஸ்த்தலமென்று ஸ்நேஹித்து, அமர்ந்து - ப்ரயோஜநாந்தரங்களைக்கொண்டு அகலப்போகத் தேடாதே பொருந்தி, வலஞ்செய்து - ஸ்வரூபாநுரூபமான வநுகூலவ்ருத்தியைப்பண்ணி, ஹ்ருஷ்டராய், கைதொழும் - * பத்தாஞ்ஜலிபுடராய் நாம் அநுபவிக்கும், நாள்களும் - நாள்கள், ஆகுங்கொல் - உண்டாமோ.

(௧)

ஆறு ;— பரஸ்பரஸாஹித்யத்தாலே தங்களுக்கின்பமுண்டாம்படியாகவும், * அயர்வறுமமரர்களுக் கினிதாம்படியாகவும், பிராட்டியோடேகூடத் திருமாமணிமண்டபத்திலே வீற்றிருந்தருளி, இவ்வேழுலகையின்பம்பயக்கவாள்கின்ற வெங்கள்பிரான் அன்புற்றமர்ந்

துறைகின்ற வணிபொழில் சூழ்திருவாறன்விளை அன்புற்றமர்ந்து வலஞ்செய்து கைதொழுநாள்களு மாகவற்றேயோவென்கிறார். (க)

ஈடு ; அவ ;—முதற்பாட்டு. திருவாறன்விளையிலேபுக்கு ஹ்ருஷ்டராய்க்கொண்டு அடிமைசெய்யுங் காலமாகவற்றே யென்று மநோரதிக்கிறார்.

(இன்பம்பயக்க) (க) "ஆநந்தமய:-ஆநந்தமய:" என்கிற வஸ்துவுக்கும், நித்யது:க்கியான ஸம்ஸாரிசேதநனுக்குத் தன்னோட்டைச் சேர்த்தியாலே ஆநந்தமுண்டாமாபோலேயாயிற்று, பிராட்டியோட்டைச்சேர்த்தியாலே அவன்றனக்கு மாநந்தமுண்டாம்படியும். (உ) " அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான்" என்று பிராட்டியோட்டைச் சேர்த்தியாலே பிச்சேறியிருக்குமாயிற்று.

(ங) [ராம:-ராம:] ஸ்ரீபரஶுராமாழ்வானைச் செருக்குவாட்டிப் படைவீட்டிலே வந்து புகுந்து சக்ரவர்த்தியையும் மஹர்ஷிகளையுமநுவர்த்தித்து தர்மோத்தரமாக நடத்திப்போந்தவர். [த-து] பித்ருஶுஶ்ரூஷணாதிகளைப் பண்ணினபின்பு பிராட்டியோட்டை ரஸதாரையிலே யிழிந்தபின்பு, "இதுக்கு முன்பெல்லாம் வாத்ஸ்யாயநம்கற்றுக் காமதந்த்ரமே நடத்திப்போந்தாரித்தனையோ!" என்னும்படி வேறுபட்டார். முன்பு போருகிறநாளில் 'இவரிதுக்கு முன்பு காமரஸம்புதியதுண்டறியாரோ!" என்னும்படி போந்தவிவர், இப்போது " இதுக்குமுன்பு தர்மதத்த்வம் புதியதுண்டறியாரோ!" என்னும்படி வேறுபட்டார். [ஸீதயாஸார்த்தம்-ஸீதயாஸார்த்தம்] அயோநிஜையாய் பரமபதத்தில் தானுமவனுமாயிருந்து கலந்தபோதைச் செவ்வியிலொன்றுங் குறையாமலிருந்தவளிறே பிராட்டி; இப்படியிருக்கச்செய்தேயும் தம்மையழியமாறி இதரஸஜாதியராய்வந் தவதரித்தாரேயாகிலும், போகத்தில்வந்தால் அவளுங்கூட அப்ராதானையாம்படி அதில் தலைநின்றார். அதுக்கடியென்னென்னில்; ராஜபுத்ரரான ரஸிகத்வத்தால்வந்த வேற்றத்தாலே. [விஜஹார-விஜஹார] பாரிப்பேயொழிய போகத்திலிழியப்பெற்றிலர். உபக்ரமத்துக்கே பணிபோந்த தித்தனை. உபோத்காதத்துக்குக் காலம்போன்ற தித்தனை. [பஹூந் ருதூந்-பஹூந்ருதூந்] (ச)

(க) தை-ஆந-ரு (உ) ங-க௦-அ

(ங) ரா-பா-எஎ-உரு (ச) ரா-ஸு-ஙங-கக-கஅ

"ஸமாத்வாதஸுதத்ராஹம்-ஸமாத்வாதஸுதத்ராஹம்" என்கிறபடியே பன்னிரண்டாண்டொருபடிப்பட வநுபவிக்கச்செய்தேயும். ருது ஸப்தத்தாலே சொல்லுகிறதாயிற்று. அவ்வவகாலங்களுக்கடைத்த புஷ்பாத்யுபகரணங்களைக்கொண்டு காலாவயவங்கள்தோறு மநுபவித்துப் போந்தமைதோற்ற. ஸீதகாலத்துக் கடைத்தவைகொண்டு பரிமாறியும், உஷ்ணகாலத்துக் கடைத்தவைகொண்டு பரிமாறியு மநுபவித்தமைதோற்றச் சொல்லுகிறது. [மநஸ்வீ-மநஸ்வீ] ப்ரணயதாரையில் வந்தால், அவள்பாரித்தபாரிப்புக்கெல்லாம் ஆனைக்குக் குதிரைவைக்கைக்கீடான நெஞ்சிலகலமுடையவராயிற்று. [தத்கத:-தத்கத:] த்ரவ்யம் த்ரவ்யத்தோடு சேர்ந்தாப்போலன்றிக்கே, ஜாதிகுணங்கள் த்ரவ்யத்தோடு சேருமாபோலேசேர்ந்தார் (க) "அநந்யாராகவேணாஹம் - அநந்யாராகவேணாஹம்" என்றும், (உ) "அநந்யாஹிமயாஸீதா-அநந்யாஹிமயாஸீதா" என்றுமிறே யிருவர்வார்த்தையும். [தஸ்யாநித்யம்ஹ்ருதிஸமர்ப்பித:-தஸ்யாநித்யம்ஹ்ருதிஸமர்ப்பித:] இதி லிழிவதற்குமுன்பு இவரையறிந்திருக்குமவளாகையாலே; "அப்படிப் பெரியவர் இப்போது என்பக்கலிலே தாழ்நிற்பதே!, இப்படி யிதொருநீர்மையே!" என்றெப்போது மிவ்வநுஸந்தாநமே யாத்ரையாகையாலே, வேறொன்றும் நெஞ்சிற்படாதே அவள் தன்னைத் தம்பக்கலிலே பொகடும்படியானார். "தத்கத: தத்கத:" என்கையாலே-இவர் தம்மை அவள் பக்கலிலே யோக்கிவைத்தபடி சொல்லுகிறது. 'நித்யம்ஹ்ருதிஸமர்ப்பித:-நித்யம்ஹ்ருதிஸமர்ப்பித:" என்கையாலே-அவள்தன்னை இவர்பக்கலிலேயோக்கிவைத்தபடி சொல்லுகிறது. இப்படி யிருவருமான சேர்த்தியிலே யிதுக்குமுன்பு ஆநந்தம் புதியதுண்டறியாதா னொருவனுக்கு ஆநந்தமுண்டாமாபோலேயாயிற்று க்ஷணந்தோறுமாநந்தமுண்டாம்படி. (எழில்மலர்மாதரும்) (ங) "ராகவோர்ஹதிவைதேஹீம்-ராகவோர்ஹதிவைதேஹீம்" என்னுமாபோலே யாயிற்று இத்தலை. (தானும்) (ச) "யஸ்யஸீதாபவேத்பார்யா-யஸ்யஸீதாபவேத்பார்யா" என்றும், (ரு) "யஸ்யஸாஜநகாத்மஜா-யஸ்யஸாஜநகாத்மஜா" என்றும் சொல்லலாம்படியாயிற்று அத்தலை.

(க) ரா-ஸு-உக-கசு-
(உ) ரா-யு-கஉஉ-கக
(ங) ரா-ஸு கசு-ரு
(ச) ரா-ஆர-ஙச-கஅ
(ரு) ரா-ஆர-ஙஎ-கஅ

(இவ்வேழுலகையின்பம்பயக்க) (க) "[illegible] ராமஸ்ஸீதாமநுப்ராப்யராஜ்யம்புநரவாப்தவாந் । ப்ரஹ்ருஷ்டமுதிதோலோகஃ" என்கிறபடியே, மாதாபிதாக்களிருவரும் சேரவிருந்து பரியப்புக்கால் ப்ரஜைகளுக்கு ஒரு குறைகளும் பிறவாதிறே. ஆக இருவருமானசேர்த்தியாலே தங்களுக்காநந்தமுண்டாக, அச்சேர்த்தியைக் காண்கையாலே லோகத்துக்காநந்தமுண்டாக, அதுதன்னைக் கண்டு, ப்ரஜை பால்குடிக்கக்கண்டுகக்கும் தாயைப்போலே, இவர்களுக்குண்டான ப்ரீதியைக்கண்டு அத்தாலே தாங்களினியராயிருப்பர்களாயிற்று. (இனிதுடன்வீற்றிருந்தாள்கின்ற) தன்ஸந்நிதியாலே லோகமடையத்தளிரும் முறியுமாம்படி யிருக்கிறவன், தான்பெறும்பேறுபெற்றாப்போலே, "திருவாய்மொழிகேட்கைக் கிடாயிருப்பதொரு தேசம்பெற்றோம்" என்றுவிரும்பி வர்த்திக்கிற தேசமாயிற்று. (எங்கள்பிரான்) * கேசவன்றமருக்குப்பின்பு இவர் தாம் ஏகாகிகளல்லரிறே; என்னை யிடுவித்துத் திருவாய்மொழிபாடுவித்துக்கொண்ட வுபகாரகன்.

(அன்புற்று) "திருவாய்மொழி கேட்கலாயிருப்பதொரு தேசம்பெறுவோமே" என்று அங்கே ஸ்நேஹத்தைப்பண்ணி. (அமர்ந்து) அத்தேசவாஸத்துக்கு மேற்பட ஒரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதேவிரும்பி. (உறைகின்ற) அவதாரங்கள்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே, நித்யவாஸம்பண்ணுகிற. (அணிபொழில்சூழ் திருவாறன்விளை) "ப்ராப்யபூமி" என்று தோற்றும்படியிருப்பதாய், அவன்றனக்கும் விபூதியிலுள்ளார்க்குமிருந்து திருவாய்மொழிகேட்கைக்கிடான பரப்பையுடைத்தாய், தர்ஸநீயமாயிருக்கிற பொழிலாலே சூழப்பட்டதிருவாறன் விளையை. (உ) "[illegible] - தேநதேதமநுவ்ரதா:" என்கிறபடியே, அவனுக்குஉத்தேஸ்யமான விடமும் இவனுக்கு உத்தேஸ்யமாகக் கடவதிறே.

(அன்புற்று) "திருவாய்மொழிகேட்கைக்கிடான தேசம்பெற்றோம்" என்று அவன் அத்தேசத்தில் விருப்பத்தைப் பண்ணினாப்போலே, "திருவாய்மொழி கேட்பிக்கைக்கிடாயிருப்பதொரு

(க) ரா-பா-க-அக (உ) ரா-அயோ-கஎ-கக

தேசத்தைப்பெறுவோமே" என்று அத்தேசத்திலே விருப்பத்தைப்பண்ணி. (அமர்ந்து) அத்தேசவாஸத்துக்கு அவ்வருகொரு ப்ரயோஜநத்தைக் கணிசியாதே. (வலஞ்செய்து) ப்ரதக்ஷிணாதிகளைப் பண்ணி. (கைதொழுநாள்களுமாதுங்கொலோ) (க) "சுஶ்ரூஷா நீம் ஸகாமஹ்ஸ்ராத் - அபிதாநீம்ஸகாலஸ்ஸ்யாத்" என்றாரே ஸ்ரீகௌஸலையார். போய்வருகைதவிராராகில் மீண்டுபுகுரும்நாள் இன்றாயிற்றாகிலோ என்றாப்போலே. இம்மநோரதத்துக்கு அடைத்தகாலமே யநுபவத்துக்கடைத்தகாலமாகப் பெற்றோமாகிலோவென்கிறார். (க)

இரண்டாம்பாட்டு.

ஆதுங்கொல்? ஐயமொன்றின்றி அகலிடம்முற்றவும் * ஈரடியே
ஆதும்பரிசுநிமிர்ந்த திருக்குறளப்பன்அமர்ந்துறையும் *
மாகம்திகழ்கொடிமாடங்கள்நீடு மதிள்திருவாறன்விளை *
மாகந்தநீர்கொண்டுதூவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொலோ?

ப.—அநந்தரம், அநந்யார்ஹத்வா பாதகமான த்ரிவிக்ரமாபதாநத்தையுடையவன் வர்த்திக்கிற திருவாறன்விளையை, ஸுகந்தமான ஜலங்களாலே திருநீரிட்டு ப்ரதக்ஷிணாத்யநு வ்ருத்திகள் பண்ணக்கூடுமோ வென்கிறார்.

(இ-ள்.) ஒன்று - ஒரு, ஐயம்- ஸந்தேஹம், இன்றி-அற ஆதுங்கொல்- உண்டாமோ, எதென்னில், அகல் - விஸ்தீர்ணமான, இடம் - லோகங்களை, முற்றவும் - எல்லாம், ஈரடியே-இரண்டடியே, ஆதும்பரிசு-ஆம்படி, நிமிர்ந்த-வளர்ந்தருளின, திருக்குறள்-ஸ்ரீவாமநனை, அப்பன்-மஹோபகாரகன், அமர்ந்து - அவதாரஸ்த்தலமான தேவலோகத்திலுங் காட்டிலமர்ந்து, உறையும் - உறையக்கடவதாய், மா - பெரிய, கம் - ஆகாசத்திலே, திகழ் - விளங்காநிற்கிற, கொடி - கொடிகளையுடைய, மாடங்கள்-மாடங்களையும். நீடு - நெடிய, மதிள் - மதிள்களையுமுடைத்தான, திருவாறன்விளை - திருவாறன்விளையை, மா - விலக்ஷணமான, கந்தம் - கந்தத்தையுடைத்தான, நீர் - நீரை, கொண்டு-கொண்டு, தூவி - தூவி, வலம் - ப்ரதக்ஷிணம், செய்து - பண்ணி, கைதொழ-அஞ்ஜலிபண்ண, கூடுங்கொலோ - கூடுமோ.

"ஆதுங்கொல்" என்கிற நினைவை - மேலேயுபபாதித்தபடியாயிருக்கிறது. ஐயமொன்றின்றியென்று - மேலேகூட்டவுமாம், இது ஶக்யமோவென்கிற வையமின்றி யளந்தானென்னவுமாம். (உ)

(க) ரா-அயோ-உ௯-௩எ.

ஆறு;—(ஆகுங்கோல்) ஒருஸந்தேஹமின்றிக்கே அகலிடமுற்றவுமீரடியேயாகும்படி யளந்தருளின ஸ்ரீவாமநனெழுந்தருளியிருக்கிறதிருவாய்மொழி பாடுவிக்கையாகிற மஹோத்ஸவத்துக்காகக்கொடிகட்டி யலங்க்ருதமான திருவாறன் விளையை, சந்தநகர்ப்பூராதி ஸுகந்த த்ரவ்யவாஸிதமாய் ஹிமஶீதளமான நீர்கொண்டு தூவி வலம்செய்து கைதொழக்கூடுமேயோவென்கிறார். (உ)

ஈடு; அவ ;— இரண்டாம்பாட்டு. திருவாறன்விளையிலே மிக்க பரிமளத்தையுடைத்தான நீரைக்கொண்டு திருநீர்விட்டு ப்ரதக்ஷிணம்பண்ணிக் கையாலே தொழவுங்கூடவற்றேயென்கிறார்.

(ஆகுங்கோலையமொன்றின்றி) இது அநுபாஷணமாகாநிற்கச்செய்தே, ஆதராதிஶயஸூசகமாயிருக்கிறது. ஒருஸம்ஶயமின்றிக்கே நமக்கிதுகூடவற்றோ. அன்றிக்கே, ஆகுங்கொலென்கிற ஐயமுங்கூடவின்றிக்கே, ஈரடியேயாகும் பரிச்சிந்நமென்னவுமாம். எல்லாம்செய்தாலும் ''நமக்கிது கூடுமோ? கூடாதோ?'' என்றிருந்தானாயிற்று மௌக்த்யத்தாலே. (அகலிடமுற்றவும்) பரப்பையுடைத்தான பூமியையும் புவர்லோகாதிகளுமெல்லா மிரண்டடியாகும் பரிச்சிந்நமாக. இரண்டடியாலே பூமயந்தரிக்ஷாதிகளை யளந்தானாயிற்று, ஓரடிக்கு இவனைச் சிறையிட்டு வைக்கநினைத்து. (திருக்குறளப்பன்) ஸ்ரீவாமநனான மஹோபகாரகன். (அமர்ந்துறையும்) இந்த்ரனுக்கு ராஜ்யத்தைவாங்கிக்கொடுத்துத் திருப்பாற்கடலிலேபோய்ச் சாய்கையன்றிக்கே, அவன்வந்து நித்யவாஸம் பண்ணுகிற.

(மாகந்திகழ்த்யாதி) அவன் திருவடிகளாலளந்த வாகாஶப் பரப்படங்கலும் வ்யாபியாநின்றுள்ள கொடிகளையுடைத்தான மாடங்களையும், ஓங்கி யிருந்துள்ள மதிட்களையுமுடைத்தான திருவாறன்விளையை. (மாகந்தநீரித்யாதி) (க) "ஸிஹ்ஜஸவஸயாம் க்ஷாராம் ஹிமஶீதேநவாரிணா - ஸிஞ்சந்துவஸுதாம்க்ருத்ஸ்நாம் ஹிமஶீதேநவாரிணா" என்று ஸ்ரீநந்திக்ராமந்தொடங்கி ஸ்ரீபரத்வாஜபகவானாஶ்ரமத்தளவும்வர, பனிநீராலேவிடுவித்தான் ஸ்ரீஶத்ருக்நாழ்வானென்றதிறே; அப்படியே, மாகந்தநீர்கொண்டுதூவி அநுகூலவ்ருத்திகளைப் பண்ணிக்கைதொழக் கூடவற்றேயோ. (உ)

(க) ரா-யு-கஉ0-௬.

மூன்றாம்பாட்டு.

கூடுங்கொல் ? வைகலும் கோவிந்தனை மதுசூதனைக்கோளரியை * ஆடும்பறவைமிசைக்கண்டு கைதொழுதன்றி, அவனுறையும் * பாடும்பெரும்புகழ்நான்மறைவேள்வியைந்துஆறங்கம்பன்னினர்வாழ் * நீடுபொழில்திருவாறன்விளைதொழ வாய்க்குங்கொல் ? நிச்சலுமே. (௩)

ப.—அநந்தரம், ஆஸ்ரிதரக்ஷணார்த்தமான வாகாரத்தையுடைய கருடவாஹநனை யநுபவித்து, அவன் வர்த்திக்கிற தேஶத்தை நித்யமாகத்தொழ வாய்க்கவற்றோவென்கிறார்.

(இ-ள்.) வைகலும் - என்றும், கூடுங்கொல் - இப்படிக்கூடவற்றோ, கோவிந்தனை - கோரக்ஷணத்துக்கு முடிசூடினவனாய், மதுசூதனை - ரக்ஷ்யவிரோதியான மதுவுக்கு நிரஸகனாய்; கோளரியை - அத்யுஜ்ஜ்வலதேஜோரூப ஸிம்ஹம்போலே விரோதிகளுக்கு அநபிபவநீயனானவனை, ஆடு - தர்ஶநீயகதியான, பறவை - பெரியதிருவடி, மிசை - மேலே, கண்டு - கண்டு, கைதொழுது - அஞ்ஜலிபண்ணி யநுபவித்து. அன்றி - அவ்வளவன்றியே, அவன் - அவன், உறையும் - வர்த்திக்குமிடமாய், பாடும் - உச்சரிதஸ்வரமாம்படிபாடப்படுகிற, பெரு - பெரிய, புகழ் - பகவத்குணப்ரதையையுடைத்தான, நான்மறை - ருக்யஜுஸ்ஸாமாதர்வண ஸ்வரூபமான நாலுவேதங்களையும், ஐந்துவேள்வி - தேவபித்ருபூதமநுஷ்ய ப்ரஹ்மயஜ்ஞரூபமான பஞ்சமஹாயஜ்ஞங்களையும், அங்கம் - ஶீக்ஷைநிருக்தம் வ்யாகரணம் சந்தோவிசிதி கல்பஸூத்ரம் ஜ்யோதிஶ்ஶாஸ்த்ரமென்கிற அங்கங்கள். ஆறு-ஆறையும், பன்னினர் - பரக்க நிரூபித்துப்போருகிறவர்கள், வாழ் - பகவதநுபவத்தோடே வாழ்வதாய். நீடு- பெரிய, பொழில் - பொழிலையுடைத்தான, திருவாறன்விளை - திருவாறன்விளையை, தொழ - தொழ, நிச்சலும் - நித்யமாக, வாய்க்குங்கொல் - வாய்க்கவற்றோ. (௩)

ஆறு;—(கூடுங்கொல்) ஸௌஶீல்யவாத்ஸல்யாதி கல்யாணகுணவிஶிஷ்டனான வெம்பெருமான் பெரியதிருவடிமேலே யெழுந்தருளியிருக்கும்படியைக்கண்டு கைதொழுகையன்றியே, அவனுக்குங்கூட ப்ராப்யமாய், ஸாங்க ஸகலவேத விதக்ரேஸரராய், ததர்த்த பரமபுருஷாராதநரூப பஞ்சமஹாயஜ்ஞாத் யநுஷ்டாந ஶீலராயி

ருந்த திவ்யஜநங்கள் வாழ்கிற திருவாறன்விளையை நிச்சலும் தொழக்கூடுமோவென்கிறார். (ரு)

ஈடு; அவ;—மூன்றாம்பாட்டு. திருவாறன்விளையி லெம்பெருமான் பெரியதிருவடிமேலே யேறியெழுந்தருளக்கண்டாலும், அவனைத்தவிர்ந்து திருவாறன்விளையைத்தொழக்கூடவற்றோ! வென்கிறார்.

(கூடுங்கொல்வைகலும்) இதுவுமநுபாஷணமாய், நாள்தோறும் நமக்கிது கூடவற்றோ. (கோவிந்தனித்யாதி) அங்கு நிற்கிறவனைக்கண்டால் மூன்றுபடி தொடைகொள்ளலாயிருக்கும். ஆஶ்ரிதவாத்ஸல்யமும், ஆஶ்ரிதவிரோதிநிரஸந ஶீலதையும், அநாஶ்ரிதர்க்கு அநபிபவநீயனென்னுமிடமு மிவை. (கோளரி) (க) "ஜ்வலந்தம் - ஜ்வலந்தம்" என்கிறபடியே.

(ஆடுபுறவைமிசைக்கண்டு) வெற்றிப்புள்ளின் மேலேகண்டு. ஆடு-வெற்றி. அன்றிக்கே, "ஸர்வேஶ்வரன்வாஹநம்" என்கிற ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே, மதுபானமத்தரைப்போலே களித்தாடாநின்றுள்ள பெரியதிருவடி திருத்தோளிலே கண்டென்றுமாம். நாம் திருவாறன்விளையை "ப்ராப்யம்" என்று போகிறவோபாதி, அவனும் திருநகரியை "உத்தேஶ்யமாம்" என்று வாராநிற்குமிறே. (கண்டு) நடுவழியிலேகண்டால். (கைதொழுது) காரியங் கொண்டிலோமேயாகிலும், கிட்டினால் கைதொழுகைக்கு ப்ராப்தியுண்டிறே; ஆகையாலே, முறைதப்பாம லநுவர்த்தித்து (அன்றி) அவனைவிட்டு. (அவனுறையும்) அவனிராத்தங்குமூரிலேபோய்ப் புகக்கடவோம். ஸர்வேஶ்வரன் ப்ராப்யனாகாநிற்கச்செய்தே, ஒரு தேசவிசேஷத்திலேபோ யநுபவிப்பதாக வொருநியதி யுண்டிறே.

(பாடும்பெரும்புகழ்நான்மறை) அவனுடைய கல்யாணகுணங்களைப்பாடாநின்றுள்ள நாலுவகைப்பட்ட வேதங்கள். (வேள்வியைந்து) பஞ்சமஹாயஜ்ஞங்கள். (ஆறங்கம்) அங்கங்களாறும். இவற்றைப்பன்னினவர்கள் - எல்லாக்கரைகண்டிருக்குமவர்கள். (உ) "போதயந்த:பரஸ்பரம் - போதயந்த:பரஸ்பரம்" என்னும்படி. அவ்வூரிலுள்ளாரோடேபோய்க்கூடவேணும். (வாழ்) வேததாத்பர்ய

(க) ந்ருஸிம்ஹமந்த்ர. (உ) கீ-௰-க

பூதனைக் கண்ணாலேகண்டநுபவித்து வாழாநின்றுள்ள. (நீடுபொழில்திருவாறன்விளைதொழ) ஒக்கத்தையுடைத்தான பொழிலையுடையதிருவாறன்விளையைத்தொழ. (வாய்க்குங்கொல்நிச்சலுமே) அங்குத்தை ஸ்ரீவைஷ்ணவர்களோடே கூடிநித்யாநுபவம் பண்ணக்கூடவற்றேயோ. (ங)

நான்காம்பாட்டு.

வாய்க்குங்கொல்? நிச்சலும்எப்பொழுதும் மனத்தீங்குநினைக்கப்பெற * வாய்க்கும்கரும்பும்பெருஞ்செந்நெலும் வயல்சூழ்திருவாறன்விளை* வாய்க்கும்பெரும்புகழ்மூவுலகீசன் வடமதுரைப்பிறந்த* வாய்க்கும்மணிநிறக்கண்ணபிரான்தன் மலரடிப்போதுகளே. (ச)

ப.—அநந்தரம், அநுபாவ்யவிக்ரஹ விசிஷ்டனாய்க்கொண்டு திருவாறன்விளையில் வர்த்திக்கிறவன்றிருவடிகளை நெஞ்சாலே நிரந்தரமாக வநுபவிக்கும்படி வாய்க்கவற்றோ வென்கிறார்

(இ-ள்.) வாய்க்கும் - ஸம்ருத்தமாய்வாய்த்துவருகிற, கரும்பும் - கரும்பும், பெரு - பெரும், செந்நெலும் - செந்நெலுமான, வயல் - வயல், சூழ் - சூழ்ந்த, திருவாறன்விளை - திருவாறன்விளையிலே, வாய்க்கும்- ஸந்நிஹிதனானதையாலே, பெரும் - அபிவ்ருத்தமான, புகழ் - புகழையுடையனாய், மூவுலகு- த்ரிவித சேதநாசேதநங்களுக்கும், ஈசன் - ஸ்வாமியாயிருந்து, ஆச்ரிதரக்ஷணார்த்தமாக, வடமதுரை - ஸ்ரீமதுரையிலே, பிறந்த - அவதரித்து, வாய்க்கும் - ஆச்ரிதர்க்கநுபாவ்யமாம்படி வாய்த்த, மணி - நீலரத்நம்போலே யிருக்கிற, நிறம் - திருநிறத்தையுடைய, கண்ணன் - க்ருஷ்ணனாகிற, பிரான்றன்-மஹோபகாரகனுடைய, மலர் - விகஸிதமான, அடிப்போதுகள் - திருவடித்தாமரைகளை, ஈங்கு - இங்கேயிருந்து, மனத்து - மநஸ்ஸிலே, நினைக்க - நினைக்க, அவனினைவின்படியே, நிச்சலும் - என்றும், எப்பொழுதும்- ஒருக்ஷணமும்மொழியாமல், பெற - பெறும்படி, வாய்க்குங்கொல் - வாய்க்கவற்றோ. (ச)

ஆறு ;—(வாய்க்குங்கொல்) ஸ்ரீமதுரையிலேவந்து திருவவதாரம்பண்ணியருளுகையாலே அத்யுஜ்ஜ்வலமான வாத்மகுணங்களையும் ரூபகுணங்களையுமுடையனாயிருந்த வவனெழுந்தருளியிருந்த திருவாறன்விளையிலே, அவன் திருவடிமலர்களை நெஞ்சாலேயநுபவிக்கக் கூடுமென்கிறார். (ச)

ஈடு ; அவ ;—நான்காம்பாட்டு. இதில், அங்குப்போ யநுபவிக்கவேண்டா ; இங்கேயிருந்து அங்குத்தைப்பரிமாற்றங்களை மநோரதிக்கும் மநோரதம் நமக்குக்கூடுவதுகாணென்கிறார்.

(வாய்க்குங்கோல்நிச்சலும்) நமக்கிப்பேறு நாள்தோறும்கூட வேணும். (எப்பொழுதும்) அதுதன்னிலும் நித்யாக்நிஹோத்ரம் போலே யொருகாலவிசேஷத்திலேயாய்ப்போகவொண்ணாது, எல்லாவவஸ்தைகளிலுமுண்டாகவேணும். (மனத்தீங்குநினைக்கப் பெற) அங்குப்போயநுபவிக்கவேண்டா, இங்கேயிருந்து நெஞ்சாலே யங்குத்தைப் பரிமாற்றங்களை யநுஸந்திக்கப்பெறவமையும். பெற வென்கையாலே - இம்மநோரதத்துக்கவ்வருகொருபேறில்லையென்றிருக்கிறாராயிற்றிவர். (க) [ஊறாதாவகி - தூர்கதாவபி] உத்க்ரமணதசையிலேவருவதொரு தூர்க்கதியுண்டு, அத்தைப்பரிஹரித்துத் தரவேணுமென்று ப்ரார்த்திக்கின்றேனல்லேன் ; * ஐயார் கண்டமடைக்கிலும் நின்கழலெய்யாதேத்தும்படி பண்ணியருளவேணும். [தவகதோமேமநோரத: - த்வத்கதோமேமநோரத:] எனக்கிதுகூடுமென்று தோற்றியிருந்ததோவுனக்கு. [யதிநாமஸநவிநேத - யதிநாமஸந்நிவர்த்தேத] இப்படியிருக்கிற விம்மநோரதத்துக் கழிவுவாராதாகில். [தாவதாவிக்ருதீஸதா - தாவதாஸ்மி க்ருதீஸதா] நாட்டார், மநோரதமென்றும், அநுபவமென்று மிரண்டாகவிறே சொல்லிப்போருவது ; எனக்கெல்லாம்வேண்டா, இம்மநோரதமாத்ரத்தாலே க்ருதக்ருத்யன் நான். [ஸதா - ஸதா] ஶரீரஸம்பந்தமற்று பரமபதத்திலேபோ யேற்றமாக வநுபவிக்குமதிற்காட்டில், நான் பேறாக நினைத்திருப்பது இத்தையே.

முற்காலத்திலே இடையாற்றுக்குடி நம்பியென்பா ரொருவருண்டு, அவர் திருநாட்கள்தோறும் பெருமாளைவந்து ஸேவித்துப் போனால், மறித்துத் திருநாள்வருந்தனையு மதுதன்னையே போது போக்காக ஸ்மரித்துக்கொண்டிருப்பராயிற்று; ஒருநாளொரு திருநாளில் வ்ருத்தாந்த மநுஸந்தியாநிற்கச்செய்தே, "அமுதுசெய்கைக்குப் போதுவைகிற்று" என்றார்களாய், "ஆகில் வருகிறதிருநாளணித்தாகிறது" என்றாராம். அவர் நூறுவயஸ்ஸும் புகுகைபாலே பல

(க) ஜித-ஸ்தோ.

ஹாநிபிறந்து திருமுளைத்திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக்கு உதவவந்து புகுரப்பெற்றிலர், பெருமாளும் தேடியருளிக் காணாமை, "நம்பிடையாற்றுக் குடியான்வந்திலன், நங்கண்ணனலமல்லவோ!" என்று திருவுள்ளமானாராம். அவர்தாமானுந்திருநாளிலே ஸேவித்திருக்கச்செய்தே, "நாமுனக்குச் செய்யவேண்டுவதென்?" என்று கேட்டருள, "தேவரீர் தந்தருளின ஶரீரத்தைக்கொண்டு போரக்காரியங்கொண்டேன், இனிப்போக்குவரத்துக்கு யோக்யமாகாதபடி போரஜரித்தது" என்ன, "வாராய், மெய்யேயிளைத்தாயாகில் இங்ஙனேயிரு" என்றருளிச்செய்தார்; பெருமாள் நடுவிற்றிருவாசலுக் கவ்வருகேயெழுந்தருளுங்காட்டில் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

(வாய்க்குமித்யாதி) இட்டதடைய ஸம்ருத்தமான தேசமாயிற்று. வாய்த்தகரும்பும், அதுக்கு நிழல்செய்யும்படியாக வளர்ந்த செந்நெலுமான வயலாலே சூழப்பட்ட திருவாறன்விளையில். (வாய்க்கும்பெரும்புகழ்) இட்டதடைய ஸம்ருத்தமான தேசமாகையாலே, அத்தேஶாபிமாநிக்கும் கல்யாணகுணங்களும் ஸம்ருத்தமாகாநிற்குமாயிற்று. (மூவுலகீசனித்யாதி) ஸர்வலோகேஶ்வரனாயிருந்து வைத்து, * ஸாதுபரித்ராணார்த்தமாக ஸ்ரீமதுரையிலேவந்தவதரித்த. (வாய்க்குமணிநிறக்கண்ணபிரான்றன்) அப்ராக்ருததிவ்ய ஸம்ஸ்தாநத்தையிறே இதரஸஜாதீயமாக்கிற்று; ஆகையாலே, அழகிய நீலமணிபோன்ற திருநிறத்தையுடைய வுபகாரஶீலனான க்ருஷ்ணனுடைய, விகாஸத்தையுடைத்தான திருவடிகளாகிற செவ்விப்பூக்களை-ஈங்கு-மனத்து-நினைக்கப்பெற-வாய்க்குங்கொல் நிச்சலுமெப்பொழுதும். (௪)

ஐந்தாம்பாட்டு.

மலரடிப்போதுகளென்னெஞ்சத்து எப்பொழுதும்இருத்திவணங்க*
பலரடியார்முன்பருளிய பாம்பணையப்பன்அமர்ந்துறையும் *
மலரின்மணிநெடுமாடங்கள்நீடு மதிள்திருவாறன்விளை *
உலகமலிபுகழ்பாட நம்மேல்வினையொன்றும்நில்லாகெடுமே, (௫)

ப:—அநந்தரம், ஆஶ்ரிதாநுபவார்த்தமாக வநந்தஶாயியானவன் வர்த்திக்கிற திருவாறன்விளையினுடைய ஸம்ருத்தமான புகழைப்பாட, நம்பாபமொன்றுமொழியாமேபோமென்கிறார்.

(இ-ள்.) மலர் - நிரதிஶயபோக்யமாம்படி விகஸிதமான, அடிப்போது கள் - திருவடித்தாமரைகளை, என்-என், நெஞ்சத்து - நெஞ்சத்திலே, எப்பொழுதும் - ஸர்வகாலமும், இருத்தி - இருத்தி, வணங்க- அந்தவுகப்பாலே வணங்கும்படியாக, பலர் - ஸூரிகளும், பராஶராதிகளும் பக்தர்களுமான பலவகைப்பட்ட, அடியார் - அடியார், முன்பு - ஸந்நிதியிலே, அருளிய - நிரவதிகக்ருபையைப்பண்ணியருளின, பாம்பணையப்பன் - ஆஶ்ரிதஸம்ஶ்லேஷஸ்வபாவனுயுள்ள வநந்தஶாயியானவன், அமர்ந்து - புறம்பு ஜகத்வ்யாபாராங்யபாரதையற்று, உறையும் - வாஸந்தானே ப்ரயோஜநமாக வர்த்திக்குமிடமாய், மலரில் - புஷ்போபஹாரங்களையுடைத்தான, மணி - மணிமயமான, நெடு - ஓங்கின, மாடங்கள் - மாடங்களையும், நீடு - நெடிய, மதிள் - மதிளையுமுடைத்தான, திருவாறன்விளை - திருவாறன்விளையினுடையதாய், உலகம் - லோகத்திலே, மலி - மிக்க, புகழ் - புகழாய், பாட - உகப்போடேபாட, நம்-நம்மை, மேல் - மேலிட்டு வர்த்திக்கிற, வினை - பாபங்கள், தானே, ஒன்றும் - நம்பக்கலொன்றும், நில்லா - இல்லாதே, கெடும் - புக்கவிடமறியாமற்போம். (௫)

ஆறு ;— (மலரடிப்போதுகள்) தன்திருவடிமலர்களை யென்னெஞ்சத்தெப்பொழுதுமிருத்தி வணங்கித் திருவாய்மொழிபாடியநுபவிக்கும்படி, திருவநந்தாழ்வான் முதலாகவுள்ள பலரடியார் முன்பருளிய பரமகாருணிகனமர்ந்துறையும் திருவாறன்விளையினுடைய வுலகமலிபுகழ்பாட நம்முடைய க்லேஶமெல்லாம் தீரும்; திருவாறன்விளையைப் பாடுங்கோளென்று ஸ்ரீ வைஷ்ணவர்களைக் குறித்தருளிச்செய்கிறார். (௫)

ஈடு ; அவ ;—ஐந்தாம்பாட்டு திருவாறன்விளையிலே புக்கடிமைசெய்கைக்கு விரோதியானவையெல்லாம், அவனுடைய மிக்க புகழைப்பாடப் பறந்துபோமென்கிறார்.

(மலரடிப்போதித்யாதி) மலர்ந்திருந்துள்ள திருவடிகளாகிற செவ்விப்பூக்களை யென்னுடைய ஹ்ருதயத்திலே யெப்போதுமிருத்தி, அவ்வநுஸந்தாநம்போய்க்கனக்க அத்தாலே நிர்மமனாய்க்கொண்டு திருவடிகளிலே விழும்படியாக. (பலரடியார்முன்பருளிய) ஸ்ரீவேதவ்யாஸபகவான், ஸ்ரீவால்மீகிபகவான், ஸ்ரீபராஶரபகவான், (௧) "இன்கவிபாடும் பரமகவிகள்" என்று சொல்லப்படுகிற முதலாழ்

(௧) ௭-௯-௬

வார்களெல்லாரு முண்டாயிருக்க, என்பக்கலிலே விஶேஷகடாக்ஷம் பண்ணுவதே!. (௧) [ஸஹஸ்ரசோ நநஹதாஹநஜ்ஜைசவெக்ஷத-பஹுமாநேநமஹதா ஹநுமந்தமவைக்ஷத] முதலிகளெல்லாருமிருக்கச்செய்தே திருவடிபக்கலிலே விஶேஷகடாக்ஷம்பண்ணினாப்போலே யாயிற்று', பலருமுண்டாயிருக்க விவரை விஷயீகரித்தபடி

“கிழக்குத்தை ராஜாக்கள் பொல்லாங்காலே இங்கேநலிவுபிறக்கு மளவிற்செய்வதென் ?” என்று எம்பெருமானார் அத்தை யநுஸந்தித்தருளி, “இத்தேசத்தைவிடாதே நோக்கிக்கொண்டுகிடந்தோம், இவ்விடத்துக்கு மழிவுவரும்படி ஆஸுரவர்க்கம் மேலிடாநின்றது, மேல்செய்ய வடுப்பதென்ன?” என்று பெரியநம்பிக்கறிவிக்க; “நான் பெருமாளுடைய திருவெல்லையிலே யொருப்ரதக்ஷிணம் வரும்படியாக வும்முடைய ஶிஷ்யர்களிலே யொருவரைப் போரவிடுவது” என்ன, “அதுக்காவாரார்” என்ன, “என்பின்னே போராநின்றால் ‘ஒருவன்பின்னே போகாநின்றேனென்று தன்னெஞ்சிற்படாதே, சாயைபோலே யென்னைப்பின் செல்வானொருவனாகவேணும்” என்ன, “அதுக்காவாரார்” என்ன, “ஆழ்வானைப் போகவிடலாகாதோ” என்றாராம். (பலரடியார்முன்பருளிய) பலமுதலிகளுண்டாயிருக்க, ஆழ்வானை ப்ரஸாதித்தாப்போலே.

(பாம்பணையப்பனமர்ந்துறையும்) பர்யங்கவித்யையிற்சொல்லுகிறபடியே திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேஶ்வரன், அப்படுக்கையிற்காட்டிலும் விரும்பி வர்த்திக்கிற தேசமாயிற்று. (மலரில் மணிநெடுமாடங்கள்) தேவர்கள் வர்ஷித்த புஷ்பத்தோடேகூடி, மணிமயமான மாடங்களினுக்கத்தையுடைத்தாய், ஓங்கினமதிளையுமுடைத்தான திருவாறன்விளை. (உலகமலிபுகழ்பாட) ஈண்டினவிடத்தில் வெள்ளம்போலே, லோகத்திலடங்காதபடியான வவனுடைய கல்யாணகுணங்களை ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டுபாட. (நம்மேல்வினையொன்றுநில்லாக்கெடுமே) பாபம்போகைக்காகத் தனித்தோருத்யோகம்பண்ணவேண்டா, பால்குடிக்க நோய்தீருமா போலே நம்முடைய பாபங்கள் தாமே நஶித்துப்போம். (௫)

---

(௧) ரா-ஸு-௯௯-௪௦.

ஆறும்பாட்டு.

ஒன்றுநில்லாகெடும் முற்றவுந்தீவினை உள்ளித்தொழுமின் தொண்டர்!* அன்றங்கமர்வென்றுஉருப்பிணிநங்கை அணிநெடுந் தோள்புணர்ந்தான்* என்றுமெப்போதுமென்னெஞ்சந்துதிப்ப உள்ளேயிருக்கின்றபிரான் * நின்றஅணிதிருவாறன்விளையென்னும் நீள் நகரமதுவே. (௬)

ப —அநந்தரம், அநிஷ்டமான விரோதியைத் தலையழித்து அபிமதையானருக்மிணியை ஸம்ஶ்லேஷித்த க்ருஷ்ணன் வர்த்திக்கிற திருவாறன் விளையை யாஶ்ரயிக்க, ஸமஸ்தபாபங்களும் போமென்கிறார்.

(இ-ள்,) அன்று - ஶிஶுபாலன் கைப்பிடிப்பதாகப் படைதிரட்டின வன்று, அங்கு - பின்தொடர்ந்துவந்தவிடத்திலே, ருக்மனை: அமர் - பூசலிலே. வென்று - வென்று, நங்கை - பரிபூர்ணநுபவையான, உருப்பிணி - ருக்மிணியினுடைய, அணி - அலங்காராலங்க்ருதமாய், நெடும் - அதிஶயிதபோக்யமான, தோள் - திருத்தோள்களை. புணர்ந்தான் - (க) ,, ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம்பரிஷஸ்வஜே '' என்கிற கணக்கிலே ஸம்ஶ்லேஷித்தவனாய், இவ்வபதாநத்தை, என்றும் - என்றும், எப்போதும் - ஒருக்ஷணமுமொழியாமல், என் - என், நெஞ்சம் - நெஞ்சமானது, துதிப்ப - அநுபவித்து ஸ்தோத்ரம் பண்ணும்படி, உள்ளே - என்னகவாயிலே. இருக்கின்ற - இருக்கிற, பிரான் - மஹோபகாரகனானவன், நின்ற - எல்லாருங்கண்டநுபவிக்கும்படி நின்றருளின, அணி - தர்ஶநீயமான, திருவாறன்விளை - திருவாறன்விளை, என்னும - என்று ப்ரஸித்தமான, நீணகரமது - அந்தமஹாநகரத்தை, தொண்டர் - அநுபவசாபலமுடைய நீங்கள், உள்ளி - அநுஸந்தித்து, தொழுமின் - தொழும்படிபாருங்கோள், தீ - க்ரூரமான, வினை - பாபங்கள், ஒன்றும் - ஒன்றும், நில்லா - ஶேஷியாதபடி நிலைதளர்ந்து, முற்றவும் - ஸர்வமும், கெடும் - நஶித்துப்போம் (௬)

ஆறு;—(ஒன்றுநில்லாக்கெடும்) அன்றங்கமர்வென் றுருப்பிணிநங்கை யணிநெடுந்தோள் புணர்ந்தருளிய திருமணம் புணர்ந்தருளின திருவழகை யென்றுமென்னெஞ்சம் துதிப்ப வென்னெஞ்சுள்ளே புகுந்திருக்கிறபிரான் நின்ற வணிதிருவாறன்விளையென்னும் நீணகரமதுவே, உள்ளித்தொழுமின்தொண்டர், உங்கள் ஸமஸ்தது:க்கங்களும் போமென்கிறார். (௬)

(க) ரா-ஆ-௩௦-௪௦.

ஈடு; அவ;—ஆறும்பாட்டு. எம்பெருமான் பக்கல் சாபல முடையார் உங்களுடைய ஸமஸ்த து:கங்களும் போம்படி திருவா றன்விளையை நெஞ்சாலே நினையுங்கோளென்கிறார்.

(ஒன்றுநில்லாக்கெடும்முற்றவுந்தீவினை) இவன்றான் போக்கப் பார்க்குமன்றிறே, புதுப்புடவை யழுக்குக் கழற்றுமாபோலே சிறி துகிடக்கச் சிறிதுபோவது; அங்ஙனன்றிக்கே, ஸர்வஶக்தியான வன் போக்குமன்று வாஸநையோடேபோமிறே. (க) [ஶைலமேரு ஸமாநோऽபி - மேருமந்தரமாத்ரோபி] மேருவையும், அதின் மேலே மந்தரத்தையும் வைத்தாப்போலே யிருக்கிற கனத்த பாப ங்கள்; ஶரதமாக, பிக்ஷைக்கிட்டின தூர்வ்யாதிநஶிக்குமாபோ லே, (உ) *மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணனைக்கிட்டின பாபங்க ளானவை நசிக்கும். (ந) "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" என்றானிறே. (ச) "ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே - ஸர்வேபாப்மாந:ப்ரதூயந்தே" என் றுநின்றதிறே. இதுதேஶத்துக்கு முபலக்ஷணம்.

(உள்ளித்தொழுமின்தொண்டர்) அதனையநுஸந்தித்து ஆஶ்ர யிக்கப்பாருங்கோள், பகவத்விஷயத்தில் சாபலமுடையார். (அன் றித்யாதி) அபேக்ஷித்தவர்களுடைய வபேக்ஷித ஸமயத்திலேவந்து தோற்றுமவனாயிற்று. (அன்று) சிசுபாலன் ஸ்வயம்வரத்திலே முடுகியிருக்கிறவன்று. (அங்கு) இவன் த்வரியாநின்றான், உடைய வன்வந்து கைக்கொள்ளானோவென்றிருக்கிறவளவிலே, தூணிலே தோற்றினாப்போலே தோற்றினானாயிற்று. (அமர்வென்று) அவ ளுக்காக மார்விலேயப் பேற்று. (உருப்பிணிநங்கை) எல்லாம்பட வேண்டும்படி ஆத்மகுணங்களாலே பூர்ணையாயிருக்கும்படி. (அணி யித்யாதி) தனக்குத்தானே யாபரணமாய், போக்யதை யளவிறந் துள்ள தோளோடே கலந்தவன்.

(என்றுமித்யாதி) ருக்மிணிபிராட்டியுடைய கல்யாணகுணமே காணும் இவர்நெஞ்சில்பட்டுக் கிடப்பது. எல்லாக்காலத்திலு மெல் லாவவஸ்தைகளிலும் என்னுடைய ஹ்ருதயமானது ஸ்துதிக்கும் படி யென்னெஞ்சிலேயிருக்கிற வுபகாரகன். (நின்றவித்யாதி) ப்ரகா

(க) விஷ்ணுதர்ம.
(உ) பெரி-திரு-ரு-ந-எ.
(ந) கீதை-கஅ-சு-சு.
(ச) சாந்தோ-ரு-உ-ச.

சியாநிற்கச்செய்தேயும் கண்ணுக்கிலக்காகாதபடி யிருக்கையன்றிக்கே. "இவன் நமக்குளன்" என்று அச்சந்திரும்படி கண்ணாலேகண்டநுபவிக்கும்படி நிற்கிற வழகிய திருவாறன்விளையாகிற மஹாநகரத்தை-உள்ளித்தொழுமின்தொண்டீர். தாமடிமைசெய்யமநோரதிக்கிறாராகில், "உள்ளித்தொழுமின்" என்கிற பரோபதேஶத்துக்குக் கருத்தென்னென்னில்; இவர்க்கு ஸ்வாநுபவந்தான் பரோபதேஶத்தை யொழிந்திராது, நெஞ்சை ஸம்போதித்தத்தோடு தொண்டரென்றத்தோடு வாசியில்லை. (சு)

ஏழாம்பாட்டு.

நீணகரமதுவேமலர்ச்சோலைகள்சூழ் திருவாறன்விளை * [கோன் *
நீணகரத்துறைகின்றபிரான் நெடுமால்கண்ணன்விண்ணவர்
வாணபுரம்புக்குமுக்கட்பிரானைத் தொலையவெம்போர்கள்செய்து *
வாணனைஆயிரந்தோள்துணித்தான்சரணன்றி மற்றொன்றிலமே.

ப.— அநந்தரம், அநிருத்தனுக்கு ப்ரதிபந்தகனான பாணனை, அஸஹாயனும்படி பொருதழித்து. அவன் பாஹுவநத்தைச்சேதித்த க்ருஷ்ணனே ப்ராப்த்யுபாய பூதனென்கிறார்.

(இ-ள்.) நீணகரம் - அயோத்யை, அபராஜிதையென்று ப்ரஸித்தமான மஹாநகரம், அதுவே - அர்ச்சாவதாரஸ்தலமான வதுவேயாம்படி, மலர் - மலரையுடைத்தான, சோலைகள் - சோலைகள், சூழ் - சூழ்ந்த, திருவாறன்விளை - திருவாறன்விளையாகிற, நீணகரத்து - மஹாநகரத்திலே, உறைகின்ற - நித்யவாஸம்பண்ணுகிற, பிரான் - மஹோபகாரகனாய், நெடுமால் - ஆஶ்ரிதவ்யாமுக்தனாய்க்கொண்டு, கண்ணன் - க்ருஷ்ணனாயவதரித்த, விண்ணவர்கோன் - நித்யஸூரிஸேவ்யனாய், வாணபுரம் -அநிருத்தன் நிருத்தனான பாணபுரத்திலே, புக்கு - சென்று, முக்கட்பிரானை - ஸக்திஸூசகமான த்ரிணேத்ரத்வத்தையும் ஈஶ்வரத்வாபிமாநத்தையுமுடையருத்ரனை, தொலைய- 'ஆஶ்ரிதரக்ஷணம்பண்ணினது அமையும்' என்று உபாதனாம்படியாக, வெம் - ப்ரதாபோத்தரமான, போர்கள் - யுத்தங்களை, செய்து - பண்ணி, வாணனை-பாணனுடைய, ஆயிரந்தோள் - ஆயிரந்தோள்களையும், துணித்தான்- துணித்தவன், சரண் - தேசப்ராப்திக்கு உபாயபூதன், அன்றி - அவனையொழிய, மற்று - வேறு, ஒன்று - ஒருபாயத்தை, இலம் - உடையோமல்லோம். (எ)

ஆறு;—(நீணகரமதுவே) திருவாறன் விளையென்னும் நீணகரமதுவே பரமப்ராப்யம், அதுபெறுகைக்கு உபாயம் அதிலேநின்றருளினவவன்; அவனுகிறான் * அமரர்களதிபதியாயிருந்து வைத்து ஆஸ்ரித வாத்ஸல்யமஹோததியாகையாலே, ஸ்ரீ மதுரையிலே ஆஸ்ரிதபரித்ராணார்த்தமாகவந்து திருவவதாரம்பண்ணியருளின ஆஸ்ரிதவிரோதி நிரஸநைகபோகனான க்ருஷ்ணன், அவனல்லது உபாயமில்லை; அவனைச் சரணம் புகுந்தோமென்கிறார். (எ)

ஈடு; அவ;—ஏழாம்பாட்டு. திருவாறன்விளையே ப்ராப்யமென்றுநின்றீர், அவனன்றோ ப்ராப்யனென்ன; அன்றென்னவல்லேனோ; என் ஸித்தாந்தமிருக்கும்படி கேட்கலாகாதோ வென்கிறார். உபாஸநபலமாய் வருமவையடைய ப்ராப்யாந்தர்க்கதமாகக்கடவது; ஸாத்யஸித்திக்குடலாய் வருமவையெல்லாம் பலத்துக்குடலாகக்கடவது' ஆகையாலே, ப்ராப்யபூமி அத்தேசமே; அங்கேகொடுபோய்ச்சேர்க்கும் கடகன் அவன்; இது என் ஸித்தாந்த மிருக்கும்படி யென்கிறார்.

(நீணகரமதுவே) * கலங்காப்பெருநகரமாய், புக்கார்க்கு (க) "நசபுநராவர்த்ததே" என்கிறபடியே ஒரு நாளும் மீட்சியில்லாதபடி நித்யாநுபவம்பண்ணும் ப்ராப்யதேசம் அதுவே. (மலரித்யாதி) "அவனுக்குங்கூட ப்ராப்யபூமி" என்று தோற்றும்படி யிருக்குமாயிற்று. நித்யவஸந்தமானபொழிலாலே சூழப்பட்ட திருவாறன் விளையாகிற மஹாநகரத்திலேவந்து வர்த்திக்கிறவுபகாரகன்.

(நேமோலித்யாதி) * அமரர்களதிபதியாயிருந்து வைத்து, ஸம்ஸாரத்தில் தன்பக்கல் ருசியுடையரானவர்கள் பக்கல் வ்யாமோஹத்தாலே க்ருஷ்ணனாய்வந்தவதரித்து, ஒருகடலில் நின்று மொருகடலிலே யெடுத்துவிட்டு, ஈஸ்வராபிமாநியாய் "இவன்காரியத்துக்கெல்லாம் நானேகடவன்" என்றிருக்கிறவனுடைய அபிமாநமெல்லாந்தொலைந்து, "நானினியொருதேவதையாய், ஒருவன்காரியக்துக்கபிமாநித்திரேன்" என்னும்படி க்ரூரமான யுத்தங்களைப்பண்ணி (உ) "க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ." "ஆனைக்குந்தனக்குத்தக்கவாதம்" என்னுமாபோலே, தே

(க) சாந்தோ அ கடு. (உ) வி-பு-ரு ருங-சக.

வதைகளுக்கு நம்மிற்காட்டிலறிவுகேடு விஞ்சியிருக்கும். ஒருவில்லை முறித்தபோதாக (க) "க்ஷயிகம் ஜிநரேவிஷ்ணு - அதிகம் மேநிரே விஷ்ணும்" என்பர்களாயிற்று தேவஜாதியாக.

(வாணனையாயிரந்தோள்துணித்தான்) "உஷைபித்ருஹீநையாகவொண்ணாது" என்றுபார்த்து, உயிரிருக்கத்தோளைக் கழித்துவிட்டானாயிற்று. (சரண்) அவன் கடகன், திருவாறன்விளையே ப்ராப்யம். ப்ராப்யனானவன்வந்து ஸந்நிதிபண்ணினதேசமாகையாலே, அவனோட்டை ஸம்பந்தத்தாலே அத்தேசமும் ப்ராப்யமென்கைக்குத்தட்டில்லை. ஒருஸர்வாதிகன் உபாயமாய் பலப்ரதனாகவேணுமே; ஆகையாலே, அவனுபாயம், அத்தேசம்ப்ராப்யம். (அன்றிமற்றொன்றிலமே) இங்ஙனல்லது ப்ராப்யப்ராபகங்கள் மாறாடக்கடவோமல்லோம். (எ)

எட்டாம்பாட்டு.

அன்றிமற்றொன்றிலம்நின்சரணேயென்று அகலிரும்பொய்கையின்வாய் * நின்றுதன்நீள்கழலேத்திய ஆனையின்நெஞ்சிடர்தீர்த்தபிரான் * சென்றங்கினிதுறைகின்ற செழும்பொழில்சூழ்திருவாறன்விளை * ஒன்றிவலஞ்செய்யஒன்றுமோ? !தீவினைஉள்ளத்தின்சார்வல்லவே. (அ)

ப.—அநந்தரம், ஆஸ்ரிதருடைய ஆர்த்தநிவர்த்தகன் வர்த்திக்கிற திருவாறன் விளையையாஸ்ரயிக்க, நெஞ்சிலொருபாபமும் நடையாடாதென்கிறார்.

(இ-ள்.) நின் - உன், சரண் - திருவடிகளை, அன்றி - ஒழிய, மற்று - மற்று, ஒன்று - ஒன்றையும், இலம் — உடையோமல்லோம். என்று - என்று, அகல் - விஸ்தீர்ணமாய், இரும் - அகாதமான, பொய்கையின்வாய் - பொய்கையிடத்திலே, நின்று - முதலையின்கையிலே யகப்பட்டுநின்று, தன், நீள் - ஆபந்நரிருந்த விடத்தளவும்வரும், கழல்-திருவடிகளை. ஏத்திய-(உ)"நாராயணா" என்று ஸம்பந்த பூர்வகமாகவேத்தின, ஆனையின் - ஆனையினுடைய, நெஞ்சிடர் - "செவ்விமாறாமல் பூவைச்சாத்தப் பெற்றிலோம்" என்கிற நெஞ்சு துக்கத்தை, தீர்த்த - தீர்த்த, பிரான் - மஹோபகாரகன், சென்று - ஆஸ்ரிதர்

(க) ரா-பா எ௬-௧௧. (உ) சிறியதிரு-௩உ.

க்கு உதவுகைக்காகச்சென்று, அங்கு, இனிது - இனிமையோடே, உறை கின்ற - வர்த்திக்கிறவிடமாய், செழு - நிரதிசயபோக்யமான, பொழில் - பொழில், சூழ் - சூழ்ந்த, திருவாறன்விளை - திருவாறன்விளையை, ஒன்றி - கிட்டி, வலஞ்செய்ய - வலஞ்செய்ய, ஒன்றுமோ - கூடுமோ. கூடுமாகில், தீ - க்ரூரமான, வினை - பாபங்கள், உள்ளத்தின் - உள்ளத்தின், சார்வு - பொருத்தத்தை, அல்லவே - உடையவல்லவாம்.

ஒன்றிவலஞ்செய்ய - தீவினை - ஒன்றும் - உள்ளத்தின் சார்வல்லவென்று உக்தி ப்ரகாரமாகவுமாம் (அ)

ஆறு ;—(அன்றிமற்றொன்றிலம்) ஶரணம்புக்கால் நம்மபேக்ஷிதம் செய்தருளுமோவென்னில் ; (க) "வாரணவாரணம் - பரமாபதமாபந்நனாய் ஶரணாகதனான ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுடைய வாபத்தை யெல்லாம்போக்கி அவனைரக்ஷித்தருளின ஶரணாகதவத்ஸலனல்லனோ திருவாறன்விளையிலே யிருக்கிறான்; அவன்நம்முடைய வபேக்ஷிதம் செய்தருளும் ; ஆதலால், உங்களுடைய ஸமஸ்தது:க்கங்களும் போம்படி திருவாறன்விளையிலேபோ யநுபவியுங்கோளென்கிறார். (அ)

ஈடு; அவ;—எட்டாம்பாட்டு. திருவாறன்விளையிலேபுக, நம்முடைய ஸகலது:கங்களும் போமென்கிறார்.

(அன்றிமற்றொன்றிலம் நின்சரணேயென்று) நின்சரணே-அன்றிமற்றொன்றிலம்-என்று. உன்திருவடிகளையல்லது வேறொரு பற்றுடையேனல்லேனென்று. புறட்பே சிலர் ரக்ஷகராக ப்ரமித்திருக்கு மதுவுந்தவிர்ந்து, (உ)"ஶஜக்ஷகஷ-தெ தீரோ ஹக்ஷகஷ-தெஜெ-சஜ ஆகர்ஷதேதீரே க்ராஹ ஆகர்ஷதேஜலே" என்கையாலே தான் ரக்ஷகமாக நினைத்திருக்குமதுவுந்தவிர்ந்து, (க) "ஐநவா ஷிஜயக-மநஸாசிந்தயத்" என்கையாலே கூப்பீடும் கார்யகரமாமெல்லையுங்கழிந்தது. அவனைப்பார்த்தால் தானுமல்லாதாரோபாதி புறம்பாய்க்கடக்க நிற்கும்படியாயிறே ப்ராப்தியிருக்கும்படி. ஆகைச்சுட்டியிறே ப்ரணவத்தில் மத்யமபதங்கிடக்கச் செய்தேயிறே திருமந்த்ரத்தில் மத்யமபதம் ஜீவிக்கிறதும்.

(க) விஷ்ணுதர்ம. (உ) வி-தர்-ஈ அ.

(அகலிரும்பொய்கையின்வாய்) அகலத்தையு மாழத்தையுஞ் சொல்லவேண்டுமளவிலே, அகலத்தைச்சொல்லி யிருமையைச் சொல்லுகையாலே-அது ஆழத்தைச் சொல்லிற்றாகக்கடவது. இப்போது அகலமுமாழமுஞ்சொல்லுகிறதுக்குக் கருத்தென்னென்னில்; அவனுபாயமாய் ரக்ஷித்தல், இல்லையாகில் முடிதல்செய்யுமித்தனை போக்கி, தான் வேறொரு கரைகாணமாட்டானாகாதே. (அகலிரும் பொய்கையின் வாய்நின்று) பஸ்த்தாநத்திலே பயநிவ்ருத்தியுள்ள விடத்திற்போலே நிற்கும்படியாயிற்றுச் செயல்மாட்சி. முதலை நீரிலேயிழுக்க, ஆனை கரையிலேயிழுக்க, இரண்டினுடைய வ்யாபாரமுமாய்ச் செல்லுகை தவிர்ந்து ஒன்றினுடைய வ்யாபாரமேயாய் நிற்கை.

(தன்னீள்கழல்) எதிர்த்தலையில் செயல்மாட்சியே யெல்லையாக வளரும் திருவடிகள். முதலைவாயிலே யகப்பட்டு நிற்கச்செய்தேயும் அவனை யநுஸந்தித்தால் அச்சங்கெட்டிருக்கலாம்படி யாகாதேதானிருப்பது. (க) "𑌆𑌨𑌨𑍍𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌨 𑌬𑌿𑌭𑍇𑌤𑌿 - ஆநந்தம்ப்ரஹ்மணோவித்வாந்நபிபேதி" என்னக்கடவதிறே [𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌨-குதஶ்சந] ப்ராமாதிகத்துக்கன்றிக்கே புத்திபூர்வகமாகப் பண்ணினதுக்கு மஞ்சவேண்டாதபடியாயிருக்கும். (உ) "செய்தாரேல் நன்றுசெய்தார்" என்றால், இவனினதுக்கஞ்ச புத்திபூர்வத்துக்கு அஞ்சவேண்டாவிட்டால், ப்ராமாதிகத்துக் கஞ்சவேண்டாமென்னுமிடம் கிம்புந: இறே. ப்ராமாதிகத்துக்கஞ்சவேண்டாமை பக்தியோகத்துக்குமுண்டிறே. (ஏத்திய) முட்பாய்ந்தால் "அம்மே!" என்பாரைப்போலே, வாஸனையாலே சொன்ன வித்தனை.

(ஆனையின்நெஞ்சிடர்தீர்த்தபிரான்) துதிக்கை முழுத்தினவிடரிறே, நீண்டகை குறுகுமளவுமிறே பார்த்துநின்றது, இவன் கைவிட்டால் கைக்கொள்ளாநின்றானித்தனையிறே. (ஆனையின்நெஞ்சிடர் தீர்த்தபிரான்) "இப்பூவிற் செவ்வி மாறுவதற்குமுன்னே திருவடிகளிலே சாத்தப்பெறுகிறிலோம்!" என்கிறவிடரைப் போக்கினானாயிற்று. அன்றிக்கே, "நாமடியாக ஸர்வேஶ்வரனுக் கவத்யம்வருகிறதோ?" என்னுமிடராதல். அதாவது - "'இவனிப்படி க்லேஶிக்க அவன் ரக்ஷித்தபடி யழகியதாயிருந்தது, இவனையோநாமிப்படி 'ரக்ஷ

(க) தை-ஆந. (உ) பெரியாழ்வார்திரு-௪-௧௨.

கன்' என்று நினைத்திருந்தது ' என்று நாட்டார் இவனை யிப்படி நினைக்கிற்செய்வதென்'' என்று இடர்பட்டது.

(க) ''இரண்டெட்போ யிரண்டின்வீடு'' என்கிறபடியே - இரண்டுக்கு மிடர்வாராதபடி கரையிலேகொண்டேறி, பின்னை முதலைவாயைக் கிழித்து ஆனையினிடரை நீக்கினாயிற்று. இதுக்கு பட்டரருளிச்செய்யும்படி - '' ராஜபுத்ரனைச் சிறையிலேயிட்டுவைத்தால், சைக்கூட்டனுக்கும் பாலுஞ்சோறுமிடுவாரைப்போலேகாண் '' என்றாம். இரண்டும் மோக்ஷத்தைபெற்றதே !; முதலை ஶாபமோக்ஷமும், ஸ்ரீகஜேந்த்ராழ்வான் ஸாக்ஷாந்மோக்ஷமும் பெற்றார்களிறே. (பிரான்) ஆனையிடர்போக்கினவிதுவும், அதுக்கன்றித் தமக்குபகரித்தானாக நினைத்திருக்கிறார் காணுமிவர். இப்பாவவ்ருத்தியை யுடையவனாகையிறே யொருவன் வைஷ்ணவனாகையாவது. அநுகூலரிலே யொருவனுக்கொரு நன்மையுண்டானால் அது தன்னதாகநினைத்திருக்கையும், அநர்த்தம்வந்தால் அது தனக்குவந்ததாக நினைத்திருக்கையுமாகிற விவ்விரண்டு முண்டானாலிறே வைஷ்ணவத்வ முண்டாயிற்றாவது.

(சென்றங்கினிதுறைகின்ற) இவனுதவாதவன்று அவ்வானைக்குள்ள விடரோபாதியும் போருமாயிற்று, அத்தேசத்தை ப்ராபியாதபோது ஸர்வேஶ்வரனுக்குண்டான விடரும். அவன்வந்து தன்னாதரமெல்லாந் தோற்றும்படி வர்த்திக்கிற, அழகிய பொழிலாலே சூழப்பட்ட திருவாறன் விளையைக்கிட்டி ப்ரதக்ஷிணாதிகளைப்பண்ண. (ஒன்றுமோ) கிட்டுமோ. (தீவினையுள்ளத்தின்சார்வல்லவே) அப்போது தீவினை யுள்ளத்தின் சார்வாகாது. தேஜஸ்திமிரங்களுக்கு ஸஹாவஸ்தாநமுண்டோ, அவன்வந்து ஹ்ருதயத்திலே நித்யவாஸம்பண்ணத் தீவினை யொதுங்க விடமுண்டோ. (அ)

ஒன்பதாம்பாட்டு.

தீவினை உள்ளத்தின் சார்வல்லவாகித் தெளிவிசும்பேறலுற்றால் * நாவினுள்ளும்உள்ளத்துள்ளும் அமைந்ததொழிலினுள்ளும் நவின்று * யாவரும்வந்துவணங்கும்பொழில் திருவாறன்விளையதனை * மேவிவலஞ்செய்து கைதொழக்கூடுங்கொல் ? என்னும் என்சிந்தனையே. (கூ)

(க) ச-திருவ-கஉ.

ப —அநந்தரம், பாபநிவ்ருத்தி பிறந்து ப்ராப்யதேஶம் ஸித்திக்குமாறு மும், ஸர்வாநுபாவ்யமான திருவாறன்விளையை ப்ராபித்தநுபவிக்க வமையு மென்றுநின்றது என்னெஞ்சென்கிறார்.

(இ-ள்.) தீ - க்ரூரமான, வினை - பாபங்கள், உள்ளத்தின் - நெஞ்சில், சார்வல்லவாகி - சேர்த்தியற்று, தெளி- ஸ்வரூபப்ரகாசம் பிறக்கும்படி தெளி வையுடைத்தான, விசும்பு - பரமவ்யோமத்திலே, ஏறல் - ஏறுதல், உற்றால் - வந்துகிட்டினாலும், என் - என், சிந்தனை - நெஞ்சானது, நாவினுள்ளுமுள் ளத்துள்ளும் - வாங்மநஸங்களிலும், அமைந்த - அதுக்கீடாகச்சமைந்த, தொழி லினுள்ளும் - ப்ரவ்ருத்தியிலும், நவின்று - சேர்த்தியையுடையராய்க்கொண்டு, யாவரும் - எல்லாவிபூதியிலுள்ளாரும், வந்து - வந்து, வணங்கும் - வணங்கும் படியாய், பொழில் - போக்யதாப்ரகாஶகமான பொழிலையுடைத்தான, திருவா றன்விளை - திருவாறன் விளையாகிற, அதனை - அத்தேஶந்தன்னையே, மேவி- கிட்டி, வலஞ்செய்து - அநுகூலவ்ருத்தி பண்ணுகையாலே, கைதொழ - தொழ, கூடுங்கொல் - கூடுமோ, என்னும் - என்றுநினையாநின்றது. (க)

ஆறு ;—(தீவினை) திருவாறன்விளையோ ப்ராப்யம், திருநாட னறோவென்னில் ; நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகராய்த் தெளிவிசும் பேறலுற்றால் ; திருவாறன்விளையைக்கண்டால் திருநாட்டைவிட்டு இத்தையே ப்ராப்யமாகக்கொண்டு, ஸர்வகரணங்களாலு மநுபவிப் பார் - திருநாட்டிலுள்ளார்க்கு மிதுவே ப்ராப்யம், என்னெஞ்சம் திருவாறன்விளையைமேவி வலஞ்செய்து கைதொழக்கூடுமேயோ வென்று மநோரதியாநிற்கும், அதுவே ப்ராப்யமென்கிறார். (க)

ஈடு; அவ;—ஒன்பதாம்பாட்டு. எனக்கு ஸ்ரீவைகுண்டமும் திருவாறன்விளையு மிரண்டும் கிடைப்பதானால், ஸ்ரீவைகுண்டத்தை விட்டு “ திருவாறன்விளையே யமையும் ” என்னுமென்னெஞ்ச மென்கிறார்.

(தீவினையித்யாதி) “ ‘ திருவாறன்விளையே ப்ராப்யம் ’ என்று இங்கிருந்தநாளுண்டான ஸங்கோசத்தாலே சொல்லுகிறீர், ஸங் கோசங்கழிந்தவாறே பரமபதத்திலே தோள்மாறுகிறீர் ” என்ன, அதுவேண்டா, ஸங்கோசங்கழிந்தால் நானிருக்கும்படியைக் கேட் கலாகாதோ வென்கிறார் (தீவினையுள்ளத்தின் சார்வல்லவாகி) பண் டுபண்ணின வவித்யாகர்மவாஸநா ருசிகளானவை, ப்ரத்யக்ஷவஸ்து

யை ஸ்பர்ஶியாவாய்க்கொண்டு. (தெளிவிசும்பேறலுற்றால்) திருநாடேறப்போக உத்யோகித்தால்.

(நாவினுள்ளுமித்யாதி) எத்தனையேனும் மதிஶயிதஜ்ஞாநரான திருநாட்டிலுள்ளாரும் வந்து மநோவாக்காயங்களாலே பயின்று ஆஶ்ரயிக்கும்படி நிரதிஶயபோக்யமான திருவாறன்விளையை. (மேவியித்யாதி) அத்தேஶத்தை நான்சென்று ப்ராபித்து அநுகூல வ்ருத்திகளைப்பண்ணி. (கைதொழக்கூடுங்கொலென்னுமென் சிந்தனையே) என்னெஞ்சு எனக்கு விதேயமல்ல; (க) "ஊர்வோ நா நந்தும் ஹதி - பாவோ நாந்யத்ரகச்சதி" என்கிறபடியே. (கூ)

பத்தாம்பாட்டு.

சிந்தைமற்றொன்றின்திறத்ததல்லாத்தன்மை தேவபிரானறியும் *
சிந்தையினால்செய்வதானறியாதன மாயங்கள்ஒன்றுமில்லை * [கும்
சிந்தையினால்சொல்லினால்செய்கையால் நிலத்தேவர்குழுவணங்
சிந்தைமகிழ்திருவாறன்விளையுறை தீர்த்தனுக்குஅற்றபின்னே. கഠ

ப.—அநந்தரம், திருவாறன்விளையிலே வர்த்திக்கிற தன்பக்கலிலே வ்யவஸிதமானபின்பு நெஞ்சு வேறொன்றிற்போகாதென்னுமிடம் அவன்றானே யறியுமென்கிறார்.

(இ-ள்.) சிந்தையினால் சொல்லினால் செய்கையால் - மநோவாக்காயங்களாலே, நிலத்தேவர் - நிலத்தேவரானபாகவதருடைய, குழு - ஸங்கமானது, அநுபவிக்க, வணங்கும் - வணங்கும்படியாய், சிந்தை- போக்தாக்கள்நெஞ்சை, மகிழ் - மகிழ்விக்கும், திருவாறன்விளை - திருவாறன்விளையிலே, உறை - வர்த்திக்கிற, தீர்த்தனுக்கு - பரமபாவநபூதனுக்கு, அற்றபின் - அநந்யார்ஹஶேஷமாம்படி யறுதியுடைத்தானபின்பு, சிந்தை - நெஞ்சு, மற்றொன்றின் - வேறொன்றை, திறத்ததல்லா - உத்தேஶ்யமாகநினைத்திராத, தன்மை - ஸ்வபாவத்தை, தேவன் - ஸூரிஸேவ்யனான, பிரான் - ஸர்வஜ்ஞன்றானே, அறியும் - அறியும், சிந்தையினால் — சிந்தையினால், செய்வ - செய்யப்பட்டு, மாயங்கள் - மறைந்ததொழில்களானவை, தான் - அவன்றான், அறியாதன - அறியாதன, ஒன்றும் - ஒன்றும், இல்லை - இல்லை. (கഠ)

(க) ரா-உத்தர-சഠ-கரு.

ஆறு ;—(சிந்தை) " திருநாடுப்ராப்யம் " என்னும் ப்ரஸித்தியாலே உம்மைத்திருநாடேறக்கொண்டெழுந்தருளிற் செய்வதென்னென்னில்;

திருவாறன்விளையே ப்ராப்யமென்றிருக்கைக்கு விரோதியான பாபத்தைப்போக்கி என்னைத்திருவாறன்விளையே ப்ராப்யமென்றிருக்கப்பண்ணினபின்பு, " திருவாறன்விளை " என்றால் என்னெஞ்சு தாழ்ந்துகிடக்கும்படி யறியானோ, ஸர்வஜ்ஞனல்லனோவென்கிறார். (கo)

ஈடு ; அவ ;—பத்தாம்பாட்டு. இதுதானேருக்திமாத்ரமாய் உம்முடைய நெஞ்சு பரமபதத்தை விரும்பினலோவென்ன ; அத்தை, என்னினைவுக்கு வாய்த்தலையிலேயிருக்கிற ஸர்வேஶ்வரனைக் கேட்டுக்கொள்வது " என்றிங்ஙனே யருளிச்செய்வர் ஜீயர். அன்றிக்கே, பிள்ளான், நீர் " திருவாறன்விளையேப்ராப்யம் " என்றிருக்கிறீர், ஈஶ்வரன் ஸ்வதந்த்ரனன்றோ? அவன் பரமபதத்தைத்தரிலோவென்ன ; " அவன் ஸர்வஜ்ஞனன்றோ, அறியானோவென்கிறார் " என்று; " புருஷார்த்தப்ரதனன்றோ, புருஷனர்த்தித்தத்தையன்றோ கொடுப்பது "

(சிந்தைமற்றொன்றின்திறத்ததல்லாத்தன்மை தேவபிரானறியும்) நெஞ்சானது பரமபதப்ரஸங்கமும் நினையாதது ஸர்வேஶ்வரனறியும். தன்மை—ஸ்வபாவம். மற்றென்கிறது - பரமபதத்தின் பேர் சொல்லுகையுங்கூட வஸஹ்யமானபடி. உம்மைக்கேட்க ஸர்வேஶ்வரனை ஸாக்ஷியாகச்சொன்னதுக்குக் கருத்தென்னென்ன (சிந்தையினலித்யாதி) அவன் நினைத்தால் இவனநந்தரம் நினைக்க வேண்டும்படியிருக்க, அவனறியாத துண்டோ. (க) * உள்ளுவாருள்ளத்தெல்லா முடனிருந்தறியுமவனன்றோ, அவன் நினைப்பிட்டாலன்றோ விவனுக்கு நினைக்கலாவது. நெஞ்சால் செய்யப்படுவனவற்றில் அவனறியாத வஞ்சநங்களொன்றுமில்லை.

(சிந்தையினலித்யாதி) நித்யஸூரிகளோபாதி முமுக்ஷுக்களும் வந்தாஶ்ரயிக்கும் தேசமாயிற்று. மனோவாக்காயங்கள் மூன்றாலும் பூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்கள் திரண்டுவந்தாஶ்ரயிக்கும் தேசமாயிற்று. (சிந்தைமகிழ்திருவாறன்விளை) ஆரேனு

(க) திருமா-ந௪.

மாகப்புக்காரை நிரதிஶயாநந்திகளாகப்பண்ணும் தேஶமாயிற்று. "ப்ராப்யபூமி" என்றுதோற்றும்படியிருக்குமாயிற்று. திருவாறன்விளையிலே வந்து வர்த்திக்கிற ஸர்வேஶ்வரனைக்கேட்டுக்கொள்வது. உமக்கு இத்தெளிவுதான் என்று தொடங்கி வந்ததென்ன (தீர்த்தனுக்கற்றபின்) அவன் தன்னுடைய போக்யதாதிஶயத்தாலே எனக்குப்புறம்புண்டானபற்றைத்தவிர்த்துத் தனக்கேயநந்யார்ஹனும்படி பண்ணிக்கொண்ட வன்றுதொடங்கி. உஜ்ஜீவிக்கப்பண்ணின வன்றுதொடங்கி. நடுவே யுஜ்ஜீவியாதே கிடந்து போந்ததே அநாதிகாலம். (கo)

பதினோராம்பாட்டு.

தீர்த்தனுக்கற்றபின்மற்றோர்சரணில்லையென்றெண்ணி* தீர்த்தனுக்கே தீர்த்தமனத்தனாகிச் செழுங்குருகூர்ச் சடகோபன் சொன்ன * தீர்த்தங்களாயிரத்துள் இவைபத்தும்வல்லார்களை * தேவர்வைகல் தீர்த்தங்களேயென்று பூசித்துநல்கியுரைப்பர் தம் தேவியர்க்கே. (கக)

ப—அநந்தரம், இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லவர்களை நித்யஸூரிகள் ஶ்லாகிப்பரென்று பலத்தையருளிச்செய்கிறார்.

(இ-ள்.) தீர்த்தனுக்கு - உபாயோபதேஷ்டாவானவனுக்கு, அற்றபின் - அநந்யார்ஹமானபின்பு, மற்று - வேறு. ஓர் - ஒரு, சரண் - உபாயம், இல்லை - இல்லை, என்று - என்று. எண்ணி - அறுதியிட்டு, தீர்த்தனுக்கே - * ஸர்வபாபவிமோசகனாய், பரமபாவநபூதனானவனுக்கே, தீர்த்த - அறுதியாக்கப்பட்ட, மனத்தனாகி - நெஞ்சையுடையராய்க்கொண்டு, செழும் - தர்ஶநீயமான, குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், தீர்த்தங்கள் - தனித்தனியேவித்யாஸ்தாநங்களான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழியிலும், இவைபத்தும் - இப்பத்தையும், வல்லார்களை - அப்யஸிக்கவல்லவர்களை, தேவர் - நித்யஸூரிகளானவர்கள், வைகல் - ஸர்வகாலமும், தம் - தங்கள், தேவியர்க்கு - மஹிஷிகளுக்கு, பூசித்து - பஹுமாநம்பண்ணி, நல்கி - ஸ்நேஹித்து, தீர்த்தங்களே - ஸம்ஸாரதோஷநிவர்த்தகரான பவித்ரபூதர், என்று - என்று, உரைப்பர் - சொல்லாநிற்பர்கள்.

இது - அறுசீராசிரியவிருத்தம். (கக)

ஆறு ;—(தீர்த்தனுக்கற்றபின்) திருவாறன்விளையே ப்ராப்ய மென்றிருக்கைக்கு விரோதியானவென்னுடைய பாபத்தைப்போக்குகையாலே பவித்ரம் - அதில் நின்றருளினவெம்பெருமான்; அதிலும் பவித்ரம் அவனை ப்ரதிபாதித்த திருவாய்மொழிகள் ; இவை வல்லார் அவற்றிலும் பவித்ரபூதரென்று,இந்த்ராதி தேவர்கள் ஸத்கரித்துக்கொண்டு தங்கள் ப்ரணயிநிகளுக்குச் சொல்லுவரென்கிறார்.

ஈடு;—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றவர்கள் * அயர்வறு மமரர்களுக்கு ஶ்லாகநீயரெனகிறார்.

(தீர்த்தனித்யாதி) இன்னார்க்குத்தீர்த்த னென்னுமையாலே ஸ்வவ்யதிரிக்தர்க்கெல்லாம் தீர்த்தனாயிற்று. தீர்த்தமாவது தான் பரிஶுத்தமுமாய், தன்னை ஸ்பர்சித்தாரும் பரிஶுத்தராம்படி பண்ணுமதாயிற்று. (க) * தீர்த்தனுலகளந்த சேவடியை ப்ரக்ஷாளிக்க, அந்ததீர்த்தத்தை பாவநார்த்தமாக ஜடாமத்யே தரித்தான் ருத்ரன். (உ) "ஆறுபொதிசடையோன்" என்னக்கடவதிறே. கங்காதரனென்றே பேர் அவனுக்கு; அந்தகங்கைக்கடியையாராய்ந்து கொள்ளுகையிறே இனியுள்ளது ; ஆராய்ந்தவாறே அது அடிப்பட்டிருக்குமே ; (ங) * கங்கைபோதரக் கால்நிமிர்த்தருளிய கண்ணனிறே. (தீர்த்தனுக்கற்றபின்) தன்னுடையபோக்யதாதிஶயத்தாலே தன்னையொழிந்த விஷயங்களி லுண்டான ருசியைக் கழித்தவனுக்கற்றபின் என்றுமாம்.

(மற்றோர்சரணில்லையென்றெண்ணி) அவனையொழிய ரக்ஷகரில்லையென்று தெளிந்தாராயிற்று. (தீர்த்தனுக்கேதீர்த்தமனத்தனாகி) பாஹ்ய விஷயங்களில் ருசியைப்போக்கினவனுக்கே யறுதியாகவெழுதிக்கொடுத்த நெஞ்சையுடையராய். (ச) "உனைநினைந்தெள்கல்தந்தவெந்தாய்" என்றேகிடீர்; (ரு) "மாற்பால்மனஞ்சுழிப்ப மங்கையர்தோள்கைவிட்டு" என்றும், (சு) "வராஹாத்கிரியோரகொவிராகொவராஹாத்கிம் பரமாத்மநி யோரக்தோவிரக்தோபரமாத்மநி" என்றுஞ்சொல்லுகிறபடியே, தம்பக்கலிலே நெஞ்சைவைத்தால் பின்பு புறம்புபோகவொட்டாதே ஸௌந்தர்யம். (எ) "மனை

(க) உ-அ-சு
(உ) திருவெழுகூ-
(ங) தி-மொ-ச-உ-சு
(ச) உ-சு-ச-
(ரு) ங-திருவ-கச-
(சு) பார்ஹஸ்பத்யஸ்ம்ருதி-ச
(எ) உ-திருவ-சஉ-

ப்பால்பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம்-துறந்தார் தொழுதாரத்தோள்'' என்று-மனைப்பால் பேரின்பத்தில்கைகழியவொட்டாதே.

(செழுங்குருகூர்ச்சடகோபன்சொன்ன) அதுக்கடியான ஜந்மபூமியையுடைய வாழ்வாரருளிச்செய்தது. (தீர்த்தங்களாயிரம்) ஆயிரம்பாட்டும் ஆயிரந்தீர்த்தங்களாயிற்று. இந்தப்பத்தை யப்யஸிக்கவல்லார்களை, தேவருண்டு-திருவடி, திருவநந்தாழ்வான், ஸேநைமுதலியார் தொடக்கமானார், இவர்களை "நாள்தோறும்பவித்ரபூதர்'' என்றுதரித்துக்கொண்டுபோந்து, தங்கள் மஹிஷிகளை ஸ்நேஹித்துக் கொண்டாடும் தசையிலே சொல்லுவர்கள். (நல்கியுரைப்பர்தந்தேவியர்க்கு) மஹிஷிகளுந்தாங்களுமாக ஸ்ரீவைகுண்டநாதனுக்கடிமைசெய்து, ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஓடமேற்றிக் கூலிகொள்ளுமளவானவாறே, அவர்களுக்கு ஸர்வஸ்வதாநம்பண்ணிக் கனக்கத்தங்கள் ப்ரபாவத்தைச் சொல்லும்படியாகப் பெறுவர். ஓடமேற்றிக் கூலிகொள்ளும் தசையாகிறது-பகவத்விஷயத்தில் கைங்கர்யம்பண்ணும்போது எடுத்துக்கைநீட்டுகையிறே.

சரமச்லோகம் ரக்ஷித்துக்கொண்டவளவுபோலே யிருக்குமளவுகளிலே யென்றபடி. (அதாவது-உடையவர், திருக்கோட்டியூர் நம்பி தமக்கத்யந்தரஹஸ்யமாக வுபதேசித்த சரமச்லோகத்தைத் தெற்காழ்வார் திருமுன்பேயெடுத்துக்கைநீட்டினவர்களுக்கு அவர்கள்விஷயத்திலே யுகப்பாலே யருளிச்செய்தாரிறே; அத்தைச்சொல்லுகிறது.) (வைகலும்பூசித்து) "அபூர்வணிகடல்தீண்டலாகாது'' என்றுப்போலே, அதுக்கொருநியதியில்லை யென்கை. வைகல்-காலம். (க) "ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி'' என்று தத்விஷயத்தில் இவர் ப்ரார்த்தித்தத்தை, இதுகற்ற ததீயவிஷயத்திலே நித்யஸூரிகளடிமை செய்வர்கள். (கக)

ஏழாம்பத்து முற்றிற்று.